

11966

# செம்மீன்

தகழி சிவசங்கரப் பிள்ளை

தகழி சிவசங்கர பிள்ளை

# செம்மீன்

( மலையாள நாவல் )

தமிழாக்கம் :

சுந்தர ராமசாமி

சாகித்திய அக்காதெமிக்காக

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

Chemmeen (Malayalam novel) by Thakazhi Sivasankara Pillai. Translated into Tamil by Sundara Ramasami. Published by Paari Nilayam, Madras, on behalf of Sahitya Akademi, New Delhi, 1962. Second impression, 1964. Third impression, 1978. Price Rs 10.00

© சாகித்திய அக்காதெமி, புது தில்லி
முதற் பதிப்பு, 1962
இரண்டாம் பதிப்பு, 1964
மூன்றாம் பதிப்பு, 1978

சாகித்திய அக்காதெமிக்காக
வெளியிடுவோர் :

**பாரி நிலையம்**

59, பிராட்வே, சென்னை–1

*Also available at*

**Sahitya Akademi, New Delhi-1**
Madras–6, Calcutta–29 and Bombay–14.

விலை ரூ. 10-00

அச்சிட்டோர் :
மாருதி பிரஸ், சென்னை–600 014.

# செம்மீன்

# முன்னுரை

## டாக்டர் நாராயண மேனன்

கேரள ராஜ்யத்தில், ஆலப்புழைக்குத் தெற்கே பத்து மைல் தூரத்திலுள்ள தகழி என்னும் சிறு கிராமத்தில், 1914 ஏப்ரலில் பிறந்தவர் தகழி சிவசங்கரப்பிள்ளை. அவரது தந்தையார் ஒரு வேளாளர்; மெத்தப் படித்தவர். கேரளத்தின் சிறந்த நாட்டிய நாடகமான கதக்களிக் கலையில் தேர்ந்த நிபுணர். அவரது சகோதரரே நமது காலத்தில் தலைசிறந்த கதக்களி நாட்டிய நிபுணர் குஞ்சு குரூப். அந்த இல்லமே சம்ஸ்கிருதப் பண்பும் கேரள நாட்டுக் கலைகளும் செழித்த சூழ்நிலை நிரம்பி விளங்கியது.

இளமையில் வீட்டிலேயே கல்வியைத் தொடங்கிய தகழி, பின்னர் கிராமப் பள்ளியிலும், அம்பலப்புழை நடுத்தரப் பள்ளியிலும் படித்தார். அந்தப் பள்ளிக்கூடம் கடற்கரையில் மீனவர் பகுதியினிடையில் இருந்தது. தகழி இங்குதான் முதன்முதல் செம்படவர் வாழ்க்கையை நேருக்கு நேர் கண்டார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் அங்கே ஒரு வக்கீலாகப் பணியாற்றியபோது அவரது கட்சிக்காரரில் பலசெம்படவர்கள் இருந்தார்கள். அவரது நாவல்களில் காணும் பரீக்குட்டிகளும் கறுத்தம்மாக்களும் கற்பனைப் பாத்திரங்கள் அன்று; அவர் நேரில் அறிந்த பாத்திரங்களே.

அம்பலப்புழையில் நடுத்தரப் பள்ளியில் கல்வியை முடித்துக்கொண்டு, ஹரிபாடுக்கு அருகிலுள்ள கருவட்டாவில் உயர்நிலைப்பள்ளியில் படிக்கத் தொடங்கினார் தகழி. அந்தக் காலத்தில்தான் அவர் கைனிக்கர குமாரப்பிள்ளையைச் சந்தித்தார். பெரும் புலவரும் விமர்சகரும் நாடகாசிரியருமான குமாரப்பிள்ளை, தகழியை மிகவும் கவர்ந்தார். இதுவே அவரது இலக்கிய வாழ்வு உருவான காலம். தகழி சிறு பிராயத்திலிருந்தே கவிதை எழுதி வந்தார். தகழியின் திறமை வசனத்தில் அதிகமாகச் சுடர்விடுகிறது என்பதை உணர்ந்து, குமாரப்பிள்ளை அவரை வசனத்துறைக்குத் திருப்பிவிட்டார்.

பள்ளிக் கல்வி முடிந்ததும் தகழி, திருவனந்தபுரம் சென்றார். பிளீடர்ஷிப் பயிற்சி பெறுவதற்காகச் சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். அது சுதந்திரப் போராட்டம் உச்சத்

திலிருந்த காலம். ஏ. பாலகிருஷ்ணபிள்ளை என்பவர் வீட்டில் அடிக்கடி கூடும் ஒரு அறிஞர் குழுவில் அவரும் சேர்ந்து விட்டார். 'கேஸரி' என்னும் இலக்கியப் பத்திரிகையின் ஆசிரிய ரான பாலகிருஷ்ண பிள்ளை, ஒரு அறிஞர் குழு அமைத்து, இலக்கிய, அரசியல் சர்ச்சைகள் நிகழ்த்தி வந்தார். எதிர்காலத் தில் கேரளத்தின் இலக்கிய, அரசியல் தலைவர்களாக விளங்கக்கூடிய பல இளம் எழுத்தாளரும் அரசியல் மேதை களும் அவரது தேர்ந்த தலைமையின்கீழ் உருப்பெற்றனர்.

இந்தச் சூழ்நிலையில்தான் தகழியின் இலக்கியக் கல்வியும் ஆர்வமும் விரிவடைந்தன. புரூட், மார்க்ஸ் உட்பட, ஆங்கில ஐரோப்பிய இலக்கியங்களை விரிவாகப் படிக்கலானார். "வெள்ளத்தினிடையே", "அழகுப் பாப்பா" என்பன போன்ற அவரது கதைகள், அவர் ஒரு பெரிய கதாசிரியர் என்பதை உணர்த்தின.

1934-தகழியின் முதல் புத்தகம் "புது மலர்" வெளி வந்தது; அது ஒரு சிறு கதை மாலை. அது உடனே பிரபலமாகி விட்டது. அதைத் தொடர்ந்து அவரது முதல் நாவல், "பிரதிபலம்" (கைம்மாறு) வெளிவந்தது. வெளியான சில வாரங்களிலேயே பிரதிகள் முற்றும் விற்றுப் போய்விட்டன. அதே ஆண்டு, "பதித பங்கஜம்" என்னும் மற்றொரு நாவல் உருப்பெற்றது. அவரது எழுதுகோல் பல கதைகளைத் தீட்டியது. "அடியொழுகல்", "நித்திய கன்னிகை", "ஸங்கதிகள்" என்பவை குறிப்பிடத் தக்கவை.

இந்தக் கதைகள் சமுதாய அமைப்பு வேகம் கொண்டவை. அதோடு, இடதுசாரி அரசியல் சார்பு கொண்டவை.

இந்த நாள்வரை மலையாள இலக்கியத்தில், வசதியுள்ள நடுத்தரக் குடும்ப வாழ்க்கையே இடம் பெற்றது. தகழியும் அவர் காலத்தவரும் வாழ்க்கையின் சகலதுறைகளிலுள்ள மக்க ளின் சுகதுக்கங்களையும் இலக்கிய ஏட்டுக்கு ஏற்றிவிட்டனர்.

பெரும் காட்டுத் தீ என நாடு முற்றும் பரவிய விடுதலை இயக்கத்தில் தகழியும் பங்கு கொண்டார். ஓரிரு முறை அரசியல் நடவடிக்கைகளுக்காக அவர் தலைமறைவாக இருக்க வேண்டியிருந்தது. திருச்சூர் அருகே தடக்கன்சேரியில் இவ்வாறு தலைமறைவாக இருந்த ஒரு சமயம்தான், அவரது

"தோட்டியுட மகன்" வெளிவந்தது. 1947—ல் அது வெளி வந்ததும் மலையாளத்தில் பலமான விவாதத்தை எழுப்பியது. ஒரு தோட்டியின் வாழ்க்கையைத் தத்ரூபமாகச் சித்தரிக்கும் கதை அது. படிப்பவர் மனம் நொந்துவிடும் அளவு அவ் வாழ்க்கையின் உண்மையைப் படம் தீட்டிக் காட்டியிருக்கிறார் ஆசிரியர். அந்த இளம் தோட்டி, தன் மகன் தன்னைவிடச் சிறந்த வாழ்வை அடையவேண்டும் என்று ஆசைப்படுகிறான். சாக்கடை வாழ்விலிருந்து தன் மகனை உயர்த்தும் முயற்சியில், தனது சமூகத்து மக்களையே ஏமாற்றும் அளவுக்குச் சுயநல வாதியாகிவிடுகிறான். ஆயினும் என்ன பயன்? சமுதாயக் கட்டுப்பாடு அசைக்க முடியாத ஒன்றாயிற்றே. தோட்டியின் மகன் பள்ளியிலும், தோழர்களிடையேயும் ஒதுங்கியேதான் வாழமுடிகிறது. சமூகத்தை எதிர்க்கும் இந்தப் போராட்டத்தில் அவன் தோற்றுவிடுகிறான். கொள்ளைநோயில் மடிந்து விடுகிறான். தோட்டியின் மகனும் ஒரு தோட்டியாகவே வேலை பார்க்கத் தொடங்குகிறான்! போரில் தோல்விதான்; ஆயினும் போராட்டம் ஓயவில்லை. சமுதாயத்தின் கண்ணும் காதும் மனச்சாட்சியும் திறக்கப்பட்டு, அப்பட்ட உண்மையைக் காணும் வாய்ப்புப் பெறுகின்றன.

தகழி ஒரு தலைசிறந்த நாவலாசிரியர் என்பதை உணர்த்திய "இரண்டிடங்கழி" (இரண்டு படி*) என்ற நாவல் 1948—ல் வெளியாயிற்று. "ஒரு குடியானவன் மகன் என்ற நிலையில் நான் நன்கு அறிந்து அனுபவித்த கஷ்டங்களை அதில் வெளியிடு கிறேன்" என்று தகழியே கூறுகிறார். இந்த நாவல் பல இந்திய மொழிகளிலும், அயல்நாட்டு மொழிகளிலும் வெளிவந்திருப்ப தோடு, சினிமாப் படமாகவும் உருப்பெற்றது.

இரண்டிடங்கழி நாவல் பண்ணை வேலை செய்யும் புலையர் என்னும் தீண்டாதார் சமூகத்தைப் பற்றியும், கடினமான கௌரவக் குறைவான விதிகளுக்குக் கட்டுப்பட்டு அவர்கள் நிலச் சொந்தக்காரர்களுக்கு உழைப்பதையும் எடுத்துக் கூறுகிறது. உண்மையை உள்ளபடியேதான் கூறுகிறது கதை. ஆனால் தகழியின் அனுதாபம் எந்தப் பக்கம் செல்கிறது என்பதை உணர்வதில் சிரமமில்லை.

---

*இந்த நாவல் தமிழிலும் வெளிவந்துள்ளது.

இரண்டிடங்கழியைத் தொடர்ந்து பல சிறு கதைகளும் குறுநாவல்களும் வெளிவந்தன. 1956 மார்ச்சில் வெளி வந்தது 'செம்மீன்'. இந்தியாவின் சிறந்த இலக்கியப் பாராட் டான சாகித்திய அக்காதெமிப்பரிசு இந்த நாவலுக்கு அளிக்கப் பட்டது. இந்த நாவலும் சர்ச்சைக்குரியதாயிருந்தது. வாழ்த்தும் வசவும் இதற்கு நிறையக் கிடைத்துள்ளன. வீடு களிலும் இலக்கியக் குழுக்களிலும் இதுகுறித்து விவாதங்கள் நிகழ்ந்தன. நாலுபேர் கூடிய இடங்களில் பேச்சு எழுந்தால், அது 'செம்மீனை'ப் பற்றியே இருக்கும்.

இதுவரை பிரத்யக்ஷ்ய வாழ்வையே பிரதிபலிப்பவர் என்று கருதப்பட்ட தகழி, "செம்மீன்" நாவலில் கற்பனை அம்சத்தைப் புகுத்தினார். மீனவர் சமூக வாழ்க்கைமுறை, அவர்களது நம்பிக்கைகள், மரபுகள், அவர்கள் படும் கஷ்டங் கள் ஆகிய அனைத்தையும் முறைப்பட வர்ணித்து, ஒழுக்கம் மிக்க வாழ்வு வகைகளில் அதுவும் ஒன்று என்பதை உணர்த்தினார்.

கேரளத்துக் கடற்கரை எத்தனையோ சிறு சிறு மீனவர் கிராமங்கள் கொண்டது. கடலுடன் தமது வாழ்க்கையைப் பிணைத்துக்கொள்ள எளிய மீனவர்கள் வாழும் சின்னஞ்சிறு செம்படவச் சேரிகள் அவை; அத்தகைய கிராமத்துக் கதை "செம்மீன்".

இந்த மீனவர்களின் கொடிய வறுமை, அயரா உழைப்பு, எளிமை, ஆகியவற்றை நேரில் கண்டாலன்றி நம்பமுடியாது. அவர்களது வாழ்க்கையே ஒரு நீண்ட போராட்டம். ஆனால் அந்த சாகச வாழ்க்கையை அவர்களே பெருமையுடன் விரும்பி ஏற்றுக்கொண்டு விட்டதனால், வேறுவிதமாக வாழ விரும்ப வில்லை. நல்லோரைக் காத்து, தீயோரைத் தயவின்றித் தண்டித்துவிடும் கடலன்னையிடம் உள்ள நம்பிக்கைதான் அவர்கள் வாழ்க்கையை இயக்குகிறது.

இத்தகைய எளிய சமூகங்களிலும் கூட கட்டுப்பாடுகளும் மரபுகளும் எத்தனை எத்தனையோ. சொந்தப் படகு வைத்திருப் போர், வெறும் கூலி வேலை செய்யும் செம்படவர், கிழக்கே யிருந்து, அதாவது உள்நாட்டிலிருந்து வரும் கீழ்மக்கள்—என இவ்வாறு பல சாதிகள்—உட்பிரிவுகள்—அவர்களிடையே

உண்டு. வியாபாரிகள், பெரும்பாலும் முஸ்லீம்கள், மீன் வாங்கி, பதப்படுத்தி, நகரங்களிலும் துறைமுகங்களிலும் மொத்த வியாபாரிகளிடம் விற்பார்கள்.

கிராமத்தின் தலைவன் கட்டுப்பாடுகளைப் பொறுத்தவரை சர்வாதிகாரி. அவன் அனுமதியும் ஆசியும் இராமல் எவரும் சொந்தப் படகு வைத்துக்கொள்ள முடியாது. அவன் ஆசியில்லாமல் எந்தத் திருமணமும் நடந்துவிட முடியாது. சச்சரவுகளில் மத்யஸ்தம் செய்வது அவனே. எந்த வழக்கிலும் நீதிபதி அவனே.

பெண்களுக்குக் கற்பும் தூய்மையும்; ஆண்களுக்கு உடலுறுதியும் நெஞ்சுரனும் முக்கியம். கரையிலுள்ள பெண்களுடைய கற்பின் வலிமைதான் கடலில் படகேறிச்சென்றுள்ள மீனவருக்குப் பாதுகாப்பு. கடலம்மை கண்டிப்பானவள். எத்தனையோ சுழல்களும் கொடிய நீரோட்டங்களும் நிறைந்த பாதையைக் கடந்து, கடலின் பாதாளத்தில் வாழ்கிறாள் அவள். சற்றும் இரக்கமின்றி, கொடியோரை அவள் இழுத்துக் கொண்டு விடுவாள்.

கடின உழைப்பு மிக்க இத்தகைய தினசரிச் சூழலில் வேடிக்கைக்குப் பொழுது எங்கே? ஆனால் வாழ்க்கை வரண்டு விடவில்லை. வலை நிறைந்து வழியும் நாட்களில், மீனவர்கள் அருகே உள்ள நகரத்திற்குச் சென்று கொண்டாடுவார்கள். ஆண்டுக்கொரு முறை ஆயில்ய விழா வருகிறது. புத்தாடை உடுத்து, பண்டிகை கொண்டாடி மகிழும் நேரம் அது. இந்த வாழ்க்கை முறையில், ஒரு ஒதுக்குப்புறத்தில், அன்பும் காதலும் கூட இருப்பதைக் காணலாம். மௌனமான, பகட்டற்ற காதல், நிறைவேறிய காதல், சோகத்தில் முடியும் காதல்— எல்லாம் உண்டு. இவ்வாறு நெற்குன்னம், திரிகுன்னம் புழை கிராமத்து மீனவர் குடிகள் எவ்வளவுதான் எளிமையாயிருந்தாலும், மனித சமூகத்தின் அம்சமாகவே விளங்கினர்.

இதுதான் செம்மீன் கதையின் களம். அதிக ஆசை பிடித்து, அதன் காரணமாகச் சீலம் குறைந்த ஒரு மீனவனின் பெண் கறுத்தம்மா, பரீக்குட்டி என்னும் முஸ்லீம் வியாபாரியை நேசிக்கிறாள், ஆனால் அவர்களது தூய காதல் இனிது நிறைவேறவில்லை. தான் பரீக்குட்டியை மணக்க முடியாது என்று

கறுத்தம்மாவுக்குத் தெரியும். பரீக்குட்டிக்கும் அது தெரியும். சமூகக்கட்டுப்பாடுகள் அவ்வளவு வலுவானவை. பரீக்குட்டியிடமிருந்து தன் நினைவை அகற்றக் கறுத்தம்மாவால் இயலவில்லை. வசந்தநாளில் தானே மலரும் ரோஜாவைப் போல தவிர்க்க முடியாத வண்ணம் அவர்கள் காதல் மலர்கிறது. ஆயினும் கறுத்தம்மா, மௌனமாக, சோகத்துடன், ஓர் இளம் மீனவனைக் கணவனாகக் கைப்பிடிக்கிறாள். அவளது மனப் போராட்டங்களை அறிந்தவள் அவள் தாய் ஒருத்தி தான். கறுத்தம்மா கட்டிய கணவனுக்கு உண்மையான மனைவியாக வாழ எவ்வளவோ பக்குவமாக நடந்துகொள்கிறாள்! இந்த மனப்போராட்டத்தை விவரிக்கும் பகுதிகள் இந்த நூலிலே உள்ளத்தை உருக்கும் வண்ணம் அமைந்துள்ளன. கறுத்தம்மாவின் வாழ்வில் பரீக்குட்டியின் நிழல் படர்ந்து கொண்டே வருகிறது. கடைசியில் தவிர்க்க முடியாத சோக முடிவு ஏற்படுகிறது.

செம்மீனுக்குப் பிறகு தகழி மற்றுமொரு நாவலை 1959-ல் எழுதினார். கேரள சமூகத்தில், தோட்டி, குடியானவன், மீனவன் என்று தாழ்ந்து ஒதுங்கிய சிறு சிறு இனங்களைப் பற்றியே எழுதியவர், "ஔஸப்பின் மக்கள்" என்னும் இப்புது நாவலில் கேரளநாட்டுக் கிறிஸ்தவக் குடிமக்களின் வாழ்வை விளக்குகிறார். தற்போது அவர் எழுதி முடித்துள்ள புதிய பெரிய நாவல், அவர் காலத்துச் சமூக சரித்திரமாக விளங்கும். ஒரு தனி இனத்தைப் பற்றி வருணிக்காமல், இது சமுதாயம் அனைத்தையுமே களமாகக் கொண்டது.

தகழி அதிகமாகவும் வேகமாகவும் எழுதுபவர். (செம்மீன் நாவலை அவர் இருபது நாட்களுக்குள் முடித்துவிட்டார்.) ஆனால் அவர் எழுத்தில் விகாரமான ஒரு சொல்லைக்கூட நான் கண்டதில்லை. நாற்பத்தெட்டு வயது நிறைந்தவர் தகழி. மாறி வருவதோடு நாள்தோறும் வளர்கிறார். இவ்வகையான வளர்ச்சி அவருடைய ஆற்றலுக்கு மட்டுமல்லாமல், அவருடைய தன்மைக்குமே அளவுகோலாகும். தெளிந்த ஓட்டமும், வேகமும், சிருஷ்டித்திறனும் மிக்க ஒரு எழுதுகோலிலிருந்து நாம் எதிர்பார்க்கக் கூடியவற்றிற்கு ஒரு எல்லையும் உண்டோ?

# செம்மீன்

# 1

“எங்க அப்பா தோணியும் வலையும் வாங்கப் போறுரே!”

“உன் அதிர்ஷ்டம்!”

கறுத்தம்மாவுக்கு வாய் அடைத்துப் போய்விட்டது. தனது நிலைமையைச் சமாளித்துக் கொண்டு பேசினுள்:

“ஆனு பணம் கொஞ்சம் குறையிது. எங்களுக்குக் கொஞ் சம் பணம் கொடுப்பியா?”

“என் கையில் ஏது பணம்?” என்று தன் கைகளை விரித்துக் காட்டினுன் பரீக்குட்டி. கறுத்தம்மா சிரித்தாள்.

“பின்னே எதுக்காகப் பெரிய முதலாளீன்னு சொல்லிக் கிட்டு இருக்கிருயாம்?”

“நீ ஏன் என்னை சின்ன முதலாளீன்னு கூப்பிடுறே?”

“பின்னே எப்படிக் கூப்பிடணும்?”

“பரீக்குட்டின்னு கூப்பிடணும்.”

கறுத்தம்மா “பரீ” என்பது வரையிலும் சொல்லிவிட்டுச் சிரித்தாள். தனது முழுப் பெயரையே சொல்லும்படி பரீக் குட்டி அவளிடம் கேட்டுக்கொண்டான். கறுத்தம்மா சிரிப்பை அடக்கி முகத்தில் கௌரவ பாவத்தை வரவழைத்துக் கொண்டு, “மாட்டேன்” என்று தலையசைத்து விட்டுச் சொன்னுள்:

“நான் கூப்பிடமாட்டேன்.”

“அப்படியானு நானும் கறுத்தம்மான்னு கூப்பிடமாட் டேன்.”

“பின்னே எப்படி கூப்பிடப் போறே?”

“நான் உன்னே பெரிய மரக்காத்தீன்னு கூப்பிடுவேன்.”

குபீரென்று சிரித்தாள் கறுத்தம்மா. பரீக்குட்டியும் வாய்விட்டுச் சிரித்தான். நெடுநேரம் சிரித்தார்கள் அப்படி! எதற்குத்தான் அப்படிச் சிரித்தார்களோ? ஏனோ அடக்க முடியாமல் சிரித்தார்கள்!

''அது சரி, தோணியும் வலையும் வாங்கினு, தோணி மீனை எனக்கு விலைக்குப் போடணும்னு உன் அப்பாகிட்டே சொல் லுவியா?''

''நல்ல விலை கிடைத்தால் மீன் கொடுப்போம்.''

மீண்டும் குபீரென்ற சிரிப்பு!

இத்தனை தூரம் சிரித்து மகிழ இந்தப் பேச்சில் என்ன இருக்கிறது? இது என்ன ஒரு பிரமாதமான ஹாஸ்யமா? பேச்சுக்குப் பேச்சு ஒருவரால் வாய்விட்டுச் சிரிக்க முடியுமா?

சிரி சிரி யென்று சிரித்ததில் கறுத்தம்மாவின் கண்களில் நீர் முட்டி விட்டது. மூச்சுத் திணற அவள் சொன்னுள்:

''சிரிப்பு மூட்டாதே சின்ன முதலாளீ!''

அதைப்போல், தன்னையும் சிரிப்பூட்ட வேண்டாமென்று பரீக்குட்டி அவளிடம் கேட்டுக்கொண்டான்.

''அடேயப்பா! என்னு சின்ன முதலாளி நீ!''

ஒருவரை ஒருவர் கிசுகிசுமூட்டிவிட்டுக் கொண்டது போல் இருவரும் சிரித்தார்கள். கிசுகிசு மூட்டினுல் சிறிது நேரத்தில் சிரிப்பு மறைந்து போகும்; முகம் சிவக்கும்; கடைசியில் அழுகையில் போய் முடியும். அப்படித்தான் கறுத்தம்மாவின் முகமும் சிவந்தது. அவள் ஏனோ கலவரமடைந்தாள்; இல்லை, ஒருவகை அருவருப்புணர்வு ஏற்பட்டது அவளுக்கு.

''என்னை அப்படி மொறைக்காதே!''

அவளிடம் சிரிப்பு மறைந்தது. தன்னுணர்வின்றி ஏதோ தவறிழைத்துவிட்டான் பரீக்குட்டி. அவன் சொன்னுன்:

''நீ எனக்கு சிரிப்பு மூட்டிவிட்டு—''

''உம் ஹூம்!''

பெருக்கல் சின்னம்போல் கைகளை மார்பின்மீது மடக்கி வைத்துக்கொண்டு திரும்பி நின்றுள் கறுத்தம்மா. அவள் மீண்டும் ஒரு முறை குன்றிக் குறுகிப் போனுள். ஓர் ஒற்றை வேட்டி மட்டும்தான் அவள் உடுத்தியிருந்தாள்.

''ஹூம். என்ன இது சின்ன முதலாளி!''

வீட்டிலிருந்து கறுத்தம்மாவை அழைக்கும் குரல் கேட்டது. வியாபாரத்திற்காகக் கிழக்கே சென்றிருந்த சக்கி திரும்பி வந்துவிட்டாள். கறுத்தம்மா வீட்டை நோக்கி ஓட்டம் பிடித்தாள். அருவருப்பு உணர்ச்சியோடுதான் அவள் செல்லுகிறுள் என்று பரீக்குட்டி எண்ணிக்கொண்டான். அவன் வாட்டமுற்றுன். பரீக்குட்டியிடம் கோபத்துடன். கடுமையாக ஏதோ தான் சொல்லிவிட்டதாகவே கறுத்தம்மாவுக்கும் தோன்றிற்று. அவன் மனம் வேதனைப்படுமே.பரீக்குட்டியின் முன்னுல் மட்டுமல்ல, வேறு எந்த இடத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் அவள் அப்படிச் சிரித்ததில்லையே. ஒரு விசேஷமான அனுபவம்தான். மூச்சுத்திணற, சுவாசப் பையே வெடித்து விடுவதுபோல் அல்லவா அவள் சிரித்தாள். தான் அம்மணமாக நின்று கொண்டிருப்பது போல் தோன்றியது அவளுக்கு. எவருடைய பார்வையிலும் படாமல் மறைந்து விட்டால் போதும் என்ற எண்ணமும் அப்போது கூடவே பிறந்தது. அன்றுவரை அவளுக்கு ஏற்பட்டிராத அனுபவம் அது.........அவன் நெஞ்சில் தைக்கும்படி ஏதோ சொல்லிவிட்டேன் போலிருக்கிறது!

எத்தனை எடுப்பாக இருக்கிறது அவளுடைய மார்பகம்! கணத்துக்குக் கணம் எத்தனை வளர்ச்சி! பார்வையை அங்கே குவிக்கையில் பரீக்குட்டிக்குத் தன் நரம்புகள் முறுக்கேறுவது போலிருக்கிறது. அந்த உணர்விலிருந்துதான் சிரிப்பு மூண்டதோ! அவள் ஓர் ஒற்றை வேட்டிதான் கட்டியிருந்தாள். அதுவும் மெல்லியதாகவே இருந்தது.

அவள் பிணங்கிச் சென்று விட்டதாகப் பரீக்குட்டி எண்ணினுன். நான் நடந்துகொண்ட விதத்தில் அதிருப்தியுற்று, கோபித்துக்கொண்டு போய் விட்டாள்! கறுத்தம்மா இனிமேல் என்னை நாடி வரமாட்டாளா?

.........தவறை மன்னித்து விடு என்று கறுத்தம்மாவிடம் சொல்லவேண்டும். இனிமேலும் இப்படி மரியாதைக் குறைவாகவே நடந்து கொள்ள மாட்டேன்.

பரஸ்பரம் இருவரும் மன்னிப்புக் கோர எண்ணினர்.

நாலைந்து வயதான ஒரு சிறுமி; அந்தக் கடற்கரையில் கிளிஞ்சல் பொறுக்கியும், தோணிக்குள் வலையை உதறுகையில்

வெளியே சிதறி விழும் குஞ்சு மீன்களைப் பொறுக்கியும் திரிந்த காலத்தில், அந்தச் சிறுமிக்கு ஒரு தோழன் கிடைத்தான். அவன்தான் பரீக்குட்டி. நிஜாரும் மஞ்சள் சொக்காயும் அணிந்து, கழுத்தில் பட்டு உருமாலும் சுற்றி, குஞ்சம் தொங்கும் தொப்பியும் அணிந்துகொண்டு, தன் 'வாப்பா'வின் கையில் தொங்கியவாறு பரீக்குட்டி முதன்முதலில் கடற்கரைக்கு வந்தது, கறுத்தம்மாவுக்கு நல்ல ஞாபகம்தான். தங்கள் வீட்டின் தெற்குப் பக்கத்தில்தான் அவர்கள் மணலில் கிட்டங்கி கட்டி விளையாடினார்கள். இன்றும் அந்தக் கிட்டங்கி அங்கேதான் இருக்கிறது. வாலிபனாகிவிட்ட பரீக்குட்டி இப்போது அங்கே வியாபாரியாகக் காட்சியளிக்கிறான்.

இப்படி அவர்கள் இருவரும் அண்டை வீட்டுக்காரர்களாக அந்தக் கடற்கரையில் வளர்ந்து வந்தனர்.

அடுப்பில் தீ மூட்டியபடி அடுக்களையில் உட்கார்ந்திருந்த கறுத்தம்மா ஏதேதோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். நெருப்பு அடுப்புக்கு வெளியே படர்ந்து எரிந்துகொண்டிருந்தது. அப்போது அடுக்களையினுள் நுழைந்த அவளுடைய தாய் தன் பெண் உட்கார்ந்திருந்த லட்சணத்தையும் அடுப்பு எரியுங் கோலத்தையும் சிறிதுநேரம் பார்த்தபடி நின்றாள்.

சக்கி கறுத்தம்மாவைக் காலால் ஒரு தட்டுத் தட்டினாள். அவள் கனவிலிருந்து விடுபட்டு, திடுக்கிட்டு விழித்தாள். சக்கி கோபமாகக் கேட்டாள்:

"யாரை நெனச்சிக்கிட்டு உட்கார்ந்திருக்கே?"

கறுத்தம்மா அப்போது இருந்த நிலையைப் பார்த்தால் யாருமே அப்படிக் கேட்கத்தான் செய்வார்கள். சக்கியின்மேல் பிசகு இல்லை; கறுத்தம்மா இந்த உலகிலேயே இருக்கவில்லை.

"அம்மா! அங்கே கரையிலெ ஏத்தி வெச்சிருக்கே தோணி, அதுக்குப் பின்னாலே நின்னுக்கிட்டு, சின்ன முதலாளி கிட்டே அக்கா சிரிச்சிப் பேசிக்கிட்டிருந்தா அம்மா."

இப்படிச் சொன்னவள் கறுத்தம்மாவின் தங்கை பஞ்சமி. கறுத்தம்மா பதறிப் போனாள். அவள்மீது பழிசேர்க்கும் ரகசியம் அல்லவா அது? யாரும் அறியாத ரகசியத்தை அவள் வெட்ட வெளிச்சமாக்கி விட்டாளே. அதோடு விட்டுவிடவில்லை பஞ்சமி.

"என்னு சிரிப்புச் சிரிச்சிக்கிட்டிருந்தா தெரியுமா அம்மா!"

இதைச் சொல்லிவிட்டு, 'என்னை ஏய்த்தால் இப்படித் தான் வரும்' என்ற பாவத்தில் விரலைச் சுட்டிக் காட்டிவிட்டு ஓடிவிட்டாள் பஞ்சமி.

பஞ்சமியை வீட்டிலே விட்டு விட்டுத்தான் வெளியே சென்றாள் கறுத்தம்மா. அக்கம்பக்கத்துக் குழந்தைகளுடன் விளையாடப் போகமுடியாமலாகி விட்டது, பஞ்சமிக்கு. வீட்டில் ஒருசமயம்கூட ஆள் இல்லாமலிருக்கக்கூடாது என்பது செம்பன்குஞ்சுவின் உத்தரவு. தோணியும் வலையும் வாங்கும் பொருட்டு அவன் கொஞ்சம் பணம் சேர்த்து வைத் திருந்தான். எனவேதான் பஞ்சமி வீட்டில் இருக்கவேண்டிய தாயிற்று. அதற்கு இப்படி அவள் வஞ்சம் தீர்த்துக்கொண்டு விட்டாள்.

ஒரு தாய் அசட்டை செய்யக்கூடிய காரியமா இது?

சக்கி கறுத்தம்மாவிடம் கேட்டாள்:

"என்னடீ சொல்ரு இவ?"

கறுத்தம்மாவால் பதில் சொல்ல முடியவில்லை.

"என்ன நெனச்சிக்கிட்டிருக்கே நீ?"

இந்தக் கேள்விக்குக் கறுத்தம்மா பதில் சொல்லித்தானே தீரவேண்டும். ஆமாம் சொல்லக் கடமைப்பட்டவள் அவள். தட்டுத்தடுமாறி ஒரு பதிலைக் கண்டுபிடித்தாள்.

"நான் கடற்கரைப் பக்கம் சும்மா போய்க்கிட்டிருந் தேன்—"

"கடற்கரைப் பக்கம் போய்க்கிட்டிருக்கிறபோது......?"

"சின்ன முதலாளி தோணியிலே உட்கார்ந்துகிட்டிருந் தான்."

"அதுக்கு நீ ஏன் இளிக்கிணுமாம்?"

கறுத்தம்மாவுக்கு ஒரு சாக்கு சொல்லக் கிடைத்தது.

"தோணியும் வலையும் வாங்குறதுக்குப் பணம் குறையி தேன்னு, கேட்டுக்கிட்டிருந்தேன்."

"நீ எதுக்குடி பணம் கேக்கணும்?"

கறுத்தம்மா முதலில் சொன்ன பதிலையே விடாமல் பிடித் துக்கொண்டு பேசினாள்:

"சின்ன முதலாளிக்கிட்டே பணம் கேட்கணும்னு அண்ணைக்கி நீயும் அப்பாவும் பேசிக்கிட்டிருக்கலியா?"

நம்பும்படியான பேச்சாக இல்லை அது. அவள் ஒரு பதிலை ஜோடித்துச் சொல்லிப் பார்த்தாள். சக்கி கறுத்தம்மாவை ஏற இறங்கக் கூர்ந்து கவனித்தாள்.

சக்கியும் அந்தப் பருவத்தைக் கடந்து வந்தவள்தான். சக்கி, கறுத்தம்மாவின் பிராயத்தில் இருந்த காலத்திலும், அந்தக் கடற்கரையில் கிட்டங்கிகளும், கிட்டங்கிகளில் சின்ன முதலாளிகளும் இருந்திருக்கலாம். கரையேற்றிப் போட்டிருக்கும் தோணியின் மறைவில் நின்றவாறு சின்ன முதலாளிகள் சக்கியையும் கலகலவென்று வாய்விட்டுச் சிரிக்கும்படி செய்திருக்கலாம். சக்கியும் கடற்கரையில் பிறந்து வளர்ந்த ஒரு செம்படவப் பெண்தான். அவளும் பரம்பரை பரம்பரையாக ஒப்புக்கொள்ளப்பட்டு வரும் ஒரு தத்துவப் பேருண்மைக்குக் கட்டுப்பட்டவள்தான்!

அலைகளுக்கும் நீரோட்டத்துக்கும் எதிராகப் போர் தொடுத்து, ஒரு மரத்துண்டில் அடிவானத்தைத் தாண்டிச் சென்ற முதல் செம்படவனின் மனைவி, விரத நோன்பெடுத்துக் கடற்கரையில் மேற்கு நோக்கி நின்றவாறு தவம் செய்து கொண்டிருந்தாள். கடலில் சூறை கிளம்பி விட்டது. வாயைப் பிளந்தபடி திமிங்கிலங்கள் நெருங்கின. சுறுமீன்கள் வாலால் தோணியைத் தாக்கின. நீரோட்டம் தோணியை ஓர் அகண்டமான சுழியினுள் இழுத்துச் சிக்கவைத்தது. சகல விபத்துகளினின்றும் வியக்கும்படி தப்பித்துவிட்டான் அந்தச் செம்படவன். அதுமட்டுமல்ல; ஒரு பெரிய மீனோடு அவன் கரைவந்து சேரவும் சேர்ந்தான். அந்தப் புயலிலிருந்து எவ்வாறு மீண்டு வந்தான் அவன்? அவனைத் திமிங்கிலங்கள் ஏன் விழுங்கவில்லை? சுறுமீனால் தாக்குண்டும் தோணிக்குக் கேடு எதுவும் சம்பவிக்கவில்லையே? நீரோட்டம் வழிவிடத் தோணி மிதந்து வந்தது. இவ்வாறெல்லாம் நிகழக் காரணம் என்ன? அந்தக் கற்புடையாள் கடற்கரையில் தவம் செய்து கொண்டிருந்தாள்.

கடற்கரைப் பெண்டிர் அந்தத் தவபலத்தை உணர்ந்து கொண்டனர். அந்தத் தவபலத்தை, வாழ்க்கைத் தத்துவத்

தைச் சக்கியும் தனதாக்கிக் கொண்டாள். சக்கியின் மார்பு பூரண வளர்ச்சி அடைந்த அந்தக் காலத்தில் ஒருவேளை அவளையும் ஒரு சின்ன முதலாளி வெறித்திருக்கலாம். அன்று சக்கியின் தாய் சக்கியிடமும் கடற்கரைப் பெண்களின் தவ பலத்தையும், வாழ்க்கைத் தத்துவத்தையும் அறிவுறுத்தியிருக் கலாம்.

கறுத்தம்மாவின் தவறைப் புரிந்துகொண்டோ, புரிந்து கொள்ளாமலோ சக்கி சொன்னாள்:

"இண்ணைக்கி நீ சின்னப் பொண்ணில்லெ. பெரிய மரக் காத்தி ஆயிப்புட்டே. ஆமா."

'பெரிய மரக்காத்தி' என்று பரீக்குட்டி அழைத்தது கறுத்தம்மாவின் செவிகளில் முழங்கிற்று. சக்கி தொடர்ந்து சொன்னாள்:

"பரந்துகிடக்கிற இந்தக் கடல்லே எல்லாம் இருக்குது பொண்ணே; எல்லாம் இருக்குது. கடலுக்குப் போகிற ஆம்புளை திரும்பி வாறது எப்படீன்னு நெனச்சுக்கிட்டிருக்கே? கரையிலே இருக்கிற பொம்புள்ளைகள் மானம் மரியாதை யோடே இருக்கிறதனாலேதான். தோணியைச் சுழி அப்படியே தூக்கி முழுங்கிப்புடும். கடலுக்குப் போகிற ஆம்புள்ளையின் உசிரு கரையிலே இருக்கிற பொம்புள்ளை கையிலதான் இருக்கு."

கறுத்தம்மா அங்குமட்டுமல்ல, அந்தச் சந்தர்ப்பத்தில் மட்டுமல்ல, இவ்வார்த்தைகளைக் கேட்கிறாள். நாலு மரக் காத்திகள் கூடுகின்ற இடத்திலெல்லாம், இதே பேச்சு அடிபடு வதைக் கேட்டிருக்கிறாள்.

இருந்தாலும் பரீக்குட்டியோடு சற்று சிரித்து விளையாடிப் பேசியதில் என்னதான் தவறு நேர்ந்துவிட்டதாம்? கடலுக் குப்போகிற புருஷன் ஒருவனின் உயிர் இன்னும் அவள் கையில் ஒப்படைக்கப்படவில்லையே. ஒப்படைக்கப்பட்டால் அவளும் அந்த உயிரை மிக ஜாக்கிரதையாக, பத்திரமாகக் காப்பாற்றுவாள். எப்படிக் காக்க வேண்டும் என்பதையும் அவள் அறிவாள். ஓர் அரயப் பெண்ணுக்கு யாரும் இதைக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை.

சக்கி தொடர்ந்து சொன்னாள்;

''சில சமயம் இந்தக் கடல் வறண்டு ஒண்ணுமில்லாமப் போகுதே, அது ஏன் தெரியுமா? கடல்தாய்க்குக் கோபம் வந்துடுத்தின்னு எல்லாத்தையும் அளுச்சிப் போடுவா. அப்படி இல்லேன்னு தன் குழந்தைகளுக்கு வாரி வாரிக் கொடுப்பா. தங்கக் கட்டி கெடக்குது பொண்ணே, கடல்லே தங்கக்கட்டி கெடக்குது.''

அத்துடன் ஒரு பேருண்மையையும் தன் மகளுக்கு உபதே சித்தாள் சக்கி.

''ஒழுக்கம் இருக்குதே, அதுதான் பொண்ணே பெரிசு. மரக்காத்தியின் ஒழுக்கம்தான் மரக்கானுக்குச் சொத்து.''

ஒழுக்கத்தையும், மானத்தையும் இழந்துவிட்ட சில சின்ன முதலாளிகள், சில சமயங்களில் கடற்கரையை அசுத் தப் படுத்திவிட்டுப் போய்விடுவார்கள். செம்மீன் அடிக்கவும், கருவாட்டுச் சிப்பம் கட்டவும் கிழக்கே இருந்து சில பெண்கள் வருவதுண்டு. அவர்களும் கடற்கரையை அசுத்தமாக்கியிருக் கிறார்கள். அவர்களுக்கு எங்கே .தெரியும், கடற்கரையின் பரிசுத்தத் தன்மை? அவர்கள் கடல்தாயின் குழந்தைகளும் அல்ல. ஆனல், அதன் பலாபலன்கள் கடற்கரைச் செம்படவர் களின் தலையில் வந்து விடியும்.

''கரையேத்திப் போட்டிருக்கும் தோணியின் பின்பக்கம், புதர்க்காடு...இதெல்லாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய இடங்கள். ஆமாம்.''

இதைச் சொல்லிவிட்டு, மிகுந்த கௌரவ பாவத்துடன் முக்கியமான எச்சரிக்கை ஒன்றைச் சக்கி அறிவித்தாள்:

''இதோபாரு, நீ வயசுவந்த பொண்ணு. சின்ன முதலாளி களும், கண் தலை தெரியாமல் திரிகிற இந்தக் காலத்து இளவட்டப் பிள்ளைகளும் முன்னும் பின்னும் கண் போட்டு வாங்க.''

கறுத்தம்மாவுக்கு நடுக்கம் எடுத்தது. ஆமாம். உண்மை யில் தோணிமறைவில் அப்படித்தானே நிகழ்ந்தது? அப்போது கறுத்தம்மாவின் மனசுக்குள் ஓர் எதிர்ப்பு உணர்ச்சி மூண் டதே—அது பரம்பரை பரம்பரையாக வந்து, அவள் உடம்பி லும் உறைந்துவிட்ட குணம்சமாக இருக்கலாம். மார்பகத் தையும், பிருஷ்ட பாகத்தையும் ஒருவன் வெறித்துப்

பார்ப்பது கடல்தாயின் குழந்தைக்குப் பெருமை தரக்கூடிய காரியம் அல்ல போலும்.

''கறுத்தம்மா, நீ கடலைப் பாழாய் அடிச்சி கரையிலே வாழுகிற ஜனங்கள் வாயிலே மண் அள்ளிப் போட்டு விடாதே!''

கறுத்தம்மாவுக்குப் பயம் பிடித்து விட்டது. சக்கி தொடர்ந்து சொன்னுள்:

''அவன் நாலாம் மதத்து ஆசாமி. அவனுக்கு இந்த நினைப் பெல்லாம் இருக்காது.''

சகல விஷயங்களையும் தெரிந்துகொண்டு விட்டது போலத் தான் சக்கி பேசினுள். அன்று இரவு கறுத்தம்மா உறங்கவில்லை. அந்த ரகசியத்தை வெளியாக்கிய பஞ்சமியிடம் அவளுக்குக் கோபம் இல்லை. இப்படிச் சொல்லிவிட்டாளே என்றும் அவள் எண்ணவில்லை. தவறு செய்துவிட்டோம் என்ற உணர்வு அவளுக்கே இருந்ததால்தான் அவள் அவ்வாறு எண்ணவில்லையோ என்னவோ? ஒரு ஜனசமூகத்தில், நூற் ருண்டுகளாக, நிரந்தரமாக நிலைநின்று வரும் வாழ்க்கைத் தத்துவம் அவளிடத்திலும் குடிகொண்டிருக்கிறது. இப்போது தான் அது தெளிவான உருவம் பெறுகிறதோ என்னவோ? வழிபிசகிச் சின்னுபின்னமாய்ப் போய்விடுவோமோ என்ற பீதியும் அவளுக்கு ஏற்பட்டிருக்கலாம். அந்தப் பீதி இருக்கும் வரையிலும், அவள் பஞ்சமியிடம் கோபம் கொள்ளக் காரண மில்லை. கறுத்தம்மா அப்போது எந்த மனநிலையில் இருந் தாளோ அதிலிருந்து அவளைக் கிள்ளியெறியக் கிளம்பியது போல் ஒரு பாட்டு, கடற்கரையிலிருந்து மிதந்துவந்து அவள் காதை அடைந்தது.

கறுத்தம்மா கவனித்தாள்.

பாடுவது பரீக்குட்டி தான். அவன் ஒன்றும் பாடகன் அல்ல. ஆனுலும் தோணியின் விளிம்பில் அமர்ந்தவாறு அவன் பாடிக் கொண்டிருக்கிருன். தான் அங்கிருப்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியவளுக்கு, பின் அதை எப்படித்தான் தெரிவிப்பது.

தெரிந்துகொள்ள வேண்டியவள் தெரிந்துகொண்டு விட் டாள். எட்ட வேண்டிய இடத்தை எட்டிவிட்டது. கறுத் தம்மாவுக்கு இருக்கை கொள்ளவில்லை. யாரும் அறியாமல்

இறங்கிச் சென்றுவிட்டால்—? மார்பகங்களையும் பிருஷ்ட பாகத்தையும் அவன் வெறித்துப் பார்ப்பான். போகவேண்டிய இடமோ தோணி மறைவு. ஆபத்தான இடம். அவனோ நாலாம் மதத்துக்காரன்.

அவன் பாடிய பாடல் கடல்மேல் செல்லுகிற செம்படவர்கள் பாடும் பாட்டுத்தான். சிறிது நேரம் செவிசாய்த்து இருந்து விட்டோம் என்றால், தானாகவே எழுந்து இறங்கிச் சென்று விடுவோமோ என்றுகூடக் கறுத்தம்மா பயந்தாள். மார்பகத்தை அவன் வெறிக்கையில், பார்வை இதயம்வரை துளைத்துக்கொண்டு சென்றுவிடுகிறது. அதற்கு இடம் கொடுத்து ஆட்பட்டு நிற்பதில் அலாதியான ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது. மார்பு என்பதெல்லாம் என்ன? வெறும் சதைப் பிண்டம்தானே? கறுத்தம்மா மார்பு குழையக் கவிழ்ந்து படுத்தாள். விரல்களையும் காதினுள் திணித்துக் கொண்டாள். அதன் பின்பும் அப்பாடல் அவளுள்ளே ஊடுருவிச் செல்லத்தான் செய்தது.

கறுத்தம்மா அழுதே விட்டாள்.

அவளிருந்த அந்த அறையின் செல்லரித்துப் போன கதவு தானே திறந்துகொண்டு விடலாம். அல்லதுஅது சுக்கு நூறாய்ச் சிதறுண்டு போய்விடலாம். ஆனால், எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாத கற்கோட்டையின் உள்ளே அல்லவா அவள் வாழ்ந்து வருகிறாள். கடல் தாயின் குழந்தைகளிடையே நூற்றாண்டுகளாக நின்று நிலைத்துவரும் வாழ்க்கைத் தத்துவத்தால் எழுப்பப்பட்ட, கனமான, உன்னதமான கற்கோட்டை அது! அதற்கு வாசல் என்பது இல்லை; ஜன்னல் என்பதும் இல்லை. ஆனால், குருதி கொப்பளிக்கும் தசை அக் கற்கோட்டையைப் பிளந்து எறிந்து விடாதா? அதற்கு முன்னும் அதுபோன்ற கற்கோட்டைகள் தகர்ந்ததில்லையா?

மனித நடமாட்டம் இல்லாத அந்தக் கடற்கரையில் பரீக்குட்டியின் பாட்டும் எங்கும் ஒலித்தது. இரவில் குடிசை வாயிலைத் தானே திறந்துகொண்டு ஓர் அரயப்பெண் வெளியேற வேண்டும் என்பதற்காகப் பாடப்பெற்ற பாடல் அல்ல அது. அதற்குத் தாளம் இல்லை; இசை இனிமையும் இல்லை. பாடுகிறவன் குரலும் நன்றாக இல்லைதான். எனினும், அந்தப்

பாட்டில் அலாதியானதொரு ஜீவகளை இருக்கிறது. தான் அங்கிருப்பதை அவன் அவளுக்கு அறிவிக்க வேண்டாமா? தன்னை மன்னிக்க வேண்டுமென்று அவன் அவளிடம் கேட்டுக் கொள்ளப் போகிறான். பாடிப் பாடிப் பரீக்குட்டிக்குத் தொண்டை கட்டியது.

காதிலிருந்த விரல்களை அகற்றினாள் கறுத்தம்மா. அடுத்த அறையில் அவளுடைய தாயும் தகப்பனும் பேசிக் கொண்டிருந்தனர். இல்லை, அவர்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். கறுத்தம்மா இதைக் கவனித்தாள். அவள் விஷயமாகவே அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந் தார்கள்.

செம்பன் குஞ்சு சொன்னான்:

"அதெல்லாம் எனக்குத் தெரியும். நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம். நானும் ஒரு மனிசப் பிறவிதான்."

சக்கி கோபத்துடன் சொன்னாள்:

"பூ! மனிசன். அப்படி நெனச்சிக்கிட்டிருந்தாப் போதும், மக அநியாயமாக கெட்டுப் போவா. ஆமா."

"போடி போ! அதுக்குள்ளே நான் அவளைக் கட்டிக் கொடுத்திடுவேன்."

"அது என்னமா முடியும்? காசு கொடுக்காமெ எந்தப் பய வருவான்னு கேக்கறேன்?"

"இதைக் கேளு புள்ளே" என்று ஆரம்பித்து, தன் வாழ்க்கைத் திட்டத்தை சவிஸ்தாரமாகச் சொன்னான் செம் பன்குஞ்சு. கறுத்தம்மாவும் அதை நூறாவது முறையாகக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

வருத்தத்துடனும், கோபத்துடனும் சக்கி கேட்டாள்:

"அப்போ தோணியும் வலையும் சம்பாதிச்சிகிட்டு உக்காந்திரு."

செம்பன்குஞ்சு தீர்மானமான குரலில் சொன்னான்:

"என்னதான் வரட்டும். அந்தப் பணத்திலே இருந்து சல்லிக்காசு எடுக்கமாட்டேன். அந்த நெனப்பே வேண்டாம் உனக்கு."

சக்கிக்குக் கோபம் பொங்கிற்று.

"யாராவது நாலாம் மதக்காரன் மகளைக் கெடுக்கப் போறுன், பாரு; அதுதான் நடக்கப் போகுது."

செம்பன்குஞ்சு பேசவில்லை. அந்த விஷயத்தின் முக்கியத்துவம் அவன் அறிவுக்கு எட்டவில்லையா? சிறிது நேரத்துக்குப் பின் அவன் சொன்ஞன்:

"நான் ஒருத்தெனத் தேடிப் புடிச்சுப் புடுவேன்."

"பணம் கொடுக்காமலா?"

செம்பன்குஞ்சு ஒரு முனகலில் அதை ஆமோதித்தான். சக்கி கேட்டாள்:

"யாராவது நொண்டி, கூன் குருடு வரும்."

"பார்த்துக்கிட்டே இரு."

அவன் வார்த்தைகளை நம்பாமல் சக்கி சொன்ஞள்:

"அப்படியாஞ ஒண்ணு செய். என் பொண்ணை கடல்லே தூக்கிப் போட்டுப்புடு."

செம்பன்குஞ்சு சீறி விழுந்தான்.

சக்கி கேட்டாள்:

"இந்தத் தோணியும் வலையும் யாருக்குன்னு கேக்கிறேன்?"

செம்பன்குஞ்சு வாயை திறக்கவில்லை. தோணியும் வலையும் வாங்கவேண்டும் என்ற திட்டம் அவனுடைய வாழ்க்கை லட்சியமே தவிர, அத் திட்டம் யாருக்காக வகுக்கப்படுகிறது என்பதை அதுவரையிலும் அவன் யோசிக்கவில்லை.

சக்கி ஒரு யோசனை சொன்ஞள்:

"அந்த வெள்ள மணலி வேலாயுதனுக்குப் பாத்தா என்ன?"

"சீ! அவன் வேண்டாம்."

"ஏனும்? அவனுக்கு என்ன குத்தம்?"

"அவன் ஒரு மரக்கான்; வெறும் சாதாரண மரக்கான்."

"மரக்காஞ இல்லாம வேற யாரைப் போய் புடிச்சிகிட்டு வந்துடப் போறியாம்?"

அந்தக் கேள்விக்குப் பதில் பிறக்கவில்லை.

நாலாம் மதத்துக்காரன் எவனாவது கெடுத்துவிட்டுப் போய்விடுவான் என்று சக்கி சொன்னது கறுத்தம்மாவின் செவியில் முழங்கிற்று. அதன் முழுப் பொருளையும் அப்பா வாங்கியிருக்கமாட்டார். மார்பே விண்டுவிடும் போல் அவள் இதயம் துடித்தது. வேற்று மதத்துக்காரன் ஏற்கெனவே அவளைக் கெடுத்து விட்டிருந்தான் அல்லவா?

அப்போதும் பரீக்குட்டி தொடர்ந்து பாடிக்கொண்டு தான் இருந்தான்.

# 2

மறுநாள் கறுத்தம்மா வீட்டைவிட்டு வெளியே செல்ல வில்லே. பரீக்குட்டியின் கிட்டங்கியில் அன்றும் வேலே நடந்து கொண்டிருந்தது. கிழக்குப் பக்கத்து ஊர்களிலிருந்து சில பெண்கள் வந்திருந்தனர். அங்கே காயப் போட்டிருந்த தாடையையும் குறிச்சியையும் அவர்கள் சிப்பம் கட்டிக் கொண்டிருந்தனர்.

சாவகாசமாய் உட்கார்ந்திருந்த வேளைகளிலெல்லாம் கறுத்தம்மா மனசில் ஓர் எண்ணம் மின்னல்போல் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. கிட்டங்கிகளில் வேலேசெய்யும் பெண்களின் மார்பகங்களேயும், பிருஷ்ட பாகத்தையும்கூட பரீக்குட்டி வெறித்துக்கொண்டிருப்பானே?

நண்பகல் தாண்டியதும் கடலுக்குச் சென்றிருந்த தோணிகள் கரை வந்து சேர்ந்தன. கூடையைத் தூக்கிக் கொண்டு சக்கி கடற்கரைக்குச் சென்ருள். அப்போது சக்கி கண்டிப்பான குரலில் சொன்ஞள்:

"கறுத்தம்மா, நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக் கட்டும்."

கவனத்தில் கொள்ளவேண்டிய விஷயங்கள் என்ன என்ன என்பதைக் கறுத்தம்மாவும் அறிவாள்.

சிறிது நேரம் சென்றதும் செம்பன்குஞ்சு வந்து சேர்ந் தான். கறுத்தம்மா அவனுக்குச் சோறு பரிமாறிஞள். என்றும் இல்லாதபடி அப்போது கறுத்தம்மாவைக் கடுமையாகக் கூர்ந்து கவனித்தான் செம்பன்குஞ்சு. ஒவ்வொரு நாளும் அவளேப் பார்த்துக் கொண்டிருப்பவன்தானே அவன்? அன்று மட்டும் அப்படிப் பார்ப்பானேன்? தான் புரிந்த குற்றம் தன்

தகப்பனுக்கும் தெரிந்துவிட்டதோ என்று பயந்தாள் கறுத்தம்மா. அப்படித் தெரிந்திருக்குமானுல் அவனுடைய பார்வை கடுமையாக இருப்பது இயற்கைதான். ஆனுல், விஷயம் அதுவல்ல.

வயசுப் பெண் ஒருத்தி வீட்டில் இருக்கிருள் என்பதை முந்தைய தினம் அவனுக்கு நினைவூட்டினுள் சக்கி. நினைவு தெரிந்த நாளிலிருந்து ஒரு தோணியும் வலையும் சம்பாதிப் பதற்காக அரும்பாடு பட்டு வருகிருன் அவன். அப்போது அதைவிடவும் முக்கியமான விஷயமொன்றை மனைவி அவன் கவனத்துக்குக் கொண்டு வருகிருள். வயசுப் பெண்! வேற்று மதக்காரன் எவனேனும் அவளைக் கெடுத்துவிடக் கூடும் என்கிருள் சக்கி. இந்த எண்ணங்களெல்லாம் மனசில் ஓடிய போது, அவன் அவளைப் பார்த்தான். அவ்வளவுதான்.

இப்பொழுது செம்பன்குஞ்சு மற்றவர்களின் தோணி களில் வேலைக்குச் சென்று வருகிருன். அதற்கான கூலியும் பெற்று வருகிருன். முதலில் துடுப்புத் தள்ளும் வேலை பார்த் தான். இப்போது சுக்கான் பிடிப்பவனுக உயர்ந்து விட்டான். செம்பன்குஞ்சுவுக்கு வாழ்க்கை லட்சியம் ஒன்று உண்டு. எனவே கிடைக்கிற காசை வீணுக்கமாட்டான். அவன் கையில் கொஞ்சம் பணமும் சேர்ந்திருக்கிறது. எனினும், தோணியும் வலையும் வாங்குவதற்கு அது போதாது.

பெண்ணுக்கு வயசு வந்துவிட்டது. வயசுப்பெண் இருக்கிற இடத்தில் தவறுகள் நேர்ந்து விடலாம். சக்கி சொன்னதெல்லாம் சரிதான். தோணியும் வலையும் வாங்கு வதா, அல்லது பெண்ணைக் கட்டிக் கொடுத்து அனுப்புவதா? ஒரு முடிவுக்கு வந்தாகவேண்டிய விஷயம் இது. செம்பன் குஞ்சுவுக்கும் கறுத்தம்மாவிடம் ஒன்று சொல்ல வேண்டியிருந் தது.

"கறுத்தம்மா ஜாக்கிரதையா இரு! அவ்வளவுதான் சொல்வேன்."

தகப்பனும் அதைச் சொல்லிவிட்டான்.

கறுத்தம்மா, பதில் சொல்லவில்லை. செம்பன்குஞ்சு பதிலை எதிர்பார்க்கவும் இல்லை.

பொழுது சாய்ந்ததும் வேலையாட்கள் எல்லோரையும் அனுப்பி வைத்துவிட்டு, பரீக்குட்டி தோணி விளிம்பில் வந்து அமர்ந்துகொண்டான். ஒருவேளை இன்றும் அவன் கறுத்தம்மாவை எதிர்பார்க்கிறானோ என்னவோ!

செம்பன்குஞ்சு பரீக்குட்டியின் அருகில் சென்றான். அவர்கள் இருவரும் நீண்ட நேரம் சம்பாஷணையில் ஆழ்ந்திருந்ததைக் கறுத்தம்மா கவனித்தாள். 'என்ன பேசிக்கொள்கிறார்கள் அவர்கள்?' என்று யோசித்தாள். ஒரு வேளை அப்பா அவனிடம் கடன் கேட்டுப் பார்க்கிறாரோ என்னவோ?

அன்றிரவு கணவனும் மனைவியும் குசுகுசுவென்று நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளத் துடித்தாள் கறுத்தம்மா.

அன்றும் பரீக்குட்டி பாடினான். சிதலமடைந்த அந்தக் குடிசையினுள் முடங்கிக் கிடந்தவாறு கறுத்தம்மா பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஒரு விஷயத்தைப் பரீக்குட்டியிடம் சொல்லிவிட வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. அதாவது, அவளுடைய மார்பகங்களை அவன் வெறித்துப் பார்க்கக் கூடாது. அதோடு இப்போது மற்றொரு விஷயமும் சேர்ந்துகொண்டது; அவன் பாடவும் கூடாது!

வெகு உற்சாகத்துடன் பட்டுப் பூச்சிபோல் அவள் பறந்து திரிந்துகொண்டிருந்தாள். இரண்டு நாட்களுக்குள் அவளிடம் என்ன என்ன மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன! ஆற அமர அமர்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டிய சங்கதிகளும் முளைத்து விட்டன. தன்னையே அவள் அறிந்து கொள்ளத் தொடங்கினாள். வாழ்வுக்கே ஒரு முக்கியத்துவத்தைத் தருகின்ற விஷயங்கள் அல்லவா அவை! அவள் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் மிகுந்த கவனத்துடன் அவள் எடுத்து வைக்க வேண்டும். இவைகளை எல்லாம் சிந்தித்துப் பார்த்த பின்னர், முன்போல ஓடியாடித் திரிந்துகொண்டிருக்க முடியுமா? ஓர் ஆண்மகன் அவளுடைய மார்பகங்களை வெறித்து, அதன் அழகைப் பருகி விட்டான். அவள் ஒரு யுவதியாகி விட்டாள் என்பதில் என்ன சந்தேகம்?

மறுநாள் பரீக்குட்டியின் பாடல் கேட்கவில்லை. அன்று நிலவொளி எங்கும் பரந்து கிடந்தது. இனம் புரியாத கடற்கரைப் பிரதேசத்துப் பாடல்கள் தென்னங்கீற்றுகளில் மோதிக் கீழ்த்திசையெங்கும் எதிரொலித்தது. பரீக்குட்டியின் பாடல் கேட்கவில்லை என்பதை உணர்ந்ததும், அதைக் கேட்க அவள் செவிகள் விழைந்தன. பரீக்குட்டி இனிமேல் பாடவே மாட்டானோ?

செம்பன்குஞ்சு இரவு உணவை முடித்துக்கொண்டு வெளியே சென்றான். சக்கி உறங்காமல் புரண்டுகொண்டிருந்தாள். "அம்மா, ஏன் நீ உறங்கலெ?" என்று கறுத்தம்மா கேட்டாள். "நீ உறங்கு" என்று பதில் சொன்னாள் சக்கி. கறுத்தம்மா உறங்கியும் போனாள்.

பேச்சரவம் கேட்டது. திடுக்கிட்டுக் கண் விழித்தாள் கறுத்தம்மா.

"கறுத்தம்மா உறங்கிட்டாளா?"

அந்தக் குரல் காதில் விழுந்ததுமே, அக் குரலில் அவள் மட்டும் உணர்ந்து கொள்ளக்கூடிய ஒருவித நடுக்கத்தை உணர்ந்துகொண்டதுமே, குரல் யாருடையது என்பது கறுத்தம்மாவுக்குத் தெரிந்து போய்விட்டது. ஆம்; அது பரீக்குட்டியின் குரல்தான்!

சக்கி சொன்னாள்:

"அவ உறங்கிட்டா."

சக்கியின் குரலில் தெரிந்த ஒரு அசட்டுப் பாவத்தைக் கறுத்தம்மா கவனித்தாள். சட்டென்று அவளுக்கு உடம்பு பூராவும் வேர்த்துக் கொட்டிற்று. அவள் எழுந்து தென்னோலைத் தட்டியின் வழியாகப் பார்த்தாள். செம்பன்குஞ்சுவும் பரீக்குட்டியும் பளுவான சாமான் ஒன்றைத் தூக்கிச் சுமந்து உள்ளே கொண்டுவந்து வைக்கின்றனர். ஒன்று இரண்டு அல்ல; ஏழெட்டுக் கூடைகள் இருக்கலாம். அத்தனையும் கருவாடு.

விண்டு போவது போல் கறுத்தம்மாவின் இதயம் துடித்தது. முற்றத்து வெளியில் செம்பன்குஞ்சுவும், சக்கியும், பரீக்குட்டியும் நின்றுகொண்டு, ரகசியம் பேசிக்கொள்ளுகின்றனர்.

முந்தைய தினம் இரவில் கொண்டுவரப்பட்ட கூடை களைப் பற்றி மறுநாள் கறுத்தம்மா சக்கியிடம் விசாரித்தாள்.

கபட எண்ணத்துடன் சக்கி பதில் சொன்னாள்:

"அது அந்தச் சின்ன முதலாளி கொண்டுவந்து வச்சிருக் கான்."

கறுத்தம்மா கேட்டாள்:

"அது அவன்கிட்டே இருக்கமாட்டேங்குதோ?"

"அது இங்கே இருந்தா உனக்கு என்ன?"

சிறிது நேரத்திற்குப் பிறகு, சக்கி கண்டிப்பான குரலில் கேட்டாள்:

"இதை எல்லாம் விசாரிக்க, உனக்கு அவன் யாரு? இதோ பாரு. அடங்கி ஒடுங்கி இரு. சொல்லிப்புட்டேன்."

பல. விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்பி னாள் கறுத்தம்மா. அவன் அவளுக்கு யாரும் அல்லதான். ஆனால், அது திருட்டுக்காரியம் இல்லையா? இது பரீக்குட்டிக்கு அடிமையாகி விடுவதில்தானே போய் முடியும்? 'ஜாக்கிரதை யாக இரு' என்று சொன்னார் அப்பா. ஆனால், இப்படி அடிமைப்பட்டுப் போய்விட்டால்......ஆனால், கறுத்தம்மா ஒன்றும் சொல்லவில்லை.

மறுநாளும் கருவாடு வியாபாரம் நடந்தது. கடலிலும் மீன்பிடி நன்றாக இருந்தது. ஒருமுறை சென்று வந்த செம் பன்குஞ்சு மறுமுறையும் சென்றிருந்தான். சக்கி வியாபாரத் திற்காகக் கிழக்குப் பக்கங்களுக்குச் சென்றிருந்தாள். பஞ்சமி யும் அங்கே இல்லை. கறுத்தம்மா தன்னந்தனியாக இருந் தாள்.

பரீக்குட்டி அங்கு வந்தான்.

சரேரென்று வீட்டுக்குள் ஓடினாள் கறுத்தம்மா. சிறிது நேரம் முற்றத்திலேயே மௌனமாக நின்றுகொண்டிருந்தான் பரீக்குட்டி. அவன் மனமும் வியாகுலத்தில் ஆழ்ந்திருந்தது. வாயும் உதடும் உலர்ந்தன. இருந்தாலும் அவன் ஏதோ பேசினான்:

"தோணியும் வலையும் வாங்கப் பணம் கொடுத்தேன்."

பதில் இல்லை. பரீக்குட்டி தொடர்ந்து சொன்னான்:

"இனிமே எனக்கு மீன் கொடுப்பியா? விலை தாறேன்."

'நல்ல விலை தந்தால் மீன் தருவோம்' என்ற பதில்தான் அப்போது கிடைத்திருக்கவேண்டும். கறுத்தம்மா முன்பு சொன்ன பதில் அதுதானே? ஆனால், அன்று அந்தப் பதில் வரவில்லை. தோணி மறைவில் இந்தப் பேச்சைத் தொடர்ந்துதான் அடக்கமுடியாத சிரிப்பு மூண்டது. அது மீண்டும் ஏற்பட வேண்டுமென்று பரீக்குட்டி எதிர்பார்த்திருக்கலாம். ஆனால், அன்று அந்தச் சிரிப்பில்லை. ஒரே நிசப்தம்!

பரீக்குட்டி கேட்டான்:

"கறுத்தம்மா, ஏன் பேசாம இருக்கிறே? என் மேலே கோவமா?"

வீட்டினுள் அவள் அழுது கொண்டிருக்கிறாள் என்று பரீக்குட்டிக்குத் தோன்றியது.

"அழுகிறாயா கறுத்தம்மா?"

பரீக்குட்டி தொடர்ந்து சொன்னான்:

"நான் வந்தது உனக்குப் புடிக்கலேன்னா இப்படியே திரும்பிப் போயிடறேன்."

அதற்கும் பதில் இல்லை. குரல் கரகரக்கப் பரீக்குட்டி கேட்டான்:

"நான் போகட்டுமா கறுத்தம்மா?"

அந்தக் கேள்வி தன் இதயத்தில் எங்கோ போய்த் தாக்கியதுபோல் அவள் சொன்னாள்:

"நீ நாலாம் மதத்துக்காரன்."

பரீக்குட்டிக்கு விஷயம் பிடிபடவில்லை. அவன் கேட்டான்:

"அதனாலே?"

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது. வேற்று மதத்தைச் சேர்ந்தவன்தான். அதனால் என்ன? கறுத்தம்மாவும் தனக்குத்தானே இக் கேள்வியைக் கேட்டுக்கொண்டாள். சட்டென்று ஒரு பதில் உதயமாயிற்று.

"கிட்டங்கியிலே வேலை செய்யிற பொம்பிளைகளைப் போய்ப் பாரு."

மிகப்பெரிய பழி ஒன்றைத் தன்மீது கறுத்தம்மா சுமத்துவதாக நினைத்தான் பரீக்குட்டி. கிட்டங்கியில் வேலை செய்

யும் பெண்களுடன் அவன் தொடர்பு கொண்டிருப்பதாக அல்லவா அவள் எண்ணிக்கொண்டிருக்கிருள். இந்த எண்ணத்திஞல் அவள் மனம் நொந்து குழம்பிவிட்டிருக்கிருள் என்று அவன் நினைத்தான்.

தன் மன அந்தரங்கத்தை வெளியிட்டு அவளை எப்படி நம்ப வைப்பது என்றே அவனுக்குத் தெரியவில்லை. கிட்டங்கிக்கு வரும் எந்தப் பெண்ணையும் அவன் ஏறெடுத்தும் பார்த்தது கிடையாது. அந்தரங்க சுத்தியுடன் அவன் சொன்ஞன்:

"அல்லா சத்தியமாச் சொல்லுறேன். நான் அவங்களெ கண்ணெடுத்தும் பார்த்தது கிடையாது."

பரீக்குட்டி உத்தமன் என்பதை உணர்ந்து கொள்ளும் ஒரு சந்தர்ப்பம் வாய்ப்பது கறுத்தம்மாவுக்கு விருப்பமான சங்கதிதான். ஆஞல், கறுத்தம்மாவுக்காகப் பரீக்குட்டி செய்ய வேண்டிய ஒரு காரியம் இருக்கிறது. அது, அவன் சத்திய மிட்டுச் சொன்னதுபோல் பெண்களைக் கண் போடாமல் இருப்பது என்பதல்ல. ஆஞல், அதை அவனிடம் எப்படிச் சொல்லுவது என்பது கறுத்தம்மாவுக்குத் தெரியவில்லை. தான் எப்படி வாழவேண்டும் என்பதை வற்புறுத்துகின்ற ஆழமான அந்த வாழ்க்கைத் தத்துவம் முழுவதையும் அவள் கூற வேண்டியிருக்கிறது. அதைக் கூறி முடிக்க அவளிடம் தெம்பில்லை; தைரியமும் இல்லை.

சிறிதுநேரம் நிசப்தம். இருவரும் ஒருவருக்கொருவர் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. அந்த மௌனநிலை அப்படியே நீடித்து விடுமோ என்று கவலைகொண்டவள் போல் கறுத்தம்மா சொன்ஞள்:

"அம்மா இப்போ வந்துடுவாங்க."

"அதஞல் என்ன?"

பயந்துபோய் அவள் சொன்ஞள்:

"ஐயோ, அது தப்பு. பெரிய தப்பாப் போயிடும்."

"நீ உள்ளே இருக்கே. நான் வெளியிலே நின்னுக்கிட்டிருக்கேன். பின் என்னவாம்?"

அதையும் அவனிடம் விளக்கிப் புரியவைக்கவேண்டும். எப்படி முடியும்? சொல்ல ஆரம்பித்தால், அது எவ்வளவு இருக்கிறது!

பரீக்குட்டி கேட்டான்:

"உனக்கு எம்மேலே பிரியம்தானே?"

அவள் சட்டென்று பதில் சொன்னாள்:

"ஆமா."

பரீக்குட்டி ஆவேசத்துடன் கேட்டான்:

"அப்படீன்னு ஏன் நீ வெளியே வராம உள்ளேயே இருக்கே?"

"நான் வரமாட்டேன்."

"நான் சிரிப்பு மூட்ட மாட்டேன். ஒரு தரம் உன்னைக் கண்ணாலே பார்த்துப்புட்டுப் போறேன்."

"ஐயோ, வேண்டாம்" என்றாள் அவள், ஆற்றாமை தொனிக்கும் குரலில்.

சிறிது நேரம் சென்றது. பரீக்குட்டி சொன்னான்:

"அப்படியானா நான் போறேன்."

உள்ளேயிருந்து ஒரு குரல் வந்தது:

"எனக்கு எண்ணைக்கும் உம்மேலே பிரியம் இருக்கும்."

இதைவிடவும் என்ன வாக்குறுதி தர முடியும்!

பரீக்குட்டி அங்கிருந்து நகர்ந்தான். அப்போதுதான் கறுத்தம்மாவுக்குப் பிரக்ஞை வந்தது. சொல்ல நினைத்ததைச் சொல்லவும் இல்லை. சொல்லக் கூடாததைச் சொல்லியும் விட்டாள்!

அன்றிரவு லாந்தர் விளக்கின் ஒளியில் செம்பன்குஞ்சுவும் சக்கியும் பணத்தை எண்ணிக் கணக்குப் பார்த்தனர். தேவையான தொகை அப்போதும் சேர்ந்திருக்கவில்லை. இருந்தாலும் செம்பன்குஞ்சுவுக்கு ஒரு விதத்தில் திருப்தி ஏற்பட்டது.

அவன் சொன்னான்:

"அவுசேப்பு கிட்டேயோ, அவனை மாதிரி கழுத்தறுக்கிற பயல்கள் கிட்டேயோ மாட்டிக்கிடாமலே இவ்வளவு பணம் சேர்ந்து போச்சே.'

சக்கிக்கும் இதில் திருப்திதான்.

"மரக்கானை ஏமாத்தறதுக்கின்னே முந்தியிலே பணத்தக் கட்டிக்கிட்டுத் திரியறவங் கிட்டே வாங்கியிருந்தோம்னா..."

"வாங்கியிருந்தோம்னா, நமக்குத் தோணியும் போச்சு, வலையும் போச்சு, போட்ட பணமும் போயிடும்."

அவுசேப்பும், கோவிந்தனும் சமீபத்தில் கூட, 'பணம் வேண்டுமா?' என்று தாங்களாகவே வலியவந்து கேட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். செம்பன்குஞ்சு வேண்டாம் என்று சொல்லிவந்தான். அவர்களிடம் மாட்டிக்கொண்டு விட்டால், கடன் பளு குறையவே குறையாது. அதோடு சீக்கிரமே தோணியும் வலையும் அவர்களுக்குச் சொந்தமாகி விடும். இது கடற்கரையில் மிகவும் சகஜம்.

ஆனால், தேவையான பணம் இன்னும் சேர்ந்துவிட வில்லையே? அதற்கு என்ன செய்வது? செம்பன்குஞ்சு சொன்னான்:

"மீதிப் பணத்தையும் சின்ன முதலாளி தரட்டுமே, என்ன?"

தன் தாய் தந்தையரிடம் வாழ்நாளில் முதல் முறையாகக் கறுத்தம்மாவுக்கு ஒரு வெறுப்புணர்ச்சி பிறந்தது. தாயைக் கூட வெறுக்காமலிருக்க அவளால் முடியவில்லை. செம்பன் குஞ்சுவின் யோசனைகளை மறுக்காமல் கேட்டுக் கொண்டு தானே இருக்கிறாள் அவளும்!

அதன் பின்னலும், ஒவ்வொரு நாளும் பரீக்குட்டியின் கிட்டங்கியில் மீன் காயப் போட்டார்கள்; காயவைத்த மீன்கள் கூடைகளில் கட்டப்பட்டன. அத்தனை அவசரக் கோலத்தில் காரியங்கள் ஏன் நடைபெறவேண்டும் என்பது கறுத்தம்மா வுக்குத் தெரியும். குறைந்தகால அவகாசத்திலேயே அவள் பலவிஷயங்களைத் தெரிந்துகொண்டு விட்டாள்.

குடும்பம் முன்னேறி வந்தது. அந்த உவகையோடு சக்கி கறுத்தம்மாவிடம் சொன்னாள்:

"கறுத்தம்மா, நமக்குத் தோணியும் வலையும் சொந்த மாகிற வேளை வந்தாச்சு."

கறுத்தம்மா வாயைத் திறக்கவில்லை. தாயின் மகிழ்ச்சியில் அவளால் பங்கெடுத்துக் கொள்ளவும் முடியவில்லை. அவள் பெரிதும் மாறித்தான் போய்விட்டாள்.

சக்கி தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்:

"கடல் அம்மையின் மனசு குளுந்து போச்சு."

கறுத்தம்மாவின் மனசிலிருந்த வெறுப்புணர்ச்சி வெளியே பீறிட்டது.

"அடுத்தவர்களை ஏமாத்தினா மட்டும் கடல் அம்மைக்குக் கோவம் வராதோ?"

சக்கி கறுத்தம்மாவின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள். அந்தப் பார்வையில் அவள் குன்றிக் குறுகிப் போய்விடவில்லை. மேலும் கேட்கவேண்டிய கேள்விகள் நிறைய மனத்தில் இருந்தன.

"எதுக்கு அம்மா அந்த அப்பாவி மனிதனை ஏமாத்தித் தோணியும் வலையும் வாங்கணும்?"

"நீ என்ன சொல்லறே? ஏமாத்திப்புட்டோம்னா?"

நிமிர்ந்த மனசுடன் கறுத்தம்மா சொன்னாள்:

"ஆமா"

"யாரு!"

கறுத்தம்மா மௌனம் சாதித்தாள். அந்தக் கேள்விக்குப் பதில் அதுதான். சக்கி சொன்னாள்:

"அவுசேப்புக்கிட்டே கடன் வாங்கின தோணியும் வலையும் அவனுக்கே சொந்தமாப் போயிடும்."

"அது இல்லை காரணம். அவுசேப்புக்கிட்டே கடன் வாங்கின முதலும் வட்டியும் திரும்பக் கொடுக்கணும்."

"இப்போ மட்டும் கொடுக்க வேண்டாமோ?"

கறுத்தம்மா சொன்னாள்:

"இப்போ—இப்போ—மட்டும் திரும்பிக் கொடுக்கவா வாங்கியிருக்கீங்க?"

சக்கியின் முகத்தைக் குறிபார்த்து வீசிய கேள்வி அது.

மனத்தில் வஞ்சனையுடன் பரீக்குட்டியிடம் கடன் வாங்கவில்லை என்று சக்கி வாதாடினாள். செம்பன்குஞ்சு ஏதோ கேட்டுப் பார்த்தான். வற்புறுத்தவும் இல்லை. பொய் புரட்டு ஒன்றும் கிடையாது. பணத்தைத் திருப்பிக் கொடுப்பது என்பதுதான் தீர்மானம். அது உறுதிதான்.

"பாதி ராத்திரி குத்திருட்டிலேதான் கூடையைத் தூக்கிக்கிட்டு வரணுமோ? திரும்பிக் கொடுக்கத்தான் இப்படிச் செய்யிறீங்களோ? அப்படியானா, பட்டப் பகல்லே வாங்கிக்கிட்டு வந்தா என்னவாம்?"

தொடர்ந்து அவள் சொன்னாள்:

"இதனாலேதான் கடல் வறண்டு போகுது."

சற்று மிதமிஞ்சி வார்த்தைகளைக் கொட்டிவிட்டாள் அவள். தாயும் தகப்பனும் ஒன்று சேர்ந்து கடல் கருகிப் போகிற காரியத்தை மேற்கொள்ளுகிறார்கள். அவள் வார்த்தைகளின் பொருள் இதுதானே? சக்கிக்குக் கோபம் பொங்கியது.

"என்ன உளர்றே நீ? உன் அப்பன் திருடிப்புட்டான்னு சொல்றியா?"

கறுத்தம்மா பதில் சொல்லவில்லை. ஒரு தாய்க்குரிய அதிகார மிடுக்குடன் சக்கி கேட்டாள்:

"அந்தத் துலுக்கப் பய உனக்கு யாருடி? 'சுர்ர்'னு பொத்துக்கிட்டு வருதே உனக்கு?"

'எனக்கு அவன் யாரும் அல்ல' என்ற பதில் அவள் நுனிநா வரையிலும் வந்தது. ஆனால், வார்த்தைகள் வெளியே குதிக்கவில்லை. 'எனக்கு யாரும் அல்ல' என்று எதற்காகச் சொல்லவேண்டும் என்னும் மனத்தெம்பு அவளுக்கு ஏற்பட்டது. பரீக்குட்டி அவளுக்கு யாரும் அல்லாதவன்தானா? 'எல்லாமே அவன்தான்' என்றே தோன்றியது அவளுக்கு.

அதே கேள்வியை மறுமுறையும் எழுப்பிவிட்டுச் சக்கி சொன்னாள்:

"கடற்கரையை அடியோடே அழிச்சுப்புடத்தான் போறா இவ."

குரலில் ஆண்மை தொனிக்க அதை மறுத்தாள் கறுத்தம்மா:

"நான் ஒழுக்கத்தை விட்டுப்புட்டுத் திரியமாட்டேன்."

"அப்படியானா அவன்மேலே உனக்கு என்ன இவ்வளவு அக்கறை?"

"அவன் இப்படியே போயிட்டிருந்தா கிட்டங்கியை இழுத்து மூடவேண்டியதுதான்."

சக்கி கறுத்தம்மாவிடம் சீறிப் பாய்ந்தாள். தொடர்ந்து ஏசவும் செய்தாள். பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தாள் கறுத்தம்மா. அவளுக்கு வருத்தம் இல்லை. அவளைப் பொறுத்தவரையில் சக்கி வாய்க்கு வந்ததைப் பிதற்றிக் கொண்டிருக்கிறாள்; அவ்வளவுதான். ஆனால், ஏச்சு அளவுக்கு

மீறிப் போய்விடுமென்று பட்டதும், தாயின் முகத்தை அவள் ஏறிட்டுப் பார்த்துச் சொன்னாள்:

"அப்பாவை நம்பியா அந்த மனுஷன் பணம் தந்திருக் கான்?"

"பின்னே யாரை நம்பித் தந்திருக்கானாம்?"

தான் பரீக்குட்டியிடம் பணம் கேட்டது சட்டென்று அவளுக்கு நினைவுவந்தது. அதை மனசில் வைத்துக்கொண்டு தான், அவள் அந்தக் கேள்வியை எழுப்பினாள்.

'நான் கேட்டதால் தந்தான்; தருவதற்கு அது ஒன்று தான் காரணம்' என்று கறுத்தம்மாவால் வாய்விட்டுச் சொல்லமுடியாது. ஆனால், பரீக்குட்டி அவளிடம் தீராக் காதல் கொண்டிருக்கிறான். கறுத்தம்மா சொன்னாள்:

"என் வாயாலே வேண்டாத பேச்செல்லாம் பேச வெச் சுடாதே."

"என்ன பேசிப்புடுவியாம் நீ?"

சிறிது நேரம் மௌனத்தில் ஆழ்ந்துவிட்டுத் தொடர்ந்து சக்கி சொன்னாள்:

"அவன் கிட்டேயிருந்து காசு புடுங்குறதுக்கு, நான் என்ன கொஞ்சிக் குழைஞ்சேனா? அம்புட்டுத் தூரம் உனக்கு என்ன வந்திடுத்து?"

கறுத்தம்மா அழுதுவிட்டாள். அழுதுகொண்டே அவள் சொன்னாள்:

"எதுக்கு அம்மா அவன்கிட்டேயிருந்து கடன் வாங்கி னீங்க? எனக்கு எல்லா உபதேசமும் பண்ணிப்புட்டு, இப்போ நாம அவன்கிட்டே கடன் பட்டுக் கிடந்தா......"

தொடர்ந்து பேச முடியாமல் கறுத்தம்மாவுக்குத் தொண்டை அடைத்தது. சக்கிக்கும் ஒரு விஷயம் பட்டென்று புலனாயிற்று. அவள் சொல்லுவதிலும் உண்மை இருக்கிறது. சிறிது நேரம் சக்கியும் மன அமைதியின்றித் தவித்தாள். அதலபாதாளத்துக்கு இட்டுச் செல்லுகின்ற தவறுக்கு ஆளாகிவிட்டோமோ என்ற கிலியும் அவளைப் பிடித்துக் கொண்டது. சக்கி கேட்டாள்:

"கறுத்தம்மா, ஏதாவது விவரீதம் நடந்து போச்சா?"

கறுத்தம்மா அழுதுகொண்டிருந்தாள்.

"அவன் இங்கே வந்தானு?"

கறுத்தம்மா முழுப் பொய் ஒன்று சொன்னுள்:

"இல்லே"

"பின் என்ன நடந்தது? சொல்லேன்."

"அவன் இங்கே வந்து நுளேஞ்சான்னு என்னம்மா செய்வேன்?"

தான் தவறு எதுவும் இழைத்து விடவில்லை என்று நிரூபித்துவிடத் துடித்தாள் சக்கி. இத்தனை தூரம் மிகவும் ஆழமாக அவள் ஒன்றும் சிந்தித்துப் பார்க்கவில்லை. பரீக்குட்டியிடம் ஓர் உதவி செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்; அவன் ஒப்புக் கொண்டான். திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் வாங்கியிருந்தார்கள். கறுத்தம்மாவின் கேள்வியில் தவறு இல்லைதான். எனினும், ஒன்று உண்மை. பரீக்குட்டி மரியாதை கெட்டவன் அல்ல. இருந்தாலும் இளவட்டப் பையன் அல்லவா?

சக்கி மன அமைதி இழந்தாள். பணம் வாங்கியிருக்க வேண்டாம் என்றுகூட அவளுக்குத் தோன்ற ஆரம்பித்து விட்டது. ஆனுல், செம்பன்குஞ்சுவுக்கு இந்தச் சமாச்சாரம் எதுவுமே தெரியாது.

அன்றும் கறுத்தம்மாவின் கல்யாணப் பிரச்னையைக் கிளப்பி, செம்பன்குஞ்சுவிடம் சண்டை போட்டாள் சக்கி. ஒரு முறை வேலாயுதனை அணுகிக் கேட்டுப் பார்க்கவேண்டும் என்றுள் அவள். முதலில் செய்து முடிக்கவேண்டிய காரியம் அதுதான். பின்னர்த்தான் தோணி, வலை விஷயங்கள் எல்லாம். செம்பன்குஞ்சு இதை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. வாய்விட்டு இதைச் சொன்னுன். ஆணித்தரமான முடிவு ஒன்றை அவன் வரையறுத்துக் கொண்டுவிட்டான்.

சகல விஷயங்களையும் வாய்விட்டுச் சொல்லிவிட முடியுமா? மன அவஸ்தையில் உழன்றுள் சக்கி. துக்கமும் கோபமும் பொத்துக்கொண்டு வந்தன. அவள் விக்கி விக்கிச் சொன்னுள்:

"இண்ணக்கி வரையிலும் தோணியும் வலையும் வாங்கணும் என்கிற எண்ணத்திலே நான் கூடை தூக்கிக்கிட்டு

வியாபாரத்துக்குப் போய் வந்தேன். இனிமே அதிலிருந்து வர லாபத்தை எதிர்பார்க்க வேண்டியதில்லே.''

'அதுவும் போச்சா' என்ற பாவத்தோடு செம்பன்குஞ்சு சக்கியைப் பார்த்தான். அவன் கேட்டான்:

''கிறுக்குப் பிடிச்சாப்லே என்ன சொல்றே நீ?''

சக்கி பிடிவாதமாகச் சொன்னுள்:

''என்ன சொல்லுவேன்? இப்போ சொன்னேன் பாரு, அதைத்தான் சொல்லுவேன்.''

''என்னது?''

''என் பொண்ணு மானத்தை நான் காப்பாத்தணும்.''

''அப்படீன்னு!''

''மாரும் உடம்புமா இருக்கிற வயசு அவளுக்கு. தன்னந் தனியா அவளை வீட்டிலே விட்டுப்புட்டு எங்கும் போக மாட்டேன்.''

சக்கியின் முடிவான எண்ணம் அதுதான். தொடர்ந்து அவள் சொன்னுள்:

''இல்லேண்ணு அவளைக் கட்டிக்கொடுத்து அனுப்பி வெச்சுப்புடு.''

விஷயத்தை வாங்கிக்கொண்ட பாவனையில் செம்பன் குஞ்சு பேசாமலே இருந்தான். சக்கி வியாபாரத்துக்குப் போகவில்லையானுல், அது பெரிய நஷ்டம். அவன் கேட்டான்:

''ஏதாவது இடைஞ்சல் வந்துடுத்தா?''

''இப்போ ஒண்ணும் வந்துடல்லே. வந்துட்டா...?''

கவனமாக இருக்கவேண்டிய விஷயம்தானே? ஆனுல்' செம்பன்குஞ்சுவுக்கு ஒரு நம்பிக்கை. கறுத்தம்மா நல்லவள் தான். அவள் தன்னிச்சைப்படி யெல்லாம் நடக்கிறவள் அல்ல. தன்னந்தனியே விட்டுச் சென்ருலுங்கூட அவள் தவறிழைத்து விடக் கூடியவள் அல்லவென்று நம்பினுன்.

சக்கி கேட்டாள்:

''பெண் கெட்டுப்போக எம்புட்டு நேரம் வேணுமாம்?''

செம்பன்குஞ்சு பதில் சொல்லவில்லை.

மறுநாள் வியாபாரத்துக்காகச் சக்கி கிழக்கு ஊர்களுக்குச் செல்லவில்லை. செம்பன்குஞ்சு வற்புறுத்தவும் இல்லை.

அன்றிரவும் மீன் கூடைகளை வீட்டுக்குக் கொண்டுவரப் போகிறார்களாம்! ஆனால், அன்று சக்கி அதை எதிர்த்தாள்.

"நமக்கு அது வேண்டாம்."

செம்பன்குஞ்சு கேட்டான்:

"ம்...ஏன்?"

"அந்த மனிசனை எதுக்கு ஏமாத்தணும்?"

"ஏமாத்தப் போறேன்னு யார் சொன்னது?"

"ஏமாத்தாம? நீ காசு கொடுக்கப் போறியா?"

"கொடுப்பேன்" என்றுதான் செம்பன்குஞ்சு சொன்னான்.

பணம் திரும்பக் கிடைக்காது என்கிற விஷயத்தைப் பரீக்குட்டியின் காதில் போட்டுவிட வேண்டுமென்று கறுத்தம்மாவுக்குத் தோன்றியது. ரகசியமாக அவனைச் சந்தித்துப் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால், அதற்குத் தருணம் வாய்க்கவில்லை.

அன்றிரவும் மீன் கூடைகளைச் சுமந்துகொண்டு பரீக்குட்டி வந்து சேர்ந்தான். செம்பன்குஞ்சு தயக்கம் எதுவுமின்றி அதை வாங்கியும் வைத்துக்கொண்டான். அதற்கான விலை எப்போது தரப்படும் என்பதுபற்றி, அவன் ஒன்றும் பிரஸ்தாபிக்கவில்லை. தகப்பனின் எதிர்நின்று பேசும் துணிச்சல்கூட அப்போது கறுத்தம்மாவுக்கு வந்தது. அத்தனை தவறுகளும் அம்மாவிடம்தான் என்று தோன்றிற்று.

என்றுமே தலைநிமிர விடாத சுமடாய் அதை அவள் எண்ணினாள்.

# 3

செம்பன் குஞ்சுவின் கையில் போதுமான பணம் சேர்ந்து விட்டது. தோணியும் வலையும் தேடிப்பிடித்து வாங்கிவரச் சென்றிருந்தான் அவன்.

இந்தச் செய்தி கடற்கரை எங்கும் பரவியது. கடலி லிருந்து அவனுக்குத் தங்கக்கட்டி கிடைத்தது என்றுகூடச் சிலர் பேசிக் கொண்டனர். ஒருநாள் கரையோரமாக அவன் சென்றுகொண்டிருந்தபோது கருங்கல் ஒன்று அகப்பட்ட தாம். அதை எடுத்துப் பார்த்தான். அது வெறும் கல் அல்ல; தங்கக்கட்டி! இன்னும் சிலர் அவன் உழைத்துச் சேமித்த பணம்தான் என்றனர். ஆனால் அதை யாரும் நம்பவில்லை. எல்லோருமே அவனைப்போல் உழைக்கிறவர்கள்தாம். அவர் களுக்கொன்றும் செலவுபோகச் சேமிப்பு எதுவும் இல்லை. அவனால் மட்டும் எவ்வாறு சேமிக்க முடிந்தது?

அச்சகுஞ்சுவும், செம்பன்குஞ்சுவும் ஒரே வயதினர், செம்பன்குஞ்சு வீட்டுக்கு வடக்குப் பக்கம்தான் அவன் குடி யிருந்தான். சிறுவயதிலிருந்தே அவர்கள் இருவரும் நண்பர் கள். எல்லோரும் அச்சகுஞ்சுவைக் கேள்விகள் கேட்டு நச்சரிக்க ஆரம்பித்தனர். செம்பன்குஞ்சு எவ்வளவு பணம் எடுத்து சென்றிருக்கிறான்?......வேலையாட்களாக யார் யாரைச் சேர்த்துக்கொள்ளப்போகிறான்?...பணம் எங்கிருந்து கிடைத்தது? இவைபோல் மனதில் பொங்கும் ஆவலைக் காட்டும் எத்தனையோ கேள்விகள் எழுந்தன!

அச்சகுஞ்சுவுக்கு உண்மையில் ஒன்றுமே தெரியாது. இருந்தாலும் எல்லாம் தெரிந்தவன்போல் பாவனை செய்தான். செம்பன்குஞ்சு ஒரு பிரமுகன் என்ற அந்தஸ்தை அடைந்து கொண்டிருந்தான். அதை ஒட்டி அவனுடைய நண்பனுக்கும்

ஒரு முக்கியத்துவம் ஏற்படத்தானே செய்யும்? கேட்கப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் அச்சகுஞ்சு தனுக்காகப் பதில் சொல்லிக்கொண்டே வந்தான். பாவம்! அச்சகுஞ்சு ஒரு வேஷம் கட்டிக்கொண்டு விட்டான்!

கொச்சுவேலு ஒரு கேள்வி கேட்டான்:

"அண்ணனுக்கும் ஒரு பங்கு உண்டுன்னு கேள்விப் பட்டோமே, வாஸ்தவம்தானா?"

இந்தக் கேள்வி அச்சகுஞ்சுவைத் திக்குமுக்காட வைத்து விட்டது. எனினும், பிடிகொடுக்காமல் சமாளித்துக்கொண்டு பதில் சொன்னான்:

"உண்டுன்னோ இல்லேன்னோ சொல்ல முடியாது."

அச்சகுஞ்சுவின் ஐம்பத்தைக் கிண்டல் செய்வதுதான் அந்தக் கேள்வியின் நோக்கம். அச்சகுஞ்சு சொன்ன பதிலைக் கேட்டு எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

அச்சகுஞ்சுவின் முகம் வெளிறிப் போய்விட்டது.

"நீங்க எல்லாம் எதுக்கு இளிக்கிறீங்க?" என்று ஒருவன் வெகு தந்திரமாகக் கேட்டுவிட்டு, "அச்சகுஞ்சண்ணன் மனசு வெச்சுப்புட்டாருன்னா சொந்தமா ஒரு தோணியும் வலையும் வாங்கிப்புடமாட்டாரா என்ன? பங்கு எதுக்காம் பங்கு?" என்றான்.

அச்சகுஞ்சுவின் அசட்டுத்தனத்திலிருந்து ஒரு பதில் பிறந்தது.

"எல்லாருமே ஆளுக்கு ஒரு தோணியும் வலையும் வாங்கிப் புட்டா, அப்புறம் வேலைக்கு யாரு போவாங்களாம்?"

சிரிப்பை அடக்கிக்கொண்டு கொச்சுவேலு சொன்னான்:

"அது வாஸ்தவம்தான். அதை நெனைச்சுத்தானே நீங்க தோணியும் வலையும் வாங்காம இருக்கீங்க."

தன்னை, வேண்டுமென்றே நண்பர்கள் கிண்டல் செய்கிறார்கள் என்பது அப்போதுதான் அச்சகுஞ்சுவுக்குப் புரிந்தது. அதன் பிறகு, செம்பன்குஞ்சு தோணி வாங்கும் விஷயத்தைப் பற்றி அச்சகுஞ்சுவிடம் யாராவது விசாரித்தால், அவன் சள்ளென்று விழுவான். அவன் ஏசுவதையும் பேசுவதையும் கேட்பதற்கென்றே ஒரு கூட்டம் அவனை வம்புக்கு இழுத்துக் கொண்டிருந்தது.

ஒரு நாள் கடலில் மீன்பிடி மிகவும் குறைவாக இருந்தது. அன்று அச்சகுஞ்சுவுக்கு மூன்று ரூபாய்கள்தாம் கிடைத்தன. டீக்கடை அகமது குட்டிக்கு அவன் கொஞ்சம் பணம் தர வேண்டியிருந்தது. அகமதுகுட்டி அச்சகுஞ்சுவை வழிமறித்து அவனிடம் இருந்த பணத்தைப் பிடுங்கிக் கொண்டுவிட்டான். வெறுங்கையோடு வீடு வந்து சேர்ந்தான் அச்சகுஞ்சு. வீட்டில் அன்று இரவு பொங்குவதற்கு வழியில்லை. நல்லபெண் அச்ச குஞ்சுவை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தாள். அன்று அர யனுக்கும் அரயத்திக்கும் பெரும் சண்டை ஏற்பட்டது. கையில் கிடைத்த காசைக் குடித்துத் தொலைத்துவிட்டு வந்திருப்பதாக அவனைப் பழித்தாள் நல்ல பெண். அச்சகுஞ்சு உண்மையை வெளியிட்ட பின்பும் அவள் நம்பவில்லை. தான் குடித்திருக்கவில்லை என்பதை நிரூபிக்க, அவன் தனது வாயைத் திறந்து அவள் மூக்கினருகே கொண்டு போய்க் காட்டினான். அதன் பின்னும் அவளுக்கு நம்பிக்கை வரவில்லை. நல்லபெண் சொன்னாள்:

"கையிலே கெடைக்கிற காசை யெல்லாம் கரியாக்கிப் புட்டா, ஒரு நா ஒண்ணும் கிடைக்கல்லேன்னா என்ன செய்ய முடியும்?"

"நான் இண்ணைக்குக் குடிச்சேனா புள்ளே! இந்தாப்பாரு, இல்லாததும் பொல்லாததும் சொன்னா, என்ன செய்வேன் தெரியுமா?"

"இண்ணைக்கு என்னமோ குடிச்சிருக்க மாட்டே, காசு கிடைச்சுக்கிட்டிருந்த சமயத்திலெல்லாம் அதுதானே தொழிலா இருந்தது உனக்கு?"

இரவு உணவுக்கு வழியில்லாத நிலையில் அவள் சொன்ன வார்த்தைகள் இவை. ஆனால், அச்சகுஞ்சு அதிகார மிடுக் குடன் திட்ட ஆரம்பித்து விட்டான்:

"கொழுத்துப் போய்ப் பேசப்படாது, ஆமா."

"கொழுப்பேறிப் போயா பேசறேன்? உன்னோடே ஒண்ணா விளையாடித் திரிஞ்சிக்கிட்டு இருந்தவன் இண்ணைக்கு வலையும் தோணியும் வாங்கிப்புட்டான். இங்கே வடிக்க அரிசி இல்லே. இதா கொழுப்பு?"

அச்சகுஞ்சு வாயால் பதில் சொல்லிக்கொண்டிருக்க வில்லை. நல்ல பெண்ணின் முதுகில் இரண்டு அறை வைத்தான். அவனுக்கு ஏற்பட்ட தர்மசங்கட நிலைமையைப் பாருங்களேன்; செம்பன்குஞ்சு தோணியும் வலையும் வாங்கப் போகிறான். அதற்குக் கடற்கரையில் வசிக்கிற அத்தனை பேரும் அவனைக் கேலி செய்கிறார்கள். வீட்டிலும் அவனுக்கு நிம்மதி யில்லை என்றாகி விட்டது.

"அவன் தோணியும் வலையும் வாங்கினா, அதுக்கு நான் என்னா செய்யிறது? நான் என்னா பரிகாரம் செய்யணுமாம் அதுக்கு?"

செம்பன்குஞ்சு வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டிக் காசு சேர்த்தான். அது மாதிரி பணம் சேர்க்க அச்சகுஞ்சுவாலோ கடற்கரையில் வாழும் வேறு எவராலுமோ முடியாது.

தங்கள் வீட்டின் வடக்குப் பக்கத்திலிருந்து எழுந்த அந்தச் சண்டையைச் சக்கியும் கறுத்தம்மாவும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். சக்கி உரக்கக் கேட்டாள்:

"அச்சகுஞ்சு அண்ணே, நாங்க பட்டினி கிடக்கோம்னு சொல்றியே. நாங்க என்னா ஒருவேளை சோத்துக்காவது உங்கிட்டே வந்து கையேந்தினோமோ?"

அச்சகுஞ்சுவின் கவனம் சக்கியின் பக்கம் திரும்பியது.

"வேண்டாம்...வேண்டாம்...நீ ஒண்ணும் வாயைக் காட்ட வேண்டாம். எனக்குத் தெரியும் செம்பன்குஞ்சுவை, சின்ன வயசிலிருந்து தெரியும் பாத்துக்க."

சக்கியும் விடவில்லை.

"என்னத்தைத் தெரியுமாம் உனக்கு? இண்ணைக்கி உங்க வீட்டிலே அடுப்பு புகையிலையே, அது ஏன்னு உனக்குத் தெரியுமா? அது உன் கெட்ட புத்திக்கும் உன் வீட்டுக்காரி கெட்ட புத்திக்கும் கெடச்ச பலன். ஆமா."

தன்னையும் சேர்த்துப் பேசியபோது நல்லபெண்ணுக்கு அசாத்தியக் கோபம் கிளம்பி விட்டது. அவள் கேட்டாள்:

"இந்தாப் பாரு, என்னெப் பத்திச் சொன்னாத் தெரியும் சேதி. நான் என்ன செய்துப்புட்டேன் உனக்கு?"

அச்சகுஞ்சு சக்கியைப் பார்த்துக் கேட்டான்:

"என்னமோ என் கெட்ட புத்தின்னு சொன்னியே. என்னதாம் அது?"

"பொறுமை?"

"யாருகிட்டே? உன் மரக்கான் கிட்டேயா!"

பொங்கிவந்த ஆத்திரத்துடன் அச்சகுஞ்சு காறி உமிழ்ந்தான்.

"அந்த நாத்தம் புடிச்ச பயகிட்ட எந்த ஆம்புளைக்குத் தோணும் பொறுமை?"

சக்கிக்கும் கனகோபம் வந்துவிட்டது. "இன்னு பாரு, கன்னுபின்னுன்னு பேசினே, என்ன செய்வேன் தெரியுமா?"

அச்சகுஞ்சு கேட்டான்:

"என்ன செய்துப்புடுவியாம் நீ?"

"என்ன செய்வேன்னு கேக்கறே?"

"நாலு துட்டுச் சேந்துட்டாப்லெ மண்டைக்கனம் தலைக் கேறிப் போச்சு!"

பேச்சு விரிந்துகொண்டே செல்வதைக் கண்டு கறுத்தம்மா பதறினாள். தாயாரின் வாயைப் பொத்தினாள். அச்சகுஞ்சுவும் பேச்சை நிறுத்தும் வழியாய் இல்லை. சக்கிக்கும் கோபத்தில் மூச்சுத் திணறிக்கொண்டு வந்தது. கறுத்தம்மா சக்கியை வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு சென்றாள்.

கோபவெறி சற்று தணிந்தபோது, அச்சக்குஞ்சு கொஞ்சம் தீர்க்கமாக யோசித்துப் பார்த்தான். அன்று அவன் வீட்டில் உணவு இல்லை. அதைவிடவும் அந்தச் சண்டை விஷயம்தான் அவன் மன அமைதியைக் கலைத்து வருத்திக்கொண்டிருந்தது. பெண்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்வது சகஜம்தான். ஆனால், அன்று வரையிலும் ஒரு முறை கூட அவன் சக்கியிடமோ, செம்பன்குஞ்சுவிடமோ சண்டை போட்டது கிடையாது. அதுவும் இன்று நிகழ்ந்துவிட்டது. அச்சகுஞ்சுவால் தாங்க முடியவில்லை.

மறுநாள் அதிகாலையில் அவன் கடலேறுவதற்கு முன்னால், தோணியின் சொந்தக்காரனிடத்திலிருந்து இரண்டு ரூபாய் வாங்கி வீட்டில் கொடுத்துவிட்டுச் சென்றான். அன்றைய பங்குக்குத் தனக்குக் கிடைத்த வருவாயையும் நல்லபெண்ணிடம் ஒப்படைத்துவிட்டான். அதன் பிறகு ஒவ்வொரு

நாளும் அப்படியே நடந்து கொள்ளப் போவதாயும் நல்ல பெண்ணிடம் சொன்னான்:

"இதோப் பாரு, இண்ணையிலிருந்து, கிடைக்கிற காசு எல்லாத்தையும் உங்கிட்டேயே தந்து வைக்கப் போறேன். பத்திரமா வைச்சுக்க. நம்மாலும் நாலு துட்டுச் சேக்க முடியு மான்னு பாத்துப்புடுவோம்."

இந்த ஏற்பாட்டை நல்லபெண் ரொம்பவும் வரவேற்று பேசினாள்:

"அப்படியானா, தோணியும் வலையும் வாங்க முடியாமல் போயிட்டாலுங்கூட ராப்பட்டினி கிடக்கும்படி ஆயுடாது."

"தோணியும் வலையும் வாங்க முடியாதுன்னு யார் சொன் னது? அப்படி ஒரேயடியாகச் சொல்லிப்புடாதே. முடிஞ்சா லும் முடியும்."

அதுவும் உண்மைதான். எதற்கும் ஒரு கை பார்த்துவிடு வதுதான் நல்லபெண்ணின் எண்ணமும். அவள் சொன்னாள்:

"நேத்துவரையிலும் ஒண்ணுக் கூடிக்கிட்டுப் பழகி இருந்த வங்களெப் பாத்தியா? இனிமே அதுக பேசக்கூடச் செய்யாது போலிருக்குது."

இந்தப் பேச்சு அச்சகுஞ்சுவுக்குப் பிடிக்கவில்லை.

"எதுக்கு நீ மத்தவங்களப் பத்திப் பேசிக்கிட்டிருக்கே? நாம் நம்ம காரியத்தைப் பாத்துக்கிட்டிருப்போம்."

"இல்லே, ஒரு பேச்சுக்குச் சொன்னேன். இருந்தாலும் சக்கிக்கு மண்டக்கனம் சாஸ்தியாப் போச்சு. அவ இப்போ அப்படித்தான் ஆயுப்புட்டா."

அச்சக்குஞ்சு மீண்டும் சொன்னான்:

"நீ வாயை மூடிக்கிட்டு இருந்தாப் போதும்."

"நான் வாயைத் திறக்கப் போறதில்லே."

"அதுதான் நல்லது. நாமும் முயற்சிசெய்து பார்ப் போமே."

இருந்தாலும் நல்ல பெண் மனத்தில் ஒரு குறை:

"இந்தப் புத்தி அண்ணைக்கே வந்திருந்தா..."

அச்சகுஞ்சுவும் முனகிக்கொண்டான். 'அவள் சொன்னது சரிதான்.' தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொள்வதுபோல் அவன் சொன்னான்:

"மரக்கான் எதுக்கு புள்ளே சொத்து சேத்து வைக்கப் போறுன். அந்தக் காலத்து ஆளுங்க, 'தோணியும் வலேயும் துறையிலே இருக்கிறவனுக்கு' அப்படீம்பாங்க. அந்தக் கால மெல்லாம் போச்சு. இருந்தாலும் மனசு வச்சுப்புட்டான்னு எந்த மரக்கானுக்குத்தான் தோணியும் வலேயும் வாங்க முடியாதுன்னு கேக்கறேன்."

"இருந்தாலும் கூடித் திரிஞ்சுக்கிட்டிருந்த கூட்டாளிக்கு இப்போ தோணியும் வலேயும் கிடைச்சாச்சே."

அச்சகுஞ்சு சொன்னுன்:

"செம்பன்குஞ்சு மகாகெட்டிக்காரன். அதே நெனப்பா நெனச்சிக்கிட்டிருந்தான் பார்த்துக்க அவன்."

மீண்டும் ஒருமுறை தனது திட்டத்தை அச்சகுஞ்சு உறுதிப்படுத்திக் கொண்டான்.

"ம். பாப்போம்!"

அவன் மனதில் அது உறுதியான தீர்மானமாக உருப்பெற்றிருந்தது.

மாலேயில் அச்சகுஞ்சு வலேயைப் பழுது பார்ப்பதற்காகக் கடற்கரை சென்றுன். வலே கிழிந்திருந்ததால், அன்று கிடைத்த மீனில் ஒருபகுதி வெளியே நழுவிச் சென்றுவிட்டது. அவன் கடற்கரையை அடைந்தபோது பிற, வேலேயாட்கள் எல்லோரும் அங்கு வந்திருந்தனர். அவர்கள் வேலேயும் தொடங்கியிருந்தார்கள். அங்கு செம்பன்குஞ்சுவின் விஷயம் தான் அடிபட்டுக்கொண்டிருந்தது.

அச்சகுஞ்சு கேட்டான்:

"ஏண்டா, உங்களுக்கெல்லாம் வேறெ வேலே வெட்டி கிடையாதா? அடுத்தவன் காரியத்தையே சதா பேசிக்கிட்டு இருக்கீங்களே. பேசிக்கிட்டே இருங்க. அவன் செய்த பாவம் இந்த வழியாத் தொலேயட்டும்!"

அய்யன்குஞ்சு கேட்டான்:

"உனக்கென்ன ஆத்திரம் பொங்கிக்கிட்டு வருது?"

அச்சகுஞ்சு சாந்தமாகப் பதில் சொன்னுன்:

"இப்போ நான் என்னத்தக் குத்தமாப் பேசிப் போட்டேன்?"

ராமமுப்பன் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டான்:

''செம்பன்குஞ்சுவைப் பத்திப் பேச எங்களுக்கு அதிகாரம் கிடையாதோ?''

''என்ன அதிகாரம் இருக்கிறதாம்?''

ராமமூப்பன் ஆச்சரியப்பட்டு அகல விழித்தான். அவன் சொன்னான்:

''அச்சகுஞ்சு. நீ ரொம்ப நல்லாப் பேசறே போ. சின்னப் பயல்கள் இப்படிச் சொன்னாலாவது அருத்தமுண்டு. நீ வயசு போன மரக்கானில்லையா?''

அச்சகுஞ்சுவுக்கு விஷயம் பிடிபடவில்லை. அடுத்தவர்களைக் குற்றம் குறை கூறிக்கொண்டிருக்கக் கூடாது என்றுதானே அவன் சொனான். வயசு மூத்த மனிதன் இப்படிச் சொல்லக் கூடாதா என்ன? நல்ல விஷயம்தானே? அச்சகுஞ்சு கேட்டான்:

''என்ன நீ அப்படிச் சொல்றே?''

ராமமூப்பன் கையிலிருந்த நூல்கண்டைக் கீழே வைத்து விட்டு, அச்சகுஞ்சுவின் முகத்தைப் பார்த்து ஒரு கேள்வியை வீசினான்:

''அச்சகுஞ்சே, கடல் கரையிலே வாழறவங்க ஒழுங்கா வாழனும்னு இருக்குது. தெரியுமா உனக்கு?''

அச்சகுஞ்சு அதை ஆமோதித்தான். இதைத் தொடர்ந்து ராமமூப்பன் கேட்டான்:

''அப்படியானா செம்பன்குஞ்சுகிட்டே அந்த ஒழுங்கு இருக்குதா?''

அச்சகுஞ்சுவுக்குக் கேள்வியின் பொருள் புரியவில்லை. ராமன் அதை விளக்கினான்:

''இந்தக் கடற்கரையிலே எந்தத் தாத்தா காலத்திலே யாவது வயசுவந்த பொண்ணு கல்யாணமாகம நின்னுக் கிட்டு இருந்திருக்கா?''

அதைத் தொடர்ந்து அய்யன்குஞ்சு சொன்னான்:

''அண்ணைக்கெல்லாம் துறையிலெ துறைக்கு நாதன்னு ஒருத்தர் இருந்தாரு.''

ராமமூப்பன் கேட்டான்:

''வயசுவந்த பொண்ணு வீட்டுக்குள்ளே நிக்கிறபோது, எவனாவது தோணியும் வலையும் வாங்கப் போவானா?''

அந்த காலத்தில் துறை அரயன் இதற்கெல்லாம் இடம் கொடுக்க மாட்டார். கடற்கரையில் யாராலும் மீறமுடியாத நியதிகள் பல உண்டு. துறைக்கு நாதனுக விளங்கும் அரயன் அந்த நியதிகளை எப்படியும் அமுலுக்கு கொண்டுவந்து விடுவார். அடிப்படைக் காரணங்களோடு வகுக்கப்பட்ட நியதிகள் அவை. அரயனுடைய வாழ்வு பொலிவுற்று விளங்க வேண்டும் என்பதற்காக அந்நியதிகள் வரையறுக்கப் பட்டிருந்தன.

அய்யன்குஞ்சு கேட்டான்:

"நம்மகட்டுக்கு எத்தனை வயசிலே கட்டிக்கொடுக்கணும்?"

ராமமூப்பன்அந்தக் காலத்து ஆசாமி. அவன் சொன்னுன்:

"பத்து வயசிலே."

வெள்ளைமணலி வேலாயுதன் கேட்டான்:

"பத்து வயசு போன பிறகும் பொண்ணு நின்னுக்கிட்டிருந்தா?"

ஏதோ, விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அவன் கேட்டான் என்று தோன்றவில்லை. அந்தக் கேள்வியில், கட்டுப்பாடுகளை மீறத் துடிக்கும் மனுேபாவம் பிரதிபலித்தது.

அந்தக் கேள்விக்கு ராமமூப்பனே பதில் சொன்னுன்:

"என்ன கேட்டே? நின்னுக்கிட்டிருந்தாலா? அதென்ன கேள்வி? நின்னுகிட்டிருக்க முடியாது. ஆமா."

வேலாயுதனின் கருத்து மேலும் தெளிவாகத் தெரிய வந்தது:

"துறை அரயன் என்ன செய்துப்புடுவாராம்?"

"ஊரை விட்டு விலக்கி வெச்சுப்புடுவாரு. பெறகு கடற்கரையிலே காலந்தள்ள முடியாது."

புண்ணியன் ஓர் இளைஞன். அவன் சொன்னுன்:

"அதெல்லாம் அந்தக் காலத்திலே."

அய்யன்குஞ்சு ஆவேசத்துடன் சொன்னுன்:

"சும்மா இருடா. இன்னைக்கும் அப்படித்தான். பாக்கணுமா உனக்கு? காட்டித் தாரேன். இந்தப் பெரிய மனுசன் செம்பன்குஞ்சு ஆலாய்ப் பறந்து அலஞ்சு திரியிறதைக் காட்டித் தாரேன் உனக்கு."

ராமமூப்பன் அதை ஆமோதித்தான். அதோடு மற்ருெரு பிரச்னையையும் கிளப்பினுன்:

''எல்லாரும் தோணியும் வலையும் வாங்கிக்கிடலாம்னு இருக்குதா?''

''இல்லே'' என்று அய்யன்குஞ்சு அழுத்தமாகச் சொன் ஞன். ''கடல்தாயின் குழந்தைகள் கணக்கு வழக்கில்லாத சொத்துக்கு உரிமையுள்ளவர்கள். கை நிறையச் சொத்துச் சேருவது அவர்கள் மத்தியில் சகஜம்தான். ஆக, யார் மனசு வைத்தாலும் தோணியோ வலையோ வாங்கிக்கொள்ள முடி யும். அந்தக் கடற்கரையில் வாழுகிற எல்லோருக்கும் தோணி யும் வலையும் சொந்தமாகிவிட்டதென்ருல்...பின் கடலுக்குப் போகிற வேலையாள்தான் யார்?'' அவன் கேட்டான்:

''தோணியும் வலையும் வாங்கணுமின்ஞு, இந்தக் கடல் கரையிலே யாராலேதான் அது முடியாது?''

அதுவும் உண்மையான பேச்சுத்தான். அய்யன்குஞ்சு மிக முக்கியமான கேள்வியொன்றை எழுப்பினுன்:

''பின் ஏன் எல்லாரும் தோணியும் வலையும் வாங்கிக் கிடல்லே?''

''அதற்குக் காரணம் உண்டு. அரயன் ஐந்து ஜாதிப் பிரிவு கள் கொண்டவன். அரயன், வலைஞன், முக்குவன், மரக்கான். இது தவிர ஒரு பஞ்சம ஜாதியுமுண்டு. மேலும் கிழக்கே யிருந்து வருகிற வேலையாட்கள்...அது தனிவகை. இவர்களில் வலைஞர் மட்டும்தான் தோணியும் வலையும் வாங்கலாம். முன்னெல்லாம் தோணியும் வலையும் வாங்குவதற்கான உரிமை வலைஞர்களுக்கு மட்டும்தான் இருந்தது. அவர்களுக்கு மட்டுமே துறை அரையன் அவ்வுரிமையை வழங்குவார்.

வேலாயுதன் கேட்டான்:

''செம்பன்குஞ்சு இதிலே எந்தச் சாதி?''

புண்ணியன் ரசித்துச் சிரித்துக்கொண்டான்.

''முக்குவன்.''

சிரித்துகொண்டே புண்ணியன் கேட்டான்:

''இல்லேன்னுலும் செம்பன்குஞ்சு என்ன சாதீன்னு வேலா யுதன் இப்போ விசாரிக்கத்தான் செய்வான்.''

''அதென்ன அப்படிச் சொல்லுறே?''

"அந்தப் பொண்ணை இவனுக்குக் கட்டிக்கொடுக்க யோசனை பண்ணிக்கிட்டிருக்காங்களே."

அச்சகுஞ்சு அதை ஆமோதித்தான்.

"தங்கமான பொண்ணு அது" என்றான் அவன்.

இவன் இப்படிச் சொன்னது அய்யன் குஞ்சுவுக்குப் பிடிக்கவில்லை. அவன் சொன்னான்:

"இல்லாவிட்டாலும் செம்பன்குஞ்சுவைச் சேர்ந்த எல்லாமே பிரமாதம்தான் உனக்கு."

இப்படிச் சொல்லிவிட்டு, வேலாயுதனைப் பார்த்து அய்யன் குஞ்சு பேசினான்:

"அந்தக் கஞ்சன் கிட்டேயிருந்து தம்படிக் காசு பெயராது. அதைத் தெரிஞ்சுக்க மொதல்லே. பொண்ணும் மகா ராங்கிக்காரி."

அச்சகுஞ்சுவுக்குக் கொஞ்சம் கோபம் வந்தது.

"நீ என்ன பேசறே? ஒரு பொண்ணைக் கட்டிக் கொடுக்கிற காரியத்தை நடக்காமெ அடிச்சுப்புடறது சரியா? ஓர் அரயன் செய்யக்கூடிய காரியமா இது?"

அய்யன்குஞ்சு சொன்னான்:

"நான் உண்மையைத்தானே சொன்னேன்?"

அதுவரையிலும் மௌனமாக இருந்த ஆண்டி ஒரு கேள்வி கேட்டான். பேச்சை வேறு ஒரு திசைக்குத் திருப்பியது அந்தக் கேள்வி. வாங்குவதற்கு உரிமையற்றவன் தோணியும் வலையும் வாங்கியதுண்டா? அப்படி எப்போதாவது நிகழ்ந்திருக்கிறதா? நிகழ்ந்துதான் இருக்கிறது. ஆனால், அப்படித் தோணியும் வலையும் வாங்கியவன் அதை அதிக நாள் வைத்துக்கொண்டிருந்ததில்லை. மேலும், ஒவ்வொரு துறையிலும் யார் யார் வலைஞர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று அய்யன் குஞ்சு விசாரித்தான். ராமழுப்பன் சொல்லலானான்.

"சேர்த்தலையில் டள்ளிக்குன்றம் குடும்பத்தைச் சேர்ந்தவங்க; ஆலப்புழையில் பாருத்தி வலைக்காரங்க; இங்கே ராமன் குஞ்சு குடும்பம்; குன்னேல் குடும்பத்துக்காரங்க."

துறை அரயனிடமிருந்து தோணியும் வலையும் வாங்குவதற்குரிய சம்மதம் பெற வேண்டுமென்றால், என்னென்ன

பொருள்கள் காணிக்கையாகச் சமர்ப்பிக்க வேண்டுமென்று புண்ணியன் விசாரித்தான். ஏழு இதழ்ப் புகையிலையும், பதினைந்து ரூபாயும் கொடுக்க வேண்டுமென்று பதில் வந்தது. வலைஞர்கள்கூட அதைக் கொடுக்க வேண்டியதுதான்.

இதைத் தொடர்ந்து துறை அரயனின் அதிகாரத்தைப் பற்றியும், உரிமைகள் குறித்தும் அவர்கள் பேசிக்கொண்டனர். அவருக்குப் பெரிய பெரிய அதிகாரங்கள் உண்டு. அதை எதிர்க்க வேண்டுமென்ற மனோபாவம் வேலாயுதனுக்கு. அவன் கேட்டான்:

"அவனவன் கைப்பணத்தைப் போட்டுத் தோணியும் வலையும் வாங்க துறை அரயனுக்கு ஏதுக்குக் காணிக்கை!"

புண்ணியனும் இதை ஆதரித்துப் பேசினான்:

"இந்தா பாரு, அவன் செம்பன் குஞ்சண்ணனுக்கு மருமகன் ஆயாச்சு."

அய்யன்குஞ்சு இதை ஆதரித்துவிட்டு, மேலும் பேசிக்கொண்டே போனான்.

"துறை அரயனை ஏன் மதிக்கணும்னு கேக்கிறியே. ஒண்ணு செய்யுங்க. தோணியும் வலையும் வாங்கி வெச்சுக்கிட்டு, மாமனும் மருமகனுமா துறை அரையனை எதிர்த்துப் பாருங்க. அப்போ, தெரிஞ்சிட்டுப் போகுது!"

சவால் விட்டான் அவன். தோணியும் வலையும் சொந்தமான பின்பு துறை அரயனின் சம்மதத்தைப் பெறாமல் கடலேற முடியுமா என்பதைத்தான் சோதித்துப் பார்த்துவிடலாமே! அது கைகூடாத காரியம் என்று அறுதியிட்டுச் சொன்னான் அய்யன்குஞ்சு. சவாலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் வேலாயுதனின் ஆசை. ஆனால், அவனுக்கு என்ன உரிமை இருக்கிறது? ஆனாலும், அவன் மறுத்துப் பேசினான்:

"உங்களுக்கெல்லாம் பொறாமை."

"மரக்கான்களுக்கா பொறாமைன்னு சொல்றே?"

"வேறென்ன? அதேதான்."

பேச்சு, சண்டையில் வந்து முடியும் போலிருந்தது. அச்சகுஞ்சு குறுக்கிட்டுப் பேசினான்: "தம்பி, ரொம்பவும் வாயைக் காட்டிப் புடாதே" என்று வேலாயுதனுக்கு உபதேசம் சொன்னான்.

சிறிது நேரம் யாருமே வாயைத் திறக்கவில்லை.

கடற்கரையில் யாரும் எதிர்பார்க்காத விதங்களில் சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டிருந்த அதே வேளையில், சக்கி தனக்குள் தானே இன்பக் கனவுகளில் லயித்துக் கிடந்தாள். இன்னும் சில நாட்களில் தோணியைச் சொந்தமாகக்கொண்ட ஒருவனின் மனைவியாக விளங்கப் போகிறாள். நாளெல்லாம் கண்டுகொண்டிருந்த கனவு நனவாகப் போகிறது. அதற்காகக் கணவனும் மனைவியும் அரும்பாடுபட்டு வருகிறார்கள். அக்கம் பக்கத்துப் பெண்கள் எல்லோரையும்விட அவளுக்கு 'மவுசு' ஏறப்போகிறது. தோணியும் வலையும் சொந்தமாகி விட்டதென்றால், இன்று கிடைக்கக் கூடியதை விடவும் எவ்வளவோ நல்ல கணவன் கறுத்தம்மாவுக்குக் கிடைக்கக்கூடும்.

தாய் மகளிடம் சொன்னாள்:

"கறுத்தம்மா, அப்பா மனசிலே என்னென்னமோ கோட்டைகள் கட்டிக்கிட்டிருக்காரு. இந்த வருஷம் மீன்பிடி முடிஞ்சதும், வீடும் மனையும் வாங்கிப்புடலாம்னு நெனைக்கிறாரு. பெறகுதான் உன்னைக் கட்டிக்கொடுத்து அனுப்பணும்."

கறுத்தம்மாவுக்கு அபிப்பிராயம் எதுவும் சொல்லுவதற்கில்லை. சக்கி தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்:

"கடல் அம்மை கருணையிலெ ஏதோ கடன் கிடன் இல்லாம இருக்குது. மீன்பிடி சுமாரா இருந்துட்டாக்கூடப் போதும். தட்டிக் கேக்க யாரும் கிடையாது."

சக்கி இப்படிச் சொல்லி முடிப்பதற்குள் கறுத்தம்மா குறுக்கிட்டாள்:

"என்னம்மா நீ, கடன் ஒண்ணும் இல்லைண்ணு சொல்லுறியே?"

சக்கிக்குப் புரிந்துவிட்டது. பரீக்குட்டியிடம் கடன்பட்டிருப்பதை மனதில் வைத்துக் கொண்டுதான் இப்படிக் கேட்டாள் அவள். சக்கி சற்று தயங்கினாள். கணப்பொழுதில் ஜோடித்துக்கொண்ட ஒரு பதிலைச் சொன்னாள் அவள்:

"இல்லெ, அதை ஒரு கடனா நெனைக்கிறதுக்கு இல்லேண்ணு சொல்லுதேன்?"

கறுத்தம்மா சற்றுக் காரமாகவே வினவினாள்:

"ஏன், அப்படி நெனைக்க வேண்டாமா?"

"இல்லே, அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கல்லேன்னு, தோணியையும் வலையையும் யாரும் பிடுங்கிக்கிட்டுப் போகப் போறதில்லேயே?"

"அவன் ஓர் அப்பாவி மனுசன். அதனுலே..."

சக்கி கோபமாகக் கேட்டாள்:

"என்ன இது? 'அவன்'னு சொல்லும்போதே உனக்கு நாக்கு இனிக்கிறதோ?"

கறுத்தம்மா பதில் பேசவில்லை. சக்கி கேட்ட கேள்வியை எண்ணி அவள் குன்றிப்போய் விடவும் இல்லை. சக்கி தொடர்ந்து கேட்டாள்:

"மானம் மருவாதை யோட இருந்தயானு நல்ல பிள்ளை எவனுவது வந்து கட்டிக்கிட்டுப் போவான். இல்லேன்னு உன் தலையெழுத்துப் போல இருக்கும். ஆமா!"

கறுத்தம்மா சற்றும் தயக்கமின்றிக் கேட்டாள்:

"நானு அம்மா மருவாதை இல்லாமே இருக்கேன்?"

கேள்வி தனது காதில் விழாத பாவனையில் சக்கி கேட்டாள்:

"அந்தச் சின்ன முதலாளி உனக்கு யாருடி?"

"அவன் எனக்கு யாரும் இல்லே" என்று கறுத்தம்மா சொல்லவில்லை. அவளுடைய விழிகள் நிறைந்தன.

கறுத்தம்மா என்ன தவறு செய்து விட்டாள்? எதுவும் செய்துவிடவில்லை என்று சக்கிக்குத் தெரியும். அன்று வரை ஒரு குற்றமும் அவள் செய்ததில்லை. அடக்க ஒடுக்கமாகத்தான் அவள் இருந்து வருகிறுள். பரீக்குட்டியிடம் கடன்பட்டிருப்பது நல்ல காரியம் அல்லதான். பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டுமென்று அவள் சொல்வது தவறு? ஆனுல், அவளுக்குப் பரீக்குட்டியிடம் விசேஷ வாஞ்சையுண்டு. அவ்வளவு பெரிய தொகையை அவன் இழக்க வேண்டியிருக்கிறதே என்பதுதான் அவளுடைய கவலை. சீக்கிரமே கல்யாணம் நடந்து, அவள் ஊரை விட்டே போய் விட்டிருக்க வேண்டும். ஆனுல், அதன் அவசியத்தை செம்பன்குஞ்சுவால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

''அவரு உனக்காகத்தானே இந்தப் பாடு பட்டுக்கிட்டிருக்காரு'' என்றாள் சக்கி.

''ஆமா, இதோப் பாரு கறுத்தம்மா, எங்க ஆசை எல்லாத்தையும் அழிச்சு தூள் தூளா அடிச்சுப்புடாதே!''

கறுத்தம்மா பேசவில்லை. சக்கி கேட்டாள்:

''கறுத்தம்மா, நான் ஒண்ணு கேக்கறேன். நெசத்தைச் சொல்லு. அவன்கிட்டே உனக்கு ஆசைதானே?''

'இல்லை' என்றுதான் அவள் சொல்லியிருக்க வேண்டும். அவளோ வாயைத் திறக்கவில்லை. சிலைபோல் நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய மௌனம் சக்கியை நிலைகுலையச் செய்துவிட்டது. அவள் மனசு அமைதி இழந்தது.

''ஐயோ, என் கடல் அம்மா, அந்த மாபாவி என் பெண்ணைக் கெடுத்துப்புடுவான் போலிருக்கே'' என்று அலறினாள் சக்கி.

''என்னம்மா இது? பயித்திமா உனக்கு?''

சக்கி கறுத்தம்மாவைப் பரிதாபமாகப் பார்த்தபடி, மனமுருகக் கேட்டுக் கொண்டாள்:

''கறுத்தம்மா, எங்க முகத்திலே கரியைப் பூசிப்புடாதே!''

அப்போதும் 'எனக்கு அவனிடம் ஆசை இல்லை' என்று அவள் சொல்லவில்லை.

அன்று மாலை அச்சகுஞ்சு செம்பன்குஞ்சுவின் வீட்டுக்கு சென்றான். கடற்கரையில் நடைபெற்ற பேச்சுக்களை அவன் விவரமாகத் தெரிவித்தான். கடற்கரை வாசிகள் முட்டுக்கட்டைகள் போடுவதற்குக் கச்சை கட்டிக்கொண்டு விட்டனர். அய்யன்குஞ்சுவும், ராமமூப்பனும் அந்த இயக்கத்துக்குத் தலைமை தாங்கி நடத்தப் போகின்றனர். இப்போது உடனடியாகச் செய்யவேண்டிய காரியம் ஒன்றிருக்கிறது. இடையூறுகள் குறுக்கிடாமல் தப்பித்துக்கொள்ள வேண்டும். அதற்கான முன் நடவடிக்கைளை எடுத்தாக வேண்டும்.

அச்சகுஞ்சு சொன்னான்:

''நானும் செம்பன்குஞ்சுவும் சின்ன வயசிலிருந்தே ஒண்ணு விளையாடித் திரிஞ்சவங்க. அவங்க பேச்சைக் கேட்டுக்கிட்டு என்னாலே தலையாட்டிக்கிட்டு இருக்க முடியுமா?''

சக்கி அரைகுறையாக இருந்த அமைதியையும் இழந்து விட்டாள். துறையே ஒன்றுகூடி எதிராகத் திரண்டு வருகிறது என்ருல், அதன் பலாபலன்கள் எப்படி இருக்கும் என்பதை அவள் நன்கு அறிவாள். அவ்வளவுக்கு அவர்கள் என்ன தீங்கு இழைத்துவிட்டார்கள்? பெண்ணைக் கட்டிக் கொடுக்கவில்லை என்பதுதான் இத்தனைக்கும் காரணமா?

# 4

துறைவாசிகளின் பிரதிநிதிகளாக, பழவர்களான ராம மூப்பன், அய்யன்குஞ்சு இருவரும் தங்களோடு மேலும் இருவரையும் அழைத்துக்கொண்டு துறை அரயனைக் காணச் சென்றனர். காணிக்கையும் கொண்டு சென்றிருந்தனர். 'துறையே அழிந்து போகப் போகிறது. துறை அரயனிடம் முறையிட வேண்டும். செம்பன்குஞ்சுவுக்கு வயசுப் பெண்ணொருத்தி இருக்கிறாள். அவளைக் கட்டிக் கொடுக்காமல் வீட்டோடு வைத்துக் கொண்டிருக்கிறான் அவன். கடற்கரையெங்கும் சுற்றிக்கொண்டிருக்கிறாள் அவள்.' இதைத்தான் முக்கியமாகத் தெரிவிக்க எண்ணினார்கள். துறை அரயனும் முறையீட்டைக் கவனமாகச் செவிசாய்த்துக் கேட்டார். வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதாகவும் வாக்குறுதி தந்தார்.

தங்கள் முறையீடு துறை அரயனுடைய மனத்தில் உறைக்கவில்லை என்று அய்யன்குஞ்சுவுக்குத் தோன்றிற்று. விஷயத்தின் முக்கியத்துவத்தைத் துறை அரயன் உணர்ந்து கொண்டதாகவும் அவனுக்குப் படவில்லை. எனவே, துறை அரயன் வாக்குறுதி தந்த பின்னரும், நின்ற இடத்திலேயே அவர்கள் அசையாது நின்று கொண்டிருந்தனர். அவர் கேட்டார்:

"எதுக்கு எல்லாரும் நின்னுக்கிட்டிருக்கீங்க?"

அய்யன் மற்றுமொரு புகார் சொன்னான்:

அந்தக் குட்டி கடற்கரையை அழிச்சுப்புடணுமுன்னு நிக்கிது. அதே சமயத்தில் செம்பன்குஞ்சு தோணியும் வலையும் வாங்கப் போயிருக்கான்."

இந்த விஷயம் துறை அரயனுக்குத் தெரியாது.

"செம்பன்குஞ்சு கையிலே ஏது பணம்?" என்று கேட்டார் அவர்.

பழவர்களுக்கு அது தெரியாது.

மிகவும் அடக்கமாக அய்யன்குஞ்சு ஒரு சந்தேகத்தைக் கிளப்பினான்.

"அவன் மரக்கான். அது தெரிஞ்ச விஷயம். இவ்விடத்திலிருந்து தோணியும் வலையும் வாங்க உத்தரவு கிடைச்சுதான்னு தெரியலே!"

"சீ! நான் உத்தரவு கொடுக்கல்லெ. அவன் எங்கிட்டே கேக்கவும் இல்லெ."

"துறையிலெ இருக்கிற நாங்க இனிமெ என்ன செய்யணும்னு தெரிஞ்சாத் தேவலெ."

துறை அரயன் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டுப் பேசலானார்:

"காலம் மாறிப் போச்சுன்னு நெனச்சுக்கிட்டு இருக்கான் போலிருக்கு அவன்!"

அதை, ஒரு முனகலில் அய்யன்குஞ்சு ஆமோதித்தான். துறை அரயனிடமிருந்து ஓர் உத்தரவு பிறந்தது:

"அவன் தோணி வாங்கிட்டு வரட்டும். யாராவது வேலைக்குப் போறதானா என்னெப் பார்த்து முன்னாலே சொல்லணும்."

"அப்படியே செய்யிறோம்" என்றான் அய்யன்குஞ்சு.

"ஆனா சில சின்னப் பயல்கள் இருக்காங்க. அவங்க என்ன செய்யப் போறாங்களோ..."

வேலாயுதனை மனத்தில் எண்ணிக்கொண்டுதான் அய்யன் குஞ்சு இதைச் சொன்னான். ஆனால் துறைஅரயன் இதை ஒரு பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளவில்லை. தனது அதிகாரத்தைப் பகிரங்கமாக எதிர்க்கக்கூடிய காலம் இன்னும் வந்துவிடவில்லை என்பது அவருக்குத் தெரியும்.

"அதெ நான் பார்த்துக்கிடறேன். தோணியும் வலையும் வாங்க நான் உத்தரவு கொடுக்கலேன்னு, நீங்க துறையிலே எல்லார்கிட்டேயும் சொல்லிப்புடுங்க."

வெற்றிவாகை சூடிவிட்ட உற்சாகத்தோடு ராமன் மூப்பனும் அய்யன்குஞ்சுவும் திரும்பிச் சென்றனர். அவர்கள் துறை அரயனின் உத்தரவை வீடுவீடாக ஏறி இறங்கிச் சொன்னார்கள். இதற்கு வேலாயுதன் மட்டும் பணியமாட்டான் என்பது தான் அய்யன்குஞ்சுவின் தீர்மானம். இளங்கன்று பயமறியாது.

இந்த விஷயங்கள் எல்லாம் சக்கிக்கு தெரியவந்தது.

துறை அரயனுடைய கோபத்துக்கு ஆளாகிச் சிதறுண்டு அழிந்துபோன குடும்பங்கள் பல. இரவோடு இரவாய் ஊரை விட்டே ஓடிச்சென்ற குடும்பங்களும் பலவுண்டு. அவ்வாறு சென்றாலும், மற்றொரு கடற்கரையை அடைந்து அரயர்கள் போல் வாழ்ந்துவிடவும் முடியாது. துறை அரயன் பிறப்பித்துள்ள உத்தரவின் கால்கள் திக்கெட்டும் விரியும். இப்படித் தர்மசங்கட நிலையில் மாட்டிக் கொள்பவர்கள், மதம் மாறிச் சென்றுவிடுவதுதான் வழக்கம். ஆனால், சமீபகாலமாக, பழைய கட்டுப்பாடுகள் தளர்ந்து வருகின்றன. காலம் மாறுகிறது அல்லவா? ஆனால் இன்றும் துறை அரயன் கட்டளையிட்டுவிட்டான் என்றால், வேலைக்கு ஆட்கள் வருவது சந்தேகம்தான். வராத நிலைமை ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும். ஊர் விலகி வாழும். ஊரார் விலக்கியும் வைத்துவிடுவார்கள். தோணியும் வலையும் வாங்கச் செல்லுவதற்கு முன்பே, அரயனுக்கு உரிய காணிக்கை செலுத்தி, சம்மதம் பெற்றிருக்க வேண்டும்.

சொல்லப்போனால், அவர்கள் யாருக்கு என்ன தீங்கு இழைத்தனர்? துறை அரயன் விலக்கிவிட்டான் என்பதே ஊர் முழுக்கப் பேச்சு. வயசுவந்த பெண்ணைக் கட்டிக்கொடுக்காமல் வீட்டோடு வைத்துக் கொண்டிருந்தது தவறுதான் என்று பெண்களும் பேசிக்கொண்டனர்.

'இந்த ஜென்மமே எடுத்திருக்க வேண்டாம்,' என்ற எண்ணங்கூடக் கறுத்தம்மாவுக்கு ஏற்பட்டது. அவளால் அவள் தாய் தந்தையருக்கு எத்தனை துன்பம்! தனக்கு வயசு வர வேண்டும் என்றோ, மதமதவென்று உடம்பு வரவேண்டும் என்றோ, எந்தக் கடவுளை அவள் வேண்டினாள்! கடற்கரையின் பவித்திரத் தன்மையை என்றும் அவள் குலைத்ததில்லை. அவள் கல்யாணம் ஆகாமல் நிற்கிறாள் என்றால், அதனால் யாருக்கு

என்ன நஷ்டம்? ஆனால், இவைகளெல்லாம் காதில் போட்டுக் கொள்ள அங்கு ஒருவரும் இல்லை.

தாயும் மகளும் செம்பன்குஞ்சுவின் வருகையை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

நாலைந்து பெண்கள் காளிக்குஞ்சுவின் வீட்டில் கூடி வம்பளந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சில் தனது குடும்ப விஷயம்தான் அடிபடுகிறது என்பது சக்கிக்குத் தெரியும். மறைவில் நின்று கவனித்தாள் அவள். பரீக்குட்டி கறுத்தம்மாவை வைத்துக் கொண்டிருக்கிறான் என்று ஒருத்தி சொன்னாள். தோணியின் மறைவில் நின்றுகொண்டு கொஞ்சிக் குலாவியதை அவளே பார்த்திருக்கிறாளாம். கறுத்தம்மாவைக் கட்டிக்கொடுக்காமல் இருப்பதற்குக்கூட அதுதான் காரணமாம்.

ஒரு தாயால் வேறு எதை வேண்டுமானாலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியும். இந்தப் பேச்சைப் பொறுப்பாளா அவள்? மறைவில் நின்றிருந்த சக்கி புலிபோல் சீறிக்கொண்டு பாய்ந்தாள். தொடர்ந்து எல்லா வாயாடிகளும் போராட்டத்தில் இறங்கிவிட்டனர்.

சின்ன வயசில் சக்கியும் ஒழுக்கம் கெட்டுத் திரிந்தாளாம்! பதிலுக்குக் காளிக்குஞ்சுவின் குழந்தையைச் சுட்டிக்காட்டி. "இந்தக் குழந்தைக்கு அப்பன் யாருன்னு உனக்குத் தெரியுமா?" என்று காளிக்குஞ்சுவிடம் கேட்டாள் சக்கி. "கருவாட்டுக்கு முன்பணம் கொடுத்துக்கிட்டுத்திரிஞ்சானே அந்தத் துலுக்கன்தானே?" என்றும் அவள் கேட்டாள். அங்குக்கூடியிருந்த எல்லாப் பெண்களைப் பற்றியும், அவர்களின் தாய்மார்களைப் பற்றியும், பழைய கதைகள் எத்தனையோ உண்டு. சக்கி தன்னந்தனியாகவும் மற்றப் பெண்கள் எல்லோரும் ஒரு கட்சியாகவும் நின்று போர் நிகழ்த்தினர். வெகு அழகாகப் போராடினாள் சக்கி.

வேலியருகே நின்றவாறு கறுத்தம்மா இதையெல்லாம் கேட்டுக்கொண்டுதானிருந்தாள். அவர்கள் வாயில் அடிபட்ட பழங்கதைகளைக் கேட்டு, அவள் வியப்பில் ஆழ்ந்து போனாள். அவளுடைய தாயாரும் பருவவயசில் மனசைப் பறிகொடுத்தவள்தானா? அங்குக் கூடியிருந்த எல்லாப் பெண்களும் கடற்

கரைக்கு மாசு கற்பித்தவர்கள்தானு? அவர்களுடைய மேம் பட்ட வாழ்க்கைத் தத்துவம் பொருளற்ற வரட்டுப் பேச்சுத் தானு? இந்தப் பெண்களைப்பற்றி எத்தனையோ கதைகள் புறப் பட்ட பின்பும், மேற்குக் கடல் அப்படியே விரிந்து பரந்துதான் கிடக்கிறது. தோணிகள் இன்னும் கடலுக்குச் சென்று வருகின் றன. வலைவீசி மீன் பிடிக்கத்தான் செய்கின்றனர். அரயர்கள் நன்ருக வாழ்ந்து வருகின்றனர். அப்படியானுல், அந்தப் பழைய கதைக்குப் பொருள்தான் என்ன?

சண்டை பெரிதாகிக் கறுத்தம்மாவின் விஷயத்துக்குத் தான் மீண்டும் அவர்கள் வந்து சேர்ந்தனர். கறுத்தம்மா தனது இரு செவிகளையும் பொத்திக்கொண்டு விட்டாள். அத்தனையும் பச்சைப் பொய்! வெறும் கற்பனைக் கதைகள் அத்தனையும்! பரீக்குட்டியின் வைப்பாட்டியாம் அவள்! படைக் குதிரைபோல் நிற்கும் அவளை அவனுல்தான் ஆளமுடியுமாம். இந்த ஏற்பாட் டின் மூலம் வருகிற சௌகரியங்களை எண்ணித்தான், கட்டிக் கொடுக்காமல் வைத்துக் கொண்டிருக்கிருர்களாம்!

இதேபோல் அந்தப் பெண்களைக் குறித்து சக்கியும், அவளைப் பற்றிப் பிறபெண்களும் கூறிய கதைகள் வெறும் கற்பனையாகத் தான் இருக்கவேண்டும் என்று கறுத்தம்மா எண்ணிக்கொண் டாள்.

சக்கியின் ஏச்சுக்குப் பதில்கூற முடியாமல் தவித்த காளிக் குஞ்சு சொன்ஞள்:

"உனக்கு இனிமேத்தான் வரப்போகுது. பாத்துக்கிட் டேயிரு! துறைஅரயன் கருவிக்கிட்டுத்தான் இருக்காரு."

சக்கியும் விட்டுவிடவில்லை. அவளும் தொடர்ந்து வாயைக் காட்டிக்கொண்டிருந்தாள். அவள் உள்ளத்தில் எதிர்ப்புணர்ச்சி ஓங்கியது. சகட்டு மேனிக்கு எல்லோரையும் எதிர்க்க வேண்டு மென்ற துடிப்பு!

"என்ன திட்டம் போட்டிருக்காராம் துறை அரயன்? என்னத்தெச் செய்துப்புடுவாராம் அவரு?"

அப்போது கறுத்தபெண் சொன்னுள்:

"ஒழுக்கம் கெட்டவளை என்ன செய்யணுமெங்கிறது துறைஅரயனுக்குத் தெரியும்."

சக்கி தலைநிமிர்ந்து நின்று கேட்டாள்:

"என்ன செய்துப்புடுவாராம்? நாங்க மதம் மாறிப் புடுவோம். சாமியார் மதத்திலே சேந்துப்புட்டா அப்புறம் துறைஅரயன் என்னத்தெச் செய்துடுவாராம்?"

அப்போது மற்றொருத்தி சொன்னாள்:

"அப்பொ அப்படியாவது சொல்லு. தீர்மானம் பண்ணிக் கிட்டுத்தான் துலுக்கப்பயகூட பெண்ணெ சுத்தறத்துக்கு விட்டே போலிருக்கு?"

"ரெண்டு பேருக்கும் அதுதான் தேவலை."—இது இன்னொருத்தியின் பேச்சு.

சக்கி கேட்டாள்:

"அதிலே என்னடீ தப்பு?"

கறுத்தம்மாவுக்கு அன்று வரையிலும் அனுபவித்தறியாத துக்கம் பொங்கிற்று. என்ன மன வேதனை! மன வேதனை என்றும், அதைச் சொல்லிவிட முடியாது. பிராண வேதனை யுடன் கறுத்தம்மா தாயைக் கூவி அழைத்தாள். வாய் வலித் ததோ என்னவோ, சக்கியும் வீடு திரும்பினாள்.

வீட்டுக்கு வந்த பின்பும், சக்கி ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டுதானிருந்தாள்.

கறுத்தம்மா என்னென்னவோ கேட்க எண்ணினாள். தைரியமில்லை. 'மதம் மாறிச் சென்று விடுவோம்' என்ற வார்த்தைகள், அவளுடைய செவியில் முழங்கிக்கொண்டிருந் தது. நரம்புகள் சூடேறின. தாங்க முடியாத வெப்பம்!

மனத்தைப் பறி கொடுப்பது என்பது எத்தனை இயற்கை யான காரியம்? அவளுடைய இதயம் கொள்ளை போய்விட்டது. செம்படவர்களான அவர்களுடைய வாழ்க்கை துன்பமய மானது; அபாயம் நிறைந்தது. அந்த வாழ்க்கை முறையிலிருந்து ஊறி உருவெடுத்த சன்மார்க்க எண்ணங்கள், நம்பிக்கைகள், ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டெழுந்த கற்கோட்டை ஒன்று உண்டு. அதனுள் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அந்தக் கோட்டையிலிருந்து விடுதலை பெற ஒருவாசல் திறப்பது போலிருந்தது. ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் போதும். விடுதலைதான்.

வேறு மதத்தைத் தழுவி விடுவது! அப்போது எப்படி இருக்கும்? 'குப்பாயம்' அணிந்து, கனமான வேட்டியையும் சுற்றிக்கொண்டு, காதோரங்களை வரிசையாகத் துளைத்து,அதில் நகை நட்டுகள் அணிந்து பரீக்குட்டி முன் தோன்றுகிறபோது அவனுக்கு எத்தனை உவப்பாக இருக்கும்! அப்போது பரீக்குட்டி எத்தனை நேரம் வேண்டுமானாலும் அவளுடைய மார்பகங்களை வெறித்துக்கொண்டு இருக்கலாம். முன் அழகை ரசிக்கலாம். பின் அழகையும் ரசிக்கலாம். தங்களுக்கென்றே ஏற்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை அவள் நன்கு தெரிந்து கொண்டிருந்தாள்; உணர்ந்து கொள்ளத்தான் முடியவில்லை. அந்தக் கட்டுப்பாடுகளின் ஆதிக்கத்திலிருந்து தப்பிச் சென்றுவிட இது ஒன்றுதான் வழி! அரயனுக்கு, கடலுக்குச் செல்லும் அரயனுக்கு மனைவியாக இருக்க வேண்டியதில்லை. அந்தச் சமயத்தில் பரீக்குட்டி அங்கே வந்திருந்தான் என்றால், இதை எல்லாம் அவனிடத்திலேயே வாய்விட்டுச் சொல்லியிருப்பாள் கறுத்தம்மா.

"நாங்க உன் மதத்தில் சேர்ந்துடப் போறேம்!"

பரீக்குட்டி சந்தோஷ வெறியில் துள்ளிக் குதித்து விடுவான்!

ஆனால், காரியத்தில் நிறைவேற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்துடனா சக்கி இதைச் சொன்னாள்? அப்போது மூண்ட கோபவெறியில் பிறந்த வார்த்தைகளாகவும் இருக்கலாமே. நிஜமாகவே அந்த எண்ணம் அவளுக்கு உண்டா என்பதை அறிந்துகொள்ளக் கறுத்தம்மா ஆசைப்பட்டாள். ஆனால், அதை வாய்விட்டுக் கேட்கவும் பயமாக இருந்தது. மனத்தில் ஊடாடும் சபலம் தெரிந்துவிடுமோ என்ற கவலையும்கூட.

இவ்வாறெல்லாம் தனக்குள் தானே எண்ணிக் கொண்டபடி, அன்றையப் பொழுதைக் கழித்தாள் கறுத்தம்மா.

ஒரு நாள் இரண்டு மூன்று பேர்கள் அங்கு வந்தனர். துறை அரயன் அவர்களை அனுப்பி வைத்திருந்தார். செம்பன் குஞ்சு ஊர் வந்து சேரவில்லை. நாலைந்து நாட்களில் செம்பன் குஞ்சு வாங்கியிருந்த தோணி கடற்கரை வந்தடைந்தது. வலையும் இருந்தது. பள்ளிக்குன்றத்தைச் சேர்ந்த வலைக்காரன்

கண்டங்கோரனின் தோணி அது. ஒரு காலத்தில் அது புகழ் பெற்றிருந்த தோணியாம். அத்தனை பழசாகவும் இருக்கவில்லை. இந்தத் தோணியுடன் போட்டி போடக்கூடிய தோணி ஒன்று கூட சேர்த்தலைக் கடற்கரையில் கிடையாது. சாகரைக் காலங்களில் இந்தத் துறையைச் சேர்ந்தவர்களும் அதன் அற்புதமான ஓட்டத்தைப் பார்த்திருக்கிறார்கள். கண்டங்கோரன் அந்தத் தோணியைவிற்றுவிட்டானா என்ன? இப்போது அவனுக்குச் சற்று போதாத காலம்; அவன் தாராளமாகச் செலவு செய்பவன்; அதோடு நல்ல பேரும், புகழும் கொண்டவன்.

தோணியை எல்லோரும் வந்து பார்வையிட்டனர். ஒருவரும் வெளிப்படையாக அபிப்பிராயம் எதுவும் சொல்லவில்லை. இருந்தாலும் லக்ஷணங்கள் பொருந்திய நல்ல தோணி அவனுக்குக் கிடைத்து விட்டதே என்ற எண்ணம்தான் எல்லோருடைய மனத்திலும் தோன்றியது. அச்சகுஞ்சு நண்பர்களிடம் சொன்னான்:

"பள்ளிக்குன்றத்துக்காரரின் ஐசுவரியம் இந்தத் தோணியோடு வந்து செம்பன்குஞ்சுவுக்குக் கிடைச்சுப் போச்சு."

அய்யன்குஞ்சு சட்டென்று குறுக்கிட்டுப் பேசினான்:

"அவன் அதிருஷ்டம் இந்த முக்குவனுக்கு வருமா? அவன் உடம்பு தங்கம் மாதிரி இருக்கும். சின்னத் தொந்தி அழகா இருக்கும். அரையிலே வெள்ளை வேட்டி. கறுப்புக் கரை போட்ட மேல் வேட்டியைத் தோளில் நெடு நீளமாய்ப் போட்டுக்கிட்டுத் தோணி கரை வந்து சேருற வேளையிலே வந்து நின்னுக்கிட்டிருப்பானே. அவனையும் இவனையும் ஒண்ணாச் சொல்லிட முடியுமா?''

ராமன் மூப்பனும் தனது கருத்தைத் தெரிவித்தான்:

"அப்படியானா, கன்னங் கரேலின்னு எலும்பெடுத்துப் போயிருக்காளே சக்கி, அவ கண்டங்கோரன் பெஞ்சாதிமாதிரி ஆயிடப் போறா. நீ பாத்திருக்கிறியா அவளை?''

அய்யன்குஞ்சு சொன்னான்:

"அவ முகத்தைப் பார்த்தா கண்ணைப் பறிச்சிடுமே?''

செம்பன்குஞ்சு வீட்டுக்கு வந்தபோது அவனுக்குத் தலை கனத்தது. மிகுந்த உற்சாகத்தோடுதான் அவன் திரும்பி

வந்திருந்தான். சொந்தமாகத் தான் ஒரு தோணியும் வலையும் வாங்கியதை ஒரு பேரதிருஷ்டமாகக் கருதினான். அதோடும் பள்ளிக்குன்றம் கண்டங்கோரன் வீட்டுக்குச் சென்றதையும், அங்கு விருந்து உண்டதையும் விரிவாகச் சக்கியிடம் சொல்ல வேண்டுமென்று அவன் எண்ணிக்கொண்டிருந்தான். கண்டங் கோரனின் மனைவியைக் குறித்தும் சொல்லவேண்டிய விஷயங் கள் நிறைய இருந்தன. இதையெல்லாம் எண்ணியவாறு வீட்டிற்கு வந்தபோதுதான் பேரிடி தலையில் விழுந்துவிட்டது.

இதுபோல் தாங்க முடியாத பாரத்தை எந்த நாளும் அவன் தலையில் தூக்கி வைத்துக்கொண்டது கிடையாது. முன்பு ஒரு திட்டம் மனத்தை அடைத்துக்கொண்டிருந்தது. இப்போது அது நிறைவேறி விட்டது. ஆனால், விஷயம் அதற்கு மேல் முன்னேறவில்லை.

தோணியும் வலையும் வாங்கச் செல்லுவதற்கு முன்பே, துறை அரயனைப் போய்ப் பார்க்கவில்லை என்பதுதான் பெரும் குற்றமாகச் சுமத்தப்பட்டிருந்தது. நெடுங் காலமாக எல்லோரும் பின்பற்றி வருகிற ஒரு காரியத்தை அவன் மீறி விட்டான். தோணியும் வலையும் வாங்குவதற்குப் பணம் திரட்டுவதே பெரும்பாடாக இருந்தது அவனுக்கு. அந்தப் பணத்திலிருந்து பத்துப் பதினைந்து ரூபாய்கள்கூட எடுக்க முடியாமல்தான் இருந்தது. ஆனால், அது இத்தனை பெரிய தவருக உருவெடுக்கும் என்று அவன் எண்ணவில்லை.

தர்ம சங்கடமான நிலைமையில் அகப்பட்டுகொண்ட செம்பன்குஞ்சு, தன் மனைவியைப் பார்த்துக் கேட்டான்:

"எல்லாருக்கும் நாம் என்ன துரோகம் செஞ்சிப் புட்டோம்?"

சக்கி சொன்னாள்:

"ஏதாவது செஞ்சாத்தானா? பொறாமை."

அது வாஸ்தவம்தான். ஆனால், இருபது இருபத்தைந்து ரூபாய் இருந்தால், எல்லாவற்றையும் சரிக்கட்டி விடலாம். அதற்கு என்ன வழி? தோணிக்குத் துணைச் சாமான்கள் வாங்க மேலும் பணம் தேவையாக இருந்தது. கைவசம் ஒரு அயிலை வலை மட்டும்தான் இருந்தது.

தனது தலைமேல் சுமந்திருக்கும் பொறுப்புக்களைச் செம்பன்குஞ்சு சக்கியிடம் ஒவ்வொன்றாகச் சொல்ல ஆரம்பித்தான். வேறு யாரிடம் சொல்வான் அவன்? அவன் பேச்சைக் கேட்கத்தான் வேறு யார் இருக்கிறார்கள்? ஆனால், சக்கி அவனுக்கு ஆறுதல் சொல்லவில்லை. அவள் கேட்டாள்:

"அப்படியானா எதுக்கு இந்த எழவை யெல்லாம் தூக்கித் தலையிலெ வச்சுக்கிட்டியாம்?"

செம்பன்குஞ்சு வாயைத் திறக்கவில்லை. தாங்க முடியாத பாரத்தைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு விட்டோமே என்ற எண்ணம் அவனுக்கும் ஏற்பட்டிருக்கலாம். மனத் தெம்பையும் இழந்து விட்டான் அவன். துறைவாசிகளும் ஒன்றுகூடி எதிராகத் திரண்டு வருகிறார்கள்.

மீண்டும் சக்கி சொன்னாள்:

"கையிலெ இருந்த காசை வெச்சு பெண்ணைக் கட்டிக் கொடுத்து அனுப்பி வைச்சிருந்தா இந்தத் தொல்லையெல்லாம் வந்திருக்குமா?"

அதற்கும் செம்பன்குஞ்சு பதில் சொல்லவில்லை. "மனத்தில் பேராசைகள் தோன்றி விட்டதென்றால் பின் மனச்சாந்தி ஏது? இருப்பதை வைத்துக்கொண்டு காலம் தள்ளுவது புத்திசாலித் தனமோ?"

வாழ்க்கையில் மிகப்பெரிய ஆசை ஒன்று நிறைவேறிய நாள் அது. சொல்லப்போனால், அந்நாளைத் திருநாளாகக் கொண்டாட வேண்டும். ஆனால், அன்று அந்த வீடு சோக மூட்டத்தில் ஆழ்ந்து கிடந்தது.

அந்தி இருட்டு. செம்பன்குஞ்சு மனைவியிடம் சொன்னான்:

"கையிலே ஒரு முப்பத்தஞ்சு ரூபாய் இருந்தால் எல்லாத்தையும் சமாளிச்சுப்புடலாம்."

"அது எப்படி முடியும்?" என்று கேட்டாள் சக்கி. அவன் தனது யோசனையைச் சொன்னான்:

"துறை அரயனெ நாளைக்குப் போய்ப் பார்க்கணும். அப்புறம் எல்லாம் சரியாப் போயுடும்."

"நமக்கு மத்தி வலையும் தாங்கு வலையும் வாங்க வேண்டாமா?"

"அதெல்லாம் சம்பாதிச்சுப்புடுவேன்."

மூங்கில் குழலினுள் போட்டு மண்ணுக்குள் புதைத்து வைத்திருந்த காசையும் எடுத்துவந்து செம்பன்குஞ்சு கையில் கொடுத்தாள் சக்கி. அவளுடைய சிறு சேமிப்பும் செலவாகி விட்டது. சக்கி செம்பன்குஞ்சுவை விமர்சித்தாள்:

"விழி பிதுங்குது. இப்பொத் தெரியுதா? ஒரு மஞ்சாடி எடை நகை நட்டாவது செய்து வைச்சுக்கிட்டோமா? அண்ணைக்கு நான் சொன்னபோது ஒரு பொருட்டாப் படலெ."

செம்பன்குஞ்சுவும் அதை ஒப்புக்கொண்டான்.

"சக்கி, ஒரு வழிதான் எனக்குத் தட்டுப் படுது!"

"என்னது?"

"அதாவது..."

அதைக் கூறிமுடிக்க மிகவும் தயங்கினான் செம்பன்குஞ்சு.

"அந்தப் பயலப் பிடிச்சுட்டாக் காரியம் முடிஞ்சிடும்."

சக்கி செம்பன்குஞ்சுவின் வாயைப் பொத்தினாள்.

கறுத்தம்மா தூங்கிவிட்டாளா இல்லையா என்பது சக்கிக்குத் தெரியாது. சக்கியின் கையை அகற்றிவிட்டுச் செம்பன் குஞ்சு கேட்டான்.

"என்ன விஷயம்?"

"மெதுவாகப் பேசு."

"என்னான்னு சொல்வேன்?"

சக்கி சொல்லவேண்டிய விஷயத்திலேயே செம்பன்குஞ்சு தெரிந்து கொள்ளக்கூடாத பகுதிகள் உண்டு. சொல்லப் போனால் எந்தத் தகப்பனுக்கும் ருசிக்காத விஷயங்கள் அவை. இருந்தாலும் இப்போது கேட்ட மட்டுக்கும் ஒன்றும் சொல் லாமலிருக்க முடியாது. செம்பன்குஞ்சுவோ மீண்டும் அதையே கேட்டுக் கொண்டிருந்தான். சக்கி அவனுடைய காதினுள் முணுமுணுத்தாள்.

"அது......கறுத்தம்மா சொல்லுது......வெட்கங் கெட்ட காரியமாம். தெரிஞ்சா சண்டைக்கு வந்துடும்."

"அப்புறம் என்ன வழி சொல்லு?"

"நானும் அதையேதான் யோசிச்சுக்கிட்டு இருக்கேன்."

"அவன் இங்கே இருக்கானா?"

"இருப்பான்."

"நான் போய்ப் பார்த்துட்டு வாரேன்."

சக்கி பேசவில்லை. செம்பன்குஞ்சு வாசற் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றான்.

கறுத்தம்மா தூங்கிக்கொண்டிருந்தாள். அவளுக்கு ஒன்றுமே தெரியாது. சிறிது நேரத்தில் செம்பன்குஞ்சு திரும்பி வந்து சேர்ந்தான். அவனுடைய முகம் மலர்ந்திருந்தது. விஷயம் கைகூடி விட்டது என்பது வெளிப்படை!

"ஐயோ பாவம்! சாதுப் பையன் ரொம்ப நல்ல ஆளு அவன். கையிலே முப்பது ரூபாய் இருந்தது. கேட்டேன். அவன் அப்படியே தந்துபுட்டான்.

சக்கிக்கு ஆறுதல் ஏற்பட்டது என்றாலும், அதன் மத்தியில் சஞ்சலமும் பிறந்தது. அந்தப் பணத்தைப் பொறுத்தவரையில் மனதுக்கு ஒரு குறை தெரிகிறது. கறுத்தம்மா சொன்னதும் அதுதானே? சரிதான். எதிர்வார்த்தை சொல்லாமல் கேட்கிற கைக்கெல்லாம் பணம் தந்துகொண்டிருப்பது என்றால் அதற்குப் பொருள் என்ன? காரணம் என்ன? முக்கியமான கேள்விதான். எல்லாம் கறுத்தம்மாவை நினைத்துத் தானே?

மறுநாள் காலை செம்பன்குஞ்சு துறை அரயனைக் காணச் சென்றான். எடுத்த எடுப்பில் சீறி விழுந்தார் அரயன். அதன் பின் கோபம் சற்றுத் தணிந்தது. பெண்ணின் திருமணத்தைக் கூடிய விரைவில் முடித்துவிட வேண்டும் என்ற கட்டளையும் பிறந்தது. புதிய தோணியின்மூலம் கிடைக்கிற வருமானத்தில் ஒரு பங்கையும் அன்றுடம் செலுத்திவிட வேண்டும். துறைவாசிகள் ரொம்பவும் பொறுமைப்படுவதாகச் செம்பன்குஞ்சு முறையிட்டான். அதைக் கவனத்தில் கொண்டு ஆவன செய்வதாக அரயனும் வாக்குறுதி தந்தார்.

அப்போதைக்குக் குழப்பங்கள் அடங்கின.

துணைச் சாமான்களோடு தோணியைக் கடலில் விடுவதென்றால் இன்னும் ஐந்நூறு ரூபாய் வேண்டியிருக்கும். அதுவும் நடக்கத்தான் போகிறது.

"பணம் எங்கிருந்து கிடைக்கும்?' என்பதே சக்கியின் கேள்வி. செம்பன்குஞ்சு சொன்னான்:

"பரீக்குட்டி கிட்டே வாங்கணும்.

சக்கி அசந்து போனாள். கறுத்தம்மாவுக்குத் தெரியாமலே அவர்களுக்குள் ஒரு சண்டை நடந்தது. கணவனுக்குரிய அதி கார மிடுக்கைக் காட்டினான் செம்பன்குஞ்சு.

''நீதான் கேக்கணும்'' என்றான் அவன்.

''என்னாலே முடியாது.''

''அப்படியானாத் தோணி மண்ணாப் போகட்டும்.''

''போகட்டும்,''

இப்படிச் சொன்னாளே தவிர, எப்படியும் போகட்டும் என்ற எண்ணத்தில் இருக்க முடியவில்லை அவளால். அவள் மனம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. செம்பன்குஞ்சு தனது முடிவை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு விட்டான். இனி மேல் அவன் எதுவும் செய்யமாட்டான் என்ற எண்ணம்கூட சக்கிக்கு ஏற்பட்டது. செம்பன்குஞ்சுவின் உத்தேசமும் அது தான். சக்கி கேட்டாள்:

''சரி, ஒண்ணு கேக்கறேன். இந்தப் பணத்தையெல்லாம் அவனுக்குத் திருப்பிக் கொடுப்பியா?''

''கொடுப்பேன்'' என்று ஒப்புக்கொண்டான் அவன். வட்டி சகிதம் கொடுப்பதாகவும் சொன்னான்.

அந்தத் தடவையும் சக்கி பரீக்குட்டியிடம் பணம் கேட் டாள். இரவு வேளையில் கிட்டங்கியில் கருவாடு விற்பனை செய்யப்பட்டது. செம்பன்குஞ்சுவின் தோணிக்குத் துணைச் சாமான்களும் ஏற்பட்டன.

எல்லாம் தயாராகி விட்டது. அடுத்தது வேலையாட்கள் விஷயம்தான். துறை அரயன் பழவர்களுக்குச் சொல்லி அனுப்பி வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுத்தார். சொல் லப்போனால் அது ஒரு சின்ன விஷயம்தான். தோணியைப் பார்த்த மாத்திரத்திலேயே எல்லோருக்கும் வேலைக்கு வர ஆசைதான். செம்பன்குஞ்சு தன்னிடம் யோசனை கேட்பான் என்றும், தன்னையும் வரும்படி அழைப்பான் என்றும், அச்ச குஞ்சு நம்பிக்கொண்டிருந்தான். இதை வியாஜமாகக் கொண்டு அவன் வீட்டில் ஒரு பூசல் கிளம்பிற்று. அவசியமென்றால் துறை அரயன் கட்டளையை மீறவும் அவன் தயார். செம்பன் குஞ்சு சிறு பிராயத்திலிருந்தே அவனுடைய நண்பன். ஆனால், ஒன்றுக்கு இரண்டுமுறை நேரில் சந்தித்தும்கூட ஒரு வார்த்தை

பேசவில்லை செம்பன்குஞ்சு. கடற்கரையிலிருந்து பன்னி ரெண்டு பேரைச் செம்பன்குஞ்சு தேர்ந்தெடுத்தான். அவர் களில் அச்சகுஞ்சுவும் ஒருவன் அல்ல.

தோணியைக் கடலில் இறக்குவதற்கு முன்தினம் ஒரு சிறிய சடங்கு நடத்தவேண்டும். வேண்டியவர்களுக்கு விருந் திடவேண்டும். மளிகைச் சாமான்களை ஹஸன்குட்டி கடையி லிருந்து செம்பன்குஞ்சு கடனுகப் பெற்றுக்கொண்டான். காக் காழம், புன்னப்புறை வட்டாரங்களில் வசிக்கும் பந்துக்களை நேரில் அழைக்கவேண்டும். செம்பன்குஞ்சு கறுத்தம்மாவை அனுப்பி வைத்தான்.

கறுத்தம்மா, சொந்தச் சிந்தனைகளில் லயித்தவாறு கரை யோரமாக நடந்து சென்று கொண்டிருந்தாள்.

"கறுத்தம்மா, வியாபாரத்துக்கு மீன்தருவியா எனக்கு?"

அடக்கமான குரலில் எழுந்த இக்கேள்வி காதில் விழுந்த தும் திடுக்கிட்டாள் அவள். பரீக்குட்டி முன்னுல் நின்று கொண்டிருக்கிருன். எந்தத் திசையிலிருந்து எவ்வாறு தோன் றினுனே அவன்! கறுத்தம்மா ஒன்றும் பேசவில்லை. அவள் இப்போது பழைய கறுத்தம்மா அல்ல. தலை குனிந்தவண் ணம் அவள் நின்று கொண்டிருந்தாள். பரீக்குட்டி கேட்டான்:

"கறுத்தம்மா, உனக்கு என்னிடம் கோபமா?"

அவள் பேசவில்லை. அவளுடைய மார்புக்கூடு வெடித்து விடும். அப்படித் துடித்தது அவள் இதயம்.

"உனக்கு விருப்பமில்லாட்டா நான் பேசலெ."

உண்மையில் அவளுக்கு அவனிடம் பேசவேண்டிய விஷயங் கள் எவ்வளவோ இருந்தன. எத்தனை கேள்விகள் கேட்க எண் ணினுள் அவள்! 'உன் மதத்திலே சேந்துடட்டுமா?' என்றுகூட அவள் கேட்க எண்ணினுள்.

கரையேற்றிப் போட்டிருந்த தோணியின் மறைவில் அவள் வாய் திறக்காமல் நின்று கொண்டிருந்தாள். அப்போ தும் அவன் அவளுடைய எடுப்பான மார்பகங்களை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். 'சின்ன முதலாளி, அப்படிப் பார்க்காதே' என்று அவளும் சொல்லவில்லை.

தலையை நிமிர்த்தி அவள் கேட்டாள்:

"சின்ன முதலாளி, நான் போகட்டுமா?"

போவதற்குப் பரீக்குட்டியின் சம்மதம் பெற வேண்டுமா என்ன? அவள் பாட்டுக்குப் போகலாமே!

மனத்தில் எழுந்த பீதி உணர்ச்சியுடன் அவள் சொன்ஞள்:

"ஐயோ, யாராவது பாத்துடுவாங்க."

அவள் நடந்தாள். சிறிது தூரம் சென்றதும், பின்ஞலிருந்து அவன் கூவி அழைப்பது கேட்டது.

"கறுத்தம்மா!"

அந்தக் குரலில் ஏதோ ஒரு விசேஷத்தன்மை ஊடுருவி நிற்பது கறுத்தம்மாவுக்குப் புலப்பட்டது. அன்று வரையிலும் அவள் மனமோ, செவிகளோ அனுபவித்தறியாத விசேஷத் தன்மை அது!

தூண்டில் போட்டு இழுத்ததுபோல் சட்டென்று நின்று விட்டாள் கறுத்தம்மா. அவன் அவள் அருகே வரவில்லை. அவன் அண்டையில் வரட்டும் என்பதற்குத்தான் அவள் நின்ருளோ!

எத்தனை நேரம் அப்படியே நின்றுகொண்டிருந்தார்கள் என்பது இருவருக்குமே தெரியாது. அவளுடைய மனத்தில் அலைபோல் எழுந்த உணர்ச்சிகள் தாம் என்ன?

கடல் சினம் கொண்டுவிடவில்லை. காற்றும் அசையவில்லை. சின்னஞ்சிறு அலைகள் எழும்பி, ஒன்ருேடு ஒன்று மோதி விழுந்து வெண்நுரை பரப்பிப் புன்னகை பூத்தன. கடற்கரையில் நடந்தது ஒரு காதல் நாடகம்தானே?

பரீக்குட்டி எவ்வளவோ கேட்க எண்ணினன். எவ்வளவோ சொல்ல எண்ணினன். அத்தனையும் ஒரு கேள்வியாக உருப்பெற்று வெளியே வந்தது.

"கறுத்தம்மா! உனக்கு எங்கிட்டே பிரியம்தானே?"

"ஆமா."

ஆவல் பொங்க மறுகேள்வி பிறந்தது:

"உனக்கு எங்கிட்டே மட்டும்தானே பிரியம்?"

அதற்கும் கறுத்தம்மா நொடிப்பொழுதில் பதில் சொன்ஞள்:

"ஆமா."

அவளுடைய குரலே இடி முழக்கம்போல் அவனை அதிர வைத்தது. அப்போதுதான் அவளுக்குப் பிரக்ஞை திரும்பிற்றோ என்னவோ! பேசிய வார்த்தைகளின் முழுப்பொருளும் அப்போதுதான் புலப்பட்டது போலும்! அவ் வார்த்தைகள் விசுவரூபம் பூண்டு அவள்முன் தோன்றி அவளைப் பழித்தன.

அவள் பரீக்குட்டியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். இருவர் விழிகளும் மோதிக்கொண்டன. பேச வேண்டியதெல்லாம் பேசி முடிந்துவிட்டது. இருவரும் இனம் தெரிந்து கொண்டு விட்டனர்.

அவள் நடந்து சென்றாள்.

# 5

மறுநாள் விடியற்காலையில் கடற்கரைவாசிகள் அத்தனை பேரும் கரையோரம் வந்து கூடினர். அன்று செம்பன்குஞ்சுவின் தோணி கடலில் இறங்கப் போகிறது. புதிய தோணியும் வருவதால் அன்று எல்லாத் தோணிகளும் ஒன்ருகத்தான் கடலுக்குச் செல்லும். கறுத்தம்மாவும், பஞ்சமியும் கடற்கரைக்கு வந்தார்கள். சற்றுத் தொலைவில் பரீக்குட்டியும் நின்றுகொண்டிருந்தான். பஞ்சமி, கறுத்தம்மாவுக்குப் பரீகுட்டியைச் சுட்டிக் காட்டினுள். கறுத்தம்மா பதிலுக்குப் பஞ்சமியைக் கிள்ளினுள்.

சிலர் இன்னும் வந்து சேரவில்லை. அவர்களை உரக்கக் கூவி அழைத்தான் ராமமூப்பன். அய்யன்குஞ்சு வந்து சேராதவர்களைத் திரட்டிக் கொண்டிருந்தான்.

"புதுத் தோணியும் வருதுன்னு தெரிஞ்சிருந்தும் எவ்வளவு மெள்ள வாராங்க பாரேன்."

செம்பன்குஞ்சுவின் தோணி ஆட்கள் எல்லோரும் வந்து தயாராக நின்றுகொண்டிருந்தனர். பரீக்குட்டி வழக்கமாகப் பாடுகிற பாடலை எவனே ஒருவன் பாடினுன். மனத்துக்கு வேதனையூட்டும் பாடல் அது.

செம்பன்குஞ்சு கடலுக்குச் செல்லும் காட்சியைக் காணத் தொலை தூரத்தில் தென்னைமரக் கூட்டங்களின் உச்சிமீது சந்திரன் எழுந்தான். கடல் அன்னை இன்முகம் காட்டி நின்ருள். எல்லாத் தோணிகளைச் சுற்றியும் கூட்டம். முதன் முதலில் செம்பன்குஞ்சுவின் தோணிதான் இறங்கவேண்டும். அய்யன்குஞ்சு குரவையிட்டான். அதைத் தொடர்ந்து எல்லோரும் குரவையிட்டனர். கடற்கரையில் ஒரே ஆரவாரம்.

ராமமூப்பன் சொன்னான்:

"துடுப்பை எடு...செம்பன்குஞ்சு"

செம்பன்குஞ்சு துடுப்பை எடுத்துச் சிரசில் வைத்துக் கொண்டான். எல்லாத் தெய்வங்களையும் மனத்தில் வணங்கினான். எல்லோரும் சேர்ந்து தோணியைத் தள்ளினர். தோணி மணலை உழுதுகொண்டு தண்ணீரில் இறங்கிற்று. சிற்றலைகளைப் பிளந்துகொண்டு கடலை அடைந்தது. கறுத்தம்மாவுக்கும் சக்கிக்கும் மெய் சிலிர்த்தது. மனதில் உவகை பிறந்தது. இமைகள் மூடிக்கொண்டன. விழிகளை அகற்றிப் பார்த்தபோது, தோணி அலைகள் மீது எழும்பியும், நீரைக் கிழித்துக்கொண்டும் குதித்தபடி, மேற்றிசையில் முன்னேறிச் செல்வது தெரிந்தது.

நல்ல லக்ஷணங்கள் பொருந்திய தோணி. அதன் அழகில் மனத்தைப் பறிகொடுத்தபடி ராமமூப்பனும், அய்யன் குஞ்சும் கரையில் நின்றுகொண்டிருந்தனர்.

ராமமூப்பன் கேட்டான்:

"எப்படி இருக்குது?"

அய்யன்குஞ்சு கேட்டான்:

"கொஞ்சம் மேக்கே தூக்குதோ?"

"இல்லெ, சாய்மானம் தெக்கேதான்."

ஆவல் உந்த சக்கி அவர்களை நெருங்கினாள். தோணியின் லக்ஷணம்சங்களை அவளும் தெரிந்து கொள்ளவேண்டும்.

அவள் கேட்டாள்:

"என்ன அய்யன்குஞ்சண்ணா, என்ன சொல்றீங்க? ராசியுள்ள தோணிதானா?"

எல்லாம் அறிந்தவன் போல் அய்யன்குஞ்சு சொன்னான்:

"நல்லாருக்குது. ஒரு நாளும் தட்டுப்பாடு வராது."

அப்போதும் பக்தி மயக்கத்துடன் சக்கி கைகூப்பினாள். அவள் சர்வ வல்லமையுள்ள கடல் அன்னையை வேண்டிக் கொண்டாள். நடுக்கடலில் தோணி பாய்ந்து சென்றுகொண்டிருந்தது. வெற்றி முரசு முழங்கிக்கொண்டு செல்கிறது.

கறுத்தம்மா சொன்னாள்:

"நம்ம தோணி நல்ல எடுப்பா இருக்குது. இல்லையா அம்மா?"

சக்கித் தோணியைப் பார்த்துச் கொண்டே சொன்னாள்:

"ரொம்ப அழகாப் போகுது."

அய்யன்குஞ்சு சொன்னான்:

"கேட்கணுமா! எப்படியோ உங்க கைக்குக் கிடைச்சுப் போச்சு. பள்ளிக்குன்றம் கண்டங்கோரன் தோணி இல்லையா? இந்த மாதிரித் தோணி ஒண்ணு இந்தக் கடற்கரையிலே இருக்கவா செய்யுது? எட்டு லட்சணமும் அழகாப் பொருந்தி யிருக்குது. அந்தப் பய சரக்கு அப்படித்தான் இருக்கும். அவன் பெண்சாதி இருக்காளே, அம்மாடி! பழுக்கக் காய்ச்சின தங்கக் கட்டி மாதிரி இருப்பா. அரய சாதிக்குள்ளேயே அப்படி ஒரு பொம்புளையெ பார்க்கமுடியாது. அபார அழகி. அவங்க வீடுதான் எப்படி இருக்கும்? அவன் விஷயமே அலாதிதான். அவங்கிட்டேயிருந்த தோணி இப்போ உங் களுக்குக் கிடைச்சுப் போச்சு. அதிர்ஷ்டம்னுதான் சொல்ல ணும். சந்தேகமே இல்லெ.

மற்றத் தோணிகளும் கடலுக்குச் சென்றன.

கடைசியில் கடற்கரையில் தாயும், மகளும், பரீக்குட்டி யும் நின்றுகொண்டிருந்தனர். சில்லென்று வீசிய காற்றில் பரீக்குட்டிக்குக் குளிரெடுத்தது. நடுக் கடலில் அங்குமிங்கும் தோணிகள் புலப்பட்டன. வலை வீசவும் ஆரம்பித்து விட்டனர்.

பரீக்குட்டி மெதுவாகச் சக்கி அருகில் வந்தான். கறுத் தம்மா தாயின் பின்னால் மறைந்து நின்றுகொண்டாள். பஞ்சமீ கறுத்தம்மாவின் முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டு நின்றாள்.

வழக்கமாகக் கேட்கும் கேள்வியை அன்றும் பரீக்குட்டி கேட்டான். ஆனால், ஒரே ஒரு வித்தியாசம். இப்போது கேட் டது தாயாரிடம். விளையாட்டாகவோ, வேண்டுமென்றோ, எப்படியானாலும் சரி, அவன் கேட்க விரும்பியது அந்த ஒரு கேள்விதான் போலும்!

"எனக்கு மீன், வியாபாரத்துக்குத் தருவீங்களா?"

சக்கி சொன்னாள்:

"என்ன தம்பி! இப்படிச் சொல்லுறே? உனக்கு இல்லாமே வேறு யாருக்கு?"

அவன் கேட்ட கேள்வியின் உட்பொருள் சக்கிக்கு எட்ட வில்லை. எட்டவும் எட்டாது. வறட்டுக் கேள்வியா அது! ஒரு உணர்ச்சிக் கடலையே தன்னுள் அடக்கிக்கொண்ட கேள்வி அல்லவா அது?

தாயின் பின்னால் மறைந்து நின்றுகொண்டிருந்த கறுத் தம்மா சொன்னாள்:

''அம்மா எனக்குக் குளிருது!''

அன்றுதான் தோணி கடலுக்குச் சென்றிருந்தது. ஒரு விஷயத்தை வெளியிடாமல் சக்கியால் அந்த இடத்தை விட்டு நகரமுடியாது.

''தம்பி, உன்னாலேதான் இண்ணைக்குத் தோணி கடலுக் குப் போயிருக்குது. இல்லேன்னா இது நடந்திருக்கவே முடியாது.''

பரீக்குட்டி இதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. தாயார் வாயிலிருந்து இந்த அளவுக்காவது ஒரு பேச்சு வந்தது கறுத்தம்மாவுக்குப் பெரும் நிம்மதியைக் கொடுத்தது. இந்த வழியாகவேனும். தாங்கள் கடன்பட்டிருப்பதை அம்மா ஒப்புக்கொண்டு விட்டாள். சக்கி தொடர்ந்து சொன்னாள்:

''இந்தத் தவா சாகரை முடிஞ்சதும் பணத்தைத் திருப் பிக் கொடுக்கிறோம்.''

''வேண்டாம். அது எனக்கு வேண்டாம்னு சொல்றேன். அப்பொ?''

''வேண்டாமா? ஏன்?''

பரீக்குட்டி சொன்னான்:

''திரும்ப வாங்கணும் என்கிற எண்ணத்திலே நான் தரலெ.''

சக்கிக்கு ஒன்றும் புரியவில்லை. கறுத்தம்மாவுக்கு அவ் வார்த்தைகள் புரிந்ததோடு உடம்பில் ஜிவ்ஜிவ்வென்று கூடே றும் உணர்ச்சியும் ஏற்பட்டது. சக்கியின் மனதிலும் ஒரு சந்தேகம் ஊடாட ஆரம்பித்தது.

''தம்பி, என்ன சொல்றே நீ?''

பரீக்குட்டி தீர்மானமான குரலில் சொன்னான்:

''வேண்டாம்; அந்தப் பணத்தெத் திரும்பத் தர வேண் டாம்.''

சிறிது நேரத்திற்குப் பின் மீண்டும் பரீக்குட்டி சொன்னான்:

"தோணியும் வலையும் வாங்கணும்னு கறுத்தம்மா எங்கிட்டெக் கேட்டா. நான் தந்தேன். அதைத் திருப்பித்தர வேண்டாம்"

கறுத்தம்மா தலையில் இருள் புகுந்துகொண்டது. தலையும் சுற்ற ஆரம்பித்தது. சற்றுக் கடுமையான குரலில், சக்கி பரீக்குட்டியிடம் கேட்டாள்:

"நீ எதுக்கு கறுத்தம்மாவுக்குப் பணம் கொடுக்கணும்? ஊனக்கு யாரு அவ?"

கண்டிப்பான குரலில் மேலும் சக்கி தொடர்ந்து பேசினாள்:

"ஊஹூம். அப்படி ஒண்ணும் செய்ய வேண்டாம். தந்த பணத்தெத் திரும்ப வாங்கிக்க."

சக்கி கண்டிப்பாகப் பேசுகிறாள் என்பதைப் பரீக்குட்டியும் தெரிந்துகொண்டான். ஒரு வார்த்தை பேசவில்லை அவன். பெற்ற தாய் உபதேசம் பண்ணுவது போல் சக்கி சொன்னாள்:

"தம்பி! நீ நாலாம் மதத்து ஆளு. நாங்களோ அரயம்மாரு. இந்தக் கடற்கரையிலெ சின்ன வயசிலிருந்தே நீங்க ரெண்டு பேரும் ஒண்ணு விளையாடித் திரிஞ்சீங்க. அதுதான் காரணமாப் போச்சு. எல்லாத்துக்கும் நல்ல அரயப்பையனு ஒருத்தனைப் பாத்து நாங்க இவளைக் கட்டிக்கொடுக்கப் போறோம். நீயும் உங்க ஜாதிப் பெண்ணு ஒண்ணைப் பார்த்துக் கட்டிக்க."

சில நிமிஷங்களுக்குப்பின் சக்கி மீண்டும் தொடர்ந்து சொன்னாள்:

"நீங்க சின்னஞ்சிறுசுகள். உங்களுக்கு விபரம் தெரியாத வயசு. கெட்ட பேர் உண்டாக்கிப் புடாதிங்க. இங்கே நாம் இப்படிப் பேசரதைப் பார்த்தாலே போதும். காது மூக்கு வச்சுப் பேச ஆரம்பிச்சுடுவாங்க. இங்கே இருக்கிறவங்க அப்படி."

சக்கி மகளையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டாள். திரும்பி நின்றுகொண்டு குரலில் அன்பின் குழைவுடன் பரீக்குட்டியைப் பார்த்துச் சொன்னாள்:

"தம்பி, நான் சொல்றது தெரிஞ்சுதா? அந்தப் பணத்த வாங்கிக்கிடணும்."

சக்கி முன்னல் செல்ல, கறுத்தம்மாவும் பஞ்சமியும் பின்னல் நடந்து சென்றனர். அவர்கள் செல்வதையே பார்த்துக் கொண்டு நின்முன் பரீக்குட்டி.

சக்கி சொன்னது முற்றிலும் சரி. கண்டிப்பாகக் கூறிவிட வேண்டிய விஷயம்தான் அது. ஆனல், அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் கறுத்தம்மாவின் இதயத்தைக் குலேத்து குதறி விட்டன.

கொஞ்ச தூரம் நடந்து சென்றதும் கறுத்தம்மா பின் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அவள் வேண்டுமென்று அப்படிப் பார்க்கவில்லே. அவளால் பார்க்காமலிருக்க முடியவில்லே. அவர்கள் வீட்டை அடைந்ததும், இதயத்தைத் துளேக்கிற அப்பாடல் கேட்கலாயிற்று.

சக்கி சொன்னுள்:

"இந்தப் பையனுக்குத்தான் ராத்தூக்கம் கிடையாதா?"

சக்கி கறுத்தம்மாவைப் பார்த்து மீண்டும் சொன்னுள்:

"இந்தக் கடற்கரையிலே இருந்து எப்படியாவது உன்னெ அனுப்பி வைச்சுப்புடணும்."

அந்த வார்த்தைகளில் ஓர் ஆவலாதி அடங்கியிருந்தது. அவளால தாய்க்கும் நிம்மதியில்லே. அவள் காரணமாக ஒருவருக்கும் விசிராந்தியாக இருக்க முடியவில்லே. தாங்க முடியாத கோபத்திலும் துயரத்திலும் கறுத்தம்மா கேட்டாள்:

"நான் என்னம்மா செய்தேன்?"

சக்கி வாயைத் திறக்கவில்லே.

பொழுது புலர்ந்தபோது தோணி கரை வந்தடைந்ததைக் காணக் கறுத்தம்மாவும் சக்கியும் கடற்கரை வந்து நின்று கொண்டிருந்தனர். தொலே தூரத்தில் தோணி வருவது புலப்பட்டது. கடலின் மேற்பரப்பைப் பார்த்த வரையில் அன்று மீன் செழிப்பாகக் கிடைத்திருக்கும் என்று தோன்றிற்று. அன்று எந்த இனத்தைச் சேர்ந்த மீன் அகப்பட்டிருக்கும் என்று கறுத்தம்மா சக்கியிடம் கேட்டாள். 'இருக்கிற கூறைப் பார்த்தால் அயிலேதான்' என்று சக்கி பதில் சொன்னுள். கறுத்தம்மா மகிழ்ச்சியோடு சொன்னுள்:

"அப்பொ, தொடங்கின அண்ணேக்கே நமக்கு நல்ல அதிர்ஷ்டம்தானே?"

"கடல் அம்மையின் மனசு இரங்கணும்!"

ஒரு சிறு குழந்தை மழலை மொழியில் தனது அபிலாஷை யைத் தாயிடம் கூறுவதுபோல் கறுத்தம்மா சொன்னாள்:

"அம்மா, நம்ம தோணி மீனெ சின்ன முதலாளிக்குக் கொடுக்கணும்."

சக்கி கோபமடையவில்லை. சின்ன முதலாளி உனக்கு யார் என்று கேட்கவும் இல்லை. சொல்லப்போனால் சக்கிக்கும் அதே எண்ணம்தான். அதே சமயம் அவளுக்கு ஒரு சந்தேகம்:

"ஆனா, அந்தக் கல்லுளிமங்கன் சொன்னாக் கேக்கணுமே!"

கறுத்தம்மா அதற்கு ஓர் உபாயம் சொன்னாள்:

"தோணி கரை வறபோது வந்து நிக்கணும். நீதான் அப்பனிடம் சொல்லணும்."

சக்கி ஒப்புக்கொண்டாள். அந்தக் காரியத்தை எப்படியும் செய்து முடித்துவிட வேண்டும்.

தோணி கரை வருவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள் பஞ்சமி.

அப்போது இன்னொரு பிரச்னை முளைத்தது. அக்கம் பக்கத் துப் பெண்கள் பலரும் அங்கு வந்து சேர்ந்தனர். நல்ல பெண், காளிக்குஞ்சு, குஞ்சுப்பெண், லட்சுமி எல்லோரும் கூடிவிட் டனர். செம்பன்குஞ்சு மீனை, கூடை வியாபாரிகளுக்கு மொத்த மாகக் கொடுக்கப் போகிறானா, அல்லது சில்லறையாகக் கொடுக்கப் போகிறானா என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள விரும்பினர். முதலில் குஞுசுப்பெண்தான் இதை விசாரித்தாள். மீனை மொத்தமாகக் கூடை வியாபாரிகளுக்குக் கொடுத்து விடுவதுமுண்டு. எனவே, கிழக்கே வியாபாரத்துக்குச் செல் கிற பெண்கள், வியாபாரிகளின் காலைப் பிடித்துக் கெஞ்ச வேண்டியிருக்கிறது என்று குஞ்சுப்பெண் சொன்னாள்:

"இதெ தனியா உன்னிடம் சொல்ல வேண்டியதில்லே. உனக்கே தெரிஞ்ச சங்கதிதான்."

சக்கிக்கு அவர்கள் சொன்ன குறை நன்றாகப் புரிந்தது. கூடை வியாபாரிகளிடம் வாங்கி விற்பதில் லாபம் சொற்பமாக இருக்கும். அவர்கள் சொல்லுகிற விலையைக் கொடுத்து வாங்க

வேண்டும் என்பதோடு கூடை வியாபாரிகள் வசையையும் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டும்.

சக்கி கேட்டாள்:

"அதுக்கு நான் என்ன செய்யணும்?"

நல்லபெண் அதிகாரக் குரலில் சொன்னாள்:

"உங்க தோணி மீனெ பொம்புளேகளுக்குத் தரணும்."

சட்டென்று சக்கியால் ஒரு பதில் சொல்ல முடியவில்லை. எல்லோருமே அக்கம் பக்கத்துக்காரர்கள்தாம். அவர்கள் சொல்வதிலும் உண்மையிருக்கிறது. ஆனால், அவர்களுக்குச் சாதகமாக ஒரு வார்த்தை சொல்லிவிட முடியுமா? செம்பன் குஞ்சு இவர்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொள்வானா என்பது சந்தேகம்தான். அதோடு ஏற்கெனவே பரீக்குட்டி மீன் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறான். ஆனால், அதை வெளியிடவும் முடியாது.

காளிக்குஞ்சு கேட்டாள்:

"சக்கி அக்கா, ஏன் பேசாம இருக்கே? செம்பன்குஞ்சு அண்ணன் ஒத்துக்கிடுவாரோன்னு சந்தேகமாக இருக்குதா? நீ வற்புறுத்திச் சொல்லணும். நீயும் மீன் கூடை சுமந்து, அந்த அனுபவமும் தெரிஞ்சவ. நீ சம்பாதிச்ச காசையும் சேத்துத் தானே தோணியும் வலையும் வாங்க முடிஞ்சுது?"

'அது வாஸ்தவம்தான்' என்று சக்கியும் ஆமோதித்தாள்.

லட்சுமி கேட்டாள்:

"நீ இனிமெ வியாபாரத்துக்கு வரமாட்டியோ?"

"அதென்ன அப்படிக் கேட்டுப்புட்டே? ஒரு தோணியில்லெ, பத்துத் தோணி வந்தாலும், சக்கி எண்ணைக்கும் சக்கிதான்."—ஏதோ, மன்னிப்புக் கேட்பதுபோல் இதைச் சொன்னாள் சக்கி.

"அதெச் சொல்லலெ. நீ தந்தா, மொத்தமா ஒரு கூடை வாங்கி ஆளுக்குக் கொஞ்சம் பங்கு போட்டுக்கிடலாமேன்னு பாக்கறோம்."

தனது தர்ம சங்கடமான நிலைமையைச் சக்கி விளக்கினாள்:

"அந்தக் கல்லுளிமங்கன் ஒத்துக்கிடுவாரோ என்னவோ? யாருக்குத் தெரியும்?"

நல்லபெண் சொன்னாள்:

"நீதான் சொல்லி விஷயத்தை முடிச்சுத் தரணும். நீ சொன்ஞப் போதும். கிடைச்சிடும்."

காளிக்குஞ்சு கறுத்தம்மாவிடம் சொன்ஞள்:

"கறுத்தம்மா, நீ உங்க அப்பன் கிட்டெச் சொல்லணும்."

கறுத்தம்மா தீர்மானமாகச் சொல்லி விட்டாள்:

"என்ஞலே முடியாது."

பஞ்சமி, தான் சொல்வதாக ஒப்புக்கொண்டாள். தோணி கரை சேர்ந்ததுமே கூடை வியாபாரிகள் வந்து மொய்ப்பதற்கு முன்ஞலேயே சொல்லிவிடுகிறேன் என்ருள் அவள். இதற்குள் அவளுடைய சொந்த விஷயம் ஒன்றும் அடங்கி யிருந்தது. தோணி கரைஅடைந்ததும் ஒவ்வொரு நாளும் ஒரு சிறு கூடை நிறைய மீன் அள்ளிக் கொண்டுவந்து காயப்போட்டுக் கருவாடாக்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்று அவள் ஏற்கெனவே தீர்மானம் செய்து வைத்துக் கொண்டிருந்தாள். இந்தத் திட்டம், வியாபாரம் கூடைக்காரர்களுக்குப் போகாதவரைதான், நிறைவேறும்.

சக்கிக்கு ஒரு வழியும் தட்டுப்படவில்லே. 'பாப்போம்' என்று சொல்லி வைத்தாள் அவள். அநேகமாக அவர்கள் ஆசை ஈடேருது என்பது அவளுக்குத் தெரியும். பெரிய புகார் புறப்படுவதற்கான சூழ்நிலேதான் உருவாகிக் கொண்டிருந்தது.

நண்பகல் வேளே. குழந்தைகளும் வியாபாரிகளும் கடற்கரையைச் சூழ்ந்துகொண்டார்கள். பஞ்சமி சிறு கூடையொன்றை வைத்துக்கொண்டிருந்தாள். இவ்வாறு அவர்கள் அங்கு நின்றுகொண்டிருந்தபோது, எல்லாத் தோணிகளுக்கும் முன்ஞல் ஒரே ஒரு தோணி அலேக்கு அலே தாவியும், ஏறியிறங்கியும் வருவது தென்பட்டது. அந்தத் தோணி நிறையச் சரக்கு இருப்பதாகவும் பட்டது. பஞ்சமி பட்டென்று சொன்ஞள்:

"ஒரு துடுப்புத்தான் இருக்குதா?"

தோணிகள் வருவது ஓர் ஊர்வலம் போல் இருந்தது. மேலே கடற்காக்கைக் கூட்டம் கீழே தோணிகளின் அணிவகுப்பு. மகிழ்ச்சி பொங்கும் ஆரவாரம் கடற்கரையில் எழுந்தது.

முதன் முதலாக வந்துகொண்டிருந்த தோணியின் துடுப்பையொட்டிச் செம்பன்குஞ்சு நின்றுகொண்டிருந்தான். அவன் என்ன சும்மாவா நின்றுகொண்டிருக்கிறுன்! முன் புறம் பாய்வதும், உயரே எழுப்புவதும், துடுப்பால் தோணியைத் தூக்கி முன்புறம் தள்ளுவதுமாக இருக்கிறுன். சொல்லப் போனல் அவன் தோணிக்குள் இருப்பதாகவே படவில்லை. வானத்தில் பறந்து திரிவது போலத்தான் இருக்கிறது. துடுப்பு, சூன்ய வெளியில் அரைவட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கிறது. அவன் துடுப்புப் பிடிக்கிற போது தோணி ஓர் அலை வரிசையுடன் மோதி அதற்கு அடுத்த அலை வரிசையை அதன் போக்கில் விட்டுவிட்டு முன்னேறி வருகிறது. அது வருகிற கோலமே கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கிறது.

காளிக்குஞ்சு சொன்னுள்:

"ஆ! என்ன அழகா வருது தோணி!"

லட்சணங்கள் நன்ருகப் பொருந்திய தோணி என்று எல்லோருமே சொன்னுர்கள்.

"பேசிப் பேசிக் கண் போடாதிங்க!" என்ருள் சக்கி.

தோணி கரையருகே வந்துவிட்டது. செம்பன்குஞ்சு அடியோடு மாறிப்போய்விட்டான். என்ன ஆச்சரியம் இது! 'களை பிறந்து விட்டது' என்ருள் சக்கி. அவன் முகத்திற்குத் தான் என்ன களை! கடல் அன்னையின் குழந்தைக்கு அந்தக் களை இருக்குமாம்!

தோணி கரையருகே வந்து சேர்ந்து விட்டது. வேலையாட்கள் துடுப்புக்களை மடக்கி வைத்துவிட்டுக் கரைமீது குதித்துத் தோணியைக் கரையில் இழுத்துப் போட்டனர். தோணியைச் சுற்றிச் சிறுவர்கள் கூடி நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் மத்தியில் பஞ்சமியும் நின்றுகொண்டிருந்தாள்.

தோணியின் முன்பக்கம் நின்றுக்கொண்டிருந்த செம்பன்குஞ்சு மண்ணில் குதித்தான். அவன் உடம்பு ஒளிப்பிழம்பு போல் திகழ்ந்தது. சிறுவர்கள் எல்லோரும் 'ஓஹோ' என்று ஆரவாரம் செய்து கொண்டு நாற்புறமும் பாய்ந்தார்கள். பஞ்சமியோ நின்ற இடத்தில் நின்றுகொண்டிருந்தாள். அவள் எதற்கு முண்டியடிக்க வேண்டும்? செம்பன்குஞ்சு சத்தமிட்டு அலறினுன்:

"தோணியிலேருந்து விழுற மீனை ஒருத்தரும் பொறுக்கப் படாது."

பஞ்சமியை வெடுக்கென்று பிடித்துத் தள்ளினான் செம்பன்குஞ்சு. 'அய்யோ, அம்மா' என்று அலறியபடி தொலை தூரத்தில் சென்று தொம்மென்று அவள் விழுந்தாள். சக்கியும் கறுத்தம்மாவும் வாய்விட்டுக் கதறி அழுதனர். கூட்டத்திலிருந்து யாரோ ஒருவன் சொன்னான்:

"அடேயப்பா. பெரிய கல்லுளிமங்கனா இருக்கானே இவன்! இவன் என்ன பேயா, பிசாசா?"

செம்பன்குஞ்சுவைப் போலப் பஞ்சமியும் தன் மனத்தில் ஒரு கனவை எழுப்பிக்கொண்டிருந்தாள். விசேஷமாக ஒன்றுமில்லை.தோணியிலிருந்து சிதறும் குஞ்மீசுன்களைப் பொறுக்கிக் காயப்போட்டுச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். இதுதான் அவளுடைய ஆசை. ஒரு சமயம் இதுவும் மிகுந்த சம்பாத்தியத்தைத் தருகிற காரியமாக முடியலாம். தன் தகப்பனின் தோணியிலிருந்து சிதறும் மீன்களை உரிமையோடு பொறுக்கச் சென்றாள் அவள். செம்பன்குஞ்சு என்ன' பார்வையை இழந்து குருடாகிப் போனானா? இவ்வளவு தூரத்துக்குப் புத்தி பேதலித்துப் போய்விடுமா?

தோணியிலிருந்து சிதறுவது தண்ணீரில் பயிரான ஒரு பொருள்தானே? யாரும் விதைக்கவில்லை. யாரும் பேணிக் காக்கவில்லை. அதிலோர் அம்சமான, சிதறுண்டு மண்ணில் விழும் மீன்களைப் பொறுக்குவதற்கு, ஏழைச் சிறுவர்களுக்கு உரிமை உண்டு. கடற்கரையில் அதுதானே நியதி?

"அடேயப்பா, என்ன முரட்டுத்தனம்!" என்று அலறிய சக்கி, பஞ்சமியை வாரித் தழுவிக்கொண்டாள். கறுத்தம்மாவும் சக்கியும் பஞ்சமியின் நெஞ்சைத் தடவிக் கொடுத்தனர். உடம்பு வலியையும்விட மனவேதனைதான் அவளுக்குத் தாங்க முடியாத ஒன்றாக இருந்தது.

ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு வியாபாரிகள் தோணியைச் சூழ்ந்து கொண்டனர். முன் வரிசையில் பரீக்குட்டியும் நின்றுகொண்டிருந்தான். ஆனால், செம்பன்குஞ்சுவோ யாரையும் தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. அந்தப் பாவமே முகத்தில் இல்லை.

காதர் முதலாளி கேட்டான்.

"இண்ணைக்கு வியாபாரத்துக்கு என்ன மீன் தரப் போறே?"

குஞ்சுப்பெண்ணும், லட்சுமியும் வளைய வளைய ஓடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு மீன் வாங்கித் தரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த பஞ்சமி மண்ணில் மூர்ச்சை போட்டு விழுந்து கிடக்கிறாள். சக்கியும் அவள் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கிறாள்.

கூடை வியாபாரிகள் வியாபாரப் பேச்சில் ஈடுபட்டிருந்தனர்.

குஞ்சுப்பெண் தன்னுடன் வந்திருந்த பெண்களைப் பார்த்துச் சொன்னாள்:

"நாம்பளும் கேட்டுப் பார்க்கலாமே?"

நல்லபெண் பதில் சொன்னாள்:

"அந்தப் பிசாசுகிட்டேப் போயி என்னத்தைக் கேக்க முடியும்?"

மற்றத் தோணிகளும் ஒவ்வொன்றாய்க் கரையருகே வந்து கொண்டிருந்தன. அவை வந்து சேருவதற்குள் தனது வியாபாரத்தை முடித்துவிட வேண்டுமென்ற ஆசையில் துடித்தான் செம்பன்குஞ்சு.

பரீக்குட்டியும் கேட்டுப் பார்த்தான்:

"எனக்கு மீன் தாறியா?"

செம்பன்குஞ்சு பரீக்குட்டியைப் பார்த்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. அவன் கேட்டான்:

"கையிலே ரொக்கம் இருக்குதா, ரொக்கம்? எனக்குத் காசு வேணும். ஆமா."

இதற்குள் காதர் முதலாளி நூறு ரூபாய் நோட்டுக்களைச் செம்பன்குஞ்சுவின் கைக்குள் திணித்துவிட்டான்.

வியாபாரம் முடிந்துவிட்டது.

இப்போது பரீக்குட்டி மற்றத் தோணிகளை நோக்கி ஓடினான். எங்கும் வியாபாரம் முடிந்து விட்டிருந்தது. பஞ்சமியின் அழுகை சற்றுத் தணிந்தபோது, சோர்ந்த முகத்துடன் பரீக்குட்டி போவதைக் கறுத்தம்மா கவனித்தாள். பாவம்! அவன் கையில் ரொக்கம் இல்லை!

கறுத்தம்மா சக்கியிடம் சொன்னாள்:

"அம்மா, சின்ன முதலாளிக்கு மீன் கெடக்கலெ."

சக்கி பரீக்குட்டியைப் பார்த்துக் கேட்டாள்:

"வியாபாரத்துக்கு மீன் வேணும்னு நீ கேட்டுக் கிடலியா?"

"கேட்டேன்:"

"பின் என்ன?"

பரீக்குட்டி ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஒருவரும் பரீக் குட்டிக்கு மீன் கொடுக்கவில்லை. இந்த அளவு மத்திமீன் எந் நாளும் கரையடைந்தது இல்லை. சக்கிக்கு விஷயம் விளங்கி விட்டது. செம்பன்குஞ்சு மற்றொருவனாக உருமாறிப் போய் விட்டான். அவளே இதை நேரில் தெரிந்துகொண்டு விட்டாள்.

அவள் சொன்னாள்:

"மீனெக் கண்டாலே இல்லையோ, பேய்வெறி வந்து போச்சு."

"என் கையிலே கொஞ்ச ரொக்கம் இருந்தது. பாக்கிப் பணத்தைப் பின்னாலே கொடுக்கலாம்னு எண்ணிக்கிட்டிருந் தேன்."

"அதுதான் வியாபாரம் முடியலையோ?"

"இருக்கலாம்."

பரீக்குட்டி அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். ஆறுத லாக இரண்டு வார்த்தை சொல்லவேண்டுமென்ற துடிப்பு கறுத்தம்மாவுக்கு. ஆனால், அந்த இடத்தில் வாயைத் திறக்க முடியுமா? முன்னொரு சமயம் அவன் கேட்ட கேள்விக்கு இப் போது பதில் பிறந்துவிட்டது. அவள் சொன்ன பதில் பலித்து விட்டது! அப்போதும் அன்று சொன்ன வார்த்தைகள் அவள் செவியில் முழங்கின.

"தோணியும் வலையும் வந்தப்புறம் எனக்கு மீன் தருவீங் களா?"

"நல்ல விலை தந்தால் தருவோம்!"

காளிக்குஞ்சுவும், குஞ்சுப்பெண்ணும் வாயில் வந்தபடி வைதனர். கடைசியில் அவர்கள் கூடை வியாபாரயிடமிருந்து மீன் வாங்கிச் சென்றனர்.

செம்பன்குஞ்சு வேலையாட்களுக்குரிய பங்கைக் கொடுத்தான். வலையை கழுவிச் சுத்தம் செய்து மணலில் விரித்தான். பின் வீட்டை நோக்கி நடந்தான். அன்று அவன் மடி நிறையப் பணம் இருந்தது. அன்று அவன் வாழ்வில் புதிய ஒளி புகுந்தது புதிய பாதையில் அடியெடுத்து வைத்திருக்கிறான் அவன். அன்று பொழுது புலர்ந்ததிலிருந்து அதுவரையிலும் அவன் கடுமையாக உழைத்திருந்தான். ஆனாலும் சோர்வு படிந்த முகத்துடன் அவன் வீடு திரும்பவில்லை.

அவனுடைய வீடு ஒளியிழந்து கிடந்தது. கைநிறையப் பணத்தை அள்ளிக்கொண்டு இரு கரங்களையும் அவன் சக்கி முன் நீட்டினான். அதைப் பார்த்துச் சக்கி களிப்பு அடைந்து விடவில்லை.

"எதுக்கு? யாருக்கு இந்தப் பணம்னு கேக்கறேன்?"

"என்ன உளர்றே நீ?"

பஞ்சமியின் நெஞ்சைப் போய்ப் பாரு!"

விக்கி விக்கி அழுதுகொண்டிருந்த பஞ்சமியைக் கைகளில் ஏந்தி எடுத்துக்கொண்டான் அவன். அவளுடைய நெஞ்சில் பெரிது பெரிதாய்த் துடிப்புக்கள்!

அவன் கேட்டான்:

"எதுக்கம்மா நீ அங்கே வந்து நின்னுகிட்டிருந்தே?"

பஞ்சமி தனது அபிலாஷையை அவனிடம் சொன்னாள். அதைச் சொல்லி முடித்ததும், அவளிடம் அவன் கொண்டிருந்த அன்பு பன்மடங்காகப் பெருக்கெடுத்தது. உண்மையில் பணம் சேர்க்க அல்லவா திட்டம் போட்டிருக்கிறாள்? மறுநாளிலிருந்து, நாள்தோறும் அவளுக்குச் சிறிது மீன் கொடுப்பதாகச் செம்பன்குஞ்சு சொன்னான்.

சக்கி பரீக்குட்டியை பற்றியும் விசாரித்தாள்.

"இதென்ன மரியாதை? நாம தோணியும் வலையும் வாங்கியிருக்கோமே, இது யாராலெ முடிஞ்ச விஷயம்?"

செம்பன்குஞ்சுவுக்குத் தான் தவறு எதுவும் செய்துவிட்டதாகப் படவில்லை. சக்கியின் கேள்வியும் அவனுக்குப் புரியவில்லை.

"விஷயம் என்னான்னு சொல்லேன்?"

"அவனுக்கு மீன் கொடுத்துட்டா என்ன? குறைஞ்சா போகும்?"

"மீனெத் தூக்கி அவனுக்குக் கொடுத்துப்புட்டா, மத்த விஷயங்கள் எப்படிச் சமாளிக்க முடியும்? வேலையாட்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டாமா?"

செம்பன்குஞ்சு தொடர்ந்து சொன்னான்:

"அதொட, அவனுக்கு மீன் கொடுத்தா, இன்னோர் இடைஞ்சலும் இருக்குது. நாம அவனுக்குக் கொடுக்க வேண்டிய பணத்திலே கழிச்சிடச் சொல்லிடுவானே அவன்!"

"அப்பொ அவன் கடன் தந்ததுக்குத் தண்டனையா இது?"

கறுத்தம்மாவுக்குக் கோபம் பொங்கியது. அவள் சொன்னாள்:

"எப்படியோ அவன் கிட்டங்கியிலே ஒரு மீன்கூட இல்லாம ஆயிடிச்சு."

அன்று மாலை அச்சகுஞ்சுவின் வீட்டில், அவனுக்கும் அவன் மனைவிக்கும் சண்டை மூண்டது.

அவன் மனைவி கேட்டாள்:

"அவன் சின்ன வயசிலிருந்தே அருமைத் தோழன். கண்டிப்பா வேலைக்கும் கூப்பிடுவான்னு சொப்பனம் கண்டுகிட்டு இருந்தியே, இப்போ என்னாச்சு பாத்தியா?"

பதிலுக்கு அச்சகுஞ்சுவும் திருப்பிக் கேட்டான்:

"நீ சக்கிக்குப் பின்னாலே திரிஞ்சு பாத்தியே. அதுமட்டும் என்னாச்சாம்?"

அச்சகுஞ்சு தொடர்ந்து சொன்னான்:

"மனிசன் கையிலெ காசுபணம் சேந்து போச்சுன்னா, பழைய சங்கதியெல்லாம் ஒரேயடியா மறந்து போயுடுறான், பாத்துக்க."

நல்லபெண்ணும் அதை ஆமோதித்தாள். அச்சகுஞ்சு தனது பழைய தீர்மானத்தை மீண்டுமொருமுறை வாய்விட்டுச் சொன்னான்:

"ம். பார்ப்போம். எனக்கும் தோணியும் வலையும் சம்பாதிக்க முடியுமான்னு ஒரு கை பாத்துடறேன்."

நல்ல பெண் இந்தப் பேச்சில் அவ்வளவாக நம்பிக்கை வைக்கவில்லை.

# 6

செம்பன்குஞ்சு யோகசாலிதான். அவனுக்குக் கிடைப்பது போல் வேறு ஒருவருக்கும் கிடைப்பதில்லை. எப்பொழுதுமே பிறருக்குக் கிடைப்பதில் இருமடங்கு அதிகமாகவே அவனுக்குக் கிடைத்து வந்தது. வலையை வீசி விட்டான் என்ருல் ஏமாந்த நாள் கிடையாது. ஆச்சரியந்தானே!

இரவு அவன் பணத்தை எண்ணிக் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறபோது, சக்கி சொல்வாள்:

"இனிமே எப்படியாவது பெண்ணைக் கட்டிக் கொடுத்தனுப்பணும்."

செம்பன்குஞ்சு இதற்குச் சரிவரப் பதில் சொல்ல மாட்டான். சக்கி மீண்டும் கேட்பாள்:

"என்னதான் மனசிலெ நெனைச்சுக்கிட்டு இருக்கயாம்? வீட்டுக்குள்ளே இப்படியே இருந்து உருக்குலஞ்சு போனாப் போதுமா?"

அதற்கும் மௌனம் சாதிப்பான் செம்பன்குஞ்சு. பணம் சேர்க்கிற காரியத்தை விடவும் அதை முக்கியமானதாக அவன் எண்ணவில்லையோ என்னவோ! அல்லது நினைத்த மாத்திரத்தில் நடத்திவிடலாமென்ற தைரியத்திலிருக்கிருனே!

ஒரு தோணிக்குத் தேவையான துணைச் சாமான்கள் எல்லாவற்றையும் செம்பன்குஞ்சு சேர்த்து விட்டான். இப்போது எந்தக்காலத்திலும், பருவநிலை எப்படி இருந்தாலும், அவனுல் கடலுக்குச் செல்ல முடியும். அவனிடம் எல்லாச் சாமான்களும் சேர்ந்து விட்டன.

பரீக்குட்டியின் கிட்டங்கி இழுத்துப் பூட்ட வேண்டிய நிலைமையை அடைந்து விட்டது. அங்கு ஒரு வேலையும் நடைபெறவில்லை. அவன் கையில் பணம் இல்லை. அவனுடைய 'வாப்பா' வந்து, அவனைக் கடுமையாகக் கண்டித்துவிட்டுச் சென்றார். இருந்த பணத்தையெல்லாம் கடற்கரை மரக்காத்தி கையில் தூக்கிக் கொடுத்துவிட்டதாகக் குற்றம் சாட்டவும் செய்தார். அவனுடைய தகப்பனார் அப்துல்லா முதலாளி இவ்வாறு திட்டுவதை வேலி அருகில் நின்றபடி கறுத்தம்மா கேட்டுக்கொண்டிருந்தாள்.

பரீக்குட்டியின் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று கறுத்தம்மா சக்கியை வற்புறுத்தினாள். அப்துல்லா முதலாளி பரீக்குட்டியை ஏசியதையும் அவள் சக்கியிடம் சொன்னாள். இதைவிட அவமானகரமான ஒரு விஷயம் உண்டா? பரீக்குட்டி என்னதான் செய்வான்? மூலதனத்தைத் தூக்கி மரக்காத்தி கையில் கொடுத்து விட்டான் என்பது முற்றிலும் உண்மைதானே?

"கொஞ்சம் பொறுத்துக்க. அந்தப் பணத்தைக் கொடுத்துப்புடலாம்" என்பதுதான் செம்பன்குஞ்சுவின் பல்லவி.

செம்பன்குஞ்சு சில சமயம் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே கோட்டைகள் கட்டுவான்! மேலும் இரு தோணிகளும் வலையும் சம்பாதிக்க வேண்டுமாம். அதோடு ஒரு மனையும் வீடும் கூடச் சொந்தமாக இருக்க வேண்டுமாம். ரொக்கப் பணமும் மடி நிறைய இருக்க வேண்டும்.

"இப்போ இப்படியே எலும்பு முறிய உழைக்கணும் பாத்துக்க. அப்புறம் பள்ளிக்குன்றத்துக்காரன் மாதிரி கன குஷியா அனுபவிக்கணும்."

சக்கியின் உடம்பிலும் சதையேறி வாளிப்பாக இருக்க வேண்டுமென்பது அவனுடைய அந்தரங்க ஆசை.

சக்கி சொன்னாள்:

"பூ! இந்த வயசுக்கு மேலேயா நான் சதைபோட்டு குளு குளுனு இருக்கப் போறேன்!"

"அப்படி யொண்ணுமில்லெ. உடம்பு நல்லா வரும். பாரு"

இன்ப அனுபவங்களில் ஈடுபட்டுக் களிப்பு அடையவேண்டும் என்று செம்பன்குஞ்சு பேசி, சக்கி அதுவரையிலும் கேட்டதே இல்லே. இன்ப உலகத்தைப் பற்றிய கற்பனே ஒன்று அவன் உள்ளத்தில் உருவாகிக் கொண்டிருப்பதாகவும் சக்கிக்குப் பட்டது. அவள் கேட்டாள்:

''என்ன இது? இந்த வயசு காலத்திலே மனசு எதை எதையோ மேஞ்சிகிட்டு வருதே. யாரு சொல்லித் தந்த பாடம் இது? எந்தப் பள்ளிக்கூடத்திலெ படிச்சயாம் இதெ?''

''இந்தாப் பாரு, வயசு காலத்திலேயும் ஆனந்தமா அனுபவிச்சுக்கிட்டு இருக்கலாம். அந்தப் பள்ளிக்குன்றத்து முதலாளியைப் போய்ப் பாரு. பய கனகுஷியா அனுபவிச்சுக்கிட்டு இருக்கான், இண்ணேக்கும். பார்ககணுமா உனக்கு?''

செம்பன்குஞ்சு தவருன வழிகளில் தனது சிந்தனேயைச் செலுத்துகிருன் என்ற எண்ணம் சக்கிக்கு ஏற்பட்டது. அவனேக் கண்டிப்பதுபோல் அவள் பார்த்தாள். வயசு காலத்தில் உடலின்பத்தில் மனத்தைச் செலுத்துவது தவருன காரியம் தானே? செம்பன்குஞ்சு சொன்னுன்:

''உனக்கு ஒரு விஷயம் தெரியணுமா? இந்தாப் பாரு.அந்த பொம்புளேக்குக் கிட்டத்தட்ட உன் வயசு இருக்கும். இண்ணேக்கும் என்ன அலங்காரம் பண்ணிக்கிடரு தெரியுமா அவ? தலேயைச் சீவி மினுக்கி, பொட்டும் வச்சுக்கிடரு. இதுக்கு மேலே உதட்டிலும் எதையோ தேச்சு ஒரே சிவப்பாக்கிப்புடரு. பாக்கிறதுக்கு தங்கக் கட்டி மாதிரி இருக்கா. அவங்க, பெண்சாதியும் புருஷனும் சின்னக் குழந்தைக போலத்தான் பழகிக்கிடுவாங்க.''

சக்கி கேட்டாள்:

''அப்போ நானும் சின்னப் பொண்ணு மாதிரி அலங்காரம் பண்ணிகிட்டுத் திரியணும்னு சொல்றியா?''

''இருந்தா என்னுன்னு கேக்கறேன்?''

''சீ! வெக்கக் கேடு!''

''அதிலென்ன வெக்கம்?''

''ம்...ஹூம். என்னுலே முடியாது.''

வெட்கம் மேலிட இதைச் சொன்னுள் சக்கி. வலேக்காரன் கண்டங்கோரனின் வாழ்க்கையைப் பற்றி மீண்டும் சவிஸ்

தாரமாகச் சொல்ல ஆரம்பித்தான் செம்பன்குஞ்சு. அது போல் அருமையான உணவை அவன் உண்டதே இல்லையாம். அங்கு ஒவ்வொரு கறியும் தனி ருசியுடன் இருந்ததாம். அவர்கள் சின்னக் குழந்தைகள் போல் விளையாடிக் கொள்கிறார்களாம்.

"இந்தாப் பாரு, இன்னொரு விஷயம். பாத்து வெக்கப் பட்டும் போனேன் நான். ஒருநாள் அவங்க வீட்டுக்குள்ளே போறேன். சின்னக் குழந்தை மாதிரி ரெண்டு பேரும் கட்டி யணைச்சுக்கிட்டு நிக்கறாங்களே பாக்கணும்."

"சீ! வெக்கக்கேடு!" என்று கத்தினாள் சக்கி. செம்பன் குஞ்சு கேட்டான்:

"என்ன வெக்கம் இதிலே? அவங்க ரெண்டு பேரும் சின்னக் குழந்தை போலத்தானே? ஒரே விளையாட்டும்......சிரிப்பும்...... கொம்மாளமும்......"

"குழந்தைகள் இல்லையோ அவங்களுக்கு?"

"ஒரு பயல்தான் இருக்கான்."

செம்பன்குஞ்சு சக்கியைப் பார்த்துச் சொன்னான்:

"உன் உடம்பிலும் பாப்பிக்குஞ்சு மாதிரி சதை போட வெச்சு, நாம்ப ரெண்டு பேரும் கனகுஷியா குழந்தைகள் மாதிரி அனுபவிச்சு விளையாடணும், பாத்துக்க."

சக்கிக்கு இப்போது நிஜமாகவே சபலம் தட்டிற்று. தழுவி முத்தமிட்டுக் கொள்ள உள்ளூர அவளுக்கும் ஆசைதான். ஆனால், அந்த எண்ணத்தை அவள் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

"முதல்லெ நீ உன் உடம்பெத் தேத்தி வைச்சுக்க."

செம்பன்குஞ்சு சொன்னான்:

"உன் உடம்பை நான் மதமதன்னு ஆக்கிடுப்புடுவேன் பாரு. நான் சொன்னதெல்லாம் அப்புறம்தான்."

செம்பன்குஞ்சு சிரித்தான். தான் அனுபவிக்க விருக்கும் இன்பக் கனவுகளையெல்லாம் அவன் மனக்கண்ணில் கண்டு கொண்டிருந்தான்.

சக்கி அவனைக் கண்டிக்கும் குரலில் சொன்னாள்:

"அந்தப் பொம்புளையைப் பாத்து புத்தி தடுமாறிப் போன மாதிரி இருக்கே."

"நீ சொல்றது நெசம்தான். யார் அவளைப் பார்த்தாலும் மனசைப் பறி கொடுத்திடுவாங்க."

சிறிது நேரத்திற்குப்பின் செம்பன்குஞ்சு சொன்னான்:

"அவன் அதிருஷ்டக்காரன்!"

"கடல்தாய் இரங்கட்டும். அவள் கருணையால் வீடும், மனையும் சொந்தமானதும், வீட்டோடு உட்கார்ந்துகொண்டாலும் வயிறு காயாது என்ற அந்தஸ்தை எட்டி விட்டோமென்றால், நாமும் சின்னக் குழந்தைபோல் கூடிக் களித்து ஆனந்தமாக வாழலாம்' என்று சக்கியும் சொன்னாள். அந்த நிலைமை ஏற்பட்டு விட்டதென்றால், பெண்ணின் கல்யாணத்தையும் முடித்து விடலாம். சொல்லப் போனால் செம்பன் குஞ்சுவின் திட்டமும் அதுதான். ஆனால், தான் முன்போல் அழகாக இல்லையென்று குறைபட்டுக்கொண்டாள் சக்கி. பணம் சேர்ந்து விட்டதென்றால் அழகு தானாக வந்தடையும் என்றான் செம்பன்குஞ்சு.

"அதுக்கு முன்னாலெ நான் மண்டையப் போட்டுட்டேன்னா......?"

"சீ! போ! வாய்க்கு வந்தபடியெல்லாம் உளறாதே!"

திடீரென்று ஒருநாள் கடலின் நிறம் மாறிவிட்டது. தண்ணீர் ஒரே சிவப்பு நிறம். 'போளை' என்று அவர்கள் அதைக் குறிப்பிட்டார்கள். கடல்தாய் ருதுவாகிவிட்டாள் என்பது தான் அவர்கள் நம்பிக்கை. அதைத் தொடர்ந்து சில நாட்கள் மீன் அகப்படவே இல்லை. இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன. வீட்டோடு சோம்பி உட்கார்ந்து கொண்டிருக்க முடியவில்லை செம்பன்குஞ்சுவால். தூரக் கடலுக்குச் சென்று தூண்டி போட்டுப் பார்த்தால் என்ன என்று அவன் எண்ணினான். ஒரு வேளை மீன் அகப்பட்டாலும் அகப்படலாம்.

வேலையாட்களை அழைத்து அவர்களுடன் கலந்து ஆலோசனை செய்தான். அவர்களில் யாராலும் சட்டென்று ஒரு பதில் சொல்ல முடியவில்லை. அபூர்வமாக ஆழ்கடலுக்கு அவர்களும் மீன் பிடிக்கச் சென்றதுண்டு. இதுபோல் கடல்நீர் ரத்த வெள்ளமாகக் காட்சி தரும் நாட்களில் அவர்கள் சென்றதில்லை.

செம்பன்குஞ்சு கண்டிப்பான குரலில் சொன்னான்:

"ஒண்ணு சொல்லிப்புடறேன். நீங்க மட்டும் வரத் தயாரா? இல்லேன்னு பட்டினி கெடந்துக் கிடணும். பற்று வழியிலெ பணம் தரதுக்கு நான் தயாரா இல்லெ. அதெ மட்டும் தெரிஞ்சிக்கிடுங்க."

சமயாசமயங்களில் பசியும் பட்டினியுமாகப் பல நாட்கள் தள்ள நேருவதுண்டு. அப்போது ஏற்கெனவே கையிலிருக்கும் காசையும் அவர்கள் செலவிட்டிருப்பார்கள். சோதனையாகத் தோணியைக் கடலில் செலுத்திப் பார்த்தவர்களுமுண்டு. குஞ்சுமீன் கூட அகப்படுவதில்லை. இது போன்ற நாட்களில் வேலையாட்கள் தோணிச் சொந்தக்கரரர்களை நச்சரித்து மிகுந்த தொல்லை கொடுப்பார்கள். ஆனால், அவர்கள் கையும் அப்போது வறண்டுதான் இருக்கும்.

அக்கம் பக்கத்தில் வாழ்ந்திருந்தோர் எல்லோரும் பட்டினி கிடந்தனர். தோணியும் வலையும் வாங்குவதற்குத் திட்டம் போட்டிருந்த அச்சகுஞ்சு, தர்மசங்கட நிலைக்கு ஆட்பட்டு அலைக்கழிந்து போனான். அதோடு அவன் குழந்தை குட்டிக் காரனும்கூட.

ஒருநாள் அன்றைய பொழுதைக் கழிக்க ஒரு வழியும் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. பழங் கூடைகளை உதறியதில் கிடைத்த மீனை விற்று, அதற்கு முன்தினத்தை கிழங்கு வாங் கித் தின்று கழித்தான். இன்றோ அதற்கும் வழியில்லை. கணவ னும் மனைவியும் சண்டை போட்டுக்கொண்டனர். கீழ்ப்படி யாமல் பேசிக்கொண்டிருந்த மனைவியைக் கோபவெறியால் அடித்துவிட்டு, அவன் வீட்டைவிட்டு வெளியேறினான். குழந் தைகளின் வயிற்றுக்குப் பதில் சொல்லவேண்டியவள் வீட்டில் இருப்பவள்தானே? அவளால் வெளியேறி செல்ல முடியுமா?

நல்லபெண் அச்சகுஞ்வை மனத்திற்குள் நன்றாகத் திட்டி னாள்.

"இந்தப் பாரு. அவன் பாட்டுக்கு இறங்கிப் போறான், ஓட்டலுக்குப் போயி வயத்தை ரொப்பிக்கிட!"

அவள் திட்டுவது காதில் விழுந்தும், அதை அலட்சியம் செய்துவிட்டு, தன் போக்கில் அச்சகுஞ்சு போய்க்கொண் டிருந்தான். ஒருசமயம் அன்றைய பிரச்னைக்கு ஒரு வழி காணத்தான் அவன் சென்றானோ என்னவோ!

நல்லபெண் சாயுங்காலம் வரையிலும் காத்துக்கொண்டிருந்தாள். கடைசியில் வீட்டிலிருந்த வெண்கலக் கும்பாவை எடுத்துக்கொண்டு சக்கியிடம் சென்ருள் அவள். அதைப் பணயமாக வைத்துக்கொண்டு ஏதாவது தரவேண்டும், அல்லது ஒரு ரூபாய் தந்து விலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சக்கியிடம் கேட்டுக்கொண்டாள் நல்லபெண். சக்கி அதைப் பணயமாக வைத்துக்கொண்டு ஒரு ரூபாய் கொடுத்து விட்டாள். இந்தச் செய்தி காதில் விழுந்ததோ இல்லையோ, லட்சுமி தன் குழந்தையின் காதில் கிடந்த கம்மலைக் கழற்றிக் கொண்டு வந்து சேர்ந்தாள். இப்படி ஒவ்வொருவராக வந்ததும் சக்கிக்கு மிகுந்த தொல்லையாய்ப் போயிற்று. வருகிறவர்கள் எல்லோருக்கும் கொடுக்கவும் அவளிடம் பணம் இருக்கவில்லை. காளிக்குஞ்சு அதற்கு முந்தின வருடம் மண்ணூர் சாலையிலிருந்து வாங்கிய உருளியைத் தூக்கிக்கொண்டு சென்ருள்.

"நீங்க எல்லோரும் இப்படிப் படையா திரண்டு வந்தீங்கன்னு, நான் என்ன செய்றது சொல்லுங்க! எனக்கு என்ன புதையலா அகப்படுது?"

குழந்தைகள் பசி தாங்காமல் துடிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாமல்தான் காளிக்குஞ்சு சக்கியிடம் வந்தாள். முன்பின் பார்த்திராததுபோல் சக்கி பேசுவாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. சக்கி தொடர்ந்து சொன்னுள்:

"எல்லாருக்கும் செம்பன்குஞ்சு பணம் தரணும். சமயம் வாச்சுதின்னு குழிபறிக்கவும் தயாரா நிப்பீங்க."

காளிக்குஞ்சு கேட்டாள்:

"நான் உனக்கு என்ன துரோகம் செய்துபுட்டேன்?"

"ஒண்ணும் செய்துடலெ. இப்போ என் கையிலே காசு இல்லே. அவ்வளவுதான்."

"நீ என்னமோ முன்னெ பின்னே பாக்காதது மாதிரிப் பேசுறியே."

"என் நிலைமையை நான் சொல்லுறேன்னு வெச்சுக் கயேன்."

காளிக்குஞ்சுவுக்குக் கோபம் வந்துவிட்டது:

"இப்பத்தானே நாலு காசெ கண்ணுலெ நீ பாக்கறே?"

"நீ என்னமோ குத்திப் பேசறியே. என்னுன்னு கேக்கறேன்?''

இதைத் தொடர்ந்து அங்கே பெரும் சொற்போர் நிகழ்ந்தது. கறுத்தம்மா குறுக்கிட்டாள். உள்ளூரப் பயம்தான் அவளுக்கு. பேச்சு வளர்ந்து விட்டதென்ருல் எங்கே தன்னுடைய விவகாரம் அடிபட்டு விடுமோ என்ற பீதி. கறுத்தம்மா காளிக்குஞ்சுவின் காலைப் பிடித்துக் கெஞ்சினுள். நல்ல பெண் உருளியை எடுத்துக்கொண்டு போய்ச் சேர்ந்தாள்.

அவள் சென்று மறைந்ததும் கறுத்தம்மா சக்கியைக் கண்டிக்க ஆரம்பித்தாள்:

"என்னம்மா நீ, வாய்க்கு வந்ததெல்லாம் பேசிக்கிட்டு இருக்கே?''

"வேறெ என்னதான் செய்யணுமிங்கறே நீ?''

"இல்லேன்னுலும், தோணியும் வலையும் வந்தப்புறம் அப்பாவும் நீயும் ஆளே மாறித்தான் போயிட்டீங்க.''

அன்றிரவு செம்பன்குஞ்சு சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, சக்கி அவனிடம் ஊர்க்கதைகளையெல்லாம் அளந்து கொண்டிருந்தாள். ஊர்க்கதை என்ருல் வேறு என்ன? பட்டினியின் கதை; பசியின் கதை: இவைதாம். ஒரு வீட்டிலாவது அன்று அடுப்புப் புகையவில்லை.

செம்பன்குஞ்சு சொன்னுன்:

"நல்லாக் கிடக்கட்டும். பட்டினி கிடந்து அழிஞ்சு போகட்டும்.''

கறுத்தம்மா திடுக்கிட்டுப் போனுள். செம்பன்குஞ்சு தொடர்ந்து சொன்னுன்:

"பசியிலெ நல்லாத் துடிக்கட்டும். நமக்கு நல்லதுதான் அது.''

என்ன விஷயம் என்பதே கறுத்தம்மாவுக்கும் புரியவில்லை. தன் தகப்பனை அவள் மனப்பூர்வமாக வெறுத்தாள்.

சக்கி கேட்டாள்:

"என்ன பேச்சு இது?''

"அழிஞ்சு போட்டுமின்னு சொல்றேன். கையிலே நாலு காசு சேர்ந்து போச்சுன்னு கண் தலை தெரியாமெ ஆணும் பெண்ணும் துள்ளுறுங்க. அப்போ ஆலப்புழைக்குப் போய்த்

தின்னுத்தான் சோறு வயத்திலெ இறங்கும். மரக்காத்திக்கு அன்னுடம் உடுக்கச் சேலே இல்லேன்னுலும், அப்போ வாங்கறது ஜரிகை அங்கவஸ்திரம்தான். அப்போ தரையிலே கால் பாவாது. இப்போ கண் விழி பிதுங்குது.''

அப்போதும் அவன் சொன்ன விஷயம் கறுத்தம்மாவுக்குப் புரியவில்லே. சக்கி பழமையான நம்பிக்கை ஒன்றை நினைவுறுத்தினுள்.

''மரக்கான் சேத்து வைக்கப்படாது.''

''அப்படீன்னு வேண்டாம். இப்போ நல்லாத் திண்டா டட்டும். இப்பொ சொன்னியே, அதை உன் மகளுக்கும் சொல்லிக் குடுத்துப்புடு. அவளும் பட்டினி கிடக்கட்டும்.''

சக்கி இலேசாக முறுவலித்துவிட்டுச் சொன்னுள்:

''அடேயப்பா, வந்துப்புட்டாரு, மகா முன்யோசனேக் காரரு!''

''ஆமாம். நான் கொஞ்சம் எட்டி யோசிச்சுப் பாக்கிறவன் தான். என் கையிலெ இண்ணேக்குக் காசு இருக்குது. தெரிஞ் சுக்கோ.''

''அதைப்பத்தி ஒண்ணும் அளக்கவேண்டாம். அந்தச் சாயிபு பையன் கிட்டங்கியை இழுத்துப் பூட்டியாச்சு. இங்கே பொண்ணு வீட்டை அடைச்சுக்கிட்டுக் குதிரை மாதிரி நிக்கிறது.''

'அவனும் கஷ்டப்பட வேண்டியவன்தான் இல்லேயா அப்பா' என்று கேட்க எண்ணினுள் கறுத்தம்மா.

கடற்கரையைச் சோதித்துக் கொண்டிருந்த அந்தப் பஞ்ச காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு, மிகவும் சல்லிசான விலேக்கு வெண்கலப் பாத்திரங்களும், நகை நட்டுகளும் வாங்கி வைத்துக்கொண்டாள் சக்கி. பெண்ணேக் கட்டிக்கொடுக்கிற காலத்தில் அந்த அளவுக்குச் செலவு மிஞ்சும்! ஒரு நாள் நல்ல கட்டில் ஒன்று வந்து சேர்ந்தது. கணவன் வீடு திரும்பியபோது வெட்க உணர்ச்சி மேலிடச் சக்கி சிரித்துக்கொண்டே சொன்னுள்:

''இந்தாப் பாரு. நான் ஒரு கட்டில் வாங்கியிருக்கேன்.''

''எதுக்கு இதெ வாங்கினெ?''

''கட்டில் எதுக்கு? படுத்துக்கிடத்தான்.''

"யாரு படுக்க?"

"பொண்ணும் மாப்பிள்ளையும் படுக்க."

"அதுக்கா?"

"பின்னே யாருக்குன்னு நெனச்சே? கிழவனுக்கும் கிழவிக்குமின்னு எண்ணிக்கிட்டியா?"

அதை ஆமோதித்த பாவனையில் செம்பன்குஞ்சு சொன்னான்:

"அப்படின்னா சரி. ஆனா நான் ஒரு மெத்தையும் தைக்கப் போறேன். கண்டங்கோரன் வீட்டிலே பாத்த மாதிரி அழகா ஒரு மெத்தெ."

சக்கி சொன்னாள்:

"அப்பொ அந்த மெத்தையிலே படுத்துக்கிட, அந்த மெத்தைக்கு ஏத்தாப்ல ஒரு பொண்ணும் வேணும்னு சொல்லு."

"அந்த மாதிரி ஆக்கிப்புடுவேன் உன்னை."

இதை விடவும் ஆழமான மற்றோர் ஆசை அவனுடைய மனத்தில் தோன்றியது. வாழ்க்கையை நன்றாக அனுபவித்துக் களிப்படைய வேண்டும் என்ற சபலத்தின் ஒரு அம்சம்தானே அதுவும்? மேலும் ஒரு தோணி வாங்கவேண்டும். கையிலிருந்த பணமெல்லாம் சாமான்களாக உருமாறி விட்டன. எனினும், ஒரு தோணி வாங்குவது என்பது ஏதோ கைக்கு எட்டாத காரியமாக அவனுக்குப் படவில்லை.

ஒருநாள் காலையில் செம்பன்குஞ்சு கண்விழித்தபோது அவன் முன்னால் வலைக்காரன் ராமன்குஞ்சு உட்கார்ந்திருந்தான். ராமன்குஞ்சு அந்தத் துறையைச் சேர்ந்த ஒரு வலைக்காரன். அவனிடம் இரு தோணிகள் இருந்தன.

ஏதோ கோர்ட் விவகாரத்தில் தோல்வியடைந்து விட்டதால், கையிலிருந்த பணமெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்களுக்குப் போய்விட்டது. செம்பன்குஞ்சுகூட ஒரு காலத்தில் அவன் கீழ் வேலை பார்த்தவன்தான்.

ராமன்குஞ்சுவுக்கு அவசரமாகக் கொஞ்சம் பணம் தேவை. அவன்கீழ் வேலை பார்த்து வந்தவர்களுக்குப் பற்று வழியில் பணம் கொடுக்க எண்ணினான். அவுசேப்பிவிடம் தான் அவன் வாடிக்கையாகக் கடன் வாங்கிக்கொண்டிருந்தான்.

அவனிடம் முன் பாக்கி ஏகமாக ஏறியிருந்தது. மேலும் கேட்கத் தயக்கம். ராமன் குஞ்சு சொன்னான்:

"காலம் காலமா நம்மை அண்டி வாழறவங்க இண்ணைக்குப் பட்டினி கிடந்து சாகறுங்க. கடல் வேலேயும் இல்லே. இதைப் பார்த்துக்கிட்டு எப்படிச் சும்மா இருக்க முடியும்?"

செம்பன்குஞ்சு அதற்கு ஆமாம் போட்டுப் பேசினான்:

"வாஸ்தவம்தான். உங்க அந்தஸ்துக்கு ஏத்த விஷயமா. இது?"

செம்பன்குஞ்சு சிறிதும் தயக்கமின்றிக் கடன் தருவதாக ஒப்புக் கொண்டான்.

"எவ்வளவு ரூபா வேணும்?"

"நூத்தம்பது போதும்."

பணத்தை எண்ணிக் கொடுத்தான் செம்பன்குஞ்சு.

"நீ வேலேயாட்களுக்குப் பற்று வழியில் பணம் கொடுக்கறியா?"

செம்பன்குஞ்சு தலேயைச் சொறிந்துகொண்டே சொன்னான்:

"நான் எப்படிக் கொடுக்க முடியும்? நானும் அவங்களே மாதிரி ஒரு வேலேக்காரன்தானே? அணிப் பிள்ளேக்கு ஆனே மாதிரி வாயைப் பிளக்க முடியுமா?"

ராமன்குஞ்சு சிரித்தான். செம்பன்குஞ்சு ஏற்கெனவே சொன்னதை மீண்டும் ஒருமுறை விளக்கமாகச் சொன்னான்.

ராமன்குஞ்சுவின் தலே மறைந்ததும் செம்பன்குஞ்சு சக்கி முன்னால் போய் நின்றுகொண்டு பைத்தியம்போல் கடகடவென்று சிரித்தான். வயிறு கிழிந்துவிடும் போருந்தது. அவனுக்கு இப்படிச் சந்தோஷம் பொங்கியதைச் சக்கி கண்டதே இல்லே.

சக்கி கேட்டாள்:

"இதென்னது? பைத்தியமா பிடிச்சிருக்குது?"

"உனக்கு என்னடி தெரியும் கழுதே! அவனுடைய சீனித் தோணி இருக்குதே, அது இன்னும் ஆறு மாசத்திலே என் கைக்கு வந்திடும் பாரு!"

தொடர்ந்து அவன் சொன்னான்:

"காசு கையிலே இருந்தா இதுதான் சௌகரியம் பாத்துக்க."

செம்பன்குஞ்சுவின் தோணிக்காரர்களும் பணம் கேட்டு அவனை நச்சரித்துக்கொண்டுதா னிருந்தார்கள்.

செம்பன்குஞ்சு கேட்டான்:

"இந்தா பாருங்க, நீங்க சோலி பாக்கத் தயாரா இருக்கீங்களா?"

அவர்கள் தலையசைத்தனர்.

"அப்படீன்னு வாங்க. தூரக் கடலுக்குப் போய்த் தூண்டில் போட்டுப் பார்ப்போம்."

"அதென்னமா முடியும்? வேலைகெட்ட வேளையில் தூரக் கடலுக்குப் போக முடியுமா?"

செம்பன்குஞ்சு மற்றுமொரு தந்திரத்தைப் பிரயோகித்தான். அவர்கள் வராதவரை வேறு சிலரை அழைத்துச் செல்வதாகப் பயமுறுத்தினான். அதோடு தொடர்ந்து அவர்களைத் தான் வேலையில் அமர்த்திக்கொள்ளப் போவதாகவும் அவன் சொன்னான்.

"ப ~ த்தைக் கொட்டித் தோணி வாங்கியிருக்கேன். மத்த சாமான்களும் வாங்கி வெச்சுப்புட்டேன். இம்புட்டும் செஞ்சுப்புட்டு குந்தியிருந்து தின்னவா! உடம்பிலே பிடிச்சுடுமே?"

இரண்டு மூன்று நாட்கள் சென்றன. ஒருநாள் காலைப் பொழுது. செம்பன்குஞ்சு துடுப்பைப் பிடித்துத் தனது தோணியை மேற்குத் திசையில் செலுத்திக் கொண்டிருந்தான். ஆழ்கடல் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது தோணி. யாரோ சொன்ன பிறகுதான் சக்கிக்கும் கறுத்தம்மாவுக்கும் இந்தச் செய்தி தெரிய வந்தது. பதின்மூன்று குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும், குழந்தைகளும் தெய்வத்தின் திருநாமங்களை அரற்றியவாறு கடற்கரையில் வந்து நின்றுகொண்டனர். பெண்கள் அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டது போல் துடித்துக்கொண்டிருந்தார்கள். வயோதிகர்கள் கடலைப் பார்த்துவிட்டு, கடல் கொந்தளிக்கிறது என்று கூறினர். அதனால் ஆழக்கடலில் சுழிப்பு மிகக் கடுமையாக இருக்குமாம்!

பொழுது சாய்ந்தபின்கூடத் தோணிகள் திரும்பி வந்து சேரவில்லை. கடற்கரையில் ஒரே கூப்பாடு; ஒரே அழுகை. இருள் சூழ்ந்ததும் துறைவாசிகள் அத்தனை பேரும் கரையில் வந்து கூடிவிட்டனர். அத்தனை பேரும் மேற்குத் திசையைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தனர். ஒருவராலும் அங்கிருந்து பார்வையை அகற்ற முடியவில்லை.

அன்று வானத்தை மேகக்கூட்டம் மறைத்திருக்கவில்லை. புயற்காற்று வீசவில்லை. வானத்தில் ஆங்காங்கு நட்சத்திரங்கள் பளிச்சிட்டன. கடல் அமைதியாகவே இருந்தது. தூரத் தொலையில் கரும்புள்ளிகள் கண்ணுக்குப் புலப்படுவதுபோல் ஒரு சிலருக்குப் பிரமை தட்டிற்று. அது தோணியாகவும் இருக்கலாமல்லவா?

தோணிக்காரன் கொச்சானுடைய தாய், சக்கி முன்னால் வந்து நின்று, நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுது புலம்பினாள். அவளுடைய ஆண் குழந்தைக்கு உயிர்ப்பிச்சைத் தரவேண்டுமாம்! தோணிக்காரன் வாவாவின் மனைவி யாரையும் பழிக்கவில்லை. கண்ணீரை மளமளவென்று சொரிந்துகொண்டிருந்தாள் அவள். கடற்கரை சோகத்தில் ஆழ்ந்துவிட்டது.

நடுநிசியில் திடீரென்று ஓர் ஆரவாரம் எழுந்தது. "தோணி வருது!" என்று யாரோ உரக்கக் கத்தினார்கள். வாஸ்தவம்தான். பறவை பறப்பதுபோல் அதிவேகமாக வந்து கொண்டிருந்தது தோணி.

தோணியில் ஒரு பெரிய சுறுமீன் வந்திருந்தது. இரண்டு அகப்பட்டதாம். இழுத்துக்கொண்டுவர முடியாமல் போகவே ஒன்றைக் கத்தரித்து விட்டுவிட்டனராம்.

சுறுமீனைத் துண்டு துண்டாக வெட்டி வியாபாரத்துக்குச் செல்கிற பெண்களுக்குக் கொடுத்தான் செம்பன்குஞ்சு. விற்றுக் காசு தந்தால் போதும் என்றும் அவன் சொன்னான். காளிக்குஞ்சுவுக்கும், லட்சுமிக்கும், மற்றப் பெண்களுக்கும் மீன் கிடைத்தது. அன்று இரவு பல வீடுகளில் அடுப்பு எரிந்தது.

இரண்டு நாட்கள் சென்றன. மீண்டும் தூண்டில் போட ஆழ்கடலுக்குச் சென்றான் செம்பன்குஞ்சு. அன்றும் அவன் வெற்றிக் களிப்புடன் திரும்பி வந்து சேர்ந்தான். கடல் வறண்டு கிடந்த அந்த நாட்களிலும், செம்பன்குஞ்சுவின்

கையில் காசு குலுங்கிற்று. கடல் நீரைப் பார்த்து ஹேஷ்யங் கள் சொன்னவர்கள் பேச்சும் வெறும் கதையாய் முடிந்து விட்டது. ஏதோ செம்பன்குஞ்சுவின் சாமர்த்தியத்திஞல் அரைவயிற்றுக் கஞ்சியாவது குடிக்க முடிகிறது என்று பெண் கள் பேசிக்கொண்டார்கள்.

இதற்குப் பிறகு வேறு சில தோணிக்காரர்களும் தூண்டில் போட ஆயத்தமாயினர்.

எப்பொழுதும் ஒரு நம்பிக்கையுண்டு. அதாவது, பஞ்ச காலத்தைத் தொடர்ந்து சுபிட்சமான காலம் வரும். தொன்று தொட்டுள்ள நம்பிக்கை இது. அதற்கு முன்வருடம் ஆலப் புழைக் கடற்கரையில்தான் மீன்பிடி பிரமாதமாக இருந்த தாம். அதை வைத்துப் பார்க்கிறபோதும், இந்தக் கடற்கரை யில் மீன் செழிப்பாகக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. துர திருஷ்டவசமாக ஒன்றுமில்லை என்று ஆகிவிட்டாலும் கூட, அதற்காகத் தோணி, வலை இவற்றைப் பழுது பார்க்காமலோ, செப்பனிட்டுச் சீர்செய்யாமலோ இருக்க முடியுமா? ஆனல். அந்த வேலையும் இந்தப் பஞ்ச காலத்திலேயே செய்து தீர்க்க வேண்டியதாக அல்லவா இருக்கிறது? இதனுல் தோணியின் சொந்தக்காரர்கள் அடைந்த சிரமத்தைச் சொல்லவும், வேண்டுமா?

அவுசேப்பும், கோவிந்தனும் மடி நிறையப் பணத்தைக் கட்டிக்கொண்டு கடற்கரைக்கு வந்து விட்டனர். எல்லோருக் கும் பணம் தேவை. எந்த நிபந்தனை போட்டாலும் ஒப்புக் கொள்ளத் தயாராக இருந்தனர் அத்தனை பேரும். வியாபாரி களோ வெனின் ஆலப்புழை, கொல்லம், கொச்சி போன்ற இடங்களில் செம்மீன் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஸேட்டு களின் காரியஸ்தர்களைக் 'காக்காய்' பிடிக்க அலைந்து திரிந்து கொண்டிருந்தனர். இவ்வாறு கடனுகப் பெற்ற பணம் கடற் கரையில் கண்ணைச் சிமிட்டிற்று.

பெண்கள் கையில் முன்பணம் கொடுக்கச் சிறு வியாபாரி கள் வீடுவீடாக ஏறி இறங்கினர். சிறுவர் சிறுமியரும், பெண் களும் சேமித்து வைத்திருந்த கருவாட்டுக்கும் அவர்கள் முன் பணம் கொடுத்துவிட்டுச் சென்ருர்கள். இந்த நாட்களில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு முஸ்லிம் இளைஞனைக் கொச்சுட்டி

என்பவளின் வீட்டில் வைத்து, அவளுடைய புருஷன் குத்திக் கொன்றுவிட்டான் என்று ஒரு வழக்கு ஏற்பட்டது

செம்பன்குஞ்சு அடிக்கடி ராமன்குஞ்சுவைச் சந்திப்ப துண்டு. பணத்தைத் திருப்பிக் கேட்டு விடுவாஞே என்ற பயம் தான் ராமன்குஞ்சுவுக்கு. ஆஞல், செம்பன்குஞ்சு அதைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பிரஸ்தாபிக்காததோடு, மேலும் பணம் வேண்டுமா என்று தாஞகவே கேட்கவும் செய்தான்.

மீண்டும் வியாபாரம் செய்ய வேண்டாமா? ஆஞல், அதற்கான முயற்சி எதுவும் பரீக்குட்டி மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அவனுடைய தகப்பஞரும் கிட்டங்கியை இழுத்துப் பூட்டச் சொல்லிவிட்டார். கடற்கரை வியாபாரத் துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, வேறு வேலை ஏதாவது தேடிப் பிழைத்துக்கொள்ளலாம் என்பது அவருடைய கட்சி. பரீக்குட்டி இதை ஏற்றுக் கொள்ளவில்லை. 'அது சாத்திய மில்லை' என்று முகத்துக்கு நேரே சொல்லிவிட்டான். அவன் கடற்கரையை விட்டுப் போகப் போவதில்லை. போகவும் அவஞல் முடியாது.

அப்துல்லா அசந்து போஞர். இப்படி முகத்தைப் பார்த்து மறுத்துப் பேசக்கூடியவன் அல்ல பரீக்குட்டி.

அப்துல்லா கேட்டார்:

"ஏன் நீ அப்படிச் சொல்லுதே?"

பரீக்குட்டி சொன்ஞன்:

"வாப்பா கருவாடு வியாபாரத்துக்குச் சின்ன வயசிலேயே என்னெ இங்கே கொணுந்து விட்டீங்க. இங்கேயே இருக்கேன். எனக்கு வேறெ வேலை ஒண்ணும் தெரியவும் தெரியாது"

"முதலேயே கரைச்சுப் புட்டியே. அதுக்கு என்ன சொல்லுதே நீ?"

இதற்குப் பரீக்குட்டி தக்க காரணம் ஒன்று சொல்ல வேண்டுமல்லவா?

"வாப்பா வியாபாரத்திலெ லாபம் வந்தாலும் வரும். நஷ்டம் வந்தாலும் வரும். சிலசமயம் போட்ட பணத்துக்கு ஆபத்து வந்தாலும் வந்துடும்."

"இனிமேலும் நஷ்டம் வந்தா?"

இந்தக் கேள்விக்குப் பரீக்குட்டியால் என்ன பதில் சொல்ல முடியும்? வேண்டுமென்ருல் ஒன்று சொல்லலாம்:

"வாப்பா நீங்க என் பங்கை முதலீடாகத் தாருங்க. அது போதும். அதுக்குமேல் தரவேண்டாம்."

"நீ என்னமோ சொத்து குவிஞ்சு கிடக்கிருப்லெ பேசுதியே. ஒரு நாற்பது சென்டு இடம் இருக்குது. அவ்வளவுதான்."

அப்துல்லா முதலாளிக்கும் வேறு எத்தனையோ பொறுப்புக்கள் இருந்தன. நல்ல வசதியாகத்தான் ஒரு காலத்தில் அவர் வாழ்ந்து வந்தார். இப்போது சொத்து அழிந்துபோய் விட்டது. அதோடு கல்யாணத்துக்கு வேறு ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். இதையெல்லாம் அவர் பரீக்குட்டியிடம் விரிவாகச் சொன்னுர். இருந்தும் பரீக்குட்டி தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

வியாபாரம் பண்ணவேண்டுமென்ருல் எத்தனை முன் ஏற்பாடுகள் செய்தாக வேண்டும்? பரீக்குட்டி எதுவும் செய்ததாகக் கறுத்தம்மாவுக்குப் படவில்லை. கயிற்றுப் பாயோ நார்க் கூடைகளோ அவன் வாங்கியதாகத் தெரியவில்லை. செம்புப் பாத்திரங்கள் பழுது பார்க்கப்படவில்லை. அடுப்பும் போடவில்லை. பரீக்குட்டியின் பணத்தைக் கொடுப்பதற்குத் தக்க தருணம் இதுதான் என்று கறுத்தம்மா சக்கியிடம் சொன்னுள். பரீக்குட்டி செய்த பேருதவிக்குக் கொஞ்சமாவது நன்றியிருந்தால் இதைச் செய்யவேண்டும் என்றும் அவள் சொல்லிப் பார்த்தாள்.

சக்கி பதிலுக்குச் செம்பன்குஞ்சுவை விரட்டிப் பார்த்தாள். ஒரு பயனும் ஏற்படவில்லை. செம்பன்குஞ்சு அவளிடம் சீறிவிழுந்ததுதான் கண்ட பயன். செம்பன்குஞ்சு அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கப் போவதில்லை என்ற உணர்வு கறுத்தம்மாவுக்கு ஏற்பட்டுவிட்டது. சில சமயம் திடீர் திடீரென்று சில யோசனைகள் அவள் மனத்தில் பளிச்சிடும். ஒரு சமயம் அவள் தன் தாயாரிடம் சொன்னுள்:

"அம்மா, இந்தச் சுமையைத் தூக்கிக் கிட்டிருக்க முடியாது என்னுலெ."

"என்னுது சுமை?" புதிசா என்னமோ சொல்றியே?"

கறுத்தம்மா வாய்விட்டுக் கதறினாள். சக்கி அவளைத் தேற்றினாள். ஆனால், கறுத்தம்மா ஆசுவாசப் படவில்லை. அவள் ஒரே பிடிவாதத்துடன் பேசினாள்:

"இந்தாப் பாரு. நான் எல்லா விஷயத்தையும் அப்பா கிட்டே சொல்லிப் புடறேன். அப்பொ பணம் தனியே வெளியிலே வந்துடும்."

சக்கி திடுக்கிட்டு விட்டாள்.

"கறுத்தம்மா, என் கண்ணுல்லெ நீ. அதையெல்லாம் சொல்லிப்புடாதே!"

சக்கி தெரிந்துகொண்டிருந்த அளவுக்குச் செம்பன்குஞ்சு வுக்குத் தெரிந்துவிட்டதென்றால் எவ்வளவு மோசமான விளைவு கள் தோன்றிவிடும்? சக்கியால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. கறுத்தம்மா பேசுவதைப் பார்த்தால், தான் தெரிந்துகொண்டதற்கும் மேலாகப் பல விஷயங்கள் இருக்கக் கூடுமோ என்று சக்கிக்குத் தோன்றிற்று.

தன்னந்தனியாக உட்கார்ந்திருக்கும் சமயங்களிலெல்லாம் கறுத்தம்மாவின் மனம் நெகிழ்ந்துவிடும். அவள் பரீக்குட்டி யிடம் அன்புகொண்டுவிட்டாள். மற்றொருவனுக்கு அவள் உள்ளத்தில் இனி இடமில்லை. ஒரு நிமிஷமாவது அவனுடைய நினைவு வராமலிருந்தால் எவ்வளவோ ஆசுவாசமாக இருக்கும். அவள் ஓர் அரயப் பெண்ணாகப் பிறந்துவிட்டாள். ஓர் அரய னின் மனைவியாகத்தான் அவள் மடியவும் வேண்டும். இதை அவள் நன்குணர்ந்துவிட்டாள். ஆக, எப்படியும் அவள் பரீக் குட்டியை மறந்துவிடத்தான் வேண்டுமா?

கடனைக் கொடுத்துவிட்டால் பொறுப்பு தீர்ந்துபோம். அதோடு அவனையும் மறந்துவிடலாம் என்று அவள் எண்ணி னாள். வியாபாரம் முறிந்து வேறு வழிவகை அறியாது அலைந்து திரிந்து கொண்டிருக்கிறான், பரீக்குட்டி. இதை எப்படி அவளால் சகித்துக்கொண்டிருக்க முடியும்? ஆனால், சதா சமயமும் அந்தக் காட்சிதானே அவள் நினைவில் அகலாமல் நின்றுகொண்டிருக்கிறது?

நாட்கள் பல கழிந்தன. செம்பன்குஞ்சு அப்படியே தான் இருந்தான். அவன் பணம் கொடுக்கும் வழியைக் காணோம்.

# 7

கடற்கரைவாசிகள் வரவிருக்கும் நாட்களில் நம்பிக்கை வைத்து, ஆவலுடன் அந்த நாட்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். ஒவ்வொரு நாளும் இரவில் கிழங்குக் கறியுடன் கஞ்சி குடிக்கும்போது, 'கடல்தாயே! என்றுதான் நாங்கள் சோற்றைக் கண்ணால் பார்க்கப் போகிறோம்?' என்ற கேள்வி அவர்கள் உள்ளங்களில் எழும். 'சாகரைப் பருவம் வரட்டும்' என்று யாராவது பதில் சொல்லுவார்கள். மீன் கறியோடு உண்ட நாட்கள் பழங்கதையாய்ப் போய்விட்டது.

எடுத்ததற்கெல்லாம் இதே பேச்சுதான். 'டீ'க்கடைக்காரன் கடன் தர மறுக்கிறபோதும் அரயன் அவனிடம் சொல்லுவான்:

"சாகரை வரும். பார்த்துக்கிட்டே இரு. வரும்!"

மனைவி குழந்தைகளின் துணிமணிகள் கிழிந்து தொங்கும். அதிலிருந்து வீச்சம் அடிக்கும். அப்போதும் அரயன் சொல்லுவான்:

"சாகரை வரட்டும். மல்துணியும் மேல் துண்டும் வாங்கிப் புடலாம்."

சகல ஆசைகளும், சகல கனவுகளும் நிறைவேறப் போகிற காலம் அது!

கறுத்தம்மாவுக்கு உள்ளூர ஓர் ஆசை. அதைத் தாயிடம் பிரஸ்தாபிக்கவும் செய்தாள். சாகரைப் பருவத்தில் தனியாகக் கொஞ்சம் பணம் சேர்க்க வேண்டும். அதோடு செம்பன்குஞ்சு கொண்டுவருகிற பணத்திலிருந்தும் கொஞ்சம் எடுத்துத் தனியாக வைத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பணத்தைக்

கொண்டே பரீக்குட்டியின் கடனைத் தீர்த்துவிடலாம். சக்கி யும் பணம் சேர்க்க வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண் டாள். ஆனால். அவளுடைய உத்தேசமே வேறு.

கறுத்தம்மா சொன்னாள்:

"எனக்கு நகையும் வேண்டாம், நட்டும் வேண்டாம். எப்படியாவது நீ அந்தக் கடனை அடைச்சுப்புட்டாப் போதும்."

"அது உங்கப்பன் தீர்மானிக்க வேண்டிய விஷயம். தெரியுமா?"

"அப்போ, அந்தப் பணத்தெத் திருப்பிக்கொடுக்கப் போற தில்லேன்னு சொல்லேன். அப்பா அதைக் கொடுக்கப் போற தில்லெ."

சக்கியும் அப்படித்தான் நினைத்தாள். கறுத்தம்மா மனத் திற்குள் ஏதோ கணக்குப் போட்டுப் பார்க்க ஆரம்பித்தாள். பஞ்சமியும் தனக்குள் ஒரு திட்டம் போட்டு வைத்திருந்த தாள். அவள் நாள்தோறும் குஞ்சுமீன் பொறுக்கிச் சேமித்து வைத்துக் கொள்வாள். அதோடு செம்பன்குஞ்சுவும் அவளுக் குத் தினமும் ஒரு கூடை மீன் தருவதாகச் சொல்லியிருந்தான்.

பரீக்குட்டியும் கடைசியில் எப்படியோ ஒரு தீர்மானத் துக்கு வந்து சேர்ந்தான். அப்துல்லா, வீட்டையும், மனையை யும் ஸேட்டுக்குப் பணயம் வைத்துவிட்டார். 'அந்த ஒப்பந்தத் தின்படி அவர் இரண்டாயிரம் ரூபாய் வரையிலும் ஸேட்டிடம் பெற்றுக்கொண்டு வியாபாரத்தில் ஈடுபடலாம். சாகரைப் பருவத்தில் சாமர்த்தியமாக வியாபாரம் செய்து, கடனையும் அடைத்து பெண் குழந்தையின் திருமணத்தையும் முடித்து விடலாம்' என்பதுதான் அவரது திட்டம்.

சாகரைப் பருவத்தில் லாபம் அடைந்து சொந்தமாகத் தோணி வாங்கிவிடுவது என்று அச்சகுஞ்சுவும் சங்கல்பம் செய்துகொண்டான். கடல் கலங்குமென்றோ, மீன்பாடு இன்றிப் போய்விடுமென்றோ ஒருவராவது எதிர்பார்க்கவில்லை, கடல் வறண்டு கிடந்த அந்த நாட்களில் அத்தனை பேரும் பட்டினியில் அழுந்திவிட்டனர். அவுசேப்புவை அணுகிக் கடன் கேட்டான் அச்சகுஞ்சு. அவனுக்கு ஒரு தோணி வாங்க

வேண்டும். எந்தவித நிபந்தனைக்கும் தயாராக இருந்தான் அவன்.

"எனக்கும் ஒரு தோணிக்கு முன்பக்கம் நின்னுக்கிட்டு கடலுக்குப் போகணும். அந்தக் காட்சியெப் பார்த்துக்கிட்டு என் பெண்ஜாதி கரையிலே நிக்கணும்," என்றான் அவன்.

"கையிலெ எவ்வளவு இருக்குது?" என்று கேட்டான் அவுசேப்பு.

கைவசம் எதுவுமில்லை என்பதை அச்சகுஞ்சு தெரிவித்தான்.

"பின்னே எப்படிப் பணம் தருவது?"

கடைசியில் அவுசேப்பு அவனுக்கு ஒரு யோசனை சொன்னான். 'சாகரை வியாபாரத்தில் கிடைக்கிற காசைப் பத்திரமாக வைத்துக் கொள்ளவேண்டும். வியாபாரம் முடிவுறும் சமயம் சொந்தமாகத் தோணி வாங்கிவிடலாம். அப்போது தொகை குறைவாக இருந்தால் நான் தருகிறேன்' என்றான் அவுசேப்பு.

"ஆனா ஒரு விஷயம். தோணியும், வலையும் என் பேரிலே தான் இருக்கும். ஆமாம். உனக்குப் பங்கும் தருவேன். தோணிக்காரன் பங்கை எனக்குத் தந்துடணும். 'துடுப்புப் பங்கு' வேணுமின்னா நீ எடுத்துக்க. மிச்சம் மீதி இருக்கிற பணத்தை எங்கிட்டே தந்துவை. நான் பத்திரமா வெச்சுக்கிடறேன்."

அச்சகுஞ்சு அவுசேப்பு சொன்ன நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டான். இது கடற்கரையில் சர்வசாதாரணமாக நடைபெற்றுவரும் ஒரு காரியம்தான். வீட்டுக்குச் சென்றதும் எல்லா விஷயங்களையும் அவன் நல்லபெண்ணிடம் சொன்னான்.

"உனக்கு வியாபாரத்திலெ கிடைக்கிற காசையும் எங்கிட்டெ தந்துவை? என்ன?"

"அது எதுக்குன்னு கேக்கறேன்? உனக்குக் கிடைக்கிற காசை நீ எங்கிட்டே தந்து வையேன்."

"சீ! போ கழுதே. ரெண்டு பேருக்குக் கிடைக்கிற பணத்தையும் அவுசேப்பு கிட்டே கொடுத்து வைக்கப் போறேன்."

நல்லபெண்ணுக்கு இந்த ஏற்பாட்டில் திருப்தி ஏற்படவில்லை. அவள் கேட்டாள்:

''செம்பன்குஞ்சு அண்ணன் எப்படித் தோணியும் வலையும் வாங்கினான்னு தெரியுமா உனக்கு? சக்கி கிட்டெ, கிடைக்கிற காசையெல்லாம் கொடுத்து வச்சிருந்தான்.''

கடைசியில் இருவரும் அவுசேப்புவிடம் பணத்தைக் கொடுத்து வைப்பது என்ற முடிவுக்கு வந்தனர்.

தோணியும் வலையும் வாங்கப் போகிற விஷயத்தை எல்லோரிடமும் பறை சாற்றினான் அச்சகுஞ்சு.

இவ்வாறு அவர்கள் பல விஷயங்களை எதிர்பார்த்தபடி நாளைக் கடத்திக்கொண்டிருந்தபோது, வைகாசி மழை திடீரென்று பிடித்துக்கொண்டு கொட்ட ஆரம்பித்தது. முதலில் புயற் காற்று வீசி அடித்தது. அதைத் தொடர்ந்து ஒரே மழை. சாகரைப் பருவம் பிறப்பதற்கான அறிகுறிதான் அது. அரயர் கண்களில் மீண்டும் நம்பிக்கை ஒளி பிறந்தது. முகங்களும் பொலிவடைந்தன. இன்னும் சில நாட்களுக்குள் கடற்கரை தேஜோமயமான ஒரு நகரம்போல் காட்சி தரும். அப்போதிருந்தே இரு பக்கங்களிலும் குடிசைகள் முளைக்க ஆரம்பித்துவிட்டன. டீக்கடைகள், தையல் கடைகள், ஜவுளிக் கடைகள், காசுக் கடைகள்......அந்த வருடம் யந்திரம் வைத்து மின்சார ஒளியும் பரப்பினார்கள்.

மறுமுறையும் புயல் சுழன்றடித்தது. கடல் கொந்தளித்தது. சந்தோஷம் தாங்கமுடியாமல் எல்லோரும் துள்ளிக் குதித்தனர். மனத்தில் ஆசைகள் அரும்பின. கலங்கிக் கிடந்த கடல் நீர் தெளிகிறபோது, அவர்களுக்கு சுபிட்ச வாழ்வு உதயமாகிவிடும்.

கடல் அமைதியாக அடங்கிக் கிடந்தது. தூரத் தொலைவிலிருந்து தோணிகள் வந்து சேர்ந்தன. மழை இலேசாகத் தூறிக்கொண்டிருந்தது. காற்று அடித்தது. சில சமயம் புயலும் கிளம்பிற்று. ஆனால், கடல் என்னவோ குளம் போலத்தான் கிடந்தது.

செம்பன்குஞ்சுவின் வேலையாட்களை நல்ல திறமைசாலிகள் என்றுதான் சொல்லவேண்டும். அவர்களை மேலும் சாமர்த்திய சாலிகளாக ஆக்கிவிட்டான் செம்பன்குஞ்சு. முதல் நாள்

மீன்பாடு சுமாராகத்தான் இருந்தது. அப்போதுதான் மீன்கள் வந்துகொண்டிருந்தன. இருந்தாலும் எல்லாத் தோணிகளும் அன்று கடலுக்குச் சென்றிருந்தன. அன்று செம்பன்குஞ்சு ஒரே போடாய்ப் போட்டுவிட்டான். அன்று விடிவெள்ளிக்கு முந்தியே செம்பன்குஞ்சு கடலுக்குச் சென்று விட்டான் என்பதை அறிந்துகொண்டதும், அவனுக்கு மீன் ஏராளமாகக் கிடைத்திருக்கும் என்று அய்யன்குஞ்சு சொல்லி வைத்தான். ராமன் மூப்பனுக்கு இன்னொரு விஷயம் தட்டுப்பட்டது:

"அவன் பள்ளிக்குன்றத்துக்காரன் அதிருஷ்டத்தையும் விலைக்கு வாங்கி வெச்சுக்கிட்டானே!"

செம்பன்குஞ்சு மாதிரி இல்லாவிட்டாலும், ஏறத்தாழ அவனளவுக்குத் தாங்களும் மீன் பிடித்துக் கொண்டு வர வேண்டுமென்ற வீம்பு பல தோணிக்காரர்களுக்குப் பிறந்தது. செம்பன்குஞ்சு மறைமுகமாக எல்லோருக்கும் ஓர் உத்வேகத்தை ஊட்டிவிட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

அய்யன்குஞ்சு ஒரு புது ஏற்பாட்டைப் புகுத்தினான்.

"இந்தாப் பாருங்க. கூவி அழைக்கணும்னு வெச்சுக் கிடப் படாது. இருட்டோட வந்துடணும். ஆமா. டேய், இந்தா பாருங்க, மனிசன்னு சொன்னா அவனுக்கு கொஞ்சம் போட்டி போடுற மனசு இருக்கணும், பாத்துக்க."

முடிந்த மட்டும் போட்டிபோட்டுப் பார்ப்பது என்ற உறுதி எல்லோருடைய உள்ளத்திலும் பிறந்து விட்டது. செம்பன்குஞ்சு பிடிக்கிற அளவுக்குப் பிடிக்க முடியுமா என்பதைத்தான் ஒரு கை பார்த்து விடலாமே!

அன்று வழக்கத்தைவிடப் பலர் முன்னதாகவே வந்து சேர்ந்துவிட்டனர். இருந்தும் கூவியழைக்கும்படி ஆகிவிட்டது. 'டீ'க் கடைகளிலும் அன்று முன்னதாகவே வியாபாரம் ஆரம்பமாகி விட்டது. செம்பன்குஞ்சுவின் தோணி அன்று சற்றுப் பின்தங்கிச் சென்றது. மற்றவர்கள் முந்திக்கொண்டு விட்ட சங்கதியும் அவனுக்குத் தெரியாது.

கடலுக்குச் சென்ற தோணிகள் அசைவதைப் பார்த்தால் அன்று மீன் அமோகமாகப் பிடிபடுகிறது என்றுதான் எண்ண வேண்டியதாக இருந்தது. கூடைக்காரர்களும், வியாபாரிகளும் கடற்கரையில் கூடி நின்றுகொண்டிருந்தனர். பரீக்குட்டி,

மன அமைதி இழந்து விட்டவன்போல் காட்சி தந்தான். யாரையோ எதிர்பார்த்துக்கொண்டிருப்பது போலவும் இருந்தது. கைவசம் இருந்த பணமும் வெகு சொற்பம். ஸேட்டின் காரியஸ்தன் பணத்தோடு வந்து சேருவதாக வாக்களித்திருந்தான். ஆசாமி வந்தபாடாக இல்லை. அவனை எதிர்பார்த்து விநாடிகளை எண்ணிக்கொண்டிருந்தான் பரீக்குட்டி. பல வகையிலும் அன்றையப் பொழுது மங்களகரமானது. கடலில் மீன் ஏராளமாக இருந்தது. வெயிலும் நன்றாகக் காய்ந்துகொண்டிருந்தது. எங்கும் ஒரே பிரகாசம்! செம்மீனை வேகவைத்துப் பரப்பினாலும் நொடியில் காய்ந்து விடும். நாலு காசு லாபம் வருகிற நாள் அது.

பொழுது நகர்ந்துகொண்டுதான் இருந்தது. காரியஸ்தர் பாச்சு பிள்ளை இன்னும் வந்து சேரவில்லை. சாகரைப் பருவ வியாபாரத்தின ஆரம்ப நாள் அது. அன்றே எல்லாம் வெறும் அவஸ்தையிலும் ஏமாற்றத்திலும் முடிந்து விடுமா?

தோணிகள் கரையருகே வந்துகொண்டிருந்தன. பரீக்குட்டி தவியாய்த் தவித்துக்கொண்டிருந்தான். அருகில் நிற்பவர்கள் எல்லோரும் மடி நிறையப் பணத்தைக் கட்டிக் கொண்டிருந்தனர்.

கரையில் ஒரே ஆரவாரம்! ஒட்டலிலும் வரிசையாக இலை போட்டுப் பரிமாறத் தொடங்கினர். தோணி கரை வந்து சேர்ந்ததும், அத்தனை பேரும் முண்டியடித்துக்கொண்டு ஒட்டலுக்குள் நுழைந்து விடுவார்கள். கிட்டங்கிகளில் பாத்திரங்களை அடுப்பில் ஏற்றிப் போட்டனர். கணப்பொழுதும் வீணாகாமல், எல்லாம் துரித காலத்தில் நடந்தேறியது. பரீக்குட்டியின் வேலையாட்களும் தயாராக நின்றுகொண்டிருந்தனர்.

முதலில் வந்துகொண்டிருந்தது செம்பன்குஞ்சுவின் தோணிதான். வழக்கம்போல் அது குதிபோட்டுப் பாய்ந்து முன்னேறிக்கொண்டிருந்தது.

காதர் முதலாளி சொன்னான்:

"அவன் தோணியை எந்தப் பயலாலும் முந்த முடியாது."

மைதீன் குஞ்சுவும் அதை ஆமோதித்தான். அரயர் வகுப்பைச் சேர்ந்த வயதுமுதிர்ந்த கிழவர் சொன்னார்:

"அது ஏன்னு தெரியுமா? சொந்தக்காரன் தோணியிலே இருக்கான், சுக்கான் பிடிச்சுக்கிட்டு."

தோணி கரை சேர்ந்தது. தோணி நிறைய மீன். பக்க வாட்டிலும் நடுப்பாகத்திலும் மீன் திணிக்கப்பட்டிருந்தது.

சுய நினைவு இழந்தவனைச் செம்பன் குஞ்சுவைப் பார்த்து வெறியோட்டம் ஓடினன் பரீக்குட்டி. அதற்குமுன் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தையும் மறந்துவிட்டான் அவன். அங்கிருந்த சூழ்நிலை அப்படிப்பட்டது. அங்கு யாருமே அப்படித்தான் நடந்து கொள்வார்கள்.

பரீக்குட்டி கெஞ்சியவண்ணம் கேட்டான்:

"செம்பன்குஞ்சு......ஐயா வலைக்காரரே...... அண்ணே... எனக்குக் கொஞ்சம் சரக்குத் தாரும்."

சிறிதும் தாட்சண்யமின்றி அவன் முகத்தைப் பார்த்துச் சொன்னன் செம்பன்குஞ்சு:

"கையிலே காசு இருக்கிறதா? இல்லைன்னு சோலியைப் பார்த்துக்கிட்டுப் போ!"

தோணி கரைக்கு வந்துவிட்டது என்ருல், அரயனுக்கு இந்தப் புத்தி வந்துவிடும்.

பரீக்குட்டி பதில் சொல்வதற்குள் காதர் அங்கு வந்துவிட்டான். செம்பன்குஞ்சுவிடம் மீன் வாங்க முடியாது என்பது தீர்மானமாகி விட்டது அவனுக்கு. வேறு தோணிக்காரர்களை நாடி ஓடினன் அவன்.

அன்று வழக்கம்போல் செம்பன்குஞ்சுதான் மீனின் விலையை நிர்ணயித்தான். அன்று மீன் ஏராளமாக அகப்பட்டிருந்தது. அன்றும் செம்பன்குஞ்சுவின் வலையில்தான் அதிக மீன் சிக்கியிருந்தது.

மற்றொரு தோணிக்காரனிடமிருந்து, அவனிடமிருந்ததில் மூன்றில் ஒரு பங்கை வாங்கினன் பரீக்குட்டி. அதற்கு மேல் வாங்க அவன் கையில் பணம் இல்லை.

செம்பன்குஞ்சு வேலையட்களுக்குரிய பங்கை விநியோகம் செய்தான். அப்போது அவன் உள்ளத்தில் புதிய யோசனை ஒன்று பிறந்தது. அவன் சொன்னன்:

"கடலிலே மீன்பாடு எப்படியிருக்குது பாத்திங்களா? நல்ல வெயிலும் காயிது. சரக்கும் நல்ல விலைக்குப் போகுது."

அவன் சொன்ன வார்த்தைகளின் உட்பொருள் தோணிக் காரர்களுக்குப் புரியவில்லை.

''நான் சொல்றது விளங்கவில்லையா? அட, மடக் கழுதை களா! இந்தப் பாருங்க, காத்து இருக்கிறபோதே தூக்திக் கிடணும் தெரிஞ்சுதா! காசு கிடைக்கிற சமயம் இது. இல்லெ, சோத்தைத் தின்னுபுட்டு விழுந்து கிடக்கப் போறீங்களா? இன்னொரு வாட்டி போக நான் தயார்!''

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அச்சகுஞ்சு இதைக் கேட்டுக் கொண்டிருந்தான். செம்பன்குஞ்சு அவனைப் பார்த்து இதைச் சொல்லவில்லை என்றாலும், அவன்தான் பதில் சொன்னான்:

''நீ கேக்கிறதுக்குப் பதில் சொல்லாம இருக்க முடியாது, என்னாலே. காசு கிடைக்குதுங்குது நெசம்தான். அதுக்காகக் கடலை உள்ளங்கையிலெ தூக்கிக்கிட்டு வந்துட முடியுமா?''

அதோடு, ஒரே நாளில் இருமுறை கடலுக்குச் செல்வது என்பது எந்த நாளிலும் நடைபெற்றிராத காரியம் அல்லவா? அப்படிச் செய்வதே பாபம்.

செம்பன்குஞ்சு சொன்னான்:

''சரி, நீங்களே நல்லா யோசிச்சுப் பாருங்க.''

கடற்கரை எங்கும் ஒரே செழிப்பு. எங்கும் ஐசுவரிய ஒளி பரவியிருந்தது. கிட்டங்களின் முன்னால் வெந்த மீனைப் பரப்பிக் காயப் போட்டிருந்தனர். பார்ப்பதற்குத் தங்கக் கட்டிகளை வாரி இறைத்தாற்போல் இருந்தது.

அன்று அச்சகுஞ்சு ஓட்டலுக்குச் சாப்பிடச் செல்லவில்லை. அவன் மனத்தில் ஒரு திட்டம் பிறந்து விட்டதல்லவா? அவன் நேராக வீட்டுக்குச் சென்றான். கணவனும் மனைவியும் அப் படித்தானே பேசி முடிவு செய்துகொண்டிருந்தனர். நல்ல பெண் கேட்டாள்:

''ஏன் இண்ணைக்குச் சாப்பிடாம வந்துப்புட்டே?''

அச்சகுஞ்சுவுக்குக் கெட்ட கோபம் பிறந்து விட்டது.

''உனக்கென்ன பயித்தியம் பிடிச்சுப் போச்சா? இப்படி யெல்லாம் கேட்டுக்கிட்டிருந்தா, சொந்தமா தோணி வாங்கற நாளே வரப்போறதில்லெ.''

வந்த வழி நோக்கி அடியெடுத்து வைத்தான் அச்சகுஞ்சு. நல்ல பெண்ணுக்கு ஏதோ தவறு செய்து விட்டதுபோல் மனசு குறுகுறுத்தது. அவள் கேட்டாள்:

"அப்பொ நீ காலையிலெ எந்திரிச்சுப் போறபோது, ஒரு வார்த்தை சொல்லிப்புட்டுப் போகப்படாதா?"

"எதுக்குச் சொல்லணும்? நாம முன்னாலேயே இதையெல்லாம் பேசி முடிச்சு சத்தியம்கூட பண்ணிக்கிட்டோமே."

அச்சகுஞ்சு நடந்து போவதைப் பார்த்துக்கொண்டே சத்தம் போட்டுச் சொன்னாள் நல்ல பெண்:

"சோத்துக்குக் காசு எடுத்துக்கிட்டு மீதியைத் தந்துட்டுப் போயேன். நான் கையிலே வெச்சுக்கிடறேன். அப்புறம் அவுசேப்புக் கிட்டே ஒப்படைச்சுக்கலாம்."

சில்லறையும் நோட்டுமாகச் சிறிது பணத்தை அவள் முன்னால் விட்டெறிந்தான் அவன்.

உணவை முடித்துக்கொண்டு செம்பன்குஞ்சு கடற்கரை வந்து சேர்ந்தான். அப்போது தோணிக்காரர்கள் யாரும் வந்திருக்கவில்லை. அன்றே மேலும் கொஞ்சம் சம்பாதிக்க வழி உண்டா என்று ஆராய்ந்து, கனவுகளில் அவன் மனம் லயித்திருந்தது.

மாலையில் செரீயழிக்கல், திருக்குன்றப்புழை போன்ற இடங்களிலிருந்து சில தோணிகள் வந்து சேர்ந்தன. அன்று இரவு மழை விடாமல் கொட்டிற்று. மறுநாள் பொழுது புலர்ந்த பின்தான் தோணிகள் கரைவிட்டு அகன்றன.

விடியக்கருக்கில் வந்து சேராதிருந்ததற்காகத் தோணிக்காரர்களை வாயில் வந்தபடி யெல்லாம் திட்டினான், செம்பன் குஞ்சு. அப்படியிருந்தும், செம்பன்குஞ்சுவின் தோணிதான் அன்றும் முதலில் கடலுக்குச் சென்றது

செம்பன்குஞ்சு கவனித்தான். புதிய ஆசாமி ஒருவன் வெகு லாகவமாகத் துடுப்பு வலித்துக்கொண்டு வருகிறான். யார் இவன்? இவன் என்ன, தோணியை ரொம்பவும் அனாயாசமாகச் செலுத்துகிறானே. 'இது யாருடைய தோணி?' என்ற கேள்வியை மனத்தில் எழுப்பிவிடுகிறான் அவன். அது திருக்குன்றப்புழையிலுள்ள தோணி. தோணியைச் செலுத்தியவன் தான் பழனி. நல்ல இளைஞன்.

செம்பன்குஞ்சு, பழனி ஆகிய இருவருடைய தோணிகளும் ஒரே மாதிரி சென்று கொண்டிருந்தன. எந்தத் தோணி முன்னேறிச் செல்லும் என்பதை அனுமானிக்க முடியாதபடி இருந்தது. போட்டியும் கிளம்பிவிட்டது. இருவரும் முழுப் பலத்தையும் திரட்டி வீறு கொண்டு வலித்து முன்னேற முயன்று பார்த்தார்கள். தண்டு வலிப்பவர்கள் தண்ணீரைக் குழித்துத் தோணியை முன்னால் தள்ளிக்கொண்டிருந்தனர். இரண்டு தோணிகளும் இப்படிப் போட்டி போடுவது பார்க்க வெகு ரசமான காட்சியாக இருந்தது.

செம்பன்குஞ்சுவின் தோணி பின்னால் வருகிறதோ? அதோடு யார் அதிக மீன் பிடித்திருக்கிறார்கள் என்பதும் முக்கியமல்லவா? வலை வீசுவதை வைத்தோ, தோணியின் வேகத்தை மதித்தோ தீர்மானம் பண்ணுகிற விஷயமா அது?

கரை நோக்கித் திரும்புகிற போதும், தோணிகள் இரண்டும் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக்கொண்டுதான் வந்தன. அசந்தர்ப்பத்தில் தோணிகளின் தலைகள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டு விட்டதென்றால் அடிதடி கிளம்பி விடும். தோணி திரும்புகிற போதெல்லாம் நடுக்கமெடுத்தது எல்லோருக்கும். கறுத்தம்மா கேட்டாள்:

"அம்மா, எதுக்கு இப்படிக் கண் தலை தெரியாமப் போட்டி போட்டுக்கிட்டு வறுரு அப்பா?"

சக்கிக்கும் உள்ளூரப் பயம்தான். ஆபத்து எதுவும் ஏற்படாமல் கரை வந்து சேரவேண்டும். எதற்கு இப்படிப் போட்டி போட வேண்டும்? செம்பன்குஞ்சுவுக்கு என்ன சின்ன வயசா? தோணிகளின் தலைகள் இடித்துக்கொண்டு விட்டால், பின் என்ன விளையும் என்று யாரால்தான் சொல்லமுடியும்?

ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாகக் கழிந்தது. அப்பாடா! தோணி ஒரு மட்டும் கரையருகே வந்துவிட்டது. கரையில் ஏக ஆரவாரம். இருவரில் ஒருவரும் வெற்றி பெறவில்லை; தோல்வி அடையவும் இல்லை. ஒரே மாதிரி ஜோடியாக வந்து விட்டன, இரு தோணிகளும். இரண்டு தோணிகளிலும் மீன் ஏராளமாக இருந்தது.

தோணிகள் இரண்டும் ஒன்று சேர்ந்து கரைக்கு வந்தன. கையில் நீண்ட கழியும், தலையில் முண்டாசுமாகக் கரையில்

குதித்த பழனியைக் கறுத்தம்மா கூர்ந்து கவனித்தாள். திடகாத்திரமாக இருந்தான் அவன். செம்பன்குஞ்சு விரைந்து வந்து பழனியைத் தழுவிக்கொண்டான்.

"நீ கடலுக்குப் போறதுக்குன்னே பொறந்தவண்டா தம்பி!"

பழனி ஒன்றும் சொல்லவில்லே.

வியாபாரம் முடிந்துவிட்டது. பழனியின் சரக்குக்குத்தான்—ஒரு சொல்லுக்குத்தான் என்றாலும் கூட—அதிக விலை கிடைத்தது. செம்பன்குஞ்சுவுக்குத் தோல்விதானே இது?

செம்பன்குஞ்சு பழனியிடம் கேட்டான்:

"உன் பேரென்ன தம்பி?"

அவன், நல்ல மேனி வளப்பம் கொண்டவன்தான். இருந்தாலும் ரொம்பவும் சங்கோசப்படுகிறவன். தோணியை அப்படிக் காற்றுவேகத்தில் அனுயாசமாய்ச் செலுத்திச் சென்றவன்தான் செம்பன்குஞ்சுவின் முன்னால் நிற்கிறான் என்பதை நம்ப முடியாமலிருந்தது. ஒரு சின்னஞ்சிறு குழந்தைபோல் நாணினன் அவன். அந்தக் கம்பீரம் எங்கே? எங்குச் சென்று மறைந்துகொண்டு விட்டது அது?

"பழனின்னு கூப்பிடுவாங்க!" என்றான் அவன்.

"உன் தொழில் உனக்கு நல்லாத் தெரிஞ்சிருக்குது. மரக்கானுப் பொறந்தவனுக்குக் கடலேறி அவன் தொழிலெப் பாக்கத் தெரிஞ்சிருக்கணும்."

பழனி வாயைத் திறக்காமல் நின்றுகொண்டிருந்தான்.

செம்பன்குஞ்சு கேட்டான்:

"உங்கப்பன் பேரு?"

"வேலூரன்னு சொல்லுவாங்க. செத்துப் போயிட்டாரு."

"அம்மா?"

"அவளும் செத்துப் போயிட்டா?"

"வேறே யாரு இருக்காங்க உனக்கு?"

"யாருமில்லே."

ஆச்சரியத்துடன், "யாருமே இல்லையா?" என்று கேட்டான் செம்பன்குஞ்சு. அதற்குப் பழனி பதில் சொல்லவில்லே.

கணவன் வீடு திரும்பியதும், சக்கி அவனிடம் கேட்டாள்.

"சின்னக் குழந்தை ஆயுடனும்னு ஆசை இருக்குது. அதுக்காகக் கடவிலெ விளையாடறதா?"

அவளுடைய பேச்சு காதில் விழுந்ததாகவே செம்பன் குஞ்சு காட்டிக்கொள்ளவில்லை. முக்கியமான விஷயம் ஒன்றை யோசித்துக்கொண்டிருந்தான் அவன். தோணியின் முன்புறம் நின்றுகொண்டிருந்தபோது அவன் மனத்திலே தோன்றிய எண்ணங்கள்தாம் எத்தனை! அவற்றையெல்லாம் சக்கியிடம் சொல்ல அவனுக்கு ஆசைதான். ஆனால், அப்போது அவன் சொல்லவில்லை. ஒரு விஷயத்தை மட்டும் அவன் மனைவியிடம் ரகசியம்போல் கேட்டான்:

"நீ அந்தத் தோணிக்கு முன்னலெ நின்னுக்கிட்டிருந்த பையனைக் கவனிச்சியா?"

"கவனிச்சேன்."

"கெட்டிக்காரப் பய. இல்லையா?"

சக்கிக்கு அவனைப் பிடித்திருந்தது. அவனை மட்டுமென்ன, கடற்கரையில் நின்றுகொண்டிருந்த அத்தனை பேரையும் அவன் கவர்ந்து விட்டான்.

சக்கி கேட்டாள்:

"ம்...என்ன விஷயம்?"

"அந்தப் பையன் கிடைச்சா தேவலே."

சக்கி எதுவும் சொல்லாமல் நின்றுகொண்டிருந்தாள். செம்பன்குஞ்சுதான் தொடர்ந்து பேசினன்:

"அவன் கிட்டே எல்லாத்தையும் விசாரிச்சேன். அவனுக்குச் சொந்தமுன்னு ஒருத்தரும் இல்லே. ஒருவழியாப் பாத்தா அதுதான் நல்லதுன்னுகூடப் படுது."

சக்கி கேட்டாள்:

"அப்படீன்னு அவனெ சாப்பாட்டுக்கு வீட்டுக்கு அழைச்சிக்கிட்டு வறதுதானே?"

"அந்த விஷயம் அப்போ எனக்கு எட்டலெ."

இந்த விஷயம் சக்கிக்கு மனநிம்மதியைக் கொடுத்தது. செம்பன்குஞ்சு ஒருவனைத் தேடிப் பிடித்துவிட்டான். இதிலிருந்து, அவனும் அந்த ஞாபகத்துடன்தான் வலைய வந்திருக்கிறன் என்பது தெரிய வந்தது.

பழனி மிகவும் நல்லவன். அவனை வேறு யாராவது கொத்திக்கொண்டு போனாலும் போய்விடலாம். செம்பன்குஞ்சுவுக்கும் அந்தப் பயம்தான். சாப்பிட்டு முடிந்ததும் கடற்கரையை நோக்கி நடந்தான் அவன்.

பழனியும் அவனது சகாக்களும் ஒரு தென்னை மரத்தின் கீழ் படுத்துத் தூங்கிக்கொண் டிருந்தனர். அன்று அவனிடம் எதுவும் பேசிப்பார்க்க முடியவில்லை. மறுநாளும் கடலில் பந்தயம் நடந்தது. அன்று செம்பன்குஞ்சு தோல்வியடைந்து விட்டான். மீன் ஏராளமாகக் கிடைத்ததும் பழனிக்குத் தான்.

செம்பன்குஞ்சுவின் தோணிக்காரர்கள் மனசில் கறுவிக் கொண்டனர். கறித்தகுஞ்சு சொன்னான்:

"எங்கிருந்தோ இந்தக் கடல்கரைக்கு வந்து என்ன துள்ளுத் துள்ளறான் இந்தப் பய?"

குஞ்சுவாப்பாவுக்கு மனசுக்குள் ஒரு குறும்பு தலையெடுத்தது. இலேசாக மோதி விட்டுவிட வேண்டும்! அப்போது அடி...தடி...ரகளை...

செம்பன்குஞ்சு இடைமறித்துச் சொன்னான்:

"இந்தாப் பாருங்க. என்ன இது? வேலை செய்யுற ஆம்புளெப் புள்ளையெப் பாத்து எதுக்குப் பொறாமைப் படுறீங்க? அவனெத் தோக்கடிக்கணும்னு முதுகை வளைச்சுத் துடுப்புப் பிடிக்கணும், ஆமா!"

செம்பன் குஞ்சுவின் வேலையாட்களுக்கு மற்றொரு குறும்புத்தனம் பிறந்தது. கடலில் வைத்து முடியாமல் போனாலும், கரையில் வைத்தாவது ஒரு பூசலைக் கிளப்பிச் சண்டை போட வேண்டும் வெளுத்தை மட்டும் அந்த யோசனையை எதிர்த்தான்:

"இண்ணைக்கு அவங்க நம்ம கடல்கரையைத் தேடி வந்திருக்காங்க. நாளைக்கு நாம் அவங்க கடல்கரைக்குப் போனாலும் போவோம். ஆமா."

அது உண்மைதான். அதற்காக ஒரு சிறு பூசலைக்கூடக் கிளப்பாமல் விட்டுவிடுவதா? கையில் காசு குலுங்கும் நாட்கள்தானே? 'கேஸ்' கிளம்பினாலும் ஒரு கை பார்த்து விடுவது! அவ்வளவுதானே!

செம்பன்குஞ்சு அவர்களின் மனவோட்டத்தை உணர்ந்து கொண்டான். மனசுக்குக் கஷ்டமாக இருந்தது அவனுக்கு. செம்பன்குஞ்சுவின் வேலையாட்களுக்கு மட்டுமல்ல, பிற தோணிக்காரர்களுக்கும்கூட, பழனி பேரிலும், அவனுடைய கூட்டாளிகள் பேரிலும் ஒரே பொறாமை ஏற்பட்டுவிட்டது. 'இவ்வளவு திறமைசாலிகளாக இருக்கிறார்களே இவர்கள்!' என்றிருந்தது அவர்களுக்கு. சிலர் அவர்களுக்கு எதிராகப் பேசவும் தொடங்கினார்கள்.

இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாகவே கடற்கரையில் பெரும் சண்டையும் பூசலும் கிளம்பின. ஒரே கடற்கரையைச் சேர்ந்தவர்கள் பரஸ்பரம் தாக்கிக்கொண்டனர். அடிதடியில் இரண்டு மூன்று பேர்களுக்கு மண்டை பிளந்துவிட்டது. அன்றும், அதற்கு மறுநாளும், அந்தக் கடற்கரையைச் சேர்ந்த ஒரு தோணிகூடக் கடலேறிச் செல்லவில்லை. பலர் தலைமறைவாகத் திரிந்து கொண்டிருந்தனர். போலீஸ் படை கடற்கரைக்கு வந்து யார் யாரையோ பிடித்துக்கொண்டு சென்றது. துறை அரயன் தலையிட்டு, அவர்களுக்கு விடுதலை தேடிக் கொடுத்தார்.

ஒவ்வொருவராக வந்து துறை அரயனுக்குரிய காணிக்கையைச் செலுத்திவிட்டுச் சென்றனர். வழக்கு நடத்த நிதியும் வசூலித்தனர். ஒருமட்டும் வழக்கு ஓய்ந்தது. ஆனால், சாக்ரைப் பருவத்தில் அன்றுவரை கையில் சேர்ந்திருந்த காசு பூராவும் கரைந்துபோய் விட்டது. வேலாயுதன் ஒருவன் மட்டும், துறை அரயனைச் சென்று காணவில்லை. துறை அரயன் அவன் பெயரை நினைவிலிறுத்திக்கொண்டார். அவரே போலீசைத் தூண்டி அவனைக் கைது செய்ய வைத்து விட்டார். வேலாயுதன் ஒரு வார காலம் சிறையில் கிடந்தான். சிறையை விட்டு வெளியே வந்ததும் அவன் சொன்னான்:

''நான் அவரை மதிக்கப் போறதில்லே!''

ஒரு வாரத்திய மீன் வருவாய் செம்பன்குஞ்சுவுக்கு நஷ்டம். அத்தனையும் பெரும் தொகைக்கு விற்பனையாகக் கூடியதல்லவா?

மீண்டும் கடலில் வேலை துவங்கிவிட்டது.

பழனியை வீட்டுக்கு அழைத்துவர வேண்டுமென்று ஒவ்வொரு நாளும் சொல்லுவாள் சக்கி. ஒருநாள் வேலையாட்கள் அத்தனை பேரும் திருக்குன்றப்புழைக்குச் சென்றிருந்தனர். பழனி மட்டும் போகவில்லை. செம்பன்குஞ்சு பழனியை அணுகிப் பேசினான்:

"தம்பீ, நீ ஏன் போகலெ?"

"நான் எதுக்குப் போறேன்!" என்றான் பழனி.

உண்மைதான். அவன் திருக்குன்றப்புழையில் யாரையும் பார்ப்பதற்கில்லை. செம்பன்குஞ்சு பழனியைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

"வா. மத்தியானச் சாப்பாட்டை வீட்டிலெ வச்சுக்கிடலாம்."

அழைப்பை ஏற்றுக்கொண்டான் பழனி. சக்கி கறிவகைகளோடு விசேஷ விருந்து தயாரித்தாள்.

பழனி எந்த வீட்டுக்கும் சொந்தமான குழந்தை அல்ல. அவன் திருக்குன்றப்புழைக் கடற்கரையின் பிள்ளை. தாய் தந்தையரைப் பார்த்த நினைவுகூட அவனுக்கு இல்லை. 'உன்னை யார் வளர்த்தார்கள்?' என்ற கேள்வி எழுந்துவிட்டால், என்ன பதில் சொல்ல முடியும் அவனால்? 'எப்படியோ வளர்ந்து விட்டேன்' என்றுதானே அவனால் பதில் சொல்ல முடியும்? அவனைப் பேணி வளர்ப்பதற்கு எந்த உயிரும் உழைத்துப் பாடு பட்டுவிடவில்லை. அவன் வயிற்றை நிரப்பிக்கொள்ள அவனே பாடுபட்டான். அவன் சின்னப் பயலாக இருக்கும்போதே, வலையின் நூலைப் பிடித்துக்கொண்டிருக்கட்டும் என்று, அவனையும் தோணியில் தூக்கிப் போட்டுக்கொண்டு கடலுக்குப் போவார்களாம்—சுறுமீன்களும், கடல் பன்றிகளும் வாழும் கடலில்! அன்று உலகில் எந்த ஜீவன் அவனிடம் அக்கறை காட்டிற்று?

வயது வந்தபோது வேலையாளாக அவனும் தோணியில் சென்றான். அவன் கையில் காசு குலுங்கிற்று. காசு இருந்த நாட்களில் மனம்போல் செலவு செய்தான். ஒன்றுமில்லாத போது, ஒன்றுமில்லாமலே நாட்களைக் கழித்தான். அவன் மனத்திலும் கனவுகள் எழுந்ததுண்டா? எழுந்திருக்கும். இல்லை என்று சொல்லிவிட முடியுமா? ஆனால், அன்று வரை அவன்

வயிறு நிரம்ப உண்ணவேண்டுமென்று யாராகிலும் கவலைப் பட்டதுண்டா? அந்த ஆசை ஒருவருக்குமே அதுவரை தோன்றியதில்லை. அவனும் எந்த இடத்திலும் இதற்காக உரிமைக் குரல் எழுப்பியதுமில்லை.

அன்று முதன்முதலாக அவனுக்கு ஓரிடத்தில் உணவு தயாராகிறது. வயிறு நிரம்ப, திருப்தியுடன் அவன் உண்ண வேண்டும் என்பதற்காகப் பக்கத்தில் நின்று இலை பார்த்துப் பரிமாறுகிறாள் ஒருத்தி. ஒருவன் உள்ளத்தில் பரவச உணர்ச்சியைக் கிளறிவிடும் காரியமல்லவா இது? அவன் எந்தெந்தக் கறிவகைகளை ஆவலோடு உண்ணுகிறான் என்பதைக்கவனித்து, திரும்பத் திரும்ப அதே கறிகளை எடுத்துப் பரிமாறினாள் சக்கி.

இத்தனை ஏற்பாடுகளும் எதற்காக என்று பழனி யோசித்தானோ என்னவோ?

சக்கி கேட்டாள்:

''தம்பி, உனக்கு என்ன வயசாச்சு?''

''யாருக்குத் தெரியும்?'' என்றான் அவன்.

உண்மையிலேயே அவனுக்குத் தெரியாதுதான்.

சக்கியின் ஆவலுணர்ச்சி சட்டென்று சோர்ந்து விழுந்து விட்டது. வயது என்ன என்பதுகூடத் தெரியாமல் இருப்பது ஆச்சரியம்தான்! அப்படியானால் இனிமேல் ஒன்றுக்கு இரண்டு தரம் யோசித்துத்தான் ஏதேனும் கேட்க வேண்டும். எந்த ஜாதியைச் சேர்ந்தவனோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம். ஆனால், குறைந்த பட்சம் அதையாவது தெரிந்துகொள்ள வேண்டாமா?

''உன் வீடு எங்கிருக்குது?''

''சின்னக் குடிசை ஒண்ணு இருக்குது. அதிலேதான் இருக்கேன்.''

''கையிலே கிடைக்கிற காசையெல்லாம் என்ன செய்யுறே?''

''என்ன செய்ய? செலவழிப்பேன்!''

பெற்ற தாயைப்போல் உபதேசம் செய்தாள் சக்கி:

''தம்பி, யாருமே உனக்கு இல்லைன்னும் சொல்லுறே. கிடைக்கிற காசையெல்லாம் அப்படிச் செலவு பண்ணலாமா?

நாலு நாள் நோய் நொடியில் விழுந்துட்டா என்னுகும்?''

''ஹூம்!''

என்ன அலட்சியம்! அவன் பிறந்து வளர்ந்ததே ஓர் ஆச்சரியமான கதைதான்! நோய் நொடியில் விழுவதைப்பற்றி அவனுக்கு என்ன கவலே இருக்க முடியும்? அவனுக்கு அதெல்லாம் ஒரு பொருட்டா என்ன!

தாய்மை உணர்ச்சி கவிய அந்தரங்க சுத்தியோடு சக்கி சொன்னுள்:

''இப்படியே காலந் தள்ளிக்கிட்டு இருந்தாப் போதுமா?''

''வேறே, என்ன செய்யுது...ம்?''

அவனுக்கு வாழ்க்கையில் எந்த லட்சியமும் இருப்பதாகத் தெரியவில்லே. இதென்ன வாழ்க்கை? சற்றும் யோசியாமல் எவ்வளவு அலட்சியத்துடன் பதில் சொல்லி விடுகிருன்!

''ஆமாம். அப்படித்தான் இருக்க முடியும். அன்று வரையிலும், ஒரு லட்சியத்தை உருவாக்கிக்கொண்டு உழைத்தவன் அல்ல அவன்.

சக்கி, சற்று கண்டிப்பாகச் சொன்னுள்:

''தம்பி, நீ இப்படி இருந்தாப் போதாது!''

பழனி பதில்சொல்லவில்லே. சக்கி தொடர்ந்து சொன்னுள்:

''இண்ணேக்கு உனக்கு வேலே பாத்து வயெத்தக் கழுவ முடியுது. நாளேக்கு நிலேமை எப்படி எப்படியோ ஆயுப்புடலாம். அதோட இன்னெுண்ணு. மனுசனுப் பொறந்துட்டா அவனுக்குன்னு சிலதெல்லாம் வேண்டியிருக்குது. உன்னேக் கவனிச்சிக்கிடறதுக்கு ஒருத்தி இருந்தா...கண்டிப்பா அது வேணும். ஆமாம். உனக்குன்னு ஓர் இடம், பொங்கி வச்சுக்கிட்டு நீ வர்ற வழி பாத்துக்கிட்டு நிக்க ஓர் இடம் வேண்டாமா? நீயே அதையெல்லாம் நெனச்சுப் பாரு. எவ்வளவு அருமையான விஷயம் அதெல்லாம்? இல்லேயா?''

பழனி அதற்கும் பதில் பேசாமல்தான் இருந்தான்.

''நீ கல்யாணம் கட்டிக்க!'' என்ருள் அவள் முடிவாக.

''சரி!'' என்ருன் அவன்.

"அப்படீன்னு நானே பாத்து உனக்கு முடிச்சு வைக்கட்டுமா?"

அதற்கும் தலை அசைத்தான் அவன்.

சக்கி அவனிடம் கேட்டாள்.

"பொண்ணு யாருன்னு உனக்குத் தெரியவேண்டாமா?"

"யாரு?"

"என்' மக."

அதற்கும் அவன் சம்மதம் தெரிவித்தான்.

கல்யாணப் பேச்சு இந்த அளவுக்கு முன்னேறிவிட்ட அந்த நேரத்திலும்கூட சக்கிக்குப் பல குறைகள் மனத்தை உறுத்தின. அந்தச் சம்பந்தத்தில் சாதகமான அம்சங்களையும் அவள் கவனிக்கத் தவறவில்லை. பழனிக்குச் சொந்தமான சுற்றம் என்பதே இல்லை. அப்படிப்பட்ட ஒருவன் கையில் பெண்ணை ஒப்படைத்து விட்டால், பின்னால் அவன் ஏற்றக் குறைவாக நடந்துகொள்ளும் பட்சத்தில், யாரிடம் முறையிட முடியும்?

செம்பன்குஞ்சு சொன்னான்:

"அவன் ரொம்பவும் நல்ல மாதிரி!"

"பொண்ணெ யாருக்குக் கட்டிக் கொடுத்தீங்கன்னு கேக்கறவங்க கிட்டே என்ன பதில் சொல்ல முடியும்?" என்று கேட்டாள் சக்கி.

"அவன் சொந்தமா ஒரு வீடு வெச்சுக்கிடுவான்," என்று சமாதானம் சொன்னான் செம்பன்குஞ்சு.

எல்லாவற்றுக்கும் மேலாக மற்றொரு விஷயம் அவள் மனத்தை அரித்துகொண்டிருந்தது:

"அவன் எந்த ஜாதியைச் சேர்ந்தவன்?"

"மனுச ஜாதி; கடலிலெ வேலை பாக்குற ஜாதி."

"நம் சொந்தக்காரங்க சண்டைக்கு நிப்பாங்களே?"

"சண்டை போட்டா, போட்டுட்டுப் போறாங்க!"

"அப்பொ நாம தன்னந்தனியா ஆயிட மாட்டமா?"

"ஆயுட்டுப் போறோம். போ!"

ஆணித்தரமாகப் பதில் சொல்லிக்கொண்டு வந்தான் செம்பன்குஞ்சு.

"நான் எப்படியும் எம் பொண்ண அவனுக்குக் கட்டிக் கொடுத்துப்புடுவேன்!" என்றான் அவன்.

# 8

இரண்டு மூன்று நாட்களாகவே மழை ஒய்வு ஒழிச்சல் இல்லாமல் கொட்டிக்கொண்டிருந்தது. கணப்பொழுதும் ஓய்வில்லை. கடல் நிறையச் செம்மீன். ஆனல், யாரும் கடலுக்குச் செல்லவில்லை. கடலேறிப் பாடுபடவேண்டியது மனித உயிர்தானே? குளிரோ தாங்க முடியாதபடி இருந்தது. மறு நாள் பொழுது புலர்ந்தபோது ஒருமட்டிலும் வானம் வெளுத்தது. அன்று தோணிகள் கடலுக்குச் சென்றன. அன்று மீனும் ஏராளமாகக் கிடைத்தது. தோணிகள் கரை வியாபாரமும் ஆயிற்று. திடீரென்று மறுபடியும் வானம் வந்தடைந்து இருண்டது. மழையும் விடாது கொட்டியது. அம்மாதிரி பெருமழை என்றுமே பெய்ததில்லை. அப்படியே தொடர்ந்து நாட்கணக்கில் கொட்டிக்கொண்டிருந்தது.

கிட்டங்கிகளில் கருவாடு தேங்கிக் கிடந்தது. இதற்கு மேலாக அரைகுறையாய்க் காய்ந்த மீனும் நிறையவே இருந்தது. வேகவைத்துச் சேமித்திருந்த மீனுக்கும் குறை வில்லை. அழுகிப்போன பச்சை மீனே ஒரு பக்கம் அம்பாரமாகக் குவிந்து கிடந்தது. எல்லாம் ஒன்றோடு ஒன்று கலந்து ஏகக் கதம்பமாய்க் கிடந்தன, கிட்டங்கிகளில். தாங்க முடியாத நஷ்டம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் அத்தனையும் தென்படலாயின.

சாகரைப் பருவத்தின் துவக்க காலத்தில் வெய்யில் பளீரென்று அடித்துக்கொண்டுதான் இருந்தது. அதோடு வான வெளியும் பளிச்சென்று இருந்தது. மொத்த வியாபாரிகளான ஸேட்டுகளின் ஆட்கள் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அப்போதுதான்தான் மழை என்ற துரதிருஷ்டம் பிடித்துக் கொண்டது.

அதோடு பரீக்குட்டி மற்ெருரு சிக்கலில் வேறு மாட்டிக் கொண்டு விட்டான். ஸேட்டு ஒரு பெரிய புகாரைக் கிளப்பி விட்டார். அவன் முதலில் அனுப்பி வைத்த சரக்கு நயமாக இருந்ததாம்! மறுமுறை அனுப்பி வைத்ததோ காயாத சரக்காம்!

ஸேட்டு சொன்ஞர்:

"இந்தப் பாரு, உன் வியாபாரம் நமக்கு வேண்டாம். தந்த பணத்தைத் திரும்பத் தந்து விடு. சரக்கை எடுத்துக் கொண்டு போய்ச் சேரு!"

என்னதான் சொல்லியும் சேட்டின் மனம் திரும்பவில்லை. பரீக்குட்டி ஆலப்புழையில் ஒவ்வொரு கடையாய் ஏறி இறங்கிப் பார்த்தான். ஒருவருக்கும் சரக்கு வேண்டாம். கிட்டங்கி நிறையத் தேங்கிக் கிடக்கிறதாம் சரக்கு!

காரியஸ்தர் பாச்சு பிள்ளையின் காலைப் பிடித்துக்கொண்டு பரீக்குட்டி கெஞ்சினுன். அவருக்குத் தனியாகக் 'கமிஷன்' வேறு தருவதாகச் சொன்ஞன்.

"ம்...முயற்சி செய்து பார்க்கிறேன்," என்ருர் அவர். இவ்வாறு பெரும் நஷ்டத்தில் கையில் சிறிது பணம் வந்து சேர்ந்தது. அந்தப் பணத்தைக் கொடுத்துச் சரக்கு வாங்கி வைத்திருந்த போதுதான் சனி போல் கிளம்பின புயலும் மழையும்.

பரீக்குட்டியின் பணம் அழுகி தாட்பட அழிந்துகொண்டிருந்தது. இப்படியே இன்னும் ஒரு நாள் சென்று விட்டால் கூடப் போதும், இருந்த சரக்கைக் குழித்தோண்டிப் புதைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

கடற்கரை களையிழந்து போய்விட்டது. ஒரு சில தோணிகள் கடலுக்குச் சென்று வந்தன. ஏதோ கொஞ்சம் மீன் அகப்படும். குடிகளில் அது விற்பனையாகும். லாரிகள் வருவது அபூர்வம். வியாபாரிகளைப் பார்த்து விலை சொன்ன காலம் போய்விட்டது. அவர்கள் மதிப்பிடுகிற விலைக்குச் சரக்கைக் கொடுக்கும்படி யாகிவிட்டது.

ஓட்டல்களிலோ வியாபாரம் என்பதே யில்லை. ஜவுளிச் கடைகளைச் சீண்டுவார் இல்லை. வேர்க்கடலை விற்றுக்கொண்டிருந்த பயல்களைக்கூடக் காணும்!

இந்தப் பயங்கர நிலை, என்றுதான் மாறப்போகிறதோ? அன்றாட வயிற்றுக் கஞ்சிக்குக்கூடத் திண்டாட்ட மாகி விட்டது.

தோணிச் சொந்தக்காரர்களுக்கு விழி பிதுங்கிற்று. அதி லும் குறிப்பாக ராமன்குஞ்சு ரொம்பவும் திணறிப்போனுன். அதோடு அந்த வருடம் அவனுடைய வியாபாரமும் கொழுக்க வில்லை. அவுசேப்பு, தான் கடனுகக் கொடுத்த பணத்தைத் திருப்பிக்கேட்டு நச்சரிக்க ஆரம்பித்துவிட்டான். அவனுக்கு ராமன்குஞ்சுவின் சீனித்தோணியின் மேல் ஒரு கண்!

கடற்கரையில் ராமன்குஞ்சுவுக்கும் அவுசேப்புவுக்கும் பேச்சுவார்த்தை தடித்தது. பணத்தை இன்னும் ஒரு வார காலத்திற்குள் தந்துவிடுவதாக ராமன்குஞ்சு சத்தியமிட்டுச் சொன்னுன். செம்பன்குஞ்சுவை மனத்தில் நம்பிக்கொண்டு இதைச் சொன்னுன் அவன்.

ராமன்குஞ்சு மறுபடியும் செம்பன்குஞ்சுவிடம் பணம் கேட்கலானுன். அந்தத் தடவை கேட்ட மாத்திரத்தில் பணம் கொடுக்க செம்பன்குஞ்சு தயாராக இருக்கவில்லை. அவ னுடைய தயக்கத்தை ராமன்குஞ்சுவும் புரிந்துகொண்டான்.

"என்ன செம்பன்குஞ்சு, சங்கதியெ மனசுவிட்டுச் சொல் லேன்!" என்றுன் ராமன்குஞ்சு.

மிகவும் தயங்குவதுபோல் பாவனை செய்துகொண்டு பேசினுன் செம்பன்குஞ்சு:

"நானும் ஒரு பிடியில்லாம பணம் தந்துகிட்டிருக்க முடி யுமா?"

"என்ன வேணும் சொல்லேன்?"

"அதை நான் சொன்னு நல்லா இருக்குமா?"

கடைசியில் மனத்தில் இருந்த எண்ணத்தை வெளியிட் டான் செம்பன்குஞ்சு. ராமன்குஞ்சு அவனுடைய சீனித் தோணியை ஈடு வைக்க வேண்டும்.

சீனித்தோணி செம்பன்குஞ்சுவின் கைக்கு வந்துசேர்ந்தது.

அன்றும் அச்சகுஞ்சுவின் வீட்டில் ஒரே சண்டையும் சச்சரவும்தான். செம்பன்குஞ்சுவின் கையில் ஒன்றுக்கு இரண்டு தோணிகள் வந்துவிட்டன. நல்லபெண் அச்ச குஞ்சுவை இடித்துப் பேசினுள்.

"எதுக்கு நீயும் ஒரு மனிசன்னு சொல்லிக்கிட்டுத் திரியறே?"

"நீயும் சேர்ந்துதான் எல்லாத்தையும் பாழடிச்சுப்புட்டெ. சாகரை சமயத்திலே அவுசேப்புக் கிட்டெ கொடுக்கணும்னு உங்கிட்டெ தந்து வெச்சேனே, அந்த பணமெல்லாம் எங்கே?"

"அதுக்காக அரைக்குத் துணியில்லாம திரிஞ்சிகிட்டு இருக்க முடியுமா? ஏனம் இல்லாம சோறு பொங்க முடியுமா?"

"எங் கையிலே மட்டும் இருந்திருந்தா இப்படி ஆகியிருக்குமா?"

"குடிச்சுத் தொலேச்சிருப்பே."

அச்சகுஞ்சு முன்னல் பாய்ந்து அவளுக்கு இரண்டு அறை கொடுத்தான்.

மற்றுமொரு தோணி கைக்கு வந்து சேர்ந்ததில் சக்கிக்கு ஒரே சந்தோஷம். ஆனல், பரீக்குட்டியிடம் கணக்குத் தீர்க்காமலிருந்ததில் அவளுக்கு வருத்தம்தான். கறுத்தம்மா வேறு அடிக்கடி நினேவூட்டிக்கொண்டிருந்தாள்.

அன்றிரவு சக்கி செம்பன்குஞ்சுவிடம் சொன்னுள்:

"இருந்தாலும் இது பெரிய அநியாயம்."

"எது?"

"நட்டநிசி வேளேயிலே அவன் கொடுத்ததை யெல்லாம் வாங்கி வச்சுகிட்டு, இப்போ பேச்சு மூச்சு இல்லாம 'கம்'முனு இருந்துகிட்டிருக்கே."

செம்பன்குஞ்சு சினத்துடன் சீறி விழுந்தான்.

"கோவிச்சுகிட்டாப் போதுமா? அந்தப் பையன் பாவம், பணத்துக்குத் திண்டாடிக்கிட்டிருக்கான். இப்போ கொடுத்தா அவனுக்கு எவ்வளவோ ஏந்தலா இருக்கும்,"

"இப்போ என் கையிலே காசு எங்கே இருக்கு?"

இந்த சம்பாஷணேயைக் கவனித்துக் கொண்டிருந்த கறுத்தம்மா, தன் நினேவின்றிப் பளிச்சென்று சொல்லி விட்டாள்:

"அப்பா, அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துடு."

கடுமையான குரலில் கேட்டான் செம்பன்குஞ்சு:

"உனக்கென்ன அதைப்பத்தி?"

பதிலுக்குப் பதில் மணி அடித்தாற்போல் சொல்லத் தெம்புண்டு அவளுக்கு. அதற்கான விஷயங்களும் மனத்தில் இருந்தன. 'நான்தான் முதலில் பணம் கேட்டேன்' என்று சொல்லத் துடித்தாள் அவள். அவள் சொல்லை மதித்துத்தான், கையில் பணமில்லாமல் இருந்துங்கூட, கடனுகச் சரக்குத் தந்தான் அவன். ஒரு விஷயத்தை ஆணித்தரமாகச் சொல்லி விடவேண்டும். செம்பன்குஞ்சு கையில் செல்வம். சேரச்சேர, அவள் பரீக்குட்டியின் ஆதிக்கத்திற்குள் அடைபட்டுக் கொண்டே வருகிருள்.

கறுத்தம்மா திடுமென்று ஏதாவது சொல்லிவிடக்கூடும் என்ற பயம் சக்கிக்கு ஏற்பட்டது. வாய் தவறி வார்த்தை வந்துவிட்டால் விபரீதம்தான்.

கறுத்தம்மாவின் பக்கம் சேர்ந்துகொண்டு பேசினுள் சக்கி.

"அவ உள்ளதைத்தானே சொல்லுதா? இதுக்கு இவ்வளவு தூரம் துள்ளுறதுக்கு என்ன இருக்கு?"

"இதைப் பத்தி அவ ஏன் பேசணும்னு கேக்கறேன்? அவளா கடன் வாங்கினு? இல்லே, அவன், அவகிட்டேயா பணத்தைக் கீழேவைன்னு கேக்கப் போருன்!"

சக்கியும் கோபமாகப் பதில் சொன்னுள்:

"கேக்கலேன்னு இருக்கட்டுமே. அதுக்காக அவ சொல்லக் கூடாதுன்னு இருக்குதா?"

செம்பன்குஞ்சு மிகவும் கண்டிப்பான குரலில் உபதேசம் பண்ணுவது போல் சில வார்த்தைகள் சொன்னுன்:

"வந்து ஒரு விஷயம் சொல்லிப்புடறேன். ஆம்புள்ளே களுக்குள்ளே ஆயிரம் இருக்கும். அதிலே நீ தலையிட வேண் டியதில்லெ. இனெருத்தன் கையைப் பிடிச்சுக்கிட்டு வாழ வேண்டியவ நீ. அதையும் சொல்லிப்புடறேன்."

அரிய உபதேச வார்த்தைகள்தாம். சந்தேகமில்லே. கறுத்தம்மா கவனத்தில் கொள்ளவேண்டிய விஷயங்கள்தாம் அவை.

இப்போது செம்பன்குஞ்சுவின் கோபம் சக்கி பக்கம் பாய்ந்தது.

"இந்தாப் பாரு. உன்னைப் பாத்துத்தான் உன் பொண்ணு படிச்சுக்கிடுவா. அவ அப்படித்தான் பேசுவா."

செம்பன்குஞ்சு ஒவ்வொன்றாகப் பல பழிகளைச் சக்கிமேல் சுமத்தித் திட்ட ஆரம்பித்தான். சந்தர்ப்பத்தை உணர்ந்து சக்கியும் மௌனம் சாதித்தாள்.

தாயும் மகளும் தனியாக இருந்த ஒரு சந்தர்ப்பத்தில் சக்கி கறுத்தம்மாவிடம் கேட்டாள்:

"கறுத்தம்மா, நீ என்னமோ உன்னையே மறந்து அப்பா கிட்டே பேசிப்புடறியே? இந்தப் பாரு, அவருக்கு ஏதாவது சந்தேகம் வந்துச்சுன்னு அப்புறம் என்னாகும்னு யோசிச்சுப் பாரு...அக்கம்பக்கத்து வாயாடிக் கழுதை என்ன பேச்சுப் பேசுதுன்னு தெரியாதா உனக்கு? ஒருவார்த்தை அவரு காதிலே விழுந்துச்சுன்னு...கடல் தாயே! நீதான் காப்பாத்தணும்!"

இவைகளெல்லாம் கறுத்தம்மாவுக்கும் தெரிந்த விஷயங்கள்தாம். இருந்தாலும் அவள் விட்டுக் கொடுக்காமல் பேசினாள்.

"அம்மா, எப்படியும் அந்தப் பணத்தைத் திரும்பக் கொடுத்துடணும்!"

"எனக்கும் அந்த எண்ணம்தான்."

"நீ சும்மாவாச்சும் சொல்லிக்கிட்டிருக்கே. இன்னும் கொடுக்காமத்தானே நாளைக் கடத்திக்கிட்டிருக்கீங்க! என்ன என்ன வழிகள் எல்லாமோ சொல்லிப் பார்த்தேன். ஒண்ணும் கேக்கலே, நீ."

கணநேரத்துக்குப் பின், மீண்டும் அவளே தொடர்ந்து சொன்னாள்:

"அந்த கடனெ வள்ளிசாக் கொடுத்தப்புறம் என்னெ கட்டிக் கொடுத்......"

அரைகுறையாகச் சொல்லிவிட்டு நீண்ட பெருமூச்சு விட்டாள் கறுத்தம்மா. சக்கிக்கு விஷயம் புரிந்துவிட்டது.

"நீ சொல்லுறது நெசம்தான். அதுதான் நியாயம்!"

பழனியை மணந்துகொள்வது பற்றிக் கறுத்தம்மாவின் கருத்தை அறிந்துகொள்ளத் துடித்துக்கொண்டிருந்தாள் சக்கி. சம்மதம் என்றோ, இல்லை என்றோ தெரிவிக்காமலே இருந்

தாள் கறுத்தம்மாவும். 'சின்னஞ்சிறிசு, வெட்கப்பட்டுக் கொண்டிருக்கிறது,' என்று சக்கியும் ஆறுதல் தேடிக்கொண்டிருந்தாள். இருந்தாலும் அவளுக்கும் பரீக்குட்டிக்கும் இருந்த உறவு எப்படி வந்து விடுமோ என்ற பீதி அவளைச் சதா வருத்திக் கொண்டுதான் இருந்தது. கறுத்தம்மாவின் தோழிகள் மூலமாகக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்றால், செய்தி ஊர் முழுவதும் பரவிவிடும். இந்த நிலைமையில் கறுத்தம்மா தானாகவே, 'அந்தக் கடனை அடைத்துவிட்டு என்னை......' என்று தனது அந்தரங்க எண்ணத்தை வெளியிடும்போது, எத்தனை ஆறுதலாக இருந்திருக்கும் சக்கிக்கு.

சக்கி சிரித்தாள். அவள் முகம் மலர்ந்தது.

"அப்பொ இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதம்தானே உனக்கு?"

கறுத்தம்மா பதில் சொல்லவில்லை. மலர்ந்த முகத்துடன் சக்கி சொன்னாள்:

"தங்கமான பையன் அவன். ஆமா, ரொம்ப நல்ல ஆளு!"

சக்கி பழனியைப் புகழ்ந்து எதை எதையோ சொன்னாள். பாராட்டிச் சொல்வதற்கான விஷயங்களும் அவளிடம் இருந்தன. சக்கி சொல்லச் சொல்ல வாய் திறவாமல் கேட்டுக் கொண்டிருந்த கறுத்தம்மாவின் மனத்தில் தன்னையறியாமலே ஓர் எதிர்ப்பு உணர்ச்சி தலை தூக்கிற்று. கோபவெறி கொண்டு சீறிப் பாயவேண்டும் போலிருந்தது. காரியங்களும் அதற்கிசைந்தாற் போல்தான் நடைபெற்றுக்கொண்டு வந்தன. பழனிக்கு என்ன வயதாகிறது? இதை அறிந்துகொள்ள உரிமை கிடையாதா அவளுக்கு? சரி, அவனுக்குச் சொந்தக்காரர்கள் யார்? பழனி அவளுடைய இதயத்தில் நுழைந்து இடம் பெற்றுக்கொண்டு விட்டானா?

ஆனால், சக்கிக்கு ஏற்பட்ட ஆறுதலே பெரிய ஆறுதலாக இருந்தது அவளுக்கு. அவள் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தாள். கறுத்தம்மாவுக்கோ மூச்சுத் திணற ஆரம்பித்துவிட்டது. வாயைத் திறந்து 'ஓ' வென்று கத்தவேண்டும் போலிருந்தது. இரண்டு துண்டாக மனம் விண்டுவிடும்படி கத்தினாள் அவள்.

"கொஞ்சநேரம் வாயை மூடிக்கிட்டு இரு அம்மா!"

பல்லை நறநறவென்று கடித்தவாறு அவள் தனக்குத்தானே ஏதோ முணுமுணுத்துக்கொண்டாள். சக்கிக்கு ஒன்றுமே புரியவில்லை.

சக்கி சொன்னாள்:

"கல்யாணத்துக்கு முன் கடனைக் கொடுத்துப்புடணும்னு கண்டிப்பா சொல்லிப்புடறேன்."

கறுத்தம்மாவுக்கு மூர்க்கத்தனமான கோபம் பீறிட்டுக் கிளம்பியது. கோபமும் வெறுப்புணர்ச்சியும் கலந்த குரலில் அவள் கத்தினாள்:

"பூ! கடனை அடைச்சுடச் சொல்லப்போறே! அப்ப டன்ன இத்தினி நாளும் என்ன செய்துக்கிட்டிருந்தியாம்?"

"இப்போ நான் விடாப்புடியாப் புடிச்சிக்கிட்டு கண்டிப் பாச் சொல்லுவேன்."

கறுத்தம்மா நிராசை தொனிக்கச் சொன்னாள்:

"ஒண்ணும் நடக்கப் போறதில்லெ. கல்யாணம் அது பாட்டுக்கு நடந்து முடிஞ்சிடும். பார்த்துக்கிட்டே இரு. அப்படித்தான் நடக்கப் போகுது."

சக்கி திடமான குரலில் சொன்னாள்:

"அப்படியில்லே. நீ வேணும்ணு பாரு!"

குழப்பமான எண்ணங்களுக்கு ஆட்பட்டுப் பரிதவித்துக் கொண்டிருந்தாள் கறுத்தம்மா. அதே சமயம் அவள் மனத்தில் மற்றொரு தீர்மானம் உருவெடுத்தது.

"அந்தப் பணத்தைக் கொடுக்கல்லேன்னு நான் விட்டுடப் போறதில்லெ. இந்தப் பாரு, கொடுக்கல்லேன்னு என் உசிரையே அழிச்சுக்கிடுவேன், ஆமா."

பதறிப்போனாள் சக்கி:

"இந்தப் பாரு, கன்னாப் பின்னான்னு வாய்க்கு வந்தபடி உளறிக்கிட்டிருக்காதே."

கறுத்தம்மா விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்:

"என்னம்மா, நீ சொல்லிக்கிட்டிருக்கே. அவரு அடியோடு நாசமாப் போய்க்கிட்டிருக்காரு. கையிலெ காசில்லேன்னு வேறு வழியில்லேன்னு விட்டுடலாம். கொடுக்கணும் என்கிற எண்ணமே இல்லை. அதுதான்."

சக்கியையும் பழித்துப் பேசிக்கொண்டே போனுள் கறுத்தம்மா.

"உனக்கும்தான் கொடுக்கணும் என்கிற எண்ணம் கிடையாது," என்றும் சொன்னுள் அவள்.

"அந்த எண்ணமே கிடையாது." என்று பலமுறை சத்தியம் பண்ணிச் சொன்னுள் சக்கி.

"இனிமே அப்பா முகத்துக்கு நேரே இந்த விஷயத்தைச் சொல்லிப்புடப் போறேன்," என்ருள் கறுத்தம்மா.

"ஐயோ, அப்படிச் சொல்லிப்புடாதே!" என்று சக்கி கத்தினுள்.

"அப்புறம் நான் என்னதான் செய்யணும்னு சொல்லுதே நீ?"

சில விஞடிகளுக்குப் பின் அவளே தொடர்ந்து சொன்னுள்:

"கல்யாணம் முடிஞ்சு போற வழியிலே, திடீர்னு அவர் வந்து வழி மறிச்சு நிக்க வெச்சுக்கிட்டு, 'காசை எண்ணிக் கீழே வெச்சுப்புட்டுப் போ' அப்படீன்னு செல்லிப்புட்டாருன்னு, என்னு, என்னம்மா செய்வேன் நான்?

அந்த நிமிஷம் வரையிலும் சக்கி அப்படி எண்ணிப் பார்க்கவில்லே. மனத்தைக் கிலியில் ஆழ்த்திவிடும் பயங்கரமான சித்திரம் ஒன்றை வரைந்து கண்முன்பு நிறுத்திவிட்டாள் கறுத்தம்மா.

"அவன் எதுக்கு உங்கிட்டே கேக்கப் போருன்?"

"நான் கேட்டதுனலேதானே அவரு கடன் கொடுத்திருக்காரு."

"அது என்னமோ நீ வெளேயாட்டாக் கேட்டதுதானே?"

"அப்படீன்னு யார் சொன்னு?"

அவள் எழுப்பிய சித்திரம் சக்கியின் மனத்தைவிட்டு அகலவில்லே.

பரீக்குட்டி அவநம்பிக்கை மேலிட்டு, சோர்ந்துபோய் விட்டான். மனம் முறிந்து போய்விட்டது அவனுக்கு. கறுத்தம்மா சொன்னதுபோலவே நடைமுறையில் செய்து காட்டினுலும் காட்டிவிடுவான். தாங்கமுடியாத வெறுப்புணர்ச்சி

யில் வெறித்தனமாக அவன் நடந்து கொண்டாலும் ஆச் சரியப்படுவதற்கில்லை. படுபயங்கரமான நிலைமை அது.

கறுத்தம்மா சொன்னாள்:

"நான் அப்பாகிட்டே வாய்விட்டு எல்லாத்தையும் சொல்லிப்புடப் போறேன். பார்த்துக்கிட்டே இரு. இன்னைக்கே சொல்லிப்புடறேன். சொன்னா என்னத்தச் செய்துப் புடு வாராம்?"

"வேண்டாம் கறுத்தம்மா, வேண்டாம்!"

"இல்லே சொல்லத்தான் போறேன்!''

எப்படியும் கல்யாணத்துக்கு முன் கடனை அடைத்து விடு வதாகச் சக்கி மீண்டும் வாக்குறுதி அளித்தாள்.

அன்று சக்கி செம்பன்குஞ்சுவிடம் ஒரு சந்தோஷ சமா சரத்தைத் தெரிவித்தாள். கல்யாணத்துக்கு எதிராகக் கறுத் தம்மா எதுவும் சொல்லவில்லை என்பதே அந்தச் செய்தி. இப்படி இதைச் சொல்லிவிட்டு, 'ஆனால்—என்று இழுத்தாள் சக்கி. அர்த்தபுஷ்டி நிறைந்த இழுப்பு. அந்த விஷயத்தைப் பட்டவர்த்தனமாகச் சொல்லிவிட முடியுமா சக்கியால்?

பரீக்குட்டியின் பணத்தை எபபடியும் திரும்பக்கொடுத்து விடவேண்டும். அதற்கு முடிந்தவரையிலும் முயன்று பார்க்க வேண்டும் என்று மனத்தில் தீர்மானம் செய்து கொண்டாள் சிக்கி. ஆனால், தனது கணவனைத் தூண்டிக் காரியசித்தி பெறு எப்படி எப்படி என்பது அவளுக்குப் புலப்படவில்லை.

மார்க்கெட்டில் மீனின் விலை சரிந்துவிட்டது. கடற்கரை யில் செம்பன்குஞ்சுவும் பிறரும் கவலையில் ஆழ்ந்தனர். ஆனால், சில நாட்களிலேயே நிலைமை மாறிவிட்டது. கொச்சியிலும் ஆலப்புழையிலும் ஏற்றுமதி வியாபாரம் நடந்தது. ரங்கூனில் விலை விழுந்துவிட்டது என்றும் பேசிக்கொண்டனர். சரிபாதி விலைதான் கிடைக்கிறது என்று ஸேட்டுக்கள் குறைப்பட்டுக் கொண்டிருந்தனர். அதோடு கப்பல் வேறு மூழ்கிவிட்டதாம். ஆக மொத்தத் தொகையில் பாதிக்குத்தான் எல்லோருக்கும் கணக்கு முடித்துக் கொடுத்தனர்.

பரீக்குட்டி ரூபாய் ஆயிரம் இழந்துவிட்டான்!

கறுத்தம்மாதான் எப்படி மாறிபோய்விட்டாள்! வர விருந்த புதிய சூழ்நிலைகளுக்கு அனுசரணையாக அவள் தன்

ளையே தயார் செய்து கொண்டாளோ என்னவோ! உடலும் உள்ளமும் வளர்ந்து விட்டன. தெம்பும் தைரியமும் ஏற்படலாயின. பரீக்குட்டியை சந்தித்துப் பேசவேண்டும் என்ற ஆசை அவளுக்கு. ஒரு சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தாள். அவனிடம் எவ்வளவோ வாய்விட்டுச் சொல்ல எண்ணினுள். விஷயங்களும் மனத்தை அழுத்திக்கொண்டிருந்தன.

ஒருநாள் அவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டனர். வேலியை ஒட்டிக் கறுத்தம்மாவும், மறுபக்கம் பரீக்குட்டியும் நின்று கொண்டிருந்தனர். அவள்தான் பேச்சைத் துவக்கினுள். காரிய காரணமின்றிச் சிரிப்பைத் தூண்டும் பேச்சு அல்ல.

அவள் கேட்டாள்:

"வியாபாரம் ஒரே நஷ்டமாய்ப் போயிடுச்சா?"

பேச்சு இப்படி ஆரம்பமாகும் என்று அவன் எதிர்பார்க்க வில்லை. அவன் எதுவும் பேசாமல் நின்று கொண்டிருந்தான். அவள் தொடர்ந்து பேசினுள்:

"எப்படியும் கடனைத் திருப்பித் தந்துடுவோம்."

"நீ எங்கிட்டேயிருந்து கடன் ஒண்ணும் வாங்கலியே" என்ருன் பரீக்குட்டி.

"இருந்தாலும் திரும்பத் தரவேண்டிய பொறுப்பு எனக்குத்தான்."

"ஏன்?"

"அப்படித்தான். கடனைத் தீர்த்துப்புட்டுத்தான்—"

பேச்சு பூர்த்தியாகாமல் தடைப்பட்டு நின்றது. அவளுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டு விட்டது. அவளுடைய முகம் சோர்ந்து தொங்கி விட்டது. கண்களில் கண்ணீர் நிரம்பி வழிந்தது.

அரை குறையாக அவள் சொல்லியதைப் பரீக்குட்டி பூர்த்தி செய்தான்:

"கடனைத் தந்துப்புட்டுத்தான் கல்யாணம் பண்ணிக்கிடணும். அப்படித்தானே?"

கறுத்தம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் சொட்டுச் சொட்டாய்க் கீழே சிந்தியது. பரீக்குட்டி அழவில்லை. அவன் கேட்டான்:

"இதோட தொடர்பு அறுந்து போயுடணும். அப்படித் தானே?"

சரம்போல் அவள் மனத்தைப் பிளந்தது அந்தக் கேள்வி. அவன் மட்டும் என்ன, உணர்ச்சியற்ற மரக்கட்டை போலவா அந்தக் கேள்வியைக் கேட்டான்? அவளைக் குறைகூற ஒன்று மில்லை. அவள் பொறுப்பில் எதுவும் நடைபெறவுமில்லை. அவள் என்ன பதில் சொல்லுகிறாள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அவள் சொன்னாள்:

"நீ எப்படியும் வியாபாரம் பண்ணி முன்னுக்கு வரணும்!"

இப்போது பரீக்குட்டியும் வெறும் காதல் பைத்தியம் அல்ல. அவன் சிரித்தான். ஒளியிழந்த வெறுமையுணர்ச்சியைக் காட்டும் சிரிப்பு!

"நான் வியாபாரம் பண்ணி முன்னுக்கு வரவா?"

அந்தக் கேள்விக்கு என்ன பொருள் என்பது கறுத்தம்மா வுக்குத் தெரியும். 'நாளுவது, முன்னேறுவதாவது' என்று தானே பொருள் அதற்கு? கறுத்தம்மாவால் அங்கு நின்று கொண்டிருக்க முடியவில்லை. அவள் அங்கிருந்து அகன்றாள். சிறிதுநேரம் அங்கேயே நின்றுகொண்டிருந்தான் பரீக்குட்டி.

அன்று செம்பன்குஞ்சு, சக்கியிடம் மிக முக்கியமான ஒரு செய்தியைத் தெரிவித்தான். அன்று அவனுக்கு ஒரே உற் சாகம். ரகசியமாக அவன் சொன்னான்:

"பழனி சீதனம் ஒண்ணும் வேண்டாம்னு சொல்லிப் புட்டான்."

சக்கியால் இதை நம்ப முடியவில்லை.

"அப்படீன்னா என்ன அர்த்தம்?"

"என்ன அர்த்தமா? சீதனம் இல்லாமலே கல்யாணம் பண்ணிக்கிடறானாம்!"

சக்கி சிறிது நேரம் செம்பன்குஞ்சுவைக் கூர்மையாய்ப் பார்த்தபடி நின்றாள். தான் சொல்லுவதை அவள் நம்பவில்லை என்று எண்ணிக்கொண்டு, மறுபடியும் சத்தியம் பண்ணிச் சொன்னான் செம்பன்குஞ்சு.

"கடல் அம்மா சத்தியமாச் சொல்றேன். அவனேதான் இதைச் சொன்னான்."

"அவன் வேண்டாம்னு சொல்லிப்புட்டான்னு, கொடுக்காமலே இருந்துப்புடுறதா?" என்று கேட்டாள் சக்கி.

ஒருவன் தானுகவே பணம் வேண்டாம் என்று சொல்லும் போது அவன் கையில் அதைத் திணிக்க வேண்டிய அவசியம் தான் என்ன? சக்கியின் பேச்சு புரியாமல் பேராச்சரியத்தில் ஆழ்ந்துபோய் நின்முன் செம்பன்குஞ்சு.

சக்கி கோபக் குரலில் கேட்டாள்:

"அவன் ஒண்ணும் தெரியாத பையன். அவங்கிட்டெ எதை எதையோ சொல்லி ஒப்புக்கொள்ள வச்சுப்புட்டே போலிருக்குது."

சட்டென்று அதை மறுத்துப் பேசினுன் செம்பன்குஞ்சு.

"ஐயோ, நான் ஒண்ணுமே சொல்லலே."

சக்தி ஆழமான கேள்வி யொன்றை எழுப்பினுள்:

"நான் ஒண்ணு கேக்கறேன். மனுசனுக்கு எதுக்கு இந்தக் காசும் பணமும்?"

"எங்கிட்டே ஏது பணம்?"

"சீதனம் நம்ம பொண்ணுக்காக நாம கொடுக்கிறது தானே?"

"அதுதான் அவன் வேண்டாமிங்கிறுனே!"

"பின்னே யாருக்காகப் பணத்தைச் சேத்துச் சேத்து வெச்சுக்கிட்டிருக்கியாம்?"

காரசாரமாய்ப் பேசிக்கொண்டே இருந்தாள் சக்தி. கிழடு தட்டிப் போன பின்பும் தன்னை ஓர் இளைஞுகப் பாவித்துக் கொண்டு இன்பத்துக்கு விழையலாம்; மெத்தையில் புரண்டு சுகம் பெறவும் ஆசைப்படலாம்; வேண்டுமானுல், இன்னும் ஒருத்தியையும் இழுத்து வைத்துக் கொள்ளலாம். அதோடு எல்லாம் முடிந்துவிட்டதா? மனிதப் பிறவி எடுத்தவன் அதற்கு மேலாகச் செய்து முடிக்கவேண்டிய காரியங்கள் எத்தனை இருக்கின்றன? செம்பன்குஞ்சுவின் அதிகாரத்திற்குப் பணிந்து விடாமல் சக்கி தொடர்ந்து சொன்னுள்:

"ஒண்ணு மட்டும் ஞாபகம் வச்சுக்க. நானும் உன்னோடெ பாடுபட்டுத்தான் இதை யெல்லாம் சேத்து வச்சுக்கிட்டிருக்கேன்."

அவளுடைய கோபத்தைத் தணிப்பதற்காகப் பொய்ச் சிரிப்புச் சிரித்தவாறு செம்பன்குஞ்சு சொன்னான்:

"அதுக்கென்ன இப்போ நாம ரெண்டு பேருமாச் சேர்ந்து சந்தோஷமா இருந்தாப்போச்சு. எனக்கு மட்டும்தானா மெத்தை தைக்கணுமிங்குது? உனக்காகவும்தான்."

சக்கிக்குப் பிரமாதமான கோபம் வந்து விட்டது. அவளுடைய குரலும் வலுத்தது. சண்டை மூண்டு விஷயம் அக்கம்பக்கத்து வீடுகளுக்கெல்லாம் எட்டி விடுமோ என்று கூடப் பயந்தான் அவன். சண்டை வளர இடங் கொடுக்காமல் மெதுவாக அங்கிருந்து வெளியேறிச் சென்று விட்டான் செம்பன்குஞ்சு.

கறுத்தம்மா அங்கு வந்தாள்.

"அம்மா, நீஎனக்குச் சீதனம் ஒண்ணும் தரவேண்டாம்!" என்றாள் அவள்.

"இந்தாப்பாரு சீதனம் ஒண்ணும் தராம உன்னெ அனுப்பி வெச்சா, அது எனக்கு அவமானமில்லையா? உனக்குச் சொந்தம்னு கையிலெ நாலு காசு இருக்கணும் பார்த்துக்க."

கறுத்தம்மா சொன்னாள்:

"போற இடத்திலே சம்பந்தியு மில்லெ, மாமியாரு மில்லெ. அப்படிப்பட்ட இடத்துக்குத்தானே அனுப்பி வைக்கப் போறீங்க? பின்னே என்னவாம்?"

சக்கியின் உள்ளத்தைத் தொட்டன அவ் வார்த்தைகள்! யாருமே இல்லாத இடத்தில் அவளைத் தள்ளுவதாக இடித்துக் காட்டுகிறாளோ?

"அதுக்காக! ஊர்க்காரங்க இல்லாமப் போயுட்டாங்களா?

"ஆமா. ஊர்க்காரங்க. பூ!"

கறுத்தம்மா சொன்னாள்:

"என்னெ எங்கேயாவது அனுப்பிச்சிட்டுப் போங்க. முதலாளிக்குப் பணத்தைக் கொடுங்க. அது போதும்"

சட்டென்று உணர்ச்சி மேலிட அவள் சொன்னாள்:

"அவரு கை தாழ்ந்து போயிட்டாரு. அணு அணுவா அவரை அழிச்சுப்பிட்டு நிம்மதியா காலம் தள்ளிப்புட முடியாது, எனக்கு. சந்தோஷமா ஊரை விட்டுப் போகவும்

முடியாது. அப்புறம் என் தலே மறைஞ்சதும் அந்த மனிசன் உயிரையே விட்டுப்புடுவாரு.''

கறுத்தம்மா தன் மனத்தில் இருந்த எண்ணங்களை யெல்லாம் கொட்டி விட்டாள். இனிமேல் சொல்லுவதற்கு எதுவும் இல்லே. ஆனுல், சக்கிக்கு எல்லாம் புரிந்து விடவில்லே. அவளுக்குமட்டும் புரிந்திருந்தால் எத்தனே எத்தனே கேள்விகள் கேட்டுத் துளேத்திருப்பாள். அல்லது, எல்லாம் சக்கிக்கு ஒரு வேளே புரிந்திருக்கலாம். ஒரு தாய்க்கு, தன் மகளின் இதயக் காதலேத் தெரிந்துகொள்வது சுலபமாகக் கைவரக் கூடிய தாகவே இருக்கலாம். எல்லாவற்றையும் புரிந்துகொண்டுதான் மௌனம் சாதிக்கிருளோ என்னவோ!

''கறுத்தம்மா, நான் அந்தக் கடனேக் கொடுத்துடுவேன்'' என்று மீண்டும் ஒருமுறை சக்கி சொன்ஞள்.

''அப்பா அந்தப் பணத்தைக் கொடுக்கப் போறதே இல்லெ'' என்ருள் கறுத்தம்மா.

''நான்தான் என்ன செய்யணுமின்னு சொல்லுதே நீ?'' என்று கேட்டாள் சக்கி. செம்பன் குஞ்சு பணம் வைத்திருக்கும் இடத்திலிருந்து திருடியாவது கொடுக்க வேண்டுமென்று அவள் சொன்ஞள்.

செம்பன்குஞ்சு கண்டு பிடித்துவிட்டால் கொலே கூட நடந்து விடும். அவ்வளவு துணிச்சல் சக்கிக்கு இல்லே. ஒரு நாளும் அவள் அதைச் செய்ததும் இல்லே.

''உனக்குப் பயமா இருக்குதோ?'' என்று கேட்டாள் கறுத்தம்மா.

உண்மையிலேயே பயம். முன்ஞெரு முறை திட்டம் போட்டும்கூடச் செய்யத் துணியாததற்கு அதுதான் காரணம்.

சாகரைப் பருவ காலத்தில் பணம் செழிப்பாக வந்து கொண்டிருந்தது. அப்போதெல்லாம், ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து வைத்திருந்தால் யாரும் தெரிந்துகொள்ள முடியாது. கறுத்தம்மா தாய்க்கு உற்சாக மூட்டிஞள். சக்கிக்கும் அந்தரங்கத்தில் அந்த எண்ணமிருந்த தால், அது நல்ல தூண்டுதலாக அமைந்தது. விடிவெள்ளி எழுகையில் செம்பன்குஞ்சு கடலுக்குச் சென்று விடுவான். அன்று தாயும் மகளுமாகப் பெட்டியைத் திறந்து ஒரு சிறு

தொகையை அப்புறப்படுத்தி வைத்துக் கொண்டனர். அன்று பூராவும் பயந்து செத்துக்கொண் டிருந்தனர் இருவரும். அன்று அவன் கொண்டு வந்த பணத்தைப் பெட்டியில் வைத் துப் பூட்டிய சக்கி, வழக்கத்துக்கு மாறாக ஒரு கேள்வியைக் கேட்டாள்:

"இண்ணைக்குப் பங்கு எவ்வளவு கிடைச்சுது?"

"செம்மீனுன்னு, எல்லாப் பயகளும் 'வேண்டாம்' அப்படீங்கிறான்."

"அது சரி, இண்ணைக்கு என்ன கெடச்சுதுன்னு கேக்க றேன்?"

"உனக்கு எதுக்குத் தெரியணுமாம் அது?"

அத்துடன் பேச்சு நின்றது

தாயும் மகளுமாகச் சேர்ந்துகொண்டு, ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சம் பணத்தைத் தனியாக எடுத்து வைத்துக் கொண்டனர்.

ஒரு நாள் செம்பன்குஞ்சு பணத்தை எண்ணிக் கணக்குப் பார்க்க ஆரம்பித்தான். வயிற்றைக் கலக்கிற்று கறுத்தம்மாவுக் கும், சக்கிக்கும். பெட்டியைப் பூட்டி விட்டு அவன் எழுந்த பிறகுதான் இருவராலும் மூச்சுவிட முடிந்தது. நல்ல வேளை. கண்டு பிடிக்கப்படவில்லை.

"அம்மா, இப்பொ கையிலே எவ்வளவு பணம் இருக்குது?" என்று கேட்டாள் கறுத்தம்மா.

நாட்கணக்காக எடுத்தும் எழுபது ரூபாய் வரையிலும் தான் சேர்ந்திருந்தது. கைவசமிருந்த கருவாடும் இருபது ரூபாய் பெறும். தொகை சொற்பமானதாக இருந்தாலும்கூட இருக்கிற பணத்தைப் பரீக்குட்டியிடம் கொடுத்து விடுவது என்று இருவரும் முடிவு செய்துகொண்டனர்.

# 9

கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. பிரமாதமான ஏற்பாடோ கூட்டமோ எதுவுமில்லை. கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரப் பழனிக்கு யாருமில்லை. எனவே, கல்யாணப் பேச்சுக்களில் எதிராக ஓர் அபிப்பிராயம் சொல்லவும் ஒருவருமில்லை. அப்போது, தான் வேலை பார்த்து வந்த தோணிக்காரனிடத்தில் மட்டும் பழனி விஷயத்தைத் தெரிவித்தான். பழனியின் துறையைச் சேர்ந்த அரயனுக்குக் காணிக்கை செலுத்தப் பழனியுடன் செம்பன்குஞ்சு சென்றிருந்தான். செம்பன்குஞ்சு தன்னுடைய துறையைச் சேர்ந்த அரயனுக்கும் காணிக்கை செலுத்தியாக வேண்டும்.

'பெண்ணைக் கட்டிக் கொடுக்காமல் இருக்கிறார்கள்' என்ற புகார் ஒரு மட்டிலும் ஓய்ந்தது. செம்பன்குஞ்சு தலைநிமிர்ந்து நின்றுகொண்டு சக்கியிடம் கேட்டான்:

"எல்லா விஷயத்தையும் அழகா முடிச்சுப்புட்டேன், பாத்தியா? இப்போ என்ன சொல்லுதே?"

சக்கியும் பதிலுக்குத் திருப்பிக் கேட்டாள்:

"யாரு மாப்பிள்ளையா வருது? வீடு வாசல் இல்லாதவன் தானே? ரொம்ப பேஷ்!"

"அட சீ, போ கழுதே! உனக்கு என்னடீ தெரியும்? அருமையா உழைக்கிறவன் அவன். என்ன உடம்பு! என்ன பலம்! அவன் மாதிரி ஒருத்தன் இன்னி வரையிலும் இந்தக் கரையிலே பொறந்ததுமில்லே, வளர்ந்ததுமில்லே."

சக்கியும் அதை மறுக்கவில்லை. சிரித்தவாறு அவள் கேட்டாள் :

"இனிமே நீ சந்தோஷமா காலம் தள்ளலாம், இல்லேயா?"

"கன குஷியா இருக்கப் போறேன். பள்ளிக்குன்றத்துக் காரன் மாதிரி சுகமா அனுபவிச்சுக்கிட்டிருக்கப் போறேன்."

சக்கி கேட்டாள்:

"இருந்தாலும் அந்த சாயபுப் பையனுக்குப் பணத்தைக் கொடுக்கப் போறதில்லே. அப்படித்தானே?"

சக்கி ஏதோ அவசியமில்லாத பேச்சைக் கிளப்புவதுபோல் முகத்தை வைத்துக் கொண்டான் செம்பன்குஞ்சு.

"கறுத்தம்மா கல்யாணத்தைப் பத்தி எப்போப் பேசினாலும், இந்த எழவுப் பேச்சைத் தூக்கிப்போட்டிருவே" என்று அலுத்துக்கொண்டான் அவன்.

சக்கிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவன் சொன்னதும் உண்மைதான். கறுத்தம்மாவின் கல்யாணப் பேச்சு அடிபடுகிற போதெல்லாம் கூடவே அந்த நினைவும் எழுந்து விடுகிறது. இருந்தாலும் இப்படிக் கேட்பான் என்று சக்கி சற்றும் எதிர்பார்க்கவில்லை.

சக்கி வேறொரு வழியில் அவனைத் திருப்ப முயன்றாள்:

"இனிமே சின்னக் குழந்தை மாதிரி நாம சந்தோஷமா இருக்கப் போறோம். அப்பொ கையோடு இதுவும் முடிஞ்சு போயிரட்டுமேன்னு பாக்கறேன்."

அதற்கும் ஓர் உபாயம் இருக்கிறது. காலாகாலத்தில் ஒவ்வொரு பொறுப்பாய்க் குறைத்துக்கொண்டு வரவேண்டும் என்பதுதான். சமய சந்தர்ப்பங்கள் சாதகமாக வாய்க்க வேண்டும்.

அவன் மனைவியைப் பார்த்துச் சொன்னான்:

"இந்தாப் பாரு, நமக்கோ ஆண் குழந்தைன்னு சொல்லிக்கிட ஒண்ணுமில்லெ. அவனையே பிள்ளை மாதிரி வச்சுக்கிட்டா என்னான்னு கேக்கறேன்?

மலர்ந்த முகத்துடன் சக்கி பதில் சொன்னாள்:

"இல்லாவிட்டாலும், அவன்தானே நமக்கு மூத்த மகன். இதென்ன கேள்வி?"

தான் சொன்னதன் முழுப்பொருளையும் சக்கி வாங்கிக் கொள்ளவில்லை என்று எண்ணினான் செம்பன்குஞ்சு. மீண்டும்

அவன் ஆதியோடந்தமாக ஒவ்வொன்றையும் சொல்லிக் கொண்டே வந்தான். பழனிக்கு யாருமே இல்லை; ஆகவே, கல்யாணம் ஆனபிறகு அவனைப் பிள்ளை மாதிரி வீட்டோடு வைத்துக் கொண்டால் என்ன என்பதுதான் அவன் கேள்வி. இப்போது கைவசம் இரண்டு தோணிகள் சேர்ந்துவிட்டன. அதோடு பழனியும் தன் கைக்குள்ளேயே இருப்பதும் நல்லது தான். செம்பன்குஞ்சும் இவற்றையெல்லாம் விரிவாகச் சொன்னான். சொல்லி முடித்ததும், சக்கி என்ன பதில் சொல்லப் போகிறாள் என்பதை அறிந்துகொள்ள அவள் முகத்தைப் பார்த்தான். சக்கியும் தீர யோசித்துப் பார்த்தாள். அவளுக்கும் அது நல்ல யோசனையாகத்தான் பட்டது. மகன் இல்லை என்ற குறைகூடத் தீர்ந்துபோம். ஆனால், அவள் மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது.

"ஆமாம், அதுக்கு அவன் ஒப்புக்கொள்ளணுமே."

செம்பன்குஞ்சு கேட்டான்:

"சரீன்னு சொல்லிப்புடுறான். அப்புறம்?"

"எந்த மரக்கானாவது பொஞ்சாதி வீட்டிலே குந்திக்கிட் கிட்டிருக்கானா?"

சிறிது யோசித்தபின் செம்பன்குஞ்சு பதில் சொன்னான்:

"அவன் ஒண்ணும மறுத்துடப் போறதில்லே. அவன் மகா சாது; ரொம்ப சாது."

"சரிதான்!"

சக்கியின் கேள்வி வேறொரு திசையில் பாய்ந்துவிட்டது.

"ஒண்ணு கேக்கறேன். என்னைக் கட்டிக்கிட்ட நாளிலே முழுக்க முழுக்க ரெண்டு நாள் எங்க வீட்டோடு நீ இருந்தியா?"

"என்னெ பெத்த அம்மா இருந்தா எனக்கு; அப்பனும் இருந்தான்."

பழனி பெண்வீட்டோடு தங்குவான் என்று சக்கிக்குத் தோன்றவில்லை.

செம்பன்குஞ்சுவின் திட்டம் கறுத்தம்மாவுக்குத் தெரிந்ததும் அதை எதிர்த்தாள். அவள் எதிர்த்துப் பேசியது சக்கியை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது. அவள் கறுத்தம்மா விடம் கேட்டாள்:

"நீ பேசுது ரொம்ப நல்லா இருக்குதே! நாங்க ரெண்டு பேருமாச் சேர்ந்து கல்யாணத்தை நிச்சயம் பண்ணியிருக்கோம். எல்லாத்தையும் மறந்து பேசுறியே நீ? உன்னே ஆயிரம் பாடுபட்டு வளத்ததுக்குத் தண்டனையா இது? கட்டிக்கிட ஒருத்தன் வந்துப்புட்டான்னு தெரிஞ்சதுமே அம்மாவும் வேண்டாம், அப்பாவும் வேண்டாம்னு உதறிப்புடுவே போலிருக்கே!"

சக்கியின் வார்த்தைகள் அவள் இதயத்தைத் தாக்கின. தனது பேச்சுக்கு இப்படி விபரீத அர்த்தமெடுத்துக் கொண்டு பேசுவாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. தாய், தந்தையரிடத்தில் அன்பில்லாததாலா அவள் அப்படிப் பேசினாள்? மேலும், தன் வீட்டோடு தன் கணவன் தங்குவது கௌரவக் குறைவு என்று அவள் எண்ணவுமில்லை. வயது வந்துவிட்டதென்றாலும், தன் தாய்க்கு என்றுமே அவள் குழந்தைதான். தாயோ அவளுக்காக எதையும் செய்யச் சித்தமாக இருக்கிறாள். மேலும் பஞ்சமியைப் பிரிந்து வாழ முடியுமா அவளால்? வீட்டை விட்டுச் சென்றுவிட வேண்டுமென்று எண்ணும்போதே மனம் என்ன பாடுபடுகிறது!

இருந்தாலும், அந்த ஊரைவிட்டு எப்படியாவது போய் விட்டால் போதும் என்றாகிவிட்டது கறுத்தம்மாவுக்கு. அந்தச் சூழ்நிலையிலிருந்து தப்பிச் சென்றுவிட்டால் போதும். கறுத்தம்மா உணர்ச்சிவசப்பட்டு சொன்னாள்:

"அம்மா, நான் அந்த அர்த்தத்திலே சொல்லலே. நீ என்னென்னமோ சொல்லிக்கிட்டுப் போறியே. எனக்கு உன்னேயும் அப்பாவையும் தவிர வேறு யாரு இருக்காங்க?"

கறுத்தம்மா விக்கி விக்கி அழுதுகொண்டே, சக்கியின் தோளில் படக்கென்று சாய்ந்தாள். சக்கி அவளை அணைத்துக் கொண்டாள்.

சக்கியும் கறுத்தம்மாவின் பேச்சை ஒரு பெரிய விஷயமாக எடுத்துக்கொண்டு விடவில்லை. கறுத்தம்மா மனம் நொந்து துடிப்பாள் என்று எதிர்பார்ப்பதற்கும் இல்லை. இதயம் வெடித்துவிடும் என்று தோன்றியது. அப்படி அழுதாள் கறுத்தம்மா. அவளோடு சேர்ந்துகொண்டு சக்கியும் அழுதாள். கறுத்தம்மா சொன்னாள்:

"வந்து......இந்தக் கடற்கரையிலே இருக்க வேண்டாம் எனக்கு. இல்லேன்ஞு நாம் எல்லோருமே இந்த ஊரைவிட்டுப் போயிடுவோம்."

சக்கி அன்புவழியக் கேட்டாள்:

"ஏன் அப்படிச் சொல்லுதே?"

உணர்ச்சிப் பெருக்கில் தத்தளித்தவாறு கறுத்தம்மா சொன்ஞள்:

"நான் இந்தக் கடற்கரையிலே இருந்தேன்ஞு......"

"என்ன விஷயம், சொல்லேன்?"

கறுத்தம்மா ஏதோ சொல்ல எண்ணிஞள். தனது பேச்சில் வெளியான கோபம்தான் அவளை அழவைத்து விட்டது என்றுதான் அதுவரையிலும் சக்கி எண்ணிக்கொண்டிருந்தாள். ஆனுல் எதையோ எண்ணி அவள் உள்ளூர வருந்துகிருள். துக்கம் அவள் மனத்தில் புதையுண்டு கிடப்பதுபோல் இருந்தது. ஆனுல், அந்த அளவுக்கு எல்லேயில்லாத துயரத்துக்கு அவள் ஆட்பட்டிருப்பாள் என்று சக்கி எண்ணவே இல்லே.

விம்மி விம்மி அழுதுகொண்டே கறுத்தம்மா சொன்ஞள்:

"நான் இங்கிருந்தா......இந்தக் கடற்கரையே அழிஞ்சு அதோகதியாகப் போயிடும். ஆமாம் அம்மா, அழிஞ்சே போயிடும்..."

மனத்தைச் சித்திரவதை செய்யும் எண்ணங்களே எல்லாம் கறுத்தம்மா யாரிடம் வாய்விட்டுச் சொல்லுவாள்? மனத்திலிருப்பதை ஒன்றுவிடாமல் சொல்லிவிட முடியுமா அவளால்? அப்போது சக்கி சொன்ஞள்:

"அந்த நாலாம் மதக்காரன் என் குழந்தையெ சொக்குப் பொடி போட்டு மயக்கிப்புட்டான் போலிருக்கு!" என்று தனக்குத்தானே அரற்றிஞள் சக்கி.

கறுத்தம்மா அதை ஒப்புக்கொள்ளவில்லே. உண்மையில் யாரும் அவளேச் சொக்குப் பொடி தூவி மயக்கிவிடவில்லே. கறுத்தம்மா சொன்ஞள்:

"அம்மா, இந்தக் கடற்கரையிலெ இதுக்கு முன்ஞலெ இந்தமாதிரிப் பொம்புளேகள் இருந்திருக்காங்களா?"

"எந்த மாதிரிப் பொம்புளேகளேக் கேக்கறே?"

"நான் சொல்றது உனக்குப் புரியலையா?"

"ஐயோ, இந்தப் பொண்ணு என்னமோ கிறுக்கு மாதிரி உளறுதே."

"எனக்குப் பைத்தியம் ஒண்ணும் புடிச்சுடலே. தெரிஞ்சுக் கிட்டத்தான் கேக்கறேன். இந்த மாதிரிப் பொம்புளே இன்னொருத்தி இங்கே இருந்திருக்காளா?"

மனத்தில் இருந்ததைக் கறுத்தம்மாவால் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. அவள் எதைக் குறிப்பிட்டுக் கேட்கிறாள்? அவளால் அதை விளக்க முடியவில்லை. அவள் மனத்தோடு அடங்கிக் கிடந்தது, அந்தக் கேள்வியின் பொருள். அன்னிய மதக்காரனுக்குத் தன்னைக் கொடுத்துவிட்ட பெண், அந்தக் கடற்கரையில் எந்தக் காலத்திலேனும் வாழ்ந்ததுண்டா? இயன்றவரை அடக்கிப்பார்த்தும் இம்மியும் தணியாத, பெருக்கெடுக்கும் காதல் உணர்வுக்கு ஆட்பட்ட பெண் எந்தக் காலத்திலேனும் அங்கு இருந்ததுண்டா? அதைத்தான் அவள் தெரிந்துகொள்ளத் துடித்தாள். கணத்துக்குக் கணம் ஓங்கி உரம் பெற்ற காதல் வாழ்க்கை, இதற்கு முன் யாருக்கேனும் ஏற்பட்டதுண்டா? அன்னிய மதத்தைச் சேர்ந்த இளைஞனை, அரயப்பெண் ஒருத்தி காதலித்து, அந்தக் காதல் வெறி அவர்களை நிராசையிலும், ஏக்கத்திலும் அழுத்தியதுண்டா? அந்தக் காதல் இன்னிசையில் கடற்கரை மணல் துடித்ததுண்டா?

இதையெல்லாம் ஒரு தாயிடம் எவ்வாறு கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும்?

இதுபோன்ற நிகழ்ச்சிகள் அதற்குமுன்பும் கடற்கரையில் நிகழ்ந்திருக்கலாம். காதல் வாழ்வு முறிந்து நொறுங்கிப் போன உள்ளத்துடன் அந்தக் கடற்கரை வழியாக அதற்கு முன்பும் காதலர்கள் நடந்து சென்றிருக்கலாம். உலகிலுள்ள எந்தச் சக்தியாலும் அவிக்க முடியாத காதல் நெருப்பை நெஞ்சில் புதைத்தபடி ஒரு பெண், மனைவியாகவே காலம் தள்ளியிருக்கலாம்...அல்லது தற்கொலை செய்துகொண்டு மாய்ந்திருக்கலாம்...அதற்கும்கூட வழி இல்லை என்றால்...?

ஆனால் கறுத்தம்மா தனக்கு மட்டும்தான் இந்தத் துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டிருக்கிறது என்று எண்ணிக் கொண்

டாள். ஓர் இளைஞன் அவளைக் காதலித்து விட்டான். அக் கடற்கரையிலுள்ள வேறு பெண்கள் யாரேனும் காதல் வாழ் வில் ஈடுபட்டிருந்தாலும்கூட, தனக்கு அப்போது ஏற்பட்டிருந் தது போன்ற பரிதாப நிலை அவர்களுக்கு ஏற்பட்டிராது என்றும் எண்ணினாள் அவள்.

சக்கி ஆச்சரியம் ததும்பக் கேட்டாள்:

"எக்கச்சக்கமா ஏதாவது தப்புச் செஞ்சிட்டியா?"

கேள்வி கறுத்தம்மாவுக்குப் புரியவில்லை.

"இல்லே. நீ வயசுப் பொண்ணு...ஏதாவது..."

அந்த விஷயம் அத்தனை முக்கியமான ஒன்றாகக் கறுத்தம் தம்மாவுக்குப் படவில்லை. ஆனாலும், அவள் உண்மையைச் சொன்னாள்:

"இல்லேம்மா, நான் கெட்டு ஒண்ணும் போயுடலெ." —தெம்பான குரலில் அவள் இதைச் சொன்னாள்.

கறுத்தம்மா சக்கியிடம் ஒன்றைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ள எண்ணினாள். அவளை எப்படியாவது மீட்டுக் கரை சேர்த்துவிட வேண்டும். இனம் கூற முடியாத பீதியுணர்ச்சி அவளை ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்தது. வாயை அகலத் திறந்துகொண்டு, கண்ணெதிரே நிற்கிறது ஓர் உண்மை. ஏறிட்டுப் பார்த்தால் திடுக்கிட வைத்துவிடும். அதன் கரிய நிழல் மேலே விழுவதற்குமுன் தப்பிச் சென்றுவிட வேண்டும். அவளைக் கரை சேர்த்து விடுவதாகச் சக்கி வாக்களித்தாள்.

அயல்வீட்டுப் பெண்கள் எல்லோருடைய கவனம் இப் போது கறுத்தம்மாவின் பக்கம் திரும்பிவிட்டது. நெடுங்கால மாக எங்கும் நடந்து வரும் காரியம் ஒன்று அங்கும் நடந்தது. மணப் பெண்ணுக்கு மனைவாழ்க்கையின் மாண்பையும் மகோன்னதத்தையும் எல்லோரும் எடுத்துரைத்தனர். மண மாகிச் செல்கிற பெண் தன் கடமையிலிருந்து வழுவிவிட்டால் அவளுடைய தோழிகளைத்தான் எல்லாரும் குறை கூறுவார்கள்.

நல்லபெண் கறுத்தம்மாவிடம் சொன்னாள்:

"கறுத்தம்மா ஓர் ஆம்புளையை உங்கிட்டே ஒப்படைக்கப் போறோம்."

ஓர் ஆண்பிள்ளையின் கையில் பெண்ணை ஒப்படைப்பதாகச் சொல்லவில்லை அவள்.

காளிக்குஞ்சு சொன்னாள்:

"நமக்கு வரவங்க எல்லாம் கடலிலெ—அலை சீறிப் பாயிற கடலிலெ—நாள் பூராவும் கழிக்கிறாங்க. அதை எப்போதும் நெனைவிலே வெச்சுக்க."

குஞ்சிப்பெண்ணுக்கு ஓர் எச்சரிக்கை விடுக்க ஆசை:

"பொம்புளைங்க மனசு பூப்போல! ரொம்பக் கவனமாக் காலம் தள்ளணும்."

இவ்வாறு ஆளுக்கொன்றாக ஒவ்வொருவரும் உபதேச மொழிகள் கூறினார்கள். இதுபோன்ற உபதேசங்களைப் பிறர் சொல்லக் கேட்டவர்கள், அவர்களும். இப்போது மறுபடியும் அவைகளை மற்றொருத்திக்கு வழங்குகின்றனர். அவ்வளவுதான். அதுவும் அவர்களுடைய கடமைதானே? அந்தக் கடற்கரையை விட்டு வெளியேறிச் சென்றவர்கள் எவரும் அபவாதத்துக்கு ஆளானதில்லை. இது அவர்களுக்குப் பெருமை தரக் கூடிய ஒன்றுதானே. எனவே, அவர்கள் சொன்ன வார்த்தைகள் களங்கமில்லாத வார்த்தைகள்தாம்.

அவர்கள் சொல்வதைக் கறுத்தம்மா கேட்டுப் புரிந்து கொண்டாள். அவள் மனம் நிறைந்திருந்தது. ஆனால், ஒரு கேள்விக்குமட்டும் அவள் விடை தெரிந்துகொள்ள எண்ணினாள். அவள் மனத்தில் எழுந்த கேள்வி இதுதான்:

கடற்கரையில், ஒரு பெண் ஒருவனைக் காதலித்து, அவனும் அவளையே நம்பிக்கொண்டிருக்கையில், வேறொருவனை அவள் அவள் மணந்துகொண்டதுண்டா?

இந்தக் கேள்வி அவள் மனத்தை நிரப்பிக்கொண்டிருந்தது. இருந்தாலும், அதை அவள் வாய்விட்டுக் கேட்கவில்லை. அப்படியே ஒருத்தி வாழ்ந்திருந்தாள் என்றால், துரதிருஷ்டம் பிடித்த அந்தப் பெண்ணின் வரலாறுதான் என்ன?

எல்லோருடைய தூற்றுதலுக்கும் பழிச்சொற்களுக்கும் ஆளான துரதிருஷ்டசாலியான ஒரு பெண்ணின் ஆத்மா, அடங்காத தாகத்துடன் கடற்கரைக் காற்றில் பறந்து திரிந்து கொண்டிருப்பதுபோல், சில சமயம் கறுத்தம்மாவுக்குத்

தோன்றும். அதோடு தனிமையில் உட்கார்ந்துகொண்டிருக்கும் போதெல்லாம் அவளுக்கு முற்றிலும் விளங்காத ஒரு மொழியில், ஒரு சோக நாடகத்தை, இனம் தெரியாத ஒரு குரல் காதோரம் முணுமுணுத்துக் கொண்டிருப்பதுபோலவும் ஒரு பிரமை தட்டும். அவளைப் போலவே துயரக் கண்ணீர் சிந்திய பெண்கள் அதற்கு முன்பும் அந்தக் கடற்கரையில் இருந்திருக்கின்றனர். கடற்கரைக் காற்று அந்தக் கதையைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறது. அதே கதையைத்தான் அலையோசையும் கூறுகிறது. கடற்கரைப் புழுதி மண்ணும் அக்கதையைஅறியும். அதோடு, வாழ்க்கை ஏமாற்றிவிட்ட அந்தப் பெண்களின் எலும்புத் துண்டுகள் இன்று தூள்தூளாகிக் கடற்கரை மண்ணோடு கலந்துவிட்டன. அந்த எலும்புத் துகள்கள் இன்னும் மண்ணில் கிடந்து துடிக்கின்றனவோ என்னவோ?

ஒருநாள் கறுத்தம்மா நல்ல பெண்ணிடம் கேட்டாள்:

"சித்தி, கெட்டுப்போன பொம்பிளைகள் இதற்கு முன்னாலே இங்கே இருந்திருக்காங்களா?"

"ஆமாம். இருந்திருக்கிறார்கள். அபூர்வமாக ஓரிருவர் இருந்திருக்கிறார்கள். அந்தச் சம்பவங்களும் இன்று கதையாய் வழங்கி வருகின்றன. அவர்கள் வேண்டுமென்றே தவறிவிடவில்லை. இன்று கடற்கரையில் பலரும் பாடுகிற பாடல், உண்மையிலேயே நிகழ்ந்த சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டதுதான். அவள் கற்பை இழந்துவிடவே, அலைகள் மலை உயரம் மேலெழும்பிக் கரையை அப்படியே கபளீகரம் செய்துவிட்டன. கொடிய விஷப் பாம்புகள் அங்கும் இங்கும் இழைந்து திரிந்தன. குகை போன்ற வாயைத் திறந்துக்கொண்டு விசித்திரமான கடல் பிராணிகள் கூட்டமாக எழுந்து வந்து தோணிகளின் பின்னால் பாய்ந்து நெருங்கின. இதெல்லொம் பழங்கதை. அந்தப் பழைய பாடலின் சில அடிகளை நல்லபெண் பாடிக் காட்டினாள்.

அதுவும் ஒரு காதல் கதைதான். ஒரு சமயம், சில வருடங்களுக்குப் பிறகு, அவளுடைய கதையை அடிப்படையாகக் கொண்டும் அதுபோன்ற பாடல் பிறக்குமோ?

நல்லபெண் சொன்னாள்:

"அண்ணைக்கெல்லாம் கடல் கரையிலே நல்ல கட்டு இருந்தது."

கறுத்தம்மா ஆவலுடன் கேட்டாள்:

"இண்ணைக்கு?

இண்ணைக்கு எல்லாத்தையும் காத்திலே பறக்கவிட்டுப் புட்டுத் திரியறவங்களும் உண்டு. ஆம்புளேகளும் முந்தி இருந்த மாதிரி இல்லெ."

பழைய ஒழுங்கு முறையிலிருந்து இன்று பலர் வழுவிச் சென்றுவிட்டனர். இருந்தாலும், கடல் தாய் பெற்ற பெண்கள் இன்றும் தங்கள் கற்பைக் காத்து மானத்தோடு வாழ்ந்து வருகிறார்கள்.

அண்டை வீடுகளிலுள்ள குழந்தைகள் எல்லாம் வந்து விசாரித்தன.

"கறுத்தம்மா அக்கா, நீ போறியா?"

அந்தப் பெண்களிடம் முக்கியமான எச்சரிக்கை ஒன்றைக் கூற எண்ணினாள் கறுத்தம்மா. அவர்கள் கடற்கரையில் அங்கும் இங்கும் சருகுபோல் பறந்து திரிந்துகொண்டிருக்கக் கூடாது. எல்லாக் குழந்தைகளிடமும் இதைக் கூறிவிடவேண்டுமென்ற ஆசைதான் அவளுக்கு.

கறுத்தம்மா எல்லோரிடத்திலும் விடை பெற்றுக் கொண்டு விட்டாள். அந்தக் கடற்கரையில்தான் அவள் பிறந்து வளர்ந்தாள். இப்போது அந்த ஊரைவிட்டே வெளியேறப் போகிறாள். இருந்தாலும், அந்தக் கடற்கரையை அவளால் மறக்க முடியுமா?

இனிமேல் அவள் போகவிருக்கும் ஊர் எப்படி இருக்குமோ?—அவள், மனத்தில் பலவிதமாக எண்ணிப் பார்த்துக் கொண்டாள். இங்குபோல் அங்கும் கதிரவன் பொற்கிரணங்களை நாற்புறமும் வீசிக்கொண்டுதான், ஆழ்கடலில், முக்குளிப்பானோ? இங்கே புயலில் அகப்பட்டுகொண்டு தத்தளிக்கும் வேளையில்கூட கடல் தனிச் சோபையுடன் காட்சி அளிக்கிறது. இங்கு, கடல் என்றுமே அவள் உள்ளத்தில் பீதியைக் கிளப்பியதில்லே. துரதிருஷ்டசாலியான அந்தப் பெண்ணின் சோகமயமான இசை இந்தக் கடற்கரையெங்கும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. இருந்தாலும் இந்தக்

காற்று அன்பு மயமானது. அந்தக் கடற்கரையும் இதுபோலத் தான் இருக்குமோ? யாரால் சொல்ல முடியும்?

அங்கு வாழும் மனிதர்களும் எப்படிப்பட்டவர்களோ? அவர்களும் ஈர நெஞ்சம் படைத்தவர்களாக இருக்கலாம். அன்புள்ளம் கொண்டவர்களாகவும் இருக்கலாம். இருந்தாலும் அவளை அன்புடன் போற்றி வளர்த்த இந்தக் கடற்கரை தனிச்சுவை கொண்டது. அதைவிட்டுப் பிரிந்து செல்லவிருக்கிறாள் அவள். ஜடப் பொருள்களிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு விட்டாள்.

இரவு. பால் நிலவு! கடல் அமைதி நிறைந்து காணப்பட்டது. நிலவு பேரழகுடன் பால்போன்ற ஒளியை வீசிக்கொண்டிருந்தது. கடற்கரையில் அவ்வேளையில் எழுந்த இனிய கீதம் நிலவில் கலந்து எங்கும் ஒலித்தது.

பரீக்குட்டிதான் பாடினான்.

செவி நிறைந்தது அந்தப் பாட்டில். ஆனால், கறுத்தம்மாவின் காதில் அது பரீக்குட்டியின் குரலாகக் கேட்கவில்லை. பரீக்குட்டி என்ற தனி மனிதன் அவளுடைய புலன்களிலிருந்து மறைந்து விட்டான். ஆனந்த மயமானதோர் உலகுக்கு அவள் அழைத்துச் செல்லப்பட்டாள். நிலவொளி பரந்து கிடக்கும் அந்தக் கடற்கரை அவளைக் கைகாட்டி அழைத்தது. வாழ்க்கை இன்பம் 'வா வா' என்று அவளை ஆசையோடு அழைக்கிறது. அவள் பிரிந்து செல்லவிருக்கும் அந்தக் கடற்கரையிலிருந்து அந்த அகால வேளையில் எழுந்த அந்த கீதம்......ஆஹா. எத்தனை அற்புதமாக இருக்கிறது! அப்போது அவள் மனத்தில் வட்டமிட்ட கடற்கரை நினைவுகள் தாம் கணக்கில் அடங்குமோ!

இசை இன்பம் அவள் மனத்தில் புகுந்துவிட்டது. கறுத்தம்மா மெதுவாக எழுந்து உட்கார்ந்துகொண்டாள். பரீக்குட்டியின் உருவம் அவள் முன்னால் வந்து நின்றது! அவன் அவளைத்தான் அழைக்கிறானோ? அந்தப் பாட்டைத் தவிர வேறு எதுதான் அவளுக்கு மனச்சாந்தியைத் தரப்போகிறது? அவனோ இன்று மட்டுமல்ல, என்றென்றும் பாடிக்கொண்டுதான் இருக்கப்போகிறான். அவள் அங்கிருந்து சென்றபின்பும் அவன் விடாமல் பாடிக்கொண்டுதான் இருப்பான். அது பிறர்

காதில் விழ வேண்டும் என்பதற்காக அல்ல; அவனுக்காக. ஆமாம், அவனுக்காக மட்டும்தான்.

அப்போது சக்கி தூங்கிக்கொண்டிருந்தாள். செம்பன் குஞ்சுவும் அங்கு இருக்கவில்லை. ஆள் அரவமே இல்லாமல் வெறிச்சென்று இருந்தது கடற்கரையும். கதவைத் திறந்து கொண்டு வெளியேறிவிட வேண்டும் என்ற ஆசை உந்திற்று அவளை.

பாடுகிறவனின் இதயம் வெடித்து விடவில்லை. அதற்காகத்தான் அவனும் பாடிக்கொண்டிருக்கிறான் போலும்! அன்று உருக்குலைந்து அழிந்துபோன முக்குவப் பெண்ணின் சோகவரலாற்றைக் கூறும் சில அடிகள்தாம் அப்போது காதில் விழுந்துகொண்டிருந்தன. அந்த அடிகள் நல்லபெண் ஏற்கெனவே கறுத்தம்மாவுக்குப் பாடிக் காட்டியவைதாம். அவை இப்போது அவளுக்கு நினைவில்லை. ஆனால், அவ்வடிகளில் ஊறி நின்ற காவிய ரஸம் இப்போதும் அவள் மனத்தைக் கொள்ளைக் கொண்டது. இனம் தெரியாத விரல்கள் மனத்தந்தியை மீட்டியவண்ணம் இருந்தன.

அன்று அழிந்துபோன முக்குவப் பெண்ணும், இதைப் போன்ற பாடலைக் கேட்டு மனத்தைப் பறிகொடுத்து, அந்த இசையின்பத்தை நோக்கி ஓடிச்சென்றாளோ என்னவோ? அவளையும் அன்று பூரண நிலவு ஆசை காட்டி அழைத்திருக்கலாம். இப்போது மீண்டும் ஒருத்தி அதே போல் ஓடிச்செல்லப் போகிறாள்.

மீண்டும் கடல் அலைகள் வானம் முட்ட எழுந்து நர்த்தனம் செய்யும். கொடிய மிருகங்கள் மேலெழுந்து வந்து குகை போன்ற வாயைப் பிளக்கும். கொடிய விஷம் கொண்ட பாம்புகள் மீண்டும் கரையோரம் இழைந்து செல்லும்.

இப்போது மற்றொரு சிந்தனை அவளை ஆட்கொண்டு விட்டது. அவள் அந்தக் கடற்கரையை விட்டுப் போகப் போகிறாள். அவளோடு அன்றுவரையிலும் உறவு கொண்டிருந்த எல்லாவற்றையும் துறந்து செல்லப் போகிறாள். எதை வேண்டுமானாலும் இழந்துவிட அவள் சித்தம் பூண்டு விட்டாள். கடற்கரை நிலவிடம் அவள் இன்னும் விடை பெற்றுக் கொள்ளவில்லை. நிலவில் தேஜஸும் காந்தியும் பெற்று எழி

லுடன் விளங்கும் கடலிடத்திலும் அவள் இன்னும் விடை வாங்கிக் கொள்ளவில்லை. நிலவில் எழும் அற்புதமான இன்னிசை! அதனிடத்திலும் இன்னும் அவள் விடை பெற்றுக் கொள்ளாமல்தான் இருக்கிருள். 'நிலவை வீசும் தெய்வ தூதனே, நான் சென்று வருகிறேன்' என்று இன்னும் அவள் சொல்லிக் கொள்ளவில்லை.

ஒருகால், அடுத்த நாளும், அவள் ஊரை விட்டுச் செல்வது வரை வரும் நாட்கள் முடிவது வரையிலும்கூட, அப் பாடல் எழாமலே இருந்து விடலாம். பாடிப் பாடி அவனுக்குத் தொண்டை கிழிந்து போனுலும் போய்விடும். ஒரு சமயம், பாடும் வழக்கத்துக்கே அவன் முற்றுப்புள்ளி வைத்துவிடலாம். அப்போது கடற்கரை நிலவின் எழில்முகம் மிகவும் வாட்ட முற்றுப் போய்விடாதோ?

மனத்தில் ஆவேசம் பூண்ட உணர்ச்சி அலைகள் எழுந்த வண்ணமாக இருந்தன. இனிமேல் எந்தக்காலத்திலும் அந்த நிலவொளியோடு, அதன் இனிய கீதத்தோடு, இரண்டறக் கலக்க முடியாமல் போனுலும் போய்விடுமோ? கடைசி முறை யாக அவளுக்கு வாய்க்கும் சந்தர்ப்பம் இதுதானே? அப்படி யானுல் இந்த அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிட அவள் தயாராக இல்லை. அது அவளால் முடியவும் முடியாது. மீண்டும் ஒரே ஒரு முறை—வேண்டுமானுல் கடைசியாக, அந்தக் கடற் கரையில் கிடக்கும் தோணியின் மறைவுக்குச் சென்று வரட்டும் அவள்! வாழ்நாளில் இனிமேல் ஒருபோதும் மனத்தால்கூட எண்ணத்தகாத பேரின்பத்தை ஒரு முறையேனும் அவள் அனுபவித்து மகிழட்டும்!

கடற்கரையில் சிறு பெண்ணுக ஓடித் திரிந்தாள் அவள். பின்னுல் இளமங்கைப் பருவத்தை அடைந்தாள். எல்லோ ரிடத்திலும் அன்பைச் சொரிந்தாள். இனிமேல்...? சூறைக் காற்றும், தோணியை விழுங்கும் சுழிகளும், கொடிய பிராணி களும் நிறைந்த, கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் அரயனின் கற்புநெறி பிறழாத வாழ்க்கைத் துணைவியாக விளங்கப் போகிருள். இப்போது அதன் தலைவாசலை எட்டி விட்டாள், அவள். வரப்போகும் வாழ்க்கை உயிர் நிறைந்தது; ஆழம் நிறைந்தது; பொருள் வாய்ந்தது. பஞ்சுபோல் காற்றில் பறந்து

திரிந்த காலம் சென்று மறைந்து விட்டது. அதன் கடைசி நாளை அவள் அனுபவிக்கக் கூடாதா?

ஆனாலும், கறுத்தம்மா மனத்தில் ஒரு பயம். தன்னிடத்தில் அவளுக்கு இருந்த நம்பிக்கை கழன்று விட்டது. எந்த நிமிடமும் தவறி விடலாம், பாவ உலகில் வழுக்கி விழுந்து விடலாம் என்று தோன்றிற்று. இதுகாறும் இந்தப் பயம் அவள் மனத்தில் எழுந்ததில்லை.

'சின்ன முதலாளி, இனி மேலும் நீங்கள் பாடிக்கொண்டிருப்பது நியாயமா?' என்று வாய்விட்டுக் கேட்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு. 'தயவு செய்து பாடாமலிருங்கள்' என்று மன்றாடிக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றிருந்தது. கடற்கரைச் சந்திரனின் உணர்ச்சியை இன்னுமா தூண்டிக் கொண்டிருப்பது? பரீக்குட்டியிடம் அவள் எதை எதையோ சொல்ல எண்ணினாள். தன்னை மன்னித்துவிட வேண்டும்என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

கறுத்தம்மா எழுந்திருந்தாள். மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். எங்கும் வெண்ணிலவு பொழிந்துகொண்டிருந்தது. கடற்கரையை நோக்கி, அவள் நடந்து சென்றாள்!

தென்னை மரங்களின் நிழலில் மறைந்து சென்றவாறு அவள் கடற்கரையை அடைந்தாள்.

பாட்டு திடீரென்று தடைப்பட்டு நின்றது. விடாமல் பாடித் தன் தெய்வத்தைக் கண்முன் வரும்படி செய்து விட்டானா? கண நேரத்துக்குத் தன்னுடைய கண்களையே அவனால் நம்ப முடியவில்லை.

"கறுத்தம்மா, நீ போறியா?" என்று கேட்டான் அவன்.

இதைத் தவிர வேறு எதை அவன் விசாரிக்க முடியும்?

"நீ போயுட்டா......அப்புறம் உனக்கு என் ஞாபகம் இருக்குமா?"

அவன் மனத்தில் உண்மையிலேயே எழுந்த சந்தேகம் அது.

"நீ என்னை மறந்துப்புட்டாலும் நான் எண்ணைக்கும் இந்த கடற்கரையிலே உட்காந்து பாடிக்கிட்டிருப்பேன். வயசாகி,

பல் விழுந்து தொண்டு கிழமானாலும் சரி, நான் பாடிக்கிட்டுத் இருப்பேன்'' என்றான் அவன்.

கறுத்தம்மா தன் மனத்தில் எண்ணியதை வாய்விட்டுச் சொன்னாள்:

''முதலாளி, ஒண்ணு சொல்றேன். அப்படிச் செய்யுங்க. மனசுக்குப் பிடிச்ச ஒரு பெண்ணைக் கட்டிக்கிட்டு, வியாபாரத்தையும் நல்லபடியாக் கவனிச்சுக்கிட்டு சந்தோஷமா இருங்க.''

பரீக்குட்டி மௌனமாக இருந்தான்.

கறுத்தம்மா தொடர்ந்து பேசிக்கொண்டே போனாள்:

''முதலாளி, நீங்க என்னை அடியோடு மறந்துடணும். நாம ரெண்டு பேரும் கூடிப் பேசிக்கிட்டிருந்ததையும் அடியோடு மறந்துடணும்.''

பரீக்குட்டி அதற்கும் பதில் சொல்லவில்லை. கறுத்தம்மா மீண்டும் பேசினாள்:

''அதுதான் எனக்கும் நல்லது; உங்களுக்கும் நல்லது.''

இத்துடன் அவள் பேச்சை முடிக்கவில்லை.

''நாங்க வாங்கியிருக்கிற பணத்தை எப்படியும் நான் போறத்துக்கு முன்னாலே கொடுத்துடுவோம். உங்களுக்கு எல்லாச் சந்தோஷத்தையும்......''

அதை முற்றிலும் கூறி முடிக்கவில்லை அவள். 'எல்லாச் சந்தோஷங்களையும் அருளப் பிரார்த்திப்பேன்' என்றுதான் அவள் சொல்ல எண்ணியிருக்க வேண்டும். ஆனால், அதைச் சொல்லலாமா என்ற சந்தேகம் வந்து தடுத்துவிட்டது. ஒரு அரயப் பெண் தன் புருஷனின் நன்மைக்காக மட்டும்தான் பிரார்த்தனை செய்யலாம். யாரை அவளுடைய கரங்களில் ஒப்படைக்கிறார்களோ அவன் அல்லவா அவள் புருஷன்? மற்றொருவனின் நன்மைக்காகப் பிரார்த்தனை செய்வது குல தர்மத்துக்கே எதிரான காரியமல்லவா? ஆனால், தன் நினைவின்றியே சில வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெளியே நழுவி விழுந்து விட்டன.

''நான் எண்ணைக்கும் உங்களை நெனச்சுக்கிட்டிருப்பேன்.''

''எதுக்காக? அது வேண்டாம்.''

சில நிமிஷங்கள் மௌனத்தில் கழிந்தன. பேசுவதை விடவும் பொருள் நிறைந்த நிமிஷங்கள் அவை.

ஒரு பறவை தென்னை மரத்திலிருந்து ஜிவ்வென மேலெழுந்து வானத்தில் பறந்து சென்றது. தான் கண்டு கொண்ட காட்சிகளை உலகெங்கும் பறைசாற்றச் செல்லு கிறதோ? சற்றுத் தொலைவில் ஒரு நாய் அவர்களையே உற்றுப் பார்த்தபடி நின்றது. சாட்சிகள் ஒன்றுக்கு இரண்டாகி விட்டனவா?

பரீக்குட்டி சொன்னான்:

"இந்தக் கடற்கரையிலெ நாம ஓடியாடித் திரிஞ்சதும், கிளிஞ்சல் பொறுக்கி விளையாடினதும்......எல்லாம் கதையாய் முடிஞ்சு போச்சு."

பெருமூச்சு விட்டுக்கொண்டே அவன் மேலும் சொன்னான்:

"அந்தக் காலம் முடிஞ்சு போச்சு!"

"ம்."

"நான் மட்டும் இனிமே, இங்கே தன்னந் தனியா நாளை எண்ணிக்கிட்டு இருக்கணும்."

அவன் சொன்ன வார்த்தைகள் அவள் மனத்தைப் பிளந்தன.

"சொல்லிக்கிட்டுப் போக நீ வரமாட்டேன்னுதான் எண்ணிக்கிட்டிருந்தேன்."

கடைசியில் அவன் கூறி முடித்தான்:

"இந்தா பாரு, எனக்கு யாரு பேரிலும் வருத்தமில்லே. நீ மட்டும் சொல்லிக்காமப் போயிருந்தா என் மனசு ரொம்ப வருத்தப்படும். ஒரு வேளை அப்படியே நீ நடந்துக்கிட்டாலும் நான் வருத்தப்படறதுலே அர்த்தம் கிடையாது. உன் மேலே எனக்குக் கொஞ்சமும் கோபம் இல்லெ."

கைகளால் முகத்தை மூடியவாறு அழுதுகொண்டிருந்தாள் கறுத்தம்மா. பரீக்குட்டி அதையும் கவனித்தான்.

"கறுத்தம்மா, எதுக்கு அழறே? பழனி ரொம்ப நல்லவன்; கெட்டிக்காரன்."

அவன் குரல் தழுதழுக்கச் சொன்னான்:

"உனக்கு எல்லாம் நல்லபடியா வரும்."

அதற்குமேல் கறுத்தம்மாவாலும் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. அவள் சொன்னாள்:

"நான் செத்துப் போயிட்டேன். இனிமேலாவது என் மனசைக் குத்தாம விட்டுடுங்க."

அவள் சொன்னது பரீக்குட்டிக்கு புரியவில்லை. அவள் மனம் புண்படும்படி முரட்டுத்தனமாக எதையாவது பேசி விட்டோமோ என்ற எண்ணத்தில் தடுமாறினான் அவன். அப்படி ஒன்றும் சொல்லவில்லையே!

அவளுக்குத் துக்கம் மார்பை அடைத்தது:

"எப்படியானாலும் உங்களுக்கு மனக் கஷ்டமாய்த்தான் இருக்கும்."

"ஏன் அப்படிச் சொல்றே?"

'எப்படியும் அவள் சந்தோஷமாக வாழவேண்டும் என்பது தான் தன் ஆசை' என்று சத்தியமிட்டுச் சொன்னான் அவன்.'

"நான் இங்கே உட்கார்ந்து பாடிக்கிட்டே இருப்பேன். முடிஞ்சவரை சத்தம் போட்டுப் பாடிக்கிட்டிருப்பேன்" என்றான் அவன்.

அவள் பதில் சொன்னாள்:

"எங்கேயோ இருக்கிற திருக்குன்றப்புழை கடல் கரையிலே உக்காந்து நான் கேட்டுக்கிட்டிருப்பேன்."

"அப்படியே பாடிப்பாடித் தொண்டை கிழிஞ்சு செத்தே போயுடுவேன்."

"அப்போ, இந்தக் கடற்கரை நிலாவிலெ ரெண்டு ஆத்மா எப்போதும் பறந்து திரிஞ்சுக்கிட்டிருக்கும்."

"ஆமாம்" என்றான் பரீக்குட்டி.

அவள் பேசாமல் மெதுவாக அங்கிருந்து நடந்துசென்றாள். ஆம்; அவள் விடை பெற்றுக் கொண்டு விட்டாள். அவன் கண் இமைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆம்; அவன் அவளுக்கு விடை கொடுத்து விட்டான்.

அவர்கள் பிரிந்தனர்.

# 10

கல்யாணத்தை மிகவும் சிறப்பாக நடத்தி வைக்க வேண்டுமென்ற ஆசை சக்கிக்கு. நல்லபடியாக நடந்தேறும் என்றுதான் அண்டை அயலார்களும் எதிர்பார்த்தனர். செம்பன்குஞ்சு கையில் பணமிருக்கிறது. கறுத்தம்மா அவனுடைய மூத்த பெண். எனவே, திருமண வைபவம் சிறப்பாக நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம் எதுவும் இல்லை.

ஆனால், செம்பன்குஞ்சு அதற்குத் தயாராக இல்லை. கறுத்தம்மாவுக்கு நகை போட்டதில் கொஞ்சம் பணம் ஏற்கெனவே கரைந்து விட்டிருந்தது. கல்யாணத்தை ரொம்பவும் எடுப்பாக நடத்தக் கைவசம் போதிய பணம் இல்லையென்று சொல்லிக் கொண்டிருந்தான், அவன். ஆனால், எப்படியும் கொஞ்சம் பணம் செலவாகாமல் இருக்குமா?

இதுபற்றிப் பேசிக்கொண்டபோது செம்பன்குஞ்சுவுக்கும் சக்கிக்கும் சண்டை மூண்டது. கறுத்தம்மா மத்தியஸ்தம் செய்து வைத்தாள். இந்த நிகழ்ச்சி அவளுக்கு மனவேதனையைக் கொடுத்தது. அவள் காரணமாகச் சண்டை அடிக்கடி மூண்டவண்ணமிருக்கிறது!

எப்படியும் கல்யாணம் நடந்து விட்டால் போதும் என்றாகி விட்டது. அவள் காரணமாக என்னென்ன தொல்லைகள் எல்லாம் ஏற்படுகின்றன! அவளால் தாய் தந்தையருக்கும் சுற்றத்தினருக்கும் எத்தனை சிரமம்! வேதனை! இன்னும் யார் யாருக்கெல்லாம் அவள் தொல்லை தந்துகொண்டிருக்கப் போகிறாளோ!

துறை அரயனை அழைத்துக்கொண்டு வரவேண்டும். அவர் வந்தபின்தான், சம்பிரதாயச் சடங்குகள் ஆரம்பமாகும். வெற்றிலை, புகையிலை, பணம் எல்லாம் காணிக்கை வைத்து அவரை அழைத்தான் செம்பன்குஞ்சு. அவருடைய சம்மதமும் கிடைத்து விட்டது. அரயன் மிகவும் சந்தோஷப்பட்டார். பொழுதோடு கல்யாணத்துக்கு வந்து சேருவதாகச் சொன்னார் அவர்.

கல்யாண நாள். விசேஷ ஏற்பாடுகள் எதுவுமில்லை. இருந்தாலும், செலவு செம்பன்குஞ்சுவின் திட்டத்தைத் தாண்டிச் சென்றுவிட்டது.

முன்னதாகவே வந்து விட்டார் துறை அரயன். திருக்குன்றப்புழையிலிருந்து பத்துப்பதினைந்து பேர் வந்திருந்தனர். அவர்களில் ஒரு பெண்கூட இல்லை! அழைத்து வருவதற்கு ஒருத்திகூடக் கிடைக்கவில்லையா பழனிக்கு? சொந்தத்தில் ஒரு பெண்கூட இல்லையா? பெண்களின் வம்புப்பேச்சில் இந்த விஷயம் அடிபட்டது. பழனிக்குச் சொந்தக்காரர்கள் என்று யாருமே கிடையாது என்பது எல்லோரும் அறிந்த சங்கதி தான். பத்துப் பதினைந்து ஆண்பிள்ளைகள் தடதடவென்று ஏறிவந்தபோது, சம்பந்தியாக ஒரு பெண் பிள்ளைகூட வரவில்லை என்பது ஒரு பெரிய குறையாகப்பட்டது அவர்களுக்கு. சக்கிக்கும் இது குறையாகத்தான் பட்டது.

மனதிலிருப்பதை அடக்க முடியாமல், நல்லபெண் வாய் விட்டுச் சொன்னாள்:

"அக்கம் பக்கத்திலிருந்து ஒரு பொம்புளையைக் கூட இழுத்துக்கிட்டு வந்திருக்கப்படாதா?"

காளிக்குஞ்சுவும் அதை ஆமோதித்தாள். குஞ்சுப்பெண் கேட்டாள்:

"இத்தெனை ஆம்புளைகளோடெ ஒத்தைக்கு ஒருத்தியா ஒரு பொம்புளெயெ யாரு அனுப்பி வைப்பாங்கன்னு கேக்கிறேன்?"

லட்சுமி கேட்டாள்:

"அவங்கதான் என்ன செய்வாங்க?"

நல்லபெண் சொன்னாள்:

"இது எந்த ஊரு வழக்கம்னு கேக்கறேன்? பொண்ணெக் கூட்டிக்கிட்டுப் போறுமின்னு பொம்புளேகள் வரணும். அது தான் வழக்கம்."

இவ்வாறு பெண்கள் பேசிக்கொண்டதில், அரையும் குறையுமாகச் சில வார்த்தைகள் சக்கி காதிலும் விழுந்தன. சக்கிக்கும் அவர்கள் பேச்சு நியாயமாகத்தான் பட்டது.

ரொக்கப் பணத்தைக் கட்டி வைக்க வேண்டிய சடங்கு ஆரம்பமாயிற்று. தொகை வரையறுத்துச் சொல்ல வேண்டியவர் துறை அரையன். அந்தச் சடங்கு முடிந்த பிறகுதான் கல்யாணம்.

துறை அரயன் பழனியையும் அவனது கூட்டாளியையும் அழைத்தார். அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று எல்லோரும் காதைக் கூர்மையாக்கிக்கொண்டு நின்றனர்.

அரையன் சொன்னார்:

"ஓர் எழுபத்தஞ்சு ரூபாய் கட்டி வை."

மாப்பிள்ளை வீட்டார்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இவ்வளவு பெரிய தொகைக்கு ஆணைபிறக்குமென்று அவர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அந்தத் தொகை அதிகமென்று தான் எல்லோருக்கும் பட்டது. ஒரு வலைக்காரன் கல்யாணத்திற்குத்தான், இத்தனை பெரிய தொகை கட்டச் சொல்வது வழக்கம்.

யாரும் பேசாமலே பொழுது நகர்ந்துகொண்டிருந்தது. மாப்பிள்ளை வீட்டார்களில் ஒரு முக்கியஸ்தர், வினயமாகவும், அதே சமயம் ஆண்மையுடனும் பேச ஆரம்பித்தார்:

"நீங்க வித்தியாசமா எடுத்துகிடப் படாது. நாங்களும் துறை அரயன் இருக்கிற ஒரு துறையிலே இருந்துதான் வந்திருக்கோம். இவ்வளவு பணம் கட்டி வைக்கணும்னு சொன்னீங்க. அதுக்கு விரோதமாகப் பேசலே...ஆனா...''

துறை அரயன் சொன்னார்:

"சொல்லு......சொல்லு......என்ன விஷயம்? அதைச் சொல்லு."

அச்சுதன்—அதுதான் அவன் பெயர்—சொன்னான்:

"பணம் இவ்வளவு கட்டணும்னு சொல்றதுக்குத் துறை அரயனுக்கு அதிகாரம் உண்டு. ஆனா, மாப்பிள்ளைப் பையன்

கிட்டேயும் ஒரு வார்த்தை கேட்டிருக்கணும்னு எனக்குப் படுது.''

துறை அரயன் நடவடிக்கையில் ஒரு தவறு நேர்ந்து விட்டது. அதை அவன் எடுத்துக் காட்டியது அவருக்கு ரசிக்க வில்லே. அவர் கேட்டார்:

''இந்த விஷயத்திலே இம்புட்டுத் தூரம் கேக்க என்ன இருக்குன்னு கேக்கறேன்?''

அச்சுதனும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லே. அவனுடைய துறையிலும் பேரும் புகழும்கொண்ட அரயன் ஒருவர் இருக்கத்தான் செய்கிறார். அச்சுதன் சொன்னான்:

''அது கேட்டுத் தெரிஞ்சுக்கிட வேண்டிய விஷயம்தான்.''

''என்ன இருக்குதாம், கேட்டுத் தெரிஞ்சுக்கிட?''

கண்டிப்பான குரலில் அச்சுதன் சொன்னான்:

''இந்தக் கலியாணத்தை நடக்காம அடிக்கணும்னு உங்க எண்ணம் போலிருக்கு.''

அச்சுதன் மிதமிஞ்சிப் பேசிவிட்டான். அரயன் அவனிடம் சள்ளென்று விழுந்தார். அவர் மீது பெரும் பழி ஒன்றைச் சுமத்தி விட்டான் அவன்.

அச்சுதன் தான் ஏற்கெனவே சொன்னதை மேலும் விளக்கிப் பேசினான்.

மாப்பிள்ளேப் பையனிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமலே, கட்டவேண்டிய தொகையை வரையறுத்துச் சொல்லிவிட்டால், போதிய பணம் கைவசம் இல்லாத பட்சத்தில் கல்யாணம் தடைப்பட்டு நின்றுவிடாதா? இதை எண்ணித்தான் அத்தனேயும் பேசினான் அச்சுதன். துறை அரயன் கேட்டார்:

''இந்தத் தொகையைக்கூடக் கட்ட முடியாத, போக் கத்துப்போன பிச்சைக்காரங்களா நீங்க?''

அவர், அவர்களுடைய துறை அரயன் அல்ல. ஆனாலும், இன்னொரு துறைக்கு அரயனாக இருப்பவர் அவர். 'பிச்சைக் காரன்' என்ற ஏச்சைக்கூடப் பொறுத்துக் கொள்ளலாம். இன்னும் ஒருபடி மேலே சென்று வைதாலும் பொறுத்துக் கொள்ளவேண்டியதுதான். ஆனால், அதோடு அடங்கி ஒடுங்கி விடாமல் அச்சுதன் மேலும் சில விஷயங்களேச் சொல்ல

முனைந்தான். துறை அரயனே இப்போது செம்பன்குஞ்சுவைப் பார்த்துக் கேட்டார்:

"செம்பன்குஞ்சு, எழுபத்தஞ்சு ரூபா பணம்கூடக் கட்டுறதுக்கு வக்கில்லாதவர்களுக்கா நீ பொண்ணைத் தூக்கிக் கொடுக்கப் போறே?"

பெண்கள் கூட்டம் இந்தக் கேள்வியை வெகுவாக ரசித்தது. சொல்லப்போனால் ஒவ்வொருவருடைய மனத்திலுமே எழுந்த கேள்விதான் அது.

வீடு வாசலோ, சொந்தக்காரர்களோ இல்லாத ஒருவனுக்குப் பெண்ணைக் கொடுப்பதுபற்றி துறையைச் சேர்ந்த எல்லாப் பெண்களுக்கும் வருத்தம்தான். அவர்கள் எல்லோரும் செம்பன்குஞ்சுவைத்தான் குறை சொன்னார்கள். இப்போது அரயன் செம்பன்குஞ்சுவின் முகத்தைப் பார்த்தே அதைக் கேட்டதும், அவர்களுக்கு மிகுந்த திருப்தி ஏற்பட்டது. இது வரை யாரும் அப்படிக் கேட்கவில்லை.

செம்பன்குஞ்சு மௌனமாக நின்றுகொண்டிருந்தான். அச்சுதன்தான் பேசினான்:

"பெரியவரே, நீங்க சொன்னது ரொம்ப சரி. நாங்க போக்கத்துப் போனவங்கதான். நாங்க யாருமே பழனிக்குச் சொந்தக்காரங்க இல்லே. ஒரு துறையைச் சேர்ந்தவங்க. அவ்வளவுதான். அதுதான் கட்டிவைக்கிற பணத்தைப் பத்தி முதல்லே ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம்னு சொன்னோம்."

அச்சுதன் பழனியின் வரலாற்றை விளக்கிக் கூறலானான். அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த பெண்கள் கறுத்தம்மாவை எண்ணி வருத்தப்பட்டனர். இதைவிட அவனைக் கடலில் தூக்கிப்போட்டிருக்கலாம் என்றுகூடச் சில பெண்கள் முணுமுணுத்தனர்.

இத்தனைக்குப் பிறகும் துறை அரயன் விட்டுக் கொடுத்துப் பேசத் தயாராக இருக்கவில்லை.

"அட, எல்லாம் சரிதான். ஆனா, பையன் நிலைமைக்கு ஏத்தாப்பலதான் பணம் கட்டுவது வழக்கமோ?"

'அந்த வழக்கம் கிடையாது' என்பதை அச்சுதனும் ஒப்புக்கொண்டான்.

"ஜோரான பொண்ணு அவ. அவ வேணுமாஞ அதுக்கு ஏற்பட்ட பணத்தைக் கட்டிவைக்கணும். ஆமா."

மாப்பிள்ளையுடன் வந்தவர்களில் ஒருவன் ஏதோ முணு முணுத்தான். ஆரம்பத்திலிருந்தே அரயனுடைய பேச்சு கொஞ்சமும் பிடிக்காமல் தவித்துக்கொண்டிருந்தான் அவன். வெறுப்பை அடக்கமுடியாமற் போனபோது, அவன் தன்னை மறந்து ஏதேதோ முணுமுணுத்தான். அவனைப் பார்த்துக் கேட்டார், அரயன்:

"என்னடா நீ முணுமுணுத்துக்கிட்டே இருக்கே?"

அதற்கு அவன் ஒன்றும் சொல்லவில்லை.

"சொல்லுடா!" என்று அரயன் மீண்டும் அதட்டிஞர்.

அவனும், தான் எண்ணியதைச் சொல்லிவிடுவது என்ற முடிவுக்கு வந்தான். அல்லது அதைச் சொல்லவேண்டும் என்ற உத்தேசம் ஏற்கெனவே அவன் மனத்தில் இருந்திருக்கலாம். கல்யாணம் தடைப்பட்டு நின்றுவிட வேண்டும் என்ற விஷம புத்தி அவனுக்குக் கிடையாது என்று யாரால் சொல்ல முடியும்?

துறை அரயனுக்கு எதிராக ஓர் அறைகூவல் விடுப்பது போல் அவன் சொன்னுன்:

"பூ! உங்க ஜோரான பெண்ணுக்குச் சீரையெல்லாம் வெளியிலே பேசப்படாது. ஆமா."

"உம். என்ன? சொல்லேன்?"

"உங்க துறை அழிஞ்சு போகாம இருக்கத்தான் எப்படி யாவது இந்தக் கல்யாணத்தை நடத்திபுடணும்னு பாக் கறீங்க? எங்க துறை அழிஞ்சு மண்ணுப்போனு, போயிட்டுப் போகட்டும். அப்படித்தானே? சரி, அது போனு போயிட்டுப் போறதுன்னு வெச்சுக்கிட்டாலும், எந்த ஊரிலேயும் வழக்க மில்லாத பணத்தையும் பையன்காரன் கட்டணுமாக்கும்? ரொம்ப அழகுதான், போங்க!"

எல்லோரும் திடுக்கிட்டுப் போய்விட்டனர். மறைமுக மாக எதைக் குறிப்பிடுகிருன் அவன்? நின்ற நிலையிலேயே தடாலென்று கீழே சாய்ந்தாள் சக்கி. கறுத்தம்மா அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள். 'அம்மா! என்று அதி பயங் கரமாகக் கூக்சலிட்டாள் அவள். அந்தக் கத்தலைக் கேட்டுப்

பெண்கள் எல்லோரும் வீட்டுக்குள் ஓடிச்சென்றனர். சக்கிக்கு நினைவு தவறிவிட்டது.

செம்பன்குஞ்சு, பித்துப்பிடித்தவன்போல் அங்கும் இங்கும் ஓடிஞன். சக்கி அணு அணுவாகச் செத்துக்கொண்டிருக்கிருள் என்று தோன்றிவிட்டது அவனுக்கு. கூட்டமும் மெதுவாகக் கலைய ஆரம்பித்தது.

மணப் பெண்ணைக் குறைகூறிப் பேசிய ஆசாமியிடம், விஷயம் என்ன என்று பலர் தூண்டித் தூண்டிக் கேட்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் அப்படிப் பேசியது பெரும் தவறு என்று சொல்லிப் பழித்தனர். ஆனுல், அவனே சிறிதும் மசியவில்லை. அவன் மனத்தில் ஏதோ ஒரு வீம்பு.

"இந்தப் பாருங்க, நான் இந்தக் கடற்கரைக்கு எத்தனை தரமோ வந்து போனவள். எனக்கு எல்லாக் கதையும் தெரியும்" என்ருன் அவன்.

கறுத்தம்மாவின் வாழ்க்கையில் ஏதோ பயங்கர ரகசியம் ஒன்று இருக்கிறது என்ற எண்ணம் யாருக்குமே ஏற்படுவது இயற்கைதானே? இருந்தாலும், அதை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் அப்போது யாரிடமும் எழவில்லை. எப்படியாவது அவன் வாயை மூடிக்கொண்டு இருந்துவிட்டால் போதும் என்றிருந்தது எல்லோருக்கும். மாப்பிள்ளையும் அவனைச் சேர்ந்தவர்களும் வந்திருக்கிற வேளையிலா...?

பல்லை நறநறவென்று கடித்தவாறு அச்சுதன், "டேய், வாயை மூடிக்கிட்டு இருந்து தொலை" என்று உரக்கக் கத்திஞன்.

சக்கிக்கு நல்லபெண்ணும், காளிக்குஞ்வும் சிச்ருஷை செய்தனர். சக்கி கண்ணைத் திறந்து பார்த்தாள். 'கறுத்தம்மா' என்று அலறியபடி, அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதாள். மீண்டும் நினைவு தவறிவிட்டது.

பெண்கள் கறுத்தம்மாவைத் தேற்றிஞர்கள். சக்கியைத் தக்கபடி கவனித்துக்கொண்டனர்.

சக்கிக்குக் கொஞ்சம் ஆசுவாசம் ஏற்பட்டபோது, செம்பன்குஞ்சு அச்சுதனையும், பழனியையும் தன் அருகே அழைத்துப் பேசிஞன். அவனே, அவர்கள் கட்டிவைக்க வேண்டிய பணம் எழுபத்தைந்து ரூபாயையும் கொடுக்கத் தயாராக

இருந்தான். அவர்கள் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு கட்டிவைத்து விட்டால் போதும். பழனி ஒப்புக்கொண்டான். அச்சுதனும் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை.

பழனி பணத்தோடு பந்தலில் நுழைந்தான். அப்போது சலசலப்பு சற்றுத் தணிந்தது. பப்பு சொன்ன வார்த்தைகள் கூட எல்லோருடைய நினைவிலிருந்தும் மறைந்து விட்டன போலிருந்தது.

பழனி பணத்தைக் கட்டிவைத்தான். வழக்கப்படி அதில் ஒரு பங்கைத் துறை அரயன் எடுத்துக்கொண்டார். மீதிப் பணத்தை அவர் செம்பன்குஞ்சு கையில் கொடுத்தார். இந்த அளவுக்குக் களேபரம் நடந்தும்கூட முகூர்த்த காலம் தாண்டி யிருக்கவில்லை. சடங்குகள் ஆரம்பமாயின.

சக்கிக்கு இப்போது எழுந்து உட்கார முடியும். ஆனால், தலை சுற்றிக்கொண்டிருந்தது. சில சமயம், உட்கார்திருக்கை யிலேயே கண்களில் இருள் புகுந்து மறைக்கும். காது அடைக் கும். உட்கார்ந்து கொண்டிருக்க முடியாதபடி சோர்வு தட்டி விடும்.

மணப் பெண்ணைப் பந்தலுக்கு அழைத்துக்கொண்டு வந்தனர். மூப்பர் முன்னின்று திருமணத்தை நடத்தி வைத்தார். தாலி கட்டும் வைபவம் முடிந்தது. உடைகளும் வழங்கப் பட்டன. பழனியின் கையைப் பிடித்துக் கறுத்தம்மாவின் கைக்குள் வைத்தார் மூப்பர். கறுத்தம்மாவின் கரத்தை அவர் தொட்டபோது அவள் கையைப் பின்னல் இழுத்துக்கொண் டாளோ என்ற சந்தேகம் செம்பன்குஞ்சுவுக்குத் தோன்றிற்று. அவள், பழனியின் கையை இறுகப் பிடித்துக் கொண்டதாகத் தெரியவில்லை. அவள் கைமேல் அவன் கை இருந்தது. அவ்வளவுதான்!

கறுத்தம்மா, மனத்தில் என்னென்ன அப்போது எண்ணிக் கொண்டாளோ? பழைய நினைவுகள் அவள் சிந்தையில் ஓடி யிருக்கத்தானே வேண்டும்? மூப்பர் சொன்னதை எல்லாம், ஒரு யந்திரம்போல் அவள் செய்து கொண்டிருந்தாள்.

பெண்களின் கைத்தாங்கலில் சக்கி பந்தலுக்கு வந்தாள் ஆனல், முகூர்த்த சமயத்தில், அவளுக்கு மறுபடியும் நினைவு, தப்பி விட்டது.

இவைகளெல்லாம் அமங்கலமான அறிகுறிகள் என்று சில பெண்கள் பேசிக்கொண்டார்கள். அந்த எண்ணம் ஏற்படுவது இயற்கைதானே? மீண்டும் சக்கி கண்ணை விழித்துப் பார்த்தாள். பூரண ஓய்வு எடுததுக்கொண்டு விட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று சிலர் ஆலோசனை தெரிவித்தார்கள்.

விருந்து நடந்துகொண்டிருந்த சமயத்தில், மற்றுமொரு குழப்பம் விளைந்தது. சில பெண்கள் சாப்பிடாமலே எழுந்து சென்றுவிட்டனர். பழனியின் ஜாதியைப் பற்றிய சர்ச்சை கிளம்பியதுதான் காரணம். மாப்பிளையுடன் வந்து வாயைக் காட்டிக்கொண்டிருந்த பப்புவும், இதில் சேர்ந்தான்.

ஆனால், இந்த நிகழ்ச்சிகள் ஒன்றும் செம்பன்குஞ்சுவின் மன உறுதியைக் குலைத்துவிடவில்லை. திடீரென்று அவன் துறை அரயன் முன்னால் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து, தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று மன்றாடினான். சக்கியின் உடல்நிலை படுமோசமாக இருந்தது. கறுத்தம்மாவோ அன்று வரை அந்த வீட்டைவிட்டு வெளியே கிளம்பியவளே அல்ல. இப்போது அவள் தன்னந்தனியாக அடுத்த ஊருக்குப் போக வேண்டிய சந்தர்ப்பம் வந்திருக்கிறது. அதோடு, மாப்பிள்ளையுடன் பெண்கள் யாரும் வரவில்லை. இந்தச் சூழ்நிலையில், கறுத்தம்மா உடனடியாகப் போகாமல் இருந்தால் அதில் பல சௌகரியங்கள் உண்டு. அவசியமென்றால் பழனி அங்கேயே சில நாட்கள் தங்கியிருக்கலாமே. கறுத்தம்மா சென்று விட்டால், செம்பன்குஞ்சுவின் வீடு சர்வ குழப்பத்தில் ஆழ்ந்து போய்விடும். படுக்கையில் விழுந்துவிட்டவளை ஏனென்று கேட்பதற்கோ, கஞ்சி காய்ச்சிக் கொடுப்பதற்கோ நாதியில்லை என்றாகிவிடும்.

செம்பன்குஞ்சு பயித்தியம் பிடித்தவன் போல் ஆகி விட்டான். இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த அரயன் சொன்னார்:

"செம்பன்குஞ்சு, நீ சொல்வது எல்லாம் சரிதான். ஆனா, அவங்க கல்யாணப் பெண்ணைக் கூட்டிக்கிட்டுப் போகணும்னு சொன்னா......வேண்டாம்னு நம்மாலே தடுக்க முடியுமா?"

செம்பன்குஞ்சு சொன்னான்:

"நீங்க ஒரு வார்த்தை சொன்னா அவங்க கேப்பாங்க?"

அரயன் சிரித்தார்.

"அவங்க திருக்குன்றப்புழையைச் சேந்தவங்க. பொல்லாப் பயலுக அத்தனை பேரும். நீயே பாத்துக்கிட்டிருந்தியே."

அரயனைத் தவிர செம்பன்குஞ்சுக்கு வேறு யார் துணை? கறுத்தம்மா சென்றுவிட்டால் அப்புறம் அந்த வீட்டின் கதி என்ன? அரயன் அழுத்தமாகச் சொல்லிவிட்டால் அவர்கள் தட்ட மாட்டார்கள் என்றான் செம்பன்குஞ்சு.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு, எல்லோரும் வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டனர். விருந்தாளிகள் எல்லோரையும் வழி அனுப்பி வைக்கவேண்டு மென்றான் அச்சுதன். கறுத்தம்மா சக்கியின் அருகே அமர்ந்து அழுது கொண்டிருந் தாள். தான் அவசர வேலைகளில் ஈடுபட்டிருப்பது போல், செம்பன்குஞ்சு பாவனை காட்டிக்கொண்டிருந்தான். அவசிய மில்லாமலே அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தான். தங்களுக்கு விடைதந்து அனுப்பிவைக்க வேண்டும் என்பதை அச்சுதன் மீண்டும் நினைவுறுத்தினான். மூன்றுவது முறையும் அவன் சொன்னபோது, செம்பன்குஞ்சுவால் நழுவிச்செல்ல முடியவில்லை. அப்போது அரயன் அச்சுதனைப் பார்த்துக் கேட்டார்:

"இந்தப் பாரு, இண்ணைக்கே பெண்ணைக் கூட்டிக்கிட்டுப் போயிடணுமுன்னு நெனக்கிறீங்களா?"

இப்படி ஒரு கேள்வி எழும் என்று யாருமே எதிர்பார்க்க வில்லை. சட்டென்று என்ன பதில் சொல்வது என்பதும் அச்சு தனுக்குத் தெரியவில்லை. அரயன் அவன் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தார். அச்சுதன் கேட்டான்:

"நீங்க என்ன இப்படிக் கேக்கறீங்க?"

"என்னடா கேக்கறேன்?"

"கல்யாணம் முடிஞ்ச பிறகு, பெண்ணை விட்டுப்புட்டுப் போறதுண்டா?"

கல்யாணமான பெண்ணை அவள் வீட்டோடு விட்டு விட்டுச் செல்வது உசிதமல்ல என்பது அரயனுக்கும் தெரியும். அப்படிச் செய்யவேண்டும் என்று ஆணை ஒன்றும் பிறப்பித்து விடமுடியாது. செம்பன்குஞ்சுவின் குடும்ப நிலையை அரயன்

விளக்கமாக எடுத்துச் சொன்னார். அவர்களுக்கும் அது தெரியும். அரயன் கேட்டார்:

"அவ தாயார் எழுந்து உட்கார்ந்த பிறகு கூட்டிக்கிட்டுப் போனாப் போதாதா?"

ஆனால், மாப்பிள்ளைப் பையன்தான் இதைத் தீர்மானிக்க வேண்டும். அச்சுதன் அந்தப் பதிலைச் சொல்லித் தப்பித்துக் கொண்டான். தன்னுடைய பேச்சுக்கு வலு ஏற வேண்டும் என்ற எண்ணத்தில் அரயன் சொன்னார்:

"பொண்ணைக் கையோடு கூட்டிக்கிட்டுத்தான் போகணும்னு பிடிவாதம் பிடிக்குதுக்கு ஒண்ணும் யோக்கியதை கிடையாது உங்களுக்கு!"

அச்சுதன் கேட்டான்:

"அதென்ன, ஒரே அடியா அப்படிச் சொல்லிப் புட்டீங்க?"

"இல்லே, பொண்ணைக் கூட்டிக்கிட்டுப் போணும்னா, நீங்களும் ஒரு பொம்பளையெ அழைச்சுகிட்டு வந்திருக்கணும். அதுதான் வழக்கம்."

அச்சுதன் சவுக்கால் அடித்தது போல் திருப்பிக் கேட்டான்:

"அப்படிக் கூட்டிக்கிட்டு வருதுக்கு ஒரு பொம்புளைகூட இல்லாதவனுக்கு எதுக்குப் பொண்ணைத் தூக்கிக் கொடுத்தீங்களாம்?"

ரொம்பவும் கோபப்பட்டது போல் துறை அரயன் பாவனை காட்டினார்:

"நீ என்ன, எங்கிட்டே விவாதத்துச்கா வந்திருக்கே?"

அச்சுதன் வாயை மூடிக்கொண்டு விட்டான். இனிமேல் இதுபற்றி முடிவாக ஒரு வார்த்தை சொல்ல வேண்டியவன் பழனிதான். அவனே பேசிக்கொள்ளட்டும் என்று அச்சுதனும் சும்மா இருந்தான். தான் சொல்வதைப் பழனி ஏற்றுக் கொள்வான் என்று அரயன் எண்ணினார்.

பொழுது நகர்ந்து கொண்டிருந்தது. ஒருவராவது வாயைத் திறக்கவில்லை. அச்சுதன், 'நேரமாகிறது' என்று அவசரப்படுத்தினான். பழனி அங்கேயே சில நாட்கள் தங்குவதுதான் நல்லது என்றார் துறை அரயன். அதற்கு யாருமே

பதில் சொல்லவில்லை. பதில் சொல்ல வேண்டியவன் பழனி தான்.

அச்சுதன் பழனியிடம் சொன்னான்: "தம்பி, என்ன சொல்லுறே, சொல்லு? எங்களுக்குப் போக நேரமாச்சு?"

பழனி தயங்கினான். என்ன சொல்லுவது என்று அவனுக்குத் தெரியவில்லை. அங்கு நடந்த சம்பாஷணையை முதலிலிருந்து அவன் கவனித்துக்கொண்டுதான் இருந்தான். ஆனால், அவனால் எவ்வித முடிவுக்கும் வர முடியவில்லை. ஒரு கால், சுயமாக அவனால் ஒரு முடிவுக்கும் வரமுடியாதோ என்னவோ! இருந்தாலும், அதை ஒரு பெரிய பிரச்னையாக அவன் எண்ணவில்லை. இதன் காரணமாக அவன் மனத்தில் சஞ்சலம் ஏற்பட்டுவிடவில்லை.

அச்சுதன் மிகுந்த வெறுப்போடு சொன்னான்:

"ஏதாவது ஒண்ணு வாயைத் திறந்து சொல்லித் தொலை. ஏன் பொழுதைப் பாழாக்கிக்கிட்டு நிக்கறே?"

இவ்வாறு கத்திவிட்டு, அவனை மேலும் பலவிதமாகக் குறை கூறினான் அச்சுதன். அவனுடைய கல்யாணத்துக்கு வந்ததால், மிகவும் வேண்டியவர்களுடனேயே மனஸ்தாபம் கொள்ளும்படி ஆகிவிட்டதாம்.

பழனியின் வாயிலிருந்து என்ன வார்த்தைகள் வருமோ என்று செம்பன்குஞ்சு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். பழனி மிகவும் நல்லவன்; சாது. அவன் கைவிடமாட்டான். அதோடு அவளைக் கையோடு அழைத்துச் சென்று ஆகவேண்டிய காரியமும் ஒன்றுமில்லை. இந்த உலகில் எந்த இடமும் பழனிக்குச் சொந்தம்தான். எல்லா இடமும் அவனுடைய வீடுதான். கூட வந்திருப்பவர்களை அனுப்பி வைத்துவிட்டுப் பழனி அங்கேயே தங்குவான் என்றுதான் செம்பன்குஞ்சு எண்ணினான்.

அச்சுதன் மீண்டும் கத்தினான்:

"ஏதாவது சொல்லித் தொலை!"

பழனி அச்சுதனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். பிறர் முகங்களையும் ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே வந்தான். எந்த முகக்குறியையும் அவனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

"நான் பொண்ணைக் கையோடு கூட்டிக்கிட்டுப் போகப் போறேன்!''

செம்பன்குஞ்சுவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இப்படிச் சொல்வான் என்று அவன் எண்ணவே இல்லை. பழனி இப்படித் தன்னைக் கத்தரித்துக்கொண்டு பேசுவான் என்று அவன் எதிர்பார்க்கவும் இல்லை.

நெஞ்சில் அடித்துக்கொண்டே செம்பன்குஞ்சு கெஞ்சினான்:

"ஐயா, நீ என் ராசால்லே. அந்தப் பொம்புளை படுத்துக் கிடக்கிறதைப் போய் ஒரு தரம் பார்த்துப்புட்டு வா. அப்புறம் சொல்லு."

"உன்னையும் ஒரு தாய்தானே பெற்றெடுத்தாள்' என்றும் சேர்த்துக் கேட்டால்தான் அவன் மனத்திலிருந்த கேள்வி முழுமை பெறும். ஆனால் செம்பன்குஞ்சு அதை மனத்துள் அடக்கிக்கொண்டான்.

செம்பன்குஞ்சுவின் வேண்டுகோள் பழனியின் மனத்தைத் தொட்டதாகவே தெரியவில்லை. தனது முகத்தால் ஏதாவது குறிப்புணர்த்துவான் என்று எண்ணிப் பழனி அப்போதும் அச்சுதனின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால், அவனால் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. பெண்ணைக் கையோடு அழைத்துச் செல்லவேண்டும் என்ற அபிப்பிராயம் தான் அவனுக்கு இருக்கும் என்று பழனி எண்ணிக் கொண்டான்.

பழனி மீண்டும் ஒருமுறை சொன்னான்:

"கூட்டிக்கிட்டுத்தான் போகப் போறேன்."

சிறிது நேரத்திற்குப்பின் பழனிக்கு ஒரு தெளிவு பிறந்தது. அவன் தனது நிலையை எடுத்து விளக்கினான். அவனுக்கு வீடோ வாசலோ இல்லை. குடியும் குடித்தனமுமாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் அவன் கல்யாணம் செய்துகொண்டிருக்கிறான். இனிமேல்தான் குடும்ப வாழ்க்கையைத் துவக்க வேண்டியதாய் இருக்கிறது. கல்யாணம் செய்துகொண்டபின், பெண்ணை அவள் வீட்டில் விட்டுப் போவது அவனுக்கு உசிதமாகப் படவில்லை. இன்னும் செய்துமுடிக்க வேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்

கின்றன. எதையும் ஒத்திப் போட்டு நாளைக் கடத்துவதில் அவனுக்கு விருப்பமில்லை.

"அதுதான் நான் சொல்லுதேன், பொண்ணைக் கூட்டிக் கிட்டிப் போகணும்ணு."

பழனி இவ்வளவு சொன்னதே ஆச்சரியம்தான். தீர யோசித்துப் பார்த்த பின்தான் அவன் பேசினான். தனது முடிவு தனது நண்பர்களுக்கும் ஏற்ற ஒன்றாக இருக்கும் என்று அவன் மனத்துக்குப்பட்டது. ஆனால், செம்பன்குஞ்சு இதை எப்படி வாங்கிக்கொண்டான் என்பதை யாருமே கவனிக்க வில்லை. கல் நெஞ்சம்கூட உருகிவிடும்படி கெஞ்சினான் செம்பன்குஞ்சு.

"இந்தப் பாரு, நான் சின்ன வயசிலிருந்தே அவளை வளத்தி எடுத்தவன். நான் சொல்றேன், கேளு. நாளைக்கு நீயும் ஓர் அப்பனாகத்தான் போறே. அதை மறந்துடாதே."

பழனியின் மனம் மாறிவிடவில்லை. ஒருவேளை அச்சுதனும் கூட்டாளிகளும் செம்பன்குஞ்சு சொல்வதை ஒப்புக் கொண் டிருந்தால், அவன் ஆட்சேபணை சொல்லாமல் இருந்திருப் பானோ?

துறை அரயன் மனசு உருகிவிட்டது. எப்படிப்பட்ட கல்நெஞ்சம் படைத்தவனும் கண்ணீர் சிந்தி விடுவான். அச்சுத னும் செம்பன்குஞ்சுவுக்காக இரங்கினானோ என்னவோ? அதை அவன் வெளியே காட்டிக் கொள்ளாமல் இருக்கிறானோ, என்னவோ? அரயனுக்குக்கூடக் கோபம் வந்தது. அரயன் சொன்னார்:

"அவன் அப்படித்தான் பேசுவான். அவன் வீட்டிலே வளர்ந்தவன் இல்லே. அம்மா, அப்பான்னு சொன்னா என்ன அர்த்தம்னு அவனுக்குத் தெரியாது. பாசம், பந்தம்னு சொல்லுறோமே, அது வீடும் குடியுமா இருந்தாத்தான் தெரியும். கடற்கரையிலே வளந்தவனுக்கு எப்படி அந்தப் புத்தி வரும்?"

சற்று நேரத்திற்குப் பின் அரயன் செம்பன்குஞ்சுவைப் பார்த்துச் சொன்னார்:

"இப்படிப் பட்டவனுக்குப் பொண்ணைத் தூக்கிக் கொடுத்துப்புட்டியே. உன் புத்தியைத்தான் சொல்லணும்!"

செம்பன்குஞ்சு அதை வாய்விட்டு ஆமோதிக்காத குறை தான். வாய்விட்டுச் சொல்லிவிட வேண்டும் என்றும் அவன் எண்ணினான். முதன்முதலில் பழனியைச் சந்தித்த போது அவன் உள்ளத்தில் இப்படி ஒரு பேய்க் குணம் பதுங்கிக் கிடக்கும் என்று அவன் எண்ணவே இல்லை. வீடு வாசல் இல்லாமல் அனாதையாய் வளர்ந்த குறைதான் என்று துறை அரயன் சொன்ன சொல் சரிதான் என்றே செம்பன்குஞ்சுவுக்கும் பட்டது. இப்போதே இந்தப் புத்தியைக் காட்டுகிறவன், எதிர் காலத்தில் எப்படி எப்படி இருக்கப் போகிறானோ? பெண்ணை அவனுக்குக் கட்டிக் கொடுத்ததுகூடத் தவறு என்ற எண்ணம் செம்பன்குஞ்சுவுக்கு ஏற்பட்டு விட்டதோ? கல்யாணம் நடந்து முடிந்த அன்றே அந்த எண்ணம் பிறந்து விடுவதா? அன்புணர்ச்சி சற்றும் இல்லாதவன். வெகுவிரைவில் அது வெளியாகிவிட்டது.

அங்கு நடந்ததை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்த அச்சுதன், புதிய யோசனை ஒன்று கூறினான்:

"ஏ எதுக்குடா ஏச்சும் பேச்சும் கேட்டுக்கிட்டிருக்கே. உன்னோட வரவேண்டியது அந்தப் பொண்ணு. அதைக் கூப்பிட்டுக் கேட்டுப்புடு. அவ சொல்லட்டுமே."

இந்த யோசனை செம்பன்குஞ்சுவுக்குச் சிறிது ஆசுவாசத்தைத் தந்தது. இதில் பழனிக்கும் ஒரு நிம்மதி பிறந்திருக்கலாம். துறை அரயனும் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டார். அவர் சொன்னார்:

"அது ரொம்ப சரி. அவ சொல்லட்டும். அவளைக் கூட்டிக்கிட்டு வாங்க."

செம்பன்குஞ்சு கறுத்தம்மாவை அழைத்தான். அவள் தாயின் அருகே உட்கார்ந்துகொண்டிருந்தாள். அழுது அழுது முகம் வீங்கி ஈரம் கசிந்திருந்தது. அவள் கதவருகே வந்து நின்றாள். அரயன் அவளைப் பார்த்துக் கேட்டார்:

"அம்மா, நீ உன் தாயாரை இந்த நிலையிலெ போட்டுப் புட்டுப் போகப் போறியா? இல்லே, இங்கேயே இருக்கப் போறியா? உன் அப்பனுக்குச் சோறுபொங்கிப் போடக்கூட ஆள் இல்லேங்கிறது உனக்குத் தெரியுமே."

சில வினாடிகளுக்குப் பின் அவர் தொடர்ந்து சொன்னார்:

"கல்யாணம் முடிஞ்சுட்டா புருஷன் கையெப் புடிச்சுக் கிட்டுப் போகவேண்டியதுதான் நியாயம். இருந்தாலும் நீ தான் அதெத் தீர்மானிக்கணும்."

கறுத்தம்மா என்ன பதில் சொல்வாள்? தீர்மானமாக ஒரு முடிவுக்கு வரக்கூடிய மனத்தெம்பு இல்லை அவளுக்கு. ஊரை விட்டுச் செல்லப் போகிறோம் என்பதற்காகவே எல்லோரிடத் திலும் விடைபெற்றுக்கொண்டு விட்டாள் அவள். அந்தக் கடற்கரையினிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு விட்டாள். அவளுக்கு உள்ளூரப் பயம்! எதிர்கால வாழ்வை எண்ணிப் பார்க்கிறபொழுது பயம் மனத்தைக் கவ்வுகிறது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்சிரத்தில் ஊரை விட்டு ஓடி விடுவது என்ற தீர்மானத்தில் தயாராக நின்று கொண்டிருக் கிறாள் அவள். அந்த நாளும் வந்து சேர்ந்து விட்டது. ஆனால், இப்போதோ தாயார் படுக்கையோடு படுக்கையாய்க் கிடக் கிறாள். தகப்பனைக் கவனிக்கவும் ஒருவருமில்லை. அவள் அழுதாள். பேசக்கூடத் தெம்பில்லை அவளுக்கு.

அவள் என்ன பதில் சொல்லப் போகிறாள் என்பதைத் தெரிந்துகொள்ள ஆவலுடன் எல்லோரும் காத்துக்கொண் டிருந்தனர். அரயன் சொன்னார்:

"பாவம், அவ என்ன பதில் சொல்லுவா? இருந்தாலும் அவதானே இதைத் தீர்மானிக்கணும்!"

தாயின் அருகே சென்று, அவள் முகத்தோடு தன் முகத் தைச் சேர்த்துக்கொண்டு ஏங்கி ஏங்கி அழுதாள் கறுத்தம்மா. சக்கியும் கூடவே அழுதாள். அவள் எதை எதையோ அவ ளிடம் கேட்டாள்.

"கறுத்தம்மா, உங்கிட்டே என்ன கேட்டாங்க?"

கறுத்தம்மா பதில் எதுவும் சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை அவளால். சிறிது நேரத்திற்குப்பின் விக்கி விக்கி அழுதுகொண்டே சொன்னாள்:

"அம்மா, நான் போகப் போறதில்லெ!"

சக்கி சட்டென்று பதில் சொன்னாள்:

"இந்தாப் பாரு கறுத்தம்மா, நீ எங்கண்ணிலே! அப்படிச் சொல்லாதே......போகாமே இருந்தா......"

அவளால் அதைப் பூராவும் கூறி முடிக்கமுடியவில்லை. அவள் போகாதவரை என்ன நடக்கும் என்பது சக்கிக்கும் தெரியும். அதை எண்ணித்தான் அவளும் பயந்தாள். அச்சத்தில் ஆழ்த்திவிடும் சித்திரம் கற்பனையில் விரிந்தன. சக்கியின் நிலை பரிதாபகரமானது. தொண்டை வறண்டால் ஒரு சொட்டுத் தண்ணீர் விட்டுக் கொடுப்பதற்குகூடப் பக்கத்தில் எவரும் இல்லை. சக்கி அந்தக் கஷ்டத்தைப் பொறுத்துக் கொள்வாள். ஆனால், பெண்ணின் வாழ்க்கை நிலைகுலைந்து சரிந்துவிடக் கூடாது. கூடிய விரைவில் அவளை அனுப்பி வைத்துவிட வேண்டும் என்று சக்கி ஏற்கெனவே எண்ணியிருந்தாள். ஆமாம்; அவள் போய்த்தான் ஆகவேண்டும்.

"கறுத்தம்மா, நீ போயி, நான் போறேன்னு சொல்லு" போ."

சக்கி அவளைத் தன் உடம்பிலிருந்து தள்ளினாள். அவளை நிர்ப்பந்தித்தாள். ஏசவும் செய்தாள்.

" உனக்கு அந்தத் துலுக்கப் பயலைப் பிரிஞ்சி இருக்குதுக்குக் கசப்பா இருக்கோ!"

நொடிப் பொழுதில் கறுத்தம்மா மனத்தில் ஒரு தைரியம் பிறந்தது. அவள் வாசலில் நின்றுகொண்டு சொன்னாள்:

"நான் போறேன்."

மீண்டும் தாயும் மகளும் ஆரத்தழுவிக்கொண்டு ஒரே உடம்பாகி விட்டனர். இருவரது இதயமும் ரத்தக்கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தன.

கறுத்தம்மா செம்பன்குஞ்சுவின் காலில் விழுந்து பாதங்களை இறுகப் பற்றிப் பிடித்துக்கொண்டாள். அவன் தன் கால்களைப் பலவந்தமாக உருவிக்கொண்டு, மறுபக்கம் திரும்பி நின்றுகொண்டான். சிறிது நேரம் அப்படியே கிடந்துவிட்டு அவள் எழுந்தாள். தாய் அவளை ஆசீர்வதித்து விடை கொடுத்துவிட்டாள். எல்லாவற்றையும் மனத்தில் எண்ணிப் பார்த்து, நல்லபடியாக நடந்துகொள்ள வேண்டுமென்று உபதேசித்து வழி அனுப்பி வைத்திருக்கிறாள்.

பழனி விடை பெற்றுக்கொண்டபோது செம்பன்குஞ்சு பேசவே இல்லை. சந்தோஷத்தில் ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தானே, அந்தச் செம்பன்குஞ்சு அல்ல அவன். அவன்

அப்போது அழவும் இல்லை. அவன் ஆளே உருமாறிப் போய் விட்டான் என்று தோன்றியது. அவன் முகம் வீங்கிச் சிவந்து கிடந்தது. ரௌத்திரமூர்த்தியாய் மாறிவிட்டிருந்தான் அவன்.

பத்துப் பதினைந்து ஆண்பிள்ளைகள் முன்னால் செல்ல, பின்னால் அவள் நடந்து சென்று கொண்டிருந்தாள். மகள் செல்கிற காட்சியைக் காண வெகுபிரயாசையுடன் கையை ஊன்றித் தலையைத் தூக்கிப் பார்த்தாள் சக்கி. திடீரென்று அவள் தலை கீழே சரிந்தது. கண்ணீர் சொரிந்த வண்ணம் நல்ல பெண் தலையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டாள்.

"அவ என் மக இல்லே!" என்று பல்லைக் கடித்தவாறு அலறினான் செம்பன்குஞ்சு.

"அக்கா!" என்று கண்ணீர் விட்டபடி உறக்கக் கத்தினாள் பஞ்சமி.

சக்கியின் அருகே நல்லபெண்ணும் காளிக்குஞ்சுவும் நின்று கொண்டிருந்தனர்.

கறுத்தம்மா தன் எதிர்கால வாழ்வை நோக்கி அடி யெடுத்துவைத்து நடக்கிறாள். அவளுடைய எதிர்காலம் எப்படி இருக்கிறதோ? ஒரு வேளை, அவமானத்திலிருந்து, பயங்கரமான ஒரு பொறியிலிருந்து அவள் தப்பிச் செல்கிறாளோ?

அவளுடைய நல்வாழ்வுக்காக யாரும் பிரார்த்திக்கவில்லை. அவளும் பிரார்த்திக்கவில்லை. ஒருகால், பரீக்குட்டி பிரார்த் தித்தானோ என்னவோ!

அந்தக் கடற்கரையில் கறுத்தம்மாவைத் தெரியாதவர்கள் யாரேனும் உண்டா? அவள் இன்று அந்த ஊரைவிட்டே செல்கிறாள்.

ஆனால், அந்தக் கடற்கரையில் இனிமேலும் அந்தக் கீதம் கேட்குமா? கேட்கலாம். ஆனால், அதை யார் கூர்ந்து கேட்கப் போகிறார்கள்? அதற்குத்தான் ஆள் இல்லை.

# 11

அந்த ஊரில் கடல் ஏதோ விசேஷத் தன்மைகொண்டு காட்சி தருவதாகக் கறுத்தம்மாவுக்குப் பட்டது. தண்ணீர் கூட ஏதோ வித்தியாசமாகவே இருந்தது. அமைதியாக அடங்கிக் கிடக்காமல் ஓயாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது அந்தக் கடல். நீரோட்டமோ சுழியோ எந்த நிமிஷத்திலும் தோன்றி விடக்கூடும் என்ற எண்ணம் ஏற்பட்டது ஆனல், அதையெல் லாம், கபட எண்ணம் கொண்ட அந்தக் கடல் யாருக்கும் தெரியாமல் தன்னுள் மறைத்து வைத்துக்கொண்டிருப்பது போலவும் தோன்றியது. கரையோர மண்ணுக்கும் மற்ருெரு நிறம்.

பலர் வந்து புதுப்பெண்ணைப் பார்த்துவிட்டுச் சென்ருர் கள். அவர்களிடம் என்ன பேசவேண்டும் என்பதோ, எப்படிப் பழக வேண்டும் என்பதோ கறுத்தம்மாவுக்குத் தெரியவில்லை. வந்தவர்கள் எல்லோருமே அவளை மிகவும் கூர்மையாகக் கவனித்தனர். வெட்கம் மேலிட்டுக் கூசிக் குறுகிப் போனுள் கறுத்தம்மா.

ஆனுலும், எல்லோருடைய மனதிலும் தன்னைப்பற்றி ஒரு நல்லெண்ணம் தோன்றும்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது அவளுக்குத் தெரியும். ஆனல் அதை வெற்றிகரமாகச் செய்து முடிப்பது எப்படி?

அதிகாலையில் பழனி கடலுக்குச் சென்ருன். அன்று கடலில் ஏராளமாக மத்திமீன் வந்திருந்தது. கறுத்தம்மா இப்போது ஒரு குடும்பத்துக்கு நாயகியாகிவிட்டாள். அவளுக்கு வட்டுவேலை குவிந்து கிடந்தது.

அந்த வீட்டில் மொத்தம் ஒரு பானையும், சட்டியும், அகப்பையும்தாம் இருந்தன. குடித்தனம் என்ற அந்தஸ்தை எட்ட இன்னும் எத்தனை சாமான்களோ வாங்கியாகவேண்டும். ஒரு கூடையில் கொஞ்சம் அரிசியும் உப்பும் மட்டும் இருந்தன. கல்யாணத்துக்கு முன் பழனிக்கு வீடு என்றே ஒன்று இருக்கவில்லை. ஒரு வீட்டுக்குத் தேவையான பொருள்கள் என்ன என்ன என்பதை அவனுக்குச் சொல்லித்தரவும் யாரும் இல்லை. சகல காரியங்களையும் அவன்தான் கவனித்துக்கொள்ள வேண்டியவனாக இருந்தான்.

அன்று கறுத்தம்மா சோறு பொங்கினாள். உள்ளியை அரைத்து ஒரு துவையலும் பண்ணினாள். சமையலுக்குத் தேவையான பாத்திரங்களை அயல் வீட்டிலிருந்து இரவல் வாங்கிக்கொண்டாள். அடுத்த வீட்டுக்குச் சென்று அரைத்துக் கொண்டு வந்துவிட்டாள். பக்கத்து வீட்டில் குடியிருந்த கிழவி சொன்னாள்:

"ஒருத்தனெ உங்கையிலே ஒப்படைச்சுட்டாங்க; நீதான் அவனெ பத்திரமா கவனிச்சுக்கிடணும்."

நீர்க்குன்றத்துக் கடற்கரையில் ஒலித்த அதே வார்த்தைகள்தாம் இங்கும் ஒலிக்கின்றன. எந்த இடத்திலும், எந்தப் புதுப்பெண்ணுக்கும் இவ்வார்த்தைகள்தாம் கூறப்படும். ஒரு வேளை அவளுக்கு மட்டும்தான் இதைச் சொல்கிறார்களோ? எல்லோரும் சந்தேகக் கண்கொண்டு தன்னைப் பார்ப்பதாக அவளுக்குப் பட்டது. அவளுடைய ரகசியம் அம்பலமாகி விட்டதா என்ன?

ஊரிலுள்ள பெண்கள் எல்லோரும் கூடி உட்கார்ந்து கொண்டு புதுப்பெண்ணைப் பற்றிப் பேசிக்கொண்டனர். பேசுவதற்கு எவ்வளவோ விஷயங்கள் இருந்தன அவர்களுக்கு! இரண்டு தோணிகளுக்குச் சொந்தக்காரனான ஒரு வலைக்காரனுடைய பெண் அல்லவா அவள்? அப்படிப்பட்ட ஒரு பெண்ணை வீடு வாசல், சொந்தம் சுற்றம் ஒன்றுமில்லாத ஒருவனுக்குக் கட்டிக் கொடுப்பதற்குக் காரணம் என்ன என்று அவர்கள் ஆராய்ச்சி செய்தனர்.

ஒருத்தி சொன்னாள்:

"அவ அப்பனுக்குத் தோணியும் வலையும் இல்லேன்னு நெனக்கிறேன்."

கொச்சக்கி அதை ஒப்புக்கொள்ளவில்லை. அவளுடைய குழந்தைகளின் தகப்பன் சாகரைக் காலத்தில் நீர்க்குன்றத்துக்குச் சென்றிருக்கிறானும். அப்போது அவன் நேரிலேயே பல சமாசாரங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறானும்.

"யாரு சொன்னது? அவனுக்குத் தோணியும் வலையும் இருக்குது. பணமும் செழிப்பா இருக்குது!" என்றாள் கொச்சக்கி.

வாவக்குஞ்சு கேட்டாள்:

"அப்படியானு பெண்ணை இவனுக்கே ஏன் கொடுத்தாங்க?"

"அவனுக்கு என்ன குத்தமாம்?" என்று கொச்சக்கி கேட்டாள்.

கோதை ஒரு புதுச் சந்தேகத்தைக் கிளப்பினாள்:

"எனக்குத் தோணுது......அதாவது, அந்தப் பொண்ணு கெட்ட பேரு வாங்கியிருக்கும். அப்படித்தான் இருக்கணும்."

கோதை பேசியதைப் பாத்தால் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டு பேசியது போலிருந்தது. எல்லோருடைய மனதிலும் ஆவல் பொங்கிற்று. அவளைத் தூண்டி விசாரிக்கத் தொடங்கினார்கள். கோதை சொன்னாள்:

"பொண்ணு எப்படியோ கெட்டுப் போயிருக்கும். கடல் கரையை விட்டுப் போயிட்டாப் போதும்னு நெனைச்சிருப்பாங்க. அப்படியே இவன் தலையிலே......"

கிழவிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"அப்பொ நம்ம கடல்கரையை அழிக்குதுக்குத்தான் இவ வந்து சேந்திருக்கான்னு சொல்லு."

கிழவி தனது கைகளைத் தூக்கி நெஞ்சில் வைத்துக் கொண்டாள். எல்லோரும் மேலும் கோதையைத் தூண்டி விசாரித்தனர். ஆனால், அவள் அதற்குமேல் ஒன்றும் சொல்லவில்லை.

ஒரு கறியும், சோறும் ஆக்கியதோடு கறுத்தம்மாவுக்கு வேலை முடிந்துவிட்டது. அப்போதும் அவளைப் பார்க்க வருகிறவர்கள் கூட்டம் ஓய்ந்தபாடில்லை. தன்னை எல்லாரும்

ஏதோ விசித்திரப் பிராணியாக எண்ணிப் பழகுவதாகத்தான் அவளுக்குப் பட்டது.

சக்கி நோயில் விழுந்து கிடக்கிற விஷயமும் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. பெற்ற தாய் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறபோது, அவளைத் தனியாக விட்டுவிட்டு எந்தப் பெண்ணாவது இறங்கி வருவாளா? கணவன் இல்லையென்றாகி விட்டால் போய்விட்டுப் போகிறது. பெற்ற தாயல்லவா பெரிசு? கறுத்தம்மாவைப் பற்றி மேலும் ஆவலைக் கிளறி விட்டுக் கொள்ள இதுவும் ஒரு சாக்காக அமைந்தது.

மாலை வருவதற்குள், பெரும் ரகசியச் சுரங்கமாகி விட்டாள் கறுத்தம்மா! சகல வீடுகளிலும் அவளைப் பற்றிய பேச்சுத்தான்.

ஒருவேளை, அவள் தவறிழைத்திருக்கலாம். எப்படியும் கைகழுவிவிட்டால் போதுமென்ற எண்ணத்தில் வெளியேற்றி விட்டிருப்பார்கள். அதுதான் உண்மை என்றால்...? பெரிய சோதனையாகிவிடுமே!

கறுத்தம்மாவுக்குச் சக்கியின் ஞாபகம் வந்தது. தாயின் உடல்நிலை அவளுக்குத் தெரியும். அந்த நிலையில் அவளை விட்டு வந்தது சரிதானா? தந்தையோ அவளை ஒரே அடியாக உதறி விட்டார். கடைசி வரையிலும், அவருடைய மனம் மாறப் போவதில்லை. அவர் அன்று சொன்ன சொற்கள் அவள் செவியில் முழங்கின:

'அவ என் மக இல்லே.'

கறுத்தம்மாவுக்குத் தன் தகப்பனின் குணம் நன்றாகத் தெரியும். இனிமேல் அவன் அவளை ஏற்றுக் கொள்ளாமலே இருந்துவிட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

உலகில் எந்தப் பெண்ணாவது இப்படி நடந்துகொண்டிருப்பாளா? மாட்டாள். அவளுடைய கடற்கரையில் எல்லோரும் இப்போது அவளைப் பழித்துக்கொண்டிருப்பார்கள். வாயில் வந்தபடி திட்டிக்கொண்டிருப்பார்கள். ஆனால், அவளுடைய தாயின் மனப்பூர்வமான ஆசி அவளுக்கு இருக்கிறது. தாயின் சம்மதம் பெற்றுக்கொண்டதனால் தான் அன்று அதைச் செய்ய முற்பட்டாள் அவள்.

'......பாவம் அவள் எனக்காக எதையெல்லாம் பொறுத்துக்கொண்டாள். இப்போது அவளுக்கு ஒரு வாய் கஞ்சி வார்க்க யாருமில்லை. அதாவது போகட்டும். அப்பா வேறு அவளை ஓயாமல் குத்திக் குத்தி எடுத்துக் கொண்டிருப்பார். அதையும் கேட்டுக்கொண்டு பொறுமையாக இருக்கவேண்டும். எனக்காக இதை மட்டுமல்ல, இன்னும் எதை வேண்டுமானாலும் பொறுத்துக் கொள்வாள். ஆனால், அப்பாதான் என்னை இனிமேல் எந்நாளும் மன்னிக்கப் போவதில்லை.'

கறுத்தம்மா தன் எதிர்கால வாழ்வை எண்ணிப் பார்த்தாள்......அம்மாவும் அப்பாவும் எத்தனையோ தியாகங்களை மேற்கொண்டவர்கள். அவன் அரும்பாடுபட்டுப் பணம் சேர்த்தான். அப்போது வாழ்வில் நம்பிக்கையும் பிடிப்பும் ஏற்பட்டன. கறுத்தம்மாவைப் பொறுத்தவரையில் அவளுக்குத் தேவைகள் மிகக் குறைவு; ஆசைகளும் சொற்பம்தான். ஆனால், அவையெல்லாம் அப்போதைக்கு அப்போது நிறைவேற்றப்பட்டன. 'இல்லை' என்ற வார்த்தையே அவள் காதில் விழுந்ததில்லை. இப்போதோ எல்லாச் சுகங்களையும் உதறி எறிந்துவிட்டு எங்கோ சென்றுவிட்டாள். அவளுடைய பயணம் புதிய திசை ஒன்றை நோக்கிச் செல்லுகிறது. புதிய உலகின் தலைவாசலில் அவள் அடியெடுத்து வைத்துவிட்டாள். இனிமேல் எதிர்கால வாழ்வு எப்படி இருக்கப் போகிறதோ?

இனிமேலும் பசியார உண்டுகொண்டிருக்க முடியுமா? உடுக்க ஆடையும் உடம்புக்கு எண்ணெயும் முன்போல் கிடைத்துக்கொண்டிருக்குமா? பசி எப்படி இருக்கும் என்றே அவள் அறிந்ததில்லை. முன்போல் மனம் திறந்து கடகடவென்று சிரிக்கமுடியுமா அவளால்? அமைதியான வாழ்க்கை கிடைக்குமா? எதுவும் நிச்சயமாகக் கிடைக்கும் என்று சொல்ல முடியாதபடி உறுதியும் உத்திரவாதமும் இல்லாமல்தான் இருக்கிறதோ?

அவள் அதுவரையிலும் எல்லோருடைய அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமாக இருந்திருக்கிறாள்.

எந்தப் புருஷனின் கரத்தைப் பற்றிக்கொண்டு அவள் தனது வீட்டைவிட்டு வெளியேறினாளோ அவன் அவளிடம்

அன்பு செலுத்துவானு? அவனைப் பற்றி அவளுக்கு ஒன்றுமே தெரியாது.

சக்கி படுக்கையில் விழுந்துகிடக்கிறுள் என்பது தெரிந்திருந்தும், அன்று ஒரே பிடிவாதமாகப் பேசினுனே......அவனுடைய குணம் எப்படி இருக்கும்? அன்று, அவன் மட்டும், 'பெண்ணை இப்போது நான் அழைத்துச் செல்லவில்லை' என்று ஒரு பேச்சு பேசியிருந்தால், சகல குழப்பங்களும் அதோடு அடங்கிப் போயிருக்குமே. இரண்டே இரண்டு நாட்கள் தங்கிச் செல்ல அவன் சம்மதம் தெரிவித்திருந்தால் போதும்... இப்படிப்பட்ட ஒருவனிடமிருந்து அன்பையும் ஆதரவையும் சம்பாதிப்பதுதான் எப்படி? அவனுடன் சுமுகமானதோர் உறவு நீடித்து நிற்கவேண்டும் என்ருல், என்ன செய்ய வேண்டும்? அன்று நடந்துகொண்டதுபோல் ஈவிரக்கமோ தாட்சண்யமோ இல்லாமல் இனிமேலும் அவன் நடந்துகொள்ளக் கூடாது என்பதுண்டா? அவர்களுடைய அன்புப் பிணைப்பில் அபஸ்வரம் எழாமல் பார்த்துக்கொள்வது எப்படி?

அவனைத் தவிர அவளுக்கு வேறு துணை இல்லை. ஒருவருமே இல்லை. இருக்கிற ஒரே ஆண் துணை அவன் மட்டுந்தான்! வெற்றியே அவனுடைய விருப்பு வெறுப்புக்களைப் பொறுத்துத்தான் இருக்கிறது. அவனுக்கு எது பிடிக்கும்? எது பிடிக்காது? அவள் இன்னும் அதைத் தெரிந்துகொண்டு விடவில்லை.

எதை வேண்டுமென்ருலும் கறுத்தம்மா பொறுத்துக் கொள்வாள். எந்தத் துன்பத்தையும் முகம் கோணுமல் ஏற்றுக்கொண்டு தங்கள் வாழ்நாளைக் கழிக்கிற நூற்றுக்கணக்கான அரயப் பெண்களில் அவளும் ஒருத்தியாக இருந்துவிட்டால் போதும். பயங்கரமான நிகழ்ச்சிகள் எதுவும் அவள் வாழ்வில் குறுக்கிடாமல் இருந்துவிட்டால் போதும். அவளுடைய வாழ்க்கையும் ஒரு சாதாரண அரயப்பெண்ணுடைய வாழ்க்கையைப் போல் முடிவடைந்துவிட்டால் போதும். ஆனுல், அந்த அபிலாஷை ஈடேறுமா? கறுத்தம்மாவுக்கும் இந்தப் பயம்தான். 'உன்னுடைய இந்த ஆசைகள் நிறைவேறப் போவதில்லை' என்று அவளுடைய மனத்துக்குள்ளிருந்து ஒரு குரல் முணுமுணுத்தது. இந்தக் கவலை இன்று

நேற்றுப் பிறந்ததல்ல. வெகு நாட்களுக்கு முன்னரே மூண்டு விட்டது. ஒரு பெண்ணின் சாதாரண வாழ்க்கையில் நிகழாத எத்தனை சம்பவங்கள் அவள் வாழ்க்கையில் நிகழ்ந்துவிட்டன! இன்னும் வேறு புதிய இடையூறுகள் முளைக்கலாம். மோசமான சூழ்நிலைகள் உருவாகி அவளைத் தவறான பாதையில் இழுத்துத் தள்ளிவிடுமோ? இந்தப் பீதி மனத்தில் அடிக்கடி எழுந்தது. புகை போன்றிருந்த அந்த எண்ணங்கள் இப்போது தெளிவான உருவங்களாகி விட்டன.

பழனி அவளிடம் அன்பு வைக்கவேண்டும். அவளுடைய ஒரே ஆசை அதுதான். ஆனால், அவளுடைய ஆசை நியாயமானதுதானா? இவ்வாறு ஆசைப்பட அருகதை உண்டா அவளுக்கு?

கணவன் தங்களிடம் அன்புடன் நடந்துகொள்ள வேண்டுமென்று எல்லாப் பெண்களும் ஆசைப்படுவார்கள். அன்பு என்றால் என்ன! அதற்கு மனத்தில் பூரண உருவம் கொடுத்து, எந்தப் பெண்ணாலாவது பார்க்க முடிகிறதா? கறுத்தம்மாவுக்கு அன்பு என்றால் என்ன என்பது தெரியும். அன்பில் பிறந்த இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவித்து அறிந்தவள் அவள். அதனால்தான் அன்புக்காக ஏங்குகிறாளோ? அதனால்தான் அது கிடைக்குமோ என்ற சந்தேகமும் தோன்றுகிறதோ?

பழனி அன்பு செலுத்தத் தெரியாதவன் என்ற எண்ணம் அவள் மனத்தில் எப்படியோ புகுந்துவிட்டது. அப்படியானால் தன் வீட்டாரைத் துறந்து அவள் அவன் பின்னால் ஏன் வந்தாள்? ஒரு பயங்கரமான சோதனையில் அல்லவா அவள் இறங்கிவிட்டாள்? நேர்மாறாக அவள் தன் வீட்டோடு இருந்திருந்தால்......அது இதையும் விட பயங்கரமான சோதனையாக முடிந்துவிடும்.

நண்பகல் தாண்டிக்கொண்டிருந்த வேளையில் கடலுக்குச் சென்றிருந்த பழனி திரும்பிவந்து சேர்ந்தான். அவள் அவனுக்குச் சோறும், கறியும் சிரத்தையோடு பரிமாறினாள். முதலில் சோற்றை எடுத்துத் தட்டில் வைத்தாள். அவன் விரும்புகிற கறிதானா? சோற்றின் பக்குவம் அவனுக்குத் திருப்தியாக அமைந்திருக்கிறதோ என்னவோ? அவளால்

முதலில் ஒன்றும் நிதானிக்க முடியவில்லை. பழனி சாப்பிட ஆரம்பித்தான். அவன் முகத்தில் திருப்தி தெரிந்தது. கறுத்தம்மாவுக்கு இதைக் கண்டதும் மனத்தில் ஓர் ஆசுவாசம் பிறந்தது. அடுக்களை நிலைப்படியை ஒட்டி அவள் நின்று கொண்டிருந்தாள். அவள் மனத்தில் பல எண்ணங்கள் ஓடலாயின. அங்கு நின்றவாறு அவள் ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டே வந்தாள். அவளிடம் அவன் அன்பு காட்ட வேண்டும் என்பது அல்ல; அவள் அவனிடம் மிக்க அன்புடன் நடந்துகொள்வாள் என்பதும் அல்ல. அந்தப் பேச்சொன்றும் அவள் பேசவில்லை. அவள் சொன்னது வேறு. ஒன்றுக்குஇரண்டு கறி தயாரிக்க சட்டியில்லாமல் போய்விட்டது......சோற்றில் கல் இருந்தாலும் இருக்கக் கூடும்...அரிசியை அரிப்பதற்கு வசதியான பாத்திரம் எதுவுமில்லை... அகப்பையோ ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது ..... துவையல் மனத்தில் எண்ணியது போல் வாய்க்கவில்லை......தாளித்துக் கொட்டச் சிறிய சட்டி அடுத்த வீட்டிலிருந்து வாங்கினேன்...அங்கே போய்த்தான் அரைத்துக் கொண்டு வந்தேன்...

"நமக்குச் சட்டி, பானை, பாத்திரம் எல்லாம் வாங்கணும்" என்று கடைசியில் அவள் சொல்லி முடித்தாள்.

"வாங்கலாம். ஆனா எல்லாம் ஒரே அடியா வாங்க முடியாது."

"அப்படி வாங்கணும்னு நான் சொல்லலே. கொஞ்சம் கொஞ்சமா வாங்கினாப் போதும்."

முதலில் போட்ட சோற்றை அவன் சாப்பிட்டுவிட்டான். மேலும் எடுத்துவந்து தட்டத்தில் இட்டாள்அவள். 'போதும்' போதும்' என்று அவன் கைகாட்டிய பின்னும்கூட ஓர் அகப்பை இட்டாள். அப்படித்தானே செய்யவும் வேண்டும். அதெல்லாம் அவளுக்குத் தெரியும். அவன் சொன்னான்:

"சோறு அதிகமாய்ப் போச்சு."

"அதுக்கென்ன, வேண்டாம்னா தட்டத்திலே இருந்துட்டுப் போகுது......துவையல் நல்லா இல்லையோ? திருப்தியா சாப்பிட முடியலியா?"

"துவையல் ரொம்ப அருமையா இருக்குது. ஏன்? நிறையச் சாப்பிட்டேனே!"

"இதா நிறையச் சாப்பிடற அழகு!"

"நான் இம்புட்டுச் சோறு சாப்பிட்டதே கிடையாது."

ஒரு புன்னகை பூத்தவாறு கறுத்தம்மா சொன்னாள்:

"இன்னும் நிறையச் சாப்பிடணும். சாப்பிடாட்டா யாரு விடப் போறாங்க?"

பழனி சிரித்தான். உவகை பொங்க ஆர்பாட்டமாகச் சிரித்தான் அவன்.

நொந்து போயிருந்த கறுத்தம்மாவின் மனசுக்கு இந்தச் சிரிப்பு ஒத்தடம் கொடுத்தது. அவன் மிகவும் நன்றாக நடந்து கொள்கிறான். அவள் சொல்லும் வார்த்தைகளையும் செவி சாய்த்துக் கேட்கிறான். இதற்கெல்லாம் மேலாக அவனது பார்வையிலும் ஒரு கனிவு தெரிகிறது. வார்த்தைகளால் விளக்க முடியாத ஏதோ ஒன்றும் இருக்கிறது. எடுத்த எடுப்பில் சாதகமான அம்சங்கள் இத்தனை இருப்பதே பெரும் வெற்றியல்லவா?

அதே தட்டில் சோற்றை இட்டு கறுத்தம்மா சாப்பிட ஆரம்பித்தாள். கையைக் கழுவி விட்டு, பீடியொன்றைப் புகைத்தபடி பழனி அடுக்களைக்குள் நுழைந்து அவள் அருகே அமர்ந்துகொண்டான்.

"நான் உனக்குப் பரிமாறுவேன். என்ன?"

அவள் பதில் சொல்லவில்லை. அவளுடைய இதய மலர் இன்ப உலகில் மலரக் காத்துக் கொண்டிருந்தது. வெது வெதுப்பான ஒளிக்கதிர்கள் அம் மலரைத் தழுவிக் கொள் கின்றன.

"எனக்கு என்னமோ உபதேசம் பண்ணிப்புட்டியே. நீ மட்டும் நிறையவா சாப்பிடுறே?"

"எனக்கு வயிறு முட்டிப் போச்சு."

சோற்றுக் கலத்துக்குள் அவன் பார்வையைச் செலுத் தினான்.

"சோறு காணாதா?"

"சோறு நிறைய இருக்குது. எனக்குப் போதும்."

"என்ன போதும்? போதாது."

அவன் ஓர் அகப்பை நிறையச் சோறு எடுத்துத் தட்டில் வைத்தான். 'போதும் போதும்' என்று தடுத்தாள் கறுத்

தம்மா. ஆனாலும் அவன் போட்ட சோற்றையும் அவள் உண்டு தீர்த்தாள்.

கறுத்தம்மா ஒரு குடும்பத்தின் தலைவியாக வாழ்க்கை நடத்தவிருக்கிறாள். இப்போது அவள் பழைய காதலி அல்ல; குடும்பத் தலைவி.

இப்போது அவனும் ஒரு குடும்பத் தலைவன் ஆகிவிட்டான். சாப்பாட்டை முடித்துக்கொண்டு, பாத்திரங்களையும் கழுவி வைத்துவிட்டு, அவள் வந்தபோது அவன் கேட்டான்:

''என்ன என்ன சாமான் வாங்கணும், சொல்லு?''

''எல்லாச் சாமான்களும் வாங்கக் கையிலே காசு இருக்குதா?''

தன் மடியிலிருந்த பொட்டலத்தை அவிழ்த்து அவன் எண்ணிப் பார்த்தான். நாலு ரூபாய் இருந்தது. அன்று தனக்குக் கிடைத்த தொகையையும், செலவு செய்ததையும் அவளிடம் அவன் கணக்குச் சொன்னான். அன்று மீன் குறைவாகத்தான் அகப்பட்டது. கல்யாணத்துக்கு வாங்கியிருந்த கடனுக்கு ஒரு சிறு தொகை அன்று அவன் கொடுத்திருந்தான். மீதிப் பணம்தான் அவன் கையில் இருந்தது.

கறுத்தம்மா கேட்டாள்:

''அப்போ, இங்கேயெல்லாம் என்ன பங்கு போட்டுத் தருங்கா?''

''அம்பதுக்கு அம்பது.''

''எங்க பக்கத்திலே எல்லாம் அறுபது தருங்களே!''

கறுத்தம்மா தொடர்ந்து சொன்னாள்:

''அடுத்த ஊரிலே கொடுக்கிறாங்களேன்னு சொல்லிக் கேட்டு வாங்கிப்புடணும்.''

பழனி அலட்சியமாகச் சொன்னான்:

''இங்கெல்லாம் இப்படித்தான் தந்துக்கிட்டிருக்காங்க.''

முன்னொரு சமயம் செம்பன்குஞ்சு எல்லா வேலையாட்களையும் ஒன்றாகச் சேர்த்து, பங்கை அறுபதாக உயர்த்திய நிகழ்ச்சியைக் கறுத்தம்மா அவனுக்கு விளக்கமாகச் சொன்னாள்.

பழனி சொன்னான்:

''இங்கே அப்படி ஒண்ணும் நடக்கிற வழியா இல்லே.''

என்ன என்ன சாமான்கள் தேவை என்று பழனி மீண்டும் கேட்டான்:

"இப்போ போயி வாங்கிட்டு வரப் போறியா?" என்று கேட்டாள் கறுத்தம்மா.

"ஆமா."

"சித்தெ படுத்து உடம்பை ஆத்திக்கிடலாமே. கடலுக்குப் போயிட்டு வந்ததும் போகணுமா? கலயமும் சட்டியும் வாங்க புருசனை விரட்டி அனுப்பிப்புட்டா அப்பமடம்பாங்க, ஊர்க் காரங்க. சித்தெ படுத்துக்க" என்றாள் கறுத்தம்மா.

அவள் சொல்வதும் சரிதான் என்று பட்டது பழனிக்கு. அவன் பாயை விரித்துப் படுத்துக்கொண்டான். மறுகணம் அவன் 'கறுத்தம்மா' என்று கூப்பிட்டான்.

அவளும் அவன் அழைப்புக்குத்தான் காத்துக்கொண்டிருந் தாளோ? "என்ன" என்று கேட்டாள் அவள். "இங்கே வா" என்றான் பழனி.

அவள் மிகுந்த வெட்க உணர்ச்சியோடு அந்த அறைக்குள் நுழைந்தாள்.

அவன் உள்ளத்திலும் ஒரு நம்பிக்கை—தன்னைப் பேணிக் காக்கவும், வாழ்க்கையின் உயர்வு தாழ்வுகளில் பங்கு கொள் ளவும், தனக்கே சொந்தமான ஒரு ஜீவனைப் பெற்றுக் கொண்டு விட்டோம் என்ற நம்பிக்கை—தோன்றி யிருக்க லாம். கறுத்தம்மாவும் ஓர் உத்தம மனைவி என்று பெயரெடுக் கத் தன்னால் இயன்றவரை முயற்சி செய்வாள் என்பதில் என்ன சந்தேகம்?

அவன் அவளைத் தன் உடலோடு சேர்த்து இழுத்துக் கொண்டு, பலம் பொருந்திய கரங்களால் இறுகத் தழுவிக் கொண்டான். உணர்ச்சி வசப்பட்டதில் மூச்சுத் திணறி விட்டது அவளுக்கு. இமைகள் மூடிக்கொண்டன. அரை குறையாய் நினைவும் போய்விட்டது. அப்படியே படுக்கையில் சாய்ந்தாள் அவள். அவள் மற்றொருவனிடம் அன்பு வைத்த வள். அவனும் அவளிடம் தன் இதயத்தைத் கொடுத்திருந் தான். அதெல்லாம் உண்மைதான் என்றாலும், அன்றுவரை அவள் ஓர் ஆடவனின் கரஸ்பரிசத்தை உணர்ந்தவள் அல்ல.

அவள் மனம் அதற்கு ஆசைப்பட்டிருக்கலாம். இருந்தும் அவள் ஒருபோதும் வரம்பு மீறி நடந்து கொண்டதில்லை. இப்போது அவளுக்குக் கல்யாணமாகிவிட்டது. உரிமையோடு ஒருவன் அவளை ஆறத் தழுவிக்கொண்டு விட்டான். அவளும் மனப்பூர்வமாக அதற்கு இடம் கொடுத்தாள். அவள் ஒருவனை நேசித்தாள் என்றாலும், ஸ்பரிச சுகத்தை, ஓர் ஆடவன் தன்னைத் தழுவிக்கொள்ளும்போது விளையும் இன்ப அனுபவத்தை, மூச்சுத் திணற அடிக்கும் மோகனவெறியை மற்றொருவனிடம்தான் தெரிந்துகொண்டாள். இனிமேல் அவள் அவனுடைய சொத்து. அவளுடைய உடலும் உள்ளமும் அவனுக்கே சொந்தமானவை. அவனுக்காகத்தான் தன் உடலைக் கறைபடியாமல் காப்பாற்றி வைத்துக்கொண்டிருந்தாள். இனிமேலும் அவள் தன் உடலைக் காத்துப் புனிதமாக வைத்துக்கொள்வாள்.

பரவச வெறியில் எத்தனை நேரம் ஆழ்ந்து கிடந்தாள் என்பது அவளுக்கே தெரியாது. இளமையின் உணர்ச்சிவேகம் எத்தனை பயங்கரமானது! வெறிகொண்டு எழுகிற உணர்ச்சியல்லவா அது? அது உடைப்பெடுத்துப் பெருகும் நீரோட்டம்! அது தங்கு தடையின்றிப் பெருக்கெடுத்து ஓடத்தான் செய்யும்.

பகுத்தறிவும் சிந்தனை உணர்வும் செயல்படுகிற இந்த உலகுக்கு, கறுத்தம்மா திரும்பி வந்து சேர்ந்தபோது, வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்றது. வெட்க உணர்ச்சியோடு இனம் தெரியாத பயம் மனத்தினுள் உருவெடுத்தது. தான் எதை எதையோ பேசிவிட்டதை அவள் உணர்ந்தாள். மனத்தில் அவசியமில்லாத எண்ணங்களைக் கிளறிவிட்டுக் கொண்டு குமைந்தாள். அப்போது அவள் உள்ளத்தில் எதுவும் தெளிவான உருவம் பெற்றிருக்கவில்லை. ஏதோ பித்துப் பிடித்தது போலிருந்தது. மானம் அவமானம் இன்றி, வெட்கத்தைத் துறந்து .....எவ்வளவு ஆபாசமான விஷயம்......ஒரு பெண் செய்யக்கூடிய காரியமா இது? அவளுடைய கணவன் அவளைப் பற்றி என்ன எண்ணிக் கொள்வான்?

சகல காரியங்களையும் தவறாகச் செய்துவிட்டோம் என்ற எண்ணம் ஏற்பட்டது அவளுக்கு. அவள் மனத்தில் பூட்டி

வைத்துக்கொண்டிருந்த ரகசியங்கள் வெட்ட வெளிச்சமாகி விட்டன. அவன் சகல விஷயங்களையும் தெரிந்துகொண்டு விட்டான். அவனை முன்பின் அவளுக்குத் தெரியாது. அவள் அவனுக்குச் சொந்தமாகி விட்டாள் என்பது உண்மைதான். அவன் அவளை மணந்துகொண்டவனுக, கணவனுகவேதான் இருக்கட்டுமே. அன்று வரையிலும் பழக்கமில்லாத ஓர் ஆட வனிடம், முதன் முதலில் சந்தித்த அன்றே, அப்படிப் பழகுவது நல்லதா? அவன் என்ன எண்ணியிருப்பான்?

ஒரே நாளில் கூச்சத்தையும் வெட்கத்தையும் விட்டு எவ் வாறு அவளால் நடந்துகொள்ள முடிந்தது? அவள் அடக்கத் தோடு நடந்துகொள்ளக் கூடியவள்தான். வாழ்வின் அடிப் படையையே வெடிவைத்துத் தகர்த்தெறிந்துவிடும் அந்தக் கேள்வி பிறந்துவிடுமோ என்று, ஒவ்வொரு கணமும் அவள் பயந்து பயந்து செத்துக்கொண்டுதான் இருக்கிருள். அவன் பயங்கரமான கேள்வி ஒன்றைக் கேட்டுவிடக்கூடும்.

"ஓஹோ, நீ ஏற்கெனவே அடிப்பட்டவள்தான்; அப்படித் தானே?"

அந்தக் கேள்வி எழுந்துவிட்டால் 'இல்லை' என்று நெஞ் சைத் தொட்டுக்கொண்டு அவளால் பதில் சொல்ல முடியும். ஆனுல், அவன் அதை நம்பவேண்டுமே. எப்படி நம்பப் போகி ருன் அவன்? நம்பாதவரை அவள் தலையில் பேரிடி விழுந்து விடாதா?

தன்னை நோக்கி அந்தக் கேள்வி எழுப்பப்படுவதற்கு முன்னுல் தானுகவே மன்னிப்பு கோரிவிட்டால் என்ன என்று கூடச் சில சமயம் அவள் எண்ணினுள். ஆனுல், மனத்திலிருப் பதை எப்படி வெளியிடுவது? அவளுக்கு ஒரு வழியும் தென் படவில்லை.

எல்லாப் பெண்களும் இப்படித்தானு? முன்பின் தெரி யாத ஆடவனுடனும் இதேபோல் வெட்கம், மானம் இல்லா மல்தான் பழகுவார்களோ? ஒரே நாளில் எல்லாவற்றையும் துறந்து விடுவார்களோ? கட்டுக்கடங்காத வெறி தனக்கு எப்படி ஏற்பட்டது என்று அவள் தன்னையே கேட்டுக்கொண் டாள். தன்மீதே அவளுக்கு ஒரு சந்தேகம் பிறக்க, நீண்ட நேரம் அதைப்பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள்.

தானும் எல்லோரையும்போல் ஒரு சாதாரணப் பெண்தான் என்று அவளால் எண்ண முடியவில்லை. ஒரு காலத்தில் அவளுடைய ஊரில் அசாதாரணத் தன்மைகள் வாய்ந்த சில கிழவிகள் வாழ்ந்து இருந்திருக்கின்றனர்.

கறுத்தம்மாவின் மனத்துக்குள்ளிருந்து ஒரு குரல் முணு முணுத்தது: 'என்ன இருந்தாலும் நீ இன்னொருவனைக் காதலித் தவள்தானே?' அவனைப் பற்றி எண்ணுகிறபோது உணர்ச்சி வசப்பட்டுவிடுவாள் என்பது உண்மைதானே? இதிலிருந்து என்ன தெரிகிறது? ஆண்மையை மனத்தால் அவள் உணர்ந்து கொள்ள முடிகிறது என்பதுதானே? திருமணம் ஆவதற்கு முன்னலேயே, அவள் மனம் இந்த அனுபவத்தைப் பெற்று விட்டதே!

ஆக இதே உணர்ச்சியில் ஆழ்ந்து கிடந்த அவள், ஓர் ஆடவனை அடைந்ததும் வெட்கத்தைத் துறந்துவிட்டாள். அவளுக்கு வெறி பிடித்துவிட்டது. மற்ற பெண்களுக்கும் இதே அனுபவம் ஏற்பட்டிருக்கலாம்.

காதல் வாழ்வில் அவளுடைய உணர்ச்சிகள் பிஞ்சிலேயே பழுத்துவிட்டனவா?

நல்ல வேளை. எந்தக் கேள்வி பிறந்துவிடும் என்று அவள் பயந்து கொண்டிருந்தாளோ அந்தக் கேள்வி பிறக்கவே இல்லை.

அவனுக்கு வெளியே செல்ல வேண்டியிருந்தது. என்ன என்ன சாமான்கள் வாங்க வேண்டும் என்று அவன் கறுத் தம்மாவிடம் கேட்டான். அவள் சொன்னாள்:

''கையிலே இருக்கிற பணத்தை வெச்சு, வாங்க முடிஞ்சதை வாங்கணும்.''

அதோடு தேவையான சாமான்கள் என்ன என்பதையும் அவள் தெரிவித்தாள். அது ஒரு நீண்ட பட்டியல்!

வீட்டில் தன்னந்தனியாக உட்கார்ந்திருந்தபோது, கறுத் தம்மாவுக்குப் பரீக்குட்டியின் நினைவு வந்துவிட்டது. அவன் இப்போது எப்படி இருப்பான்? தூக்கத்தில் ஆழ்ந்துகிடப் பானே? இன்னும் அவனுக்குப் பணம் கொடுக்கவில்லையே? அம்மாவோ படுக்கையில் விழுந்துவிட்டாள். அவனுக்கு அது

கொடுக்கப்படாமலே போய்விடலாம். அவன் தலையில் மற்றும் ஓர் இடி விழுந்தது போலாகிவிடும்.

பரீக்குட்டியைப் பற்றிய எண்ணங்களை மனசிலிருந்து அவளால் கிள்ளி எறிய முடியவில்லை. எத்தனை பாவகரமான எண்ணம் இது! ஒரு மனைவி மற்றோர் ஆடவன்மேல் தனது சிந்தனையை மேயவிட்டுக்கொண்டிருப்பதா? அப்போதும் அவள் மனத்துக்குள்ளிருந்து ஒரு குரல் முணுமுணுத்தது. 'உன்னால் பரீக்குட்டியை மறக்க முடியாது!' இந்தப் பேய்க் கனவு வாழ்நாள் நெடுகிலும் அவளை அல்லல் படுத்திக் கொண்டிருக்க போகிறதா?

இன்னும் கடற்கரையில் பரீக்குட்டியின் பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறதோ? கறுத்தம்மாவின் மனம் அமைதி இழந்து தத்தளிக்க ஆரம்பித்துவிட்டது. என்று அவளுக்கு மனச்சாந்தி கிடைக்கப் போகிறது? எப்படிக் கிடைக்கப் போகிறது? அது அவளுக்கு என்றுமே கிடைக்காத ஒன்றோ?

கலயம், பானை, அகப்பை எல்லாம் வாங்கிக்கொண்டு பழனி வந்து சேர்ந்தான். வருகிற வழியில் நண்பர்கள் அவனைக் கேலி செய்தார்களாம். வீட்டுக்கு வந்தபோது கறுத்தம்மா சில குறைகள் சொன்னாள். கலயம் அத்தனை நன்றாக இல்லை. இந்தத் தினுசு தேவையே இல்லை.

மனைவி தனது ஞானத்தைக் காட்டி தனது உயர்வை ஸ்தாபித்துக்கொள்ளப் பார்க்கிறாள். அவனைவிடவும் சில விஷயங்கள் அவளுக்கு அதிகமாகவே தெரியும் என்பதுதானே அதன் பொருள்? பழனியும் அதை ஒப்புக்கொண்டான். அவன் சொன்னான்:

"எனக்குத் தெரியுமா கலயமும் பானையும் வாங்குதுக்கு?"

அவளும் விளையாட்டாகச் சிரித்தாள்.

அன்று இரவு அவர்களிருவரும் உறங்கவே இல்லை. பேசிக் கொண்டே இருந்தார்கள். பேசி பேசித் தீரவில்லை. அடிப்படைப் பிரச்னைகளையெல்லாம் அலசி ஆராய்ந்தார்கள். இவ்வாறு பேசி கொண்டே வந்தபோது கறுத்தம்மா ஒரு கேள்வி கேட்டாள்:

"அண்ணைக்கு என் அம்மா மூர்ச்சை போட்டு விழுந்து கிடக்கிறபோதே என்னைக் கூட்டிக்கிட்டு வந்துட்டியே, ஏன்?

அவனைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்பதற்கான சுதந்தரத்தை அதற்குள் அவள் பெற்றிருந்தாள். ஒருகணம் அவனைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது இந்தக் கேள்வி. இருந்தாலும் அதைச் சமாளித்துக்கொண்டே பழனி சொன்னான்:

"கல்யாணம் கழிஞ்சபிறகு பொண்ணே அவ வீட்டிலேயே விட்டுப்புட்டு வரது, ஓர் ஆம்புளே செய்யிற காரியமா? எனக்கென்னமோ, அது சரீன்னு படலெ."

அவளை அவள் வீட்டில் விட்டுவிட்டுச் செல்வது, ஒரு சிறு பிள்ளைத்தனமான காரியமாக அவனுக்குப் படுகிறது என்பதை கறுத்தம்மாவும் புரிந்துகொண்டாள். பழனி அன்று தன் மனத்தில் எழுந்த எண்ணச் சுழல்களை விரிவாகச் சொன்னான். அவனுடன் வந்திருந்த துறை ஆட்களுக்குப் பெண்ணை அழைத்துச் சென்றுவிடவேண்டும் என்ற எண்ணமிருந்ததாம்.

"மனசு இல்லாமத்தான் என்கூட வந்தியோ?" என்று கேட்டான் பழனி.

அவள் சட்டென்று பதில் சொன்னாள்:

"இல்லே, மனசோடேதான் வந்தேன்."

தன் உள்ளத்து எண்ணங்களையெல்லாம் ஆழப் புதைத்து வைத்துக்கொண்டிருந்தாள் அவள்.

கறுத்தம்மா தன் தகப்பனைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள் முக்கியமான ஒரு விஷயத்தையும் வெளியிட்டாள்:

"இனிமே எனக்கு அப்பா இல்லே. அவருக்கு இயற்கைக் குணமே அப்படி. இனிமே ஒரு பொண்ணு இருக்காளேன்னு மனசாலேகூட அவரு நெனைக்கப் போறதில்லே."

பழனி அதை அவ்வளவாகப் பொருட்படுத்தாமல் சொன்னான்:

"வேண்டாம் போ. மகள் இல்லேன்னு அவரு நெனச்சுக்கிட்டா, அப்பா இல்லேன்னு நீயும் நெனச்சுக்க. அவ்வளவு தானே?"

மறைமுகமாக அவள் பெற்றுக்கொண்ட நம்பிக்கை அல்லவா அது? அவன் சொன்னதற்கு என்ன பொருள்? 'என்

கரங்கள் உன்னைக் காப்பாற்றும்' என்பதுதானே? பழனி தொடர்ந்து சொன்னான்:

"உங்கப்பன் பேராசை பிடிச்சவன்; பொல்லாதவன். உங்க துறை அரயன் அதுக்குமேலே. எல்லாருமாச் சேர்ந்து எங்க ஆளுங்க மூக்கை அறுத்து அனுப்பிட்டாங்க."

அவனுள் அடங்கிக் கிடந்த மான உணர்ச்சி எழுச்சி கொண்டுவிட்டது. அவன் சொன்னான்:

"எனக்கு யாருமில்லே. வீடு வாசல் இல்லே. இருந்தாலும் நானும் கடலுக்கு அரசன்தான், பார்த்துக்க. இந்தா கண் முன்னாலே விரிஞ்சு பரந்து கெடக்கிற கடல் எனக்கும் சொந்த மானதுதான். நான் கேக்கறேன், எனக்கு என்ன குறைவு? கடல்கரையிலே இருக்கிற முக்குவன்லே நானும் ஒருத்தன். ஆனா, எனக்கு எண்ணைக்கும் ஒரு தைரியம் உண்டு. எனக்கு என் வேலையை நல்லாப் பார்க்கத் தெரியும். வேலி ஏத்தமானா லும் சரி, எறக்கமானாலும் சரி, சுளுவா துடுப்புப் புடிச்சு மீனோடே கரை வந்து சேர்ந்துடுவேன். எந்தச் சுழியும் என்னை ஒண்ணும் அசைச்சுப்புட முடியாது. நான் அதைத் தாண்டிக் கரைக்கு வந்துப்புடுவேன். ஒருத்தரும் என்னெ இளப்பமா நெனச்சுக்கிட வேண்டாம். ஆமா."

கறுத்தம்மா பதில் பேசவில்லை. இந்தப் பேச்சையே கிளப்பி யிருக்க வேண்டாம் என்றுகூட அவளுக்குத் தோன்றியது. பழனி கோபப்பட்டுப் பேச ஆரம்பித்துவிட்டான். அவளுடைய தகப்பனார் அவனை மதிக்கவில்லையாம். அந்தக் கடற்கரையைச் சேர்ந்த துறை அரயனையோ, அவசியம் என்று பட்டால் தனது கடற்கரையைச் சேர்ந்த துறை அரயனையோ புறக்கணிப்பதற் கும், எதிர்த்து நின்று போராடுவதற்கும் அவன் தயங்கமாட் டான் போலிருந்தது. அவன் கேட்டான்:

"நான் எதுக்குப் பயப்படணும்? அவசியமே இல்லே."

"என் அம்மா ரொம்ப சாது!" என்றாள் கறுத்தம்மா. தன் தாயாரைப் பற்றி அவன் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை அவளுக்கு.

பழனி பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தான். அவனுடைய சிந்தனைகள் வேறு திசையில் சஞ்சரித்துக் கொண் டிருந்தன.

"ஒண்ணு சொல்லிப்புடறேன். உங்க அப்பன் நேரிலே வந்து கூப்பிடாதவரைக்கும், நான் உங்க வீட்டுப்படி மிதிக்கப் போறதில்லே."

தன் தகப்பனுரைப் போலவே கணவனும் அசைக்க முடியாத ஒரு தீர்மானத்தை மனத்தில் வரையறுத்துக் கொண்டிருக்கிருன் என்பதைக் கறுத்தம்மா உணர்ந்துகொண்டாள். இருவருமே தங்கள் முடிவுகளை மாற்றிக்கொள்வார்கள் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

கறுத்தம்மா தன்னுடைய குடும்ப உறவுகளை விளக்கினுள். இப்போது இருக்கிற நிலைமையில் அவளுக்கும் தாய் தந்தை இல்லை என்றுதான் ஏற்பட்டிருக்கிறது. இருப்பது கணவன் மட்டும்தான். அவன் அவளிடம் மிகுந்த அன்புடன் நடந்து கொள்ளவேண்டும். அவள் அவனுக்குக் கீழ்ப்படிந்து, பொறுப் பேற்றுக் குடும்பத்தை நடத்திச்செல்கிற ஒரு மனைவியாக இருப்பாள். அவள் சொல்வதையெல்லாம் அவன் கேட்டுக் கொண்டே வந்தான். அவனைத் தவிர அவளுக்கு வேறு யாருமில்லை. எதை வேண்டுமென்ருலும் சகித்துக்கொள்ள அவள் தயார்தான். என்னதான் சொன்னுலும் பொறுமையுடன் கேட்டுக்கொள்ளவும் தயார்தான். அவன் மட்டும் அவளிடம் அன்புடன் நடந்துகொள்ள வேண்டும். அது போதும் அவளுக்கு!

அதேபோல் நீயும் என்னிடம் ஆசையோடு இருக்க வேண்டுமென்று பழனி சொல்லவில்லை. ஒருகால் அவன் அதை எதிர்பார்க்கவில்லையோ? அது அவனுக்கு அவசியமற்ற ஒன்று தானே?

இது ஒரு குறைதானே? அன்புக்கு விண்ணப்பம் ஒரு தரப்பிலிருந்து மட்டும்தான் வந்தது. மறுதரப்பிலும் அதே அவா தோன்றியிருக்க வேண்டாமா? ஒரு லட்சிய மனைவி என்னென்ன காரியங்களை மேற்கொள்ளுவாளோ அவைகளையெல்லாம் தானும் செய்து முடிக்கத் தயாராக இருப்பதாகக் கறுத்தம்மா சொல்லிவிட்டாள். தன்னிடம் மாருு அன்பு கொண்டு வாழவேண்டும் என்று பழனி அவளிடம் கேட்டுக் கொள்ளவில்லை. அதனுல் என்ன? அவளாகவே அதை அவனிடம் சொல்லிவிடக்கூடாது என்றிருக்கிறதா? அப்படி

அவள் சொல்லவில்லை. அதனால் அவளுக்கு அவனிடம் அன்பே கிடையாது என்றாகிவிடுமா? பழனி அதைக் கேட்டிருந்தால் அவளும் வாய்விட்டுச் சொல்லியிருப்பாளோ என்னவோ!

முதல் இரவு அவர்களிருவரும் சந்தித்துப் பேசிக்கொண்டதில், மோதல்கள் எதுவும் ஏற்படவில்லை. திடீர் திடீரென்று சம்பாஷணை அறுந்து நீண்ட இடைவெளி விழுந்துகொண்டிருந்தது. அவ்வளவுதான். இருந்தாலும் இருவரும் ஒரு பொதுப்படையான முடிவை அடைந்தனர்.

அவர்கள் இருவருக்குமே சொந்தமாக ஒரு வீடு இருக்க வேண்டும் என்று ஆசை. கறுத்தம்மா சொன்னாள்:

"சொந்தம்னு சொல்லிக்கிடறதுக்கும் எனக்கும் யாருமில்லே. வீடு வாசலும் இல்லே."

விடியற்காலை வேளையில் கடற்கரையிலிருந்து கூவி அழைக்கும் குரல் எழுந்தது. பழனி போகவேண்டியதுதான்.

அன்றாட வாழ்க்கையில், தான் செய்ய வேண்டிய சில காரியங்களைக் கறுத்தம்மா தெரிந்து வைத்துக்கொண்டிருந்தாள். கல்யாணம் ஆவதற்கு முன்னாலேயே அக்கம்பக்கத்துப் பெண்கள் அவளுக்குச் சொல்லியிருந்தனர். இப்போது ஒரு விஷயம் அவளுக்கு நினைவு வந்தது.

அவன் வீட்டை விட்டுப் புறப்பட்டதும், அவள் அக்கறையோடு விசாரித்தாள்:

"இப்பவே போகணுமா தோணிக்கு?"

அவள் எதை மனத்தில் வைத்துக்கொண்டு விசாரிக்கிறாள் என்பது பழனிக்குத் தெரியவில்லை.

"உம், என்ன?"

தான் எண்ணியதை எவ்வாறு சொல்வது என்பது அவளுக்கும் தெரியவில்லை.

"காலையிலே எழுந்திருச்சிப் போறவங்க அவங்க பாட்டுக்குப் போயிடப்படாது."

"பின்னென்ன செய்யணுமாம்?"

"கடலுக்குப் போறபோது ரொம்பச் சுத்தமாப் போகணும்."

பழனிக்கு அப்போதும் புரியவில்லை. அவன் கேட்டான்: "என்ன சொல்லுதே நீ?"

வெட்கம் மேலிட அவள் சொன்னாள்:

"குளிச்சுப்புட்டுப் போகப் படாதா?"

அவள் அவனைக் குளிப்பாட்டினாள்.

பழனி கடற்கரை சென்றபோது, மூப்பன், "குளிச்சுப் புட்டியா பயலே?" என்று கேட்டான்.

# 12

கறுத்தம்மா தன் ஊரில் தன் வீட்டோடு இருந்த காலத்திலேயே சில விஷயங்களைத் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தாள். குடும்ப வாழ்க்கை சீரும் சிறப்பும் பெற்று அபிவிருத்தி அடைய என்ன என்ன செய்ய வேண்டுமென்பதையும் அவள் அறிவாள். இந்த லட்சியம் சித்தி அடையத் தன் தாய் தந்தையர் அரும்பாடுபட்டு உழைப்பதையும் அவள் கண்டிருக்கிறாள். அவளுடைய தந்தையின் வாழ்வே சிறந்த முன்னுதாரணமாக அவள் கண் முன்பு வந்தது. அவர் என்றும் காசைக் கண்டபடி செலவு செய்து விரயம் செய்ததில்லை. எந்தக் காரியத்திற்கும் ஒரு கணக்கு உண்டு. சிறுகச் சிறுகப் பணம் சேர்த்ததும் தோணி வாங்கியதும் அவள் கண்முன்னாலேயே நடந்தேறிய காரியங்கள் தாம்.

ஏகாந்த நிலையில் அமர்ந்திருக்கிறபோது, கறுத்தம்மா தன் வீட்டைப் பற்றி எண்ணமிடுவாள். வழிகாட்ட ஓர் உருவம் இருக்கிறது. அதே பாதையில் அடியெடுத்து வைத்து முன்னேறிவிட்டால் போதும்.

பழனியைக் குளிப்பாட்டி அவனைச் சுத்தமாக அனுப்பி வைத்தாள் அவள். எனினும், தோணிகள் மீண்டும் கரை வந்து சேருவதுவரை அவள் கவலைப்பட்டுக் கொண்டுதான் இருந்தாள். அன்று இரண்டு கறிகள் தயாரித்துச் சமையல் செய்திருந்தாள். நேற்று இருந்ததை விடவும் இன்று அவளுக்குப் பழனியிடம் நெருக்கமான உறவு உண்டு. அவன் வரும் வழி நோக்கி அவள் காத்திருந்தாள்.

சமீப காலமாக ஏனோ அந்தக் கடற்கரையில் சாளைமீன் அகப்படவில்லை. அன்று சாளைமீன்கள் ஏராளமாக வலையில்

சிக்கின. அவன் பங்குக்கு அன்று முப்பது ரூபாய் வரையிலும் கிடைத்தது. வலையைச் செம்மையாக உதறிக் காயப்போட்டு விட்டு எல்லோரும் குளித்துக்கொண்டிருந்தனர். அப்போது ஐயப்பன் தனது சகாக்களை நோக்கி வினவினான்:

''நாம எல்லோருமா இண்ணைக்கு அரிப்பாட்டுக்குப் போயி வயிறு நெறைய வெட்டிப்புட்டு வருமா?''

ஒருவருக்கும் ஆட்சேபணை இல்லை. மடி நிறையக் காசு குலுங்குகிறது. கடல் அன்னை மனம் கனிந்து அளித்த செல்வம். குஷியாக அதைச் செலவு செய்வதில் என்ன தவறு? பழனி மட்டும் எதுவும் பதில் பேசாதிருந்தான். வெளுத்தகுஞ்சு கேட்டான்:

''என்ன பழனி, நீ மட்டும் வாயெ மூடிக்கிட்டு 'கம்'னு இருக்கே?''

ஆண்டிக்குஞ்சு பழனியைக் கேலி செய்தான்:

''என்னடா, அருத்தமில்லாமல் உளறுரீங்க? புதுப் பொண்ணு சோறும் கறியும் வெச்சுக்கிட்டுக் காத்துக்கிட்டிருக்கும். அவ மேலே இடிச்சிக்கிட்டு உக்காந்து திங்க ஆசைப்பட்டுக்கிட்டிருப்பான். நியாயம்தானே?''

''அப்படியே • இருக்கட்டுமே! அதிலே என்ன தப்பு?'' என்று கொச்சப்பன் கேட்டான். இளவயதில் அவ்வாறு ஆசைப்படுவது இயல்புதானே? அங்கு இருந்தவர்கள் எல்லோரும் மணம் முடித்தவர்கள்தாம். கல்யாணமானவர்களின் அநுபவத்தைக்கொண்டு, வேலாயுதன் பொதுப்படையாகச் சொன்னான்:

''முதல்லே நாலஞ்சு நாள் கனகுஷியா இருக்கும். அப்புறம் போகப்போக வீட்டிலே சோறும் இருக்காது. அப்படியே இருந்தாலும் அது நாக்குக்கு ருசியாப் படாது.''

எல்லோரும் குளியலை முடித்துக் கொண்டபோது, வெளுத்தகுஞ்சு கேட்டான்:

''பழனி, நீ வாறியா?''

''நான் வாறேன்'' என்றான் பழனி.

அவன் மனசில்லா மனசோடுதான் அப்படிச் சொன்னானோ?

எல்லோரும் ரோட்டுக்கு வந்து பஸ் பிடித்து அரிப்பாட்டுக்குச் சென்று விட்டனர்.

வெகுநேரம் காத்துக்கொண்டிருந்தாள் கறுத்தம்மா. பழனி வந்து சேரவில்லை. கடற்கரைக்கு வந்து அவள் சுற்று முற்றும் பார்த்தாள். தோணிகள் கரையில் ஏற்றிப் போடப் பட்டிருந்தன. ஒரு தோணியாவது கடலில் இருப்பதாகத் தோன்றவில்லை. கடற்கரையில் ஆள் அரவத்தையே காணோம்!

அப்போது ஆண்டியின் வீட்டுக்காரி பாரு அங்கு வந்து சேர்ந்தாள். அவள் கேட்டாள்:

"என்னம்மா, புதுப்பொண்ணே, கடலிலே என்னத்தைப் பார்த்துக்கிட்டு நிக்கறே?"

கறுத்தம்மாவை வெட்கம் பிடுங்கித் தின்றது.

"ஒண்ணுமில்லே, சும்மா பார்த்துக்கிட்டு நிக்கறேன். அவ்வளவுதான்."

பாருவுக்குப் புரிந்துவிட்டது.

புருஷன் வற வழி பாத்துக்கிட்டு நிக்கே போலிருக்குது. அவங்க எல்லாருமா அரிப்பாட்டுக்குப் போயிருக்காங்க. இண்ணைக்கு அவங்க கையிலே காசு குலுங்குது, ஆமாம்!"

கறுத்தம்மாவின் சொந்தக் கடற்கரையிலும் இதே கதை தான். அங்கு எல்லாரும் ஆலப்புழைக்குக் செல்வது வழக்கம். இந்த வழக்கங்கள் மாறுதவரை விமோசனம் இல்லை. இன்று அரிப்பாட்டுக்குப் போய் வீண் செலவு செய்யும் காசு கையிலிருந்தால் எத்தனை காரியங்களை நிறை வேற்றி விடலாம்! இது போன்ற எண்ணங்கள் அவள் மனத்தில் வட்டமிட்டன. எண்ணி எண்ணிப் பார்த்தபோது அவள் மனசுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

"ஆமா, ஒண்ணு. உன் புருஷன் திரும்பி வரும்போது, புதுப் பெண்ணுக்கு பட்டோ, புடவையோ வாங்கிட்டு வருவான்."

"ஆமா, தண்ணி குடிக்க குவளை வேண்டாமா அக்கா? அதுகூட இல்லையே! சட்டிகூட ரெண்டே ரெண்டுதான் இருக்குது."

பாரு அனுபவம் மிகுந்தவள். அவள் சொன்னாள்:

"அதெல்லாம் எந்த வீட்டில்தான் இருக்குதுன்னு நெனச்சுக்கிட்டிருக்கே? எல்லாம் சாகரை காலத்திலெ வாங்கி வெச்சுக்கிட்டாத்தான் உண்டு! பழையபடி கடல் வறண்டு போகிறபோது எல்லாத்தையும் ஒவ்வொண்ணு வித்துத் திங்கலாம்."

ஒரு நாய் கறுத்தம்மாவின் குடிசையைச் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தது. உள்ளே தாவுவதற்கு ஒரு தருணம் வாய்க்க வேண்டும்! கறுத்தம்மா வீட்டைப் பார்க்க வந்தாள்.

அவள் நீண்ட நேரம் காத்துக்கொண்டிருந்தாள். கடைசியில், நன்ருக இருள் சூழ்ந்த வேளையில், அவன் வந்து சேர்ந்தான். கையில் ஒரு பொட்டலமும் இருந்தது.

கோபத்தோடு முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டால் என்ன என்றுகூட கறுத்தம்மா எண்ணிஞள். ஆனுல், அவள் அப்படி நடந்து கொள்ளவில்லை. நெஞ்சோடு அந்த எண்ணம் நின்றுவிட்டது. மேலும் அவ்வாறு நடந்து கொள்வதைப் பழனி விரும்புவாஞ? சந்தேகம்தான் அவளுக்கு. முகத்தில் மிகுந்த பிரயாசையுடன் புன்னகையை வரவழைத்துக் கொண்டு கேட்டாள் அவள்.

"இப்பத்தான் தோணி கரை வந்து சேந்துதோ?"

அதன் உட்பொருள் பழனிக்கு எட்டவில்லை. அவன் சொன்ஞன்:

"இல்லே. இதோப் பாரு!"

பொட்டலத்தை அவள் கையில் கொடுத்தான். அதைப் பிரிக்கும்போதே அவள் கேட்டாள்:

"இந்தக் கடற்கரையிலெ வலையை வீசிஞ துணி மணியெல்லாம் கிடைக்குமோ?"

அவன் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

ஜரிகை போட்ட துண்டு ஒன்று. கறுத்தம்மா அதைப் பிரித்துப் பார்த்தாள். அகலமான பெரிய துண்டு! பழனி அதற்கு என்ன விலை என்பதையும் சொன்ஞன். அம் மாதிரி அவர்கள் ஐந்து பேரும் ஒவ்வொரு துண்டு வாங்கிஞர்களாம். வெளுத்தகுஞ்சு, வேலாயுதன், ஐயப்பன், கொச்சுராமன், பழனி எல்லோரும் ஆளுக்கொன்று வாங்கிக்கொண்டார்

களாம். வேலாயுதனின் குழந்தைக்கு உடம்புக்கு வந்திருந்தது. அவன் மனைவி மருந்து வாங்குவதற்குக் கையில் பணமில்லாமல், தன்னைத் தேடித் தன்னுடைய வீட்டுக்கு வந்ததாகப் பாரு சற்று முன்புதான் சொன்னாள். ஐயப்பன் வீட்டிலும் அதே நிலைமைதான். ஆனால், ஒவ்வொரு வீட்டிலும் இப்போது ஒரு புதிய ஜரிகை போட்ட துண்டு இருக்கிறது!

கறுத்தம்மாவின் மனத்திற்குள்ளிருந்து சிரிப்பு குமிழி யிட்டுப் பொங்கி வந்தது.

"தண்ணி குடிக்க ஒரு குவளைகூட இல்லே. ஜரிகைத்துண்டு எதுக்குன்னு கேக்கறேன்? "

அவள் முகத்தில் பொங்கி வழிந்த சிரிப்பின் உட்பொருளைப் பழனியால் வாங்கிக்கொள்ள முடியவில்லையோ? அவனும் கூடவே நகைத்தான்.

"நான் எதுக்கு இதை வாங்கிக்கிட்டு வந்திருக்கேன்னு தெரியுமா?" என்று கேட்டான்.

"எதுக்கு?"

"மண்ணார்சாலையிலே திருவிழா வருதே! அதுக்குப் போகணும். இதைப் போட்டுகிட்டு நில்லு, பாப்பம்."

ஆசைவெறி பொங்க அவளைப் பார்த்துக்கொண்டு நின்றான் பழனி. அவனது பார்வை அவளுடைய எடுப்பான மார்பகங்களில் நிலைகுத்தி நின்றது. அவள் மறுபக்கம் திரும்பி நின்றுகொண்டாள். அவன் அவளுடைய பிருஷ்ட பாகத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றான். அவள் உடுத்திருந்த வேட்டி மெல்லிசாகத்தான் இருந்தது.

பழனி இரண்டு எட்டில் அவளை நெருங்கினான்.

"உடம்பெல்லாம் ஒரே வேர்வையா இருக்குது" என்றாள் அவள்.

அவசியமான பாண்ட பாத்திரங்கள்கூட வீட்டில் இல்லாதபோது ஜரிகைத் துண்டு வாங்கியது தவறான காரியம் தானே? அவனுடைய மனத்தில் எழுந்த ஆசை அல்லவா அது? மனைவிக்கு ஜரிகைத் துண்டு அணிவித்துப் பார்க்க வேண்டும். வாழ்க்கை என்பது முற்றிலும் காரண காரியங்களுக்கும் பகுத்தறிவுக்கும் உட்பட்ட ஒன்றா? வீட்டுக்குத் தேவையான பண்டங்களெல்லாம் வாங்கி அடுக்குவது;

நிறையப் பணம் சேர்த்துக் குவிப்பது; இவை மட்டும்தான் வாழ்க்கையா? மனித உணர்ச்சி என்ற ஒன்று இல்லையா? வாழ்வில் அதற்கும் ஓர் இடம் உண்டல்லவா? கண்டிப்பாக உண்டு.

ஆனால், பழனி செய்த காரியம் அவளுடைய வீட்டில் என்றும் நிகழ்ந்ததில்லை; அப்படி நடந்ததாக அவளுக்கு நினைவில்லை. அதனால், இது வீண் செலவு என்று அவளுக்குப் பட்டிருக்கலாம். அதனால்தான் நல்ல உடை அணிந்து கொள்வதில் தன் கணவனுக்குச் சந்தோஷமும் திருப்தியும் ஏற்படுகிறது. அப்படியானால், அவளுக்கும் சந்தோஷத்தைத் தருகிற விஷயம்தான் அது.

ஜரிகைத்துண்டு வாங்கிய குற்றத்திற்கு அவனை ஆளாக்கவோ, அதைப்பற்றி அவனிடம் உரிமையுடன் கேட்கவோ, விமர்சிக்கவோ கறுத்தம்மா தயாராக இல்லை. அதெல்லாம் அவளுக்கு மறந்து போய்விட்டதா? அவன் அவளை அணைத்துக் கொண்டான். ஈருடல் ஒருடலாகிவிட்டது. இதழ்கள் இணைந்தன. பொழுது செல்வதைக்கூட உணர முடியாமல், இருவரும் கள்வெறியில் ஆழ்ந்துபோய் நின்றுகொண்டிருந்தனர். தழுவிக்கொண்ட கைகள் தளர மறுத்தன. தங்கள் உடல்களை வெவ்வேறாகப் பிரித்துக்கொள்ள முடியுமென்றே அவர்களுக்குத் தோன்றவில்லை.

ஒருகால், ஜரிகைத் துண்டும் வாழ்க்கைக்கு அவசியமான ஒன்றுதான் என்ற ஞானம் கறுத்தம்மாவுக்கு அப்போது பிறந்திருக்கலாம். ஏதோ, வாழ்க்கை என்பது சட்டியும், பெட்டியும், தோணியும், வலையும் வாங்கி வைத்துக்கொள்வது மட்டுமல்ல; அதில் ஜரிகைத் துண்டுக்கும் இடம் உண்டு.

ஒரே பாத்திரத்தில் சோற்றை எடுத்து வைத்துக்கொண்டு இருவரும் சாப்பிட்டார்கள். அப்போதும் வெறிமயக்கத்தில் கறுத்தம்மாவின் கண்கள் பாதிதான் திறந்திருந்தன. முகத்தில் விசேஷ ஒளி ஒன்று வீசிற்று. கையில் ஒரு கவளம் சோற்றை எடுத்து, அவளுடைய வாய் அருகே கொண்டு சென்றான் அவன்.

"அய்யோ, இத்தனை பெரிசா உருட்டினா என் வாய் கொள்ளாது."

கடலில் ஒவ்வொரு நாளும் இயற்கைச் சக்திகளோடு போராடுகிற வலுவான தோள்களையும், புஜங்களையும் கொண்டவன் உருட்டிய கவளம் பின் எப்படி இருக்கும்? அவன் மறுபடியும் ஒரு கவளம் சிறு உருண்டையாக எடுத்துக்கொண்டான். அவள் ஒரு கவளம் எடுத்து அவனுக்கு ஊட்டினாள். அப்போது அவன் சொன்னான்:

"இது என் வாயிலெ ஒட்டிக்கிடப் பத்தாது."

இந்தத் தமாஷை எண்ணி அவர்கள் இருவரும் வெகு நேரம் சிரித்தனர். ஜரிகைத் துண்டு வாங்கியதற்கு அவனுக்குக் கொடை கொடையாய்க் கொடுக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்ட கறுத்தம்மா, இப்போது சொன்னாள்:

"இன்னும் ஒரு பட்டு ஜம்பரும், நல்லதா ஒரு புடவையும் வாங்கணும்."

ஆவேசம் சற்றுத் தணிந்தது. கறுத்தம்மா மீண்டும் இந்த உலகத்துக்கு வந்து சேர்ந்தாள். குடும்ப வாழ்க்கையில் முன்னேற்றம் காணவேண்டும் என்பதுதான் அவளுடைய முக்கியமான ஆசை. அந்த ஆசை இனிமேல்தான் நிறைவேற வேண்டும். அன்று தன் கணவனுக்கு என்ன வருமானம் கிடைத்தது என்பதை அவள் தெரிந்துகொள்ள வேண்டாமா? அதற்கு உரிமை கிடையாதா அவளுக்கு? கிடைத்த பணத்தில் என்னென்ன செலவு செய்தான் என்பதையும் அவள் தூண்டிக் கேட்டு அறிந்து கொள்ளத் துடித்தாள்.

கறுத்தம்மா கேட்டாள்:

"இண்ணைக்குப் பங்கு எவ்வளவு கிடைச்சுது?"

"இருபதோ முப்பதோ கிடைச்சுது."

"கையிலே மிச்சம் எவ்வளவு இருக்குது?"

அலட்சியமாக அவன் சொன்னான்:

"பொட்டலம் அங்கே வைச்சிருக்கேன். வேணும்னு எடுத்துப் பாரேன்."

கறுத்தம்மா பொட்டலத்தை எடுத்து அதைப் பிரித்துப் பார்த்தாள். மொத்தம் இரண்டு ரூபாய் இருந்தது. இருபத்தெட்டு ரூபாய் செலவாகியிருக்கிறது. அந்தப் பணம் மட்டும் இருந்திருந்தால், அதை வைத்து எத்தனை காரியங்களைச் செய்ய

லாம்! ஆனால், அவள் அதை வாய்விட்டுச் சொல்லவும் தயங்கினாள்.

கணவனுடைய தோளில் சாய்ந்தவாறு அவள் சொன்னாள்:

"இங்கே அடுக்களையும் ஒண்ணுதான்; படுக்கிற இடமும் ஒண்ணுதான். இப்படி இருந்தாப் போதுமா?"

"போதாது" என்று ஒரு யந்திரம் போல் பதில் சொன்னான் பழனி.

"நாம் இன்னும் என்னென்னமோ செஞ்சு முடிக்க வேண்டியிருக்குது!"

அது எத்தனை முக்கியமான ஒன்று என்பது கறுத்தம்மாவுக்குத் தெரியும். அவள் வாய்விட்டு சிரித்துக்கொண்டே சொன்னாள். அவள் சொன்னதன் சாராம்சம் என்ன? வீடு வாசலோ உறவினர்களோ இல்லாத பழனியை, அவள் அரயன் பழனி என்று அழைக்கும் நிலைக்குக் கொண்டு வந்து விடுவாளாம்! அவனைப் புது மனிதனாக்கி விடவேண்டும் என்பது தான் அவளுடைய தீர்மானம். இப்போது அத்தனை விஷயங்களையும் அவன் முன்னால் சொல்வதற்கும் சுதந்தரம் இருக்கிறது அவளுக்கு! அவள்மீது அவன் வைத்திருக்கும் ஆசை இப்போது அவளுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது.

தன் வாழ்வைக் கறுத்தம்மா திருத்திச் சீர்படுத்த நினைப்பதில் பழனிக்கும் திருப்திதான். ஆனால் அவன் அவளுடைய பேச்சுக்குச் செவி சாய்த்து அதன்படி நடந்துகொள்ள வேண்டும்.

மனத்தைக் கொள்ளைகொள்ளும் புன்னகை முகத்தில் மலரக் கறுத்தம்மா சொன்னாள்:

"இனிமே, கிடைக்கிற காசையெல்லாம் இப்படிச் செலவழிக்கக் கூடாது."

தனது இரு கைகளாலும் அவனுடைய கன்னங்களை அழுத்தியவாறு அவள் மேலும் சொன்னாள்:

"அதுக்கு நான் இடம் தர மாட்டேன்."

"அப்பொ நான் டீ குடிக்க வேண்டாம்; சோறும் திங்க வேண்டாம். அதுதானே நீ சொல்லறதுக்கு அர்த்தம்?"

அவனுக்கு வேண்டிய உணவுவகைகளைத் தானே தயாரித்துத் தந்து விடுவதாகச் சொன்னாள் கறுத்தம்மா. அதோடு முக்கியமான ஒரு கேள்வி அவள் மனத்தில் பிறந்தது.

"குழந்தை பிறந்தா, அப்புறம் நாம் என்ன செய்வோம்!"

பழனிக்கு ஒன்றும் விளங்கவில்லை. குழந்தைகள் பிறக்கும். அதற்கு இப்போது என்ன செய்ய வேண்டும்?

"பிறந்தா என்ன, அதுக பாட்டுக்கு வளந்து பெரிசாகும்."

ஒன்றும் தெரியாத, எதைப் பற்றியும் கற்பனை எண்ணங்கள் கூட இல்லாத பச்சைக் குழந்தையிடம் விளக்குவதுபோல், தனது வாழ்க்கைத் திட்டத்தைப் பழனியிடம் விளக்கிச் சொன்னாள் கறுத்தம்மா. ஒரு தோணியும் வலையும் சொந்தமாக இருக்க வேண்டும். ஆனால், அந்த அரயனுக்குத்தான் அந்த அபிலாஷை இல்லை. பழனிக்கு அந்த ஆசை உண்டு. அவனுடைய ஆசையை மேலும் மேலும் வளர்த்து விரிவாக்கினாள் கறுத்தம்மா. அப்போது பழனி சொன்னான்:

"இந்தக் கடற்கரையிலிருக்கிற ஒவ்வோர் அரயனும் இப்படி நெனைச்சிருந்தான்னா, இதுக்கு முன்னே எல்லாரும் கோடீசுரனா ஆயிருப்பாங்க. ஏன் அப்படி ஒருத்தன்கூட நெனைக்கல்லே?"

"நாம அப்படி எண்ணினா என்ன?"—கேள்வியையே பதிலாகச் சொன்னாள் கறுத்தம்மா.

ஒரு சர்வ சாதாரண அரயனுடைய நெடுங்கால நம்பிக்கையை அவனும் வெளியிட்டான். அரயன் பணம் சேர்க்க முடியாது! கோடானுகோடி உயிரினங்களைக் கொன்று குவிப்பதில்தான் அவனுக்குச் சிறிது பணம் கிடைக்கிறது பரிபூரண சுதந்தரத்துடன் கடல்நீரில் அங்கும் இங்கும் விளையாடித் திரிகின்ற ஜீவன்களை ஏமாற்றி வலையில் சிக்க வைப்பதன் மூலம் தான் அவர்களது வாழ்க்கை நடைபெறுகிறது. லட்சக்கணக்கான உயிர்கள் மூச்சுத் திணற, விழிகள் பிதுங்க, துடிதுடித்துச் சாவதைப் பார்க்கும்போது எத்தனை பரிதாபமாக இருக்கிறது! அன்றாடம் அந்தக் காட்சியைக் கண்டு கொண்டிருப்பவனுக்கு ஒன்றுமே இல்லை. இவ்வாறு உயிர்க்கொலையில் கிடைக்கிற பணம் தங்காது. அந்தப் பணத்தைச் சேர்த்து வைக்கவும்

முடியாது என்பதுதான் அவர்கள் நம்பிக்கை.

"இல்லேன்னு, கடல்கரைக்காரங்க ஏன் பட்டினி கிடந்து சாகறுங்க?"

இவைகளெல்லாம் பழனியின் வேதாந்த விசாரம் அல்ல. நெடுந்தூரத்துக்கு விரிந்து பரந்து கிடக்கும் அந்தக் கடற்கரை மக்கள், நூற்றுண்டு காலமாய், தலைமுறை தலைமுறையாய் இதே கருத்தைக் கூறி வருகின்றனர். கறுத்தம்மா காதிலும் இந்தப் பேச்சு பலமுறை விழுந்திருக்கிறது. ஆனுல், அந்த நம்பிக்கைக்கு எதிராகப் பேசிய ஒருவன் உண்டு. அது அவளுடைய அப்பா!...தன் தகப்பன் சொல்லிக்கொண்டிருந்ததை ஆரம்பத்தில் கறுத்தம்மா ஏற்றுக்கொள்ளவில்லை. அப்போது அந்தப் பேச்சு அவளுடைய மனத்துக்கு ஏற்றதாக இல்லை. இன்று அவள் அதை முற்றிலும் உணர்ந்து கொண்டுவிட்டாள் என்பதோடு, அவன் சொன்ன ஒவ்வொரு சொல்லிலும் மிகுந்த ஆழமும் பொருளும் இருப்பதாகவும் அவளுக்குத் தோன்ற ஆரம்பித்துவிட்டது. இதையெல்லாம் மனத்தில் எண்ணிக் கொண்டாள் என்றுலும், அதை வெளியிட்டு, பழனிக்கு எதிராக ஒரு வாதத்தைக் கிளப்பவில்லை. அதற்கான மனத் தெம்பும் அவளுக்கு அப்போது இல்லை.

மீண்டும் பழனி சொன்னுன்:

"மரக்கான் எதுக்குப் பணம் சேக்கணும்னு கேக்கறேன்? இதோ, கண் முன்னுலே தொலை தூரம் தெரியுதே கடல், இது தான் மரக்கானுக்குச் சொத்து. கடலிலே இல்லாத ஒண்ணு இருக்கவா செய்யுது? சேத்து வைக்காம இருந்தா கடல்தாய் மேலும் மேலும் தந்துக்கிட்டே இருப்பா. நம்ம குல தர்மம் அது."

"அப்படீன்னு மீன்பிடி இல்லாத சமயத்திலெ பட்டினி கிடந்து சாவுறேமே, ஏன்?

"அதை அனுபவிச்சுக்கிடத்தான் வேணும்."

கறுத்தம்மா தன் தாய் தந்தையரின் அரிய முயற்சியை மனத்தில் எண்ணிப் பார்த்துக்கொண்டாள். முயற்சியின் விளைவால் தோணியும் வலையும் சொந்தமாகி விட்டன. அதை நினைக்கையில், பட்டென்று இதயத்தில் ஒரு தீப்பொறிபட்டது

போல், இனம் தெரியாத எரிச்சல் ஏற்பட்டது அந்த எரிச்சல் அவளுடைய மனத்தினூடே எங்கும் வியாபித்துச் சென்றது. தோணியும் வலையும் எங்கிருந்து வந்து குதித்தனவாம்? பாவம், பரீக்குட்டி! அதோகதியாய் அழிந்தே போனான்!

"நீ உங்க அப்பாவையும் அம்மாவையும் மனசிலே வச்சுக் கிட்டுத்தானே இவ்வளவும் பேசுதே?"

பழனியின் முகபாவம் மாறுவதுபோல் தோன்றிற்று. அவன் சொன்னான்:

"உனக்குப் பேராசை பிடிச்ச புத்தி அவங்க கிட்டேயிருந்து தான் வந்திருக்குது. இங்கே என்னடான்னு, பொஞ்சாதி வீட்டுக்கு விருந்துக்கு எண்ணைக்குப் போறேன்னு எல்லாரும் கேட்டுக்கிட்டிருக்காங்க?"

இதே கேள்வியை எல்லாப் பெண்களும் அவளைப் பார்த்தும் கேட்டுக்கொண்டுதான் இருந்தனர். அவளாலும் இக் கேள்விக்குத் தக்க பதில் சொல்ல முடியவில்லை கல்யாணத்திற்குப் பின் விருந்துக்கு அழைத்துச் செல்லாமலிருப்பது பெரிய குறைதான். ஆனால், அது நடக்கப் போகிறதா என்பதில் அவளுக்கே சந்தேகம்தான். அவள் சொன்னாள்:

"அம்மா உடம்பு சரியில்லாம படுக்கையிலே விழுந்து கிடக்கிறதைப் பார்த்துப்புட்டுத்தானே நாம் வந்தோம். அங்கிருந்து யாரு இங்கே வரமுடியும்?"

சிறிது நேரத்திற்குப் பின் சிரித்துக்கொண்டே, ஆனால் ஆணித்தரமான குரலில் அவள் கேட்டாள்:

"கல்யாணம் கழிஞ்சு இங்கே வந்தோமே. மாப்பிள்ளைக்குச் சொந்தக்காரங்கன்னு ஒருத்தராவது நம்மெ விருந்துக்கு அழைச்சாங்களா? வழக்கமா அப்படியெல்லாம் செய்வாங்களே."

விளையாட்டாகத்தான் கறுத்தம்மா இதைச் சொன்னாள் என்றாலும், ஏன் சொன்னோம் என்று அவள் மனசு வருந்திற்று. பழனிக்குக் கிடைத்த ஒரு சூடுதானே இது?

பழனியும் நொந்துகொண்டான். அவள், ஏதோ விளையாட்டுப் போக்கில் அப்படிச் சொன்னதாக அவன் எடுத்துக் கொள்ளவில்லை. அவன் முகபாவம் மாறிற்று.

"அது முந்தியே தெரிஞ்ச விஷயம்தானே? விருந்துக்குக் கூப்பிடுதுக்கு ஒருத்தருமே கிடையாதுன்னு தெரியாதா? பின்னே எதுக்கு என்னைத் தேடிப் புடிச்சாராம்?"

கறுத்தம்மாவின் முகம் சோர்ந்து போய்விட்டது. பழனி மனம் நொந்து பேசுகிறான். இப்படிப் பேசுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அதோடு பேச்சை முடித்திருந்தாலும் எவ்வளவோ நன்றாக இருக்கும்.

"அப்பொ, அவரு மனசிலெ நெனச்சுக்கிட்டது வேறெண்ணு. யாருமே இல்லாமே அனாதையா திரிஞ்சுக்கிட்டு இருக்கான் ஒருத்தன். அவனுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விடுவதுக்குக்கூட நாதி கிடையாது. கடல்கரையிலெ கெட்ட பேரு சம்பாதிச்சுகிட்ட பொண்ணு குதிரை மாதிரி நின்னுக்கிட்டு இருந்தது. எல்லாருமாச் சேர்ந்து அவளை அவன் தலையிலே கட்டி அனுப்பிவெச்சிட்டாங்க. கடலுக்குப் போயி அங்கேயே அவன் செத்துத் தொலைஞ்சு போனாலும் அழுவதுக்கு ஆள் கிடையாது. நடந்த விஷயம் இதுதான்."

எத்தனை பயங்கரமான தாக்குதல்! கடற்கரையில் கெட்ட பெயர் சம்பாதித்த பெண்ணும் அவள்! எப்படி அவளால் இதைக் கேட்டுப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? என்றாலும் அதுவும் உண்மைதானே? மனசோடு மனசாய்ப் புதைந்துகிடந்த குற்ற உணர்ச்சி பேருருவம் பூண்டு அவள் முன் எழுந்தது. அவளுடைய முகத்தைப் பார்த்தே அவளுடைய கணவன் சொல்லுகிறான். கெட்ட பெண்ணும்!

கறுத்தம்மா கைகளால் முகத்தை மூடிக்கொண்டு விக்கி விக்கி அழுதாள். அவள் அழுதபோது அவளுடைய உடம்பு பூராவும் நடுக்கமெடுத்தது. அவன், அவளைப் பார்த்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தான். அவள் கேவிக்கேவி அழுத ஒலி நீண்ட நேரம் கேட்டுக் கொண்டிருந்தது. அவனுக்கு அவளிடம் இரக்கம் தோன்றிற்று?

அசரீரி போல் ஒருகுரல் அவளுடைய செவிகளில் விழுந்தது:

"இது நான் சொல்றது இல்லெ. எல்லாரும் அப்படிச் சொல்றாங்க. ஆமாம்."

பழனியின் மனம் சற்று இரங்கி விட்டது. 'நான் அப்படிச் சொல்லவில்லை' என்று தானாகவே சொன்னானே!

"எல்லாம் அந்தப் பப்புதான் சொல்லுதான்."

கல்யாணத்திற்குப் பின் அன்று முதன்முறையாக அந்த வீட்டினுள் கண்ணீர் சிந்திற்று. ஆறுதல் சொல்லித் தேற்ற முயன்றான் பழனி. உணர்ச்சிவசப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருந்த இதயங்களைக் கருமேகம் திரண்டு சூழ்ந்துகொண்டது. பொழுது விடியும்வரை அதன் நிழல் அந்த வீட்டினுள் வியாபித்துக்கொண்டிருந்தது. விக்கி விக்கி அழுதுகொண்டே அவள் சொன்னாள்:

"நான் கடற்கரையிலெ இருக்குதுக்கு யோக்கியதை இல்லேன்னு சொல்லும்படி நடந்துக்கிட மாட்டேன்."

தன்மீது அவன் ஆழ்ந்த நம்பிக்கை வைக்க வேண்டுமென்று அவள் அவனிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டாள். கடலுக்குச் செல்லுகிற கணவனைக் கரைசேர விடாமல் செய்கிற காரியத்தை அவள் ஒருநாளும் செய்யமாட்டாள். அலைகள் வெகுண்டெழுந்து குடிசைகளைக் கபளீகரம் செய்யக் கூடிய உற்பாதங்கள் விளையும்படி விடமாட்டாள். அவள் அவளுடைய செய்கையின் விளைவாக விஷம்கொண்ட பாம்புகள் கடற்கரை மணலில் இழைய நேராது. இனம் கூற முடியாத கொடிய கடற்பிராணிகள் கடலின் நீர்மட்டத்துக்கு மேலே எழுந்துவந்து வாயைத் திறந்து புயற்காற்றைக் கக்கவும் ஒரு சந்தர்ப்பத்தை அவள் சிருஷ்டிக்கமாட்டாள். கற்பு நெறியிலிருந்து வழுவாத உத்தம மரக்காத்தியாக வாழ்க்கை நடத்துவாள் அவள். 'என்மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா?' என்று ஓராயிரம் தரம் அவள் அவனிடம் கேட்டாள். 'நம்புகிறேன்' என்றோ, 'நம்பவில்லை' என்றோ அவன் வாய்திறந்து சொல்லவில்லை. அவனுடைய விசாலமான மார்பில் தனது தலையைச் சாய்த்து அந்த இடத்தையெல்லாம் அவள் கண்ணீரால் மெழுகினாள். அவளால் இதைத் தவிர வேறு என்னதான் செய்யமுடியும்?

பழனி கேட்டான்:

"நீ எப்போதும் 'நம்புறியா, நம்புறியா'ன்னு கேட்டுக்கிட்டே இருக்கியே, ஏன்? அப்பொ உனக்கே உன்னெப் பத்திச் சந்தேகமா இருக்குதா?"

அவளுடைய நெஞ்சை இன்னொரு தீப்பொறி சுட்டது. அவளைப் பற்றி அவன் மனத்தில் ஒரு சிறிய சந்தேகம் ஊடுருவிப் பாய்ந்துவிட்டதா? பாவிகள், அவன் காதில் விழும் படி என்ன பேசிக்கொண்டார்களோ?

இன்று இரவு அவர்கள் அதற்குமேல் பேசிக்கொள்ள வில்லை. அவளுடைய ரகசியங்கள் அவனுக்குத் தெரியுமோ தெரியாதோ, எல்லாவற்றையும் அவளே அவனிடம் சொல்லி விடுவது நல்லதல்லவா! உண்மையை அப்படியே அவன் முன்னால் வைத்துவிட்டால், அவன் அருள்கூர்ந்து மன்னித்து விடமாட்டானா? ஆனால், அந்த விஷயங்களை எல்லாம் எவ் வாறு அவள் வாய்விட்டுச் சொல்வாள்? யார் யார் எல்லாமோ கதைகட்டி அவன் காதில் போடுவதைவிட, அவளே நடந்ததை யெல்லாம் அவனிடம் அப்பட்டமாகச் சொல்லிவிடுவதுதானே புத்திசாலித்தனம்?

இரண்டு பாதைகள் ஒன்றாக இணையும் சந்திப்பில் நின்று கொண்டிருந்தாள் அவள். ஒரு பாதையை மனத்தில் தீர் மானம் செய்துகொண்டு, அதன்வழி முன்னேறிச் செல்ல வேண்டும் அவள். எப்படிச் சொல்வது? 'நான் ஒருவனைக் காதலித்தேன்' என்றே சொல்லிவிடுவதா? அதைக்கேட்டுச் சகித்துக்கொண்டிருக்க முடியுமா ஒரு கணவனால்? 'எனக்குச் சிறு வயசில் ஒரு நண்பன் இருந்தான்' என்று ஆரம்பித்துச் சொல்லிப் பார்க்கலாமா? அதுவும் சரிப்பட்டு வராது. அந்த இடத்திலிருந்து பிடித்துப் பேசினால் அந்த இன்ப நினைவுகள் மனத்துக்குப் போதையூட்டி அனாவசியமான இடங்களுக்கு இழுத்துச் சென்றுவிடும். எதை எதையோ மனம் திறந்து கொட்டும்படியாகிவிடும். பரீக்குட்டியை 'ஓஹோ' என்று புகழ்ந்து பேசும்படி ஆகிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை. 'இவள் மனசு இன்னும் அவனைச் சுற்றித்தான் வட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது' என்று எண்ணினாலும் எண்ணி விடுவான், பழனி. ஊஹூம். அது வேண்டாம். 'நாலாம் மதத்து ஆசாமி ஒருவன் என்னை எப்படியோ பசப்பி ஏமாற்றி விட்டான்' என்று சொல்லலாமா? அய்யோ! அப்படிச் சொல்லமுடியாது. அது உண்மையல்ல. அதோடு, அவன் முகத்தில் அவசியமில்லாமல் கரியைப் பூசவேண்டும்; கெட்ட

மனிதனுக அவனைச் சித்தரித்துக் காட்டவேண்டியிருக்கும்' அது சாத்தியமே இல்லை. பரீக்குட்டி அயோக்கியன் ஒன்று மல்ல. அவன் அவளை ஏமாற்றவும் இல்லை.

நிராசையால் மனம் வெதும்பிச் சோர்ந்து கண்ணீர் பெருகும் ஓர் இளைஞனின் தோற்றம் அவள் முன்பு தோன் றிற்று. இருளிலும் அவளால் அந்த உருவத்தைக் காண முடிந்தது. அவனுடைய இதயத்தைக் காலால் மிதித்து அழுத் திக்கொண்டு வந்துவிட்டதாகத் தோன்றிற்று அவளுக்கு. இனிமேல் இந்த வாழ்க்கையில் நமக்கு ஒன்றுமே இல்லை; ஒன்றுமே வேண்டாம் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றி யிருக்கும். எத்தனையோ வழிகளில் அவனுக்குத் தீங்கிழைக்கப் பட்டது. எழுபத்தைந்து வயதானுலும் அந்தக் கடற்கரையில் உட்கார்ந்து அவன் பாடிக்கொண்டுதான் இருப்பான். வாய் ஓயாமல் பாடி அவன் உயிரை விட்டுவிடுவான். அவளோ தன் கண்முன்னுல் அவனைக் கண்டுகொண்டுதான் இருந்தாள். எதை எதையோ சொல்ல எண்ணி அவளுடைய இதழ்கள் அசைந்தன. தான் இருக்கும் சூழ்நிலையைக்கூட அவள் மறந்துவிட்டாள். தன் கணவன் பக்கத்தில் படுத்திருப்பது கூட அவளுக்குத் தெரியவில்லை. அவளுடைய பெண்மனம் மெதுவாக முணுமுணுத்தது:

"எனக்கு அவனிடம் ஆசைதான்."

அவள் இதைப் பரீக்குட்டியிடம்தான் சொன்னுள். இந்த முணுமுணுப்புக் குரல் அவனையே தூக்கிவாரிப் போட்டு விட்டது.

பழனி கேட்டான்:

"என்ன சொல்லுதே? ஆசைன்னு சொல்லுதியா?"

கறுத்தம்மா விழித்துக்கொண்டாள்.

எதையாவது வாய்க்கு வந்தபடி உளறிவிட்டோமா?

இருந்தாலும் அவள் சொன்னுள்:

"ஆமா."

அவன் கேட்டான்:

"யாரிடம்?"

பச்சைப் பொய் ஒன்று சொன்னுள் அவள்:

"உன்னிடம்."

விடிவெள்ளி முளைத்தது. கடற்கரையில் வேலைக்காரர்களைக் கூவி அழைக்கும் குரல் கேட்கலாயிற்று. கடலேறிச் செல்லப் பொழுதாகிக் கொண்டிருந்தது. பழனி எழுந்திருந்தான். வழக்கம்போல் குளித்துவிட்டுத்தான் செல்லவேண்டுமென்று அவள் சொன்னாள். அவளே அவனைக் குளிப்பாட்டி அனுப்பினாள்.

பழனி அன்று சற்று நேரம் பிந்தித்தான் கடற்கரை சென்று சேர்ந்தான். அதுவரையிலும் ஒருநாள்கூட அவன் தாமதித்து வந்ததில்லை. அன்று மற்றத் தோணிக்காரர்கள் அவனுக்காகக் கொஞ்ச நேரம் காத்துக்கொண்டிருக்கும்படி யாகிவிட்டது. வேலாயுதன் ஒரு ஹாஸ்யம் உதிர்த்தான்:

''கல்யாணம் ஆன புதிசிலே எந்திரிச்சு வர நேரமாகத் தான் செய்யும். சகஜம்தானே அது?''

கள்ளம் கவடு இல்லாத ஹாஸ்யம்! உண்மையும் அது தானே? ஆனால், இப்படிச் சொன்னது பழனிக்குப் பிடிக்க வில்லை.

''வேலாயுதண்ணே, வாயை வெச்சுகிட்டுச் சும்மா இரு.''

வேலாயுதன் கேட்டான்:

''நீ என்ன, எங்கிட்டே சண்டைக்கு வராப்போல் இருக் குதே.''

வேலாயுதன் அதற்கு மேலும் ஏதாவது சொல்லிவிடக் கூடாதே என்ற பீதி பழனிக்கு. அதையும் அவன் அங்கேயே போட்டு உடைத்து விடுவானோ? கறுத்தம்மாவைப் பற்றி அவன் ஏதாவது சொல்லிவிடக்கூடும். அவனே மனத்தில் சிருஷ்டித்துக்கொண்ட கற்பனை எண்ணம்தான் அது.

தோணியை மேற்குத் திசையில் செலுத்தினர். பழனியும் பின்பக்கம் நின்று கொண்டிருந்தான். அன்று கடலில் அவ் வளவாக மீன் இல்லை. தோணிகள் வலை வீசுவதில் ஈடுபடாமலே அங்கும் இங்கும் அலைந்துகொண்டிருந்தன. பழனி மேற்குத் திசையில் நெடுந்தூரம் தோணியைச் செலுத்திக் கொண்டு சென்றான். பாய்ந்து பாய்ந்து முன்னேறிச் சென்றது தோணி அடக்கமுடியாத வேட்கை ஏதேனும் அவன் உள்ளத்தில் மூண்டெழுந்து விட்டதா? எஃகு போன்ற தசைத் திரட்சியில் நமைச்சல் எடுக்கிறதா? கடலின் பரப்புக்கூடக் காணாது என்ற

குறையோ மனதுக்கு? அவன் தோணியினுள் குதித்தபோது தோணியும் குதித்தது. அவனுடைய லட்சியம் என்ன? அடிவானத்தைப் பிளந்துகொண்டு முன்னேறிச் சென்றுவிட வேண்டும் என்பதா? அவனுடைய பலம் அத்தனையும் ஒன்ருகத் திரண்டு செயல்பட ஆரம்பித்து விட்டதா?

இப்போது கண்களுக்குக் கரை தெரியாது. அத்தனை தூரத்தில் சென்றுவிட்டான் அவன். ஆண்டி கேட்டான்:

"நீ பாட்டுக்குத் தோணியை எங்கேயோ இழுத்துக்கிட்டு போறியே, எங்கேன்னு கேக்கறேன்?"

சொல்லி வைத்தாற்போல் அத்தனை பேரும் துடுப்பிலிருந்து கைகளை அகற்றினர். அப்போதும் பழனி தோணியை முன்னல் செலுத்தப் பிரயாசைப் பட்டுக் கொண்டிருந்தான். பழனி ஒரு பேய் உருவம் எடுத்துவிட்டான் என்றுதான் தோன்றிற்று. அவன் அடிவானத்தை லட்சியமாக ஏற்றுக்கொண்டு விட்டான்.

குமாரு பயந்து போய்ச் சொன்ஞன்:

"டேய், நாய்க்குப் பிறந்த பயலே! யாரும் இல்லாத பயலாப் போயிட்டோமேன்னு, நீ பாட்டுக்கு..."

குமாரு பழனியைப் பார்த்துச் சீறி விழுந்துகொண்டே மேலும் தொடர்ந்து சொன்ஞன்:

"டேய், நீ வேணும்ஞ கடலிலே விழுந்து சாவு. கூறு கெட்ட பொண்ணை இழுத்துக்கிட்டு வந்து சேந்திருக்கியே, போ! கடல்லே விழுந்து சாவு. உன் தலைவிதி அது. எங்களுக்கு குளந்தை குட்டிகள் இருக்குது, தெரியுமா?"

வேலாயுதன் முன்னல் பாய்ந்து பழனியின் கையிலிருந்து துடுப்புத் தடியைப் பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டான். ஆண்டி பழனியின் அருகில் சென்று அவனைக் கீழே உட்கார வைத்தான். வேலாயுதன் சுக்கான் பிடிக்க, தோணி திசை திரும்பிச் சென்றது.

பெரும் அக்கினிப் பரீட்சையில் ஈடுபட்டவனுக்கு ஏற்படுகிற சோர்வுடன் பழனி அசந்துபோய் உட்கார்ந்திருந்தான். அவன் வாயைத் திறக்கவில்லை. சிறிது நேரத்திற்குப் பின் அவன் மீண்டும் துடுப்புப் பிடித்தான். கடலில் மற்றத் தோணி

கள் வலை வீசிக்கொண்டிருந்த இடத்திற்கு அவர்களும் வந்து சேர்ந்தனர். அங்கு அவர்களும் வலைவீசத் தொடங்கினார்கள்.

சொல்லப்போனால் அன்று ஒன்றுமே கிடைக்கவில்லை, மற்றவர்களுக்கும் ஒன்றும் கிடைக்கவில்லை. கொஞ்சம் பொடி மீன் மட்டும் பழனியின் தோணியில் இருந்தது. அன்று நபருக்கு ஒன்றரை ரூபாய் தான் கிடைத்தது.

குளித்துக்கொண்டிருந்த போது வேலாயுதன் கேட்டான்:

''பழனி, உனக்கு என்ன வந்துட்டுது? ஏதாவது புதிசா வந்து பிடிச்சுக்கிட்டுதா?''

அவன் பதிலை எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். மனித குணும்சங்களே அவனை விட்டுச் சுழன்றோடிச் சென்றுவிட்டன என்று எண்ணும்படி இருந்தது. என்ன ஆவேசம்! என்ன வெறி! இந்த வெறியில் தோணியைச் செலுத்திக்கொண்டு சென்றால் என்ன ஆவது?

பழனி சொன்னான்:

''அப்போ எனக்குப் பிரக்ஞையே இல்லை, பாத்துக்க.''

ஆண்டி சொன்னான்:

''நாங்களெல்லாம் குழந்தை குட்டிக்காரங்க. அதை மட்டும் ஞாபகத்திலே வெச்சுக்க!''

குமாரு சொன்னான்:

''இனிமே நாம சுக்கானெ அவன் கையிலெ கொடுக்கப் படாது. அவன் எல்லாரையும் நடுக்கடலிலெ முக்கிப்புடு வான்.''

அந்த யோசனையை எல்லாரும் ஆமோதித்து ஏற்றுக் கொண்டனர். அவனைப் பேய் பிடித்துக்கொண்டிருக்கிறது. எல்லோரும் அப்படித்தான் எண்ணினர்.

# 13

கல்யாணம் முடிந்த நாலாவது நாள் பெண்ணையும் மாப்பிள்ளையையும் விருந்துக்கு அழைத்து வரவேண்டும். ஆனுல், புறப்பட்டுச் சென்று அவர்களை அழைத்துக்கொண்டு வர ஒருவரும் தயாராக இல்லை.

சக்கியோ கல்யாண தினத்தன்று படுக்கையில் விழுந்தவள் தான். பின்னுல் அவளால் எழுந்து உட்காரக்கூட முடியவில்லை. நல்லபெண் அடுத்த வீட்டுக்காரி; மிகவும் நல்லவள். அவள் அடிக்கொருதரம் வந்துபோவாள்; தேவையான பணிவிடைகள் செய்வாள். வீட்டு வேலைகளைப் பஞ்சமி கவனித்துக் கொண்டாள். உடல்நலம் இந்த அளவுக்கு சீர்கெட்டு படுக்கையோடு படுக்கையாய் விழுந்து கிடக்கும் சக்கியை, செம்பன்குஞ்சு அருகில் சென்று விசாரிக்கவோ, கவனிக்கவோ முற்படவில்லை. ஒரு வைத்தியரை அழைத்துக்கொண்டு, வந்து சக்கியைப் பார்க்கச் சொல்ல வேண்டுமென்று, நல்லபெண் ஒன்றுக்கு இரண்டு முறை செம்பன்குஞ்சுவிடம் சொன்னுள். அவனே அதற்கு வாயைத் திறந்து ஒரு பதிலும் சொல்லவில்லை.

கல்யாணத்திற்குப் பின், அதை ஒட்டிய வேலைகள் மேலும் சிலவற்றைச் செய்து முடிக்கவேண்டி யிருந்தது. அவ்வேலைகளை முடிப்பதில் செமபன்குஞ்சு மும்முரமாக ஈடுபட்டிருந்தான். சில சமயம், சக்கி படுத்திருந்த அறை வாசலில் நின்றவாறு உள்ளே எட்டிப் பார்ப்பான். ஒரு நாள் அவன் அறை வாசலில் வந்து நின்றபோது, திருக்குன்றப்புழைக்குச் சென்று கறுத்தம்மாவையும் பழனியையும் அழைத்துவர வேண்டு

மென்று சக்கி அவனிடம் சொன்னுள். கோப வெறியில் தன்னையே மறந்து பேசினுன் செம்பன்குஞ்சு. அவன் உரக்கக் கத்தவும் ஆரம்பித்தான்:

"நான் போக மாட்டேன். அவங்களும் என் வீட்டுப் படியை மிதிக்க வேண்டாம்."

சக்கிக்கும் கோபம் வரத்தான் செய்தது. கோப உணர்ச்சி பொங்கவே, மீண்டும் அவளுக்கு நினைவு போய் விட்டது.

அன்று செம்பன்குஞ்சு ஒரு வைத்தியனை அழைத்துக் கொண்டு வந்தான்.

கல்யாணமான பெண்ணையும் மாப்பிள்ளையையும் சம்பிரதாயப்படி வீட்டுக்கு அழைத்து வந்து விருந்து போட்டு அனுப்பி வைக்கவில்லை. அக்கம் பக்கங்களில் இந்தக் கேள்வி எழுந்தது. இதுபற்றிக் கேட்டவர்களிடம் சள்ளென்று சீறி விழுந்தான் அவன். கேட்டவர்கள் மட்டும் பேசாமல் விட்டு விடுவார்களா? செம்பன்குஞ்சுவுக்கு எல்லோரிடமும் சண்டை போடும்படி ஆகிவிட்டது.

இப்போதெல்லாம் செம்பன்குஞ்சு தனது வீட்டை விட்டுத் தொலைதூரம் சென்று வருவதில்லை. தோணிகள் என்னவோ கடலுக்குச் சென்றுகொண்டுதான் இருந்தன. ஆனுல், மீன்பாடு மகா மோசமாக இருந்தது. தோணி வேலையாட்களிடத்திலும் செம்பன்குஞ்சு அனுவசிமாக உரசிக் கொண்டான்.

திருக்குன்றப்புழைக் கடற்கரையிலும் இதே கதைதான். அங்கும், கறுத்தம்மாவைப் பிறந்த வீட்டுக்கு விருந்துக்கு அழைத்துச் செல்லாததுதான் சூடான பிரச்சினை; எல்லோருடைய பேச்சிலும் அடிபட்ட விஷயம். சம்பிரதாயப்படி முன்பே யாராவது வந்து அழைத்துச் சென்றிருக்க வேண்டும். தாய் தகப்பன் இல்லாத பெண் ஒன்றுமல்ல அவள் என்பது எல்லோருக்குமே தெரிந்த விஷயம். அப்படியானுல் அவளை அவர்கள் உதறிவிட்டார்களா? பந்தம் அறுந்து போய்விட்டதா? ஒரு புகலும் இல்லாதவர்கள் கூட, வாழ்க்கை வசதியற்ற எளியவர்கள்கூட, இம்மாதிரி விஷயங்களில் விட்டுக் கொடுத்து நடந்துகொள்வதில்லை.

யாராவது வந்து சேருவார்கள் என்ற நம்பிக்கையில் கறுத்தம்மாவும் ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். அவளுடைய தகப்பனார் இப்படி ஒரே அடியாக அவளைப் புறக்கணித்துவிடுவார் என்று அவள் எண்ணவே இல்லை. தாயை நினைத்தபோதெல்லாம் அவள் மனசு துணுக்குற்றது. இந்த நினைப்பு அவளைக் கவலையில் ஆழ்த்தியது. ஆனால், இதையெல்லாம் தனது கணவனிடம் வாய்விட்டுச் சொல்லவும் உள்ளூர அவளுக்குப் பயம்தான். சொன்னால் அவனுக்குப் பிடிக்குமோ என்னவோ! அவன் இதையெல்லாம் ஆமோதித்து அப்படியே ஏற்றுக்கொண்டுவிடுவானா? என்றாலும் சொல்லிப் பார்த்துவிடுவது என்ற முடிவுக்கு அவள் வந்தாள்.

ஒரு நாள் இரவு உணவை முடித்துக்கொண்டு இருவரும் ஆற அமர உட்கார்ந்துகொண்டிருந்தனர். மனத்தில் இருந்த எண்ணங்களையெல்லாம் வெளியிட இது நல்ல சந்தர்ப்பம் என்று அவளுக்குப் பட்டது. ஏதோ தனக்குத்தானே பேசிகொள்வதுபோல் கறுத்தம்மா ஆரம்பித்தாள்:

"எங்க அம்மா இப்பொ உயிரோடு இருக்காங்களான்னு கூட சந்தேகமா இருக்குது."

அவன் வாயைத் திறக்கவில்லை. அவன் முகத்தை கூர்ந்துபார்த்தாள் அவள். அவ்வாறு அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்துக்கொண்டே, மனத்தில் எழுந்த சந்தேக உணர்வோடு அவள் தொடர்ந்து சொன்னாள்:

"நாமதான் ஒரு வாட்டி அங்கே போயி பாத்துப்புட்டு வந்துருவோமே."

முகத்தில் அறைந்தாற்போல் கண்டிப்பான குரலில் பதில் வந்தது:

"அந்தப் பேச்சையே எங்கிட்டே எடுக்க வேண்டாம்."

இவ்வளவு நிஷ்டூரமாக அவன் பதில் சொல்லுவான் என்று அவள் சற்றும் எதிர் பார்க்கவில்லை. பழனியின் முக பாவம் பயங்கரமாக மாறிற்று. அதைக் கவனித்த கறுத்தம்மாவுக்கு உதறல் எடுத்துவிட்டது. குடம் பாலில் நஞ்சை ஊற்றியது போல் ஆகிவிட்டது.

கறுத்தம்மா தனது முகத்தில் சந்தோஷத்தை வலிந்து வரவழைத்துக்கொண்டு, மீண்டும் பேச ஆரம்பித்தாள்:

"ஒரே அடியா இப்படிப் பேசிப்புடலாமா?"

மறுபடியும் அவன் காரமாகக் கேட்டான்:

"ஏன்? சொன்னு என்னுன்னு கேக்கறேன்?"

"நமக்கும், நாளைக்கு ரெண்டு பெண் குழந்தைங்க பிறக்கும். அந்த இடத்துப் பையன்களுக்கு நாம பொண்ணைக் கொடுத்தோம்னு, அவங்களும் இப்படியெல்லாம் பதிலுக்குப் பதில் கேக்க மாட்டாங்களா?"

பழனி அதற்கு மசியாமல் சூடாகவே பதில் சொன்னுன்:

"அப்பொ அந்தக் கஷ்டத்தை அனுபவச்சுக்கிட்டுப் போரேும்."

இதற்கு என்ன பதில் சொல்லமுடியும்? அந்தச் சந்தர்ப்பத்தில் அவள் அத்துடன் பேச்சை நிறுத்திக்கொண்டாள். பிறிதொரு சமயம், மீண்டும் இதே விஷயத்தைக் கிளப்பிப் பேசினுள் அவள்:

"அப்படியானு நான் மட்டும் ஒரு நடை போயுட்டு வந்துடட்டுமா?"

இந்த யோசனைக்கு எதிராக அவன் ஒன்றும் சொல்லவில்லை. ஒன்று மட்டும் அவன் சொன்னுன்:

"போ! ஆனு, மறுபடியும் இங்கே திரும்ப வந்துடாதே."

கறுத்தம்மா மனத்திலும் கோப உணர்ச்சி பொங்கி எழுந்தது. ஆனுல், அதை அப்படியே வெளிக்காட்டாமல், வேறு விதமாக நடந்துகொண்டாள் அவள்.

"அடேயப்பா! இந்த ஆம்புளைக மனசு இருக்குதே, அது என்ன மனசோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம்."

இப்படிக் கூறிக்கொண்டே சிரிப்பை வரவழைத்துக்கொண்டாள். நீர்க்குன்றத்தில் சக்கியின் உணர்ச்சிக்கும் திருக்குன்றப்புழையில் கறுத்தம்மாவின் உணர்ச்சிக்கும் மதிப்புக் கொடுக்காமலே, நாட்கள் அவை போக்கில் உருண்டோடிச் சென்றுகொண்டிருந்தன. தன்னந் தனியாக உட்கார்ந்து அழுது தீர்த்தாள் கறுத்தம்மா. அதேபோல் சக்கியும் கண்ணீர் சிந்திக்கொண்டுதான் இருந்தாள். அவளுடைய

இதயம் வெந்துகொண்டிருந்தது. ஆனால், ஒருவராவது அதைத் தெரிந்து கொள்ளவில்லை.

சக்கியின் உடல்நிலை கவலைக்கிடமாக இருக்கிறது என்ற பேச்சு பரீக்குட்டியின் காதிலும் விழுந்தது. அப்போது செம்பன்குஞ்சு அங்கு இருக்கவில்லை. அவன் கடலுக்குச் செல்லுவது இல்லையென்றாலும், வேறெங்கோ சென்றிருந்தான். பரீக்குட்டியைக் கண்டமாத்திரத்தில் சக்கி 'ஓ' என்று அழுதாள். அவள் விம்மி விம்மி அழுவது கண்டு பரீக்குட்டியின் மனம் உருகிவிட்டது.

இப்போது பரீக்குட்டியும் எவ்வளவோ மாறிவிட்டான். எப்போதும் முகத்தில் சந்தோஷத்தோடு காட்சி தந்துகொண்டிருந்த பழைய பரீக்குட்டி அல்ல அவன். அழுதுகொண்டே பேசினாள் சக்கி.

"நான்......நான்......புறப்பட்டாச்சு!"

சக்கி மிகவும் உருக்குலைந்து போய்விட்டாள் என்பதைப் பரீக்குட்டியும் கண்டு கொண்டான். அவன் சொன்னான்:

"சக்கி, நீ என்ன இப்படிப் பேசுதே? அப்படி ஒண்ணும் பெரிசா வந்துப்புடலே உன் உடம்புக்கு."

கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்து கொள்ளும்படி சைகை காட்டினாள் சக்கி. அவன் அவளருகே அமர்ந்துகொண்டான். பரீக்குட்டியின் முகத்தைப் பார்த்துப் பார்த்து, சக்கி மேலும் பெரிதாக அழ ஆரம்பித்தாள். என்ன பேசுவது என்றே தெரியவில்லை பரீக்குட்டிக்கு. அவ்வாறு அவன் முகத்தில் பார்வை கவிந்திருக்கும்போது சக்கி சொன்னாள்:

"முதலாளி, உங்கிட்டே ரொம்ப நாளா ஒரு விஷயம் பேசணும் என்கிற எண்ணம் எனக்கு மனசிலெ."

மனம் திறந்து சகல விஷயங்களையும் தன்னிடம் சொல்லும்படி கேட்டுக்கொண்டான் பரீக்குட்டி.

முதன்முதலாகப் பணம் சம்பந்தமாகத்தான் அவள் பேச ஆரம்பித்தாள். அந்த விஷயத்தை மனத்தில் வைத்து வருந்திக்கொண்டிருக்க வேண்டாம் என்று அவளிடம் வேண்டிக்கொண்டான் பரீக்குட்டி. சக்கி மனமாரத் தனது புருஷனைத் திட்டினாள். அவன், 'பெரிய துஷ்டன்; பேராசை பிடித்தவன்......' என்றெல்லாம் சொன்னாள் அவள்.

சக்கி உணர்ச்சி பொங்கச் சொன்னுள்:

"முதலாளி, நீயும் கறுத்தம்மாவும் சின்னஞ் சிறு வயசிலிருந்தே இந்தக் கடற்கரையிலே சந்தோஷமா ஓடி ஆடி விளையாடினீங்க .."

பரீக்குட்டியின் மன வீணையில் மிக மெல்லிய தந்தி ஒன்று மீட்டப்பட்டது. பழைய எண்ணங்கள் மனத்தில் அலை அலையாய் எழுந்தன. சக்கியும் அதை உணர்ந்துகொண்டாள். கடற்கரையில் நடந்த காதல் வாழ்க்கை சக்கிக்கும் தெரிந்த ஒன்றுதானே? அவர்கள் பரஸ்பரம் எவ்வளவு ஆழமான அன்பு கொண்டிருந்தனர் என்பதும் அவளுக்குத் தெரியும். பின்னுல் விளைந்த நிகழ்ச்சிகள் இருவரது வாழ்க்கையையும் பெரிதும் பாதித்துவிட்டன என்பதும் உண்மைதானே? வியாதியில் அவதியுற்றுக்கொண்டிருந்த சக்கி, பரீக்குட்டியைப் பார்த்துச் சொன்னுள்:

"தம்பி, என் வயத்திலெ ஓர் ஆண் குழந்தை பிறக்காமப் போச்சு..."

தாங்க முடியாத துயரத்துடன் மீண்டும் அவள் சொன்னுள்:

"எனக்கும் ஒரு பிள்ளை இருக்கான்..."

'அது யார்?' என்ற பாவனையில் பரிக்குட்டி சக்கியின் முகத்தைப் பார்த்தான்.

அது யார் என்று நீ தெரிந்து கொள்ள வேண்டாம் என்ற தோரணையில் சக்கி, பரீக்குட்டியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். 'திடும்' என்று அவனுடைய கரங்களை இறுகப் பற்றிக்கொண்டு பேசினுள் அவள்:

"நீதான்...நீதான்...என் பிள்ளை...பரீக்குட்டி...நீதான்..."

பரீக்குட்டியின் மனத்தில் ஓர் ஆசுவாச உணர்ச்சி பிறந்தது. அவன் யாரை மனமார நேசித்தானே அவள் அவனுக்குச் சொந்தமாகவில்லை. அதுமட்டுமா? இப்போது அவள் மற்றொருவனின் சொத்து. அவனும் அவளுக்கு யாரோ என்ருகி விட்டான்.

கறுத்தம்மாவின் திருமண வாழ்க்கையில் சக்கி வைத்திருந்த நம்பிக்கை பொய்த்துவிட்டது. அவள் இப்போது

எதையும் எதிர்பார்க்கவில்லை. பரீக்குட்டியும் கறுத்தம்மாவும் கடற்கரையில் விளையாடியதை மீண்டும் சக்கி நினைவு கூர்ந்தாள். இப்போது பரீக்குட்டியை அவள் தன் மகனாக ஏற்றுக் கொண்டு விட்டாள். அதோடு ஓர் அதிசயம் நிகழ்ந்தது. பரீக்குட்டியின் உள்ளத்தில் கருகிச் சாம்பிப் போயிருந்த எண்ணங்கள் மீண்டும் பசுமை பெற்றுத் துளிர்த்தன. கறுத்தம்மா அவனுக்குச் சொந்தம் என்றாகி விடுமோ? நடைமுறையில் அது சாத்தியமில்லை என்றாலும், சக்கி அதை எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறாளோ? ஒரு நிமிஷ நேரத்திற்குள், தெளிவில்லாத, குழப்பமான ஏதேதோ எண்ணச் சுழல்களில் சிக்கி உண்மைக்கும் நடைமுறைக்கும் புறம்பான முடிவுகளுக்கு வந்தான் பரீக்குட்டி. சக்கி பரீக்குட்டியிடம் சொன்னாள்:

"நாங்க வாயில்லாப் பூச்சிகள். நான் நெனச்சா என்ன செய்திர முடியும்? அவன் பணத்தைத் திரும்பத் தர மாட்டான்."

"அதெ மனசிலெ வெச்சுக்கிட்டுப் புண்படுத்திக்க வேண்டாம்" என்றான் பரீக்குட்டி.

"முதலாளி, அதெச் சொல்லலெ நான்" என்று ஆரம்பித்தாள் சக்கி. தான் எண்ணியதை வாய்விட்டுச் சொல்ல வழி தெரியாமல் சக்கி திணறினாள்.

"என் குழந்தையையும் அவன் நல்ல இடத்துச்கு அனுப்பி வைக்கலே. அவளும் ஒரு நாழி கண்ணீர் சிந்தாம இருக்கப் போறதில்லே."

இது விஷயமாகப் பரீக்குட்டி ஒன்றும் சொல்வதற்கில்லை. கறுத்தம்மா சம்பந்தப்பட்ட விஷயம். சக்கி தொடர்ந்து சொன்னாள்:

"நான் இங்கே இப்படி சாகக் கிடக்கிறேன். ஒரு தரம் கூட அவளெ இங்கே கூட்டிக்கிட்டு வரலெ."

ஒரு தாயின் மனதில் எழும் துன்பங்கள் அத்தனையும் அவள் மனத்தில் தலைதூக்கின. எண்ண எண்ண அவள் மனம் வேதனையில் ஒன்றித் தோய்ந்தது.

அவளுடைய ஆசை மகள் ஒருவனைக் காதலித்தாள். அவளை மற்றொருவனுக்குக் கட்டிக் கொடுத்து அனுப்பி விட்டார்கள். காதல் வாழ்வின் நிழல் இன்று அவளுடைய

குடும்ப வாழ்க்கையில் படியாமல் இருக்குமா? ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து, புது வாழ்க்கை வாழ முற்பட்டிருக்கிறாள் அவள். அந்தப் புதுவாழ்க்கையிலும் அதன் முன் நிகழ்ந்த காதல் வாழ்வின் அம்சங்கள் பிரதிபலிக்க மாட்டா என்று உறுதியாகக் கூறிவிட முடியுமா? இவற்றிற்கெல்லாம் மேலாக, அவள் யாருடைய கரம் பற்றிச் சென்றிருக்கிறாளோ, அவன் ஒன்றுமில்லாதவன்; வாழ்க்கை அவனுக்கு ஒன்றுமே கொடுக்கவில்லை. பழனி அவளை விரும்புவான் என்றோ, நேசிப்பான் என்றோ உறுதியாக எண்ண முடியுமா? சக்கி சொன்னாள்:

"எனக்கென்னமோ, என் மகளை ஒரு கதம்பையிலே உக்காரவெச்சு கடலிலே தள்ளிவிட்ட மாதிரித் தோணுது, மனசுக்கு."

"பரீக்குட்டி ஆறுதல் வார்த்தைகள் சொல்லிச் சக்கியைத் தேற்றினான்:

"அப்படியெல்லாம் நெனைக்காதே. பழனி உடம்பை வளைச்சு வேலெ செய்யிறவன். அவன் அவளைக் காப்பாத்துவான்."

அவன் வார்த்தைகளில் நம்பிக்கை பிறக்காத பாவனையில் சக்கி தலையசைத்தாள்.

"தம்பி, நீ கல்யாணம் பண்ணிக்கிட்டு, வியாபாரத்தையும் கவனிச்சுக்கிட்டு, சந்தோஷமா இருக்கணும்; எப்படியும் முன்னுக்கு வந்திரணும்."

இதே வார்த்தைகள் எந்தக்காலத்திலும் மறக்க முடியாதபடி, அத்தனை ஆழமாக அவன் மனத்தில் புதையுண்டு கிடந்து கொண்டுதான் இருந்தன. அன்று இரவு கறுத்தம்மாவும் இதே வார்த்தைகளைத்தான் கூறினாள். ஆனால், பரீக்குட்டி கறுத்தம்மாவிடம் சொன்ன பதிலைச் சக்கியிடம் சொல்லவில்லை.

"தம்பி, இனிமே நீ கறுத்தம்மாவுக்கு தொந்தரவு கொடுத்துக்கிட்டிராதே. அவளுக்குக் கல்யாணம் ஆயிப் போச்சு. அவளுக்குன்னு ஒரு மரக்கானும் வந்துட்டான். இனிமே அவளை விட்டிடு; பழையபடி தொந்தரவு பண்ணாதே."

பரீக்குட்டி திடுக்கிட்டுப் போனான். அசரீரி போல் அவ் வார்த்தைகள் அவன் காதில் புகுந்தன. சக்கி என்ன சொல்கிறாள்? அவளுடைய வாழ்வில் முன்போல் நீ குறுக்கிடக் கூடாது என்ற தடை உத்தரவு! ஆமாம்! அவள் சொல்வது அதுதான்! அல்லது எனக்குத்தான் அப்படித் தோன்றுகிறதோ? அல்லது வெறும் மயக்கம்தானோ? இல்லை. பரீக்குட்டி தன் செவிகளால் தெளிவாகக் கேட்ட விஷயம்தான்.

"பரீக்குட்டி, நீ கறுத்தம்மாவுக்கு உடன் பிறந்த அண்ணன் மாதிரி. அவளுக்குக் கூடப்பிறந்த அண்ணன் கிடையாது. நீதான் அவளுக்கு உடன் பிறப்பாயிருந்து எப்போதும் அவளை கவனிச்சுக்கிடணும்."

சக்கி தன் வாயால் இதை அவனிடம் சொன்னாள். இதில் சந்தேகத்துக்கு இடம் இல்லை. இதைத்தவிர மேலும் பல விஷயங்கள் சொன்னாள் அவள். செம்பன்குஞ்சு அவளைக் கைகழுவி விட்டான். அவள் அணுஅணுவாகச் செத்து மடிந்து கொண்டிருக்கிறாள். கறுத்தம்மாவையோ, வீடோ குடியோ இல்லாத அனாதையான ஒருவன் காலில் கட்டி அனுப்பி வைத்து விட்டான். இனிமேல் இந்த உலகில் அவளுக்கு வேறு யார்தான் துணை? வேறு யாருமில்லை, பரீக்குட்டியைத் தவிர! ஆமாம்; பரீக்குட்டி மட்டும்தான் இருக்கிறான். அவன் அவளிடம் கொண்டாட வேண்டிய உறவுமுறையையும் அவள் வரையறுத்துக் கூறிவிட்டாள். ஆமாம்; அவளுடைய சகோதரன்போல் நடந்து கொள்ள வேண்டும்.

சக்கி கேட்டாள்:

"பரீக்குட்டி, நீ இண்ணைக்கு மட்டுமில்லே, எண்ணைக்கும் கறுத்தம்மாவுக்கு அண்ணனாக இருக்கணும், ஆமாம்; அண்ணனாக மட்டும்தான் இருக்கணும்!"

பரீக்குட்டியின் கண்கள் துளும்பி கண்ணீர் பெருக்கெடுத்து ஓடிற்று. கண்ணீர்த் துளிகள் சொட்டுச் சொட்டாய் உதிர்ந்ததைச் சக்கியும் கவனித்தாள். ஒவ்வொரு துளிக் கண்ணீரும் கூறும் கதை என்ன என்பது சக்கிக்குத் தெரியும். மனம் ஏன் வெதும்புகிறது என்பதும், அதன் விளைவாக ஏன் கண்ணீர் ஆறாகப் பெருகுகிறது என்பதையும்கூட அவள் அறிவாள்.

அன்று நிகழ்ந்த காதல் வாழ்வைப் பற்றியும் பேச ஆரம் பித்தாள் சக்கி.

"தம்பி, உனக்கு கறுத்தம்மாகிட்டே ஆசை என்குதும் எனக்கு நல்லாத் தெரியும் பாத்துக்க. ஆனு, இனிமே நீ அவளே உன் தங்கச்சியா எண்ணிக்க. அதுதான் அன்புக்கு அடையாளம் பாத்துக்க. இல்லேயா? நான் சொல்லுது சரிதானெ?"

பரீக்குட்டியால் ஒரு வார்த்தைகூடப் பேசமுடியவில்லே. துக்கம் அவன் தொண்டையை அடைத்துவிட்டது. அவளிடம் சிறிதேனும் அன்பு கொண்டிருந்தால் அண்ணனுக நடந்து கொள்! அதுவும் சரிதான்!

பொழுது அமைதியாக நகர்ந்து கொண்டிருந்தது. சக்கி கேட்டாள்:

"தம்பி, நான் சொல்லுறது சரிதான்னு படுதா உனக்கு?"

ஒரு யந்திரம்போல் பதில் சொன்னுன் பரீக்குட்டி.

"சரிதான்."

"அப்படீன்னு நீங்க ரெண்டு பேரும் அண்ணனும் தங்கை யுமா காலத்தைக் கழிக்கணும்."

ஒரு நிமிஷ நேரத்திற்குப் பின், சக்கி மீண்டும் தொடர்ந்து பேசினுள்:

"அவ மட்டும் இப்பொ இங்கே இருந்தான்னு, இந்தச் சாகற வேளேயிலே அவகிட்டேயும் இதெச் சொல்லிப்புட்டுச் செத்துப் போவேன்."

இப்படியெல்லாம் சொன்ன பிறகும் திருப்தி பிறக்காமல் உணர்ச்சிவசப்பட்டு சக்கி மீண்டும் அவனிடம் மன்றுடத் தொடங்கினுள். அவளுடைய அண்ணன்போல் நடந்து கொள்ள வேண்டுமாம்! அவள் யாரும் இல்லாத அனுதையாகி விட்டாள் என்றுலும், உடனிருந்து அண்ணன்போல் அவளேக் கவனித்துக்கொள்ள வேண்டுமாம். ஒருகால் தான் இறந்து போகும் வரையிலும் அவள் வரவில்லே யென்றுல், தான் சொன்னதாக இந்த விஷயத்தை யெல்லாம் அவளிடம் சொல்லவேண்டுமென்று சக்கி, பரீக்குட்டியிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அதற்கும் பரீக்குட்டி தலேயசைத்தான். ஆனுல், அவன் அவ்வாறு சம்மதம் தெரிவித்தால் போதாது

என்றிருந்தது சக்கிக்கு. மீண்டும் மீண்டும் அதையே அவனிடம் பல தடவையாகச் சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.

அன்று இரவு கடற்கரையிலிருந்து பரீக்குட்டி பாடுவது சக்கியின் காதில் விழுந்தது.

இந்த நாட்களில் எல்லாம் எத்தனையோ துன்பங்கள் செம்பன்குஞ்சுவைச் சூழ்ந்து அவனைச் சங்கடத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தன. சேர்ந்தாற்போல் பல நாட்கள் தோணியில் அவனும் கடலுக்குச் செல்லவில்லை. போதிய மீன் கிடைக்காமல் இருந்ததற்குக்கூடக் காரணம் அதுதான் என்று அவன் எண்ணிக்கொண்டான். அதோடு மற்றொரு நஷ்டமும் விளைந்தது. காதர் முதலாளிக்குச் சரக்குக் கொடுத்த வகையில் அவனிடமிருந்து இன்னும் சிறிது பணம் வரவேண்டியதாக இருந்தது. ஒரு நாள் இரவு கடையில் இருந்த சாமான்களை யெல்லாம் சுருட்டிக்கொண்டு ஊரைவிட்டே ஓடிச் சென்று விட்டான் அவன். இதனாலும் செம்பன்குஞ்சுவுக்கு ஏற்பட்ட நஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

பழையபடி கடலுக்குச் செல்வது என்று முடிவு செய்து கொண்டான் அவன். எத்தனை நாட்கள்தான் சோம்பிக் கரையில் குந்திக்கொண்டிருப்பது! பழையபடி கடலுக்குச் செல்லுகிற தோணியின் முன்புறம் உட்கார்ந்து கொண்டிருந்தான் அவன். முன்போல் நின்று கொண்டிருக்க முடியவில்லை இப்போது. தோணிகூட பழைய சுறுசுறுப்பை இழந்துவிட்டது. முன்போல் அது குதித்துக் குதித்து முன்னேறிப் பாய்ந்து செல்லத் தயாராக இல்லை! துடுப்பு பிடிக்கிறவர்கள் என்னவோ முன்போல் துடுப்பு பிடிக்கத்தான் செய்கிறார்கள்! ஆனால், அவர்களுடைய வேகத்திற்கு அனுசரணையாகத் தன்னுடைய உடல் உழைப்பையும் கொடுக்கச் செம்பன்குஞ்சுவால் முடியவில்லை. அவன் கால்கள் சோர்ந்துபோய் விட்டனவா? நடுக்கம் கண்டுவிட்டதோ அவன் கால்களுக்கு? தோணியின் அகலம் குறைந்த விளிம்பு ஓரத்தில் முன்போல் கால் கட்டைவிரல்களை மட்டும் ஊன்றி நின்றுகொண்டிருக்கப் பயப்படுகிறானே அவன்? அப்படியானால் தோணியின் ஓட்டம் நாட்பட ஸ்தம்பித்து நின்றுவிடுமோ? மற்றத் தோணிகளைத் தோற்கடித்துப் பின்புறம் தள்ளிக்கொண்டு பறவை வேகத்தில் பாய்ந்து செல்

வதோ, மற்ற எல்லோரையும்விட அதிகச் சரக்கோடு கரை வந்து அடைவதோ இனிமேல் கனவிலும் எண்ணிப் பார்க்க முடியாத காரியங்கள்தாமோ? மற்றத் தோணிகளைப் போல் அவன் தோணியும் நத்தைபோல் ஊர்ந்துதான் செல்ல வேண்டுமோ? அவனுடைய தோணி அதி அற்புதமாய் முன்னேறிப் பாய்ந்து செல்லுகிற காட்சியைக் கடற்கரைவாசிகள் இனிமேல் எந்த நாளும் பார்க்கப் போவதில்லையா?

வழக்கமாகத் திரும்பும் நேரத்திற்குச் சற்று முன்னாலேயே கரையை நோக்கித் தோணியைச் செலுத்தச் சொன்னான் செம்பன்குஞ்சு. துடுப்புப் பிடிப்பவர்களுக்கு என்ன விஷயம் என்பது விளங்கவில்லை. ஒருவன் செம்பன்குஞ்சுவிடம் காரணத்தை ஆராய்ந்தான்.

"அட, சரிதான். போகலாம். இண்ணைக்கு இவ்வளவு போதும்."

'போதும்' என்ற வார்த்தை அன்று வரை அவன் வாயில் பிறந்தது இல்லையே!

தோணி கரையை நோக்கி வந்து கொண்டிருந்தபோது, துடுப்புக் கம்பில் கால் தடுக்கிக் கடலுக்குள் வீழ்ந்து விட்டான் செம்பன்குஞ்சு. துடுப்பு பிடிக்கும் வேலையாட்கள் அவனைத் தூக்கித் தோணிக்குள் போட்டுக்கொண்டனர். அன்று அதன் பின் அவன் தோணியின் முன்பக்கம் நகரவேயில்லை.

அன்று கடற்கரையில் செம்பன்குஞ்சு பேரம் பேசக்கூட இல்லை. கிடைத்த விலைக்குச் சரக்கைத் தள்ளிவிட்டான். வியாபாரம் முடிந்ததும், சோர்ந்துபோய் வீட்டை நோக்கித் தளர்நடையிட்டுச் சென்றான் அவன். சீரழிந்துபோன மனிதனின் தோற்றம் அப்படித்தான் இருக்கும்.

செம்பன்குஞ்சு மனத்தில் வளர்ந்துகொண்டிருந்த திட்டங்கள் சுக்குநூறாய் உடைந்துபோய் விட்டனவா? தன் தந்தை வரும் வழிபார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள் பஞ்சமி. அவள் அன்று அவனுக்குச் சோறாக்கி வைத்திருந்தாள். அவனுக்குப் பிரியமான கறிவகையும் பண்ணிவைத்திருந்தாள். அதே சமயம், வீட்டின் உட்புறமிருந்து ஹீனமான குரல் ஒன்று கேட்டது:

"பஞ்சமி, சோறு எடுத்துவை. அப்பா வராரு!"

பஞ்சமி சோறும், கறியும் எடுத்துவைத்தாள். அவன் தலையைத் தூக்காமல் நாலுவாய் அள்ளிப் போட்டுக்கொண்டதும், கையை உதறிவிட்டு எழுந்தான். முன்போல் அவன் இப்போது ருசிபார்த்து உண்ணவில்லை. ஏதோ கடனைக் கழிப்பதுபோல் அதைச் செய்து முடித்தான். அவன் எழுந்து சென்றபோது, வியப்புணர்ச்சியோடு பஞ்சமி சொன்னாள்:

"அம்மா, அப்பா சாப்பிடவே இல்லை!"

கை கழுவிவிட்டுச் சக்கி அருகே சென்றான் செம்பன்குஞ்சு. சக்கி, செம்பன்குஞ்சுவைக் கூர்ந்து நோக்கினாள். இருவர் கண்களும் துளும்பின.

வாழ்க்கையில் அன்று முதல்தடவையாக செம்பன்குஞ்சுவின் விழிகள் கண்ணீர் சொரிந்தன. சக்கி சொன்னாள்:

"நாம் என்ன செய்ய இருக்குது? எல்லாம் விதி. அவ்வளவுதான்."

செம்பன்குஞ்சு வாய்பேசாமல் கண்ணீரை விழுங்கித் தீர்த்தான். ஒரு சொட்டுக் கண்ணீர்கூடக் கீழே சிந்திவிடாமல் கண்ணீர் பொங்கப் பொங்க, அதைக் குடித்தான் அவன். இந்த அளவுக்காவது அவனிடம் மனவுறுதி இருந்தது பேராச்சரியம்தான்! அவன் கேட்டான்:

"சக்கி, உன்னாலே, எழுந்திருச்சு உட்காரக் கூட முடியலையா?"

"உம்......முடியலே......நானும் ஆனமட்டும் உட்காரணும்னு பாக்கறேன். முடியலே......என்ன செய்ய முடியும்?"

சிறிதுநேரம் அவன் மௌனமாக நின்றுகொண்டிருந்தான்.

"இனிமே நாம் என்ன செய்வோம்? எனக்கு ஒன்றும் தெரியலே!" என்று பிரலாபித்தான் அவன்.

அவள் காலம் சென்றபின் தனது வாழ்வு எப்படி இருக்கும் என்று அவன் எண்ணிப்பார்க்க ஆரம்பித்து விட்டான். அப்போது அவன் வாழ்வே சூனியமாகி விடும். அதில் ஓட்டம் இருக்காது. வாழ்வே தேங்கிப்போய் விடும். அவனுடைய கேள்விக்குச் சக்கியால் என்ன பதில் சொல்ல முடியும்?

செம்பன்குஞ்சு கட்டிலில் சக்கியின் அருகில் அமர்ந்து கொண்டான். தன் கணவன் தேக பலம் இழந்து சோர்ந்து

ஆடிப்போய் விட்டதைச் சக்கி கவனித்தாள். அன்று தனக்குக் கடலில் ஏற்பட்ட விபத்தை அவன் அவளிடம் சொன்னான்:

"என் கால் ஆட்டம் கண்டுவிட்டது" என்றான் அவன். தன் கணவனுக்கும் கடலில் விபத்து ஏற்படக் கூடும் என்று அன்றுவரை சக்கி மனத்தால்கூட எண்ணியது கிடையாது. அதுவும் அன்று நிகழ்ந்துவிட்டது. இன்னும் என்ன என்ன ஏற்படப் போகிறதோ?

"சக்கி, சொல்லு. இனி நான் என்ன செய்வேன்?"

திக்கற்ற குழந்தைபோல் அந்தக் கேள்வியையே மீண்டும் மீண்டும் எழுப்பிக் கேட்டுக்கொண்டிருந்தான் செம்பன்குஞ்சு. வேறு யாரிடம் இதைக் கேட்கமுடியும்? மேலும் இந்தக் கேள் விக்குப் பதில் சொல்லுவதற்கும் சக்கியைத் தவிர வேறு யாருக் கும்உரிமை உண்டு? அவனுடைய வாழ்க்கை தங்குதடையின்றி முன்னேறிச் செல்ல வேண்டுமென்றால், அவனுடன் அவளும் பக்கத் துணையாய் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டாமா? இப்போது அவளோ படுக்கையில் விழுந்து விட்டாள். அதோடு அவனது வாழ்க்கையும் களையிழந்து போய் விட்டது; ஒளியிழந்து சூனியமும் நிறைந்துவிட்டது. அவள் அருகே அமர்ந்து இருப்பவன் வாழ்க்கையில் தோல்வி கண்டவன்; வாழ்க்கைக் களத்தில் மண்ணைக் கவ்வி விட்டவன். அவன் கூனிக் குறுகி அவள் அருகில் ஒண்டிக்கொண்டிருக்கிறான்.

செம்பன்குஞ்சுவின் கரங்களைப் பற்றித் தனது மார்புமீது வைத்துக்கொண்டே சக்கி சொன்னாள்:

"நான் போயிட்டேன்னா, அப்புறம் என்ன செய்யப் போறே?"

செம்பன்குஞ்சு வாய்விட்டுக் கதறிவிட்டான்.

"அப்படியெல்லாம் பேசாதே, சக்கி. அப்புறம் நான் என்ன செய்வேன்?"

அவள் அவனது கரங்களை மேலும் இறுகப் பற்றிக் கொண்டாள். தனது மார்புடன் அவனது கைகளை அவள் அழுத்திக் கொண்டபோது இதயத் துடிப்பு அவனுடைய கையைத் தூக்கித் தள்ளியது.

அவள் அவனுடைய முகத்தைப் .பார்த்துக் கொண்டிருந் தாள். அப்போது அவள் வாயிலிருந்து அசரீரி போல் சில வார்த்தைகள் தெறித்தன!

"இன்னொருத்தியைக் கட்டிக்க!"

அவளே தனது வாயால் இவ்வார்த்தைகளைச் சொன்னாள். அவள் உடம்பு நடுங்கியது. வலிப்பு கண்டு விட்டது போல் அவளுடைய உடல் ஒரு பக்கமாக கோணி இழுத்தது. இதயத் துடிப்பும் அதன் வேகத்தை இழந்து விட்டது.

அப்போதும் சக்கி அவனுடைய முகத்திலிருந்து கண்களை அகற்றாமல் கூர்ந்து பார்த்துக்கொண்டுதான் இருந்தாள். செம்பன்குஞ்சு கேட்டான்:

"என்ன சொன்னே நீ? இன்னொருத்தியைக் கட்டிக்கிட ணும்னு?"

அதற்குப் பதில் பிறக்கவில்லை.

வாழ்க்கைத் துணைவியின்றிக் காலம் தள்ளுவது கடின மான காரியம் என்பது அவளுக்குத் தெரியும். அதற்கு ஒரு வழியும் அவள் அவனுக்குச் சொல்லிக் கொடுத்து விட்டாள். அன்றுவரை அவன் அவ்வாறு எண்ணியவன் அல்ல.

"ஏன் நீ பேசாமே இருக்கே?"

சக்கியின் கண்களைத் திரை மூடிக்கொண்டது. செம்பன் குஞ்சு பீதி உணர்ச்சியில் செத்துக்கொண்டிருந்தான். அவளை அவன் இரு கரங்களாலும் உசுப்பிப் பார்த்தான்.

"சக்கி!"

ஒரே அமைதி!

"சக்கி நீ என்னை விட்டுட்டுப் போயிட்டியா?"

சக்கியின் மார்பில் விழுந்தான் செம்பன்குஞ்சு. அவன் கையை அப்போதும் அவள் இறுகப் பற்றிக்கொண்டுதான் இருந்தாள்.

# 14

"இனிமே எனக்கு யாரும் இல்லையா!" என்று வாய் விட்டுக் கதறி அழுதாள் பஞ்சமி. நல்லபெண் ஆறுதல் சொல்லி அவளைத் தேற்றினாள். சக்கி பஞ்சமியை நல்ல பெண்ணின் கையில் ஒப்படைத்துவிட்டுக் கண்ணை மூடிவிட்டாள். நல்லபெண்ணும் நாலோடுகூட ஒன்று என்றுதான் எண்ணிக்கொண்டாள். ஆனால், பஞ்சமிக்கு அதனால் ஆறுதல் பிறந்து விடுமா?

சக்கியின்மேல் தலைசாய்த்துப் படுத்துக்கொண்டு கதறி அழுதுகொண் டிருந்த செம்பன்குஞ்சுவை, அச்சகுஞ்சுவும் நண்பர்களுமாகத் தூக்கிக்கொண்டு சென்றனர். தொடர்ந்து நடக்கவேண்டிய சடங்குகள் ஆரம்பமாக வேண்டாமா? கையோடு துறை அரயனுக்குச் செய்தி சொல்ல ஆள் அனுப்பி வைத்தனர். அவரும் வந்து சேர்ந்தார். கறுத்தம்மாவை அழைத்துவர யாரையேனும் அனுப்ப வேண்டாமா? கூட்டத்தில் ஒரு கேள்வி பிறந்தது:

"கறுத்தம்மாவைக் கூட்டிக்கிட்டு வர யாரையாவது அனுப்ப வேண்டாமா?"

துயரத்தில் ஆழ்ந்து கிடந்த செம்பன்குஞ்சுவின் காதிலும் இக் கேள்வி விழுந்தது.

"வேண்டாம்" என்று உரக்கக் கத்தினான் செம்பன்குஞ்சு.

சக்கியைக் கொன்றதே கறுத்தம்மாதான் என்பது செம்பன் குஞ்சுவின் தீர்மானம்.

இந்தப் பதில் அங்கே குழுமியிருந்த எல்லோரையும் அசதியில் ஆழ்த்திவிட்டது. அவன் கூறிய முடிவின் நன்மை தீமைகளையும் அவர்கள் மனத்தினுள் எண்ணிப் பார்த்துக்கொண்டனர். அதோடு இதுபற்றி முடிவாகத் துறை அரயன் என்ன சொல்லப் போகிறுரோ என்ற ஆதங்கமும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

துறை அரயன் தனது முடிவை வெளியிடலானுர்:

"பெத்த தாயார் மயக்கம் போட்டு கட்டையாக் கிடக்கிற வேளையிலேதானே அவ இறங்கிப் போனு? அப்போ எல்லாத்தையும் ஒரே அடியா அறுத்து எறிஞ்சுப்புட்டுத்தான் அவ போயிருக்கா. போயிட்டுப் போட்டும்."

கூடியிருந்த எல்லோரும் கல்யாண தினத்தன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து கொண்டனர். ஆனல், அவர்கள் இதயம் என்னவோ அப்போது சூனியமாகத்தான் இருந்தது.

பஞ்சமி மட்டும் அப்போது 'அக்கா' என்று கத்தி அழுது கொண்டிருந்தாள். இப்போது அக்காவைத்தவிர அவளுக்கு வேறு யார் இருக்கிறுர்கள்? ஆனல், அவள் அக்கா என்று கத்தியது யார் காதிலேனும் விழுந்ததா?

சவ அடக்கத்திற்கான ஏற்பாடுகள் எல்லாம் முடிந்து விட்டன.

அன்னிய மதத்தைச் சேர்ந்த பரீக்குட்டியோ கூட்டத்தில் ஒதுங்கி ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தான். சவ அடக்கம் கறுத்தம்மா இல்லாமலே நடந்தேற இருப்பதை எண்ணிய போது, அவன் மனத்தில் துக்கம் பெருக்கெடுத்தது. ஆனல், அவர்களுடைய சொந்த விஷயத்தில் குறுக்கிட அவனுக்கு என்ன உரிமை?

பாவம்! கறுத்தம்மா மிகவும் வருந்துவாள்! இனிமேல் என்றுவது ஒரு நாள் சந்திக்கிறபோது அவனைக் குறை சொல்லுவாள்! ரொம்பவும் குறைபட்டுக் கொள்வாள்.

"இருந்தாலும், முதலாளி, நீங்க எனக்கு ஒரு வார்த்தை சொல்லி அனுப்பாம இருந்திட்டிங்களே!"

அதோடு மட்டுமா? இப்போது பிணமாகக் கிடக்கிற சக்கி கூட அவனை மன்னிப்பாளா?

இந்த விஷயத்தில் தான் என்ன செய்ய முடியும் என்று தீர்க்கமாக யோசித்துக்கொண் டிருந்தான் பரீக்குட்டி. என்ன செய்ய வேண்டும் என்பது அவனுடைய புத்திக்கு எட்டவில்லை இப்போது அவன் கறுத்தம்மாவின் அண்ணன். அவனும் அவளைத் தங்கையாக ஏற்றுக்கொண்டுவிட்டான். கடைசி வரையிலும் அண்ணனுகவே இருக்கவும் போகிறுன் அவன்.

அன்று இரவு பரீக்குட்டியால் உறங்கவே முடியவில்லை. மையிருட்டில் அவன் எழுந்து உட்கார்ந்துகொண்டான். சிறிது நேரம் சென்றதும், என்ன தோன்றிற்றோ, கடையை இழுத்துப் பூட்டிவிட்டு வெளியே வந்தான்.

அவன் நடந்தான். ஏதோ ஒரு கதையைக் கடற்கரைக் காற்று முணுமுணுத்துக்கொண் டிருந்தது. அலைகளும் எதையோ சொல்லத் துடித்துக்கொண்டிருந்தன. 'பரீக்குட்டி நீ எங்கே போகிறுய்? திருக்குன்றப்புழைக்கா? எதற்கு? கறுத்தம்மாவிடம் சக்கி காலமானதைச் சொல்லவா? அதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது? யாராவது உன் முகத்தைப் பார்த்து இந்தக் கேள்விகளை எழுப்பிவிட்டால், என்ன பதில் சொல்ல முடியும் உன்னுல்?

கறுத்தம்மாவைச் சந்தித்த மாத்திரத்தில் என்ன சொல்லப் போகிறுய்?' இதுபோல் பலபல கேள்விகள் அவன் மனத்தில் எழுந்து அவனுக்குக் கடிவாளம் போட்டுப் பின்னுக்கு இழுத்தன. என்ருலும் அவன் தன் போக்கில் முன்னேறிச் சென்றுகொண்டுதான் இருந்தான். அவனுக்கு ஒரு தைரியம் உண்டு. அவன் கறுத்தம்மாவின் அண்ணன். அவளுடைய தாயார் அவனை அவளுக்கு அண்ணனுகி விட்டுச் சென்று விட்டாள். ஆனுல், அவள் அவனது தங்கையாக இருக்க உடன் படுவாளா?

கறுத்தம்மாவின் முன்னுல் சென்றுவிட்டால், அந்தச் சூழ் நிலையில் ஏதேனும விபரீதம் பிறந்துவிடுமோ? பரீக்குட்டி இதைப்பற்றி ஒருகணமேனும் எண்ணிப்பார்த்தானு?

பொழுது புலரும்வேளையில் பரீக்குட்டி திருக்குன்றப்புழைக் கடற்கரையை அடைந்துவிட்டான். சந்தர்ப்ப வசமாகத் தனது தோணியைப் பார்த்துச் சென்றுகொண்டிருந்த ஓர் அரயன்

அவனைச் சந்தித்தான். அவனிடம், "பழனி வீடு எங்கே?" என்று கேட்டுவைத்தான் பரீக்குட்டி. அந்த அரயனோ சாகரைப் பருவத்தில் நீர்க்குன்றம்கடற்கரைக்கு வந்து போயிருக்கிறவன். அவன் பரீக்குட்டியைத் தெரிந்து கொண்டு விட்டான்.

"ஆமாம்; சின்ன முதலாளி இப்போ எதுக்குப் பழனியைத் தேடுறீங்க?"

இந்தக் கேள்வி ஒருகணம் பரீக்குட்டியைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. பரீக்குட்டி சொன்னான்:

"பழனி மாமியாரு இறந்துபோயிட்டா."

இந்தச் செய்தி கொச்சுநாதனுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. அவனுக்குச் செம்பன்குஞ்சுவையும் சக்கியையும் தெரியும். அவன் சக்கியைப் புகழ்ந்து சில வார்த்தைகள் கூறினான். ஆனால், அதே சமயம் ஒரு தர்மசங்கடமான கேள்வி ஒன்றையும் பரீக்குட்டியைப் பார்த்துக் கேட்டான் அவன்.

"ஆமா, அவ செத்துப் போயிட்ட சமாசாரம் சொல்லு துக்கு நீ ஏன் வந்தே? அந்தத் துறையிலே அரயங்க இல்லையா?"

பரீக்குட்டி தன் மனத்தினுள் ஏற்கெனவே எழுப்பிக் கொண்ட கேள்விதான் அது. தனது மனதுக்குச் சமாதானம் தேடிக்கொள்ள அவனே ஒரு பதிலையும் கண்டுபிடித்து வைத்துக்கொண்டிருந்தான். ஆனால் மூன்றாவது ஆசாமி ஒருவன் இதை அவனிடம் கேட்பான் என்றோ, அதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலை ஒன்று உருவாகும் என்றோ அவன் எதிர்பார்க்கவில்லை. என்றாலும், அவன் பதில் சொல்ல ஆரம்பித்தான்:

"பழனிக்கும் அவன் பெஞ்சாதிக்கும் இந்த சமாசாரத்தை தெரிவிக்கவே வேண்டாம்னு தீர்மானிச்சுட்டாங்க அவங்க. அதனால்தான் சொல்லிபுட்டுப் போகலாமேன்னு நான் வந்தேன்."

சக்கி காலமானதற்குப்பின் அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பரீக்குட்டி ஒவ்வொன்றாக வருணித்தான். இத்தனை விஷயங்களை அவன் விவரித்த பின்பும், கொச்சுநாதனுடைய கேள்வி அப்போதும் பதில் கிடைக்காத கேள்வியாகத்தான் இருந்தது.

"அப்படியே இருந்தாலும் அதுக்காக இந்த நட்ட நிசியிலே நீ வரணுமா?"

இந்தக் கேள்விக்கு ஒரு பதில்தான் உண்டு. பரீக்குட்டி கறுத்தம்மாவின் அண்ணன் ஆகிவிட்டான் என்ற விஷயம் தான் அது. ஆனால், இப்போது அவன் அதைச் சொல்ல ஆரம்பித்தால், அதற்கு முன் நிகழ்ந்த கதைகளையும் சொல்லும் படி ஆகிவிடும். அந்நிய மதத்தைச் சேர்ந்த ஒருவன் ஓர் அரயப் பெண்ணுக்கு எவ்வாறு அண்ணனாக இருக்கமுடியும்? சக்கி அவனைக் கறுத்தம்மாவின் அண்ணனாக ஏற்றுக் கூறக் காரணம் என்ன? தக்க பதில் கிடைக்காமல் தவித்தான் பரீக்குட்டி. முடிவில், அவன் ஒரு சமாதானம் கூறினான். கறுத்தம்மாவின் தந்தையின் கல்மனம் தனது மனத்தைப் புண்படுத்தியதாகவும், கறுத்தம்மாவுக்காக இரங்கி இந்தச் சமாசாரத்தைச் சொல்லி விட்டுச் சென்றுவிடுவது என்ற தீர்மானத்தில் வந்ததாகவும் சொன்னான். இந்த விஷயத்தை மீண்டும் மீண்டும் சவிஸ்தார மாகச் சொல்லிக்கொண்டே இருந்தான் அவன். கொச்சுநாதன் அவனுடைய பேச்சை நம்பினானோ? அவன், பழனியின் வீட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

கறுத்தம்மாவிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? விஷயத்தை அப்படியே பட்டென்று உடைத்துவிடுவதா? எல்லாவற்றையும் சொல்லி எப்படி அவளைப் புரியவைப்பது?

தோணிகள் எல்லாம் கடலுக்குச் சென்று விட்டன. பரீக்குட்டி கறுத்தம்மாவின் வீட்டின் முன்புறம் வந்து நின்றான். அந்தச் சின்னஞ் சிறு குடிசை நிசப்தத்தில் ஆழ்ந்து கிடந்தது.

வாய்திறந்து பேசமுடியாமல் பரீக்குட்டியின் நாவும் உதடும் வறண்டுபோய் விட்டன. தொண்டையில் ஈரப்பசை என்பதே இல்லை. நீண்ட நேரம் அவன் அப்படியே நின்று கொண்டிருந்தான். தன்னுணர்வு இன்றியே 'கறுத்தம்மா' என்ற பெயர், அவனுடைய தொண்டையில் நின்று வெளிப் பட்டது.

உள்ளே இருந்து எந்தக் குரலும் கேட்கவில்லை.

அவன் மீண்டும் ஒரு தடவை கூப்பிட்டுப் பார்த்தான்.

"யாரது?"

இந்தக் கேள்வி வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தது. அது கறுத்தம்மாவின் குரல்தான் என்பதைப் பரீக்குட்டி தெரிந்து கொண்டான்.

"கறுத்தம்மா, நான்தான்!" என்முன் அவன்.

"நானுன்னு சொன்னு யாரு?"

"என்னைத் தெரியலையா உனக்கு?"

"யாரு?"

"நான்......நான்தான்......பரீக்குட்டி......"

நிசப்தம்!

நீண்ட நேரம் ஒரே அமைதி. அது இருவரது உள்ளங்களையும் அழுத்திக் கொண்டிருந்தது.

"கறுந்தம்மா, ஒரு முக்கிய சமாசாரம் சொல்லிப் புட்டுப் போகலாமுன்னு வந்தேன்."

பொருமி அழுதவாறு கரகரத்த குரலில் கறுத்தம்மா கேட்டாள்:

"ஊரைவிட்டு ஓடிவந்தாலும் ஒரு பக்கத்திலே ஒதுங்கி சமாதனமா வாழ விடமாட்டே போலிருக்குது......"

கண நேரத்திற்குப் பின் தொடர்ந்து பேசினுள் அவள்:

"மாட்டேன்......நான் திறக்கப் போறதில்லே. உன்னை நான் பார்க்க வேண்டாம்."

அழுதுகொண்டே இதைச் சொன்னுள் அவள். அவளுடைய ஒவ்வொரு சொல்லும் பரீக்குட்டியின் மனத்தைப் பிளந்தன. ஒருவிதத்தில் அவள் சொன்னதும் சரிதான். அவள் தன்னைக் காத்துக்கொள்ள எண்ணுகிருள். அவ்வளவு தானே? அவள் ஊரை விட்டு ஓடிவந்த பின்னராவது அமைதியாக வாழவிட வேண்டாமா? ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அப்படியே திரும்பிச் சென்றுவிடுவோமா என்றுகூட அவன் எண்ணினுன். அல்லது அவள் உள்ளேயிருக்கிற போதே வெளியே நின்று விஷயத்தைச் சொல்லிவிட்டுச் சென்று விடலாமா? எடுத்த எடுப்பில் பட்டென்று சொல்லி விடக் கூடிய விஷயமா அது? பரீக்குட்டி அவளிடம் கதவைத் திறக்க வேண்டும் என்முன் மீண்டும்.

"கறுத்தம்மா, உனக்கு என்னைத் தெரியாதா என்ன?"

தாங்க முடியாத உணர்ச்சிப் பெருக்கில் பல்லை நறநற வென்று கடித்தவாறு அவள் சொன்னாள்:

"நல்லாத் தெரியும்."

"பின் ஏன் வெளியிலே வரமாட்டேன்னு சொல்லுதே?"

அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

"நான் இண்ணைக்கும் அந்தப் பழைய பரீக்குட்டிதான், ஆமா. கறுத்தம்மா, இண்ணைக்கு உனக்கு ஒரு மரக்கான் உண்டு எங்கிறதும் எனக்குத் தெரியும்."

வேறு வழியின்றி அவள் தீர்மானமான குரலில் சொன்னாள்:

"பார்க்க முடியாது."

என்ன காரணத்தாலோ அப்போது பரீக்குட்டியின் மனத்தில் ஒரு புதிய தெம்பு பிறந்தது.

"ஒரே அடியா அப்படிச் சொல்லிப்புடாதே! இன்னும் எத்தனையோ வாட்டி நாம சந்திக்க வேண்டி இருக்குது. நேருக்கு நேராகப் பாத்துப் பேச எவ்வளவோ இருக்குது. உன் முகத்தைப் பார்த்து எவ்வளவோ சொல்லி ஆகணும்......"

"ஐயோ! வேண்டாம். அவரு கடலுக்குப் போயிருக்கிற நேரம். புயலும் அலையும் பேயாட்டம் ஆடுற கடல்!"

மீண்டும் ஒரே அமைதி!

"கறுத்தம்மா!"

கறுத்தம்மாவிற்கும் என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. வேறு வழியின்றி, "என்ன?" என்று கேட்டாள் அவள்.

"இந்தாப்பாரு, இப்போ நான் உனக்கு அண்ணன்."

"அண்ணனா?"

அவளோடு அவன் கொண்டிருந்த ஆழமான பந்தத்தை அறுத்துக் கொள்ளாமலே, அதற்கு வேறு பெயரிட்டு அழைக்கும் வாய்ப்புக் கிடைத்துவிட்டது. தண்ணீரில் மூழ்கி உயிர் துறக்க இருக்கிறவனுக்குச் சிறு துரும்பு ஒன்று அகப்பட்டாற் போல், இந்த உறவு முறை அவனுக்குப் பெரிதும் சமாதானத்தைத் தேடிக் கொடுத்தது. பரீக்குட்டி சொன்னான்:

"ஆமாம் தங்கச்சி, ஆமாம். இப்போ நான் உனக்கு அண்ணன். உனக்கு உடன் பிறந்த அண்ணன் உண்டா?"

''கிடையாது.''

''அப்படியானு என்னை அண்ணன்னு வாய்விட்டுக் கூப்பிடு. உங்க அம்மாதான் சொன்னு, நான் உன்னைச் சொந்தத் தங்கச்சியாப் பாத்துக்கிடணும், அப்டீனு.''

''எங்கம்மாவா?''

''உங்க அம்மாவேதான். கதவைத் திற. சொல்லுறேன்.''

விளக்கை ஏற்றி வைத்துவிட்டுக் கதவைத் திறந்து கொண்டு கறுத்தம்மா வெளியே வந்தாள்.

முக்கியமான அந்தச் சமாசாரத்தை எவ்வாறு அவன் அவளுக்குக் கூறப்போகிறுன்? ஆனுல், ரத்தினச் சுருக்கமாக ஒரு அஸ்திரம் போல் அது அவன் வாயிலிருந்து வெளிப்பட்டது.

''கறுத்தம்மா, சக்கி செத்துப் போயிட்டா!''

'ஓ' என்று உரக்கக் கத்தினுள் கறுத்தம்மா.

அக்கம் பக்கத்துப் பெண்கள் எல்லோரும் வந்து கூடுவதற்கு முன்னர், பரீக்குட்டி அங்கிருந்து சென்றுவிட்டான்.

அயல் வீட்டுப் பெண்கள் கறுத்தம்மாவுக்கு ஆறுதல் சொல்லித் தேற்ற முயன்றனர். ஆனுல், அவர்களாலேயே அந்தச் செய்தியை நம்ப முடியவில்லை. தாங்க முடியாத துயரத்தில் அரற்றிக்கொண்டிருந்தாலும், கறுத்தம்மா அந்தச் செய்தியைத் தனக்குத் தெரிவித்தது யார் என்பதைச் சொல்லவில்லை. அவள் ஏதோ கனவு கண்டு புலம்புகிறுள் என்றுகூடச் சில பெண்கள் சொன்னுர்கள்.

பொழுது நகர்ந்து கொண்டிருந்தது. கறுத்தம்மா கண்ணீரை ஆருகப் பெருக்கி அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். இப்போது அவள் மனத்தில் புதிய யோசனைகளும் எண்ணங்களும் தலைகாட்டின. அவளே அந்தச் செய்தியை நம்பாமல் இருக்க முயன்றுள். உள்ளூர ஓர் அவநம்பிக்கை தோன்றியது. ஒரு சமயம் இது தோல்வி கண்டு ஏமாற்றம் அடைந்துவிட்ட காதலன் உள்ளத்தில் முளைத்த விஷமச் செயலாகவும் இருக்குமோ? சக்கி இறந்துபோனது உண்மையென்றுல், அதை அறிவிக்க ஆள் அனுப்பி வைத்திருக்க மாட்டார்களா?

பழனி கடலுக்குச் சென்றிருந்தான். அவன் திரும்பி வந்ததும் அவனுக்குச் சோறு போடவேண்டும். ஒரு மனைவியின் கடமையுணர்வு உந்தவே அவள் மீண்டும் வீட்டு வேலைகளைக்

கவனிப்பதில் முனைந்தாள். எப்படியோ குழம்பும், ஒரு கறியும் பண்ணி முடித்தாள்.

யாராவது நேரில் வந்து சேருவார்கள் என்று ஒவ்வொரு கணமும் அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்று பொழுதோடு கரைவந்து சேர்ந்தான், பழனி. அவனைக் கண்டதும் வாய்விட்டு அழுதுகொண்டே சொன்னாள் கறுத்தம்மா:

"எங்கம்மா செத்துப் போயிட்டாங்க."

அந்தப் பேச்சை அவன் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. அன்றுவரை கண்டிராத முகபாவத்தைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள் கறுத்தம்மா.

"நான்தான் எங்க அம்மாவைக் கொன்னுப்புட்டேன்" என்றாள் அவள் அழுதுகொண்டே.

அவளிடம் சற்றும் இரக்கம் காட்டவில்லை பழனி.

"யாரு வந்து சொன்னது?" என்று கேட்டான் அவன்.

கறுத்தம்மா சட்டென்று பதில் சொல்ல முடியாமல் திணறினாள். அவன் அவளுடைய முகத்தையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

"சின்ன முதலாளி!"

"அவன் எங்கே இப்போ?"

"சொன்னான். அவ்வளவுதான். அப்புறம் ஆளையே காணோம்."

பழனி, வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறானே, அதற்கு என்ன பொருள்? பரீக்குட்டி வந்தான் என்பதில் கோபமா? அல்லது அவர்கள் மரணச் செய்தியைச் சம்பிரதாயப்படி சொல்லி அனுப்பவில்லை என்பதாலா? பழனி கேட்டான்:

"அந்தத் துலுக்கப் பயலை உங்க அப்பனா அனுப்பி வைச்சிருக்கான்?"

கறுத்தம்மாவால் இந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல முடியவில்லை. பழனி கோபமாகக் கேட்டான்:

"இந்த விஷயத்தைச் சொல்லி அனுப்புவதுக்கு, அந்தத் துறையிலே மரக்காப் புள்ளைக யாரும் கிடையாதோ?"

அவள் என்ன பதில் சொல்வாள்? அதோடு சம்பிரதாய விஷயங்களை எண்ணிக்கொண்டிருக்க வேண்டிய நேரமா அது? பழனியின் மனத்தில் ஓர் அபிப்பிராயம் புகுந்துகொண்டு விட்டது. அவன் என்ன எண்ணிக்கொண்டிருக்கிறான் என்பதை அவளால் அனுமானிக்க முடியவில்லை. ஆனால்' ஒரு விஷயத்தைச் சொல்லாமல் இருக்க முடியாது அவளால்.

''நாம புறப்பட்டுப் போகணும்.''

''எங்கே?''

''நீர்க்குன்றத்துக்கு.''

வெகு அலட்சியமாக உதட்டைப் பிதுக்கினான் பழனி. அதற்கு என்ன பொருள்? அவன் புறப்படத் தயாராக இல்லை என்பதுதானே?

''என்னைப் பெத்தெடுத்த தாயார் இறந்து போயிட்டா.'

பழனி அப்போதும் அசைந்து கொடுக்கவில்லை. தன் அம்மா அவனைப் பெற்ற பிள்ளையாக நேசித்ததைக் கறுத்தம்மா சொன்னாள். சொல்லப்போனால் சக்கி எவ்விதத் தவறும் இழைக்காதவள்; நிரபராதி. நடந்துபோன நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் காரணம் செம்பன்குஞ்சுதான். அதோடு, மற்றொரு முக்கியமான விஷயத்தையும் அவன் தெரிந்துகொள்ள வேண்டும். அன்று தாயார் சொன்ன சொல்லின் பலத்தால் தான், அவள் அவனுடன் வீட்டைத் துறந்துவர முடிந்தது. அவள் சொன்னாள்:

''கடல்தாய் சத்தியமாச் சொல்றேன். அண்ணைக்கு நான் வீட்டைவிட்டு வருதுக்குத் தயங்கிக்கிட்டு நின்னப்போ, அம்மா தான் 'போ'ன்னு சொல்லி அனுப்பி வைச்சாங்க. போயிட்டு வந்துடுவோம்.''

அவனது கால்களில் விழுந்து கெஞ்சினாள் அவள். அவனோ சிலைபோல் நின்றுகொண்டிருந்தான்.

தாய்மை என்றால் என்ன என்பதைப் பழனிக்குக் காட்டிக் கொடுத்தவளே சக்கிதான். அவள் இப்போது கண்ணை மூடிவிட்டாள். இந்த நிகழ்ச்சி அவன் மனத்தைத் தொடாமல் இருக்க முடியுமா? தொட்டுத்தான் இருக்கவேண்டும். அவன்

மனத்தின் ஆழத்திலிருந்து எழுந்த ஒரு விஷயத்தை வெளியிட்டான்:

"என்னை எல்லாருமா கரையிலே இறக்கிவிட்டுப்புட்டாங்க."

"நீர்க்குன்றத்துக்குப் போகவேண்டி யிருக்குதுன்னு தானே?"

"அவங்க என்னமோ அப்படித்தான் சொல்லிக்கிட்டாங்க. ஆனு, உண்மை அது இல்லே."

"வேறு என்ன காரணம்?"

ஒரு நிமிஷ நேரத்துக்குப் பின் பழனி சொன்னுன்:

"அவன் வந்ததெ கொச்சுநாதன் பாத்தானும். இதுக்கு முந்தியே பப்பு கடற்கரையிலே எல்லாருகிட்டையும் என்னென்னமோ சொல்லிக்கிட்டுத்தான் இருந்தான். அப்போ......... அப்போ......"

தொண்டை இடறவே, அவன் பேசுவதை நடுவில் நிறுத்திக்கொண்டான். ஒரு முறை கனைத்துவிட்டு மீண்டும் அவன் தொடர்ந்து சொன்னுன்:

"அவங்களுக்கு எல்லாம் குழந்தை குட்டிக இல்லையா? அதுதான் என்னைக் கரையிலே விட்டுப்போட்டுப் போயிட்டாங்க."

மின்வெட்டுப்போல் கறுத்தம்மாவிற்கு எல்லாம் புரிந்துவிட்டது. இதுவும் இந்தச் சந்தர்ப்பத்திலா நிகழ்ந்திருக்க வேண்டும்? ஒரு கேள்வி அவள் மனத்தை அரித்துக்கொண்டிருந்தது. அதற்குப் பதில் தெரிந்துகொள்ளத் துடித்தாள் அவள்.

"என்மேலே சந்தேகமா?"

சந்தேகம்தான் என்ருே, இல்லே என்ருே அவனுல் சொல்ல முடியவில்லே.

"இங்கே வந்து இதைச் சொல்லிப்புட்டு எங்கே தொலைஞ்சு போயிட்டான் அந்தத் துலுக்கன்? நாந்துக் கிட்டுச் சாகவா?"

"அப்புறம் அவனைக் காணவே இல்லே."

"எதுக்கு அவன் இங்கே வந்து தொலைஞ்சானும்?"

சகல விஷயங்களையும் மனம் திறந்து அப்பட்டமாகச் சொல்லவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. ஒன்று பாக்கி யில்லாமல் அத்தனையும் சொல்லிவிட முடியுமா என்ன? சொல்லிவிடலாம். வார்த்தைகள் முன்வந்து நின்று கைலாகு தரவேண்டும். பழனி கேட்டான்:

"அவன் வந்து என்ன சொல்லிப்புட்டுப் போனான்?"

"அம்மா செத்துப் போயிட்டாங்களாம்."

கறுத்தம்மாவின் குடும்பத்தின் எதிர்காலம் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்தது.

இதே சமயம் கடற்கரை எங்கும் இந்தச் செய்தி பரவி விட்டது. பலர் பலவிதமாகப் பேசவும் முற்பட்டனர். சக்கி இறந்துபோனது உண்மையாகவே இருக்கலாம். ஏனெனில், அவள் படுக்கையில் விழுந்த விஷயம் ஏற்கெனவே எல்லோரும் அறிந்திருந்த ஒன்றுதான். அவள் பிழைப்பதுகூடச் சந்தேகம் என்றுதான் அவர்களும் எண்ணிக்கொண்டிருந்தனர். இருந் தாலும், அந்நிய மதத்தைச் சேர்ந்த ஒருவன் வரவேண்டுமா இந்தச் செய்தியைத் தெரிவிக்க?

கொச்சுநாதன் சொன்னான்:

"அவன் என்னமோ, பதறிப் பதறிப் பேசுதான். அதையும் நான் கவனிச்சுக்கிட்டேன்."

பப்பு ஒருபடி மேலே சென்று பேச ஆரம்பித்தான்: "நீர்க் குன்றத்துக் கடற்கரை ஓரத்தில் அவனும் அவளும் இரவு பகலில்லாம ஓடியாடித் திரிவாங்களாம்."

"ராத்திரி அவன் தோணியிலே உக்காந்து பாடுவான். உடனே இவ வீட்டைவிட்டு ஓடி வந்திடுவா. இதை மனசிலே வைச்சுககிட்டுத்தான், நான் கலியாணத் தண்ணைக்கே சண்டை போட்டேன்."

ஏதோ வெற்றி வாகை சூடிய பெருமிதத்தோடு இதைச் சொன்னான் பப்பு.

ஆனால், ஒரு விஷயத்தை எண்ணி எல்லோரும் மனம் வருந் தினர். பழனி பரம சாது. இந்தத் துரதிருஷ்டம் அவனுக்கு நேர்ந்திருக்கவேண்டாம். இவளா அவனுக்கு வந்து வாய்க்க வேண்டும்!

"அதெல்லாம் சரி. இனிமே நாம என்னமா பழனியைத் தோணியிலே ஏத்திக்கிட்டுப் போகமுடியும்?" என்று புதிய ஆசாமி ஒருவன் கேட்டான்.

அந்தக் கேள்வியின் உட்பொருள் எல்லோருக்குமே தெரியும். பழனியின் வீட்டில் சுத்தம் இல்லை. இந்த நிலையில் தோணியில் வந்தால், எந்த நேரத்திலும் ஏதாவது விபத்து நேர்ந்து விடலாம்.

வேலாயுதம் கேட்டான்:

"அவன் வீட்டிலே சுத்தம் இல்லேன்னு யார் சொன்னது?"

ஆண்டியும் வேலாயுதம் கட்சியில் சேர்ந்துகொண்டு பேசினான். இதே பிரச்னையைக் கிளப்பிய குமாரனைப் பார்த்து ஆண்டி கேட்டான்:

"உனக்கு உறுதியாச்சொல்ல முடியுமான்னு கேக்கறேன்? யாருக்கு வீடெல்லாம் சுத்தமாய் இருக்குன்னு யாரால்தான் சொல்ல முடியும்?"

அவ்வளவு தூரம் அடியைப் பிடித்து ஆராய்ச்சி செய்ய யாரும் தயாராக இல்லை. ஏதோ இதுவரையிலும் வீடு சுத்தமாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது என்று நம்பலாம். ஏனெனில், இன்றுவரையிலும் யாதொரு விபத்தும் நேரவில்லையே! அது ஒன்றே போதும். ஆனால், எல்லோருக்கும் ஒரு சந்தேகம். அன்றொரு நாள் பழனி முரட்டுத்தனமாகத் தோணியை நடுக்கடலுக்குச் செலுத்திக்கொண்டு சென்றானே, எவ்வளவு ஆபத்தான செய்கை அது! புத்தி தடுமாறிப்போனதால்தானே அவ்வாறு நடந்துகொண்டான் அவன்? பப்பு, இப்போது ஊரெங்கும் பரப்பித் திரிகிறானே, அந்தச் செய்திதான் எத்தனை பயங்கரமானது? அதே சமயம் அவள் மிகவும் நல்லவள் தான் என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

குமாருவைத் தவிர மற்ற எல்லோரும் பழனியின் வீடு இன்றுவரை சுத்தமாகத்தான் இருக்கிறது என்றும், அதனால் ஆபத்து ஒன்றும் வருவதற்கு இல்லை என்றும் நம்ப முயன்றனர் குமாரு புதிய பிரச்னை ஒன்றைக் கிளப்பிப் பேசினான்:

"மரக்கான் வீட்டிலே ஒரு சாவு நடந்து போச்சுன்னு அதைச் சொல்ல அடுத்த மதத்துக்காரனையா அனுப்பி வைப்பாங்கன்னு கேக்கறேன்? அதுவும் விடியத்துக்கு முன்னாலே தான் அதைச் சொல்ல வரணுமோ?"

இந்தக் கேள்வி பழையபடி எல்லோருடைய மனதையும் குழப்பி அடித்துவிட்டது. எல்லோருக்கும் பழனியிடம் மிகுந்த அனுதாபம் ஏற்பட்டது.

பழனியின் வீடு அமைதியை இழந்துவிட்டது மட்டுமல்ல, அதே நிலைமை தொடர்ந்து நீடித்தும் வந்தது. குறைந்தபட்சம் ஊர் சென்று தாயின் பிணத்தைக் கண்ணால் பார்ப்பதற்கேனும், அந்தப் பிணத்தின் மீது விழுந்து மன்னிப்புக் கேட்டு அழுது புலம்புவதற்கேனும் சந்தர்ப்பம் தரவேண்டும் என்று கெஞ்சாதவண்ணம் கெஞ்சினாள் கறுத்தம்மா. ஒரு மனைவிக்குரிய உரிமைகளைக் கிளப்பிப் பேசவில்லை. அவள் மனத்தைப் பிழிந்துகொண்டிருக்கும் கொடிய துயரத்தை எண்ணியாவது சம்மதம் தரவேண்டும் என்பதே அவளுடைய வேண்டுகோள். அவனோ வாய்திறந்து ஒரு வார்த்தைகூட உதிர்த்து விடவில்லை.

அவள் கேட்டாள்:

"என்மேலே நம்பிக்கைதானே?"

அவன் சொன்னான்:

"நம்பத்தான் செய்கிறேன்."

பழனிக்கும் சில புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. 'நம்புகிறேன்' என்று அவன் சொன்னதிலிருந்தே இந்த எண்ணம் தெளிவாக வெளியாகியது. அவளும் மனம்விட்டு அத்தனை விஷயங்களையும் சொல்லத் தயாராகத்தான் இருந்தாள். எதையும் மறைத்து வைக்கவேண்டும் என்ற உத்தேசம் இருக்கவில்லை அவளுக்கு. ஆனால், மனத்தில் இருந்ததையெல்லாம் வாய்விட்டுச் சொல்வதற்கு அவளுக்கு மனத்தெம்பில்லை. அதற்கான தைரியமும் இல்லை. கறுத்தம்மா விலை மதிக்க முடியாத செல்வத்தை, தனது அருமைத் தாயை இழந்துவிட்டாள். தாங்கமுடியாத பெரும் நஷ்டம்தான் இது. அந்த நஷ்டம் எத்தனை பெரிது என்பதைப் பழனியால் உணர்ந்துகொள்ள முடியுமா? சக்கி

யின் மரணத்தையோ அல்லது இந்த உலகிலுள்ள வேறு எந்தத் தாயின் மரணத்தையோ பழனியால் உணர்ந்து கொள்ள முடியுமா? முடியாது என்றுதான் சொல்லவேண்டும். அவனுடைய மனத்துக்கு அதை வாங்கிக்கொள்ளத் தெரியாது தான். என்ன செய்யவேண்டும் என்பதே கறுத்தம்மாவிற்குத் தட்டுப்படவில்லை. அழுது புலம்பிக்கொண்டிருந்தாள் அவள். ஒரே ஒரு வழி அவள் மனத்தில் பளிச்சிட்டது. தனியாகச் சென்று வருவதற்கேனும் அவன் சம்மதம் தரவேண்டும்; அன்றே திரும்பிவந்து விடுவாள் அவள். இதைச் சொன்ன போதும், பழனி தெளிவாகப் பதில் கூறவில்லை. கணவன் உறவை அறுத்துக்கொண்டு ஓடிச் சென்றுவிட்டால் என்ன என்றுகூட அவளுக்குத் தோன்ற ஆரம்பித்து விட்டது. அப்படிச் செய்துவிட்டால் அதன் விளைவு எப்படியிருக்கும்? மீண்டும் அங்கு வருவது சாத்தியமில்லை என்றாகி விடும். அவ்வளவுதானே?

அப்படிச் செய்யத் தயாராக இல்லை அவள். அவள் மரக்காத்திப் பெண்ணாகப் பிறந்தாள். மரக்காத்தியாக மடிய வும் விரும்புகிறாள். மறைந்துபோன அவளது தாயின் அபி லாஷையும் அதேதான். கணவனுடைய பாதங்களை இறுகப் பற்றியபடியே கடைசி மூச்சை விடவேண்டும். அவளுடைய தகப்பனார், தாய் இறந்துபோன செய்தியைக்கூட அவளுக்கு அறிவிக்கவில்லை. அவர் பழையபடி அவளை ஏற்றுக்கொள் வார் என்று எண்ணுவது வெறும் முட்டாள்தனம். பழையபடி அந்த உறவுக்கு உரிமை கொண்டாடவும் அருகதையில்லை அவளுக்கு. தகப்பன் பேச்சைத் தட்டிவிட்டு அவரோடுதான் கொண்டிருந்த பந்தத்தையும், அறுத்தெறிந்து விட்டு, கணவனது கரங்களைப் பற்றிக்கொண்டு ஊரைவிட்டே வெளி யேறி வந்தவள் அவள். அந்தக் குடிசையிலேயே நாளைத் தள்ளி வாழ்வை முடித்துக்கொண்டு விடுவாள் அவள்.

கறுத்தம்மா பஞ்சமியை நினைத்துக் கொண்டாள். 'அக்கா' என்று தீனக்குரல் எழுப்பி அவள் அலறுவது அவள் காதுக்குக் கேட்டது.

கடற்கரை உப்பு மணலில் தாயைப் புதைக்கிறபோது, நிர்க்கதியாய், அனாதரவாய் நின்று அழுதுகொண்டிருக்கிறாள்

அவள். இனிமேல் அவள் துணை ஏதும் இன்றி ஏகாந்தமாகக் காலம் தள்ளவேண்டும்!

அந்தக் கடற்கரையில் பரீக்குட்டிகள் தோன்றத்தானே செய்வார்கள்?

பழனியின் பார்வை எங்கோ தூரத்தொலையில் நிலைகுத்தி நின்றுகொண்டிருந்தது. மனச்சாந்தியை அறவே இழந்து தவித்துக்கொண்டிருந்தான் அவன். அன்றுவரை துன்பம் என்பதையே அனுபவித்து அறியாதவன் அவன். படுத்த இடம் சிவலோகமாகத்தான் இருந்துவந்தது அவனுக்கு.

கறுத்தம்மா அவன் அருகே சென்றாள்:

''சாப்பிட வேண்டாமா?''

அவன் சொன்னான்:

''எனக்குப் பசியே இல்லை.''

''ஏன்?''

அவன் பதிலுக்குக் கேட்டான்:

''அந்தத் துலுக்கன் எதுக்கு வந்துப்புட்டுப் போனான்? அதைச் சொல்லு.''

''கறுத்தம்மா உண்மையைச் சொல்லிவிட்டாள்:

''எதுக்கு வந்தான்னு கேட்டா என்ன சொல்ல...... என்னைக் கெடுக்கிறதுக்கு...... வேறு எதுக்கு?''

தனது நிலைமையைச் சமாளிக்க அவள் வெகுவாக முயன்றாள். அதற்கேனும் அவளுக்கு மனத்தெம்பு இருந்தது பெரிய விஷயம்தான். பழனிக்கு மட்டும் அது இல்லையா என்ன? பழனி கேட்டான்:

''கறுத்தம்மா, அவன் யாரு?''

அவன் கேட்ட கேள்வியின் முழுப்பொருளையும் மனத்தில் வாங்கிக்கொண்டு, எல்லாவற்றையும் பட்டவர்த்தனமாகச் சொல்லிவிடுவது என்று சித்த உறுதி பூண்டு, அவன் முன்னால் உட்கார்ந்துகொண்டாள் அவள். அவளுடைய கடந்த கால வாழ்வை எங்கிருந்து ஆரம்பித்து எவ்வாறு சொல்லுவது என்பது ஒரே குழப்பமாகவும் தயக்கமாகவும் இருந்தது

அவளுக்கு. எங்கிருந்து அந்தக் கதையை ஆரம்பித்துச் சொன்னாலும் ஒன்றுதான் அவளுக்கு. எல்லாவற்றையுமே சொல்லத் துணிந்த பின்னர் எங்கிருந்து ஆரம்பித்தாலும் ஒன்றுதானே?

"நாங்க ரெண்டுபேரும் சின்ன வயசிலிருந்தே கடல் கரையிலே ஒண்ணு விளையாடிக்கிட்டு இருந்தோம்" என்று ஆரம்பித்தாள் அவள். வரிசையாகச் சொல்லிக்கொண்டு வரவேண்டும் என்பதே அவளுடைய எண்ணம். அவள் சொல்வதைப் பழனியும் கோபப்படாமல், உணர்ச்சி வசப் படாமல் கேட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பொறுத்த வரையில், அதையொன்றும் அவன் அத்தனை முக்கியமான தாகக் கருதவில்லை என்று சொல்லும்படி யிருந்தது, அவன் முகபாவம். அவன் அமரிக்கையாக உட்கார்ந்துகொண்டு கேட்டுக்கொண்டிருந்தது அவளுக்கு மிகுந்த திருப்தியைத் தந்தது. சொல்லிக்கொண்டு வரும்போதே நடுவில் ஒரு கேள்வி கேட்டாள்:

"நான் சொல்லுதெல்லாம் உண்மைதான்னு பட லியா?"

"நீ சொல்வதை நம்பத்தான் செய்யறேன்" என்றான் பழனி.

ஒரு பெண் தன்னுடைய காதல் கதையை கணவனிடமே சொல்லுகிறாள்! இதில் நம்பமுடியாதபடி ஒன்றும் இல்லைதான். அவள் அவன் எதிரே தனது உருவப்படத்தைக் கறுப்பு வர்ணத்தால் தீட்டிக்கொண்டிருக்கிறாள்!

ஆனால், போகப் போகக் கதையை ஆரம்பித்த மனநிலை யில் தொடர்ந்து செகல்லிச் செல்ல முடியவில்லை அவளால். தங்கு தடையின்றி வார்த்தைகள் வரவில்லை. கதை அவ ளுடைய பதினெட்டாவது வயதைச் சுற்றிப் படர்ந்துகொண் டிருந்தது. தோணிமேல் அமர்ந்து பரீக்குட்டி பாடுவான் என்பதை அவள் பிரஸ்தாபிக்கவேயில்லை. கடைசியாக, அவ னிடம் விடை பெற்றுக்கொள்ள முற்பட்ட நிகழ்ச்சியையும் மூடி மறைத்துவிட்டாள். இதைத்தவிர மீதிக் கதை அத்தனை யையும் அவள் ஒன்றுவிடாமல் சொன்னாள். சிறிது மறைத்துத்

தான் சொல்லுவாள் என்று பழனியும் எண்ணிஞனே என்னவோ! அவளுக்கு அந்த விஷயம் தெரியாது.

அவள் சொன்ஞள்:

"எனக்கு உடன்பிறந்த அண்ணன் கிடையாது. இப்போ அவன்தான் என் அண்ணன்."

பழனி அதை ஆமோதித்து ஏற்றுக்கொண்டதாக அவளுக்குப் படவில்லே.

அவள் சொல்வதையெல்லாம் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்துவிட்டுப் பழனி கேட்டான்:

"அப்போ உன்னே நீர்க்குன்றத்துக் கடல்கரையிலே இருந்து எல்லோருமா சேந்து ஒரு வழியா வெளியே அனுப்பி வச்சுட்டாங்கன்னு எல்லாரும் சொல்லுது நிசம்தான்னு சொல்லு!"

கறுத்தம்மா இதற்கு என்ன பதில் சொல்லுவாள்? ஒன்று மட்டும் அவள் உறுதியாகக் கூறுவாள். என்றென்றும் கடற்கரை வாழ்வுக்கு உகந்த உத்தம மரக்காத்தியாக அவள் வாழ் நாளேக் கழித்து வருவாள்.

# 15

கறுத்தம்மா சொன்னதெல்லாம் உண்மையான விஷயங்கள்தாம். அவள் சொன்னதைப் பழனி அப்படியே நம்பினுன். ஆனுல், இந்த நிகழ்ச்சியினுல் அவனுடைய உள்ளத்தில் ஒரு புயல் கிளம்பி விட்டது. எப்போதுமே திடுமென்று யோசனையில் ஆழ்ந்துவிடக் கூடியவன்தான் அவன். இப்போது அவன் சுறுசுறுப்பை இழந்துவிட்டான். பப்புவை அவனுல் நேருக்கு நேராக நின்று எதிர்க்க முடியுமா? கறுத்தம்மா ஒழுக்கம் தவருதவள்தான். அவனும் இதை நம்பத்தான் செய்கிருன். என்ருலும் கடற்கரையில் வாழ்வதற்கு அவளுக்கு யோக்யதை இல்லை. பப்பு முகத்தைப் பார்த்து அடித்துப் பேசுகிறபோது யாரால் அவனுடன் சண்டை போட முடியும்? உண்மையை நம்ப வைக்கவா முடியும்? அவனே கறுத்தம்மாவை அவளுடைய தகப்பனுரின் கைகளிலிருந்து பலவந்தமாக விடுவித்துத் தன்னுடன் அழைத்துக்கொண்டு வந்திருக்கிருன். அவளைக் கைகழுவி விடலாம் என்ருலோ, அது அரயனுடைய குலதர்மத்துக்கு எதிரான ஒரு செய்கையாக இருக்கும். அப்படியே அவன் உதறிவிட்டாலும் அவள்தான் எங்குச் செல்வாள்?

கறுத்தம்மா சகல விஷயங்களையும் மனம்திறந்து கொட்டித் தீர்த்து விட்டாள். அந்த மட்டும் அவளுக்குத் திருப்திதான். ஏதோ ஒரு தவறு செய்துவிட்டோம் என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது அவளுக்கு. அதன் விளைவாக ஒவ்வொரு நாளும் கண்ணீர் சொரிந்துகொண்டே, மனத்தில் புதிய புதிய சபதங்களை மேற்கொண்டு வாழ்க்கையைத் திருத்திக்கொள்ள

முயன்றாள். சென்று போனதற்கெல்லாம் வருந்துவதில் பயனில்லை. அந்த நாட்களை மறந்து விடுவதுதான் நல்லது. இனிமேல் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அவளுடைய கற்பு நெறிக்கு இனிமேல் எவ்விதக் களங்கமும் ஏற்படாது. பழனிக்கும் இதில் சந்தேகமில்லை.

அவனால் முன்போல் ஆவேசத்துடன் அணைத்து ஆசை வெறியுடன் முத்தமிட முடியவில்லை. இறுகத் தழுவவும் முடிய வில்லை அவனால். இப்போதெல்லாம் கண்ணீர் மாலை மாலை யாகச் சொரிய உணர்ச்சிப் பெருக்கில் அவள் ஏதேதோ புலம் பிக் கொண்டிருப்பாள். அதோடு அவனை அவள் இறுகத் தழு விக்கொள்வதும் உண்டு. தன்னை அணைத்துக்கொண்டிருக்கும் அவனுடைய கரங்கள் சோர்ந்துவிடுமோ என்ற அச்சத்தோ டும், பழையபடி அவனைத் தனதாக்கிக்கொண்டு விடவேண்டும் என்ற வைராக்கியத்தோடும், அவள் அவனை இறுகத்தழுவிக் கொள்வாள். அவனுடைய பிடிப்பு எந்த நிமிஷத்திலும் நழுவி விடக்கூடுமென்றும் அவளுக்குத் தோன்றிற்று 'என்னை நம்பு கிறீர்களா?' என்றுதான் மீண்டும் மீண்டும் அவளால் கேட்க முடிந்ததே தவிர, 'என்னை நேசிக்கிறீர்களா?' என்று அவளால் கேட்க முடியவில்லை. அந்த உரிமை உணர்வையே அவள் இழந்து விட்டாளோ என்னவோ?

அந்நாள் வரை யாரிடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பழனி சண்டை போட்டுக்கொண்டது கிடையாது. இப்போது நண்பர்களுடன் சண்டை போட்டுக் கொள்வது சகஜமான காரியமாகி விட்டது. ஒரு நாள் அவன் எதிரிலேயே பப்பு சில விஷயங்களை உடைத்துப் பேசத் துணிந்து விட்டான். ஆனால், அவை ஒன்றும் பழனிக்குப் புதிய விஷயம் அல்ல. கறுத்தம்மா அவனிடம் சொன்ன விஷயங்கள்தாம். என்றாலும் இதுபோன்ற சமாசாரங்களை மற்றொருவன் கூற, பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருக்க முடியுமா? பெரும் பூசல் ஏற்பட்டது. பழனி பப்புவைப் பலமாகத் தாக்கினான்.

ஆனால், சண்டை அதோடு முடிந்துவிடவில்லை. பப்பு அந்தத் துறையில் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கடற்கரையில்

ஏராளம். அவர்கள் அன்று நடந்த நிகழ்ச்சியை, பப்பு என்ற தனி மனிதன் தாக்கப்பட்டான் என்ற கண்ணேட்டத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. தென்னைக் கூட்டம் குடும்பத்தைச் சேர்ந்த பப்புவைத் தாக்கக்கூடிய அளவுக்குப் பழனிக்குத் தெம்பு வந்துவிட்டதா என்ற கேள்வி பிறந்து விட்டது.

கறுத்தம்மா குடியிருக்கச் சொந்த வீடு ஒன்று இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாள். மனத்தில் உருவாகியிருந்த அந்தத் திட்டமும் இப்போது சிதைந்து போய் விட்டது. கடலில் மீன் மிகவும் குறைவாக இருந்தது. பழனிக்குவேலைக்குப் போவதற்குக்கூட உற்சாகமே இல்லை. இப்போதெல்லாம் அன்றுடம் அவன் கொண்டுவந்த பங்கைப்பற்றி விசாரிக்கவும் அவள் தயங்கினுள்.

கறுத்தம்மா புத்தம் புதிய உடைகள் அணிய, அவளை மண்ணூர்சாலைத் திருவிழாவுக்கு அழைத்துச் செல்ல வேண்டாமா? அடுக்களையும், தனியறையும் கொண்ட வீடு ஒன்றை வாங்க வேண்டாமா? இப்போது சொந்தமாக ஆட்டுக்கல் மட்டும் இருந்தது. இன்னும் குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான என்ன என்ன பொருட்களையெல்லாம் சேமிக்க வேண்டியிருக்கிறது! தோணி வலை என்பதெல்லாம் பெரிய திட்டங்கள்! அவற்றையாவது நீண்ட காலத் திட்டம் என்று எண்ணிக் கொள்ளலாம். நடந்தால் உண்டு, இல்லை என்றுலும் இல்லை. இப்போது அன்றுடம் வயிறு கழுவுவதற்கே தாளம் போடக் கூடிய நிலை வந்துவிட்டதே! கூட ஒரு சேலையும் ஜம்பரும் இருந்தால் எவ்வளவோ நன்றுக இருக்கும். சொல்லப்போனுல் மிக அவசியமாக இருக்கிறது. பழனியிடம் ஒரே ஒரு லுங்கித் துண்டுதான் இருந்தது. ஒருநாள் கறுத்தம்மா அவனிடம் கேட்டாள்:

"நான் நாளையிலிருந்து வியாபாரத்துக்குப் போயுட்டு வரட்டுமா?"

இதற்குப் பழனி சட்டென்று பதில் சொல்லவில்லை. இதில் இவ்வளவு தூரம் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? இருந்தாலும் ஏனே பதில் உடனடியாகப் பிறக்கவில்லை. வியாபாரத்துக்குச் சென்றுல் அதன்மூலம் என்ன என்ன பயன்கள் ஏற்படும் என்பதையும், அவள் ஒவ்வொன்றுகச் சொன்

ளுள். அவன் சம்மதம் தரும் பட்சம் அந்த வேலையை மேற்கொள்ளலாம் என்பதே அவளுடைய உத்தேசம்.

"அப்படியானால் போ" என்றான் அவன்.

இரண்டு நாட்களுக்குள் அவள் ஒரு கூடை வாங்கி வைத்துக்கொண்டாள். மறுநாள் தோணி கரைவந்து சேருகிற நேரத்தில் அங்கே கறுத்தம்மா கூடையுடன் தயாராகக் காத்துக் கொண்டு நின்றாள்.

அப்போதுகூட கல்யாணம் முடிந்து அதிக நாட்கள் ஆகியிருக்கவில்லை. அதற்குள் கடற்கரையில் வந்து நிற்கும்படி ஆகிவிட்டது. கொச்சுபெண் கேட்டாள்:

"கறுத்தம்மா, நீ எதுக்காக வியாபாரத்துக்கு வருதே!"

"நானும் ஒரு மரக்காத்திதானே!"—இதுதான் அவள் சொன்ன பதில்.

இருந்தாலும், கடற்கரையில் எல்லோரும் இதைப்பற்றிப் பேசிக்கொண்டனர். இரண்டு விதமான அபிப்பிராயங்களும் ஏற்பட்டன.

கறுத்தம்மாவுக்குப் பழக்கமுள்ள வேலை அல்ல அது. வியாபாரத்துக்குச் செல்ல நேரும் என்று அவள் கனவிலும் எண்ணியிருக்க மாட்டாள். அவளுடைய தாயார் இதைச் செய்துவந்தாள் என்பது உண்மைதான். ஆனால், தன்னைப் போல் தன் மகளும் ரொம்பக் கனமான மீன் கூடையைத் தலையில் சுமந்துகொண்டு, கூடையிலிருந்து சொட்டும் தண்ணீர் உடம்பெல்லாம் விழுந்தோட வீடு வீடாக ஏறியிறங்க நேரும் என்று சக்கி எண்ணியதுண்டா? பணம் சேர்க்க வேண்டும் என்ற லட்சியம் கறுத்தம்மாவின் வாழ்க்கைத் திட்டத்திலும் ஒரு முக்கிய அம்சம்தானே? தோணி கரை வந்தடைந்ததும், மற்றப் பெண்களுடன் கறுத்தம்மாவும் சேர்ந்து கொண்டாள். ஒரு வியாபாரி தோணிச் சரக்கு அத்தனையையும் மொத்தமாக விலைபேசி வாங்கிக்கொண்டான். கறுத்தம்மாவும் மற்றும் நாலைந்து பெண்களும் அவனிடமிருந்து மீன் வாங்கிக் கொண்டனர்.

மற்றப் பெண்கள் எல்லோரும் அவளை முந்திக்கொண்டு வெகு தூரம் முன்னால் சென்று விட்டனர். அவர்களுக்கு நித்திய பழக்கமான காரியம் அது. தாங்க முடியாத தலைப்

பஞுவுடன் கறுத்தம்மாவால் அவர்களைப் போல் ஓட முடிய வில்லை. கடைசியாகச் சென்றுகொண்டிருந்தவள் அவள் தான்.

சில சமயம் கிழக்குப் பக்கம் நோக்கி மூன்று நாலு மைல் கள்கூடப் போகும்படி ஆகிவிடும். அவளுக்கோ முன்பின் பழக்கமில்லாத இடம்; முன்பின் பழக்கமில்லாத ஆட்கள். என்ன செய்வாள் பாவம்!

மற்றப் பெண்கள், குடியிருப்புக்களில் புகுந்து புறப்பட்டு வளையவளைய வந்துகொண்டிருந்தனர். கறுத்தம்மாவுக்குப் புதிய பாதைகளில் நுழையத் தயக்கம். எல்லா வீட்டு வாசல் களிலும் நின்றுகொண்டு கூவிப்பார்த்தாள் அவள். சில வீடு களில் ஏற்கெனவே மீன் வாங்கிவிட்டிருந்தனர். ஆகவே, அவர்களுக்கு மீன் தேவையே இல்லை. வேறு சில வீடுகளில், 'என்ன மீன்?' என்று விசாரித்தனர். பொடி மீனைச் சீண்டு வாரில்லை. இன்னும் சில வீடுகளில் விலை பேசினுர்கள் என்ரு லும், வியாபாரம் முடியவில்லை. நெடுந்தூரம் அலைந்து திரிந்த பின்பும் காலஞவுக்குக்கூட விற்கவில்லை. நஷ்டம் ஏற்பட்டா லும் பரவாயில்லை, கொண்டுவந்த சரக்கை விற்றுத் தீர்த்து விட்டால் போதும் என்ருகி விட்டது. தலைச்சுமட்டோடு திரும்பிச் செல்வது எத்தனை அவமானமான விஷயம்? அன்று அவள் நஷ்டத்துக்கு விற்றுத் தொலைத்துவிட்டு வெறுங்கை யுடன் வீடு வந்து சேர்ந்தாள். அதனுலும் ஒரு நன்மை ஏற்பட் டது என்று சொல்லவேண்டும். பல இடங்களில் அன்று வாடிக்கை பதிந்து விட்டது. பலர், தொடர்ந்து அவளிடமே வாங்குவதாகவும் சொன்னுர்கள்.

பழனி ஒரு பீடித் துண்டைப் புகைத்தவாறு உட்கார்ந்து கொண்டிருந்தான். கறுத்தம்மா மிகவும் சோர்ந்து காணப் பட்டாள். முகம் வாடிக் கருகிப் போய் இருந்தது. உண்மை யில், நடப்பதற்குக்கூடத் தெம்பில்லை அவளுக்கு. அவளுடைய சோர்ந்த முகத்தையும் துவண்டு கிடந்த அங்கங்களையும் கவனித்து மனமிரங்கி அவன் ஏதாவது விசாரிப்பான் என்று அவள் எதிர்பார்த்தாள். அப்படி எதிர்பார்ப்பது சகஜம் தானே? இதற்குகூட உரிமை கிடையாதா அவளுக்கு? சொல்லப்போனுல், அவனுடைய நன்மைக்காகவும்தானே

அவள் அன்று அலையாத அலைச்சல் அலைந்துவிட்டு வந்திருக்கிறாள்? ஆனால் பழனியோ வாயைத்திறந்து ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஏதோ அவள் அன்று வெளியே எங்கும் செல்லாதது போலவும், காலையிலிருந்து அங்கேயே உட்கார்ந்திருப்பது போலவும்தான் இருந்தது அவனது முகபாவம்! அதனால் அவள் மனத்துக்கு ஏற்பட்ட சோர்வையோ துக்கத்தையோ அவனிடம் காட்டிவிடலாமா? சொல்லப் போனால், அவளுக்கு என்ன உரிமைதான் இருக்கிறது? ஒன்றுமே இல்லை!

இருந்தாலும் அவள் ஒரு மனைவிதான். அவளுக்கு என்று தன் உரிமைகள் ஏதும் இல்லாமலிருக்கலாம். கடமைகளேனும் உண்டல்லவா?

அவள் கேட்டாள்:

"சாப்பிட்டீங்களா?"

"ம்..." என்று முனகினான் அவன்.

குளித்தால் ஈர உடையை மாற்றிக்கொள்ள வேட்டிகூட இல்லை அவளுக்கு. ஈர உடையோடு நின்று கொண்டிருக்கும் படியாகி விட்டது.

அவன் ஒன்றும் விசாரிக்காவிட்டாலும் வியாபாரத்துக்குச் சென்று வந்த விஷயத்தையெல்லாம் கறுத்தம்மா அவனிடம் விரிவாகச் சொன்னாள். அன்று என்னவோ நஷ்டம் தான் என்றாலும்கூட, இனிமேல் தொடர்ந்து வியாபாரம் செய்வதற்கு அனுசரணையான சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்று திருப்தியோடு கூறினாள் அவள். இன்னும் ஒரே ஒரு காரியத்தை அவள் மேற்கொள்ளவும் அவன் மனம் ஒப்ப வேண்டும். கரையில் கூட்டமாக நின்றவாறு சின்னஞ்சிறு வலை வீசி இழுத்து, பெண்கள் மீன் பிடிக்கிறார்களே, தானும் அதைச் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆசை கறுத்தம்மாவுக்கு. தன்னையும் அந்தக் கூட்டத்தில் சேர்த்து விடவேண்டுமென்று அவள் பழனியைக் கேட்டுக்கொண்டாள்.

"என்னாலே அதொண்ணும் செய்ய முடியாது" என்றான் பழனி.

மறுநாள் கடலில் அயிலை மீன் அகப்பட்டது. கையிலிருந்த பணத்துக்கு அயிலை மீன் வாங்கிக்கொண்டாள் கறுத்தம்மா.

முன்தினம் சென்றது போலவே அன்றும் அவள் மற்றப் பெண்கள் பின்னால் ஓடிச்சென்றாள். அவள் மீன் தருவதாக ஒப்புக்கொண்டிருந்த வீட்டார்கள் அவளுக்காகச் சிறிதுநேரம் காத்திருந்தனர். மற்றப் பெண்கள் அணாவுக்கு இரண்டு மீன் என்று வியாபாரம் செய்தனர். கறுத்தம்மா இரண்டணாவுக்கு ஐந்து மீன் கொடுத்தாள். இதனால் லாபம் சற்றுக் குறைவு தான் என்றாலும் நிரந்தர வாடிக்கை நிறையக் கிடைத்தது. அவர்கள் மறுநாளும் மீன் கொண்டுவர வேண்டும் என்று அவளிடம் கேட்டுக்கொண்டனர். புதிய மரக்காத்தி மிகவும் நல்லவள் என்ற பெயர் கிடைத்துவிட்டது.

அதுவரையிலும் இரண்டு மூன்று நாட்கள்தான் சென்றிருப்பாள் கறுத்தம்மா. அன்று கடற்கரையில் பெரும் பூசல் ஒன்று கிளம்பிற்று. வியாபாரத்துக்கு சென்றுவரும் மற்ற எல்லாப் பெண்களும் ஒன்று சேர்ந்து, ஒரே கட்சியாக நின்று கொண்டு கறுத்தம்மாவை வாயில் வந்தபடி வைது நொறுக்கினர். அவர்களில், ஒருத்தியின் ஏச்சுக்குப் பதில் சொல்லக் கூடக் கறுத்தம்மாவின் நாவுக்கு நீளம் பற்றாது. பின் எவ்வாறு ஐந்தாறு பெண்களுக்குப் பதில் சொல்லப் போகிறாள் அவள்? இவள் வாய்விட்டு அழுது விட்டாள்! ஒருத்தி அப்போது கோப வெறியில் கத்தினாள்:

"ஏதோ ஒரு கடல்கரையிலே எவனோ ஒரு துலுக்கப் பயலெ கட்டிக்கிட்டுக் கிடந்தவ, நம்ம கடல்கரையை அழிக்க வந்து சேர்ந்திருக்கா."

அப்போது மற்றொருத்தி சொன்னாள்:

"அவளுக்கு நிறைய வியாபாரம் கிடைக்கத்தான் செய்யும். எல்லா வீட்டிலேயும் அவ கிட்டேதான் வாங்கணும்னு ஆம்பிளேங்க சொல்லுவாங்க. ஆளை மயக்குற ராங்கிக் காரியல்ல அவ."

இப்படியெல்லாம் கறுத்தம்மாவின் எதிரே நின்று பேசும் படியாகி விட்டது.

கறுத்தம்மாவின் கண்களை இருள் மறைத்து விட்டது. செவிகளும் ஒரேயடியாய் அடைந்து போயின. அழுதவாறு வீட்டை நோக்கி அடியெடுத்து வைத்தாள் அவள். அவளிடம் அனுதாபம் காட்ட, அவளுக்கு அநுகூலமாக ஒரு வார்த்தை

சொல்ல, இந்த உலகில் ஓர் உயிர் கூட இல்லை. துவளுடைய உண்மை நிலையை ஒருவராவது அறிந்துகொள்ளவில்லை. மற்ற மரக்காத்திப் பெண்களைப்போல் உடலை வளைத்து வயிற்றைக் கழுவுவதற்கும் உரிமை இல்லை அவளுக்கு.

கடலில் இருந்து திரும்பி வந்து சேர்ந்த பழனியோ, அன்று அவள் ஏன் வியாபாரத்துக்குச் செல்லவில்லை என்பதைக்கூடக் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை. அவளை ஏறிட்டு கூர்மையாகப் பார்த்தான் அவன். அழுது வீங்கிப் போயிருந்த அவளுடைய முகம் அவனுக்கு ஒரு புதிய விஷயமாகவோ, புதிய காட்சியாகவோ படவில்லை. சொல்லப் போனால், அவள் முகமும் அப்படித்தானே இருந்தது. சிறிது நாட்களாக அவன் கண்டுகொண்டிருந்த காட்சியும் அது தான். ஆனால், அன்று அவளுடைய முகம் மேலும் அதிகமாகச் சோர்ந்து வாடியிருப்பதை அவனால் கண்டுகொள்ள முடியவில்லையா என்ன? கடைசியில், 'என்ன விஷயம்?' என்று அவன் விசாரிக்கத்தான் செய்தான். ஒப்புக்கு, 'ஒன்றுமில்லை' என்று சொல்லி மழுப்பப் பார்த்தாள் அவள். அப்படித் தானே அவளால் சொல்லவும் முடியும். நடந்த கதையை எல்லாம் வாய்விட்டுக் கூற முடியுமா அவளால்?

சரி, அப்படியானால் திருக்குன்றப்புழைக் கடற்கரைப் பெண்களில் ஒருத்திகூட இன்றுவரை ஒழுக்கநெறியிலிருந்து தவறியதில்லையா? நீர்க்குன்றப்புழையில் பெண்களுக்குள் சண்டை மூண்டு பேச்சுத் தடிக்கும்போது ஒவ்வொருவரும் பிறந்து ரகசிய விவகாரங்களை அம்பலப்படுத்துவதுண்டு. சொல்லப் போனால் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஏதேதோ நடந்துதான் இருக்கிறது. அப்படித்தான் எண்ண வேண்டியிருக்கிறது. ஆனால், இங்குள்ள பெண்களைப் பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியாது. தெரிந்திருந்தால், அவளும் பதிலுக்குப்பதில் ஒன்றுக்குப் பத்தாக முழக்கியிருப்பாள். அவளுக்கு மட்டும் பேச வாயில்லையோ? அப்படி என்ன மாபெரும் தவறு செய்துவிட்டாள் அவள்!

இந்தக் கடற்கரையிலும் சிறுவர் சிறுமியர் ஒன்றாக ஓடியாடி விளையாடித் திரிந்தது கிடையாதா? அவர்கள் சிப்பி பொறுக்குவதையும், மணலை அம்பாரமாய்க் குவித்து அடியில்

பள்ளம் பறிப்பதையும், குஞ்சு மீன் பொறுக்கித் திரிவதையும் கறுத்தம்மாவே எத்தனையோ தரம் பார்த்திருக்கிருள். இப்போது வயது வந்தவர்களாக இருப்பவர்களும் சின்ன வயதில் இதுபோல் விளையாடியவர்கள் தாம். அவர்களுடைய ரகசியக் கதைகளை எல்லாம் அறிந்து கொள்ள வேண்டும் என்கிற கீழான எண்ணமும் அவளுக்குத் தோன்றியது.

முன் காலத்தில் வாழ்ந்திருந்த எந்தப் பெண்ணுடைய காதல் கதையாவது இந்தக் காற்றில் கலந்து வீசுகிறதா? அடி சறுக்கிவிட்ட முக்குவத்தியின் ஆத்மா நிராதரவாய் இங்கும் நிலவொளியில் அலைந்து திரிகிறதா? அங்கே கேட்டது போல் ஒரு பாட்டை இதுவரையிலும் இங்கு அவள் கேட்க வில்லை.

கறுத்தம்மா வியாபாரத்துக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டாள். அதோடு ஒரு புதிய வேலையை மேற்கொண்டு அதை ஒழுங்காகச் செய்து வந்தாள். கடற்கரையிலிருந்து மீன் வாங்கி, உப்புப் போட்டு, பக்குவம் செய்து காயப் போட்டு வைத்தாள். மீனுக்குப் தட்டுப்பாடு ஏற்படுகிற போது, கருவாடு நல்ல விலைக்குப் போகும். வியாபாரிகளே வாங்கிக்கொண்டு சென்று விடுவார்கள்.

கறுத்தம்மா தனக்கென்று ஒரு வாழ்க்கைத் திட்டத்தை அமைத்துக்கொண்டு அதைப் பின்பற்றி நின்று வாழ முனைந் தாள். அவளுக்கு என்றுமே சொந்தமாக ஒரு வாழ்க்கைத் திட்டம் இருந்தது என்று சொன்னாலும் சரிதானே? பிற ருடைய கண்களுக்குப் புலப்படாத, அவள் மனத்தில் புதை யுண்டு கிடக்கும் அகவாழ்வும் என்றுமே அவளுக்கு இருந் திருக்கிறது. தனக்குள் தானே அதை எண்ணிக்கொண்டு பல முறை அந்த அனுபவத்தில் அவள் ஆழ்ந்து போனதும் உண்டு. அதையெல்லாம் எந்தத் தோழியிடத்திலும் அவள் சொன்னதும் இல்லை. யாருடனும் பேச்சுவார்த்தை வைத்துக் கொள்ளாமல், ஏகாந்தமாகவே அவள் நாட்களைத் தள்ளிக் கொண்டிருந்தாள்.

பழனியின் நிலைமையும் அப்படியேதான். அவன் அன்றாடம் வேலைக்குச் சென்று வந்தான். பழைய சுறு சுறுப்பும் உற்சாகமும் அவனைவிட்டுக் கழன்று ஓடிவிட்டன.

அவனுக்கு எத்தனையோ தோழர்கள் இருந்தனர். அவர்களையெல்லாம் முற்றிலும் துறந்து, அவனும் தன்னந் தனியாகத் தான் நாட்களைத் தள்ளிக்கொண்டிருந்தான்.

பழனி, கறுத்தம்மா ஆகியோரின் இல்லற வாழ்க்கை இவ்வாறு ஒழுங்கும் நியதியும் கொண்டு, தங்கு தடையின்றி நடந்துகொண்டிருந்தது. ஆரம்ப நாட்களில் அவர்களிடம் காணப்பட்ட உணர்ச்சிவேகம் இப்போது எங்கோ மறைந்து கொண்டுவிட்டது. அது அடங்கி ஒடுங்கிப் போய்விட்டது. ஏற்கனவே அவர்களுடைய வாழ்வு சுரபேதம் இல்லாமல் ஒழுங்காக நடந்து கொண்டிருந்தது என்றால், இப்புதிய மாற்றம் அவர்களைச் சிறிதும் பாதித்திராது. ஆனால், இங்கு அவ்வாறு நிகழவில்லை. கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த உணர்ச்சி வெறி கணப்பொழுதில் அவிந்து போய் விட்டது. வாழ்க்கையின் இறுதி முடிவுவரையிலும் கண் முன்பு கண்டு அவர்கள் உருவாக்கிய நீண்டகாலத் திட்டம் நிமிஷப்பொழுதில் நொறுங்கிப் போய்விட்டது. இத்தனையும் நடந்து முடிந்த பின்னரும், எவ்வாறு அவர்கள் கணவனும் மனைவியுமாய் இல்லற வாழ்க்கை நடத்திவந்தனர் என்ற கேள்வி எழலாம். கட்டுத் தளர்ந்து போன தாம்பத்தியமும் உலகில் இருந்துதானே வந்திருக்கிறது?

கறுத்தம்மா மனநிறைவோடு திருப்தியான வாழ்க்கை நடத்தி வந்தாளா? இருக்கலாம். பழனியின் நிலைமை என்ன? அவனும் அப்படித்தானே? கடற்கரையில் கறுத்தம்மாவைப் பற்றிய பேச்சு அடிபட்ட போதெல்லாம், கூடவே பழனியைப் பற்றியும் பேசுவது என்றாகிவிட்டது. அவன் நடந்து சென்று கொண்டிருக்கும் போதே, பின்னாலிருந்து ஆட்கள் குசுகுசுத்துக் பேசுவது சகஜமான காட்சியாகிவிட்டது. அவ்வாறு பேசிக் கொள்ளாவிட்டாலும், அவன் மனத்தில் அப்படிப் பேசிக் கொண்டிருக்கிறார்களோ என்ற சந்தேகம் எழத்தான் செய்தது.

நாலைந்து மாதங்களுக்கு முன்னால் வரை, வாழ்க்கையில் பக்கத் துணையோ ஆதாரமோ இன்றி, பந்தமும் பிணைப்புமின்றி, அனாதையாக அவன் இருந்த போதெல்லாம், அவனைச் சந்திக்கிற ஒவ்வொருவருமே மலர்ந்த முகத்துடன் க்ஷேம

லாபம் விசாரிப்பது வழக்கமாக இருந்தது. ஊரில் நல்லவன் என்ற பெயரும் சம்பாதித்திருந்தான். இன்று அதே ஆட்களுக்கு அவன் நடந்து செல்லுகிறபோது பின்னாலிருந்து குசுகுசுக்க ஒரு விஷயம் கிடைத்துவிட்டது. என்ன ஏமாற்றம்! பழனி ஒருவருக்கும் ஒரு தீமையும் செய்தவன் அல்ல. அன்று பேய் வெறிகொண்டு ஆழக்கடலை நோக்கித் தோணியைச் செலுத்திக்கொண்டு சென்றுவிட்டான் அவன். அதன்பின் இன்றுவரை, சுக்கான் பிடிப்பதில் அதி சமர்த்தனான அவன் கையில் மீண்டும் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்படவில்லை.

எல்லோருடைய மனத்திலும் ஒரே பயம். அவனுடைய சக ஊழியர்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே பயம்தான். அவன் உடம்பில் பிசாசு புகுந்துகொண்டு விட்டது என்றுகூட அவர்கள் நம்பினர். கறுத்தம்மா கடற்கரையை அடியோடு நிர்மூலம் செய்துவிட்டுப் போகத்தான் வந்திருக்கிறாள் என்பதிலும் அவர்களுக்குத் துளியும் சந்தேகமில்லை. அவளுடைய மரக்கானுடன் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று ஒவ்வொரு அரயத்தியும் தம் தம் புருஷனிடத்தில் சொல்லவும் தலைப்பட்டனர். பரம்பரை பரம்பரையாக அவர்கள் பெற்று வரும் அசைக்க முடியாத நம்பிக்கை அத்தனை வலுவானது; ஆழமானது.

பாவம், கறுத்தம்மா! அவளிடம் அனுதாபம் காட்டவோ, பரிவுகொண்டு ஒரு வார்த்தை சொல்லவோ அந்தக் கடற்கரையில் ஒரு ஜீவன் கூட இல்லை. அதேபோல் பழனியும் அனாதையாகி விட்டான். அவன் நிலைமையும் அதேதான். இப்போது யார் வேண்டுமென்றாலும், என்ன வேண்டுமென்றாலும், அவர்களைத் தூற்றிப் பேசலாம்.

வலைக்காரன் குஞ்சனுக்குச் சொந்தமான தோணியில்தான் பழனி வேலை பார்த்துவந்தான். அவன் நீண்ட காலமாகவே தோணியும் வலையும் வைத்துக்கொண்டு தொழில் பார்த்து வருகிறவன். என்றாலும், நாளாவட்டத்தில் க்ஷீண திசை அடைந்துவிட்டான். இன்று இருக்கிற சொத்தெல்லாம் அந்தத் தோணியும் வலையும்தான். அவன் குடியிருந்த வீடும், மனையும் இன்று மற்றொருவனுக்குச் சொந்தமாகிவிட்டது. அந்தத் தோணியும் வலையும் இல்லாதவரை குஞ்சனுடைய குடும்

பமே பட்டினியால் ஆழ்ந்து போய்விடும். வேறு தோணிகளில் வேலை பார்க்கவும் அவனுடைய குடும்ப கௌரவம் இடம் தராது. அதோடு அவன் மகா சாது. கிழடும் தட்டிவிட்டது.

கறுத்தம்மாவைப் பற்றி அடிபட்டுக்கொண்டிருந்த கதைகள் அவனுடைய காதிலும் விழுந்தன. என்ன கஷ்டம் இது! கெட்ட பெயர் எடுத்துவிட்ட ஒரு பெண்ணின் மரக்கான் அவனுடைய தோணியில் வேலை பார்த்து வருகிறான். தினமும் அவனுடைய தோணியில் அவன் கடலுக்குச் சென்று வருகிறான். ஒவ்வொரு நாளும் தோணி கரை வந்து சேருவது வரை குஞ்சனுக்கு மன அமைதி என்பதே இல்லாமல் போய் விட்டது. பழனி தோணியில் இருப்பதால் தோணி எந்த நிமிஷத்திலும் சுக்கு நூறாய் நொறுங்கிப் போய் விடலாம், அல்லது நீரோட்டத்தில் சிக்கி நடுக்கடலுக்குச் சென்று விடலாம். எவ்வித விபத்தும் நேரக்கூடும்! தனது கடைசிச் சொத்தையும் இழக்கும்படியாகி விடலாம். தெய்வமே, என்ன கஷ்டம் இது!

வலைக்காரன் குஞ்சன், பழனியைத்தவிர மற்ற எல்லாத் தோணிக்காரர்களையும் அழைத்து ரகசியமாக அவர்களுடன் ஆலோசனை நடத்தினான். மனதுக்குள் எல்லோருக்கும் அதே பயம்தான். வீட்டுப் பெண்கள் வேறு அந்த பயத்தை நாள் தோறும் வளர்த்துக்கொண்டிருந்தனர். குஞ்சன் அவர்களைக் கலந்து ஆலோசிக்கக் கூட்டம் கூட்டியபோது, எல்லோருடைய மனத்திலும் ஒரு நிம்மதி பிறந்தது.

குமாரன் சொன்னான்:

"எஜமான், உங்களுக்காவது தோணி போயிடுமோன்னு பயம். எங்களுக்கோ, உயிரே போயிடுமோன்னு பயமாயிருக்குது. பன்னிரண்டு குடும்பம் கையிலே சட்டி ஏந்திக்கிட்டுத் திரியும்படி ஆடுவிடும்."

குமாரனது பேச்சை வேலாயுதன்கூட எதிர்க்கவில்லை. அவனுக்கும் உள்ளூரப் பயம்தான். வலைக்காரன் குஞ்சன் சொன்னான்:

"ஆமாம், ஆமாம். நீ சொல்லுவது ரொம்பவும் சரி. கடல் தாய் விஷயம் அப்படித்தான். அதிலே ஈவிரக்கம் இருக்காது."

யாருக்குமே அந்த விஷயத்தில் சந்தேகம் இருக்கவில்லை. காலம் மாறுகிறது என்றாலும், கடல்தாயின் நியதிகளுக்கு மாற்றம் இல்லை. கடற்கரை முக்குவனின் தருமத்துக்கும் மாற்றமில்லை. திகில் பிடித்துக்கொண்ட உள்ளத்தோடு குமாரு சொன்னான்:

"நாங்க கடலுக்குப் போயிருக்கிற சமயம் பார்த்து...... அந்தத் துலுக்கப்பய வந்து சேர்ந்துட்டான்னா......அப்புறம் எங்களுக்கு என்ன கதியாகும்னு நீங்களே யோசிச்சுப் பாத்துக் கிடுங்க."

வலைக்காரன் குஞ்சன் இந்தப் பேச்சைக் கேட்டதும் வெல வெலத்துப் போய்விட்டான்.

"ஆமாம். அப்புறம் அதோகதிதான்!"

ஆண்டிக்குஞ்சு நிராசையுடன் சொன்னான்:

"அந்தத் துலுக்கன் இப்பமும் நடமாட்டம் வச்சுகிட் டிருக்கான்னு ஊரிலே சொல்றாங்க."

வலைக்காரன் குஞ்சன் கேட்டான்:

"அப்படியா? வாஸ்தவம்தானா? அந்தப் பயலை அப்படியே அடிச்சுக் கொன்னுப்புட்டா என்ன?"

வேலாயுதன் சொன்னான்:

"அப்புறம் ஒரே குழப்பமாய்ப் போயிடும் எஜமான்."

வீடுகளில் பெண்களுக்குச் சற்றும் நிம்மதி இல்லை. காலை யில் தோணி கடலுக்குச் செல்லுகிற நேரமெல்லாம் ஒரே அழுகையும் கூச்சலும்தான். தோணி மறுபடியும் கரைவந்து அடைகிறபோதுதான் மீண்டும் அவர்கள் மூச்சு விடுவார்கள்.

ஆண்டிக்குஞ்சு தொடர்ந்து சொன்னான்:

"பொம்பளைக சொல்லுதப் பாத்தா இண்ணைக்கு வரை உசிரோட இருக்கோம்னா, ஏதோ கடல்தாய்தான் காப்பாத் திக்கிட்டு இருக்கான்னு நெனைக்கவேண்டியிருக்குது. அந்தக் காலத்திலே நடந்த மாதிரி இண்ணைக்கும் நடக்குமனா இதுக் குள்ளே நாங்க மறஞ்சு போயிருப்போம். கடலுக்கு அடியிலே எலும்புத் துண்டாக் கிடப்போம்."

நாலைந்து தினங்களுக்குமுன் ஒரு நாள் கடற்கரையில் பப்பு பரீக்குட்டியை நள்ளிரவில் சந்தித்தானே, அந்தச் செய்

தியை அவன் அங்கு எல்லோருக்கும் சொன்னான். பரீக்குட்டி பாட்டுப் பாடிக்கொண்டே ஆனந்தமாக நடந்து சென்று கொண்டிருந்தானும்! அம்மாதிரி அவன் அடிக்கடி வந்து போவதுண்டாம்!

எல்லோரும் பழனியை எண்ணி இரக்கப்பட்டனர். தங்கமான பையன்! அவனுடைய தலைவிதி இப்படியா இருக்க வேண்டும்? யார் என்ன செய்ய முடியும்?

மனத்தில் மூண்டெழுந்த அச்சத்தோடு வலைக்காரன் குஞ்சன் கேட்டான்:

''அதெல்லாம் சரி. இப்போ என்ன செய்யணும்னு ஒரு வழி சொல்லுங்க, பாப்பம்.''

குமாருவுக்கு ஒரு யோசனை தட்டுப்பட்டது. பழனியைத் தோணியில் ஏற்ருமல் கரையில் நிற்கும்படி செய்துவிட வேண்டும்.

அது மிகவும் நல்ல யோசனைதான்! நடைமுறை சாத்தியமான காரியமும் அது ஒன்றுதான். அன்றொருநாள் பேய்வெறி கொண்ட பழனி தோணியை ஆழ்கடலுக்குள் செலுத்திக் கொண்டு சென்றதை, நூருவது தடவையாக அன்றும் குமாரு சொன்னான்:

''இனிமேலும் அவனுக்கு எண்ணைக்காவது அந்த மாதிரி புத்தி மாருட்டம் வந்து போச்சுன்னு, நாங்க என்ன செய்வோம்? நான் எண்ணைக்கும் அவன் முகத்திலிருந்து கண்ணெடுக்காம தோணிக்குள் உக்காந்துகிட்டு இருக்கேன், எப்போ அவனுக்கு புத்தி பேதலிக்குதுன்னு தெரிஞ்சுக்கிட.''

குமாரு பேசியதை எல்லோரும் ஆமோதித்தனர். சுக்கானை அவன் கையில் ஒப்படைப்பதில்லை என்பது உண்மைதான். ஆனால், துடுப்பை மாற்றிப் போட்டாலும் போதாதா?

குமாரு சொன்ன யோசனையை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். ஆனால், அந்தச் செய்கை எந்த அரயனுடைய உள்ளத்தையும் புண்படுத்திவிடும். பழனியோ சின்ன வயசிலிருந்தே வலைக்காரன் குஞ்சனுடைய தோணியில் வேலையாளாகப் பணியாற்றி வருகிருன்.

அவன் அன்றுபோல் நாதியற்ற குழந்தையாக இருந்திருந்தால் நடுக்கடலில் தூக்கிப் போட்டுவிடலாம். இன்று அவன்

சுக்கான் பிடித்துத் தோணி செலுத்தும் பெரிய மரக்காஞகி விட்டான். அவன் துடிப்புத்தடி ஏந்தி நின்ருன் என்ருல், மற்றத் தோணிக்காரர்களுக்குக் கிடைப்பதைவிட இரு மடங்கு மீன் கிடைக்கும். பங்கும் தலைக்கு இரண்டு ரூபாயாவது அதிகமாகக் கிடைக்கும். குஞ்சன் எல்லோரையும் பார்த்து ஒரு கேள்வி எழுப்பினுன்:

"இப்பொ அவன் சுக்கான் பிடிக்கலே. சரி. அதுக்கு அப்புறம் பங்கும் உங்களுக்குக் குறைவாகத்தானே கிடைச்சுக் கிட்டு இருக்குது?"

குமாருவும் அந்த உண்மையை ஒப்புக்கொண்டான். ஆனுல் இந்தப் பேராபத்திலிருந்து தலைதப்புவதற்கு வேறு என்ன வழிதான் இருக்கிறது! ஒன்றும் தெரியவில்லை!

ஆனுல், இந்த விஷயத்தை யார் அவனிடம் சொல்வது? எப்படி அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டே இதைச் சொல்லமுடியும்? வலைக்காரன் குஞ்சன் 'என்னுல் முடியாது?' என்றே சொல்லிவிட்டான். அவனுக்கு அதைச் சொல்லத் தெம்பில்லை. 'ஊஹூம். முடியவே முடியாது. அவன், குமாரு விடம் சொன்னுன்:

"நீங்க யாராவதுதான் அவங்கிட்டே செல்லணும்."

இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ஒருவரேனும் தயாராக இருக்கவில்லை. பின் எப்படித்தான் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வது?

கறுத்தை ஒரு வழி சொன்னுன்:

"ஒண்ணு செய்யலாம். அவன் கரைவந்து சேருதுக்கு முன்னுலே நாம தோணியைக் கிளப்பிக்கிட்டுப் போயிடணும். சாதாரணமாக கடல்கரையிலே ஓர் ஆளை மாத்தறதுன்னு சொன்ஞ இப்படித்தான் செய்வாங்க."

இந்த வழி வலைகாரன் குஞ்சனுக்குத் தெரியும். ஆனுல் இதில் ஒரு தர்ம சங்கடம் உண்டு. தோணி கடலுக்குச் சென்ற பின்னர், வேலையிழந்தவன் தோணியின் சொந்தக்காரனிடம் சண்டை போடுவான். அதேமாதிரி நாளை பழனியும் தன் முன்னுல் வந்து நின்றுகொண்டு கேள்விகள் தொடுக்க ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது, எப்படிச் சாமளிப்பது என்

பதை யெல்லாம் யோசித்துப் பார்த்தான். இதுதான் அவனுடைய பிரச்னே.

ஆனுல் எப்படிப் பார்த்தாலும் அந்த ஒரு வழிதான் உண்டு. அதன்படி நடந்து கொள்வது என்று தோணிக்காரர்கள் மேலும் ஒருமுறை உறுதியாகச் சொல்லிவிட்டுக் கலைந்து சென்றனர். வலேக்காரன் குஞ்சன் பழனிக்குப் பதிலாகத் தனது தோணியில் மற்றெருருவனே அமர்த்தியும் விட்டான்.

அன்றும் பழனி வழக்கம்போல் எழுந்திருந்து கடற்கரைக்கு வந்தான். அதற்குள் தோணி கரையிலிருந்து நெடுந்தூரம் சென்றுவிட்டது. பழனி அடிவயிற்றிலிருந்து குரலெடுத்துக் கூவிப் பார்த்தான். சில விஞடிகளில் அவனது கூவுதல் அலறலாக மாறிவிட்டது. அன்றுவரை இத்தனேபெரிய ஓசை அந்தக் கடற்கரையில் எழுந்ததே இல்லே. தன்னேக் கரையில் விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர் என்பதை உணர்ந்த மாத்திரத்தில், அன்றுவரை கடலின் குழந்தைபோல் வளர்ந்திருந்த அவனுடைய உடம்பில், சர்வசக்திகளும் மூண்டெழுந்து அதன் சொருபத்தைக் காட்ட ஆரம்பித்தன. கடல்தாயின் அருமைக் குழந்தையான அவனே வேலேயிலிருந்து தள்ளியிருக்கிருர்கள்! அவன் பிறந்ததே காற்றுடன் போராட! அவன் உடல் நீரோட்டத்தை அடக்கியாளப் பிறந்தது. இயற்கைச் சக்திகளோடு அனுதினம் போராடி வாழ்ந்தவன் அவன். இன்றிலிருந்து சகல உரிமைகளும் பறிக்கப்பட்டுவிட்டன. அதைத் தாங்க ஒண்ணுமல், அவனுடைய ஆத்ம சக்தி வீறுகொண்டெழுந்தது அதன் பலம் முன்னேவிடவும் பலமடங்கு பெருகிற்று. மேற்றிசையிலிருந்த அந்நேரம் எழுந்து காற்று அவனுடைய முழக்கத்தை கர்ஜனேயைக் குடியிருப்புகளுக்கு எடுத்துச்சென்று ஒலிபரப்பிற்று. ஒருகால் அவன் எழுப்பிய பேரோசை தோணிக்காரர்கள் காதில் விழுந்திருந்தால், அவர்களே மறுபடியும் கரைக்கு வந்து விடுவார்களோ? வருவார்கள் என்று நிச்சயமாகக் கூறிவிட முடியுமா? வராமலும் இருந்து விடலாம். பழனி தோணியேற அருகதை அற்றவன் என்ற செய்தியைப் பாரெங்கும் முழக்கிக்கொண்டு முன்னேக்கிப் பாய்ந்து சென்றுகொண்டிருந்தது, தோணி—அவனுடைய அன்புக்குப் பாத்திரமாக இருந்த தோணி!

வீறுகொண்டு எழுந்த சக்திகள் கணப்பொழுதில் அடங்கி விடுமா? தோணியை விட்டுக்கொண்டு சென்று விட்டார்களே, அதற்கு என்ன பொருள் என்பது அவனுக்கு நன்ருகத்தெரியும். பழனி கடலுக்குள் குதித்தான். அவன் எப்படியும் தோணி யைப் பிடித்தாக வேண்டும். பிடித்து அவனுடைய உரிமையை நிலைநாட்டியாக வேண்டும். ஒரு நீர்யானை போல், கடற்பன்றி போல், மேற்குத் திசை நோக்கி நீச்சலடித்துப் பாய்ந்தான் பழனி.

அரயனுக, கடலின் அருமைக் குழந்தையாக வாழ்ந்தே தீருவது என்ற அவனது வேட்கை எத்தனை ஆழமானது! மலை போல் ஓர் அலை—அன்று வரையிலும் அத்தனை பெரிய அலை ஒன்று எழுந்தது இல்லை என்று சொல்லலாம்—எழுந்து அவனது தலைக்கு மேலாக உருண்டோடிச் சென்றது. மறு விஞடி அதே அலை அவனுடைய சக்தி அத்தனையையும் ஒட்ட உறிஞ்சி எடுத்துக்கொண்டு, பந்துபோல் அவனை ஒரே சுருட் டாய்ச் சுருட்டிக் கரைமீது தூக்கி எறிந்துவிட்டுச் சென்றது.

பழனி தோல்வி கண்டு விட்டான். சோர்விஞல் கீழே விழுந்து விட்டான் அவன். அவன் சட்டென்று எழுந்திருந்து வலைக்காரன் குஞ்சனுடைய வீட்டைப் பார்க்க ஓடிஞன். அவனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்து ஒரு கேள்வி கேட்க வேண்டியிருந்தது:

"கடல் வேலைக்கு நான் லாயக்கத்தவஞ?"

ஒரு கணம் பதில் சொல்லமுடியாமல் தயங்கிஞன் குஞ்சன்:

"டேய், வந்து......வந்து......"

"அது பொய்......பச்சைப் பொய்......அவ கெட்டுப் போனவ இல்லே. எனக்கு நல்லாத் தெரியும்."

"இருந்தாலும் எல்லாரும் சொல்ருங்களே!"

மிகுந்த கோபத்துடன் பழனி கத்திஞன்:

"சொல்ருங்க!"

அவன் வந்தவழி பார்த்துத் திரும்பி நடந்தான்.

## 16

அன்று பழனி திரும்ப வந்து சேர்ந்தபோது கறுத்தம்மாவிற்குத் தூக்கி வாரிப் போட்டது. என்ன விஷயம் என்பதே அவளுக்குப் புரியவில்லை. அவள் அவனிடம் விசாரித்தாள்:

“நீ கெட்டுப்போன பொண்ணும். அதனுலெ அவங்க என்னைத் தோணியிலே ஏத்தமாட்டாங்களாம்.”

கறுத்தம்மா ஸ்தம்பித்துப் போய்விட்டாள். அது வரையிலும் ‘ஒழுக்கம் கெட்டவள்’ என்று எத்தனையோ பேர் அவளைச் சொல்லியிருக்கிருர்கள். ஆனுல், அதை யாரும் அவள் கணவன் முகத்தைப் பார்த்துச் சொன்னதில்லை. முதல் தடவையாக, பழனியும் அதை அவளிடமே சொல்லும்படி ஆகிவிட்டது. அவன் சொல்லவில்லை யென்ருலும், பிறர் சொன்னதை அவன் குறிப்பிட்டுச் சொல்லும்படி ஆகி விட்டதே!

அருமையாக உழைக்கக்கூடிய பழனியும், அவள் காரணமாகத் தீண்டத்தகாதவன் ஆகிவிட்டான். பழனி அவளிடம் கேட்டான்:

“மனசிலே மரக்காத்தி என்கிற எண்ணத்தை விட்டுப் புட்டு, எதுக்கு சின்ன வயசிலிருந்தே அந்தத் துலுக்கப் பயகிட்டே சிரிச்சு விளையாடிப் பழகிக்கிட்டு இருந்தே?”

அவனுடைய கேள்வியும் அர்த்தபுஷ்டியானதுதான். இன்றுவரை யாரும் அவளிடம் இந்தக் கேள்வி கேட்டதில்லை. அவளுடைய தாயார் அவளை எத்தனையோ தடவை கண்டித்திருக்கிருள் என்ருலும், அவள்கூட இத்தனை தெளிவாக, கூர்மையாக ஒரு கேள்வி கேட்டதில்லை. பழனி கேட்ட கேள்விக்குத் தக்க விடை சொல்லமுடியாமல் திணறிப்

போனுள் அவள். அந்தக் கேள்வியின் முழு அர்த்தமும் இப்போது அவளுக்கு விளங்கி விட்டது. அவள் எப்படியும் அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவள் அல்லவா? ஆனால், அவளால் என்ன பதில் சொல்ல முடியும்? கறுத்தம்மா தான் செய்த தவற்றை ஒப்புக்கொண்டு விட்டாள். கண்ணீர் விட்டவாறு அவள் சொன்னாள்:

"அப்படியெல்லாம் நடந்து போச்சு. என்னே மன்னிச்சுடு."

பழனிக்கு அவனிடம் கோபம் இல்லே. அவன் சொன்னான்:

"இல்லேன்னாலும் உன்னேச் சொல்றதிலே அர்த்தமில்லெ. நீ ஒரு தப்பும் செய்யலே."

இதைக்கேட்ட கறுத்தம்மா மிகுந்த ஆசுவாசம் அடைந்தாள். அவன் அவளே மனப்பூர்வமாக மன்னித்து விட்டான். அவள் சொன்னதையும் அப்படியே நம்புகிறான்; அதை ஆமோதித்து ஏற்றுக் கொள்கிறான். அவன் எண்ணுவதெல்லாம் இன்னும்கூடக் கவனமாக அவள் நடந்துகொண்டிருக்கலாம், என்பதுதான். கறுத்தம்மாவுக்கும் பழனியின் மனநிலே மிகுந்த திருப்தியைத் தந்தது.

பழனி தொடர்ந்து சொன்னான்:

"அண்ணேக்கு அந்தத் துலுக்கப் பயலோடே தம் பொண்ணே விளேயாட விட்டுப்போட்டு வேடிக்கைப் பாத்தாங்க.........அதுக்குப் பலன் இப்போ கிடைக்குது. ஒரு குழந்தைன்னு சொன்னா, அதெ கவனிச்சு வளர்க்க வேண்டியது தாயும் தகப்பனும்தானே?"

பழனியின் கோபம் அத்துடன் அடங்கி விடவில்லே.

அவன் அவளுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டே கேட்டான்:

"உங்க அப்பனும் அம்மாவும் உன்னேக் காட்டியே சாயுபுவை ஏமாத்தித் தோணியும் வலேயும் சம்பாதிச்சுட்டாங்க போலிருக்குது. பேஷ்! நல்ல ஏற்பாடுதான்!"

பழனி மனத்தில் இந்தச் சந்தேகம் எழுவது இயற்கை தானே? அந்த ரகசியத்தை மட்டும் அவள் பழனியிடம் சொன்னதே இல்லே. அதையும் அவனிடம் சொல்லிவிட வேண்டும் என்றுதான் அவளுக்குத் தோன்றிற்று. இன்னொரு

சந்தர்ப்பத்தில் அதையும் சொல்லிவிட வேண்டியதுதான் பழனி கறுத்தம்மாவைக் கடுமையாக எச்சரித்தான்:

''இந்தாப் பாரு, உன்னெ உங்க் அப்பனும் அம்மாவும் வளத்தாப்போலே, உன் வயத்திலே இருக்கிற குழந்தையையும் வளத்தணும். தெரிஞ்சுதா அம்மா? அது பொண்ணுப் பிறந்ததுன்னு, கடற்கரை பயல்களுக்குத் தொல்லே கொடுத்துக்கிட்டு இருக்கணும். தெரிஞ்சுக்கோ.''

''மாட்டேன்'' என்று கறுத்தம்மா மிக உறுதியாகச் சொன்னுள். அவன் என்ன சொல்லுகிருன் என்பது அவளுக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது. அவளுடைய கருவில் வளரும் குழந்தை, அவளேப்போல் வளர ஒருநாளும் இடம் கொடுக்க மாட்டாள் அவள். அவளுக்கு நேர்ந்த துன்பங்களோ, கஷ்டங்களோ அந்தக் குழந்தைக்கு ஏற்படக்கூடாது. அவள் அனுபவித்தது போதும். அதிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய படிப்பினையையும் அவள் தெரிந்துகொண்டு விட்டாள்.

வாழ்நாளிலேயே மிகவும் சோதனேயான காலம் அது. ஏன்றுலும் அதிலும் கறுத்தம்மாவுக்கு ஒரு மன அமைதி பிறந்தது. அன்றுதான் அவனும் அவளுடைய வயிற்றில் இருக்கும் சிசுவைப் பற்றி பிரஸ்தாபித்தான். அதுபோல் அவளும் தான் செய்த தவற்றை எல்லாம் அவனிடம் வாய்விட்டுச் சொன்ருள். ஒன்று உண்மை. ஊர்முழுவதும் அவளேப் பற்றி என்ன பேசிக் கொண்டிருக்கிறதோ அந்த அவச்சொல்லேப் பழனி நம்பத் தயாராக இல்லே. அப்பா! இது எத்தனே பெரிய விஷயம்! இந்த ஒரு விஷயமே எத்தனே நிம்மதியைத் தரும் அவளுக்கு!

அவளும் அவள் கணவனும் தற்காலிகமாக அந்த வீட்டில் குடியிருந்தனர். அவ்வளவுதான். நிரந்தரமாக அங்கேயே குடியிருக்க வேண்டும் என்ற உத்தேசமும் கிடையாது அவளுக்கு. வேறு வழி எதுவும் புலப்படாத அவள், ஓர் அனுதைக் குழந்தைபோல் அவன் அருகே சென்று அமர்ந்தாள். அவன் அவளேக் காலால் உதைக்காமல் இருந்ததே பெரிய விஷயம்தான். ஆமாம்; பெரிய விஷயம்தான் அது!

அவள் கேட்டாள்:

"இனிமே நாம என்ன செய்யிறது?"

பழனிக்கு அந்த யோசனையே இல்லே: கவலேயும் இல்லே.

அவள் மற்றப் பெண்கள் எல்லோரையும் வாயாரத் திட்டினுள்:

"மகா துரோகிகள்! குடிபடையிலே போயி ஏதோ வியாபாரம் பண்ணி வயத்தெக் கழுவுவோமுன்னு நினேச்சா, அதுக்கும் விடமாட்டாங்க. கடலிலெ வேலேக்குப் போகுதுக்கும் குறுக்கே நிப்பாங்க."

பழனி மிகவும் உணர்ச்சி வசப்பட்டான். திடமான குரலில் அவன் அவளேப் பார்த்துச் சொன்னுன்:

"இந்தாப் பாரு, நான் ஒரு மரக்கான். இருந்தா மரக்காஞத்தான் இருப்பேன்: சாவுதுன்னுலும் மரக்காஞத்தான் சாவேன்."

பழனியிடம் பௌருஷம் துளும்புவதைக் கண்டாள் கறுத்தம்மா. உடல் உழைப்பில் ஈடுபட்டிருந்ததன் விளேவாக, அவன் உடலில் உருண்டு திரண்டிருந்த சதை துடிதுடித்தது. அதைக் கண்டு அவள் மிகவும் பெருமிதம் அடைந்தாள். அவளே அவனுடைய பலம்மிகுந்த தோள்கள் என்றும் காப்பாற்றும்.

பல்லே நறநறவென்று கடித்தவாறு பழனி சொன்னுன்:

"எனக்குத் தோணியேறிக் கடணிக்குப் போக உரிமையில்லேன்னு சொல்ல எவனுக்கு அதிகாரம் இருக்குன்னு கேக்கறேன்? கடலுக்குச் சென்று மீன்பிடிக்கப் பொறந்தவன் நான். கடலில் இருக்கிற சொத்தெல்லாம் எனக்கும் சொந்தந்தான். இல்லேன்னு யாரு சொல்ல முடியும்?"

பழனியின் மனத்தில் ஆவேச உணர்ச்சியும் உரிமைத் தாகமும் நிரம்பி வழிந்தன. வரம்பின்றிக் குவிந்து கிடக்கும் சொத்தின் வாரிசு அவன்!

"ஒண்ணுமட்டும் சொல்லிப்புடறேன். என்ன வந்தாலும் சரி, மரக்கான் மண் வெட்டவோ, மம்மட்டி பிடிக்கவோ போகமாட்டான். அந்தச் சோலிக்கு நானும் போகமாட்டேன். அதுமட்டும் தீர்மானம்தான்."

இவ்வாறு கூறிய பழனி, கறுத்தம்மாவுக்கும் ஆறுதல் வார்த்தைகள் கூறிஞன்:

"கறுத்தம்மா, நீ பாட்டுக்குச் சும்மா இரு. கடலிலே ஏகமா விளையுது. நான் நமக்கு வேண்டியதைச் சம்பாதிச்சுப் பேன்."

கடலில் வலைவீசி மீன் பிடிக்கும் நேரம் அது. ஐந்து வயசி லிருந்து கடலில் வேலைசெய்து வாழ்ந்தவன் அவன். இப்போது வாழ்நாளில் முதல் தடவையாக அவன் வீட்டோடு உட்கார்ந்து இருக்கும்படி ஆகிவிட்டது.

பழனி மேற்குத் திசையைக் கூர்ந்து நோக்கினான். நடுக் கடலில் தோணிகள் சென்றுகொண்டிருப்பது தெரிந்தது. அன்று கடலில் அயிலையும், குறிச்சியும் கிடைப்பதற்கான லட்சணங்கள் புலனாகின்றன. பழனிக்கு மன அமைதி இல்லை. என்ன செய்ய முடியும் அவனால்? ஆழமான வெறுப்புணர்ச்சி யுடன் அவன் முணுமுணுத்துக் கொண்டிருந்தான். அவனது ஆண்மை உணர்வு கொண்டு வீறிட்டு எழுந்தது.

கறுத்தம்மாவுக்கும் ஒரு புத்துணர்ச்சி பிறந்தது. அவன் ஒரு மரக்கான் என்றால், அவள் ஒரு மரக்காத்தி. அவளுக்கு என்ன குறை? அவளும் கடலின் சொத்தை, செல்வத்தை ஆண்டு அனுபவிக்கப் பிறந்தவள்தான். பட்டினி கிடந்தாலும் எந்த மரக்காத்தியும் தேங்காய் நார் உரிக்கவோ, கயிறு திரிக்கவோ செல்லமாட்டாள்.—அந்த வேலைகள் எல்லாம் அவர்களுக்கு என்று ஏற்பட்டது அல்ல. அவள் கேட்டாள்:

"நான் வியாபாரத்துக்குப் போகட்டுமா?"

பழனி தடுத்தான்:

"வேண்டாம், நீ வீட்டோடு இருந்தாப் போதும். நீ இந்த வயத்தையும் தூக்கிக்கிட்டுத் தலைச்சுமையோடு அலைய வேண்டாம்."

அவள் சொன்னாள்:

"எனக்கு அப்படி ஒண்ணும் ஏலாமப் போயிடலெ. இன் னும் என் உடம்பு அப்படி ஒண்ணும் சோந்து போகல்லே."

பழனி மிகுந்த தெம்போடு பதில் சொன்னான்:

"உன்னைக் காப்பாத்த முடியும் என்கிற தைரியத்திலே தான் நான் உன்னைக் கூட்டிக்கிட்டு வந்தேன். எனக்கு இண்ணைக்கும் அந்தத் தைரியம் உண்டு. நீ சும்மா இருந்தாப் போதும்."

அவனுடைய யோசனையை அப்படியே ஏற்றுக் கொள்ளக் கறுத்தம்மாவுக்கு மனமில்லை. இருந்தாலும் அவனுடைய பேச்சில், ஊடுருவி நின்ற ஒரு விஷயத்தைக் கவனிக்க அவள் தவறவில்லை. மாபெரும் தவறு ஒன்று செய்துவிட்டோம் என்ற எண்ணத்தில், அதுவரையிலும் அவளுக்குத் தன் எதிர்கால வாழ்வைப்பற்றி நம்பிக்கை இருக்கவில்லை. அதுபற்றி மனத்தில் பீதியும் அச்சமும்தான் நிறைந்து இருந்தது. இப்போது பழனியோ அவளை வேலைக்குச் செல்லவேண்டாம் என்று சொல்கிறான். அப்படி அவன் சொல்லும்போது, அந்தப் பேச்சினுள், 'உன்னை எப்படியும் காப்பாற்றுவேன்' என்ற உறுதிமொழியும் ஊடுருவி நிற்கிறதல்லவா?

அவள் வாழ்நாளில் அந்தத் தினத்தை அவளால் என்றும் மறக்க முடியாது. சொல்லப்போனால், ஒரு மனைவியின் ஸ்தானத்தை அவள் பெற்றுக்கொண்டதே அன்றுதான் என்று சொல்லிவிடலாம் அல்லவா? இப்போது கறுத்தம்மாவுக்கு என்ன குறை? அவளுடைய கணவன் அளவுக்கு மனவுறுதிக்கொண்ட ஆண் பிள்ளை அந்தக் கடற்கரையிலே இல்லை. கணவன்—மனைவி உறவில் என்ன என்ன அம்சங்கள் அடங்கியிருக்கின்றனவோ, அத்தனை விஷயங்களைப் பற்றியும் பரஸ்பரம் கலந்துகொண்டு, உறுதியான முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டனர். இன்னும் பேசி முடிவு செய்ய வேண்டிய விஷயம் ஒன்றே ஒன்றுதான். ஒரு விஷயம்தான் எஞ்சிநின்றது.

பழனி சொன்னான்:

"கறுத்தம்மா, ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிப்புடறேன். நீ உன் பெயரையும் மானத்தையும் காப்பாத்திக்கணும். அந்த ஒண்ணும் செஞ்சாப் போதும் நீ. இந்தக் கடற்கரையிலே ஒரு மரக்காத்திபோல நீயும் தலை நிமிர்ந்து வாழ முடியும்."

அவனுடைய தெளிவான பேச்சைக் காது கொடுத்துக் கேட்டாள் கறுத்தம்மா. அன்றுவரையிலும் ஒவ்வொரு சமயமும் அவள்தான் அவனுடைய காலைப் பிடித்தும் நாடியைத் தாங்கியும் இந்த விஷயத்தைப்பற்றி உறுதி கூறிக்கொண்டிருந்தாள். இப்போது அவனே அதை அவளிடம் கேட்டுக்

கொள்கிறன். அது வரையிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தக் கோரிக்கையை அவன் அவளிடம் எழுப்பியதில்லை.

உண்மையில் ஒரு கணவன் தனது மனைவியிடம் இவ்வாறு ஒரு கோரிக்கை எழுபபுவது அழகில்லைதான். அதற்கு அவசியமும் இருப்பதில்லை. ஆனால், அப்படியே அவன் அந்தக் கோரிக்கையை எழுப்பினாலும் மனைவிக்கு அதில் திருப்தி பிறக்கத்தானே செய்யும்? சொல்லப்போனால் இந்தக் கோரிக்கை அம்சம் திருமணச் சடங்குகளிலேயே அடங்கியிருக்கும் ஒன்றுதானே?" 'நீ ஒழுக்கத்தோடு வாழ்ந்து வரவேண்டும்.'—தாம்பத்தியத்தின் முக்கியமான கண்ணி அது; அடிநாதம் அது.

மனத்தில் பேருவகையும் திருப்தியும் குமிழியிட, அவள் அவனுடைய மார்பில் சாய்ந்து கொண்டாள். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அவனுடைய இதயத்தையே நோக்கி மன்றுடுவது போல் அவள் கேட்டாள்:

"ஏன் இப்படியெல்லாம் பேசுதே? நான் ஏதோ தப்புச் செய்துப்புட்டேன். இன்னமுமா மானம் மரியாதை இல்லாம நடந்துப்பேன்?"

பழனி அவளுடைய கன்னத்தை வருடிக்கொண்டிருந்தான். அதோடு அவன் அவளுக்கு ஆறுதல் கூறினன்:

"அழாதே கறுத்தம்மா, அழாதே!"

ஆறி அடங்கிப் போயிருந்த உணர்வு அன்று மீண்டும் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. அவனுடைய வலிமை மிக்க தோள்கள் அவளை இறுகத் தழுவிக்கொண்டபோது மூச்சுத் திணறிற்று அவளுக்கு.

பழனி ஓர் அனுதையாக இருந்தான். பின்னால் அவனுக்கு ஒரு துணை கிடைத்தது. இப்போது அனுதையாக இருந்த அவளுக்கும் அண்டி வாழ ஓர் ஆண் துணை கிடைத்து விட்டது. அவனுக்கு வேறு யார்? அவள் மட்டுந்தான்! அவளுக்கும் வேறு யார், அவனைத் தவிர? அவன் மட்டும்தான் அவளுக்கும் துணை. அவர்கள் கைகோத்து ஓர் உயிராய் இணைந்து வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிகூடி முன்னேறிச் செல்வார்கள்.

தோணிகள் கரைவந்து சேர்ந்தன. கரையில் நின்றவாறு வியாபாரச் சந்தடியைக் கவனித்துக் கொண்டிருந்தான் பழனி.

அவனுடைய பழைய கூட்டாளிகள் எல்லோரும் அவனைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள் என்றும், வஞ்சம் தீர்த்துக் கொண்டு விட்ட உற்சாகத்தில் அவர்கள் ஏகத்தாளமாகத் தன்னைக் கேலி செய்கிறார்கள் என்றும் பழனிக்குத் தோன்றிற்று. 'என்னைத் தோற்கடிக்க முடியாது' என்ற மனத்தினுள் முணுமுணுத்துக் கொண்டான் அவன். தோல்வி காணப் பிறந்தவன் அல்ல பழனி.

கறுத்தம்மா பழனியிடம் ஒரு விஷயத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்பினாள்:

"எனக்கு ஒரு சந்தேகம். இவங்க வீட்டு மரக்காத்திகளும் தப்பு பண்ணியிருக்க மாட்டாங்களா?"

"பண்ணி இருப்பாங்க. சந்தேகமா அதிலே? அத்தனையும் திருட்டுக் கழுதைகள். வெளியிலே விடாம மறச்சு வைச்சுக் கிட்டிருக்கும்."

அவர்கள் ரகசியமாக மூடி மறைத்து வைத்துக்கொண்டிருக்கும் கதைகளையெல்லாம் தெரிந்துகொண்டு விட வேண்டும் என்று தோன்றியது கறுத்தம்மாவுக்கு. ஒவ்வொருவருடைய கதைகளையும் தெரிந்து வைத்துக்கொண்டு, அவர்கள் முன்னால் நின்றுகொண்டு விரலை மடக்கி எண்ணிக் கணக்கிட்டு விளாசி விடவேண்டும். மண்டையில் ஓங்கி அடித்தாற்போல் அதையெல்லாம் சொல்லும் பேச்சுச் சாமர்த்தியமும் உண்டு அவளுக்கு.

கறுத்தம்மாவும் பழனியும் அடிப்படையான விஷயங்களைப் பற்றிக் கலந்துபேசி ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டனர். பழையபடி அவர்கள் இருவரும் இணைந்து ஒன்றாகி விட்டனர். இனிமேல் என்ன செய்யவேண்டும்? வாழ வேண்டாமா?

"என்ன செய்யணும்? அதைப்பத்தி ஒரு வார்த்தைகூடப் பேசலியே?"

அவளுக்கு அந்தக் கவலையும் அதைப்பற்றிய எண்ணங்களும் உண்டு. மிகவும் முக்கியமான விஷயம் அல்லவா அது?

கறுத்தம்மா தொடர்ந்து பேசினாள்:

"என் கையிலே பன்னண்டு ரூபாய் இருக்குது."

அது மிகவும் சிறுதொகை. அதை வைத்துக்கொண்டு எதுவும் செய்ய முடியாது. அந்தப் பணத்தால் ஒரு சிறு கைவலை கூட வாங்க முடியாது. சிறு வலை ஒன்று வாங்குவதற்குக்கூட முப்பது ரூபாய் வரையிலும் ஆகும்.

கறுத்தம்மா மனத்தில் ஒரு யோசனை பளிச்சிட்டது:

"ஒரு தூண்டி வாங்கினா என்ன?"

"தூண்டி வாங்கினா, அதுக்கு ஒரு சின்னத் தோணியும் வாங்கணுமே?"

"அப்புறம் உதவிக்குக்கூட ஓர் ஆளையும் வச்சுக்கிடணும். யாரு வருவாங்க நாம கூப்பிட்டா?"

பழனி அலட்சியமாகப் பதில் சொன்னான்:

"விட்டுத்தள்ளு கழுதையை. சின்னத் தோணி ஒண்ணு இருந்தா, நான் தன்னந்தனியாப் போயிட்டு வருவேன். அன்னுடம் பாட்டுக்குக் காசு பாத்துப்புடுவேன்."

தூண்டில் போட்டு மீன் பிடிக்க வசதியான தோணிகள் அந்தக் கடற்கரையில் ஐந்தாறு இருந்தன. அதில் ஒரு தோணியை வாடகைக்குக் கேட்டுப் பார்க்கலாமே என்று எண்ணினாள் கறுத்தம்மா.

"ஒரு பய தரமாட்டான். ஏதாவது ஆபத்து வந்தாத் தோணியும் போயிடுமேன்னு பயப்படுவாங்க."

"அப்புறம் நாம என்னதான் செய்ய முடியும்?"

பழனி சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்துவிட்டுச் சொன்னான்:

"அந்தப் பணத்தை எடு. நான் போயி ஒரு தூண்டி வாங்கிக்கிட்டு வாரேன்."

கறுத்தம்மா பணத்தை எடுத்து அவன் கையில் கொடுத்தாள். பழனி தூண்டில் வாங்கிவரச் சென்றான்.

உலகில் சிலர்தான் வாழப் பிறக்கிறார்கள். அவர்களில் ஒருவனின் மனைவியாகும் பாக்கியம் பெற்றவள் அதிருஷ்டசாலிதான். மீண்டும் ஒரு வீடு, தோணி வலை போன்ற தூரகால லட்சியங்கள் அவர்கள் கண்களுக்குப் புலப்பட ஆரம்பித்தன. மண்ணார்சாலைத் திருவிழாவும் வந்து போய்விட்டது. அதனால் என்ன? மீண்டும் வராதா?

தனக்குப் பிறக்க விருக்கும் குழந்தை பெண்ணாய் இருக்கக் கூடாதே என்று மனமுருகப் பிரார்த்தித்தாள் கறுத்தம்மா. பெண் ஜென்மம் எடுத்துப் படாதபாடு பட்டுவிட்டாள், அவள். போதும். பிறக்கப் போகிற குழந்தையும் பெண்ணாகப் பிறந்து விட்டால், நடந்துபோன விஷயங்கள் எல்லாம் மீண்டும் அவளுடைய வாழ்விலும் நடைபெறு என்பது என்ன நிச்சயம்? அப்படியே பிறக்கிற குழந்தை பெண்ணாகப் பிறந்து விட்டாலும், அந்தக் குழந்தையை எந்த ஆண் குழந்தை யுடனும் பழகவிட மாட்டாள் அவள். ஆண் குழந்தையாகப் பிறந்து விட்டது என்றால்..................? உலகில் எந்தப் பெண்ணின் வாழ்விலும் துயரமேற்பட அவன் காரணமாக இருக்காதபடி பார்த்துக் கொள்வாள்.

சோறும் கறியும் ஆக்கி முடித்தாள் கறுத்தம்மா. முன் னொரு நாள் உணவுகொண்டதுபோல் அன்றும், தன் கணவன் அருகே அமர்ந்து இருவரும் ஒரே பாத்திரத்திலிருந்து எடுத்து உண்ண வேண்டுமென்ற ஆசை பிறந்தது. அவனுக்கு அவளே சோறு ஊட்டுவாள்! ஒரு வாய்க்குக்கூடப் பற்றாத சின்னஞ்சிறு உருண்டைகள் அல்ல; பெரியபெரிய உருண்டைகள். இவ்வாறு கறுத்தம்மா ஏதேதோ கனவு கண்டுகொண்டிருந்தாள். இனி மேல் வயிற்றுக்கு உணவின்றிப் பட்டினிகிடக்க நேர்ந்தாலும் வருத்தமில்லை அவளுக்கு. கணவன் அவளிடம் மிகுந்த பாசங் கொண்டிருக்கிறான். அது ஒன்று போதும் அவளுக்கு. வேறு ஒன்றும் வேண்டாம். கடவுள் அவளைக் காப்பாற்றி விட்டார்.

அந்தி சாய்ந்ததும் தூண்டிலோடு வெளியே கிளம்பினான் பழனி. அவன் மனத்தில் என்ன திட்டமிட்டுச் செல்கிறான் என்பதைக் கறுத்தம்மா தெரிந்துகொள்ளவேண்டும். சொன் னால்தான் விடுவேன் என்று அவள் வழிமறித்தாள். கடற் கரையில் இருக்கும் யாருடைய தோணியையேனும் கடலுக் குள் தள்ளி, அதிலேறிச் சென்று மீன்பிடித்துக்கொண்டு, விடிவ தற்குமுன் திரும்பிவந்து என்பதுதான் அவனுடைய திட்டம்.

"நான் என்ன செய்ய முடியும்? கடல்தானே எனக்கும் சோறு போடணும்?" என்றான் அவன்.

கறுத்தம்மாவைக் கிலி பிடித்துக்கொண்டு விட்டது. இரவு நேரத்தில் அவன் தன்னந்தனியாகக் கடலுக்குச் செல்வதா? என்ன என்ன பேராபத்துக்கள் நேருமோ?

அவள் சொன்னாள்:

"ஐயோ! வந்து.........அது........."

"என்ன சொல்லு?"

"தனியாகவா?"

"நான் கடல்தாய்க்குப் பொறந்தவன்."

அவன் அவளைத் தாண்டி நடந்து முன்னேறிச் சென்று கொண்டிருந்தபோதே அவள் சொன்னாள்:

"மீனுக்குப் பின்னாலே, தன்னை மறந்து அப்படியே நடுக் கடலுக்குப் போயிறப் படாது!"

'மாட்டேன்' என்று அவன் பதில் சொல்லவில்லை.

அன்றிரவு கறுத்தம்மாவால் தூங்க முடியவில்லை. வீட்டுக்கு மேற்குப்பக்கம் இருந்த தென்னந் தோப்பில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் அவள். பழனி சற்றுத் தென்புறமாகத் தோணியோட்டிச் செல்வதைக் கண்டாள்.

கறுத்தம்மாவின் இதயத்தின் அடியிலிருந்து எழுந்த பிரார்த்தனை, அவனை எந்த விபத்திலிருந்தும் காப்பாற்றும் கவசமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதிகாலையில் எல்லோரும் விழிப்பதற்கு முன்னர், பழனி கரை வந்து சேர்ந்து விட்டான். அன்று அவனுக்குச் சிறிது மீன் கிடைத்தது. பொழுது நன்றாகப் புலருவதற்கு முன் கார்த்திகைப் பள்ளிச் சந்தையை அடைந்துவிட்டான் அவன். அன்று மீன் விற்றதில் எட்டு ரூபாய் கிடைத்தது.

சிறு தோணி ஒன்று இருந்தால் எவ்வளவோ வசதியாக இருக்கும். அன்றாடம் கிடைக்கும் காசில் மிச்சம் வைத்து அதை வாங்குவதென்றால் அதற்கு எத்தனை காலம் ஆகுமோ? கைவசம் நூற்றைம்பது ரூபாய் இருந்தால் பழைய தோணி ஒன்று வாங்கலாம். ஆனால் ஒரு வழி இருக்கிறது. கறுத்தம்மா விடம் கொஞ்சம் நகை இருந்தது. அதை விற்றுத் தோணி வாங்க அவனுக்கு விருப்பம் இல்லை.

"அதெல்லாம் உன்னுடைய பேராசை பிடிச்ச அப்பா போட்டதில்லையா?" என்றான் அவன்.

அவள் சொன்னாள்:

"அப்படியானாலும் அது எனக்குச் சொந்தமானதுதானே? அம்மாதான் பண்ணிப் போட்டா?"

"இருந்தாலும் பொஞ்சாதிக்குச் சொந்தமான நகையை வித்து..."

"அப்பொ நான் என்ன உங்களுக்குச் சொந்த மில்லாத வேத்து மனுஷியா?"

அந்த எண்ணத்தில் அவன் அப்படிச் சொல்லவில்லை. ஆனாலும், மரக்காத்தியின் நகையை விற்றுத் தோணி வாங்குவது அவமானம்தான்!

இப்படியெல்லாம் சொன்னான் என்றாலும், கடைசியில் அவன் அவளுடைய நகையை விற்பதற்கு உடன்பட்டான். அதன்மூலம் தோணி ஒன்றும் வாங்க முடிந்தது. தோணி அதைவிடவும் சற்றுப் பெரிதாக இருந்திருந்தால், எவ்வளவோ வசதியாக இருந்திருக்கும். ஆனால், கையிலிருந்த பணத்தை வைத்து அந்தச் சிறிய தோணியைத்தான் வாங்க முடிந்தது.

பழனி சொந்தமாகத் தோணி வாங்கிய செய்தி ஊர் முழுவதும் பரவியது. அதைப் பற்றியும் என்ன என்ன கதைகள் திரித்தார்களோ, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்! தோணி வாங்குவதற்குத் துலுக்கன் பணம் கொடுத்தான் என்று சரடு திரித்து விடலாமே!

பழனியின் புதிய முயற்சி மிகுந்த பயனைத் தந்துகொண்டிருந்தது. சில சமயம் அவனுக்கு ஐந்து பத்து கூடக் கிடைக்கும். சில சமயம் ஒன்றும் கிடைக்காமலும் போய்விடும். அவனுடைய தசைநார்கள்—பெரிய தோணியின் துடுப்பு வலித்து உரம்பெற்ற தசைநார்கள்—இந்தச் சின்னஞ்சிறு தோணியைச் செலுத்துவதில் திருப்தி அடையவில்லை. அவனைப் பொறுத்த வரையில் இந்தத் தோணி மிகவும் சிறியது. ஒரு வேலையில் ஈடுபட்ட உணர்வே தட்டவில்லை அவனுக்கு. அதில் எத்தனை நேரம் உழைத்தாலும் சோர்வு மேலிட்டு ஆளைக் கீழே தள்ள மாட்டேன் என்கிறது. அதோடு இந்தத் தோணியும் இதன் துடுப்பும் அவன் கைக்கு ஒரு பொருட்டாக இல்லை. சொந்தமாகப் பெரிய தோணி ஒன்று வாங்கிவிடவேண்டும் என்று அவன் அடிக்கடி எண்ணலானான். பெரிய தோணியின் விளிம்

பில் மிகப் பெரிய துடுப்பு ஏந்தி நிற்கவேண்டும் அவனுக்கு. சாகரைப் பருவத்தில் நன்ருக உழைக்கவேண்டும். அது முடிந்ததும், பழையபடி வாலோட்டப் பருவத்தின் மும்முரம் ஆரம்பமாகி விடும்......

அப்போது கறுத்தம்மா அவனிடம் கேட்டாள்:

"ஆளு, பெரிய தோணியிலே தன்னந் தனியாகப் போக முடியுமா? கூட ஒருத்தனும் வரமாட்டேன் என்பானே!"

"தோணி சொந்தமாயிட்டா, இந்தப் பயல்கள் நாய் மாதிரிப் பின்னுலே அலேவாங்க."

ஆனல், பழனி ஒன்றை மட்டும் உறுதியாக எண்ணித் தீர்மானம் செய்துகொண்டு விட்டான்.

"இனிமே என்ன வந்தாலும் சரி, இன்னொருத்தன் தோணியிலே நான் கடலுக்குப் போக மாட்டேன்."

கறுத்தம்மா கர்ப்பிணியாயிருந்ததால் ரொம்பவும் சோர் வடைந்து போயிருந்தாள். ஒவ்வொரு நாளும் அவள் வயிறு பெரிதாகிக்கொண்டே வந்தது! கடலுக்குச் செல்லுகிறபோது பழனி வீட்டைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தான். முன் போல் நீண்ட நேரம் கடலுக்குள் தங்கவும் மனம் வரவில்லே. ஒருநாள் கடலிலிருந்து அவன் திரும்பி வீடு வந்து சேர்ந்த போது, வீட்டு வாசலில் நாலேந்து பெண்கள் கூடி நிற்பதைக் கண்டான். அவர்கள் முகம் மலரச் சிரித்தபடி அவனேப் பார்த்துச் சொன்னுர்கள்:

"பொண் குழந்தை."

அந்தக் குழந்தையைப் பேறு பார்க்க வந்திருந்த கிழவி குளிப்பாட்டினுள். 'குவா குவா' என்று குழந்தை வீறிட்டு அலறிற்று. கிழவி குழந்தையைத் தூக்கிப் பழனியின் கையில் கொடுத்தாள். குழந்தையைக் கரத்தால் எப்படி ஏந்துவதென் பதே பழனிக்குத் தெரியவில்லே. அன்றுவரை ஒரு குழந்தை யைக் கையில் எடுத்தவன் அல்ல அவன்.

ஒருநாள் பழனி, கறுத்தம்மா தனியாக இருக்கும் சந்தர்ப் பம் பார்த்து, அவளிடம் ஒரு கேள்வி கேட்டான்:

"என்ன கறுத்தம்மா, நீ ஒரு மாதிரியா இருக்கே?"

அவள் முகம் களேயிழந்து காணப்பட்டது. உற்சாகம் இல்லே அவளிடம்!

"பெண் குழந்தை பிறந்து போச்சேன்னு வருத்தமா?"

அவள் சொன்னாள்:

"ஆண் குழந்தை பிறந்திருந்தா..."

அவள் தொடர்ந்து சொன்னாள்:

"உங்களுக்கு அந்த எண்ணமே தோணலியா?"

"ஓ! நான் அப்படி ஒண்ணும் நெனச்சுக்கிடலே."

"சும்மா சொல்றே" என்றாள் அவள்.

"இல்லே. நிஜமாத்தான். ஆணு இருந்தா என்ன? பொண்ணு இருந்தா என்ன?"

தன் மனத்தில் உறுதியாக எண்ணிக்கொண்டிருந்த ஒரு விஷயத்தை அவனிடம் சொன்னாள்:

"என்ன இருந்தாலும் ஒன்று மட்டும் நிச்சயம். இந்தக் குழந்தையை நான் கறுத்தம்மா மாதிரி வளர விடமாட்டேன்."

பழனியும் சிரித்துக்கொண்டே பதில் சொன்னான்:

"அப்படியானா பழனியும் ஒரு செம்பன்குஞ்சுவாக இருக்க மாட்டான்."

குழந்தை பிறந்ததில் கறுத்தம்மாவுக்கும் பழனிக்கும் புதிய நம்பிக்கை பிறந்தது. இப்போது அவர்கள் தங்களுக்காக மட்டுமல்ல, அந்தக் குழந்தையின் நன்மைக்காகவும் வாழ வேண்டியிருக்கிறது. அவர்களை நம்பித்தானே அந்த உயிர் உலகில் தோன்றியிருக்கிறது? பழனி, குழந்தை பிறந்ததில் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். கடலில் மீன்களின் பாரம் அழுத்த நீரில் அமிழும் தூண்டிலைக் கவனித்துக்கொண்டிருக்கும்போது, வானத்துத் தேவதை போன்ற தன் குழந்தையின் நிர்மலமான கண்கள் அவன் நினைவுக்கு வரும். அப்போதே திரும்பி வீட்டை அடைந்து குழந்தையின் முகத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலுணர்ச்சி மனத்தில் பொங்கும். குழந்தையை எப்படி மடியில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் கறுத்தம்மா பழனிக்குச் சொல்லிக் கொடுத்தாள். சில சமயம் அவள் அவனைக் கடிந்து கொள்வதுகூட உண்டு.

"எப்போதும் குழந்தையைத் தூக்கிக்கிட்டுத் திரிஞ்சா அது முரண்டு பிடிச்சுப் போயுடும்."

பெரும் தவறு ஒன்று செய்து விட்டதுபோல், குழந்தையைக் கீழே விடுவான் பழனி.

கறுத்தம்மாவுக்கோ, குழந்தை அவள் மனத்தில் புதிய பிரச்சினைகளைக் கிளப்பக் காரணமாக அமைந்தது. அவளுடைய தாய்க்குக் குழந்தையைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. குழந்தையின் முகத்தைப் பார்க்கிறபோது, கறுத்தம்மாவுக்குப் பஞ்சமியின் நினைவு வரும். அந்தக் காலத்தில் பஞ்சமி இப்படித் தான் இருந்தாள். இந்தக் குழந்தையைப் போலவே கையைக் காலை உதறி அடம் பிடித்து அழுத பஞ்சமியிடம் கறுத்தம்மா உயிரையே வைத்திருந்தாள். பஞ்சமியும் ஒரு தவறும் செய்தவள் அல்ல. சொந்தத் தங்கையிடம் இருக்கவேண்டிய உறவு கூடத் துண்டிக்கப்பட்டு விட்டது. பஞ்சமி இப்போது எப்படியிருக்கிறாளோ?

அந்த எண்ணமே அவள் மனத்தைச் சுட்டது.

ஒரு நாள் பழனி திரும்பி வந்து சேர்ந்தபோது புதிய செய்தி ஒன்று சொன்னான். செம்பன்குஞ்சு, சேர்த்தலையிலிருந்தோ அல்லது வேறெங்கிருந்தோ ஒருத்தியைக் கூட்டிக் கொண்டு வந்து தன்னுடன் வைத்துக்கொண்டிருக்கிறானாம்! நீர்க்குன்றத்துக்காரர்கள் யாரோ இதைச் சொல்லி ஊர் முழுவதும் பரப்பி விட்டார்கள்.

இந்தப் பேச்சு பழனி காதிலும் விழுந்தது. கறுத்தம்மா எந்த வீட்டில் பிறந்து வளர்ந்தாளோ அந்த வீட்டில், சக்கி குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்திவந்த அதே வீட்டில், முன்பின் தெரியாத ஒருத்தி நுழைந்து வீட்டரசி ஆகிவிட்டாள். அந்தக் குடும்பத்தைக் கட்டி வளர்த்தவளே சக்கி தான். அந்த வீட்டில் இன்று இருப்பதெல்லாம் சக்கிக்குச் சொந்தமான பொருட்கள்தாம். புதிதாக வீட்டினுள் நுழைந்திருக்கும் புதுப் பெண்பிள்ளை பஞ்சமியை என்ன பாடெல்லாம் படுத்துவாளோ?

சின்னக் குழந்தையை எடுத்துக்கொண்டு பழனி அங்கும் இங்கும் உலவுகிறபோது, அந்த நாளில் தன்னையும் செம்பன் குஞ்சு தூக்கிக்கொண்டு விளையாட்டுக் காட்டியதெல்லாம் கறுத்தம்மாவுக்கு நினைவு வரும். செம்பன்குஞ்சு அவளிடத்தில் உயிரையே வைத்திருந்தான்.

தனது பேச்சைப் பழனி செவி சாய்த்துக் கேட்கிறான் என்று பட்டபோது, அவனைக் கடிந்து கொள்வதற்குத் தனக்கு

உரிமையுண்டு என்பதையும் உணர்ந்துகொண்டபோது, சில சமயம் கறுத்தம்மா அவனிடம் தனது பிறந்த வீட்டு விஷயங்களையெல்லாம் கூட எடுத்துச் சொல்லத் துணிந்தாள்:

"கல்யாணமான அப்புறமும் நான் வீட்டோட இருந்திருந்தேன்னு......அப்பாவுக்கு அந்த ஆசைதான்."

அவன் கேட்டான்:

"முதுகெலும்பு இருக்கிற எந்த மரக்கானாவது பொஞ்சாதி வீட்டோட குந்திக்கிட்டு இருப்பானா?"

இன்னொரு நாள் அவன் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிக்கொண்டிருக்கும் சமயம் பார்த்து அவள் சொன்னாள்:

"குழந்தை முகத்தைப் பார்க்கற போதெல்லாம் எனக்குப் பஞ்சமி நினைவு அடிக்கடி வருது. அவ சின்னக் குழந்தையா இருக்கிறபோதெல்லாம் அவளை நான் கீழே விடமாட்டேன்."

கண்கள் பனிக்கத் தொடர்ந்து பேசினாள் கறுத்தம்மா:

"இப்போ அவ சித்தி கையாலே அடியும் உதையும் பட்டுக்கிட்டு இருக்காளோ என்னவோ?"

பழனி கேட்டான்:

"அப்படித்தான் இருக்கணும்னு உண்டா?"

"சித்தீன்னு ஒருத்தி வந்துட்டா, அவ அப்படித்தான் இருப்பா."

"நாம் என்ன செய்ய முடியும்?"

கறுத்தம்மா மிகுந்த ஜாக்கிரதையுடன் சொன்னாள்:

"எனக்கு அவளை ஒரே ஒரு தடவை பார்க்கணும்னு மனசு அடிச்சிக்கிடுது."

பழனி பதில் பேசவில்லை.

பின்னொரு நாள், அவர்கள் இருவரும் சந்தோஷமாகச் சிரித்து விளையாடிப் பேசிக்கொண்டிருந்தபோது, அவள் மீண்டும் அந்த விஷயத்தை நினைவுறுத்தினாள்:

"நான் ஒரு தடவை நீர்க்குன்றத்துக்குப் போயிட்டு வரட்டுமா! பஞ்சமியைப் பார்க்கத் துடிக்குது என் மனசு."

அந்தப் பேச்சையே அவன் விரும்பவில்லை என்பது தெரிந்தது.

மிகவும் கண்டிப்பான குரலில் பழனி கேட்டான்:

"என்னதான் வேணுமின்னு சொல்லுதே நீ? பஞ்சமியைப் பார்க்கணும் என்னும் சாக்குச் சொல்லிப்புட்டு, அந்தத் துலுக்கப் பயலைப் பார்க்கப் போறியா?"

அசந்துபோய் விட்டாள் கறுத்தம்மா. பழனி முற்றிலும் மாறிவிட்டான் என்று எண்ணியது சரியல்ல. அவனுள் குடி கொண்டிருக்கும் அசல் மனிதன் அப்படியேதான் இருந்து கொண்டிருக்கிறுன்.

அந்நிய மதத்தைச் சேர்ந்த அந்தத் துர்ப்பாக்கியசாலியின் கரிய நிழல் இன்னுமா அவன் மனத்திலிருந்து அகலவில்லை? ஒரு நாளும் மறைந்து போகாதா அது?

கால் வைத்த இடத்தில் வழுக்கி விட்டது என்பதைக் கறுத்தம்மா தெரிந்துகொண்டு விட்டாள். அவள் சொன்ஞள்:

"மாட்டேன். இனிமே என் ஆயுசிலெ ஒருநாளும் நீர்க் குன்றத்துக்குப் போகணும்னு சொல்ல மாட்டேன்; சொல்லவே மாட்டேன்."

அப்போதும் அவளுக்குச் சமாதானம் ஏற்படவில்லை. மனம் அமைதியின்றித் தத்தளித்துக் கொண்டிருந்தது. வாழ்க்கைத் தடம் புரண்டு பழையபடி நிலை குலைந்து சரிந்து விடுமோ என்ற அச்சமும் அவள் மனத்தில் எழுந்தது. கண்ணீர் வடித்தவாறு அவள் சொன்ஞள்:

"என் பேரிலே நம்பிக்கையில்லையா?"

இப்படி ஒரு நிழல் தோன்றி வாழ்க்கை பூராவும் அதன் கொடிய கால்களைப் பரப்பிக்கொண்டிருக்க வேண்டுமா? இதிலிருந்து மீள வழியே கிடையாதா? பழைய சாந்தியும் நிம்மதியும் பெற மீண்டும் முயன்ருக வேண்டும்.

# 17

ஒரு மனைவி காலமான பின்பும், அவளுடைய ஆத்மா கணவனுடைய படுக்கையறைக்குள் இரவு வேளையில் எட்டிப் பார்த்துக்கொண்டுதான் இருக்கும். தன் கணவனைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் காற்றிலும் அவள் கலந்து நிற்பாள். சாவுக்குப் பின் அவள் வாழ்வு இதுதான்.

'இன்னொருத்தியைக் கட்டிக்க.'

இருந்தாலும் சக்கி ஏன் இப்படிச் சொன்னாள்? கணவனுடைய மன ஓட்டத்தையும், அவனுடைய சூழ்நிலையையும் மனத்தினுள் எண்ணி ஆராய்ந்து பார்த்தபோது, இதுதான் புத்திசாலித்தனமான முடிவு என்று அவளுக்குப் பட்டிருக்கலாம். செம்பன்குஞ்சுவுக்கோ இன்னும் சபலம் தீரவில்லை. ஆனந்தமாக அனுபவித்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டு அவனுக்கு. அப்படியென்றாலும், அவன் மறுமணம் செய்துகொள்ள வேண்டியதுதானே? கணவன் இன்ப வாழ்க்கை நடத்தட்டும் என்ற எண்ணத்திலும் அவள் அந்த யோசனையை வெளியிட்டிருக்கலாம்.

சக்கி கண்ணை மூடியபோது, 'சக்கி, இனிமெ நான் என்ன செய்யணும்?' என்று பலமுறை செம்பன்குஞ்சு அவள் காதினுள் கேட்டுக்கொண்டிருக்க வில்லையா? மூடிக்கொண்டு விட்ட அவளுடைய இமைகளை விலக்கிக்கொண்டே அவன் வாய்விட்டுப் பிரலாபித்தான்:

"நாம சந்தோஷமா அனுபவிச்சுக்கிட்டு இருக்க வேண்டாமா சக்கி?"

செம்பன்குஞ்சு அவனுடைய வலக்கையை இழந்து விட்டான் என்றுதான் எல்லோரும் பேசிக்கொண்டனர்.

அது முற்றிலும் உண்மையும்கூட. அன்று அவனிடமிருந்த ஐசுவரியத்துக்கு அவள்தான் காரணம். அவளைப்போல் சாமார்த்தியசாலியான அரயத்தியை இனிமேல் அந்தத் துறையில் பார்க்க முடியாது.

இனிமேல் செம்பன்குஞ்சு என்ன செய்யப் போகிறான்? சின்னஞ்சிறு பெண்ணான பஞ்சமியால் குடும்பத்தை நிருவகிக்க முடியுமா? கறுத்தம்மாவோ மீண்டும் இங்கு வந்து தங்கப் போவதில்லை. அவன் அவளைக் கூப்பிடவும் போவதில்லை. எரிந்துபோன கொள்ளி வெளியேதான் கிடக்கவேண்டும்.

'இன்னொருத்தியைக் கட்டிக்க!'

அவளுடைய கடைசி வார்த்தை அவனுடைய காதில் முழங்கிக்கொண்டிருந்தது. அவன் அச்சகுஞ்சுவை யோசனை கேட்டான்.

"ஒருத்தியெக் கூட்டி வெச்சுக்கிட்டா என்ன?" என்று கேட்டான் அவன்.

"எனக்கும் அதுதான் சரின்னு படுது. அந்தப் பொண்ணுக்கும் அம்மா வேண்டாமா?"

"ஆனா ஒண்ணு, ஒருத்திகூட என் சக்கி மாதிரி இருக்காது எனக்கு."

"யாரு வந்தாலும் அவ மாதிரி இராது" என்று அச்சகுஞ்சுவும் ஆமோதித்தான்.

பஞ்சமியை நல்ல பெண்ணிடம் ஒப்படைத்துவிட்டுச் செம்பன்குஞ்சுவும் அச்சகுஞ்சுவும் பெண் தேடச் சென்றனர்.

இந்த விஷயத்தில் அச்சகுஞ்சு, செம்பன்குஞ்சுவிடம் உபதேசமாகச் சில விஷயங்கள் சொன்னான். செம்பன்குஞ்சு இப்போது பழைய நிலைமையில் இல்லை. இப்போது அவனுக்குச் சொத்துச் சேர்ந்துவிட்டது. ஊரில் நல்ல மதிப்பு மிகுகிறது. ஆக, இப்போது இருக்கிற அந்தஸ்துக்கும் வசதிக்கும் ஏற்ற பெண்ணைத்தான் இனிமேல் சேர்த்து வைத்துக்கொள்ள முடியும்.

அச்சகுஞ்சு சொன்னதைச் செம்பன்குஞ்சுவும் ஒப்புக்கொண்டான். அவன் மனம் இப்போது எவ்வளவோ சோர்ந்து போயிருந்தது. உடல் வலிவும் முன்போல் இல்லை. இனிமேல்

அவனால் கடினமாக உழைக்கவும் முடியாது. ஓய்வு எடுத்துக் கொண்டு நிம்மதியாக இருக்க வேண்டும் என்பதுதான் அவனுடைய ஆசையும்.

அவனுடைய மனத்தில் பழையபடி காம ஆசை தலைகாட்டியது. சக்கி வாழ்நாள் பூராவும் கஷ்டப்பட்டு உழைத்தவள் அவள் ஆனந்தமாக இருந்ததே இல்லை.

கடைசியில் செம்பன்குஞ்சுவும் அச்சகுஞ்சுவுமாக ஒருத்தியைத் தேடிக் கண்டுபிடித்தனர். அவள் வேறு யாருமல்ல; பள்ளிக்குன்றத்துக் கண்டங்கோரன் வலைக்காரனின் மனைவியாக வாழ்ந்த பாப்பிக்குஞ்சு. கண்டங்கோரன் இறந்து போய் விட்டான். பாப்பிக்குஞ்சு இப்போது கஷ்ட ஜீவனம் நடத்திக் கொண்டிருந்தாள்.

மறு யோசனைக்கே இடம் வைத்துக்கொள்ளவில்லை செம்பன்குஞ்சு. ஒரு நிமிஷத்தில் 'சரி' யென்று சம்மதித்து விட்டான். இன்ப வேட்கையைப்பற்றி அவன் மனத்தில் எழுந்த எண்ணங்களும் கற்பனைகளும் அவளிடமிருந்து வந்தவைதாமே!

அவளுக்கும் சம்மதம்தான். துறை அரயனுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் கூட இல்லை என்றும் அவள் சொல்லி விட்டாள். செம்பன்குஞ்சு கையோடு அவளை அழைத்துக் கொண்டு வீடுவந்து சேர்ந்தான். அவளோடு வயதுவந்த அவளுடைய பிள்ளையும் வந்தான்.

கண்டங்கோரனின் மறைவுக்குப்பின் பாப்பிக்குஞ்சு சிறிது திண்டாடினாள் என்றாலும், இன்றும் அவள் நல்ல அழகிதான். முகத்தில் நல்ல தேஜஸ்; ஓர் ஒளி. அவள் வீட்டிற்கு வந்தது முதலே பஞ்சமிக்கு அவளைப் பிடிக்கவில்லை. அவள் நல்ல பெண்ணிடம் சென்று என்ன என்னவோ சொன்னாள்.

நல்லபெண் அவளுக்கு ஆறுதல் சொல்லி உபதேசித்தாள்:

"அப்படியெல்லாம் சொல்லப்படாது!" என்றாள் நல்ல பெண்.

"சொன்னா என்னான்னு கேக்கறேன்?"

"உங்கப்பா கோவப்படுவாரு."

பஞ்சமிக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. மனத்தில் எதையெல்லாம் எண்ணிக்கொண்டு அழுதாளோ அவள்! யாரால் சொல்ல முடியும்?

தனது பழைய வீட்டை எண்ணி வாழ்நாளில் முதல் தடவையாகச் செம்பன்குஞ்சு வெட்கப்பட்டான். அழகே இல்லாமல் எப்படியோ இருப்பதாகப் பட்டது அவனுக்கு. என்ன செய்வது? பாப்பிக்குஞ்சு அந்த வீட்டில்தான் வாழ வேண்டியிருக்கிறது! அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே அவன் சொன்னான்:

"இது அந்தக் காலத்திலே—தோணி, வலை ஒண்ணும் இல்லாம இருந்த காலத்திலே—கட்டின வீடு. இதைப் பத்தி யெல்லாம் யோசிச்சுப் பார்க்கவே அவகாசமில்லாம இருந்தது, எனக்கும் சக்கிக்கும். அதுதான், பின்னாலெ பெரிசாக் கட்டிக் கிடலாம்னு இருந்துட்டோம்."

அவன் பாப்பிக்குஞ்சுவின் பெரிய வீட்டுக்கு எத்தனையோ தடவை சென்றிருக்கிறான். இப்போது அது மற்றொருவனுக்குச் சொந்தமாகிவிட்ட தென்றாலும், அந்த வீட்டில் வாழ்ந்திருந் தவள்தானே அவள்!

சொந்தமாக மனை ஒன்று வாங்கி அதில் புது வீடு கட்ட வேண்டுமென்று தீர்மானித்தான் செம்பன்குஞ்சு. அதை அவன் பாப்பிக்குஞ்சுவிடம் சொல்லவும் செய்தான்.

'இன்னொருத்தியைக் கட்டிக்க' என்று அவனைப் பார்த்து ஆணையிட்டுச் சென்ற அன்புருவமான அவன் மனைவி சக்கி, இந்தப் புதிய மனைவியை விரும்புவாளா என்பதை அறிந்து கொள்ளத் துடித்தான் அவன். பதிலை எதிர்பார்த்து அவன் அங்கும் இங்கும் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய சக்கி அப்போதும் அதே இடத்தில் இருந்து கொண்டிருக்கிறாள் என்பதில் அவனுக்குச் சிறிதும் சந்தேக மில்லை!

நல்லபெண் வீட்டில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்த பஞ்சமியைச் செம்பன்குஞ்சு தன் வீட்டுக்கு அழைத்தான். அவளுக்கு அன்பே உருவான சிற்றன்னையைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறான் அவன். அவளைப் பார்க்க வேண்டாமா பஞ்சமி? நல்லபெண் பஞ்சமியிடம் சொன்னாள்:

"போ அம்மா!"

கண்ணீர் விட்டுக்கொண்டே பஞ்சமி பதில் சொன்னாள்: "ஊஹூம்—நான் போகமாட்டேன்!"

"வேணும்னு, நானும் கூட வறேன்."

பஞ்சமியின் முகத்தை புடவைத் தலைப்பால் துடைத்தாள் நல்லபெண். 'அழக்கூடாது' என்று கண்டிக்கும் தோரணையில் சொன்னாள். அவளுடைய கையைப் பிடித்து அழைத்துச் சென்றாள் நல்லபெண். பாப்பிக்குஞ்சு பஞ்சமியைக் கூர்மையாகப் பார்த்துக்கொண்டே கேட்டாள்:

''ஏம்மா அழறே?''

செம்பன்குஞ்சுதான் பதில் சொன்னான்:

"சின்ன வயசுதானே அவ. அம்மாவை நெனைச்சிக்கிட்டு அழறா."

மகளைத் தனது உடம்போடு அணைத்துக்கொண்டே செம்பன்குஞ்சு சொன்னான்:

"நல்ல சித்தி பாரு...இங்கே பாரு......அழாதே."

போதிய சமாதானம் அவளுக்கு ஏற்பட வேண்டுமென்றால், இன்னும் அவன் என்னென்னவோ சொல்லியிருக்க வேண்டும். உன் அம்மா ஆணையிட்டுச் சொன்னதன் பேரில்தான் அவளை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன் என்றும் சொல்லலாம். முக்கிய நோக்கமே உன்னைக் கவனித்துக் கொள்ள ஒருத்தி வேண்டும் என்பதுதான் என்று கூடவே சேர்த்துச் சொல்லலாம். சிற்றன்னையைச் சொந்தத் தாயாக மதித்து நடந்து கொள்ள வேண்டும் என்று அவன் அவளுக்குப் புத்திமதி கூற வேண்டியதும் மிகவும் அவசியமான காரியம்தான்!

பாப்பிக்குஞ்சுவின் மகன் கங்காதரனே அந்த வீட்டில் ஒரு தொங்கு சதையாக வளைய வந்துகொண்டிருந்தான். அவனும் செம்பன்குஞ்சுவிடம் ஒட்டவில்லை; பஞ்சமியிடமும் ஒட்டவில்லை. அவனுக்கு இளமைப் பருவம் தாண்டி விட்டது. பாப்பிக்குஞ்சுவுக்கோ அவன் ஒரு சுமை. 'இவன் எதற்கு இங்கு வந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறான்' என்று தன்னைப்பற்றி பஞ்சமி எண்ணிக் கொள்வதாக அவன் கற்பனை செய்து கொண்டான். சொல்லப்போனால், அவனுக்கே அந்த எண்ணம் தான். அம்மாவே மற்றொருவன் கையை எதிர்பார்த்துப் பிழைக்க வந்திருக்கிறாள். அண்டிப் பிழைக்கிற பிழைப்புத் தானே இது? ஒருகால் கங்காதரனுக்கு வாழ்க்கைக்கு

ஊன்றுகோல் கிடைக்க வேண்டும் என்ற தனது உத்தேசத்தை நிறைவேற்றிக் கொள்ளத்தான் அவளும் இந்த வேஷம் போட்டுக்கொண்டிருக்கிருளோ? வயிற்றைக் கழுவும் உத்தேசம் மட்டும் காரணமாக இருக்க முடியாது.

பள்ளிக்குன்றத்துக்கு தோணி வாங்கச் சென்ற அன்று உண்ட விருந்தின் மனமும் ருசியும் இன்னும் செம்பன்குஞ்சுவின் நாவில் அப்படியே இருந்தன. அவனுடைய இன்பக் கற்பனைகளில், அன்று அவன் உண்ட விருந்து ஒரு பிரதான அம்சமாக இருந்து வந்திருக்கிறது. இனிமேல் மூன்று வேளையும் அதே போல் உண்டு மகிழவேண்டும் என்பதே அவனுடைய அவா'

ஆனுல், என்ன காரணத்திருலோ தெரியவில்லை. இங்கே கறி வகைகள் அங்கேபோல் மணத்தோடு அமையவில்லை. அந்த ருசியோ திருப்தியோ ஏற்படவில்லை.

சக்கி விலைக்கு வாங்கி வைத்த கட்டிலில் ஒரு நாள் கூட அவள் படுக்கவில்லை. அவளைப் பொறுத்த வரையில் அதற்கு அப்போது சமயமும் சந்தர்ப்பமும் கூடியிருக்கவில்லை. அப்படியெல்லாம் கட்டிலில் படுத்து இளைப்பாறுவதற்குமுன், செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் மலைமலையாய் இருந்தன. உடம்பைத் தேற்றிக் கொள்ளவோ, அலங்காரம் செய்து கொண்டு மேனிமினுக்கவோ சமயம் வரவில்லை என்றுதான் அவள் எண்ணிக்கொண்டிருந்தாள்.

செம்பன்குஞ்சு கட்டிலுக்கு ஒரு மெத்தை தைத்துப் போட்டான். அன்று அவன் பள்ளிக்குன்றத்தில் பார்த்தானே, அதேபோல் ஓர் அழகான மெத்தை! ஆனுல், இத்தனை தயாரிப்புகளும் முடிந்தபோது அவன் கண்களுக்குப் பாப்பிக்குஞ்சு நாளுக்குநாள் தேய்ந்து சோர்வடைவதாகப் பட்டது. கடற்கரைக் காற்று பொன் மேனியையும் மங்க வைத்துவிடும் போலிருக்கிறது. பாப்பிக்குஞ்சு, பழைய தளதளப்பையும் மெருகையும் இழந்துவிட்டாள் என்று அவனுக்குத் தோன்றியது.

முன்னொரு சமயம் அவன் பள்ளிக்குன்றத்து வீட்டில் ஒரு காட்சியைக் கண்டு வெட்கிப்போகவில்லையா? அதை சவிஸ்தாரமாகச் சக்கியிடம் சொல்லி மகிழவில்லையா அவன்?

அந்தக் காட்சியை மீண்டும் கற்பனை செய்து மனத்தில் நிறுத்திக்கொண்டான் அவன். அவன் உள்ளத்தில் காம வேட்கையைக் கிளறிவிட்டதே அந்தக் காட்சிதான். இரவு பாப்பிக்குஞ்சு அறைக்குள் நுழைந்தபோது பின்னல் அவனும் சென்முன்.

அவர்கள் முத்தமிட்டுக் கொண்டனர். ஆனல் அதில் பழைய ஆவேசம் இல்லை. ஆவேசத்துடன் முத்தமிடவும் அவனல் முடியவில்லை. இறுக்கித் தழுவ வலுவில்லை, இருவருடைய கரங்களுக்கும். அவனுடைய செயற்கைத்தனமான சேஷ்டைகளின் போது 'சக்' என்ற ஒலிதான் அவன் வாயிலிருந்து வெளிவந்தது. அதேபோல் அவளும் வேறு ஏதோ ஒரு பெயரை முணுமுணுத்துக் கொண்டாள். ஒருகால் அவள் கண்டங்கோரனைச் செல்லமாக அழைத்து வந்த பெயராக இருந்திருக்கலாம் அது.

எனினும், இப்போது அவர்களால் ஒருவரோடு மற்றவர் இணைந்து ஒரே உயிராக ஆகிவிட முடியவில்லை. அவர்கள் இரண்டு பேருக்கும் மத்தியில் சதா இரண்டு பேர் நின்று கொண்டிருந்தனர்—சக்கியும் கண்டங்கோரன் வலைக்காரனும். செம்பன்குஞ்சுவின் மனவோட்டமும் பாப்பிக்குஞ்சுவின் மனவோட்டமும் இரண்டுவிதமாக இருந்தன. ஒரு சமயம் சிறு பிராயத்திலேயே அவர்கள் இருவரும் ஒன்றுபட்டிருந்தால் உறவுமுறை சீராக இருந்திருக்குமோ என்னவோ!

சிரிப்பதும் விளையாடுவதும்கூட அவர்களுக்கு ஆயாசத்தைத் தருகின்ற காரியங்களாகவே இருந்தன. அவர்கள் சிரிக்கத்தான் சிரித்தார்கள். அது முகத்தில் ஒளியின்றிச் சிரித்த வெறுப்புச் சிரிப்பு. வலிந்து கட்டிக்கொண்டு அவர்கள் விளையாட்டுப் பேச்சுப் பேசுவது முண்டு.

திருமணம் முடிந்த பின்னர் புது வாழ்வுக்கு எப்போதுமே ஓர் அழகுண்டு. ஆனல் செம்பன்குஞ்சுவுக்குக் கிடைத்தது எரிச்சல் ஒன்றுதான். அவனுடைய அறிவுக்கு எட்டாத, வார்த்தைகளால் விண்டு கூற முடியாத கவலை, எப்போதும் அவன் மனத்தை அரித்துக்கொண்டிருந்தது. வேலையில் ஈடுபடாமல் வீட்டோடு சோம்பி இருக்கவும் அவனல் முடியவில்லை. அப்படி இருந்து பழக்கமானவன் அல்ல அவன்.

செம்பன்குஞ்சு தோளில் கறுப்புக்கரை போட்ட மேல் வேட்டியைத் தூக்கிப் போட்டுக்கொண்டு அரையில் மல்வேட்டி யுடன் தோணி கரை வந்து சேரும்பொழுது கடற்கரையில் நின்றுகொண்டிருப்பான்; தோணி வந்து சேர்ந்ததும் சரக்கை விற்பனை செய்வான். வலைக்காரன் கண்டங்கோரனும் இப்படித் தானே செய்துகொண்டிருந்தான். ஆனால், பழைய செம்பன் குஞ்சு மேற்கொண்டிருந்த வழக்கம் இதுவா? சக்கி கண்ணை மூடியதும் வாழ்க்கையில் மேலும்மேலும் முன்னேறிச் செல்ல வேண்டும் என்ற ஆசையும் அடியோடு அழிந்துபோய் விட்டதா? இப்போது பள்ளிக்குன்றத்துக் கண்டங்கோரனாக மாறிக்கொண்டிருந்தான் செம்பன்குஞ்சு.

உடலுழைப்பில் ஈடுபடாமல் இருந்துங்கூடச் செம்பன் குஞ்சுவின் உடல் தேறிவிடவில்லை. உடம்பு சற்றுச் சிவந்தது. அதுவும் ஒரு வெளிறிப்போன அசட்டுச் சிவப்பு. ஒருநாள் செம்பன்குஞ்சு பாப்பிக்குஞ்சுவிடம் சொன்னான்:

"இப்போதெல்லாம் பங்கு ரொம்பக் குறைவாகத்தான் கிடைக்குது."

பாப்பிக்குஞ்சு அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இது போன்ற விஷயங்களில் அவள் என்றுமே அக்கறை செலுத்தா மல் இருந்திருக்கலாம். அவளிடம் அந்த வழக்கம் எல்லாம் கிடையாது என்றுதான் சொல்லவேண்டும். அவன் தொடர்ந்து சொன்னான்:

"முந்தியெல்லாம் எனக்குப் பங்கு இவ்வளவா கிடைச்சுக் கிட்டு இருந்தது? தோணிக்குத் தனி, வலைக்குத் தனி, சுக்கா னுக்குத் தனின்னு மூணுபங்கு வாங்கிக்கிட்டு இருந்தேன். அதிலேயும் என் தோணிக்கு மத்தத் தோணியெல்லாம் விட ரெண்டு பங்கு அதிகமாக மீன் கிடைக்கும்."

முற்றிலும் உண்மையான அந்த விஷயத்தைச் சொன்ன போதும், செம்பன்குஞ்சுவின் முகத்தில் அசடு வழியத்தான் செய்தது. அவன் மீண்டும் தொடர்ந்து சொன்னான்:

"கிடைக்கிறதை யெல்லாம் அப்படியே என் சக்கி கையிலெ கொடுத்திட்டேண்ணு, ஒண்ணே ஒம்பதாக்கிப் புடுவா அவ!"

இப்படிச் சொல்லிவிட்டு, சக்கி என்ன என்ன முயற்சிகளில் ஈடுபட்டுப் பணம் சேர்த்தாள் என்பதையும் விரிவாகச் சொல்ல ஆரம்பித்தான் செம்பன்குஞ்சு. இதைக் கேட்டுக்கொண்டிருந்த பாப்பிக்குஞ்சுவின் முகம் வாட்டமுற்றது. சட்டென்று அவன் சொன்னான்:

"நான் வந்து, அப்படியெல்லாம் நீயும் செய்யணும்னு சொல்லலே. சக்கி சின்ன வயசிலிருந்தே அந்த மாதிரி பழகிக் கிட்டா, அவ்வளவுதான்."

இருந்தாலும் பாப்பிக்குஞ்சு, அவ்வாறெல்லாம் தன்னாலும் செய்ய முடியாமலிருப்பதை எண்ணி வருந்துவதாகச் செம்பன் குஞ்சுவுக்குத் தோன்றிற்று. அங்கு இருக்கிற ஒவ்வொரு பொருளும், இரவில் அவர்கள் படுத்துக்கொள்கிற கட்டில் உட்பட அத்தனை பொருளும், சக்கியினுடைய உழைப்பின் பலன்தான்.

கங்காதரனே பாப்பிக்குஞ்சுவை ஓயாமல் நச்சரித்துக் கொண்டிருந்தான். விரைவில் அவனுக்கு ஒரு வழி வகுத்துக் கொடுப்பதாகப் பாப்பிக்குஞ்சு சொல்லியிருந்தாள். ஆனால், காரியம் கைகூடவில்லை. கூடிய விரைவில் அவனை அனுப்பி வைக்கவேண்டும் என்பதே அவளுடைய உத்தேசம். அவன் சொன்னான்:

"அந்தப் பொண்ணு முழிச்சுப் பாக்குதெப் பாத்தாலே பயமா இருக்குது எனக்கு. அவ ஏதாவது வாயிலெ வந்தபடி பேசிப்புடுவா போலிருக்கு. அதுக்குள்ளாற இந்த வீட்டை விட்டுப் போயுடணும்."

அவனுக்குப் பணம் கொடுத்து அனுப்பி வைக்கவேண்டும். எப்படி அதை நிறைவேற்றுவது? வீட்டில் பணம் இல்லை யென்பது பாப்பிக்குஞ்சுவுக்குத் தெரியும். கேட்பதற்கும் மனசுக்குக் கஷ்டமாக இருந்தது அவளுக்கு.

பஞ்சமி புதிய தந்திரம் ஒன்றைப் பிரயோகிக்க ஆரம் பித்துவிட்டாள். இப்போதெல்லாம் அவள் செம்பன்குஞ்சுவின் நீங்கா நிழலாக அவனைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந் தாள். பாப்பிக்குஞ்சுவைச் செம்பன்குஞ்சுவின் பக்கத்தில் அண்டவிடமாட்டாள். அவளைப் பிரிப்பதற்குப் பாப்பிக்குஞ்சு முயலவும் இல்லை.

பாப்பிக்குஞ்சு நல்ல நிலைமையில் வாழ்ந்து இருந்தவள் வாழ்வுப்பாதை அடைத்துக்கொண்டபோது, வயிற்றைக் கழுவுவதற்கு அவள் மேற்கொண்ட மார்க்கந்தான் அவளைச் செம்பன்குஞ்சுவோடு இணைத்துவிட்டது. பாப்பிக்குஞ்சு அந்த வீட்டுக்கு வந்து சேர்ந்த கதை இதுதான். வாழ்க்கை இன்பத்தில் திருப்தி காணுததாலோ, இன்னும் ஓர் ஆடவனுடன் கூடி வாழவேண்டும் என்ற வேட்கையினுலோ, அவள் செம்பன் குஞ்சுவைக் கணவனுக ஏற்றுக்கொண்டு விடவில்லை. குறை வாழ்க்கையையும் வாழ்ந்து தீர்க்க வழிவகை இருந்திருந்தால், அவள் இந்த வேஷம் போட்டுக்கொண்டிருக்க மாட்டாள். இப்போது மனைவி வேஷம் போட்டுக்கொண்டு ஆடித்தீர்க்க வேண்டியதாக இருக்கிறது. மிகவும் முயன்று, அவள் தன்னை ஒரு மனைவியாக எண்ணிக்கொண்டு, அதற்கு ஏற்றுற்போல் நடந்துகொள்ளவும் முயன்ருள். இருந்தாலும் பாப்பிக்குஞ்சுவுக்குத் தன்னைக் காப்பாற்றும் செம்பன்குஞ்சுவிடம் பக்தி விசுவாசமுண்டு. அவள் அந்த வீட்டில் தன் உரிமைகள் எதையும் நிலைநாட்ட முயலவில்லை. எந்த விஷயத்தைப் பிடித்துக்கொண்டும் அவள் நிர்ப்பந்தமோ பிடிவாதமோ செய்யவில்லை. செம்பன்குஞ்சுவின் சொல்லுக்கு அடங்கிக் கீழ்ப்படிவதே அவளுடைய வழியாக இருந்தது. சக்கி என்னவோ நிறையப் பணம் சேர்த்தாள். அவள் போல் தானும் செய்து கணவனுக்கு உதவ முடியவில்லையே என்ற வருத்தமும் அவளுக்கு உள்ளூர இருந்திருக்கலாம். செம்பன்குஞ்சு அதையெல்லாம் அவளிடம் எதிர்பார்க்கவில்லை யென்றுலும், தான் அப்படிச் செய்யவேண்டும் என்ற ஆசை, அவளுக்கு இருந்திருக்கக் கூடாதா?

சொல்லப்போனுல் இவளைப் போன்ற ஒருத்தியை மணந்து கொள்ளவா சக்கி ஆணையிட்டாள்? அப்படி இராது. அதில் சந்தேகம் இல்லை. தன்னைப்போன்ற ஒருத்தியைச் செம்பன் குஞ்சு மணந்து கொள்ளவேண்டும் என்பதே அவளுடைய அபிலாஷையாக இருந்திருக்கும். தான் அஸ்திவாரம் போட்டுக் கட்டி எழுப்பிய குடும்பம் மேலும் விருத்தியடையும்படி செய்யக்கூடியவள் வரவேண்டும் என்றுதான் அவள் ஆசைப் பட்டிருப்பாள். அதே சமயம் அவள் தன் கணவனைப் பேணிக் காக்கக் கூடியவளாகவும் இருக்க வேண்டும்.

பஞ்சமி ரொம்பவும் பொல்லாத பெண்ணுகிவிட்டாள் அவள் சிற்றன்னையைச் சிறிதும் லட்சியம் செய்வது கிடையாது. கங்காதரனைக் கண்டாலோ முகத்தைச் சுளிப்பாள். அவனும் அவனுடைய தாயாரும் அவசியமில்லாமல் தன் வீட்டிற்குள் வந்து புகுந்துகொண்டிருக்கிருர்கள் என்பதுதான் அவளுடைய நினைப்பு.

ஒரு நாள் பாப்பிக் குஞ்சு நடந்து சென்றுகொண்டிருந்த போது, பின்னல் நின்று அவள் நடப்பது போலவே பாவனை காட்டிக் கேலிசெய்தாள் பஞ்சமி. சட்டென்று பின்பக்கம் திரும்பிப் பார்த்த பாப்பிக்குஞ்சு இதைக் கண்டுகொண்டு விட்டாள். அதே சமயம் நல்ல பெண் அவளுடைய வீட்டு வாசலில் நின்றவாறு பஞ்சமியை நோக்கி நகைத்துக்கொண்டிருப்பதையும் பாப்பிக்குஞ்சு கவனித்தாள். அன்று பாப்பி குஞ்சு கண்ணீர்விட்டு அழுதாள்.

செம்பன்குஞ்சு வீட்டை அடைந்தபோது பாப்பிக்குஞ்சு இந்த விஷயத்தை அவனிடம் சொன்னுள்:

"இந்தப் பெண்ணெ ஜாக்கிரதையா வளத்தணும். அவ்வளவுதான் சொல்வேன்" என்ருள் பாப்பிக்குஞ்சு.

செம்பன்குஞ்சு விஷயம் என்ன என்று விசாரித்தான். தன் மனத்தை உறுத்திக்கொண்ருருந்த விஷயத்தைப் பாப்பிக் குஞ்சு அவனிடம் சொல்லவில்லை.

"இன்னேர் இடத்திலே போயிருக்கவேண்டிய பொண்ணு. அவ பேரிலே அன்பு இருந்தா, அது நம்ம மனசோட இருக்கணும். வரவர ரொம்ப துஷ்டப் பொண்ணு மாறிட்டிருக்கா அவ."

விஷயத்தை விட்டுச் சொல்லும்படி தூண்டிக் கேட்டான் செம்பன்குஞ்சு. பஞ்சமி அவனுடைய பெண். அவளைப் பற்றிக் குறை கூறினல் அவனுக்குப் பிடிக்குமோ என்ற சந்தேகம் பாப்பிக்குஞ்சுவுக்கு. அதனல் அவளே தயங்கித் தயங்கித்தான் சொன்னுள். அதோடு செம்பன்குஞ்சுவுக்குத் தாயில்லாக் குழந்தையான பஞ்சமியிடம் மிகுந்த பாசம் உண்டு. பாப்பிக்குஞ்சு மிகவும் ஜாக்கிரதையுடன் சொன்னுள்:

"நான் ஒரு பொருட்டே இல்லே அவளுக்கு. அக்கம் பக்கத்துக்காரங்க சொல்றதைக் கேட்டுக்கிட்டு ஆடுது."

செம்பன்குஞ்சு பஞ்சமியைக் கூப்பிட்டான். அவள் நல்ல பெண்ணின் வீட்டில் நின்றுகொண்டிருந்தாள். செம்பன்குஞ்சுவின் குரலைக் கேட்ட மாத்திரத்திலேயே அவள் பயந்து போனுள். ஐந்து முறை அவன் திரும்பத் திரும்பக் கூப்பிட்ட பின்னர்தான் அவள் அவன் முன்னுல் வந்தாள். அவளை அடிக்கக்கூடாது என்று பாப்பிக்குஞ்சு அவனைத் தடுக்கவும் செய்தாள். இருந்தாலும் கோப வெறியில் அவன் அவளுக்கு இரண்டு அடி கொடுத்தான். அவளிடம் மூண்ட கோபத்தால் இதைச் செய்யவில்லை அவன். அக்கம் பக்கத்துக்காரர்களிடம் தனக்குத் தோன்றிய வெறுப்புணர்ச்சியை இப்படி வெளியிட்டான் அவன்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த அயல் வீட்டுப் பெண்களின் மனசு உருகிவிட்டது. நல்ல பெண் ஓடோடி வந்து பஞ்சமியை அணைத்துக்கொண்டாள். அவள் பாப்பிக்குஞ்சுவிடம் சீறி விழுந்தாள்:

"என்ன பொம்புளெ நீ? தாயில்லாக் குழந்தையின் கழுத்தெத் திருகிக் கொன்னுப்புடுவே போலிருக்குதே!"

பாப்பிக்குஞ்சு பதில் சொன்னுள்:

"அவ கெட்டுச் சீரழிஞ்சு போயுடக் கூடாது என்கிற எண்ணத்திலெதான்..."

அந்தப் பதிலில், அயல் வீட்டுப் பெண்களிடம் பாப்பிக்குஞ்சுவுக்கு இருந்த வெறுப்புணர்ச்சிதான் வெளியாயிற்று.

"ஆமாம், பஞ்சமி என்னைக்குக் கெட்டுப் போனுளாம்?"

செம்பன்குஞ்சுவை ஏறிட்டுப் பார்த்துக்கொண்டே, நல்ல பெண் தொடர்ந்து சொன்னுள்:

"இந்தப் பாரு, ஒண்ணு மட்டும் சொல்லிப்புடறேன்? அந்தப் பொம்புளெ சொல்றதைக் கேட்டுக்கிட்டு குழந்தெ மேலே விழுந்து அடிக்கப்படாது."

பாப்பிக்குஞ்சு நல்ல பெண்ணைப் பார்த்துக் கூப்பாடு போட்டுச் சொன்னுள்:

"நீ எதுக்கு இந்த விஷயத்திலெ தலையைப் போடறே?"

"நீ இண்ணைக்கு ஆனந்தமா' அனுபவிச்சிக்கிட்டு இருக்கயே சொத்து. அதைச் சேத்துவெச்ச மாராசி, குழந்தையே

எங் கையிலெதான் ஒப்படைச்சுட்டுக் கண்ணை மூடினு. ஞாபகம் வச்சுக்கோ.''

பாப்பிக்குஞ்சு சாதுதான் என்றாலும், பிறப்பால் அவளும் ஓர் அரயத்திதானே? அவளுக்கும் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

''இந்தப் பாரு, நாக்கை அடக்கிப் பேசு. நான் யாரு தெரியுமா? பாப்பிக்குஞ்சுவாக்கும். பள்ளிக்குன்றத்து வலைக் காரன் கண்டங்கோரன்கூட வாழ்ந்தவ. ஆமாம்.''

நல்ல பெண்ணும் கன்னத்தில் அறைந்தாற்போல் பதில் சொன்னாள்:

''ஆமாமா. அண்ணைக்கு அப்படித்தான். இண்ணைக்குச் செம்பன்குஞ்சுவுக்கு மரக்காத்தி. திங்கிது சக்கி சேத்துவச்சு சோறு. அடங்கியிரு ஒரு மூலையிலே.''

செம்பன்குஞ்சு திருதிருவென்று விழித்துக்கொண்டு நின்றான்.

பாப்பிக்குஞ்சுவும் கோபவெறியில் தன்னை மறந்து பேச ஆரம்பித்தாள்:

''ஆமா, உனக்கு என்னுன்னு கேக்கறேன். செம்பன்குஞ்சு என்ன, உனக்கு கள்ளப் புருஷனா?''

''சீ! போ நாயே!''

நல்ல பெண் மூர்க்கத்தனமாகக் கத்தினாள். பஞ்சமியைப் பற்றித் தட்டிக் கேட்பதற்கு அவளுக்கு உரிமை உண்டாம். செம்பன்குஞ்சுவோடு ரகசியத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு அதன்மூலம் பெற்ற உரிமையல்ல அது. கடலுக்குச் சென்று ஒவ்வொரு நாளும் உயிரைப் பணயம் வைத்து அன்றாடக் கஞ்சிக்குக் காசு சம்பாதிக்கிற அவளுடைய கணவன், செம்பன்குஞ்சுவின் நண்பன். இன்று நேற்று ஏற் பட்ட உறவு அல்ல அது. அவர்கள் இருவரும் சிறு பிராயத் திலிருந்தே தோழர்கள். அவ்வப்போது சண்டை போட்டுக் கொண்டது உண்மைதான் என்றாலும், அவர்கள் இருவரும் பரஸ்பர அன்பும் பாசமும் கொண்டிருந்தனர். அந்த உறவு காரணமாகவும் பஞ்சமியைப்பற்றிக் கேட்பதற்கு அவளுக்கு உரிமை உண்டு. அதோடு சக்கி சாகிறபோது பஞ்சமியை நல்ல பெண்ணிடம்தான் ஒப்படைத்தாள். இதை மீண்டும்

ஒருமுறை உரக்கச் சொன்னாள் நல்லபெண். அதோடு பஞ்சமி பிறந்ததிலிருந்து என்றுமே அவளிடம் நல்ல பெண்ணுக்கு ஒரு விசேஷ வாஞ்சையும், பாச உணர்வும் இருந்து வந்திருக்கிறது. அதைப்பற்றியும் முழக்க ஆரம்பித்தாள் அவள்:

''அவளுக்கு நான் வயத்திலெதான் இடம் கொடுக்கலெ. அவ பிறந்ததிலேருந்து என் பெண்ணாகத்தான் வளந்தா. அவளைப் பத்திக் கேக்குதுக்கு வாய் உண்டு எனக்கு.''

மீண்டும் செம்பன்குஞ்சுவைப் பார்த்து நல்ல பெண் சொன்னாள்:

''அண்ணே, பேசாம நீ இந்த மூதேவியை விலக்கி வைச்சுப்புடு. நான் பார்த்துக்கிடறேன் பஞ்சமியை.''

ஒரு நிமிஷத்திற்குப் பின் மீண்டும் அவள் சொன்னாள்:

''உனக்கும் இதெல்லாம் வேண்டியதுதான். அந்தத் தங்கமான பொம்பிளையைக் கஷ்டப்படுத்திக் கொண்ணுப் புட்டே நீ. பேராசை புடிச்சவனல்ல நீ. மூத்த பெண்ணையும் ஒரு வழியா விரட்டிப்புட்டே. இப்போ இருக்குது இந்த ஒரு உசிருதான். இதையும்......என் வாயாலே ஒண்ணும் சொல்ல வேண்டாம்.''

இவ்வளவு பேசிய பின்பும் நல்லபெண்ணுக்கு வெறி தணியவில்லை. அவள் மீண்டும் பாப்பிக்குஞ்சுவைப் பார்த்துப் பேச ஆரம்பித்தாள்:

''இந்தக் கடல்கரையிலே மரக்கான் செத்துப்போயிட்டான்னா இன்னொரு ஆம்புளெ கழுத்தைக் கட்டிக்கிடற வழக்கமே கிடையாது. ஒங்க வழக்கம் இப்படி.''

நல்ல பெண்ணின் வாயைப் பாப்பிக்குஞ்சுவால் அடக்க முடியவில்லை. செம்பன்குஞ்சுவாலும் முடியவில்லை. சரமாரியாய்ப் பொழிந்தபின் அவளுடைய வெறி தானாகவே அடங்கி ஓய்ந்தது. என்னதான் இருந்தாலும், பஞ்சமி பேரில் அவளுக்கு இருந்த உரிமையை அவள் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. அவள் கேட்டாள்:

''பஞ்சமி, என் வீட்டுக்கு வாரியா?''

செம்பன்குஞ்சு வாயைத் திறக்காமல் ஸ்தம்பித்து நின்றுகொண்டிருந்தான். அவனுடைய பெண்ணை அடுத்த வீட்டுக்

காரி தன் வீட்டுக்கு வரும்படி அழைக்கிருள். பஞ்சமி, நல்ல பெண் பின்னுல் சென்றுவிட்டாள்.

அன்றுவரை பாப்பிக்குஞ்சுவுக்கு அதுபோல் ஓர் அவமானம் ஏற்பட்டதில்லை. என்னவெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கும்படியாகிவிட்டது. இனிமேல் கேட்பதற்கு ஒன்று கூடப் பாக்கியில்லை. துக்கமும், கோபமும் பொத்துக்கொண்டு வந்தன அவள் மனத்தில்.

''மானம் மரியாதையாக் காலந் தள்ளிக்கிட்டு இருந்த என்னை, அவமானப் படுத்துதுக்கா கூட்டிக்கிட்டு வந்தே?''

செம்பன்குஞ்சு வாயைத் திறவாமல் சிலைமாதிரி நின்றுகொண்டிருந்தான். பாப்பிக்குஞ்சு தொடர்ந்து சொன்னுள்:

''ஒரு மரக்காத்தி என் எதிரே நின்னுகிட்டு ஒரு வார்த்தை சொன்னது கிடையாது. நான் பொன்னுணித் துறை அரயன் குடும்பத்திலே பிறந்தவ.''

அவளை ஆசுவாசப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், பதில் சொன்னுன் செம்பன்குஞ்சு:

''இங்கே இருக்கிறதெல்லாம் சுத்தக் கழுதைகள். ஒண்ணும் தெரியாது. இப்படித்தான் இருக்கும்.''

''இருந்தாலும், அவ பேசப் பேச வாயைத் திறந்து ஒரு வார்த்தை பதில் பேசாம நின்னுக்கிட்டு இருந்தியே!''

''நான் என்ன பதில் சொல்ல முடியும்?''

பல்லைக் கடித்தவாறு பாப்பிக்குஞ்சு முகத்தைக் கோணிக் கொண்டு சொன்னுள்:

''நான் என்ன பதில் சொல்ல முடியும்?''

அவள் தொடர்ந்து சொன்னுள்:

''எல்லாம் என் தலைவிதி. ராஜா மாதிரி ஓர் ஆம்புளை கூட இருந்த நான்...''

பாப்பிக்குஞ்சுவை நல்லபெண் திட்டியதற்குச் செம்பன் குஞ்சு ஆறுதல் கூறும்படியாகிவிட்டது. அவளுடைய கோபம் சட்டென்று பஞ்சமியிடம் திரும்பிற்று.

''செல்லப்பொண்ணு, கூப்பிட்டதும், அவ பின்னுலெ போயுட்டுதே!'' என்ருள் பாப்பிக்குஞ்சு.

செம்பன்குஞ்சு பதில் சொன்னுன்:

"அவங்க ரெண்டு பேரையும் நல்லபெண்ணும் மத்தவங் களும்தான் வளத்திஞங்க."

"பூ!"

தாங்க முடியாத கோபத்துடன் சாபமிடுவதுபோல் சொன்னுள் பாப்பிக்குஞ்சு.

"இவளும் அவ அக்கா மாதிரி சீரழஞ்சி போகட்டும்!"

செம்பன்குஞ்சுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. எவ் வளவு நிஷ்டூரமாகப் பேசுகிருள்? மூத்த மகளுடன் அவனுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்று ஆகிவிட்டது. இருப்ப தெல்லாம் பஞ்சமி ஒருத்திதான். அவளும் அவனுக்குச் சொந்தமில்லாமல் ஆகிவிடுவாளா?

பாப்பிச்குஞ்சு இதோடு பேச்சை நிறுத்திக்கொண்டிருந் தால் எவ்வளவோ நன்ருக இருந்திருக்கும். அவள் மனத்தை ஒரு விஷயம் துளைத்துக்கொண்டிருந்தது. அதைச் சொல்லாத வரை மண்டை வெடித்துவிடும் என்று எண்ணிஞள் அவள்.

"இவளும் அவ அக்கா மாதிரிதான். அக்கா மாதிரி இவளும் எந்தத் துலுக்கப்பய கழுத்தையாவது கட்டிக்கிட்டு, இந்தக் கடற்கரையிலே அலைஞ்சுக்கிட்டு இருப்பா."

செம்பன்குஞ்சுவின் தலைக்குள் மின்னல் வெட்டியது. கேட்டுத் தெரிந்து கொள்ள ஒன்றுமில்லை. பதில் சொல்வதற் கும் ஒன்றுமில்லை.

துலுக்கனைக் கட்டிக்கொண்டு அலைந்து திரிந்தாளாம்!

விஷயம் மிகவும் தெளிவாகப் புரிந்துவிட்டது அவனுக்கு. ஒரு கணப்பொழுதில் அடிமுதல் முடிவரை அத்தனை விஷயங் களும் தெளிவாகப் புரிந்துவிட்டன. அவள்...அவள்...சக்கி யும் அதற்கு உடந்தையாக இருந்திருப்பாளோ? அதைமட்டும் தெரிந்து கொள்ளவேணும்!...

செம்பன்குஞ்சுவுக்குப் புத்தி கலங்கிவிட்டது. அவன் நல்லபெண்ணின் வீட்டுக்கு ஓடிஞன். பஞ்சமியை நல்ல பெண்ணின் மடியிலிருந்து செந்தூக்காகத் தூக்கியெடுத்துக் கீழே தள்ளிக் கழியால் அடித்தான். "துலுக்கப்பய பின்ஞலே போவியா?" என்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டே அவளைப் பயங்கரமாகத் தாக்கிஞன். நல்லபெண் ஒன்றுமே

புரியாமல் வாயைப் பிளந்தபடி நின்றுகொண்டிருந்தாள். பஞ்சமி "ஐயோ! அம்மா!" என்று அலறினாள்:

"துலுக்கன் பின்னாலே போவியா? சொல்லு சொல்லு!" என்று கேட்டுக்கொண்டே இடைவிடாமல் அடித்துக்கொண்டிருந்தான் செம்பன்குஞ்சு. தாங்க முடியாமலானதும் பஞ்சமி வாயைவிட்டுக் கத்தினாள்:

"துலுக்கன் பின்னாலே போமாட்டேன் அப்பா, போமாட்டேன்!"

பாவம், பஞ்சமி! அவள் என்ன செய்வாள்? தான் என்ன சொன்னோம் என்பது அவளுக்கே தெரியாது! அவளுக்கு ஏதாவது புரிந்திருக்குமா? ஒரு சமயம் புரிந்தும் இருக்கலாம். கடற்கரையில் நடந்த கூத்தை யெல்லாம் கண்ணால் பார்த்தவள்தானே அவள்! அவளை வீட்டுக்கு விரட்டினான் செம்பன் குஞ்சு.

அன்று சக்கியைப் புதைத்திருந்த இடத்தைச் செம்பன் குஞ்சு தோண்டிக்கொண்டிருப்பதைச் சிலர் கண்டனர். அவனுக்கு என்ன உத்தேசமோ? அவளிடமே கேட்டுவிட வேண்டும் என்பதற்கா?

# 18

சில தினங்களுக்குள்ளாகவே செம்பன்குஞ்சுவுக்கும் பைத்தியம் தணிந்து விட்டது. இருந்தாலும் அவனுடைய மூளை சுறுசுறுப்பு இழந்து மந்தமாகி விட்டது. இப்போதெல் லாம் அவன் அதிகமாக வாய் திறந்து பேசுவதில்லை. அவன் நடந்து போவதையும் கன்னத்தில் கை வைத்தபடி உட்கார்ந்து இருப்பதையும் பார்த்தால், வாழ்க்கையில் அனைத்தையும் இழந்து, தனக்கென்று எதுவுமில்லை என்று ஆகிவிட்ட ஒரு நிலைமையை எண்ணி வருந்திக்கொண்டிருப்பதுபோல் இருக் கும். உண்மையும் அதுதானே? அவனுடைய கண்ணோட்டத்தை வாங்கிக்கொண்டு பார்த்தால், அவன் சோர்ந்து போனது முற்றிலும் நியாயம் என்று படும். ஆமாம்; அவன் பணத்தை இழந்து விட்டான். அதையாவது பொறுத்துக் கொள்ளலாம்.

அன்றுவரை அவன் அரும்பாடு பட்டுச் சேர்ந்து வைத் திருந்த பிற சொத்துக்களையும் இழந்து விட்டான். அவ னுடைய அறிவு சோர்ந்து மங்காத வரை, பிறருடைய முகத்தை எவ்வாறு அவன் ஏறிட்டுப் பார்ப்பான்?

செம்பன்குஞ்சுவின் இரு தோணிகளும் பழுதடைந்து விட்டன. கடலில் இறக்கமுடியாத அளவுக்குச் சீர்கெட்டுப் போய்விட்டன. உடனுக்குடன் பழுதுபார்க்க முடியாமல் போனதால், வலையும் இற்றுப்போய்ப் பயனற்றதாகி விட்டது. அவன் வலையில் ஒரு பன்றி புகுந்து சின்னபின்னப் படுத்தி விட்டுப் போய்விட்டது. இவை அனைத்தையும் பழுது பார்த் துச் செப்பனிட வேண்டுமென்றால் கணிசமான பணம் செலவு செய்தாக வேண்டும். ஆனால், அவன் கையிலோ காலணு

இல்லை. வீட்டுச் செலவு வேறு ஏராளமாகிக்கொண்டிருந்தது. கடற்கரைக்குக்கூட இப்போதெல்லாம் செம்பன்குஞ்சு வந்து போவதில்லை.

பாப்பிக்குஞ்சுதான் தன்னால் இயன்றமட்டும் வேலைகளை மேற்பார்வை செய்து வந்தாள். தோணியையும் வலையையும் பழுதுபார்த்துச் சரிப்படுத்த வேண்டும் என்று அவள் பல முறை செம்பன்குஞ்சுவிடம் சொன்னாள். ஆனால், அந்தக் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்றால் பணம் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை. 'கடன் வாங்கிச் செய்து முடிக்கிறேன்' என்று பதில் சொன்னான் செம்பன்குஞ்சு.

ஆனால், யாரிடம் கடன் வாங்க முடியும்? கடன் தர அவுசேப்பைத் தவிரக் கடற்கரையில் வேறு யாருமில்லை. பஞ்சமி, சக்கி உயிரோடிருந்த காலத்தில் குஞ்சுமீன் பொறுக்கி, அதை விற்று இருபது ரூபாய் வரை சேர்த்து வைத்திருந்தாள். இந்தச் சந்தர்பபத்தில் அவள் அப் பணத்தைச் செம்பன்குஞ்சுவுக்குக் கொடுத்து உதவினாள். அதைக் கைநீட்டி வாங்கிக் கொண்ட செம்பன்குஞ்சு பதறி அழுதுவிட்டான். பஞ்சமி சொன்னாள்:

"விடாமப் பொறுக்கிக்கிட்டு இருந்திருந்தேன்னா இதுக்குள்ளே நிறையக் காசு சேர்ந்திருக்கும், அப்பா" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து, "இல்லேன்னா அம்மா உசிரோட இருந்திருந்தாலும் போரும்........" என்று கூறி முடித்தாள் அவள்.

செம்பன்குஞ்சுவால் பதில் சொல்ல முடியவில்லை. இனி மேல் அவன் மனத்தில் உணர்ச்சிகளுக்கு இடமேது?

கங்காதரனோ பணத்தோடு தன்னை உடனே அனுப்பி வைக்க வேண்டுமென்ற தனது பழைய கோரிக்கையை விடாமல் வற்புறுத்தி நச்சரிக்க ஆரம்பித்து விட்டான். தனது ஆசையைச் செம்பன்குஞ்சுவிடம் சொல்லவும் தெம்பில்லை பாப்பிக்குஞ்வுக்கு. பல தடவை முயன்றும் அன்று வரை அந்த முயற்சியில் அவள் தோல்வி அடைந்துகொண்டே யிருந்தாள். கங்காதரன் வாழ்க்கை முன்னேற்றத்தை உத்தேசித்து, எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு காலம் தள்ளிக்கொண்டிருந்தாள் அவள். பஞ்சமி அவளிடம் அன்பாகப் பழகவில்லை

அன்பாகப் பழகவில்லை என்பது மட்டுமல்ல, பல சமயம் நிஷ்டூரமாகவும் நடந்துகொண்டாள். ஒருதலைச் சுமடாய், சோற்றுச் செலவுக்கு ஒரு காரணமாய் உட்கார்ந்துகொண்டிருப்பதில் துளியும் விருப்பமில்லை கங்காதரனுக்கு. அதே அபிப்பிராயம்தான் பாப்பிக்குஞ்சுவுக்கும். இவற்றோடு, செம்பன்குஞ்சு வேறு சித்தம் கலங்கிச் சோர்ந்து போய் விட்டான். இப்படியெல்லாம் நடக்கும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

செம்பன்குஞ்சு இத்தனை சிரமங்களுக்கு ஆளாகி அல்லல் படுவான் என்று பாப்பிக்குஞ்சு எதிர்பார்க்கவில்லை என்பது முற்றிலும் உண்மைதான். அவனுடைய கஷ்டம் பெருகத் தானும் ஒரு காரணமாக இருக்கக்கூடாது என்பதே அவளுடைய கவலை. என்னதான் இருந்தாலும் இன்று அவனைக் காப்பாற்றுகிறவன் அவன்தானே?

ஒருகால் சக்கி செய்தது போலெல்லாம் தானும் செய்து, அவளைப்போல் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு, தன்னாலும் பணம் சேர்க்க முடியவில்லையே என்ற எண்ணம் அவள் மனத்தை அரித்துக்கொண்டிருந்ததோ என்னவோ? அவளாலும் சந்தைக்குச் சென்று மீன் வியாபாரத்தில் ஈடுபட முடிந்திருந்தால், எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும். இவை போல் பல காரியங்கள் செய்யவேண்டுமென்ற ஆசை அவள் மனத்தில் எழுந்தது.

பாப்பிக்குஞ்சுவும் ஒருவனுடன் வாழ்க்கை நடத்தி அவனைப் பேணிக் காத்தவள்தான். அந்தப் பண்பு அவளிடம் உண்டு. செம்பன்குஞ்சுவிடமும் அவளுக்கு அன்பு உண்டு. அவன்மீது அன்பு கொள்ளாமல் இருக்கவும் முடியாது. ஆனால், அவள் மனத்தில் மற்றொருவன் அமர்ந்திருந்த ஸ்தானத்தில் இப்போது செம்பன்குஞ்சு ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அவன் மனத்தில் மற்றொருத்தி பெற்றிருந்த இடத்தை இப்போது இவளும் ஆக்கிரமித்துக்கொண்டு விட்டாள். நெருக்கடியான சந்தர்ப்பங்களில் எல்லாம் செம்பன்குஞ்சுவுக்குச் சக்கியின் நினைவு எழும். அதே போல், பல சந்தர்ப்பங்களிலும் பாப்பிக்குஞ்சுவும் கண்டங்கோரனை நினைத்துக் கொள்வதுண்டு. மனத்துக்குள் அவனை எண்ணிய

படி, 'என்னை மன்னித்து விடுங்கள்' என்று அவனிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்வாளோ என்னவோ?

பாப்பிக்குஞ்சுவுக்குக் கணப்பொழுதும் நிம்மதியில்லை. அதோடு வரவர நிலைமை இன்னும் தர்மசங்கடமாகி விடும் என்றுகூட அவளுக்குத் தோன்ற ஆரம்பித்து விட்டது. 'எல்லாம் நான் செய்த தவறுதான்' என்று அடிக்கடி அவள் சொல்லிக்கொண்டாள். யார்தான் என்ன செய்ய முடியும்? சக்கி உயிரோடிருந்தபோது செம்பன்குஞ்சுவின் வாழ்வு ஏற்றங் கண்டுகொண்டிருந்தது. பாப்பிக்குஞ்சு வந்தபின் சரசரவென்று சரிகிறது. சக்கி ஒரு கடல் தொழிலாளிக்கு வாழ்க்கைப்பட்ட அசல் அரயத்தி. பாப்பிக்குஞ்சு ஒருவலைக்காரனின் மனைவியாக, ஆசைநாயகியாக வாழ்ந்தவள்.

தோணிகள் கடலேறாது கரையில் நிற்கும்படி ஆகி விட்டதே என்று மனத்திற்குள் எண்ணி, அதற்காக மிகவும் வருந்தினாள் பாப்பிக்குஞ்சு. ஒருநாள் அவுசேப்புவை அழைத்து வர ஆள் விடவேண்டும் என்று எண்ணிக்கொண்டாள். அன்றிரவு உணவை முடித்துக்கொண்டு, ஒரு மூலையில் செம்பன் குஞ்சு சிந்தனையில் ஆழ்ந்தவாறு சோர்ந்துபோய் உட்கார்ந் திருந்தபோது, பாப்பிக்குஞ்சு அவன் அருகே சென்றாள்.

"சதா இப்படி வீட்டோடு குந்திக்கிட்டு இருந்தாப் போதுமா? தோணியெல்லாம் பழுது பார்க்க வேண்டாமா?"

அவன் தலையை உயர்த்தி அவளது முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். ஆனால், வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூடப் பதில் சொல்லவில்லை. அவள் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டாள். "ம், செய்ய வேண்டியதுதான்" என்று மட்டும் அவன் சொல்லி வைத்தான்

அப்போதே அதைப்பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும் என்பது அவளுடைய அபிலாஷை. மீண்டும் அவள் அவனைத் தூண்ட ஆரம்பித்தாள்:

"அவுசேப்பைக் கூட்டிக்கிட்டு வரச் சொல்லட்டுமா?"

"வரச் சொல்லேன்" என்றான் அவன். இந்தப் பதிலைக் கூட அவன் யோசித்துத்தான் சொன்னான்? அவுசேப்புவிடம் கடன் வாங்குவது என்றால் அதன் பொருள் என்ன என்பதை, நேர் அனுபவமாகத் தெரிந்துகொள்ள அதுகாறும் அவனுக்கு

வாய்ப்பு ஏற்பட்டதில்லை என்றாலும், அவன் நன்கு அறிவான். பிறர் எல்லோரையும்விட அதன் பலாபலன்கள் எப்படி இருக்கும் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். அப்படியானால் அவன் சற்றும் யோசிக்காமல்தான் பாப்பிக்குஞ்சுவிடம் இந்தப் பதிலைச் சொல்லியிருக்க வேண்டும். ஒருகணம் யோசித்துப் பார்த்திருந்தான் என்றால், அவனால், இந்தப் பதிலைக் கூறியிருக்க முடியுமா? கரையில் உறங்கும் தோணி கடலுக்குச் செல்லவேண்டும் என்ற அவாக்கூட அவனுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

இதற்கு முன்னும் இதுபோன்ற விவாதங்கள் இரவு வேளைகளில் அந்த வீட்டில் எத்தனையோ தடவை நடந்திருக்கின்றன. வாழ்க்கையின் அடிப்படைப் பிரச்னைகளைப் பற்றியெல்லாம் எத்தனையோ முறை அவனும் சக்கியும் ஆராய்ந்து பார்த்துப் பேசிக்கொண்டதுண்டு. அன்று அந்தக் காட்சிகளையெல்லாம் கண்டுகொண்டிருந்த உடைந்த சிம்னி விளக்குக்கு அந்தக் கதைகளெல்லாம் தெரியும். இப்போது அது ஒன்றுதான் சாட்சியாக இருக்கிறது! அன்று செம்பன்குஞ்சுவின் புத்தி கூர்மையாக இருந்தது. அன்று மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்யக் கூடியவனாக இருந்தான் அவன்.

இளம் வயதிலேயே அவனுடைய வாழ்க்கைத் துணைவியாக அமைந்த சக்கியும் அவனுடைய பெருமுயற்சிகளுக்கெல்லாம் உறுதுணையாக நின்று உதவினாள். இருவரும் ஒரே உள்ளத்துடன் தீர யோசித்து அருமையான திட்டங்கள் வகுத்துக் கொண்டனர். அன்று அவர்களுடைய இரு பெண் குழந்தைகளுக்கும் எவ்விதச் சிரமமும் இருக்கவில்லை. இன்றோ பஞ்சமி சதா பேய்க் கனவு கண்டுகொண்டிருக்கிறாள்.

பாப்பிக்குஞ்சு கேட்டாள்:

"நான் என்ன செய்யணும்?"

அந்தக் கேள்விக்கு அவன் பதில் சொல்லவில்லை.

"இண்ணைக்கு நான் ஒரு சுமையா இருந்துக்கிட்டு இருக்கேன். என்னாலே ஒண்ணும் செய்யவும் முடியலே. ஒண்ணும் செய்யவும் தெரியாது எனக்கு. ஆம்புளை சம்பாதிச்சு வீட்டிலே கொண்ணாந்து போடறதைத் தின்னுக்கிட்டுக் காலம் கழிச்சவதான்."

செம்பன்குஞ்சு அவள் சொன்னதை யெல்லாம் வாய்திற வாமல் கேட்டுக்கொண்டிருந்தான். பாப்பிக்குஞ்சு கண்ணீர் உகுத்துக்கொண்டே சொன்னாள்:

"என்னுலெ எல்லோருக்கும் சிரமம். இந்தக் குடும்பமே என்னுலெ அழிஞ்சு போகப் போவுது! நான் உள்ளே நுழைஞ்சதுமே தரித்திரம் புகுந்துக்கிட்டுது இந்த வீட்டிலே."

செமபன்குஞ்சு கடைசியில் வாயைத் திறந்தான்:

"அதுக்கு இப்போ என்ன செய்யணும்னு சொல்லுதே?"

"இனிமே நாம என்னத்தைச் செய்து காலம் கழிக்கிறது?"

"எதையாவது செய்து பார்க்கணும்?"

கங்காதரன் ஐந்நூறு ரூபாய் தந்தே தீரவேண்டும் என்று பாப்பிக்குஞ்சுவின் கழுத்தை நெரிக்க ஆரம்பித்து விட்டான்.

பாப்பிக்குஞ்சுவோ அந்த வீட்டில் நிலவுகிற யதார்த்த நிலைமையைத் தன் மகனுக்குச் சொல்லி உணர்த்த முயன்றாள். 'கேட்பதைத் தந்து தீரவேண்டும்' என்று ஒரே பிடிவாதமாகப் பேச ஆரம்பித்தான் அவன். சதா அதே பல்லவி. பாப்பிக்குஞ்சுவோ இன்னொருவனுக்குச் சொந்தமாகி விட்டாள். விலைக்கே வாங்கிக்கொண்டு விட்டான் அவன். அதோடு தன்னையும் அவள் விலைபேசி விற்றுவிட்டாள் என்று எண்ணினான் கங்காதரன். ஆனால், அவன் உடம்பில் கண்டங்கோரனின் ரத்தம் அல்லவா ஓடிக்கொண்டிருக்கிறது? சில சமயம் அவன் பேசுவதைக் கேட்கிறபோது, காலஞ்சென்ற கண்டங்கோரனே எதிரே நின்று பேசுவது போலிருக்கும் பாப்பிக்குஞ்சுவுக்கு.

கடைசியில் பாப்பிக்குஞ்சு அவுசேப்புவை அழைத்துக் கொண்டுவர ஆள் அனுப்பி வைத்தாள். விஷயத்தை அவளே அவனிடம் சொன்னாள். பணம் கடன்தர அவுசேப்புவும் ஒப்புக்கொள்வான். ஆனா, இரண்டு தோணிகளையும் வலையையும் பணயமாகக் கொடுக்க வேண்டும். வட்டியை மாதாமாதம் குறித்த தேதிகளில் தந்து தீர்க்க வேண்டும். இல்லாதவரை தோணியும் வலையும் அவனுக்குச் சொந்தமாகி விடும்.

செம்பன்குஞ்சு ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவுசேப்பு கெட்டான்:

"செம்பன்குஞ்சு, என்ன நீ ஒண்ணும் சொல்லாமெ இருக்கே?"

செம்பன்குஞ்சு சொன்னான்:

"பேச என்ன இருக்குது? எப்படியும் பணம் வேணும்."

மறுநாளே அவுசேப்பு ஓர் ஒப்பந்தம் தயாரித்துக் கொண்டுவந்து சேர்ந்தான். அதில் என்ன எழுதியிருக்கிறான் என்பதைக்கூட செம்பன்குஞ்சு படித்துப் பார்க்கவில்லை. அவுசேப்பு எழுநூற்றுத் தொண்ணூற்றைந்து ரூபாய் எண்ணிக் கொடுத்தான். அதிலிருந்து வேறு ஏதோ செலவு சொல்லி ஐந்து ரூபாய் வேறு எடுத்துக்கொண்டு விட்டான் அவன். செம்பன்குஞ்சு அதை அப்படியே வாங்கிப் பெட்டியில் வைத்துப் பூட்டினான்.

அதன்பின் அவனது மௌன நிலைக்குக்கூட ஒரு மாற்றம் ஏற்பட்டது. தோணி பழுது பார்க்கும் விஷயத்தையும், மற்றும் பல விஷயங்கள் பற்றியும் அவன் பேச ஆரம்பித்தான். குறித்த தேதியில் பணத்தைத் திரும்பக் கொடுத்து விட வேண்டும் என்றும் அவன் அடிக்கடி சொல்லிக் கொண்டான். இல்லாதவரை பல இடையூறுகள் ஏற்பட்டுவிடும். அவுசேப்போ ஈவிரக்கமற்றவன். தானும் முடிந்தவரை அவனோடு ஒத்துழைப்பதாகப் பாப்பிக்குஞ்சுவும் சொன்னாள்.

கைக்குப் பணம் வந்துவிட்ட விஷயத்தை அறிந்து கொண்டோ, அறிந்து கொள்ளாமலோ, கங்காதரன் முன்னை விடவும் பெரிதாகப் பாப்பிக்குஞ்சுவுக்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தான். எப்படியும் அவன் கேட்பதைக் கொடுத்து அனுப்பிவிட வேண்டும் என்று பாப்பிக்குஞ்சுவும் எண்ணிக் கொண்டாள். கங்காதரனோ ஒருமணி நேரம்கூடப் பொறுத்துக்கொள்ளத் தயாராக இல்லை. பாப்பிக்குஞ்சுவோ அவன் காலைப் பிடித்துப் பொறுமையாக இருக்கும்படி கெஞ்சினாள். தோணிகள் செப்பனிடப்பட்டுப் பழையபடி கடல் சென்று வருவதுவரை பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லிப் பார்த்தாள்.

"என்னாலெ ஒரு நிமிஷம்கூட இங்கே இருக்க முடியாது" என்றான் கங்காதரன் தீர்மானமாக.

பாப்பிக்குஞ்சுவும் பொறுமையை இழந்து விட்டாள்:

"முடியாதுன்னு சொன்னா, போ! நான்தான் என்ன செய்யணும்னு சொல்லுதே நீ?"

"அப்படியானா ஒண்ணு செய். ஒரு மகன் உனக்கு இருக்கான் என்கிற நெனப்பையே இண்ணையோட விட்டுப் போடு."

நிமிர்ந்து நின்று பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியுமா அவளால்? அவள் அவனைப் பெற்ற தாயல்லவா? தந்தையைப் பற்றிய நினைவுகள் தன் மனத்தில் அழியாது நின்ற வேளையில், அந்த எண்ணக் குவியலை மிதித்துக்கொண்டு செம்பன்குஞ்சு விடம் தன் தாயோடு அவனும் அடைக்கலம் புகுந்தான். அவளுக்கோ வேறு உபாயம் எதுவும் தட்டுப் படவுமில்லை.

"அந்த மனுஷன்கிட்டே பணத்தைக் கொண்டான்னு நான் எப்படிக் கேக்க முடியும்?"

"என்னை எப்படியாவது அனுப்பி வைச்சுப்புடு. ஆமா."

என்ன சொன்னாலும் அவன் காதில் வாங்கிக்கொள்ளத் தயாராக இல்லை. அவன் சொன்னதற்கும் ஒரு உட்பொருள் உண்டு. அவனை ஒருவழியாக அனுப்பி வைத்துவிட்டு, அவள் செம்பன்குஞ்சுவுக்குச் சொந்தமாகி அவனுடனேயே இருந்து காலம் தள்ளட்டும் என்பதுதான் அது.

"இந்தாப் பாரு, உனக்காகத்தான் நானே இங்கே வந்திருக்கேன்."

"என்னை அனுப்பி வைச்சுப்புடு."

இந்தத் தர்மசங்கட அவஸ்தையைச் செம்பன்குஞ்சுவிடம் சொல்லவும் பாப்பிக்குஞ்சுவுக்குத் தைரியம் இல்லை. ஆனால், அதே சமயம், விஷயமோ அடக்கமாக வைத்துக் கொள்ள முடியாதபடி வரம்பின்றி வளர்ந்துகொண்டே போகிறது.

பாப்பிக்குஞ்சு மனச்சாந்தியை அறவே இழந்து விட்டாள். அதே போல் செம்பன்குஞ்சுவுக்கும் அவ்வளவாக உற்சாகமில்லை. உன்னதமானவற்றையெல்லாம் இழந்து விட்டோம் என்றுதான் அவனும் எண்ணிக்கொண்டிருந்

தான். ஒரு பக்கம் இந்தப் பரிதாபகரமான நிலைமை பாப்பிக் குஞ்சுவை வருத்தியது. மறுபக்கம் கங்காதரனின் பிடிவாதம்.

மறுபடியும் ஒருவனுடன் சேர்ந்து வாழும் எண்ணத்துடன் அங்கு வந்ததே தவறு என்ற ஞானம் அவளுக்குப் பிறந்தது. அவள் அங்கு வராதிருந்தாலும் வாழ்க்கை ஒரு பெரும் பிரச்னை யாகத்தான் இருந்திருக்கும். என்றாலும், இந்த அளவுக்குச் சிக்கலான பிரச்னைகள் தோன்றி இருக்குமோ...ஒன்றுமே செய்யாமல் சும்மா இருந்திருக்கலாம். அப்படி வீட்டோடு இருந்திருந்தால், கங்காதரனும் இந்த அளவுக்குத் தொல்லை தந்திருக்கமாட்டான். செம்பன்குஞ்சு படும் கஷ்டத்தையும் கண்ணால் காண நேர்ந்திராது. சொல்லப் போனால் ஒரு பெரும் தவறில்தான் அவளது வாழ்க்கையே ஆரம்பமாயிற்று.

ஒரு சாதாரண அரயத்தியாக வாழ்ந்து தொலைந்திருக்க லாம். இப்போதும்கூட அப்படியே காலம் தள்ளுவது சுலப மான காரியம்தான். அத்தனையும் தப்பு; அபத்தம். இனிமேல் சொல்லி என்ன பயன்? இரு தோணிகளுக்குச் சொந்தக்கார னை ஒருவனுடன் ஒட்டிக் கொள்கிறோம் என்றுதான் அவள் எண்ணிக்கொண்டாள். இன்னும் எதிர்காலம் எப்படி எப்படி இருக்கப் போகிறதோ?

அந்த வீட்டிற்குள் யாருக்கும் தெரியாதபடி நடந்து கொண்டிருந்த போராட்டத்தில் பாப்பிக்குஞ்சு வெற்றி பெற்றுவிட்டாள். அவள் ஒரு தாய். ஆகவே, அவள் வெற்றி பெற்றதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அவசியம் என்று பட்டால் அவள் பட்டினி கிடப்பாள். நிலைமை மிஞ்சிப்போய் விட்டதென்றால், பிச்சை எடுத்து வயிற்றைக் கழுவவும் அவள் தயங்கப் போவதில்லை. அதற்கான நெஞ்சுரமும் உண்டு. சொல்லப் போனால் அவளுக்கு அந்த வீட்டோடு என்ன உறவு தான் இருக்கிறது? ஆராய்ந்து பார்த்தால் ஒன்றுமே இல்லை என்பதுதான் பதில். செம்பன்குஞ்சு அடியோடு அழிந்துபோய் விட்டான் என்றால்......? என்னதான் வந்துவிடப் போகிறது? பசியும் பட்டினியும்தான் மிஞ்சும். பணத்தோடு வீட்டை விட்டுச் செல்கிற கங்காதரன் வாழ்க்கையில் முன்னேறி வந்து விட்டான் என்றால், அது எத்தனை பெரிய விஷயம்!

கங்காதரன் முன்னுக்கு வந்துவிட்டான் என்றால், அவனை அண்டி அவளும் தன்னுடைய காலத்தைத் தள்ள முடியும். அப்போது செம்பன்குஞ்சுவுக்கும் அவளால் கைலாகு கொடுக்க முடியும். இதுதான் பாப்பிக்குஞ்சு போட்ட திட்டம்.

ஒரு நாள் செம்பன்குஞ்சு வீட்டில் இல்லாத சமயம் பார்த்து, அவனது பெட்டியைத் திறந்தாள் பாப்பிக்குஞ்சு. அப்போது பஞ்சமியும் அங்கு இருக்கவில்லை. அவுசேப்புவிட மிருந்து வாங்கி வைத்திருந்த பணத்தில் இருநூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து மடியில் செருகிக்கொண்டாள்; பெட்டியைப் பூட்டிவிட்டு அங்கிருந்து அகன்றாள்.

அன்று இரவு தாயும் பிள்ளையும் வீட்டுக்கு மேற்புறமிருந்த தோப்பில் நின்றுகொண்டு ரகசியமாகப் பேசிக்கொண்டதைப் பஞ்சமி கவனித்தாள். ஒரு தென்னை மரத்தின் பின் பக்கம் மறைந்து நின்றவாறு அவர்கள் பேசிக் கொள்வதைக் காது கொடுத்துக் கேட்டாள் பஞ்சமி. விஷயம் அவளுக்குப் பிடிபடவும் செய்தது. அப்போதைக்கு இருநூறு ரூபாய்தான் தரமுடிந்தது என்றும், அதை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கெஞ்சினாள் பாப்பிக்குஞ்சு. மீதிப் பணத்தையும் விரைவிலே தந்துவிடுவதாகவும் அவள் அவனுக்கு உறுதி கூறினாள்.

ஒருவாறாகக் கங்காதரன் தாயின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, பணத்தோடு போய்ச் சேர்ந்தான். அவன் போகிற திசையைப் பார்த்துக்கொண்டே சிறிது நேரம் நின்றாள் பாப்பிக்குஞ்சு. அவளது கண்கள் நிறைந்தன. முகத்தைத் துடைத்தபடி வீட்டுக்குள் வந்தாள் அவள்.

பஞ்சமிக்கு சரியான ஆயுதம் கிடைத்துவிட்டது. அந்த ஆயுதத்தை முடிந்தமட்டும் வெற்றிகரமாகப் பயன்படுத்தவும் திட்டமிட்டு விட்டாள். அவள் சிற்றன்னை பணத்தை எடுத்துத் தன் மகனுக்குக் கொடுத்து அனுப்புகிறாள். செம்பன் குஞ்சு வைத்திருந்த பணத்தைத்தான் பாப்பிக்குஞ்சு எடுத்தாள் என்பதுகூடப் பஞ்சமிக்குத் தெரியவில்லை. ஆனால் அது எப்படியும் தனது வீட்டைச் சேர்ந்த பணம்தான் என்பதில் அவளுக்குச் சந்தேகம் கிடையாது. செம்பன்குஞ்சு வந்ததும், இந்த விஷயத்தை அவன் காதில் போட்டுவிட

வேண்டும். அப்பா கையில் பணம் இல்லாமலாகி, அவர் தோணியையும் வலையையும் பணயம் வைக்கும் அதே நேரத்தில், சிற்றன்னை கையில் பணம் இருந்திருக்கிறது! அந்தப் பணத்தை இப்போது அவள் மகனுக்குக் கொடுத்து, அவனை ஆசிர்வாதம் செய்து அனுப்புகிறாள்.

மறுநாள் காலை செம்பன்குஞ்சு கடற்கரை செல்லப் புறப்பட்டுச் சென்றபோது, பஞ்சமியும் அவன் பின்னால் சென்றாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் பைத்தியம் பிடித்ததுபோல் அலறிக்கொண்டே வீட்டினுள் நுழைந்தான். பெட்டியைத் திறந்து பார்த்தான் அவன். அங்கு ஐந்நூறு ரூபாய்தான் இருந்தது. மறுகணம் அவன் 'வீல்' என்று கத்தினான்.

"இங்கேயிருந்து பணம் எடுத்தியா?"

பாப்பிக்குஞ்சு ஒப்புக்கொண்டுவிட்டாள். அதிலும் முழு மனத்துடன் ஒப்புக்கொண்டாள் அவள். கோப வெறியில் உடம்பு வெலவெலக்க ஆரம்பித்துவிட்டது செம்பன்குஞ்சுவுக்கு. அவன் வாய்விட்டு அலறியதில் சில வார்த்தைகள் வெளியே குதித்தன:

"வீட்டை விட்டு வெளியே போ!"

பாப்பிக்குஞ்சு ஒரு வார்த்தைகூடப் பதில் பேசாமல் அப்படியே வெளியே சென்றாள். பஞ்சமி வெகுவாக இந்தக் காட்சியை ரசித்தாள்.

"போடீ கடற்கரைக்கு!"

பாப்பிக்குஞ்சு கடற்கரை நோக்கிச் சென்றாள். அவன் வீட்டு வாசலில் நின்றுகொண்டு மேலும் பெரிதாக அலறினான்:

"இனிமே இந்த வீட்டு வாசல் படியை மிதிச்சுடப்படாது!"

அதற்கும் அவள் பதில் சொல்லவில்லை. இப்போது நெடுந்தொலை தூரத்திற்கு விரிந்து கிடக்கும் அந்தக் கடற்கரையில் அனாதையாக ஒருத்தி சுற்றித் திரிவதைக் காணலாம்.

ஒரு காலத்தில் இவள் வலைக்காதன் கண்டங்கோரனின் அரயத்தியாக இருந்தவள். பின்னால் செம்பன்குஞ்சுவின் அரயத்தியாகவும் இருந்தாள்......

மீண்டும் எங்கிருந்துதான் வந்ததோ, இந்தத் தெம்பும் உற்சாகமும் செம்பன்குஞ்சுவுக்கு! அவனை விட்டுக் கழன்று

சென்றுவிட்டது என்று தோன்றிய குணங்கள் பழையபடி உடம்பில் குடிபுகுந்து கொண்டன.

செம்பன்குஞ்சு பாப்பிக்குஞ்சுவை வீட்டினின்றும் வெளியேற்றிய செய்தி கடற்கரை யெங்கும் பரவிவிட்டது. பாப்பிக்குஞ்சு சதாசமயம் கடற்கரை ஓரத்தில் ஒரு தென்னை மரத்தின் அடியில் உட்கார்ந்துகொண்டிருப்பாள். அவளுக்குத்தான் வேறு போக்கிடம் ஏது? இந்த உலகில் அவளுக்கு என்று ஓர் இடமும் இல்லை! செம்பன்குஞ்சுவின் மனம் துளியும் இரங்கவில்லை. இந்த விஷயத்தில் யாரும் சிரத்தை எடுத்துக் கொள்ளாமல், நிலைமையை அப்படியே நீடிக்க விடுவது பெரும் தவறு என்று, கடற்கரைவாசிகள் எல்லோருக்குமே தோன்றியது. அனாதையாக ஒருத்தியைக் கடற்கரையில் அலைந்து திரிந்து கொண்டிருக்க விடலாமா?

மூப்பர்கள் ஒன்று சேர்ந்து அரயனிடம் சென்று முறையிட்டனர். பொன்னுணித் துறை அரயனின் குடும்பத்தைச் சேர்ந்தவளும், பள்ளிக்குன்றத்து அரயன் கண்டங்கோரனின் மனைவியாகத் திகழ்ந்தவளுமான பாப்பிக்குஞ்சு, கேவலம், ஒரு சாதாரண அரயனான செம்பன்குஞ்சுவிடம் வந்து ஒட்டிக் கொண்டிருந்ததே துறை அரயனுக்குப் பிடிக்காத விஷயமாகத் தான் இருந்தது எல்லாத் துறை அரயர்களுக்கும் இது பெரிய அவமானம் என்று எண்ணினார் அவர். ஆகவே, மானம் மரியாதை கெட்ட அவளைப்பற்றித் தன்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லவேண்டாம் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் துறை அரயன். அவருக்கு எக்கச்சக்கமாகக் கோபம் வந்தது. ஆனால், பழவர்கள் அதோடு பேச்சை நிறுத்திக்கொண்டுவிடவில்லை. சொல்லப்போனால் இது மிகவும் முக்கியமான பிரச்னை. இலேசாக எண்ணி உதறிவிடக் கூடியதா? இரவு வேளையில், தலைசாய்க்கக் கூரையின்றி, ஓர் அரயத்தி வெட்டவெளியில் படுத்து உறங்குவது எத்தனை கேவலமான விஷயம்? துறை அரயன் சொன்னார்:

"உங்க இஷ்டம் போல என்ன வேணுமின்னாலும் செய்துக்கிடுங்க. அவனையோ அவளையோ அடிச்சுக்கொன்று கடலிலே தூக்கிப் போடணுமானாலும் போட்டுக்கிடுங்க."

அய்யன்குஞ்சு வினயமாகக் கேட்டான்:

"ஒரே அடியா அப்படிச் சொல்லிப்புடலாமா, நீங்க?"

"நான்தான் என்ன செய்ய முடியும்?"

"நீங்க செம்பன்குஞ்சுவைக் கூப்பிட்டுவிட்டு விசாரிக் கணும்."

"என்னுலெ முடியாது. நான் அவங்கிட்ட என்னத்தைக் கேக்கறது?"

"நீங்க இப்படிச் சொல்லிப்புட்டா நாங்கதான் என்ன செய் வோம்? இந்த மாதிரி விஷயங்களைக் கவனிக்கிறதுக்கு உங்களைத் தவிர வேறு யாருதான் இருக்காங்க, எங்களுக்கு?"

துறையைச் சேர்ந்தவர்கள் ஆணித்தரமாக இந்தக் கேள் வியை எழுப்பியதும், அந்தத் துறைக்கே தலைவரும் ரட்சகரு மான துறை அரயன் சிறிது வளைந்துகொடுக்க வேண்டிய தாயிற்று. ஏதாவது நடவடிக்கை எடுத்துத்தான் ஆக வேண்டும்!

"மானம் மருவாதையை எல்லாம் காத்திலெ பறக்க விட்டுப்புட்டுத் திரிஞ்சா இப்படி யெல்லாம்தான் வந்து சேரும். ஓர் அரயன் குடும்பத்திலேயே இருந்திருந்தாள்ளு இந்தக் கஷ்டம் எல்லாம் வந்திருக்குமா?"

"ஒருநாளும் வந்திராது" என்று எல்லோரும் ஒரே குரலில் கூறினர்.

தாயின் ஸ்தானத்திற்கு வந்து சேர்ந்த சிற்றன்னை வெளி யேறிச் சென்றுவிட்டாள். வீட்டில் இப்போது யாரும் இல்லை. பஞ்சமி தன் தந்தையிருக்கும் இடத்திலிருந்து அந்தப் பக்கம், இந்தப் பக்கம் நகருவதில்லை. அவள் மனத்தில் ஓர் ஆசை தலை தூக்கியிருந்தது. அதை வெளியிடுவதற்குத் தக்க தருணம் ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் அவள்.

அவளுடைய ஆசைதான் என்ன? மிகவும் சிறிய ஆசை தான் அது. இயற்கையானதும்கூட. வீட்டிலோ இப்போது ஒருவருமில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில், அவளுடைய அக்காவை அழைத்துக்கொண்டு வந்து வீட்டோடு வைத்துக்கொள்ள வேண்டும். அந்த ஆசை மட்டும் நிறைவேறி விட்டதென்றால் அந்த வீடு பழைய வீடாகிவிடும். அம்மா மட்டும் அங்கில்லை என்ற குறை ஒன்றுதான். கறுத்தம்மா வந்துவிட்டால் அந்தக்

குறையையும் பொறுமையோடு சகித்துக்கொள்ள அவள் தயார் தான். ஆனால், அப்பாவிடம் இந்த விஷயத்தைச் சொல்லச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. செம்பன்குஞ்சு ஒரு விநாடிகூட ஓர் இடத்தில் அடங்கி உட்கார்ந்துகொண்டிருப்பதில்லை. ஏதோ ஒரு யோசனையில் ஆழ்ந்திருந்தான் அவன். இப்போது அவன் மனம் புத்துணர்ச்சி பெற்றுவிட்டது. அவன் உடம்பில் புதிய பலம் பிறந்துவிட்டது. அவன் ஆளே உருமாறிப் போய் விட்டான். பழைய செம்பன்குஞ்சு ஆகிவிடுவது என்று திட சித்தம் கொண்டுவிட்டது போலிருந்தது. எல்லோரையும் அவன் ஓயாமல் ஏதாவது குற்றம் குறை சொல்லிக்கொண்டிருந் தான். பாப்பிக்குஞ்சு வீட்டுக்குள் நுழைந்து வீட்டைத் துடைத்துவிட்டுப் போய்விட்டாள் என்றான் அவன். அவளு டைய நிழல் பட்டதுமே வீடு சரிந்து தேய ஆரம்பித்துவிட்ட தாம்! அவளைக் கட்டிக்கொள்வது என்று தீர்மானம் செய் தானே, அந்த நிமிஷத்தையே அவன் மனமார வெறுக்க ஆரம் பித்துவிட்டான்.''

''எனக்கு எப்படித்தான் இப்படிப் புத்திகெட்டுப் போச் சுன்னு அப்பொத் தெரியலெ! அவ உடம்பையும், நிறத்தையும், தலைமயிரையும் பாத்து மயங்கிப் போயிட்டேன் போலி ருக்குது.''—இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டான் அவன்.

சில சமயம், அவன் கறுத்தம்மாவைப் பற்றியும் பேசினான். ஒரு துலுக்கன் பின்னால் திரிந்துகொண்டிருந்த அவள், ஒரு மரக்கான் வந்து சேர்ந்ததும் அவன் பின்னால் சென்றுவிட் டாள்! அவள் தன்னுடைய பெண்ணல்ல என்று மீண்டும் தீர்மானமாகச் சொன்னான்.

சில சமயம் அவன் பஞ்சமியிடம் கேட்பான்:

''நீ எப்படி இருக்கப்போறே? சொல்லு—சொல்லிப்புடு... ஆமா...''

அவள் மீதும் அவனுக்கு நம்பிக்கையில்லை.

அவள் புத்தம் புதிய வாழ்க்கை ஒன்றை மேற்கொள்ள ஆயத்தம் ஆகிக்கொண்டிருந்தாள். அப்போது அவன் சித்த ஸ்வாதீனத்தையிழந்து என்னன்னவோ தவறுகளுக்கெல்லாம் ஆளாகிப் பைத்தியக்காரன்போல் நடந்துகொண்டு விட் டான்.

பாப்பிக்குஞ்சுவை நல்லபெண் அழைத்துக்கொண்டு சென்று தன் வீட்டோடு வைத்துக்கொண்டிருக்கிறுள். அந்த நாசக்காரியை—தூமகேதுவை—அதன் போக்கில் போகட்டும் என்று விட்டுத் தொலைக்காமல் மீண்டும் நல்லபெண் வீட்டுக்குள் இழுத்து வைத்துக்கொண்டிருப்பதில் பஞ்சமிக்கு வருத்தம் தான். இருந்தாலும் இந்தச் சித்தி (நல்லபெண்) ஏன் இப்படி நடந்து கொள்கிறுள்? பெரிய துரோகம் அல்லவா இது? செம்பன்குஞ்சுவுக்கும் இது விஷயமாகச் சிறிது கோபம்தான். ஆனல், அவன் அதற்கு ஒரு சமாதானத்தைத் தேடிக்கொண்டான். அச்சக்குஞ்சு என்றுமே அவனிடம் பொறுமைப்பட்டுக் கொண்டுதான் இருந்தாளும்!

ஏதாவது ஒரு மத்தியஸ்தம் ஏற்பட்டுவிடக் கூடாதே என்ற கவலைதான் பஞ்சமிக்கு. அதற்குள் அக்காவை அழைத்துக்கொண்டு வந்துவிட வேண்டும்? ஒரு நாள் ஒரு சந்தர்ப்பம் வாய்ந்தபோது பஞ்சமி செம்பன்குஞ்சுவிடம் சொன்னுள்:

"அப்பா, அக்காவைக் கூட்டிகிட்டு வந்துட்டா என்ன? அக்கா ரொம்ப பாவம் அப்பா! ஊரிலே பேசிக்கிடறது எல்லாம் சுத்தப்பொய்!"

செம்பன்குஞ்சு வெறி வந்துவிட்டதுபோல் துள்ள ஆரம்பித்து விட்டான்:

"யாரெக் கூட்டிக்கிட்டு வரணும்னு சொன்னே?"

பயந்து போனுள் பஞ்சமி.

"அந்தத் துலுக்கன் கடையெ மூடிப்புட்டான்னுலும், இண்ணைக்கும் அந்தக் கடற்கரையிலேதான் இருந்துக்கிட்டு இருக்கான். அந்தக் கழுதையை என் வீட்டில் நுழைய விடமாட்டேன்."

பஞ்சமி வாயைத் திறக்கவில்லை. செம்பன்குஞ்சு தொடர்ந்து கூப்பாடு போட்டான்:

"நீயும் அவகிட்டேருந்து பாடம் படிச்சுக்கிடலாம்ன்னு பாக்கறியோ? அந்த எண்ணம் இருந்தா இண்ணைக்கே வீட்டை விட்டுப் போயிடு."

செம்பன்குஞ்சுவுக்குக் கோபவெறி நிமிடத்திற்கு நிமிடம் தலைக்கேறிக் கொண்டிருந்தது. சூழ்நிலையை மறந்து, சுயநிலை

யிழந்து, 'போடி, போடி' என்று வாய் ஓயாமல் கத்தினான் அவன். அந்த நிமிஷத்திலேயே அவன் பஞ்சமியைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவான் என்று கூடத் தோன்றியது.

மறுநாளிலிருந்து செம்பன்குஞ்சுவின் வாயில் கறுத்தம்மா என்ற பெயர் அடிபட்டுக்கொண்டே இருந்தது. அதோடு அவன் காரண காரியம் இல்லாமலே பஞ்சமியைத் திட்டிக் கொண்டும் இருந்தான். அவளும் கறுத்தம்மாவைப் போல் ஆகிவிடுவாளாம்! இப்போது அவன் பாப்பிக்குஞ்சுவைப் பற்றி ஒரு வார்த்தைக்கூட பிரஸ்தாபிப்பது இல்லை. அவளை அடியோடு மறந்துவிட்டான். சதாசமயம் கறுத்தம்மாவைப் பற்றியும் பஞ்சமியைப் பற்றியும்தான் ஏதாவது சொல்லிக் கொண்டேயிருந்தான்.

வழக்கு விசாரணைக்குத் துறை அரயன் வந்து சேர்ந்தார். துறையைச் சேர்ந்த மூப்பர்கள், செம்பன்குஞ்சு, பாப்பிக்குஞ்சு ஆகியோர் சபைக்கு அழைத்து வரப்பட்டனர். கடற்கரையில் இது ஒரு பெரிய சம்பவமாகிவிட்டது. சபையில் கன கூட்டம் கூடிவிட்டது. ஏதாவது ஒரு மத்தியஸ்தம் ஏற்பட்டு, பழைய படி சுமுகமான நிலை ஏற்பட்டுவிடக் கூடாதே என்று அந்த ரங்க சுத்தியுடன் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள் பஞ்சமி.

"என் கடல்தாயே, நீதான் அப்படி நடந்துடாமல் பாத்துக்கணும்!"—மனத்திற்குள் அவள் சொல்லிக் கொண்டிருந்தது எல்லாம் இது ஒன்றுதான்.

துறை அரயன் முதலில் செம்பன்குஞ்சுவைக் கூப்பிட்டு விசாரணை செய்தார்:

"செம்பன்குஞ்சு, என்ன இது? நீ என்ன நல்லது, பொல்லாது எல்லாத்தையும் ஒவ்வொண்ணு விட்டுக்கிட்டு இருக்கே?"

செம்பன்குஞ்சு இதுபோன்ற எத்தனையோ விஷயங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலையில் நின்றுகொண்டிருந்தான். செம்பன்குஞ்சு, துறை அரயனுக்கு அறிவிக்காமல்தான் மறுமணம் கூடச் செய்துகொண்டான். "அதற்கு என்ன சமாதானம் சொல்கிறாய்?" என்று துறை அரயன் அவனிடம் கேட்டார்.

பெறும் தவறுதான் அது! சம்பிரதாயப்படி அரயன் முன்னால் வெற்றிலை புகையிலை எல்லாம் காணிக்கை வைத்துப் பாம்பிக்குஞ்சுவை அழைத்துவரச் சம்மதம் பெறவில்லை அவன். இந்த ஆணித்தரமான கேள்விக்குச் செம்பன்குஞ்சு என்ன பதில் சொல்லப்போகிறான் என்ற ஆவலுணர்ச்சியில் எல்லோரும் அவனுடைய வாயைப் பார்த்துக் கொண்டிருந் தனர். அதோடு அச்சக்குஞ்சு முதலான பலருக்கும் இந்த விஷயத்தில் நேரிடையாக ஒரு பங்கு இருந்தது. அவர்களும் அதற்குத் தக்க சமாதானம் சொல்லித்தான் தீரவேண்டும். அரயன் இந்தக் கேள்வியை எழுப்பியதுமே, முன்னால் நின்று கொண்டிருந்த பலர் மெதுவாகப் பின்னால் நழுவிச் சென்ற னர். அதிகார மிடுக்குடன் அரயன் கேட்டார்:

"செம்பன்குஞ்சு, பதில் சொல்லு."

செம்பன்குஞ்சு தலைநிமிர்ந்து நின்றுகொண்டான். இப்போது அவன் உயரம் இன்னும் ஒரு பிடி அதிகமாகத் தெரிந்தது. உடம்பு அகலம்கூட விரிந்துவிட்டது போலவும் இருந்தது. அவன் முகத்தில் சிறிதும் பயம் இல்லை; தயக்கமும் இல்லை. ஏதோ ஓர் அசைக்கமுடியாத தீர்மானத்திற்கு வந்து விட்டவன் போலிருந்தது. அவர்கள் அதுவரையிலும் பார்த் துக்கொண்டிருந்த செம்பன்குஞ்சுவாக இருக்கவில்லை, அவன் அப்போது.

துறை அரயன் மீண்டும் ஒருமுறை அதே கேள்வியைக் கேட்டார். குண்டு பாய்ந்தது போல் பதில் வந்தது:

"நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கிடலை."

யாருமே அந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை! திடுக்கிட்டுப் போய்விட்டனர் எல்லோரும்! துறை அரயன்கூட அசந்து போய்விட்டார்! அந்த அதிர்ச்சி ஒருவாறு தணிந்ததும் அவர் கேட்டார்.

"அப்படீன்னா, இந்தப் பொம்புளை இந்தக் கடற்கரைக்கு எதுக்கு வந்தாளாம்?"

"நான் இவளை வீட்டுவேலைக்குக் கூட்டிக்கிட்டு வந்தேன். இதிலே என்ன தப்பு?"

துறை அரயன் மண்ணைக் கவ்வி விட்டார். அவருடைய முதல் குற்றச்சாட்டு அடிபட்டுப் போய்விட்டது.

இதைப்போல் அவருடைய மற்றக் குற்றச் சாட்டுகளும் அடிபட்டுப் போய்விடுமோ?

இதையடுத்துப் பாப்பிக்குஞ்சுவை அழைத்தார் துறை அரயன். மானத்தை விற்றுக் கும்பி கழுவத் துணிந்து விட்ட அவளை அரயன் அடிமுடி ஏற இறங்கப் பார்த்தார்.

"அவன் சொல்லுவது நெசம்தானு?" என்று கேட்டார் துறை அரயன் அவளைப் பார்த்து.

செம்பன்குஞ்சு சொன்னதையெல்லாம் பாப்பிக்குஞ்சு அடியோடு மறுத்துவிடுவாள் என்றுதான் எல்லோரும் எதிர் பார்த்தனர். அதற்கும் பயப்படுவான் என்று தோன்றவில்லை செம்பன்குஞ்சு.

அவன் சொன்னது அனைத்தும் பச்சைப் பொய் என்று கூறி அவள் மறுத்துவிட்டாலும் அவனுக்கு ஒன்றுமில்லை. எல்லோரையும் எதிர்த்துப் போராடக் கச்சை கட்டிக்கொண்டு விட்டான் அவன். எந்தச் சுகத்தையும் துறந்துவிடுவதற்கும் அவன் தயாராகவே இருந்தான். இனிமேல் 'கீழ்ப்படிந்து நடக்கும் உத்தேசம் இல்லை அவனுக்கு.

மீண்டும் ஒருமுறை பாப்பிக்குஞ்சுவை நோக்கி அந்தக் கேள்வியை எழுப்பினர் துறை அரயன். எல்லோரையும் ஸ்தம்பிக்க வைத்துவிட்ட பதில் ஒன்று பாப்பிக்குஞ்சு வாயி லிருந்து வெளியே வந்தது.

"நெசம்தான்!" என்றாள் அவள்.

"செம்பன்குஞ்சு உன்னைக் கட்டிக்கிடலியா?"

"இல்லே."

"நீ அவன் வீட்டு வேலைக்காரிதான்னு சொல்லுதியா?"

"ஆமா!"

நீதிபதியின் இருக்கையில் வீற்றிருந்த துறை அரயன் கல்லாய்ச் சமைந்துவிட்டார். சிறிதுநேரம் எதுவும் பேச முடியாமல் ஆகிவிட்டது அவருக்கு. பாப்பிக்குஞ்சு இப்படிப் பதில் சொல்லுவாள் என்று அவர் எதிர்பார்க்கவே யில்லை. துறை வாழ்வுக்கே அவள் ஒரு களங்கம் ஏற்படுத்திவிட்டாள். துறை அரயன் பாப்பிக்குஞ்சுவைப் பார்த்து முறைத்துக் கொண்டே கேட்டார். அவர் முகத்தில் ஒரே வெறுப் புணர்ச்சி.

"உனக்கு இந்தக் கஷ்டமெல்லாமா வரணும்? ஒரு ஆம்புளை சிங்கத்துக்கிட்ட இருந்து நீ..."

அதற்குமேல் அரயனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. செம்பன்குஞ்சு சிறிதும் தயக்கமின்றித் தலைநிமிர்ந்து நின்று கொண்டிருந்தான். அவன் அதே முகபாவத்துடன் வெற்றி மிடுக்குடனும் அந்த இடத்தை விட்டுச் செல்லும்படி ஆகி விடக்கூடாதே என்ற கவலை ஏற்பட்டது துறை அரயனுக்கு. அவர் செம்பன்குஞ்சுவைப் பார்த்துக் கேட்டார்:

"வேலைக்காரின்னே இருந்தாலும், ஒரு பொம்புளையை கடல்கரையிலே தள்ளிப்புடலாமா, கேக்கறேன்?"

அதற்கும் மறுகணம் பதில் பிறந்தது.

"அவ என் பணத்தைத் திருடிப்புட்டா."

அரயனுக்கு அதோடு வாய் அடைத்துப் போய் விட்டது.

அங்கு அவன் சொன்னதெல்லாம் நியாயம்தான் என்றாலும், உண்மை அதுவல்ல. எல்லோருக்கும் இது தெரியும். பாப்பிக்குஞ்சுவுக்குப் புடவை கொடுத்துக் கல்யாணம் செய்து கொண்டுதான் தன்னோடு அழைத்து வந்தான் செம்பன்குஞ்சு.

துறை அரையனும் அதோடு விட்டுவிடாமல் புதியதந்திரம் ஒன்றைப் பிரயோகம் செய்து பார்த்தார். செம்பன்குஞ்சுவைப் பயமுறுத்தி அடக்கி விடுவது என்பதே அவரது உத்தேசம்.

"இந்தாப் பாரு, அக்கிரமம் ரொம்பவும் கூடிக்கிட்டே போகுது. இண்ணைக்குன்னுல்லே, எண்ணைக்குமே நீ இப்படித் தான். இதுக்கு என்ன தண்டனை கிடைக்கும்னு உனக்கும் தெரியுமே?"

வெகு அலட்சியமாக உதட்டைப் பிதுக்கினான் செம்பன் குஞ்சு:

"என்ன செய்ய இருக்குது? என்னத்தான் செய்துப்புடப் போறீங்க? செம்பன்குஞ்சுவுக்கு இனிமே ஒண்ணுமில்லே. கீழே கடல்; மேலே ஆகாசம். அவ்வளவுதான்!"

தொடர்ந்து அவன் பேசிக்கொண்டே போனான்:

"நீங்க முறைச்சுப் பார்க்குதுக்கு ஒண்ணுமில்லே. இனிமே நான் யாரையும் சட்டை செய்யப் போறதில்லே. நீங்க

ஒண்ணும் வித்தியாசமா எண்ணிக்கிடவேண்டாம். யாருக்கும் பயப்படவும் போறதில்லே, நான். ஆமா. எதுக்குப் பயந்து சாவணும்னு கேக்கறேன். மடியிலே கனம் இருந்தாத் தானே வழியிலே பயம்னு கேக்கறேன்?''

''இந்தாப் பாரு. எங்கிட்டே வாலாட்டாதே!'' என்று கத்தினார் துறை அரையன்.

துறை அரயன் அவ்வார்த்தைகளைக் கூறி முடிக்கும் முன்னர், கோப வெறியில் உடம்பு வெடுவெடுத்து நடுங்க, உரக்கக் கத்தினான் செம்பன்குஞ்சு:

''மானமா இருக்கணும்னு வாயை மூடிக்கிட்டு இரும்.''

அன்றுவரை அந்தக் கடற்கரையில் ஒரு ஜீவன் கூடத் துறை அரயனைப் பார்த்து இப்படிப் பேசியதில்லை. அதுவும் ஊர் முழுவதும் கூடியிருக்கும் சபையிலா? இதற்கு என்ன அர்த்தம்?

தனி மனிதன் ஒருவனையா எதிர்த்துப் பேசுகிறான் செம்பன்குஞ்சு? துறைவாழ் மக்கள் அத்தனை பேரையும் அவமதிக்கிறான் அவன்!

இதற்குப்பின் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அந்த இடத்தைவிட்டு அகன்றான் செம்பன்குஞ்சு.

துறை அரயன் அவமானப் படுத்தப்பட்டு விட்டார். துறையைச் சேர்ந்த எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்று கொண்டிருந்தனர். பாப்பிக்குஞ்சுவும் செம்பன்குஞ்சுவின் பின்னால் சென்றாள்.

பஞ்சமி கட்டிய கோட்டைகளெல்லாம் அடியோடு தகர்ந்து போய்விட்டனவா? பாப்பிக்குஞ்சு, தன் தந்தை பின்னால் செல்வதைப் பார்த்துக்கொண்டு அங்கேயே நின்றாள் பஞ்சமி.

செம்பன்குஞ்சுவும், தன்னோடு வரவேண்டாம் என்று பாப்பிக்குஞ்சுவை விலக்கவில்லை.

# 19

மறுநாள் பஞ்சமியைக் காணவில்லை. எங்குச் சென்று விட்டாள் அவள்? பாவம்! என்ன செய்வாள்? அந்த வீட்டில் மேலும் தங்கியிருக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்ட தால், வெளியேறிச் சென்றுவிட்டாள் என்று ஊர்ப்பெண்கள் பேசிக்கொண்டனர்.

அதே சமயம் பாப்பிக்குஞ்சுவைப் பற்றியும் ஊர்ப் பெண் களுக்கு நல்ல அபிப்பிராயம்தான். அவள் செம்பன்குஞ்சுவைக் கைவிட்டு விடவில்லை. வேறு எந்தப் பெண்ணாவது இப்படி நடந்து கொள்வாளா? பாப்பிக்குஞ்சு தங்கமான மனசு படைத் தவள். ஆகு அவள் நடந்துகொண்டதில் ஆச்சரியப்படு வதற்கு ஒன்றுமில்லை. அவள் ஒழுக்கமும், பண்பும், ஆண்மை யும் கொண்டிருந்த ஒருவனோடு கூடி வாழ்ந்தவள். இப்படி நடந்துகொண்டது ஓர் இயற்கையான காரியம்தான் அவளைப் பொறுத்தவரை.

செம்பன்குஞ்சு துறை அரயனை எதிர்த்துப் பேசிவிட்டு வந்துவிட்டான். அதன் மூலம் ஏற்படவிருக்கும் விளைவுகளை அவன் எப்படிச் சமாளிக்கப் போகிறான் என்பதைத் தெரிந்து கொள்ள அவனுடன் காத்துக் கொண்டிருந்தனர் அத்தனை பேரும். அரயனுடைய கோபத்தைத் தாக்குப் பிடிப்பது என்பது மிகவும் சிரமமான காரியம். அவருடைய கோபம் என்ன என்ன விபரீத கோலங்கள் பூண்டு வருமோ? யாரால் சொல்ல முடியும்? தோணிகள் இரண்டும் கடைசியில் அவுசேப்புவுக்குத்தான் சொந்தமாகப் போகிறது. அதன்பின் செம்பன்குஞ்சு எப்படி வாழப் போகிறான்? இனிமேல் அவனால்

கடலுக்கும் செல்லமுடியாது. அவன் உடம்பு அதற்கான வலுவையும் இழந்துவிட்டது.

* * *

செம்பன்குஞ்சுவின் வாழ்வு அவ்வளவாகக் கடற்கரை வாசிகளின் கவனத்தைக் கவரவில்லை. அவனைப்பற்றி அவர்கள் அடிக்கடி பேசிக்கொள்ளவும் இல்லை. யாருடைய பார்வைக் கும், அனுதாபத்திற்கும் இலக்காகாமலேயே, அணுஅணுவாக அழிந்து கொண்டிருந்தான் அவன். லட்சியமே இல்லாத வாழ்க்கை! ஒரு காலத்தில் அவனுடைய வாழ்க்கை நீர்க் குன்றத்துக் கடற்கரையில் ஒரு முக்கிய அம்சமாகத் திகழ்ந்து கொண்டிருந்தது.

பாவம், பரீக்குட்டி! நீர்க்குன்றத்துக் கடற்கரையில் தோணிகள் இருந்தன; கடைகள் இருந்தன; அரயர்கள் இருந் தனர்; அரயப் பெண்கள் இருந்தனர். பரீக்குட்டியும் அங்கே தான் இருக்கிறான் அவனும் அந்தக் கடற்கரையில் ஓர் அம்சம் தான். கடற்கரைவாசிகள் என்று சொல்லும்போது, அவனை யும் சேர்த்துத்தான் அப்படிச் சொல்லுகிறோம். சில சமயம் கரையில் கிடக்கும் தோணியில் அமர்ந்தவாறு பாடிக்கொண் டிருப்பான் அவன். ஓயாமல் பாடிப்பாடி அவனுக்கென்றே ஒரு ராகமும் பாணியும் வந்துவிட்டன. அது அவனுடைய ராகம்; அவனுடைய பாணி! வேறு யாருமே அந்தப் பாடலை அப்படிப் பாடுவதில்லை. அந்தப் பாடல் யாத்த கடல்மகன், அவன் பாடுவது போல்தான் அப் பாடலைப் பாடவேண்டும் என்று எண்ணியிருப்பானு? அந்தப் பாடலை, என்னவோ, தனக் கென்றே கட்டப்பட்டது போல், அதைத் தனக்கே சொந்த மாக்கிக் கொண்டுவிட்டான் பரீக்குட்டி. அந்த ராகமும் பாணியும்கூட அவனோடு மறைந்து போய்விடலாம். வேறு யாராலும் அதைப் பின்பற்ற முடியாது.

பரீக்குட்டியின் கடை இடிந்து, சரிந்து, மண்ணோடு மண் ணுகக் கலந்து கொண்டிருந்தது. அந்தக் கடற்கரையில் அதற்கு முன்னும் எத்தனையோ கடைகள் தோன்றியுள்ளன. எத் தனையோ கடைகள் மறைந்து போனதும் உண்டு. ஆனுல், கடை தரை மட்டமான பின்பு, வியாபாரியை அங்கே காண முடியாது. ஆனுல், பரீக்குட்டியோ அந்தக் கடற்கரையிலேயே

சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறுன். அந்த ஊரைவிட்டுச் சென்று தங்குவதற்கு வேறு ஓர் இடமும் இல்லையா அவனுக்கு? ஒரு கால் அப்படியிருக்கலாம்.

அந்தி சாயும் நேரத்தில் துயரம் தோய்ந்த முகத்தோடு, அவன் அந்தக் கடற்கரையில் சுற்றித் திரிவதைக் காணலாம். எதையோ மண்ணில் தொலைய விட்டுவிட்டுத் தேடி அலைந்து கொண்டிருக்கிறுன் என்று தோன்றும். அதைத் தேடி எடுத்து விடுவது என்ற வைராக்கியத்துடன் சுற்றித் திரிகிறுன் என்ற எண்ணம் ஏற்படும்.

அதற்குமுன், ஒரு சமயம் அவனுடைய பெயரைக் கடற் கரைவாசிகள் அடிக்கடி பிரஸ்தாபிக்கும்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. கறுத்தம்மாவோடு அவன் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்த காலத்தில் அவனைப்பற்றி எல்லோரும் பேசிக் கொண்டார்கள். ஆனுல், அந்த வம்புப்பேச்சு சட்டென்று அடங்கிப் போய்விட்டது. அப்படி அடங்கிப் போனதுதான் இயற்கை. ஏனெனில், கடற்கரையைப் பொறுத்தவரையில் அது அத்தனை முக்கியமான விஷயம் அல்ல. அதற்கு முன்னும் எத்தனையோ வியாபாரிகள் கடற்கரைப் பெண்களுடன் கூடிக் குலவியதுண்டு. ஆனுல், அப்போதெல்லாம் அதன் விளைவுகள் இத்தனை ஆழமாக இருந்ததில்லை. ஒரு முகம்மதிய வியாபாரி மரக்காத்திப் பெண்ணிடம் காதல் உறவாடக் கூடாது என்பது உண்டா? காதலிக்கக் கூடாது என்பதில்லை. ஆனுல், அன்று வரையில் அப்படி நடந்தது இல்லை. அதுதான் விஷயம்.

ஆனுல், அவர்களுடைய காதல் உறவு முறிந்து போன தையோ, அவர்களுடைய வாழ்க்கையை அது எவ்வாறெல்லாம் பாதித்தது என்பதையோ, அந்தக் கடற்கரை வாசிகளில் யாருமே தெரிந்து கொள்ளவில்லை.

ஆனுல், இன்றும் தோணி கரை வந்து சேரும் நேரத்தில், பரீக்குட்டியும் அங்கே சென்று நின்றுகொண்டிருப்பான்; வியாபாரம் நடந்து முடிவதைத் தூர நின்று பார்த்துக் கொண் டிருப்பான்.

சில சமயம் சில்லறைத் தரகு வியாபாரத்தில் ஈடுபட்டு, அன்றுடச் செலவுக்குக் காசு பார்ப்பான். அவனும் இவ்வாறு நாளைத் தள்ளிக் கொண்டிருந்தான்.

சில சமயம் கரையில் கிடக்கும் செம்பன்குஞ்சுவின் தோணியை நீண்ட நேரம் பார்த்துக்கொண்டிருப்பான் அவன். அவன் மனத்தில் பழைய நினைவுகள் அலைமோதும். அல்லது அவன் அந்தத் தோணியின் வரலாற்றை எண்ணிப் பார்க்கிறானோ என்னவோ! இவ்வாறு, அவன் ஒரு நாள் அங்குநின்று கொண்டிருந்தபோது செம்பன்குஞ்சு அங்கு வந்துசேர்ந்தான். செம்பன்குஞ்சு வந்ததைப் பரீக்குட்டி கவனிக்கவில்லை.

பரீக்குட்டி, செம்பன்குஞ்சை நீண்ட நாட்களாகவே சந்திக்கவில்லை. அவன் தூரத்தில் வருவதைக் கண்டதுமே, பரீக்குட்டி ஓர் ஓரமாக ஒதுங்கிச் சென்றுவிடுவது வழக்கம். அவன் மனத்தில் அப்போதெல்லாம் இனம் தெரியாத குற்ற உணர்வு எழுந்ததுதான் காரணமாக இருந்திருக்குமோ? உண்மையிலேயே செம்பன்குஞ்சுவுக்குப் பரீக்குட்டி துரோகம் இழைத்திருந்தான் அல்லவா?

செம்பன்குஞ்சு அருகே நிற்பதைக் கண்டதும் திடுக்கிட்டு விட்டான் பரீக்குட்டி. அவன் எதிரே நின்றுகொண்டிருந்தது பழைய செம்பன்குஞ்சு அல்ல. அதைச் செம்பன்குஞ்சுவின் சடலம் என்றும் சொல்லிவிட முடியாது. அவன் சித்த சுவாதீனம் இழந்துவிட்டான் என்பதை, முகற் பார்வையிலேயே பரீக்குட்டி தெரிந்துகொண்டுவிட்டான். அதேபோல் செம்பன்குஞ்சுவின் கண்களுக்கும், பரீக்குட்டி அவனறிந்த பழைய பரீக்குட்டியாகத் தென்படவில்லை.

ஒரு நிமிஷ நேரம் இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தனர்.

செம்பன்குஞ்சு பரீக்குட்டியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்து ஒரு கேள்வி கேட்டான்:

''இந்தாப் பாரு, நான் உனக்கு எவ்வளவு பணம் தர வேண்டியிருக்குது?''

பரீக்குட்டி என்றுமே ஞாபகத்தில் வைத்திராத விஷயம் அது. உண்மையில், அது அவனுக்குத் தெரியவும் தெரியாது. அந்த எண்ணமே அவனுக்கு இல்லை.

செம்பன்குஞ்சு மீண்டும் அதே கேள்வியைக் கேட்டான்;

''எவ்வளவு? சொல்லு!''

பரீக்குட்டிக்கு என்ன பதில் சொல்வது என்று தெரிய வில்லை. அவனுக்கு ஒரு தம்பிடிகூட வசூலாக வேண்டிய தில்லை. ஆனால், அவன் எதையோ சொல்ல எண்ணினான். ஆனால், அதையெல்லாம் சொல்ல ஒரு பயம். அப்போதைய நிலை விசித்திரமான ஒன்று. அவன் செம்பன்குஞ்சுவிடம் கடன் வாங்கியவனாகத்தான் அங்கு நின்றுகொண்டிருந்தான். பணம் கடன் கொடுத்தவன் அவனை நெருக்குகிறான்!

உண்மையிலேயே பரீக்குட்டி பணம் கொடுத்ததும், செம் பன்குஞ்சு அதை வாங்கிக்கொண்டதும், எதை அடிப்படை யாகக்கொண்டு நிகழ்ந்த காரியம்? பரீக்குட்டி கறுத்தம்மா வைக் காதலித்தான். கறுத்தம்மாவும் பரீக்குட்டியைக் காத லித்தாள். வாஸ்தவம்தான். இருவரது காதலுணர்வும் களங்கமற்றது. அவன் மனத்தில் காதல் உணர்ச்சி தலை தூக்கிய காலத்தில், செம்பன்குஞ்சுவுக்குப் பணம் கொடுத்தான் பரீக்குட்டி. அந்தப் பணத்தைக் கொடுக்கிற காலத்திலேயே, அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பரீக்குட்டிக்கு இல்லையோ? அப்படியானால், சாதாரண மனிதன் ஒருவன் எண்ணுவதுபோல் அந்தக் காதல் உறவு வலுப்பெறவும், அந்த உறவுக்குக் கறுத்தம்மாவின் தாய் தந்தையரையும் பொறுப்பாளியாக்க வேண்டும் என்ற உத் தேசத்துடனும்தான் அவன் கடன் கொடுத்தானோ? பணத் தைக் காட்டி அவர்களை மயக்குவது என்பது அவனது உத் தேசமா? கண்ணில் மண்ணைத் தூவிய காரியம்தானா அது? மகளை அடைவதற்கு அப்பனுக்குக் கொடுத்த லஞ்சம்தானா அது? உண்மையான எண்ணம் அதுவாக இருந்திருக்க முடி யாது. பரீக்குட்டி என்றுமே கறுத்தம்மாவைத் தனதாக்கிக் கொள்ள முயன்றதில்லை. அப்படியானால், அவள் மற்றொரு வனுக்குச் சொந்தம் என்ற நிலை ஏற்பட்டபோது, அவன் கொடுத்த பணத்தைத் திரும்பக் கேட்டிருக்க வேண்டும் அல்லவா? காரியம் கைகூடாதவரை லஞ்சத்தைத் திரும்பப் பெற முயல்வது நடக்கக்கூடிய காரியம்தானா? அப்படியானால் செம்பன்குஞ்சு அவனை அணுகிக் கேட்டான், அதனால் கொடுத் தான் என்று சொல்லாமா? அப்படியும் சொல்லி விடமுடியாது. அப்படியானால், அதை ரகசியமாகச் செய்ய வேண்டியதன் அவசியம் என்ன?

ஆனல், அந்த ஒரு காரியத்தால்தான் அவன், அடியோடு அழிந்து போனன். அழிந்து போனன் என்று இலேசாகச் சொல்லிவிட்டால் போதாது. அரை வேட்டி மட்டும் மிஞ்சிய நிலைமைக்கு வந்துவிட்டான் அவன். அவனுடைய வீடும் மனையும் இன்று இன்னொருவனுக்குச் சொந்தமாகி விட்டன. இனிமேல் அவனுக்கு என்று ஒன்றும் மிச்சம் இல்லை. அவனுக்கு என்று ஓர் இலட்சியம் இல்லை; திட்டம் இல்லை; வாழ்க்கையும் இல்லை!

பழையபடி கடையைச் சிறுகக் கட்டி வளர்த்துக் காலூன்றி முன்னேற முடியாதா? வேறு எதற்காகவும் இல்லையென்றாலும், சாகிறமட்டும் உயிர் சுமந்து திரிய வேண்டுமே! கும்பி கழுவித் தீர வேண்டுமே! இனிமேல் எந்தக் காலத்திலும் கறுத்தம்மா அவனுக்குச் சொந்தமாகப் போவதில்லை. அந்த அத்தியாயத்தை மூடி வைத்துவிட வேண்டியதுதான். வாழ்க்கையில் கசப்பான அனுபவங்கள் ஏற்படுகிறபோது, வாழ்க்கை ஓட்டம் தடைப்பட்டுத் தேங்கிப் போகிறபோது, உடலும் உள்ளமும் உருக்குலைந்துதான் போகும்! அவன் தோல்வி கண்ட காதலன் ஆகிவிட்டான். மனத்தில் எஞ்சியிருப்பதெல்லாம் நிராசை ஒன்றுதான்!

செம்பன்குஞ்சு மடியிலிருந்து ஒரு பொட்டலத்தை வெளியே எடுத்தான்.

"எவ்வளவு பணம் தர வேண்டி இருக்குது? சொல்லு." என்று அவன் மீண்டும் கேட்டான்.

அப்போதும் பரீக்குட்டி பதில் சொல்லவில்லை. ஏதோ ஒரு பெரும் தவறு இழைத்து விட்டவன்போல், செம்பன்குஞ்சுவின் முன்னல் நின்றுகொண்டிருந்தான் பரீக்குட்டி. செம்பன்குஞ்சு தான் தொடர்ந்து பேசினன்:

"உன்னை ஒரு நல்ல ஆளு அப்படீன்னு நெனச்சுக்கிட்டு இருந்தேன். ஆன, நீ அப்படியில்லே....."

பரீக்குட்டி என்ன தவறுதான் இழைத்துவிட்டான்? அவன் கறுத்தம்மாவிற்குத் துரோகம் பண்ணிவிட்டான? அல்லது அவளுடைய திருமணத்தை நடக்கவொட்டாமறு முட்டுக்கட்டை போட்டுத் தடுத்துவிட்டான? என்ன தவல் தான் செய்துவிட்டான்?

ஒரே ஒரு தவறு செய்துவிட்டான் அவன். வேறொன்று மில்லை. கறுத்தம்மாவைக் காதலித்து விட்டான். அதுவும் ஒரு திட்டம் வகுத்துக்கொண்டு நிறைவேற்றிய காரியம் அல்ல. யாருக்கும் தீங்கு இழைக்கவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு என்றுமே இருந்ததில்லை. அவன் ஓர் ஆணாகப் பிறந்து விட்டான். அவன் ஒரு பெண்ணைக் காதலிக்கக் காரண மும் அதுதான். ஆனால், அவளுடைய வாழ்க்கை முன்னேற்றத் தில் அவன் என்றுமே குறுக்கிட்டுக் குந்தகம் விளைத்ததில்லை. கூடுமானவரை, தன் போக்கில் ஒதுங்கித்தான் அவன் வாழ்ந்து வருகிறான்.

இப்படியெல்லாம் நடந்துகொண்ட பின்பும், அவன் ஒரு குற்றவாளியைப் போலத்தான் செம்பன்குஞ்சுவின் முன்னால் நின்று கொண்டிருந்தான்.

செம்பன்குஞ்சு சொன்னான்:

"என் மகமேலே ஒரு கண் வச்சுக்கிட்டுத்தானே நீ அண் ணைக்கு எனக்குக் கடன் தந்தே?"

'ஒரு நாளும் அந்த எண்ணமில்லை' என்ற பதில் அவன் தொண்டைக்குழி வரையிலும் வந்தது. ஆனால், அந்தப் பதிலை அவனால் வாய்விட்டுச் சொல்ல முடியவில்லை. ஆயினும், அவன் செம்பன்குஞ்சுவின் குற்றச்சாட்டை மறுத்துக் கன்னத்தில் அறைந்தாற்போல் பதில் சொல்லியிருக்க வேண்டாமா? அவன் அப்படிச் சொல்லவில்லை.

செம்பன்குஞ்சு சொன்னான்:

"கேட்டவுடனேயே கையிலிருந்த பணத்தை யெல்லாம் அரிச்சிப் பொறுக்கித் தந்துப்புட்டே, கொஞ்சம்கூடத் தயங் கலே நீ. வெறும் சாது நீ; அதனால்தான் அப்படி நடந்துக் கிட்டேன்னு நெனச்சேன் நான். மனசிலே உனக்குன்னு ஒரு திட்டம் வச்சிருந்தேன்னு இப்பொதான் தெரியுது."

பொட்டலத்தைப் பிரித்துப் பணத்தை எண்ணிக் கொண்டே பேசினான் செம்பன்குஞ்சு:

"நீ எனக்குப் பெரிய துரோகம் பண்ணிப்புட்டே! உனக்குத் தெரியுமா அது?"

பரீக்குட்டி கல்லால் அடித்த சிலைபோல் நின்றுகொண் டிருந்தான். உணர்விழந்து, செயல் இழந்து நின்றுகொண்

டிருந்தான் அவன். செம்பன்குஞ்சுவின் கண்களில் ஈரம் படிந்தது.

"உனக்குத் தெரியாது. ஆமாம்; உனக்குத் தெரியாது. ஆமாம்...சொல்லப்போனு உனக்கு எதுக்குத் தெரியணும்? நீ ஒரு பேய், பிசாசு!"

அப்போதும் பரீக்குட்டி மௌனமாகத்தான் நின்று கொண்டிருந்தான்.

"இந்தாப் பாரு, நீ ஒரு குடும்பத்தை அடியோடு அழிச்சு நிர்மூலம் பண்ணிட்டே. வாழ்க்கைன்னு ஒண்ணு இல்லாமப் பண்ணிப்புட்டே. உன்னுல் எத்தனைபேர் அழிஞ்சு போயிட்டாங்கன்னு தெரியுமா உனக்கு?"

செம்பன்குஞ்சுவின் குடும்பத்தை அதன் ஆரம்ப நாளிலிருந்து அன்று வரையில் ஆராய்ந்து பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் கூடிவிட்டது. ஒரு தோணியும் வலையும் வாங்கி விட்டுத்தான் உட்காருவது என்ற திடசித்தத்துடன், சக்கி மீன் கூடையைத் தூக்கிக்கொண்டு வியாபாரத்திற்குச் சென்ற அடிநாளிலிருந்து, அந்தக் குடும்பத்தின் வரலாற்றை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அந்தக் குடும்பத்தின் கதையை மொத்தமாக எண்ணிப் பார்க்கிறபோது, செம்பன்குஞ்சு சொல்வதிலும் ஓரளவு உண்மை இருக்கிறது என்பது புலப்படும்.

தொண்டை கரகரக்கச் செம்பன்குஞ்சு சொன்னுன்:

"இந்தக் கடல்கரையிலெ என் சக்கி மாதிரி ஓடித்திரிஞ்சுக் கிட்டிருந்த கறுத்தம்மாவை நீ கெடுத்துப் புட்டே. அண்ணைக்கே ஆரம்பிச்சுட்டே நீ உன் விஷமத்தை. அண்ணைக்குப் பிடிச்சது சனியன்."

அதுவும் வாஸ்தவம்தான். பரீக்குட்டி கறுத்தம்மாவைக் காதலிக்காதவரை இது ஒன்றுமே விளைந்திராது என்று கூறி விடலாமல்லவா? திட்டவட்டமான யோசனைகள் கொண்டிருந்த அந்த அரயக் குடும்பம் கடற்கரையில் வாழ்ந்து முன்னேறிக்கொண்டுதான் இருந்தது. சீரும் சிறப்புமாக வாழ்ந்தது என்றுகூடச் சொல்லலாம். பலம் பொருந்திய உடலையும், இயற்கைச் சக்திகளுடன் ஓய்வு ஒழிச்சலின்றிப் போராடியதன் விளைவாக அரயன் மட்டும் அறிந்துகொண்ட தத்துவ உண்மை

களையும் பெற்றுக்கொண்டிருந்த அந்தக் குடும்பத்தின் வாழ்க்கை பொய்க்கனவாய்ப் போனதற்குப் பரீக்குட்டியும் ஒரு காரணம்தான். கடைசியில் இன்று செம்பன்குஞ்சு கையில் எஞ்சியிருப்பது என்ன? அவனுக்கு மனைவி இல்லை; குழந்தை களும் இல்லை; வாழ்நாள் முழுவதும் அயராது பாடுபட்டுச் சம்பாதித்த தோணி இல்லை; வலையும் இல்லை. ஒன்றுமே மிஞ்ச வில்லை! இருப்பவற்றை எல்லாம் எண்ணிக் கணக்கிட்டுப் பார்த்தால் மிஞ்சுவது வெறும் ஐந்நூற்றுத் தொண்ணூற் றைந்து ரூபாய்தான்—அவனும் அவன் மனைவியும் ஆயுள் பூரா வும் அரும்பாடுபட்டதற்குப் பலன்! அதோடு கடன் வேறு இருக்கிறது.

ஒரு பூச்சியைப் போல் செம்பன்குஞ்சுவின் வாழ்க்கை ஏடுகளை துளைத்துத் துளைத்து ஆராய்ந்து பார்த்தான் பரீக் குட்டி.

செம்பன்குஞ்சு சொன்னது உண்மையிலும் உண்மை!

அன்றொருநாள் அவன், தன் 'வாப்பா'வின் கையில் தொங்கியபடி அந்த கடற்கரையில் அடியெடுத்து வைத்தானே, அந்த நாளை யாராலும் சபிக்காமல் இருக்க முடியாது. அந்த நாளை எண்ணி வருந்தாமல் இருக்க முடியாது.

அன்று தோணி அருகே குஞ்சுமீன் பொறுக்கவந்த அந்தக் குட்டி எதற்காக அவனை இமைகொட்டாமல் அப்படிப் பார்த் தாள்? அவள் கண்டெடுத்த செந்நிறச் சங்கை அவளிடம் கேட்டான் அவன்:

"அதை எனக்குத் தருவியா?"

அவள் அந்தச் சங்கை அவன் கையில் கொடுத்தாள். அன்று அவள் அந்தச் சங்கோடு தனது இதயத்தையும் அவனுக்குத் தந்துவிட்டாளல்லவா?

ஆனால், இப்படி நடந்து கொண்டதற்காகப் பரீக்குட்டியை ஒரு குற்றவாளி என்று சொல்லிவிட முடியுமா? அந்தக் குடும்ப வாழ்க்கையில் அவன் வேண்டுமென்றே புகுந்து செல்லவில்லை. அவன் நாட்படத் தன்னுணர்வின்றியே அந்தக் குடும்பத்தின் அடியோட்டத்தில் வந்து அகப்பட்டுக்கொண்டு விட்டான். அவன்மீது எந்தக் குற்றத்தை வேண்டுமென்றாலும் துணிந்து சுமத்தலாம்.

ஆனால், தன் மனத்தில் அவன் எண்ணிக்கொண்டதை யெல்லாம் யார்தான் அறியக்கூடும்? அவனால் அதையெல்லாம் எவ்வாறு வாய்விட்டுக் கூற இயலும்? அந்த உண்மைகளை எல்லாம் அறிந்துகொள்ளக் கூடிய ஒரே உயிர் இந்த உலகத் தில் உண்டு. அவள்தான் கறுத்தம்மா. அவளாவது அவனது மனத்திலிருந்த உண்மையை ஏற்றுக்கொள்வாளா? நம்பு வாளா? அவனுடைய நினைவே அவளைத் திடுக்கிடச் செய்து விடுமோ? அவனை எண்ணினாலே பிறர் பயப்படத்தான் செய் வார்கள். அவனுடைய ஜென்மம் அப்படி!

செம்பன்குஞ்சு சொன்னான்:

"இனிமே எனக்கு ஒரே ஒரு வெறுப்புத்தான் இருக்குது. என்னை அழிச்சுப்புடணும்னு, என் பொண்ணையும் அழிச்சுப் புடணும்னு திட்டம்போட்டு நீ தந்தியே, இந்தா அந்தக் காசு. இதோ இருக்கு, வாங்கிட்டுப் போ."

அவன் பணத்தை எடுத்து நீட்டினான். இடத்தைவிட்டு அசையாமல் அங்கேயே நின்றுகொண்டிருந்தான் பரீக்குட்டி. செம்பன்குஞ்சு மீண்டும் சொன்னான்:

"இந்தா, வாங்கிக்கிட்டுப் போ."

மீண்டும் 'ஊம்' என்று பலமாக முனகினான்.

அந்த முனகலே உக்கிரமான ஒரு கட்டளைபோல் இருந் தது. ஒரு யந்திரத்தைப்போல் பரீக்குட்டி கையை நீட்டினான். அவன் கையில் பணத்தைக் கொடுத்தான் செம்பன்குஞ்சு.

"என் கையிலே இவ்வளவுதான் இருக்குது. எனக்குக் கணக்கு வழக்கு ஒண்ணும் தெரியாது. என் சக்கிக்குத்தான் அதெல்லாம் தெரியும். பணம் குறைவா இருக்குதுன்னா...... அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?"

செம்பன்குஞ்சு அந்த இடத்தைவிட்டு அகன்றான். பணத் தைக் கையில் வைத்தபடி பரீக்குட்டி அங்கேயே நீண்டநேரம் நின்றுகொண்டிருந்தான். அவன் முன்னால் நிகழ்ந்ததுகூட என்ன என்பது அவனுக்குத் தெரியாது. பணம் கையில் இருக் கிற பிரக்ஞைகூட அப்போது அவனுக்கு இருக்கவில்லை.

அவனுக்கு எதற்குப் பணம்? பணம் எதற்கா? ஒரு வழியும் இல்லாமல், அன்றாடம் பசியைத் தணித்துக்கொள்ளும் மார்க் கமுமின்றி அல்லற் பட்டுக் கொண்டிருக்கும் அவனுக்குப்

பணம் எதற்கு என்று கேட்பது? ஆனால், அவன் எவ்வளவோ பணத்தை இழந்தவன். பணத்தை மட்டுமா? வாழ்க்கையையே இழந்துவிட்டவன் அல்லவா அவன்? அன்றைய உணவுக்குக்கூட அப்போது அவனிடம் காசு இருக்கவில்லை. என்றும் இதேபோல் ஆயுள் காலத்தைப் பூராவும் கழித்துத் தீர்க்க வேண்டியவனுக்கு இவ்வளவு தொகை கிடைத்தது பெரும் அதிருஷ்டம் அல்லவா? அவன் சற்றும் எதிர்பாராத போது பழைய கடன் வசூலாகி விட்டதே!

பரீக்குட்டி தன் கையைப் பார்த்துக்கொண்டான். விரல்கள் நோட்டை இறுகப் பற்றிக் கொண்டிருக்கின்றன. நோட்டின் விளிம்பு காற்றில் சலசலவென்று அசைகிறது. ஆமாம்; அவனுக்கு எதற்கு அந்தப் பணம்? தனக்குச் சொந்தமான பணம் என்றுவது அவன் அதை எண்ணியதுண்டா? ஒரு சந்தர்ப்பத்திலாவது அவன் மனத்தால்கூட உரிமை கொண்டாடாத பணம், உண்மையிலேயே அவனுடையது ஆகுமா? அப்படியானால் யாருக்குச் சொந்தமான பணம் அது?

திடீரென்று பயங்கரமாகச் சிரிக்கும் ஓசை கேட்டது. மயிர்க்கூச்செரியும் பேய்ச் சிரிப்பு. திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தான் பரீக்குட்டி. சற்றுத் தொலைவில் செம்பன்குஞ்சுவுக்குச் சொந்தமாக இருந்த கண்டங்கோரனிடமிருந்து வாங்கிய அந்தத் தோணி கரையில் சரிந்து கிடந்தது. நீண்ட நாட்களாகவே அந்தத் தோணி கரையில்தான் இருக்கிறது; அதன் சுக்கான் இருக்கிற தலைப்பக்கம் தூக்கிக் கொண்டிருக்கிறது; மறுபக்கம் கீழ்நோக்கி மண்ணில் புதையுண்டு கிடப்பது போலிருக்கிறது; மேல்நோக்கியிருக்கும் அடிவானத்துக்கு அப்பால் எங்கோ, எதையோ உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் இருக்கிறது! கண்களுக்குப் புலப்படாத ஏதோ ஒன்றை அது அறைகூவி அழைத்துக்கொண்டிருக்கிறது போலும்! தூரக்கடல், ஆழ்கடல், அடிவானத்தை ஒட்டியிருக்கும் கடல் வெள்ளம் எல்லாம் அதற்கு எவ்வளவோ பரிச்சயமான இடங்கள் அல்லவா? அதோடு அது கடலுக்கே சொந்தமான ஒன்றல்லவா? அதற்கு வாழ்க்கை என்பதெல்லாம் கடலில்தானே? கடலில் பாய்ந்து முன்னேறிச் செல்ல எத்தனை நாட்களாக அது துடிதுடித்துக் கொண்டிக்

கிறதோ? இப்போது அதை இலேசாக ஒரு முறை கையால் தொட்டுவிட்டால் போதும், தானுகவே அது சிற்றலைகளை அடைந்து, அதனூடே சறுக்கி வழுக்கிக் கடலைப் பார்க்கச் சென்றுவிடும். அதன்பின் தன்னந்தனியாகப் பேரலைகளையும் எண்ணிறந்த நீரோட்டங்களையும் தாண்டித் தன் வழியே ஆழ் கடல் நோக்கிக் கண்ணெட்டாத் தூரத்திற்குச் சென்றுவிடும்.

'எவ்வளவு நாளாக இப்படிக் கரையோடு கரையாக விழுந்து கிடக்கிறேன். என்னைப் பாரு. வெய்யிலின் உஷ்ணம் தாங்க முடியாமல் என் உடம்பு கன்னங் கரேலென்ருகி வெடித்து விட்டதே! பரந்து கிடக்கும் இந்த வெள்ளக் காட்டில், அந்த உப்புநீரில் என்னைத் தூக்கிப்போட மாட்டீர் களா?' என்றெல்லாம் அது முறையிடுவது போலவும் இருக் கிறது! கடல் நீரில் மோதி வருகிற ஈரக் காற்று அதற்குக் குளிர் ஊட்டிக் கொண்டிருக்கலாம். ஒரு காலத்தில் அது, பள்ளிக்குன்றத்து வலைக்காரன் கண்டங்கோரனுக்குச் சொந்த மான தோணியாக இருந்தது. அந்தக் கடற்கரையிலேயே என்றும் அதிக மீன்களோடு கரைநோக்கித் திரும்புகின்ற தோணி அதுதானே? ஐசுவரியம் நிறைந்த தோணி என்றல் லவா எல்லோரும் அதை பாராட்டுவார்கள்? தோணி மாதிரியா செல்லும் அது? வானில் பறக்கின்ற பட்சி அல்லவா அது?

'நான் போய் வருகிறேன்' என்று விடைபெற்றுக் கொள் வதுபோல், இப்போது அந்தத் தோணியின் ஒரு பக்கம் மல் லாந்து கிடக்கிறது.

அந்தத் தோணியின் பக்கமிருந்துதான் அந்தப் பேய்ச் சிரிப்பு எழுந்தது. கொலைகாரன் சிரிக்கிற சிரிப்பு! அப்படிச் சிரித்தது செம்பன்குஞ்சு!

* * *

அக்காளும் தங்கையும் ஒருவரை யொருவர் இறுகத் தழு விக்கொண்டனர். எத்தனைநேரம் அதே நிலையில் நின்றுகொண் டிருந்தார்கள் என்பது அவர்கள் இருவருக்குமே தெரியாது. இருவரது கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகிற்று. மரணப் படுக்கையில் அவளைப் பெற்ற தாயார் விழுந்து கிடக்கிற போது, தந்தை முன்னின்று தடை செய்ததையும் பொருட்

படுத்தாமல், கணவனுடன் இறங்கி வந்தாள் கறுத்தம்மா. பின்னுலிருந்து பஞ்சமி 'அக்கா' என்று கத்தியது, நடந்து சென்றுகொண்டிருந்த அவளுக்கு நன்ருக காதில் விழுந்தது. அதே குரல் அவளுடைய செவிகளில் பின்னுல், எத்தனேயோ தடவை ஒலித்துக்கொண்டுதான் இருந்தது. அதன் பின்னும் எத்தனேயோ காரியங்கள் நிகழ்ந்துவிட்டன. தாய் இறந்து போய் விட்டாள். சிற்றன்னே வந்து சேர்ந்தாள். இப்போது பழையபடி அக்காளும் தங்கையும் சந்திக்கிருர்கள்.

பஞ்சமி மனத்தில் போட்ட திட்டம் தோல்வியடைந்ததும், அவள் நேராகத் திருக்குன்றப்புழையைப் பார்க்க நடந்துவிட்டாள். அவளுக்கு வேறு போக்கிடம் ஏது? பஞ்சமி வந்தது சற்றும் எதிர்பாராத விஷயம்தான்.

கண்ணீர் வழிந்தோட, தழுவிய கைகளே அகற்றமுடியாமல், அப்படியே, அதே நிலேயில் நின்றுகொண்டிருந்த சகோதரிகளேப் பழனியும் பார்த்தபடி நின்ருன். அவனுடைய இடுப்பிலிருந்து குழந்தை 'களுக்' என்று சிரித்தது. தனக்குத்தானே ஏதோ சொல்லிக் கொள்வதுபோல் விசித்திர ஓசையையும் எழுப்பியது. அதற்கு அது ஒரு வேடிக்கைக் காட்சியாகப் பட்டிருக்கலாம்.

பழனி கேட்டான்:

"இதாரு? பஞ்சமியா? நீ எப்படி வந்தே?"

அதற்கு அவள் பதில் சொல்வதற்கு முன், கறுத்தம்மா குழந்தையை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டாள். குழந்தை பஞ்சமியை நோக்கிக் குதித்தது. கறுத்தம்மா சொன்னுள்:

"உன் சித்தியடீ இவ."

பஞ்சமி குழந்தையின் முகத்தில் முத்தங்களேச் சொரிந்தாள். அந்தக் குழந்தையைப் பார்க்கவேண்டும் என்று கனவு அல்லவா கண்டுகொண்டிருந்தாள் அவள்!

நீர்க் குன்றத்துச் சமாசாரங்கள் எதையும் பழனி பஞ்சமியிடம் விசாரிக்கவில்லே. அவனுக்கு அந்த ஊர் விஷயங்கள் எதையும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையில்லே. அந்த ஊருக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்? ஒன்றுமே இல்லே.

கறுத்தம்மாதான் எவ்வளவோ தெரிந்துகொள்ளத் துடித்தாள். அதுபோல் பஞ்சமிக்கும் தன் அக்காளிடம் எவ்வளவோ விஷயங்கள் பேச இருந்தன. கறுத்தம்மா யாரைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறுளோ, அல்லது எதைப்பற்றி விசாரித்து அறிந்துகொள்ள ஆசைப்படுகிறுளோ, அந்த இரண்டு விஷயங்களிலும் பழனிக்குச் சிறிதும் அக்கறையில்லே. அதோடு அந்த விஷயங்களே எல்லாம் அவன் அடியோடு வெறுக்கவும் செய்கிறுன். நீர்க்குன்றத்துப் பேச்சு அந்த வீட்டிற்குள் அடிபடுவதிலேயே அவனுக்கு விருப்பமில்லே. பஞ்சமியிடம் அவனுக்கு வெறுப்பு ஒன்றுமில்லே என்றே சொல்லிவிடலாம். பாவம் அவள்! அவளே எதற்காக வெறுக்கவேண்டும்? அவள் குற்றமற்றவள்! ஆனுல், இப்போது அவள் எங்கிருந்து வந்திருக்கிறுள்? யாரைப் பற்றிய செய்திகளே யெல்லாம் மூட்டை கட்டிச் சுமந்துகொண்டு வந்திருக்கிறுள்? அனுதையான பஞ்சமியை அவன் வெறுக்கவில்லே. ஆனுல், அதுவல்ல விஷயம். பழனி எதை எதையெல்லாம் மனதார வெறுக்கிருனே அந்தத் திசையை நோக்கிக் கறுத்தம்மாவின் மனவோட்டத்தைக் கவர்ந்து சென்றுவிடும் கரிய நிழல் ஒன்று வீட்டுக்குள் புகுந்துகொண்டுவிட்டது. நீர்க்குன்றத்திலிருந்து வந்து சேர்ந்திருக்கும் பஞ்சமியைக் கண்ட மாத்திரத்தில், கறுத்தம்மாவின் மனத்தில் என்ன என்ன எண்ணங்கள் தளிர்விடும்? அவள் என்ன என்ன கேட்டுத் தெரிந்துகொள்ள முற்படுவாள்? குறிப்பாக யாரைப் பற்றியேனும் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற மனவேட்கை எழுமா அவள் மனத்தில்?

பழனி அடியோடு உற்சாகத்தை இழந்துவிட்டான். பழையபடி அந்த வீட்டினுள் கரிய நிழல் படர்ந்துகொண்டுவிட்டது. அந்த இடமே களேஇழந்து போய்விட்டது! சின்னஞ்சிறு குழந்தையின் மழலேமொழி சிற்சில வேளே கரிய கார்மேக கூட்டத்தினிடையே பளிச்சிடும் மின்னல்போல் அந்தவீட்டுக்கு ஓர் ஒளியைத் தரும். அது எப்போதும் அழாத குழந்தை. அழுவதற்கு அதற்குச் சந்தர்ப்பம் கொடுப்பதில்லே யாரும். ஆனுல், இப்போது அந்தக் குழந்தையும் அழ ஆரம்பித்துவிட்டது. அப்போது பஞ்சமிதான் அதை எடுத்து வைத்துக்கொண்டு தேற்றுவாள்.

"அக்கா, குழந்தையை அழ விடாதே அக்கா!" என்று சொல்லிக்கொண்டே, அதற்கு விளையாட்டுக் காட்டுவாள் பஞ்சமி. குழந்தைக்கும் சித்தியிடம் நல்ல ஒட்டுதல்.

ஒருவரை ஒருவர் எதுவும் விசாரித்துக் கொள்ளவில்லை. ஏனோ மூச்சுத் திணறிக்கொண்டிருந்தது இருவருக்கும். பேசிக் கொண்டாலும் பழனி காதில் விழாதபடி ஜாக்கிரதையாகப் பேசிக்கொள்ள வேண்டியிருந்தது. அதற்குச் சந்தர்ப்பமும் வாய்க்கவில்லை. கறுத்தம்மா பஞ்சமியிடம் என்ன என்ன விசாரித்து அறிந்துகொள்வாள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நமைச்சல் பழனிக்கு.

அவன் மனத்தில் அவ்வாறு ஓர் எண்ணம் ஏற்பட்ட தென்றால் அதற்கு அவனைக் குறை கூறலாமா? அவன் அவளுடைய கணவன். அவனுக்குக் கறுத்தம்மா எத்தனையோ முறை சத்தியம் செய்து கொடுத்துவிட்டாள் என்பதும் உண்மைதான். இப்போது ஒரு தகப்பன் என்ற ஸ்தானத்தையும் அடைந்துவிட்டான் அவன். இருந்தாலும், கறுத்தம்மாவின் இதயம் மற்றொருவனால் கவரப்பட்டதுதானே? அந்த இதயத்தில் இன்றும் அந்நிய மதத்தைச் சேர்ந்தவனுக்கு ஓர் இடம் இல்லை என்று துல்லியமாகக் கூறிவிட முடியுமா? சரி, அப்படியே இல்லை என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவனைப் போன்ற பொறுப்புவாய்ந்த ஒரு கணவனுக்கு, இவளைப் போன்ற மனைவியின் பேரில் ஒரு சந்தேகக் கண் இருந்து கொண்டுதானே இருக்கும்? அப்படி இருப்பதும் இயற்கை தானே? இருந்தாலும் பரீக்குட்டியைப் பற்றிக் கறுத்தம்மா என்னதான் விசாரிப்பாள்?

கறுத்தம்மாவோ எடுத்ததற்கெல்லாம் சள் சள்ளென்று விழுந்துகொண்டிருந்தாள். பழனிக்கும் ஓயாத சிடுசிடுப்புத் தான். கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை போட்டுக்கொள்ள வேண்டும் என்ற நமைச்சல் உள்ளூர ஏற்பட்டுவிட்டது என்று கூடச் சொல்லி விடலாம்.

இருவரது உள்ளமும் சதா குமுறிக்கொண்டிருந்தது. உள் மனத்தில் ஒரு ரஸபேதம்!

ஒரு நாள் பஞ்சமி தணிந்த குரலில் கேட்டாள்:

"இருந்தாலும் அக்கா, நீ ரொம்பக் கல்நெஞ்சக்காரியா இருக்கே!"

"ஏனும்?"

"இருந்தாலும் நீ அப்பாவைப் பத்தி ஒரு வார்த்தைகூடக் கேக்காதபடி இருக்கியே?"

கறுத்தம்மா பதில் சொன்னாள்:

"பேசாதே; அத்தான் காதிலெ விழுந்துவிடும்."

அன்று மாலை சற்றுப் பொழுதோடு தூண்டில் போடப் போவதாகச் சொன்னான் பழனி.

அப்போது அவன் தூண்டிலில் இரை கோத்துக்கொண்டிருந்தான். அன்று கறுத்தம்மாவும் வழக்கத்தைவிட முன்னதாகவே சோறுக்கி முடித்துவிட்டாள். அவ்வாறு செய்து முடித்ததில், ஒரு நிம்மதியும் பிறந்தது அவளுக்கு. இருளில் பழனி கடலுக்குச் சென்றான். தாயும் குழந்தையுமாக அவனை வழி அனுப்பி வைத்தனர். அன்று குழந்தை கையை வீசி அவனை வழி அனுப்பி வைத்தது. ஆனால், தோணியிலிருந்து பழனி வழக்கம்போல் கையை அசைத்து விடைபெற்றுக் கொள்ளவில்லை. தோணி மேற்குத் திசையில் முன்னேறிச் சென்று கொண்டிருந்தது. அவன் பலமாகத் துடுப்பு விரித்துத் தோணியை முன்னுக்குத்தள்ளிக்கொண்டு சென்றான். அன்றும் ஏனோ குழந்தை அழுதது.

வீட்டில் அன்று அக்காளும் தங்கையும்தான் இருந்தனர். பஞ்சமி ஊர்ச்செய்திகளைக் கூற ஆரம்பித்தாள். அன்பே உருவான தாயார் இறந்துபோன சோகக் கதை, தன்னை நல்ல பெண்ணிடம் ஒப்படைத்த நிகழ்ச்சி, மீண்டும் ஒருத்தியை மணந்துகொள்ளத் தாயார் தகப்பனுருக்கு மனமுவந்து வழங்கிய சம்மதம்—இவ்வாறு ஒவ்வொரு கதையாகக் கூறிக் கொண்டே வந்தாள் அவள்.

"இதோப் பாரு அக்கா, ஒரு நா பரீக்குட்டி முதலாளி அம்மாவைப் பாத்துப்புட்டுப் போக வந்தாரு."

கறுத்தம்மா அந்தப் பேச்சை வேறு திசைக்குத் திருப்பினாள். அப்போது அவள் இதயம் படபடவென்று அதிக வேகத்துடன் துடித்தது. பஞ்சமி கேட்டாள்:

"என்ன அக்கா, உனக்கு அந்த விஷயம் மட்டும் தெரிஞ்சிட வேண்டாமா என்ன?"

அந்தக் கேள்வி தனது காதில் விழாததுபோல் பாசாங்கு செய்துகொண்டே கேட்டாள் கறுத்தம்மா:

"ஆமா, அம்மா செத்துப் போனபோது எனக்கு ஏன் ஆள் சொல்லி விடலெ?"

"விட வேண்டாம்னு எல்லாரும் சொல்லிட்டாங்க."

"எல்லாருமா?"

"ஆமா, உன்னே எல்லாரும் கெட்டுப்போனவ அப்படீன்னு சொல்லிப்புட்டாங்க. அதுக்கு ஏத்தாப்போல நீயும் கல்லுக் கணக்கா இருந்துபுட்டே. இல்லேன்னாலும் எண்ணேக்குமே நீ அப்படித்தான். மனசிலெ அன்பே கிடையாது. கல்நெஞ்சக் காரின்னு நீதான்."

இதைத் தொடர்ந்து பஞ்சமி வீட்டுக்கு வந்த சிற்றன்னே யைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள். அதைப்பற்றிச் சொல்லிக் கொண்டு வரும்போதே நடுவில் முக்கியமான செய்தி யொன் றையும் சொல்லவேண்டி வந்தது.

"அக்கா, நமக்குச் சொந்தமா இருந்த தோணி, வலே எல்லாம் போச்சு. அதையெல்லாம் ஈடாக வெச்சு அப்பா கடன் வாங்கிப்புட்டாரு. ஆனு, சின்னம்மா அந்தப் பணத்தை அப்படியே தூக்கித் தன் மகனுக்குக் கொடுத்துப்புட்டா."

இந்த நிகழ்ச்சியை மிகவும் விரிவாகச் சொன்னுள் பஞ்சமி.

அவர்களுக்குச் சொந்தமான தோணியும் வலேயும் கையை விட்டுப் போய்விட்டது. அப்பா கன கம்பீரமாக நின்று கொண்டிருக்க, ஓர் அலேயிலிருநது மற்ருேர் அலேக்குத் தாவி, பறவைபோல் முன்னேறிச் செல்லும் அந்தத் தோணி, அப் போது கறுத்தம்மாவின் மனக்கண்முன் வந்து நின்றது. தாயும் தந்தையும் சலியாது உழைத்து வாங்கிய தோணி! அந்தத் தோணியிடமே அவளுக்கு அலாதியான ஒரு பாசமும் பந்தமும் இருந்ததுண்டு. 'எங்க தோணி' என்று அவள் முதன் முதலில் வாய்திறந்து சொன்னது பழனியின் தோணியை அல்ல; இன்று மற்ருெருவனுக்குச் சொந்தமாகி விட்ட தோணியைத்தான்! இப்போது அது வேறு யாருக்கோ

சொந்தமாகி விட்டது. இனிமேல் அதைப்பற்றி எண்ணிப் பார்ப்பதுகூட வீண்வேலைதான். அன்றும் கறுத்தம்மா அழுதாள்.

"பஞ்சமி, இனிமே அப்பா எப்படிக் காலம் தள்ளுவாரு?" என்று, ஆற்றுமை தொனிக்கக் கேட்டாள் அவள்.

"எப்படியோ?"

அவள் சொன்ன மற்றச் செய்திகளையெல்லாம் விட இந்த ஒரு விஷயம் அவள் இதயத்தைப் பிளந்தது. ஆனால், அதை விடவும் அவள் மனத்தைச் சுட்டது, அவளுடைய கேள்விக்குப் பஞ்சமி சொன்ன அலட்சியமான, உணர்ச்சியற்ற பதில்தான்! சொந்தத் தகப்பனின் எதிர்காலத்தை எண்ணி அவள் சிறிதும் வருந்துவதாகத் தெரியவில்லை. அவளைப் பொறுத்தவரை அது மிகச் சிறிய விஷயம்! தன்னையே ஒரு கணம் மறந்து பேசினாள் கறுத்தம்மா:

"அடேயப்பா, என்ன நெஞ்சழுத்தம் உனக்கு?"

"ம், என்னுன்னு கேக்கறேன்?"

"அப்பா கதி என்னுகும்னு எண்ணிப்பாக்காம நீ பாட்டுக்கு வந்துட்டே! இனிமே அவரெ கவனிச்சுக்க யாரு இருக்காங்க?"

கறுத்தம்மா சொன்னதும் உண்மைதான். அதேபோல் பஞ்சமி சொன்னதிலும் உண்மை இருந்தது. அவளைக் குறை கூற என்ன இருக்கிறது? ஆனால், ஒரே ஒரு வித்தியாசம். வேறு மார்க்கம் எதுவும் தட்டுப்படாமலிருந்த தர்மசங்கட நிலையில் தாயையும் தகப்பனையும் விட்டுவிட்டு வந்தாள் அவள். ஆனால், பஞ்சமி அப்படி வரவில்லை. பஞ்சமி சொன்னாள்:

"அண்ணைக்கு நீ மட்டும் போகாதபடிக்கு வீட்டோடு இருந்திருந்தா இதொண்ணுமே வந்திராது. அம்மா மாதிரி நீயும் வீட்டு வேலையைக் கவனிச்சுகிட்டு இருந்திருந்தாப் போதும்."

கறுத்தம்மா எண்ணச் சுழலில் ஆழ்ந்து தன்னையே மறந்து விட்டாள். பஞ்சமி சொன்னதுபோல் வீட்டோடு இருந்திருந் தால்......அப்படி இருந்திருந்தால், எல்லாம் ஒழுங்காக நடந்து கொண்டு வந்திருக்குமா? பாவம், பஞ்சமி! அவள் ஒரு பாவமும் அறியாதவள். அவள் என்ன செய்வாள்? அவள் சொன்னது

செ.—21

போல் பிறந்த வீட்டோடு இருந்திருந்தாலும் என்ன என்ன விபரீதங்கள் நேர்ந்திருக்குமோ? அப்படி அவள் அங்கேயே தங்கியிருந்தால், பஞ்சமி ஒருகால் தன் அக்காளையே இழந்து விட்டிருக்கவும் கூடும். ஆனால், இதையெல்லாம் அவளால் உணர்ந்துகொள்ள முடியுமா? பஞ்சமியோ பெரிய வாயாடி, அவள் சும்மா உட்கார்ந்து கொண்டிருப்பாளா?

"உனக்குச் சொந்தமா ஒரு மரக்கான் வந்து சேந்ததும், அடியோட எல்லாத்தையும் மறந்துப்புட்டு, நீ பாட்டுக்கு அவன் பின்னலெ ஓடி வந்துப்புட்டே!"

'ஐயோ! அப்படிச் சொல்லாதே! அது பொய்!' என்ற சொற்கள் இதயத்தைப் பொசுக்கித் தாங்கமுடியாத வேதனை யைக் கிளப்பிக்கொண்டே அவளுடைய நுனிநா வரையிலும் வந்தன. ஆனல், அவை வெளியாகவில்லை. அவள் விம்மி அழுதபோது, இடையிடையே சில வார்த்தைகள் மட்டும் சிதைந்து வெளியாயின. உண்மையில் அவள் என்ன சொல்ல எண்ணினாள்? அவள் சொல்ல எண்ணியதெல்லாம், கணவன் மீது வைத்த அன்புணர்ச்சியில், என்னதான் நேர்ந்து விட்டா லும் அவனுடைய வார்த்தைகளை மதித்து அதற்குக் கட்டுப் பட்டு, அவனுடன் செல்லவேண்டியதுதான் கடமை என்பதை உணர்ந்து, அதன்படி நடந்துகொண்டேன் என்பதுதானே? ஆனல், அது உண்மைதானா? வேறு சில காரணங்களும் உண்டு அல்லவா? அதையெல்லாம், பழனியின் நிழலில் வாழ்ந்து கொண்டே, அவனுடைய உப்பைத் தின்றுகொண்டே, எவ்வாறு கூறமுடியும் கறுத்தம்மாவால்? பாவம்! பழனி கடலுக்குச் சென்றிருக்கிறான்! உண்மையை அப்பட்டமாகச் சொல்வதென்றால், தன்னைக் காப்பாற்றிக் கொண்டுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் தப்பியோடி வந்தவள்தானே அவள்! தாய் தந்தையரிடம் எல்லையில்லாத அன்புகொண் டிருந்தாள் என்றோ, கட்டிய கணவனிடம் எங்கும் காணமுடி யாத கடமையுணர்வுடன் நடந்துகொள்ள எண்ணினாள் என்றோ சொல்வதற்கில்லை. பஞ்சமி சொன்னதுபோல், அவள் மரக்கான் பின்னல் ஓடிச் சென்று விடவுமில்லை.

ஊர்ச் செய்திகளைக் கூறிக்கொண்டே வந்தபோது, தகப் பனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்ட துரதிருஷ்டத்தையும்

பஞ்சமி சொன்னுள். அதோடு தாங்க முடியாத வெறுப்புடன் பல்லே நறநறவென்று கடித்துக்கொண்டே சொன்னுள் பஞ்சமி:

"அக்கா, நீ அந்தத் துலுக்கனைக் கட்டிக்கிட்டுத் திரிஞ் சேன்னு சொல்லுதா. அந்தத் தடிச்சி. கடல்கரையை அசுத்தம் பண்ணிக்கிட்டு இருந்தியாம் நீ!"

மிகுந்த ஆற்ருமையுடன் பஞ்சமி தொடர்ந்து சொன்னுள்:

"பாவம்! அப்பாவுக்குப் பயித்தியமும் பிடிச்சுப் போச்சு!"

பஞ்சமியின் பேச்சுக்குத் தலே அசைக்கக்கூடச் செய் யாமல் கல்லாய்ச் சமைந்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தாள் கறுத்தம்மா. அவளுக்குத் தலே சுற்றியது. கண்கள் இருண் டன. தொடர்ந்து பல்வேறு சமாச்சாரங்களேக் கூறிக் கொண் டிருந்தாள் பஞ்சமி.

அவள் சொன்னதிலிருந்து ஒரு விஷயம் தெரிய வந்தது. இன்றும் அவளுடைய பேச்சு கடற்கரையில் அடிபட்டுக் கொண்டுதான் இருக்கிறது. சலிப்புத் தட்டாமல் பெண்கள் அதை வம்பளந்து கொண்டுதான் இருக்கின்றனர். மிகவும் மானியாக வாழ்ந்து வந்த அப்பா காதுக்கும் அந்தச் செய்தி எட்டி விட்டது. அப்பா அவளே மனமார மன்னிப்பாரா?

பழையபடி பஞ்சமி பரீக்குட்டியைப் பற்றிப் பேச ஆரம்பித் தாள். அந்த இளேஞனின் சோகக் கதையை விவரித்தாள் அவள்:

"பாவம், அவரிட்டே ஒண்ணுமே இல்லே; பட்டினிதான். பசியோட கடல்கரையில் அங்கேயும் இங்கேயும் திரிஞ்சுகிட்டு இருப்பாரு. பாத்தாலும் பைத்தியம் மாதிரிதான் இருக்கும். ஒரே கண்ருவியாக இருக்கும் பாக்கிறதுக்கு."

அவனேப் பற்றிச் சொல் என்ருே, சொல்ல வேண்டாம் என்ருே கறுத்தம்மா சொல்லவில்லே. உள்ளூர அதையெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசைதான் அவளுக்கு. அப்போது இருந்த சூழ்நிலேக்கு முற்றிலும் வேறுபட்ட ஒரு சூழ்நிலேயில் இருந்திருந்தால், அவளே முந்திக்கொண்டு அதை யெல்லாம் விசாரித்து அறிந்துகொள்ள முற்பட்டிருப்பாள்.

பஞ்சமி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, உருமாலும் மஞ்சள் சட்டையும் அணிந்தபடி, 'வாப்பா'வின் கையில்

தொங்கியபடி, முன்னொரு நாள் அந்தக் கடற்கரைக்கு வந்து சேர்ந்த சிறுவனைக் கறுத்தம்மா மனக் கண்ணால் கண்டு கொண்டுதான் இருந்தாளோ? அன்று அவள் அவனுக்கு ஒரு சங்கைப் பரிசாக அளித்தாள். இதேபோல் அந்தக் காதல் நாடகத்தின் பல்வேறு காட்சிகள் நொடியிடையில் அவள் மனத்திரையில் ஓடிக் கொண்டிருந்தனவோ?

வாழ்வு விலைமதிக்க முடியாதது. அது அழிந்து போய் விட்டது. அழிந்துதான் போயிற்று? இல்லை. அழிக்கப்பட்டு விட்டது. சுயநினைவின்றி அவள் பஞ்சமியிடம் கேட்டாள்:

"இப்போதும் சின்ன முதலாளி தோணிமேலே உக்காந்து பாடிக்கிட்டு இருப்பாரா?"

பஞ்சமி பதில் சொன்னாள்:

"சில சமயம் பாடிக்கிட்டு உக்கார்ந்து இருப்பாரு."

அவன் பாடிக் கொண்டிருக்கும் அந்தப் பாடலுக்கு என்ன பொருள் என்பதைப் பஞ்சமி அறிவாளா? அறிந்து கொள்ள வாய்ப்பில்லை அவளுக்கு.

கறுத்தம்மா கேட்டாள்:

"நீ பாக்குது உண்டா?"

"எப்போதாவது பார்ப்பேன்."

"அப்பொ என்னப் பத்தி ஏதாவது உங்கிட்டக் கேப் பாரா?"

இப்படிக் கேட்டபோது கறுத்தம்மாவின் குரல் நடுங்கிக் கொண்டிருந்தது. பஞ்சமி பதில் சொன்னாள்:

"ஊஹூம். என்னப் பாத்தா சிரிப்பாரு. அவ்வளவு தான்."

"இல்லை, உன்னப்பத்தி ரொம்பக் கேப்பான்!" என்று, அன்று வரையில் கேட்டிராத ஒரு கர்ஜனை எழுந்தது. சட் டென்று அதை இனங்கண்டுகொள்ள முடியவில்லை. பழனி முன்னால் நின்று கொண்டிருந்தான். பஞ்சமியும், கறுத்தம்மா வும் அலறிப்புடைத்துக்கொண்டு எழுந்து நின்றனர்.

கறுத்தம்மாவின் ரகசியம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது!

# 20

அன்றுவரையிலும் ஏற்பட்டிராத துணிச்சல் பிறந்து விட்டது கறுத்தம்மாவுக்கு. அறிவு சுறுசுறுப்பு அடைந்தது. அதோடு எதிர்கால வாழ்வைப்பற்றித் தெளிவில்லாத திட்டம் ஒன்றும் உருவாயிற்று. அவள் வாழ்ந்த வாழ்க்கை, அதன் தன்மை, நிகழ்ந்த நிகழ்ச்சிகள், அவளை இந்த முடிவுக்கு இழுத்துக்கொண்டு வந்து தள்ளிவிட்டன. அன்று வரையிலும் அவள் பயந்து பயந்து வாழ்ந்தாள். எடுத்ததற்கு எல்லாம் பயம்தான் அவளுக்கு. மனோபலம் என்பதை மருந்துக்கும் காணமுடியாது. ஆனால், அவளும் உண்மையிலேயே சீரும் சிறப்புமாக வாழப் பிறந்தவள்தான்.

ஆனால், அவளுடைய வாழ்வில் இந்த மாற்றம் திடீரென்று நிகழ்ந்துவிட்டது. பஞ்சமி வந்து சேர்ந்ததுதான் அதற்குக் காரணமாகவும் இருக்கலாம். அவளுக்கு இப்போது ஒரு துணை கிடைத்துவிட்டது. மேலும் அவளுடைய ரகசிய எண்ணங்கள் அனைத்தும் வெட்ட வெளிச்சமான பின்பு மூடிமறைப்பதற்கு என்ன இருக்கிறது? யாருக்குப் பயப்பட வேண்டும்? உத்தரவாதம் கொண்ட ஒரு வாழ்க்கை உண்டு என்ற எண்ணமோ, மேலும் வாழ்நாளைக் கழிக்கவேண்டுமென்ற நம்பிக்கையோ இப்போது அவளுக்கு இல்லை. வாழ்க்கைப் பாதையில் தடுமாறி, இடறிவிழுந்து, குறை நாட்களையும் வாழ்ந்து தீர்ப்பதற்குப் பஞ்சமி உற்ற துணையாக வந்து சேர்ந்து விட்டாள்.

இருந்தாலும், அவள் அதற்கு முன் பலமுறை கணவனிடம் கூறிய வாக்குறுதிகளை மீண்டும் அன்று சொல்லத்தான் செய்தாள். அவள் தன் மனத்திலிருந்த உண்மைகளை எல்லாம்

மனம்விட்டு அவனிடம் சொன்னாள். பரீக்குட்டி சிறுவயதில் அவளுடைய தோழனாக இருந்தான் என்பதற்கு மேலாக ஏதாவது ரகசியம் உண்டோ என்று திரும்பத் திரும்பக் கேட்டான். அதற்கு அவள் சொன்ன பதிலெல்லாம் தான் கெட்டுப் போகவில்லை என்பதுதான். அதுமட்டும் தெரிந்தால் போதாது பழனிக்கு.

அவன் கேட்டான்:

"நீ அவன் மேலெ ஆசை வைச்சிருந்தியா?"

வாழ்க்கையில் தனக்குச் சொந்தமென்று இருந்த அனைத்தையும் இழந்துவிட்டுப் பித்துப் பிடித்தவன்போல் கடற்கரையில் வாய்விட்டுப் பாடிக்கொண்டே அலைந்து திரிந்துகொண்டிருக்கும் பரீக்குட்டி, பஞ்சமி மனமுருக, மிகுந்த பரிவுணர்ச்சியுடன் விவரித்தாளே, அதே கோலத்தில் கறுத்தம்மாவின் கண்முன்னால் தோன்றினான். 'நான் வாழ்நாள் முடிவது வரை இப்படிப் பாடிக்கொண்டே இருப்பேன், திருக்குன்றப்புழைக் கடற்கரையில் கேட்க வேண்டாமா? அதற்காகத்தான்!' என்று அவன் அன்று சொன்ன வார்த்தைகள் அவளுடைய செவியினுள் முழங்கின. 'தோணியும் வலையும் வாங்கினதும் எனக்கு வியாபாரத்துக்கு மீன் தருவீங்களா?'

சட்டென்று அந்தக் கேள்விக்குப் பதில் பிறக்காததால், மீண்டும் ஒரு தடவை அதே கேள்வியைக் கேட்டான் பழனி. இனிமேலும் மூடி மறைத்துக் கொண்டிருப்பதில் என்ன லாபம் என்ற கேள்வியை அவளுடைய மனத்தினுள் யாரோ எழுப்பினார்கள். 'நீ குற்றவாளி அல்ல; கல்யாணத்திற்கு முன் நீ ஒருவனிடம் காதல் கொண்டிருந்தாய். இதில் தவறு என்ன இருக்கிறது?'

கறுத்தம்மா பதில் சொன்னாள்:

"ஆசை வெச்சிருந்தேன்."

அப்போது அந்த அறைக்குள் சவ அமைதி நிலவியது. அந்த அமைதியை எந்த ஓசையாலும் குலைக்க முடியாது என்றும் தோன்றியது. ஆனால், பழனியின் கேள்வி அந்த அமைதியையே குலைத்துவிட்டது.

"நீ அவன் கிட்டெப் பேசி விடை பெத்துக்கிட்டுத்தான் வந்தியோ?"

அதற்கு அவள், 'ஆமாம்' என்றோ, 'இல்லை' என்றோ பதில் சொல்லவில்லை. பழனியின் வாயிலிருந்து அதற்குள் அடுத்த கேள்வி வந்தது.

"இனிமே எண்ணைக்குப் பாக்கலாம்னு சொல்லிக்கிட்டு வந்தே?"

"அதெப் பத்தி ஒண்ணும் நான் சொல்லலே."

குழந்தை விழித்துக்கொண்டு 'வீல்' என்று கத்திற்று. அவள் குழந்தையை எடுத்து வைத்துக்கொண்டு பால் கொடுத்தாள்.

அன்று அவளால் பழனியின் மனத்தைத் தன் பக்கம் இழுத்துக்கொள்ள முடியவில்லை. ஆனால், அவளுடைய வாய் மட்டும் அவனுடைய மன ஓட்டத்திற்கு இசைவாக, ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பல்வேறு வாக்குறுதிகளை அடுக்கிக்கொண்டேயிருந்தது. சாதாரணமாக ஒரு பெண் திருமணச் சடங்கின் போது, உதடு அசையாமல், ஓசைப்படாமல் வழங்கும் வாக்குறுதிகள் அவை! இவளோ வாய்விட்டு அழுத்தம் திருத்தமாகக் கூற ஆரம்பித்துவிட்டாள்! வேறு என்னதான் செய்ய முடியும் அவளால்? ஆமாம்; அவள் முகத்தில் அதே கேள்விக் குறிதான்.

அதிகாலையில் எழுந்த பழனி எங்கோ வெளியே சென்றான். அவன் வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. பஞ்சமி கேட்டாள்:

"அக்கா, அத்தான் கோவிச்சுக்கிட்டிருக்காரோ?"

கறுத்தம்மா சொன்னாள்:

"பஞ்சமி, நம்ம ரெண்டு பேருக்கும் இனிமே யாருமே இல்லை. வெறும் அனாதைக நாம."

"அக்கா, உனக்காவது வீடும் குடியும் இருக்குது. எனக்கு அதுகூட இல்லியே!"

"இல்லே பஞ்சமி. அப்படியில்லே. நாம ரெண்டு பேரும் ஒரே மாதிரிதான். நமக்குன்னு சொந்தமா ஒண்ணுமில்லே. இனிமே நாம ரெண்டு பேரும் ஒண்ணாயிருப்போம்."

கறுத்தம்மா தொடர்ந்து சொன்னாள்:

"செம்பன்குஞ்சுவுக்குப் பிறந்த குழந்தைகள் அத்தனையும் மணிகள்!"

அன்று மத்தியானம் வீடு வந்து சேர்ந்த பழனியிடம் கறுத்தம்மா ஒரு கோரிக்கை எழுப்பிக் கேட்டாள்:

"எனக்கு ஒரு வாட்டி நீர்க்குன்றத்துத்துக்குப் போகணும்."

அவன் பதிலே பேசவில்லை. செம்பன்குஞ்சுவுக்கு அப்போதிருந்த துரதிருஷ்ட நிலைமையைப் பழனியிடம் விரிவாகச் சொன்னாள் கறுத்தம்மா.

"எங்க அப்பாவுக்கு வேறு யாருமே இல்லே."

அதற்கும் அவன் பதில் சொல்லவில்லை.

அன்று வழக்கம்போல் அவன் தூண்டிலில் இரைகோத்துக் கொண்டிருந்தான். கறுத்தம்மா பாத்திரத்தில் சோறு எடுத்து வைத்தாள். தூண்டிலும் தண்டும் எடுத்துக்கொண்டு முன்னால் நடந்து சென்றான் பழனி. அவன் பின்னால் ஒரு கையில் சோற்றுப் பாத்திரமும், மறு கையில் குழந்தையுமாகச் சென்றாள் கறுத்தம்மா.

அன்றும் குழந்தை கையைத் தூக்கி விடை கொடுத்தது. தோணி சிற்றலைகளைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தபோது, அவன் பின்பக்கம் திரும்பிப் பார்த்தான். அப்போதும் குழந்தை கையைத் தூக்கி வைத்துக்கொண்டுதான் இருந்தது.

கறுத்தம்மா அங்கு, அந்தக் கடற்கரையிலேயே சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தாள். அப்போது அந்தி சாயும் நேரம். மேற்கு வானம் தீயிலிட்டு எடுத்த தங்கத் தட்டை வளைத்து வைத்ததுபோல் செக்கச்செவேலென்று இருந்தது; ஒரே ரத்தச் சிவப்பு! கருநீலக் கடலும், ஒளி பொருந்திய அந்தத் தங்கத் தகடும் ஒன்று சேர்ந்து இணையும் இடத்தில் கன்னங்கரிய ரேகை ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அந்த ரேகைக்கு மறுபக்கம் ஒரே மர்மம்! யாருமே அறிந்திராத மர்மச் சுரங்கம்!

எல்லை காண முடியாதபடி விரிந்து கிடக்கும் அந்த வெள்ளக்காட்டில், பழனியின் தோணி தென்திசை நோக்கிப் பாய்ந்து செல்கிறது. பழனி பலமாகத் துடுப்பு வலித்துத் தோணியை முன்னே தூக்கி யெறிந்துகொண்டு செல்கிறான். சில சமயம் தோணி தண்ணீரில் அமிழ்ந்து மீண்டும் எழும்பிச் செல்கிறது. இதன் காரணமாகத் தோணியினுள் சிறிது தண்ணீர் உட்புகுந்து தேங்குகிறது.

இது போல் மிகுந்த ஆயாசத்துடன் உடம்பை வளைத்துத் தோணியைச் செலுத்தி எத்தனையோ நாட்களாகிவிட்டன! பேருறக்கத்தில் ஆழ்ந்துபோன ஊக்கமும் வலிவும் மீண்டும் உயிர்கொண்டு எழுந்து நின்று கும்மாளம் போட ஆரம்பித்தன. அளவிட முடியாத அந்த ஊக்கத்தையும் வீறு கொண்டு எழுந்த சக்திகளையும் தன்னுள் அடக்கிக்கொள்ள முடியாமல் உடம்பு தவியாய்த் தவித்தது. இந்த வேகம் போதாது! போதவே போதாது! ஆனால், என்ன செய்வது? தோணியோ மிகச் சிறிது! தூரத் தொலைவில் கண்களுக்குப் புலப்பட்ட அந்தக் கரிய ரேகையை நோக்கித் தோணியினுள் தண்ணீர் புகுந்து தேங்குவதையும் உணராது, அவன் போக்கில் கனவேகத்துடன் முன்னேறிச் சென்று கொண்டிருந்தான்.

வீறுகொண்டு எழுந்த சக்திகளின் சீறலையும் கர்ஜனையையும் அந்த விசாலமான சூன்ய வெளியில் யாருமே கேட்டதில்லை. பழனியின் சின்னஞ் சிறிய தோணி வான மண்டலத்தில் சீறிப் பாய்ந்துகொண்டு செல்கிறது.

உறங்கிக் கிடந்த அவனது சக்திகளை யார் தூண்டிவிட்டு விட்டார்கள்? இனிமேல் மீண்டும் அதை உறக்கத்தில் ஆழ்த்த எந்த சக்தியால் முடியும்? உட்லோடு உறைந்து கிடந்த அசுர பலத்தைக் கட்டவிழ்த்து விட்ட பின்னர், இனிமேல் என்ன செய்ய முடியும்? அவன் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறான்; தன்னுணர்வின்றி மேலும் மேலும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறான் அவன்.

கடல் யானைக் கூட்டமொன்று தோணியைச் சுற்றி வந்து விட்டு உருண்டு சென்றுகொண்டிருந்தது. அதிலொன்று தனது முதுகினால் தோணியை இடித்துவிட்டு மேலே எழும்பிற்று. தோணியும் தண்ணீர் மட்டத்திலிருந்து மேல்நோக்கி எழுந்தது. கணப்பொழுதில் தோணி கவிழ்ந்து விடலாம். அப்போது பழனியின் கண்களிலிருந்து தீப்பொறி பறந்தது. அவன்பற்களை நறநறவென்றுகடித்துக்கொண்டு, பெருங்குரலெடுத்துக் கர்ஜித்தான். கர்ஜனை என்று சொல்லிவிட முடியாது. பயங்கரமான அலறல்தான் அது. கடல் யானையின் முதுகில் மோதி மேலே எழும்பிய தோணியைத் தனது வலுவையெல்லாம் ஒன்றுதிரட்டி முன்னே செலுத்தினான் பழனி. இத்தனை

காரியமும் ஒரு கணப்பொழுதினில் நிகழ்ந்து முடிந்துவிட்டது நல்ல வேளை. தோணி கவிழ்ந்து விடவில்லை. கடல் யானைக்குத் தான் முதுகெலும்பு நொறுங்கிப் போய்விட்டதோ என்னவோ! அது தண்ணீரில் அமிழ்ந்து விட்டது. மீண்டும் தோணியை அதிவேகமாகச் செலுத்திக் கொண்டு சென்றான் பழனி. மேற்கே...மேற்கே...அதே திசையில் எங்கேதான் போகிறான் அவன்? இந்த மேற்குத் திசைக்குத்தான் முடிவு என்பதே கிடையாதா?

கடற்கரையில் அவனுடைய குழந்தை எவ்விதக் காரண மும் இன்றித் திடீரென்று அழ ஆரம்பித்து விட்டது. ஒருகால் பழனி—அந்தக் குழந்தையின் தகப்பன்—பேய் வெறிகொண்டு ஆழ்கடலில் சென்று கொண்டிருந்தது அந்த களங்கமற்ற இதயத்திற்குப் புலப்பட்டதோ என்னவோ! தன் தகப்பன் முடிவற்ற அந்த வெள்ளக் காட்டில் மேற்குத் திசையில் சென்று கொண்டிருந்ததைக் கண்டதால்தான் அந்தக் குழந்தை அழுததோ? ஆனால் பழனியின் செவிக்குக் குழந்தை யின் அழுகை எட்டவில்லை. ஏனெனில், காற்று கிழக்குத் திசை நோக்கி வீசிக்கொண்டிருந்தது. ஆனால் அக்கினிப் பரீட்சையில், கடல் யானையின் முதுகெலும்பை நொறுக்கிக் கொண்டு அவன் முன்னேறிச் சென்றபோது, வாய்விட்டு அலறினானே, அந்த அலறலைக் காற்று சுமந்துவந்து கரை சேர்த்து விட்டுச் சென்றது. அந்த அலறல் கறுத்தம்மாவின் செவியிலும் விழுந்திருக்குமா? விழுந்திராது. அதற்கு அவள் தூய உள்ளத்தினளாக இருந்திருக்க வேண்டும். அவள் அப்படி இல்லையே!

பழனியோ ரகசியச் சுரங்கத்தைத் தேடிச்சென்று கொண் டிருக்கிறான். வட்ட நிலா கடலிலிருந்து மேலெழுந்து வந்து கொண்டிருந்தது. புதிய உலகத்தை நோக்கிச் சென்றுகொண் டிருக்கிறோம் என்ற நம்பிக்கை அவன் உள்ளத்தில் தளிர் விட்டது. அந்த உலகத்திலோ வெள்ளிப்பரப்பில் நீலத் தகடுகளை யாரோ வீசி எறிந்திருக்கிறார்கள். அதே சமயம் பழனியின் மனத்தில் மற்றொரு பீதியும் எழுந்தது. இப்போது நாற்புறமும் அவனை அடிவானம் சூழ்ந்துகொண்டிருக்கிறது! அவனுடைய உலகம் மிகவும் சுருங்கிவிட்டது. அவன் தன்

னுடைய பலம் பூராவையும் ஒன்று சேரத் திரட்டித் தோணியை முன்னால் இட்டுச் செல்லவேண்டும்.

கடற்பாம்புகள் அவனுடைய தோணிக்குள் நுழைந்தன. கருநீலப் பின்னணியில் எல்லையின்றி விரிந்து கிடக்கும் வெள்ளித் தகடுகளின் மீதெல்லாம் அவை இழைந்தோடிக் கொண்டிருந்தன. தோணி விளிம்பில் வாலைமட்டும் ஊன்றிக் கொண்டு எழுந்து நின்றன சில. மீண்டும் நீரில் அவை நழுவி விழுந்து மறைந்தன. தோணிக்குள் இரண்டு அரவுகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தபடி கிடந்தன.

மேற்றிசையிலிருந்து அடிவானத்தைக் காணவொட்டா மல் மறைத்துக்கொண்டு, மலைபோன்ற ஓர் அலை உருண்டு திரண்டு முன்னேறி வந்துகொண்டிருந்தது புலப்படலாயிற்று! அப்போது அந்தப் பேரலையின் அடியினூடே முக்குளிப் போட் டுச் செல்லவேண்டும் என்ற விபரீத ஆசையும் அவன் மனத் தில் எழுந்தது. ஆனால், பேரலை வெள்ளைச் சிரிப்பு ஒன்றை ஆர்ப்பாட்டத்துடன் சிரித்து முழக்கிக்கொண்டு, அவனது சின்னஞ்சிறிய தோணியை அலட்சியமாகத் தனது சிரசில் ஏந்தியெடுத்துத் தூக்கி அப்பால் தள்ளிவிட்டுச் சென்றது. அந்த இடத்தில் அலைகள் எதுவும் இல்லை. ஒரே சவ அமைதி நிலவிற்று. ஆனால், அங்கே கடல் கன்னங்கரிய நிறங்கொண்ட தாய் இருந்தது. தென்மேற்குத் திசையில் மிக நீண்ட ராட்சச நாக்கு ஒன்று கடலில் கீழ்ப்பரப்போடு நெடுந்தூரம் நீண்டு சென்று கொண்டிருப்பதாய்த் தோன்றிற்று. அங்கு நிலவிய அமைதியிலும் ஒரு கம்பீரம் தெரிந்தது. இட்டுச் செல்கிற வழியில் தோணி செல்ல மறுத்தது. ஆமாம்; அது ஒரு நீரோட்டம்தான். எங்கேயோ இருந்து ஒரு சுழிப்பு ஏற்பட்டு வந்து கொண்டிருக்கிறது. அந்த நீரோட்டத்தின் விசையில் கடலின் மடிமீது உறைந்து கிடக்கும் களிமண் கட்டைகூட நெகிழ்ந்து கரைய ஆரம்பித்து விட்டது.

அவன் துணிந்து விட்டான். நீரோட்டத்தை எதிர்த்துப் போராடுவது என்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டான் அவன். நீரோட்டம் பழனியின் தோணியைத் தன் வழிக்கு இழுத்துக் கொண்டு சென்றுவிடுமா? அவன் நீரோட்டத்திற்கு எதிர் முகமாகத் துடுப்பு வலித்து முன்னேறத் துணிந்து விட்டான்.

அப்போது ஆங்காங்கு விசித்திரமான ஒளிக்கதிர்கள் சிதறிக் கொண்டிருந்தன. அதனூடே எதையோ தேடித் துலக்கப் பார்க்கிறான் அவன்.

சிற்றலை ஊஞ்சலில் உறங்கிக் கிடந்தன ஒரு கூட்டம் காகங்கள்—கடற் காகங்கள்! ஆழ்ந்த தூக்கம்தான். திடீரென்று ஏதோ பிராண அபாயம் ஏற்பட்டதுபோல் அவை மேலெழுந்து பறந்தன. கிரீச்சிட்டுக் கத்திக்கொண்டு மேலே சென்றன. தோணியைக் கண்டு பயப்படவில்லை அவை. கடலின் அடிப்பாகம் அதிர்வது நன்றாகத் தெரிந்தது.

சுறாமீன்! வேறொன்றுமில்லை. சுறாமீன் கடற் காகத்தைக் கவ்விக் கொண்டிருக்கிறது.

பழனி தூண்டில் போட்டான். இது இலேசான காரியம் அல்ல! கூரிய அறிவு படைத்த புத்திசாலியான ஒரு முக்குவன் செய்யக் கூடிய காரியம் அது!

அக்காவும் தங்கையும் நீண்டநேரம் பொழுதுபோவது தெரியாமல் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது நடந்தேறிய நிகழ்ச்சிகளைக் குறித்து எதுவும் அவர்கள் பேசிக்கொள்ள வில்லை. தாயைக் குறித்தோ, அல்லது பரீக்குட்டியைக் குறித்தோ பேசிக்கொள்வதற்கு இனிமேல் ஒன்றுமில்லை. அதெல்லாம் ஏற்கெனவே பேசித் தீர்த்துவிட்ட விஷயங்கள். ஆனால், அப்போதும் செம்பன்குஞ்சுவின் சமாசாரம் ஓர் உயிர்ப் பிரச்னையாகத்தான் அவர்களுக்குப் பட்டது. அதோடு நல்ல திறமைசாலியான செம்பன்குஞ்சுவின் பெண்களாகிய அவர்களுடைய வாழ்வும் ஒரு கேள்விக்குறியாகவே எஞ்சி நின்றுகொண்டிருந்தது. பேசிக்கொண்டிருந்த பஞ்சமி உறக்கத்தில் ஆழ்ந்து விட்டாள்.

அப்போதும் கறுத்தம்மாவுக்குத் தூக்கம் வரவில்லை. காற்று ஓயாமல் வீசிக்கொண்டிருந்தது. அன்றுவரை கேட்டறியாத இசையின்பமும் காற்றில் கலந்து நின்றது போல் பட்டது. பரீக்குட்டியின் சோக கீதம் அந்தக் காற்றில் ஒன்றுசேரக் கலந்து நிற்கிறதோ என்றுகூடச் சந்தேகப் பட்டாள் கறுத்தம்மா. அவள் ஊன்றிக் கவனிக்கலானாள்; விட்டுவிட்டுக் கவனித்துக்கொண்டே இருந்தாள். அன்று, அவள் தன் வாழ்நாளிலேயே முதன்முறையாகப் பரீக்குட்டி

என்ற மனிதனின் கரங்களுக்குள் வழுவிச் சென்று விட்டாள் என்று தோன்றிற்று.

அப்போது அவளுடைய கணவன் தன்னந்தனியாக ஆழ் கடலுக்குள் சென்றிருக்கிறான். தூரக் கடலில் தூண்டில் போட்டுக்கொண் டிருக்கிறான் அவன். அவளோ அந்தக் காலத்தில் வாழ்ந்திருந்த பெண்மணிபோல் கடற்கரையில் தவத்தில் ஆழ்ந்து கிடக்கவேண்டும். ஏகாக்கிர சித்தத்துடன் தவத்தில் முயங்கி நின்றுகொண் டிருக்க வேண்டும். ஆனால், அவளோ பரீக்குட்டியைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கிறாள்.

கறுத்தம்மா அப்போது பூர்ண விழிப்பு நிலையில் இருக்க வில்லை; உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கவும் இல்லை. பரீக்குட்டி உத்தமன்; சாது; நல்லவன்; அன்பு மயமானவன். யாருக்குமே தெளிவாகப் புலப்படக் கூடிய காரியங்கள்தாம் இவை. இந்த ஜென்மத்தில் அவளால் பரீக்குட்டியை மறக்க முடியாது. அவள் அவனை மறக்கப் போவதும் இல்லை. பரீக்குட்டி அவளுடைய சொத்து; அவளுக்கு மட்டும் சொந்தமான சொத்து.

அப்போது அவளுடைய மனச்சாட்சி அவளைத் துன்புறுத்த வில்லை. அவளுடைய தறிகெட்டுப் பாயும் எண்ணச்சுழல்களுக்கு எதிராகப் போராடவும் இல்லை. இதயத்தில் வேதனை இல்லை; துன்பமும் இல்லை. மயக்க நிலையில் ஆழ்ந்து கிடந்த அவள், தனக்குத்தானே ஏதோ புலம்பிக்கொண்டிருந்தாள்.

அவள் எதிர்நோக்கிக் காத்துக்கொண் டிருந்தாள் என்று தான் சொல்ல வேண்டும். பரீக்குட்டி வருவான்; 'வா' என்று அவளை அழைப்பான். அழைப்பு வந்த மாத்திரத்தில் பதில் குரல் கொடுக்க வேண்டும். உறங்கிவிடக் கூடாது. உறங்கிக் கிடக்கவேண்டிய நேரம் அல்ல அது. வலுக் கட்டாயமாக முயன்று தூக்கத்தைக் கலைத்தாள் அவள்.

''கறுத்தம்மா!''

கறுத்தம்மா கண் விழித்தாள். யாராவது அவள் பெயர் சொல்லி அழைத்தார்களா?

''கறுத்தம்மா!''

நெடுந் தூரத்திலிருந்து சன்னமாக ஒரு குரல் வருவது போலிருந்தது. அரைகுறைப் பிரக்ஞை நிலையில் எழுந்தது.

வெறும் மயக்கம்தானே? அல்லது உண்மையாக யாராவது வந்து நின்றுகொண்டு அவளைப் பெயர் சொல்லி அழைக்கின்றார்களா?

அப்போது மீண்டும் அழைக்கும் குரல் எழுந்தது:

"கறுத்தம்மா!"

என்றாலும், நடுநிசி வேளையில் இவ்வாறு ஒருவன் கதவைத் தட்டியபடி பெயர் சொல்லி அழைக்கிறானே! இதற்கு முன்னும் மற்றொரு குரல் வீட்டு முற்றத்திலிருந்து எழுவது உண்டு. கடலிலிருந்து திரும்பிவருகின்ற பழனியின் குரல்தான் அது. அநேகமாக அவன் திரும்ப வந்துசேருகிற நேரம்தான் அது.

"கறுத்தம்மா!"

அவனுடைய குரல்தானா அது? அல்லது வேறு யாரேனும் கூப்பிடுகிறார்களா?

அவள் "என்ன?" என்று கேட்டாள்.

அந்தக் குரல் கதவைத் திறக்கச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லுவதுதான் வழக்கம். இருந்தாலும் அவள் அன்று எழுந்து வந்து கதவைத் திறந்தாள். வழக்கத்தை விடவும் அன்று காற்று சற்று உக்கிரமாக வீசிக்கொண்டிருந்தது. சினம் கொண்டு சீறிக்கொண்டிருந்தது. நிர்மலமான நிலவொளி தண்ணெட்டும் திசைக்குப் பறந்து கிடந்தது. ஆனால், வாசலில் ஒருவரையும் காணோம்! அவள் வீட்டின் மேல்புறம் வந்து நின்றுகொண்டு அங்கு மிங்கும் பார்த்தாள். அங்கிருந்து கடற்கரை நோக்கிச் சென்றாள் அவள்.

அப்போது நிலவொளியில் ஒருவன் நின்றுகொண்டிருந்தது புலப்பட்டது. பரீக்குட்டி!

கறுத்தம்மா பயப்படவில்லை; வீறிட்டுக் கத்தவும் இல்லை. அவன் வந்து கூப்பிட்டு, அவனுக்காகவே கதவைத் திறந்து கொண்டு வந்ததுபோல் வந்தாள் அவள். அவளை நோக்கிச் சாவதானமாக அடியெடுத்து வந்தான் பரீக்குட்டியும்.

அந்த உருவம் அவளைக் கூர்மையாகப் பார்த்தது. இப்போது அவன் அவளுடைய சின்ன முதலாளி அல்ல; அடியோடு உருக்குலைந்து சோர்வில் ஆழ்ந்து போய்விட்டான்.

அவன் அண்டையில் நெருங்கி வந்தபோதுகூட அவள் பயப்படவில்லையா? அவன் அவளுடைய ஸ்தனங்களையும் பிருஷ்ட பாகத்தையும் வெறித்துப் பார்க்கமாட்டானா? இல்லை இப்போது அவளுக்கு அந்தப் பயம் இல்லை. ஸ்தனங்கள் இப்போது முன்போல் வசீகரமாகவோ எடுப்பாகவோ இல்லை தான்! அந்த ஸ்தனங்கள் இப்போது ஒரு சின்னஞ்சிறு குழந்தையின் பிஞ்சு உதடுகளில் பாலைப் பீச்சி, அதன் முகத்தில் உவகை கொப்புளிக்கச் செய்துகொண்டிருக்கச் செய்கின்றன... என்னதான் இருந்தாலும், பழனி கடலுக்குச் சென்றிருக்கின்ற வேளையில், அர்த்த சாமத்தில், அந்நிய புருஷன் ஒருவனுடன் உரையாடிக்கொண்டு நிற்கலாமா என்ன?...கறுத்தம்மாவுக்கு இப்போது பழைய பயம் எதுவும் இல்லை. அவள் அதற்கு முன்னும் யாரும் இல்லாத வேளையில் அவனைச் சந்தித்தது உண்டல்லவா?...அதோடு கணத்துக்குக் கணம் உருக்குலைந்து அழிந்துகொண்டிருக்கிற ஒரு ஜீவனுக்கு, இதுபோன்ற சந்திப்பாவது நிமிஷ நேர அமைதியையும் மனச்சந்துஷ்டியையும் தருமென்றால், குறைந்த பட்சம் அதையேனும் அவனுக்குக் கொடுக்கலா மல்லவா?

அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்தபடி சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தனர். அவளுடைய வாழ்வைக் குலைத்த ஆடவன் அவள் முன்னால் நின்றுகொண் டிருந்தான். அவனுக்கு என்றுமே தன்னிடத்தில் தீராக் காதல் உண்டு என்பதைக் கறுத்தம்மா' நன்கறிவாள். எந்தக் காலத்திலும், எந்நிலையிலும் எப்படிப்பட்ட படுமோசமான சூழ்நிலையிலும் அவன் தன்மீது கொண்டுள்ள காதலுக்கு அழிவு கிடையாது என்பதும் அவளுக்கு நன்கு தெரியும். எந்த நிமிஷத்திலும் அவளை மன்னித்து ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருப்பான் அவன். அவனிடம் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம். அனைத்தையும் சகித்துக் கொள்வான் அவன்.

கொஞ்சநேரத்திற்குள் கறுத்தம்மா தன் வாழ்வில் அது வரையிலும் நிகழ்ந்த துயர நிகழ்ச்சிகளை—தனது வாழ்வை அதல பாதாளத்திற்கு உருட்டிவிட்ட துன்பங்களையும் தோல்விகளையும்—மறந்தாள். உண்மையில் அவள் தோல்வி கண்டவளல்ல. விலைமதிக்க முடியாத செல்வம் ஒன்றிருந்தது அவளது

கரங்களில். வேறு யாருக்கும் கிடைப்பதற்கரிய சொத்து அது! வைரம் போன்ற உடற்கட்டு வாய்ந்த ஒருவனுடைய சம்ரட்சணையில் நிர்ப்பயத்துடன் நின்றுகொண்டிருப்பதாகப் பட்டது, அவளுக்கு. முன்னொரு சமயம் தன்னைப் பேணிக் காப்பாற்ற ஒருவன் வந்து சேர்ந்ததை எண்ணி அவள் தனக்குள் தானே மகிழ்ந்து போய்விடவில்லையா? அதேபோல் இப்போதும் அவள் மனத்தில் ஓர் உவகை பொங்கிற்று. அவளும் வாழ்நாளைப் பதறாத உள்ளத்துடன்தான் கழித்து வந்தாள். ஒரு நாள் அவள் பசித்துயரத்தில் வாடியது கிடையாது. வெளியுலகத்துத் தொல்லைகள், கஷ்ட நிட்டூரங்கள் அவளை அண்ட முடியாதபடி தான் இருந்தன. இதுபோன்ற எண்ணங்களில் பிறந்த மன உறுதியில், தெம்போடு வாழ்ந்து வந்தாள் அவள். அவளுடைய கணவன் பழனி திடகாத்திரம் வாய்ந்தவன்; பலசாலி. அதோடு நல்ல நெஞ்சுரம் வாய்க்கப் பெற்றவன். ஆனால், அவள்மீது அன்பைச் சொரிந்திருந்தான் அந்நியன் ஒருவன். அந்த அன்புக்கு அடிமை அவள். அவ்வாறு அவளிடம் மாறாக் காதல்கொண்டு நெஞ்சைப் பறி கொடுத்தவன் அப்போது அவள் கண் முன்னால் நின்றுகொண்டிருந்தான்.

பரீக்குட்டியின் விரித்த கைகளிடையே சரேலென்று விழுந்தாள் கறுத்தம்மா. அவனது மார்போடு ஒன்றுபட்டு இணைந்தாள். அவர்களுடைய வதனங்களும் ஒன்றாக இணைந்தன. அவளுடைய காதோடு முணுமுணுத்தான் அவன்:

"என் கறுத்தம்மா!"

"ம்......என்ன?"

அந்நிய மதத்தைச் சேர்ந்த அவனும், கடற்கரையைச் சேர்ந்த விஷமனம் கொண்ட இளவட்டப்பிள்ளைகளும் கூர்மையாக வெறித்துப் பார்க்கும் அவளுடைய பிருஷ்ட பாகங்களில் அவனது கரங்கள் ஓடின.

மீண்டும் பரீக்குட்டி, "கறுத்தம்மா" என்று முணுமுணுத்தான்.

அவளோ தன்னை மறந்த நிலையில், மயக்க வெறியில், உணர்வு இழந்து நின்ற நிலையில், மனம் நெகிழும்படி மிகவும் அனுசரணையான குரலில், "என்ன?" என்று கேட்டாள்.

"நான் உனக்கு யாரு? சொல்லு!"

அவனது முகத்தைத் தனது இரு கரங்களிலும் ஏந்தி எடுத்துக்கொண்டு, அரைகுறையாய்த் திறந்திருந்த விழிகளால் அவனது அழகு முகத்தை ஆசையோடு நோக்கியபடி பதில் சொன்னாள்:

"யாரு? என் ஆசை ராஜா!"

மீண்டும் அவர்கள் ஈருடல் ஒருயிராயினர். உணர்ச்சியின் உன்னத சிகரத்தில், அவள் வாய்க்கு வந்தபடியெல்லாம் அவனுடைய செவியினுள் எதை எதையோ அரற்றிக்கொண்டிருந்தாள்.

ஆலிங்கனத்தில் ஒரே உடலாக நின்ற அவர்களால், மறுபடியும் பிரிந்து நிற்க முடியவில்லை.

* * *

ஆழ்கடலில், கண்களுக்குப் புலப்படாத தொலை தூரத்தில், சூன்ய வெளியில் ஒரு சுறுமீன் தூண்டிலை விழுங்கி விட்டது. மிகப் பெரிய ராட்சஸ மீன் அது! அன்றுவரை அது போன்ற ஒரு மீன் அவனுடைய தூண்டிலையோ, அல்லது மற்ற எவருடைய தூண்டிலையோ விழுங்கியது கிடையாது என்று உறுதியோடு கூறலாம். அந்தக் கடற்கரையில் அதுகாறும் ஒரு முக்குவனுக்கு அத்தனை பெரிய மீன் கிடைத்தது கிடையாது.

தூண்டிலை விழுங்கியதும் அந்த ராட்சஸ சுறுமீன் தனது வாலை மேலே தூக்கி விசிறி அடித்தது. திக்கெட்டும் தண்ணீர் கலங்கியதில் நீர்த் திவலைகள் வானத்தில் தெறித்து விழுந்தன. மறுகணம் அது முன்னோக்கிக் குதித்துப் பாய்ந்தது. தண்ணீரின் மட்டத்திற்கு மேலேயே அவனால் அந்த மீனைக் காண முடிந்தது. அதன் வாயில் தூண்டிலைப் பிணைத்திருந்த கயிறு வெளியே தொங்கிக் கொண்டிருந்தது.

அந்தக் கடற்கரையில் அத்தனை பெரிய மீனைப் பிடித்து விட்டவன் பழனி ஒருவன்தான். பழனி ஆனந்தத்தில் திளைத்து, தன்னையே மறந்து, களிவெறியில் ஆர்ப்பரித்தான்.

இப்போது கண நேரத்துக்குள் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். கயிற்றை இழுத்துப் பிடிப்பதன் மூலம் சுறுமீனை அது இருக்கிற இடத்திலேயே முடக்குவதா, அல்லது கயிற்றை

நெகிழவிட்டு அதன் போக்கில் கொஞ்ச தூரம் ஓட அவகாசம் கொடுப்பதா என்பதே அந்தப் பிரச்னை. இரண்டில் ஒன்றைத் தீர்மானித்து ஆகவேண்டும். தூண்டில் கண்டத்தில் செம்மையாகச் சிக்கியிருந்ததால் கயிற்றைச் சிறிது வெட்டி இழுத்தாலும் பிராணவஸ்தையில் அந்தக் கொடிய பிராணி ஸ்தம்பித்து நின்றுவிடும். அதே சமயம் இதில் மற்றொரு பேராபத்தும் உண்டு. தோணியின் அருகில் நின்று துடிதுடித்துக் கொண்டிருக்கிறபோது, எந்த நிமிஷத்திலும் அது தனது சக்தி மிக்க வால் வீச்சில் தோணியைச் சுக்கு நூறாய் நொறுக்கி எறிந்துவிடும். அதன் போக்குக்கு விட்டுக் கொடுத்தால் தோணியும் அதன்பின்னால் சென்றாக வேண்டும். எந்தத் திசை நோக்கி எத்தனை காத தூரம் அது அப்படியே இழுத்துச் செல்லும் என்பதை யாரால் எண்ணிக் கணக்கிட முடியும்?

அவன் அப்போதிருந்த இடத்திலிருந்து பார்த்தாலே, கரை கண்களுக்குப் புலப்படுவதாக இல்லை. எந்தத் திசையில் கரைஇருக்கும் என்பதைக்கூட அனுமானிக்க முடியவில்லை. ஒரு கையால் தூண்டில் கயிற்றை இறுகப் பிடித்துக்கொண்டும், அதே சமயம் மறு கையால் தோணியின் ஓட்டத்தை முடிந்த வரை சமனப்படுத்திக்கொண்டும் சென்றான் அவன். அவனது கண்கள் வானப் பரப்பைத் துழாவின. தாரகைகளின் துணை கொண்டு திசையை நிதானிக்கக் கூடியமட்டும் முயன்று பார்த்தான் அவன். அவன் தேடிப்பார்த்த நட்சத்திரம் கண்களுக்கு அகப்படுவதாய் இல்லை. மேகக் கூட்டம் வானத் திரையை மறைத்துக்கொண்டிருந்தது.

அப்போதும் தோணி கனவேகத்தில் முன்னேறிச் சென்று கொண்டுதான் இருந்தது. அதுவோ, கற்பனைக்கும் எட்டாத வேகம்! தண்ணீரைக் கிழித்துக்கொண்டு சீறிப் பாய்ந்து சென்றது தோணி. அலைகளே இருக்கவில்லை. கடல் அமைதியாகவும் சாந்தமாகவும் இருந்தது. நீரோட்டத்தின் கூறை நிதானிக்கத் தண்ணீரைக் கூர்ந்து பார்த்தான் அவன். நீரோட்டத்தின் போக்கை நிதானித்து அறிந்து கொண்டுவிட்டால், கரை இருக்கும் திசை துலங்கிவிடும் என்பதே அவனது கணிப்பு. ஆனால், தீர முயன்றும், நீரோட்டத்தின் போக்கை அவனால் கணிக்க முடியவில்லை.

புயலின் கொடிய வேகத்தில் தோணியை இழுத்துச் சென்று கொண்டிருந்தது சுறுமீன். இருந்தாலும் அது இப்படி ஒரே போக்காய் எங்கேதான் சென்றுகொண்டிருக்கிறது? இப்படியே எத்தனை தூரத்தை அது விழுங்கித் தீர்த்து விட்டது? இந்தப் பாய்ச்சலுக்கு முடிவு என்பதே கிடையாதா?

பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டு, பழனி வாய் விட்டு அலறினான்:

"நில்லுடா அந்த இடத்திலே! இப்படியே போயி, என்னைக் கடல்தாயின் அரண்மனைக்கே இழுத்துக்கிட்டுப் போயிடலா முன்னு பாக்கிறியா? இந்தா...அதுக்குக் காலம் வந்துடலெ இன்னும்."

அவன் பலம் கொண்ட மட்டும் கயிற்றை இழுத்துப்பிடித்தான். தோணியின் ஓட்டம் நொடியிடையில் தடைப்பட்டு நின்றது. அப்போது பழனி பேய்ச் சிரிப்புச் சிரித்தான்.

"ஹா...ஹா...ஹா...நில்லுடா. அப்படி...நில்லுடா அந்த இடத்திலே!"

பிராணாவஸ்தையைத் தாங்க முடியாது படபடவென்று வாலைப் போட்டு அடித்து, துடித்துப் புரண்டது சுறுமீன்! மனத்தில் மகிழ்ச்சி பொங்கிப் பிரவாகமெடுக்கத் தோணியினுள் தன்னிலை அறியாது துள்ளிக் குதித்தான் பழனி. மீண்டும் சரசரவென்று கயிற்றை இழுத்தான் அவன். மீன் மேலே எழும்பிக் குதிப்பதும் கீழே விழுவதுமாக அவஸ்தைப்பட்டுத் துடிதுடித்தது.

தோணி அசைவின்றி நின்றுகொண்டிருந்தது. என்றாலும், நீரோட்டத்தில் சிக்கிக்கொண்டு பரந்து கிடக்கும் வெள்ளக் காட்டில் பெரிய வட்டங்களிட்டுச் சுழன்று சுழன்று வந்து கொண்டிருப்பது போலவும் இருந்தது. பழனி கூர்ந்து கவனித்தான். பழனி சுழியில் சிக்கிக்கொண்டு விட்டானா? இப்போது தோணி உண்மையிலேயே தட்டாமாலை சுற்ற ஆரம்பித்து விட்டது. சுற்றிச் சுழன்றுகொண்டே இருந்தது அது; ஆனால், அப்போதும் பழனியின் கரங்கள் தூண்டில் கயிற்றை இறுகப் பிடித்துக்கொண்டுதான் இருந்தன.

அவன் வானவெளியை அண்ணாந்து பார்த்தான். ஒரே ஒரு நட்சத்திரம்கூட அவன் கண்களுக்குப் புலப்படவில்லை.

அவனுக்குச் சொந்தமான அத்தனை நட்சத்திரங்களும் அவிந்து போய் விட்டன. அத்தனையும் மேகத்திரைக்குப்பின் மறைந்து கொண்டு விட்டது.

தோணியில் நின்றவாறு நாற்றிசைகளையும் சுற்றும் சூழப் பார்த்தான் அவன். கண் வட்டத்திற்குள் அகப்படுவதெல்லாம் ஒரே தண்ணீர்; வெள்ளக்காடு; முடிவில்லாத நீர்ப்பரப்பு. இப்போது ஒரு மலை. ஆமாம்; மலையினும், பெரிய ஒரு மலை அவனைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு வந்தது. அப்போது அவனது தோணி ஓர் அதல பாதாளத்தில் விழுந்து விட்டது போலிருந்தது. தோணியின் முன்புறம் மட்டும் தண்ணீர் மட்டத்திற்கு மேலே தெரிந்தது.

கடலில் நடுநாயகமான ஸ்தானத்தில் கடற்கரையின் அரண்மனை ஒன்றிருக்கிறது. கடலின் மடியில் எழுப்பப்பட்டிருக்கிறது அது. அந்த அரண்மனையைப் பிறர் வருணிக்கக் கேட்டிருக்கிறான் பழனி. ஒரு நீரோட்டத்தின் பின்னால் சென்று கொண்டே இருந்தால் அது அரண்மனையின் தலைவாசலுக்கு இட்டுச் செல்லும்.

நாற்புறமும் எழும்பி நின்ற மலையின் சிகரம் மேலும் உயர்ந்து சென்றுகொண்டே இருந்தது. இப்போது அவன் கயிற்றைச் சற்று நெகிழவிட்டான். எனினும், தோணி நின்ற இடத்தில் நில்லாமல் ஓடிக்கொண்டுதான் இருந்தது. என்ன வேகம் இது!

பழனி அந்த அதல பாதாளத்திலிருந்து தப்பித்துக் கொண்டானா? அந்த மலையைத் தாண்டிச் சென்றுவிட முடிந்ததா அவனால்?

அப்போது எங்கிருந்தோ அதி பயங்கரமான அலறல் ஒன்று கேட்கலாயிற்று. அன்றுவரை அத்தனை பெரிய பேரோசையை அவன் செவி மடுத்ததே இல்லை.

அப்போதும் மலைபோன்ற அலைகள் எழுந்தவண்ணம் இருந்தன. ஒன்றன்பின் ஒன்றாக ஒரே அலை வரிசை! அது போன்ற அலைகளையும் பழனி கண்டதில்லை! உருண்டு திரண்டு அவனை நோக்கிச் சுருண்டு வரும் அலைகள் அப்படியே மறுபடியும் தேய்ந்து மாய்ந்து நீரில் அமிழ்ந்து விடவில்லை. மலைபோல் அவனைச் சுற்றி எழுந்து நின்றுகொண்டே இருந்தன. அவ்

வாறு அவனைச் சூழ நிமிர்ந்த அலைகளின் இரு முனைகளும் இணைந்து ஒன்றுபட்டன.

பழனி சமுத்திரத்தின் கோப வெறியை ஒரு கணத்தில் ஆராய்ந்து அறிந்துகொண்டு விட்டான். அந்த அலைக் கூட்டத்தின் சிகரத்தோடு தோணியை நடத்திச் செல்லவும் அவன் அறிவான். புயலைத் தன்னந் தனியாக எதிர்த்து நிற்கவும் அவனது உள்ளத்தில் தெம்புண்டு. மையிருட்டில் தோணி செலுத்திச் செல்லும் வித்தையிலும் கைதேர்ந்தவன் அவன்.

மின்னல் பளிச் பளிச்சென்றும் மின்னி ஓய்ந்தது. இடி அதி பயங்கர ஓசை யெழுப்பிக்கொண்டு இடித்தது. பழனி மேலும் தூண்டில் கயிற்றை நெகிழவிட்டான். அப்போது இருந்த நிலைமையில் அவன் தூண்டில் கயிற்றை இழுத்துப் பிடித்துக் கொண்டான் என்றால், தண்ணீரின் அசுர வேகமே தோணியைத் தகர்த்து எறிந்துவிடும். சுறாமீன் அதன் போக்குப் போல் தோணியை இழுத்துச் சென்றுதான் பார்க்கட்டுமே!

மேலே எழும்பி உயருகின்ற அலைகள்மீது ஏறுகிறபோது தோணியின் சுமையைக் குறைப்பதற்காகப் பழனி தோணிக்குள் குதித்து அந்தரத்தில் எழும்புவான். தோணி அலைக் கூட்டத்தின் சிரசில் ஏறியதும் மீண்டும் பொத்தென்று தோணிக்குள் விழுவான். அப்போதெல்லாம் தலைகுப்புற நின்றுகொண்டிருக்கும் தோணி. அப்படித் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்கும் தோணியை, அவனோடு சேர்த்துக் கபளீகரம் பண்ணிவிடக் காத்துக்கொண்டு நிற்கும் மற்றுமோர் அலை வரிசை.

அந்த ஏழை அரயனிடம் சினங்கொண்டு கடல் கர்ஜனை புரிந்துகொண்டிருந்தது. கடலின் அலறலுக்கு புயல் ஒத்தூதுகிறது. இடி தாளம் போடுகிறது. கோர தாண்டவம்தான்! பேய்வெறி கொண்ட கூத்து! பழனியோ அற்பத்திலும் அற்பமான ஒரு மனிதன். அவனை அழிப்பதற்கு இத்தனை உக்கிரமான சக்திகளைக் கடல்தாய் கட்டவிழ்த்துவிட வேண்டுமா? அவள் நினைத்தால் சுளுவாக அவனைத் தன் மடிமேல் கிடத்திக் கொண்டு விடலாமே!

அலைகள் கரையிலும் ஏறிக்கொண்டு விட்டனவோ? இருக்கலாம். கரையிலிருக்கும் குடிசைகளின் கூரைகளைத்

தடவிக்கொண்டு சென்றிருக்கலாம். அதோடு கரையில் விஷப் பாம்புகளும் இழைந்தோடிக் கொண்டிருக்கலாம். தொலை தூரத்தில் மிகப்பெரியதாய் இனம்கூற முடியாத ஒன்று மேலெழும்பி நிற்கிறது. என்ன அது? ஓர் அலையின் சிகரமா! என்ன விசித்திரக் கோலம்! அல்லது கொடிய விஷம்கொண்ட பிராணி ஏதேனும் தனது குகைபோன்ற வாயைப் பிளந்து கொண்டிருக்கிறதா?

யாராலும் முறியடிக்க முடியாத, உலகில் எந்தச் சக்திக்கும் அடிபணியாது தலை நிமிர்ந்து நின்ற அந்த முக்குவனுடைய பலம் அழிந்து போய்விட்டதா? அவன் அப்போதும் அலைகள் வரவர எழும்பி குதித்தபடிதான் இருந்தான். போகப் போக அவனால் இந்தக் காரியத்தை ஊக்கத்துடன் செய்ய முடியவில்லை. பின்னால் வந்த அலை ஒன்று அவனையும் தோணியையும் குளிப்பாட்டிவிட்டுச் சென்றது.

இடியும் மின்னலும் அதுகாறும் வானத்தை மூடியிருந்த மேகப் படலத்தை கலைத்துவிட்டன. அப்படிச் சொல்லுவது தவறு. அது அல்ல உண்மை. இடியும் மின்னலும் சேர்ந்து கொண்டு வானத்தையே நொறுக்கித் தூள் தூளாக்கிவிட்டன. இப்போது கடல் நீர் பூராவும் மெதுவாக ஒன்றுதிரண்டு ஒரே மையத்தில் கூடி எழும்பிற்று. தண்ணீர் அம்பாரமாய்க் குவிய ஆரம்பித்து விட்டது. 'அனைத்தையும் நிர்மூலம் செய்து விடுவேன்' என்று பேய் வெறிகொண்டு கதறுகிறது சூறை. இப்போது தோணியின் தலைப்பாகம் ஓர் அலையின் உச்சியில் தென்பட்டது. அந்த அலை மீண்டும் உருண்டு உருண்டு சென்ற போது, கவிழ்ந்துவிட்ட தோணியையும், அந்தத் தோணியின் விளிம்பில் பற்றியபடி நொங்கிக்கொண்டிருந்த பழனியையும் காணமுடிந்தது. ஒருகணம் மூச்சுவிட்டுக்கொண்டு மீண்டும் அடிவயிற்றிலிருந்து குரலெடுத்து அலறினான் அவன்:

''கறுத்தம்மா'''

சூறைக் காற்றின் ஹுங்காரத்தையும் மீறிக்கொண்டு கேட்கலாயிற்று பழனியின் அலறல். அவன் குரல் சூறைக் காற்றின் அரவத்தையும் முறியடித்து விட்டது

அவன் கறுத்தம்மாவைக் கூவி அழைக்கக் காரணம் என்ன? ஒரு காரணம் உண்டு. அது மிகவும் முக்கியமான

விஷயமும்கூட. கடலுக்குச் செல்லுகிற முக்குவனின் உயிர் கரையில் இருக்கும் முக்குவத்தி கையில்தான் இருக்கிறது. அவள்தான் அவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கவேண்டிய தேவதை. பண்டைக் காலத்தில் வாழ்ந்திருந்த ஒரு பெண் மணி தவபலத்தால் கடலுக்குச் சென்ற கணவனுக்கு உயிர்ப் பிச்சை கொடுக்கவில்லையா? மோனத் தவத்தில் ஆழ்ந்திருந்து மீண்டும் அவனைக் கரை சேர வைத்து விடவில்லையா? தன் மனைவியையும் முயன்று பார்க்க வேண்டுமென்று கோருகிறுன் பழனி. தானும் அன்று தப்பிவந்த முக்குவனைப் போல் தப்பி வந்துவிட முடியும் என்று எண்ணுகிறுன் அவன். ஏன் முடியாதா? அவனுக்கும் ஒரு மனைவி இருக்கிருளே! அவள் மட்டும் தவத்தில் ஈடுபட்டு நிற்கமாட்டாளா என்ன? அதற்கு முந்திய இரவுகூட அவள் அவனுக்கு எத்தனையோ வாக்குறுதிகள் தரவில்லையா?

பேய்க்காற்றின் உக்கிரம் மேலும் வலுத்தது. அதோடு காற்று அலைகளையும் தன் கட்சியில் சேர்த்துக்கொண்டு விட்டது. இரண்டு சத்துருக்களையும் முறியடித்து வெற்றி வாகை சூடிவிடுவான் பழனி. மீண்டும் ஒரு ராட்சஸ அலை ஒன்று எழுந்து அவனை நோக்கி உருண்டோடி வந்தது. அவனது குரல் "கறு" என்று மட்டும் உச்சரித்தது. அவன் எண்ணியதைச் சொல்லி முடிப்பதற்குள் அவனை மூழ்கடித்துக்கொண்டு சென்றது அலை.

ஒன்றுமில்லை. புயலும் இடியும், மின்னலும், அலைக் கூட்டங்களும் ஒன்ருகக் கூடி இணைந்துகொண்டு சம்ஹாரத் திருவிளையாடல் புரிய ஆரம்பித்துவிட்டன. கடைசிப் பிரயோகத்தையும் கையாண்டு விட்டன. முழுச் சக்தியையும் களத்தில் போட்டுப் பார்க்க வேண்டும் என்ற வேட்கை அவற்றிற்கு. சம்ஹாரத் தாண்டவம் முடிவடைந்து விட்டது!

அப்போது நீர்த்திவலைகள் வான்முட்டத் தெரித்தன. கடலோ ஒரு பெரும் குகையாகி விட்டது. இப்போது புயலின் வேகத்தை உணரமுடியும்.

கண்ணுக்கு எட்டாத தொலைவில் தோணி ஓர் அலையின் சிகரத்தில் ஏறிக்கொண்டிருந்தது. அதன்மீது கவிழ்ந்து படுத்துக்கொண்டிருக்கிறுன் பழனி. அப்போதும் அவன்

தோணியை அள்ளிப் பிடித்துக்கொண்டுதான் இருக்கிறுன் அவனுடைய தலே இனி உயராதா?

ஈவிரக்கம் இன்றி நடந்தேறிவிட்ட பேய்க் கூத்து ஓரளவு ஓய்ந்தது.

ஒரு சுழியில் அகப்பட்டுக்கொண்ட தோணி அதல பாதாளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

அப்போது ஒரே ஒரு நட்சத்திரம் உதித்தெழுந்தது. செம்படவ குலத்திற்குத் திசை காட்டும் தாரகை அது. செம்படவர்களின் அருந்ததி. ஆனல், அன்று அது ஏனே ஒளி மங்கி வெளிறிக் கிடந்தது!

*  *  *  *  *

மறுநாள் காலே, எதுவும் நிகழாததுபோல் சர்வ அமைதி யுடன் காட்சி தந்தது கடல்.

ஆழ்கடலில் சூறை புகுந்து விளேயாடிற்று என்று இரவில் கண்விழித்த சில அரயர்கள் கூறினர். அலே நீர் சில வீடுகளின் முற்றம் வரையிலும்கூட வந்து விட்டுச் சென்றிருப்பதும் தெரியவந்தது. வெள்ளே மணலில் கடலரவுகள் இழைந்து திரிவதையும் காணமுடிந்தது.

பஞ்சமி கடற்கரையில் கண்ணீர்விட்டுப் புலம்பிக் கொண்டு நின்ருள். குழந்தையோ, 'அப்பா! அம்மா!' என்று அலறியபடி அழுதுகொண்டிருந்தது. அதற்கு முந்திய தினம் இரவு தூண்டில் போடச் சென்ற அவளுடைய அத்தான் திரும்பி வரவில்லே. தூங்கிக்கொண்டிருந்த கறுத்தம்மாவை யும் காணேம்.

பஞ்சமி அழுதுகொண்டே குழந்தையைத் தேற்றிக் கொண்டிருந்தாள்.

இருதினங்களுக்குப் பின், ஓர் ஆண்—பெண் ஆகிய இரண்டு பிணங்கள் கரையோரம் வந்து ஒதுங்கின. இரண்டு உடலும் ஒன்றை ஒன்று ஆரத்தழுவிக் கொண்டிருந்தன—பரீக்குட்டியும் கறுத்தம்மாவும்!

செறீயெழிக்கல் என்ற அடுத்த ஊரில் கடற்கரையில் தூண்டிலே விழுங்கிவிட்ட ஒரு சுருமீனும் கரையில் ஒதுங் கிற்று.

## செம்மீன்

செம்மீன் மீனவர் சமூகத்துக் கதை. செம்பன் குஞ்சுவின் வாழ்வையும் வீழ்ச்சியையும் சொல்லும் கதை; கடற்கரைக் கன்னி கறுத்தம்மாவின் தூய காதல் கதை; தனது செயல் ஒரு தியாகம் என்பதையே உணராத தியாகி பரீக்குட்டியின் கதை; ஊக்கமும் உற்சாகமுமே உருவான சக்கியின் உழைப்புக் கதை; ஆண்மையும் ரோஷமும் மிக்க இளைஞன் பழனியின் கதை; மேலைக்கடல் அன்னையின் செல்லக்குழந்தைகளது நித்தியக் கதை.

எளிய கதாபாத்திரங்களையும் சாதாரண சம்பவங்களையும் கொண்டு வரைந்த அழியா' வண்ணச் சொற் சித்திரம் 'செம்மீன்'. **தகழி சிவசங்கரப் பிள்ளை** எழுதிய இந்தப் புகழ்பெற்ற மலையாள நாவல் 1959-ல் சாகித்திய அகாதெமிப் பரிசைப் பெற்றது. யுனெஸ்கோ ஆதரவில் உலக மொழிகள் பலவற்றுள் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. பல இந்திய மொழிகளில் சாகித்திய அக்காதெமியின் ஆதரவில் வெளி வந்துள்ளது. இதைத் தமிழாக்கியவர் **சுந்தர ராமசாமி.**

